ஆசரிப்புக் கூடாரம்:

இயேசுகிறிஸ்துவைக் குறித்த ஒரு விளக்கமான ஓவியம்

(I)

PAUL C. JONG

"ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?"

ஆசரிப்புக் கூடாரத்தில் மறைந்திருக்கும் உண்மையை நம்மால் எப்படி கண்டுபிடிக்க முடியும்? ஆசரிப்புக் கூடாரத்தின் உண்மைப் பொருளான, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைத் தெரிந்துக்கொள்வதன் மூலம் இக்கேள்விக்கான சரியான பதிலை நாம் அறிந்து அதனைப் புரிந்துக் கொள்ளமுடியும்.

ஆசரிப்புக் கூடார வாசலில் உபயோகப் படுத்தப்பட்ட இளநீல நூலும், இரத்தாம்பர நூலும், சிகப்பு நிற நூலும், மெல்லிய பஞ்சு நூலும், மனிதர்களை இரட்சிக்க இயேசு கிறிஸ்து செய்தவைகளை நமக்கு காட்டுகின்றன. இப்படியாக மெல்லிய பஞ்சு நூல் இணைக்கப்பட்டுள்ளதுபோல் பழைய ஏற்பாட்டின் ஆசரிப்புக் கூடார சொற்களும் புதிய ஏற்பாட்டின் சொற்களும் நிச்சயமாக நெருக்கமான தொடர்புள்ளவை. ஆனால், துரதிருஷ்டவசமாக, கிறிஸ்தவத்தில் சத்தியத்தைத் தேடுபவர்களிடமிருந்து வெகுகாலமாக இந்த உண்மை மறைக்கப் பட்டிருந்தது.

இயேசுகிறிஸ்து இவ்வுலகிற்கு வந்து, யோவானால் ஞானஸ்நானம் பெற்று சிலுவையில் இரத்தம் சிந்தினார். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைப் புரிந்துகொண்டு அதனை விசுவாசிக்கா விட்டால் ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப் படுத்தப்பட்ட உண்மையை நம்மால் ஒரு போதும் கண்டுபிடிக்கமுடியாது. ஆசரிப்புக் கூடாரத்தின் இந்த உண்மையை இப்போது நாம் கற்று அதனை நம்ப வேண்டும். ஆசரிப்புக் கூடார வாசலில் அறிவிக்கப்பட்ட இளநீல நூல், இரத்தாம்பர நூல், சிகப்பு நிற நூல், மெல்லிய பஞ்சு நூல் ஆகியவற்றின் உண்மையை நாம் உணர்ந்து அந்த உண்மையை விசுவாசிக்கவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தில் வெளிப் படுத்தப்பட்ட நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் ஆசிர்வாதங்கள் அனைத்தும் உங்கள் ஒவ்வொருவருக்கும் உரித்தாக வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் ஜெபிக்கிறேன்.

ஆசரிப்புக் கூடாரம்:
இயேசுகிறிஸ்துவைக் குறித்த ஒரு விளக்கமான ஓவியம்
(I)

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.



ஆசரிப்புக் கூடாரம்: இஸ்ரவேல் மக்களுக்குள் சஞ்சரிக்கும் படியாக தனக்கொரு ஆசரிப்புக் கூடாரத்தை கட்டும்படி யெகோவா மோசேயிடம் கூறினார். கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த பாவமன்னிப்பை பெறுவதின் மூலம், இஸ்ரவேல் மக்களால் கர்த்தரைச் சந்திக்க முடிந்தது. புதிய ஏற்பாட்டு காலத்தில் நமக்காக வரப்போகும் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் விளக்கமான ஒவியமாக இந்த ஆசரிப்புக் கூடாரம் அமைந்தது.



ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

வெண்கலப் பாத்திரம்: இவ்வுலகிற்கு மனித சரீரத்தில் வந்த இயேசு கிறிஸ்து யோவான் ஸ்நானனால் ஞானஸ்நானம் பெறும் போது உலகின் எல்லாப் பாவங்களையும் சுமந்து அவற்றை கழுவித் தீர்த்தார் என்பதை வெண்கல பாத்திரம் அறிவித்தது.



சர்வாங்க தகன பலிபீடம்: தன்னுடைய சரீரத்தில் மனிதகுலத்தின் எல்லாப் பாவங்களையும் ஏற்றுக் கொண்ட இயேசு கிறிஸ்து சிலுவையில் தனது இரத்தத்தைச் சிந்தி நமக்காகவும் இந்த பாவங்களுக்கு தீர்ப்பாகவும் சிலுவையில் மரித்ததை சர்வாங்க தகன பலிபீடம் குறிப்பிடுகிறது.

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆசரிப்புக் கூடாரம்:

இயேசுகிறிஸ்துவைக் குறித்த ஒரு விளக்கமான ஓவியம்

(I)

PAUL C. JONG

Hephzibah Publishing House

A Ministry of THE NEW LIFE MISSION
SEOUL, KOREA

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆசரிப்புக் கூடாரம்: இயேசுகிறிஸ்துவைக் குறித்த ஒரு விளக்கமான ஓவியம் (I)

Copyright © 2012 by Hephzibah Publishing House
எல்லா உரிமையும் பதிப்பாளருக்கே. இப்புத்தகத்தின் எப்பகுதியையும் பிரதியெடுக்கவோ, மறுபடியும் நூலாக்கும் வகையில் பதிவு செய்தலோ; மின்னனுவியல், இயந்திரவியல், ஒளிப்பிரதியெடுத்தல், பதிவு செய்தல் மேலும் எவ்வகையிலோ தகவல் பரிமாற்றம் செய்யலாகாது. அப்படிச் செய்வதானால் பதிப்பாளர் அல்லது பதிப்புரிமை உடையவர்களிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி பெறப்பட வேண்டும்.
வேதவசனங்கள் தமிழ் வேதாகமத்திலிருந்து மேற்கோள் காட்டப் பட்டுள்ளன.

ISBN 978-89-282-0334-5
அட்டைப்படம்: மின்.சூ.கிம்
ஓவியம்: யங்-ஏ. கிம்.
இந்நூல் கொரியாவில் அச்சிடப்பட்டது.

Hephzibah Publishing House
A Ministry of THE NEW LIFE MISSION
Seoul, Korea

♠ Website: https://www.nlmission.com
https://www.bjnewlife.org
https://www.nlmbookcafe.com
♠ E-mail: newlife@bjnewlife.org

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

நன்றிகள்

வெளிப்படுத்தின விசேஷத்தைக் குறித்து இரண்டு தொகுப்புகளாக வெளியாகிய எனது புத்தகங்களைத் தொடர்ந்து, ஆசரிப்புக்கூடாரத்தைக் குறித்து நான் எழுதிய இரண்டு தொகுப்புகளின் வரிசையில் இது முதலாவது நூலாகும். கர்த்தருடைய கிருபையினால் மட்டுமே இப்புத்தகம் வெளியிடப்பட்டது என்பதை நான் கூறவேண்டியதில்லை. தேவனால் கொடுக்கப்பட்ட நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியானது எத்தனை உண்மையானது எனவும், வேதாகமப்படி எத்தனை சரியானது எனவும், இந்த நற்செய்தியானது எத்தனை மதிப்புடையது எனவும், அதிகமாக நான் எழுதும் போது, எனது இருதயத்தின் ஆழத்தில் அதிகமதிகமாக உணர்வதுடன் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசித்து எனது பாவங்களுக்கு பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொண்டதற்கு மிகவும் நன்றியறிதலுடையவனாகவும் இருக்கிறேன்.

புது வாழ்வு இயக்கத்திலுள்ள அலுவலர்களுக்கும் எனது உடன் பணியாளர்களுக்கும் எனது ஆழமான நன்றிகளைத் தெரிவிக்க வார்த்தைகள் என்னைத் தோற்கடிக்கின்றன, அவர்கள் இப்புத்தகத்தை வெளியிடுவதற்கு ஒன்று கூடி கடினமாக உழைத்ததுடன், நற்செய்திக்கு பணியாற்ற தம்மிருதயங்களை இணைத்துள்ளனர். அவர்களுடைய விலையேறப்பட்ட கடினமான உழைப்புகள் உலகம் முழுவதும் பெருமளவு கனிகளை அளிக்கும் என்பது நிச்சயம். இந்த விசுவாசமிக்க ஆத்துமாக்களின் அர்ப்பணிப்புள்ள சேவையினாலேயே இப்புத்தகம் வெளி வந்துள்ளது, மேலும் அவர்களுடைய ஊழியங்களின் மூலமே நம் தேவனின் பெரிய கட்டளையைப் பின்பற்றி உலகின் முடிவு வரை நற்செய்தியை என்னால் பரப்ப முடிகிறது. இப்புத்தகத்தை மொழி பெயர்க்க

எங்களுக்கு உதவிய திரு. ஏ.டி.எட்வர்ட் ராஜ் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம் அனைவரையும் இரட்சித்தமைக்காகவும், தேவனுடைய செயல்களுக்கு பணியாற்ற பணியாளர்களாகிய எங்களையும் அவருடைய ஆலயத்தையும் அனுமதித்தமைக்காகவும், எல்லா மகிமைகளையும் நன்றிகளையும் கர்த்தருக்கு அளிக்கிறேன். ✉

PAUL C. JONG

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

பொருளடக்கம்

முன்னுரை -- 11

1. ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்படுத்தப்பட்ட பாவிகளின் இரட்சிப்பு (யாத்திராகமம் 27:9-21) ------------------------------ 29

2. நமக்காக துன்பப்பட்ட நமது தேவன் (ஏசாயா 52:13-53:9) -- 97

3. வாழுகின்ற கர்த்தராகிய யாவே (யாத்திராகமம் 34:1-8) --- 133

4. சீனாய் மலைக்கு மேசேயை கர்த்தர் அழைத்ததற்கான காரணம் (யாத்திராகமம் 19:1-6) ------------------------------- 155

5. ஆசரிப்புக் கூடாரத்திற்கு இஸ்ரவேலர்கள் எப்படி காணிக்கைச் செலுத்த வந்தார்கள்: வரலாற்று பின்னணி (ஆதியாகமம் 15:1-21) ---------------------------- 181

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

பொருளடக்கம்

6. கர்த்தரின் வாக்குத்தத்தம் ஏற்படுத்திய விருத்தசேதன உடன்படிக்கை இன்னமும் நம்மீது ஆற்றல் செலுத்துகிறது (ஆதியாகமம் 17:1-14) -- 199

7. விசுவாசத்திற்கான அத்திவாரத்தை அமைத்த ஆசரிப்புக் கூடாரத்தின் கட்டுமான பொருட்கள் (யாத்திராகமம் 25:1-9) --- 223

8. ஆசரிப்புக் கூடார வாசலின் நிறம் (யாத்திராகமம் 27:9-19) -- 309

9. தகன பலிபீடத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட விசுவாசம் (யாத்திராகமம் 27:1-8) --- 419

10. வெண்கலப் பாத்திரத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட விசுவாசம் (யாத்திராகமம் 30:17-21) --- 477

11. இரட்சிக்கப்பட்டவர்களின் சாட்சிகள் ------------------------ 545

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும்,
டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

முன்னுரை

பழைய ஏற்பாட்டில் கர்த்தர் பேசிய ஆசரிப்புக்கூடார முறையானது வேத வசனங்களை ஆராய விரும்பும் ஒவ்வொருவருக்கும் பலகாலமாக ஆர்வமூட்டுவதாயிருந்தது. ஆயினும் கிறிஸ்தவத்தின் உண்மையைத் தேடுபவர்களாலும் கூட இதன் சரியான ஆவிக்குரிய பொருளை கண்டுபிடிக்க முடியவில்லை, ஏனென்றால் சீனாய் மலையின் அமைப்பைக் கர்த்தர் மோசேயிற்கு காட்டிக் கொண்டிருந்தபோது, சாதாரண இஸ்ரவேலர்களுக்கு இம்மலையானது மறைக்கப் பட்டிருந்ததைப் போல, ஆசரிப்புக் கூடாரத்தின் மூலமாக கர்த்தர் அறிவித்த வெளிப்படுத்துதல் அவர்களுக்கு மறைவாய் இருந்தது.

இது கர்த்தரின் சித்தமாகும். அவர் கூறுகிறார். *"நீ போய், இந்த ஜனங்களை நோக்கி: நீங்கள் காதாரக் கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல்." (ஏசாயா 6:9)* கர்த்தருடைய எல்லா வார்த்தைகளும் வெளிப்படுத்தலின் வார்த்தைகளாகும். கர்த்தருக்கு மரியாதைச் செலுத்தும் இருதயத்தினால் அதனைக் கேட்காமல், தன் சொந்த பாவங்களை உண்மையாக அறிந்துக் கொள்ளும் தாழ்மையான இருதயமில்லாமல், நரகத்திற்கு செல்லவேண்டியவர்களை அவர் எப்படி இரட்சித்தார் என்று நன்றியுடன் விசுவாசிக்கும் இருதயமில்லாமல், இவற்றை புரிந்துக் கொள்ளவோ அறியவோ முடியாதுஅஅதாவது, கர்த்தர் தாமே திரைச்சீலையை அகற்றி அதனை நமக்கு காட்டும் போது மட்டுமே வெளிப்படுத்தலின் வார்த்தையை நம்மால் காண முடியும்.

இது போல், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியினால்

ஒளிரச் செய்யப்படும் போதே, வேத வசனங்களின் வார்த்தையை நம்மால் தெளிவாக புரிந்துக் கொள்ளமுடியும், அப்பொழுது மட்டுமே இந்த வார்த்தையால் நமக்கு உயிரூட்டி நம் வாழ்வை செயல்பட வைக்கமுடியும். உங்களைப் போலவே, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலமாக நான் மறுபடியும் பிறந்த பிறகே, கர்த்தருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்ட ஆசரிப்புக் கூடார முறையின் முக்கியத்துவத்தையும் உண்மையான பொருளையும், என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

இதற்கு முன் ஆசரிப்புக் கூடாரமானது வெறும் ஒரு புராதன அடையாளமாக மட்டுமே எனக்குத் தெரிந்தது. இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கை வரலாற்றில் ஒரு முறை தோன்றி பிறகு மறைந்து போனது, ஆனால் இப்போது அது என் விசுவாச வாழ்வின் மையமாகிவிட்டது, இது ஒரு கிருபையின் இடமாக இருக்கிறது, இங்கு தான் கர்த்தர் என்னுடன் நேரடியாக சந்திக்கிறார். குருடன் தேவனைச் சந்தித்தபோது அவனுடைய கண்கள் திறந்ததினால் அவன் எத்தனையாய் மகிழ்ந்தானோ அது போலவே இது ஒரு அதிசயமானதும் ஆச்சரியமானதுமான அனுபவமாக இருந்தது. கிறிஸ்துவை நமது இரட்சகராகவும் அவருடைய இரட்சிப்பிற்கான செயல்களையும் குறித்து ஆசரிப்புக்கூடாரத்தின் வார்த்தை எத்தனை துல்லியமாகவும் விரிவாகவும் கூறுகிறது! ஆசரிப்புக்கூடார முறைப்படி எத்தனை நேரடியாக நம் தேவன் நம்முடன் பேசுகிறார்!

என்னுடைய சிரத்தையுள்ள இருதயத்திலிருந்து இந்நூலை எழுதியுள்ளேன், உண்மை விசுவாசத்துடன் ஆசரிப்புக்கூடார வாசல் வழியாக உங்களில் ஒவ்வொருவரும் பிரவேசித்து, தேவன் உங்களுக்குக் கொடுத்த பொன்னாலான வீட்டிற்குள் நுழைய வேண்டும் என்பது எனது இருதயபூர்வமான ஆசையாகும். இயேசு

கிறிஸ்துவைப் பற்றிய விளக்கமான சித்திரமாகிய இந்த ஆசரிப்புக்கூடாரமானது, இப்புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவரின் இருதயத்திலும் ஆழமாக பதியும் என நான் உறுதியாக நம்புகிறேன். இந்த இருதயத்தில் வரையப்பட்ட எழுத்துக்களுடன், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலமாக, இயேசு இவ்வுலகில் இருக்கும் போது நிறைவேற்றிய இரட்சிப்பிற்காக நிறைவாக அவர் செய்தவற்றை நீங்கள் எதிர் கொள்வீர்கள் என்று எச்சந்தேகமுமின்றி நம்புகிறேன்.

அறிவியலைப் பொருத்தவரை அடிப்படையானது எதைவிடவும் முக்கியமானது. அறிவியலில் அதிகமான ஞானத்தை பெறவேண்டுமானல அறிவியலின் அடிப்படையை எத்தனை சிறப்பாக அறிந்திருக்க வேண்டும் என்ற தத்துவமானது நாம் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை அறிந்து அதனைச் சரியாக விசுவாசிப்பதிலும் இருக்கிறது. இன்றைய கிறிஸ்தவர்களை உண்மையாக நோக்கினால், ஆசரிப்புக் கூடாரமும் கூட அப்படித்தானிருக்கிறது. பொதுவாக, அடிப்படைச் சத்தியமான ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றைக் குறித்து அவர்கள் புரிந்து கொள்ளவேயில்லை. இதன் பலனாக அவர்களுடைய ஆத்துமாக்கள் பாவத்தின் பிரச்சினைகளால் ஆழமாக அல்லல்படுவதை நாம் காண்கிறோம். ஆசரிப்புக் கூடாரத்தின் இளநீல, இரத்தாம்பர, சிகப்பு நூல்கள் மற்றும் மெல்லிய பஞ்சு நூல் ஆகியவை வெளிப்படுத்திய இரட்சிப்பின் நற்செய்தியை புரிந்து கொள்ளும் போது மட்டுமே பாவமன்னிப்பைக் குறித்த உண்மையான அறிவு கிட்டுகிறது.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைக் குறித்து இன்றைய நாளின் அநேக கிறிஸ்தவர்களுக்கு சரியான அறிவு இல்லை என்பது என்னை ஆழ்ந்த

கவலைக்குள்ளாக்குகிறது. ஆகவே பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் அடிப்படையில் இதனை விளக்குவது என்னுடைய குறிகோளாகும். ஆசரிப்புக்கூடாரத்தின் இளநீல, இரத்தாம்பர, சிகப்பு நூலகளும், மெல்லிய பஞ்சு நூலும் கூறும் நற்செய்தியையும், பாவமன்னிப்பு சத்தியம் உண்மையாகவே என்ன என்பதையும் சாட்சியாக கூறுவது இங்கு எனது குறிக்கோளாகும்.

ஆசரிப்புக்கூடாரத்தில் உபயோகிக்கப்பட்டிருந்த இளநீல நிற நூலைக் குறித்து மறுபடியும் பிறக்காதவர்கள் இந்நாட்களில் என்ன கூறுகிறார்கள்? "வானம் நீல நிறமாக இருப்பதைப் போல், இளநீல நிறமானது இயேசுவே கர்த்தர் என பொருள்படுகிறது" எனக் கூறி அவர்களில் சிலர் இளநீல நூலின் முக்கியதுவத்தைக் குறைத்து விடுகிறார்கள். ஆனால் யோவான் ஸ்நானிடமிருந்து பெற்றுக் கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக உலகின் எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக் கொண்டு இயேசு நமது முழு இரட்சகரானார் என்பதே இளநீல நூலைக் குறித்த மிகச் சரியான விளக்கமாகும். இளநீல நூலின் ஊழியத்தின் அடிப்படையில் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன்னுடைய இரத்தம் சிந்துதலின் மூலமாக நிவிர்த்தி செய்வது அவருக்கு ஏதுவாயிற்று, இது அவரின் இரத்தாம்பர ஊழியமாகும்.

இந்த இளநீல நூலில் வெளிப்படுத்தப்பட்ட நற்செய்தியின் சத்தியத்தை அறிந்து விசுவாசிப்பதற்கான நமது நேரம் இதுவேயாகும். இளநீல நூலின் சத்தியத்தை அறிவது பாவத்திலிருந்து இரட்சிப்பை அடைவதற்கான நமது அறிவுடன் நெருங்கிய தொடர்புடையது. ஆசரிப்புக்கூடாரத்தின் இளநீல, இரத்தாம்பர மற்றும் சிகப்பு நிற நூல்கள் மற்றும் மெல்லிய பஞ்சு நூல் ஆகியவற்றால் நிறைவேற்றப்பட்ட பாவ மன்னிப்பு நற்செய்தியானது, நமது தேவனை நமது இரட்சகர் என்று நம்புவதற்கு பெரிதும்

உதவுகிறது, மேலும் பாவ விடுதலை சத்தியம் என்பதைக் குறித்து தெளிவாக அறிந்து கொள்ள இது நம்மை அனுமதிக்கிறது.

ஆசரிப்புக்கூடார வாசலில் உள்ள இளநீல நூலின் இரகசியம் என்ன?

ஆசரிப்புக்கூடார வாசலில் உள்ள இள நூலின் இரகசியமானது, யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக, உலகின் அனைத்து பாவங்களையும் இயேசு தன்மீது ஏற்றுக் கொண்டார் என்று புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட உண்மையாகும். முதன் முதலாக, கீழ்க்கண்ட வசனங்களிலுள்ள கருத்தை நாம் காண வேண்டும்: *"பிராகாரத்தின் வாசலுக்கு இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல்வேலையாய்ச் செய்யப்பட்ட இருபதுமுழ நீளமான ஒரு தொங்குதிரையும் அதற்கு நாலு தூண்களும் அவைகளுக்கு நாலு பாதங்களும் இருக்கவேண்டும்" (யாத்திராகமம் 27:16) "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்" (மத்தேயு 3:15).*

வேறு வார்த்தைகளில் கூறுவதனால், இளநீல நூலினால் அறிவிக்கப்பட்ட சத்தியமானது இயேசு யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. பிதாவாகிய கர்த்தரின் சித்தப்படி உலகின் எல்லாப் பாவங்களையும் தன்மீது ஏற்றுக் கொள்ள இந்த ஞானஸ்நானமானது தவிர்க்க முடியாத செயலாகும். இந்த இளநீல நூலின் சத்தியம் 1 பேதுரு 3:21 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, இது நம்மிடம் கூறுகிறது, *"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும்*

இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" பழைய ஏற்பாட்டின் ஆசரிப்புக் கூடாரத்தில் உபயோகிக்கப்பட்ட இளநீல நூலின் உண்மையானது யோவானிடமிருந்து இயேசு பெற்ற ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது (மத்தேயு 3:15-16).

ஆசரிப்புக்கூடார வாசலில் உபயோகிக்கப்பட்டிருந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை அறிவித்த சத்திய வார்த்தையை நீங்கள் அறிந்துக் கொள்ளும் போது, இரட்சிப்பின் சத்தியத்தை நீங்கள் புரிந்து கொள்ள இது மிகவும் உதவியானதாக இருக்கும். இயேசு யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானமானது உங்கள் அனைத்து பாவங்களை கழுவிய முற்றிலுமான சத்தியம் என்பது உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் இயேசுவை உங்கள் இரட்சகராக விசுவாசித்தாலும் கூட, இயேசு ஏன் யோவானால் ஞானஸ்நானம் பெற்றார் என்பதற்கான காரணத்தை சரியாக அறிந்து, அதனை விசுவாசிக்க வேண்டும். இந்த சத்தியத்தை நீங்கள் அறிந்து கொள்ளவிடில், உங்கள் ஆத்துமாக்களுக்கு இயேசுவால் எந்த நன்மையையும் எடுத்து வர முடியாது. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் ஊழியங்களின் மூலமாக, தேவன் நம்மை நம் பாவங்களிலிருந்து முற்றிலுமாக இரட்சித்தார். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலமாக நிறைவேற்றப்பட்ட பாவமன்னிப்பை நாமனைவரும் அறிந்து அதனை உண்மையாக விசுவாசிக்க வேண்டும்.

உங்கள் விசுவாசம் எப்படிப் பட்டது?

உங்களுடைய சொந்த விசுவாசமானது சரியானதும் நிறைவானதுமாகும் என நீங்கள் எண்ணினால், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்தியத்தை அறிந்து

கொள்ள உங்களுக்கு விருப்பமில்லை. உங்களுடைய விசுவாசமானது நேராக இல்லை என நீங்கள் உணர்ந்தால், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் மூலமாக நிறைவேற்றப்பட்ட பாவநிவர்த்தியின் நற்செய்தியின் விசுவாசத்துடன் கர்த்தருக்கு முன்பாக நீங்கள் நிற்க வேண்டும். ஆசரிப்புக் கூடார வாசலில் உபயோகிக்கப்பட்டிருந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் மூலமாக வெளிப்படுத்திய நம் தேவனின் செய்கைகள் உங்கள் தவறான விசுவாசத்தையும் அறிவையும் நேராக்கும், மேலும் நிறைவான நற்செய்தியை விசுவாசிக்கும் முழுமையான நம்பிக்கைக்கு இது உங்களை வழிநடத்தும்.

உங்களால் உருவாக்கப்பட்ட இரட்சிப்பைக் குறித்த உணர்த்துதல் உங்களுக்கு தோன்றவில்லையா? உங்கள் விசுவாசம் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் சஞ்சரிக்கிறதா? அப்படியில்லை எனில், இயேசுவை எப்படியோ விசுவாசித்து, தேவையில்லாத காதலினால் அவரை நேசிக்கிறீர்கள் என்றும், உங்கள் சொந்த எண்ணங்களுக்குள் நீங்கள் சிக்கிக் கொண்டுள்ளீர்கள் என்று மட்டுமே இது பொருள்படும். இதனால் தான் தமது சொந்த எண்ணங்களுக்குள் சிக்கிக் கொண்டுள்ள இன்றைய கிறிஸ்தவர்களில் பலர், தாம் பாவத்தினால் நிறைந்திருந்தாலும் கூட, தம்மை நீதிமான்களாக கருதுகிறார்கள். நான் இங்கு என்ன கூறுகிறேன் என்றால் இயேசு தம்முடைய இரட்சகர் என்று இப்போது அநேக மக்கள் திருப்திப் பட்டுக்கொள்ளுகிறார்கள், ஆனால் அவர்களுடைய உணர்த்துதல் அவர்களின் சொந்த எண்ணங்களின் அடிப்படையில் அமைந்தவை.

அவர்கள் தம் மாமிச சிந்தனைகளுக்கு உட்பட்டு இயேசுவைத் தமது இரட்சகராக கருதலாம், இந்தக் குறிப்பைக் குறித்து தம்முடைய சொந்த வழிகளில் திருப்தி பட்டுக் கொள்ளலாம், ஆனால் பாவம் இன்னமும் அவர்களின் இருதயங்களில் இருந்தால், இன்னமும் அவர்கள் பாவிகளாகவே இருக்கிறார்கள் என்பதை

அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும், இவர்கள் தம்முடைய பாவங்களுக்காக இறுதியில் தண்டிக்கப்படுவார்கள். இயேசு தன்னுடைய இரட்சகர் என விசுவாசிக்கும் போது, நற்செய்தியாகிய இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் குறித்த சத்தியத்தை அறிந்து கொள்ளாமலேயே அவன்/அவள் தானொரு நல்ல கிறிஸ்தவன் என எண்ணினால் அந்நபரின் விசுவாசமானது அபாயமான புரிந்து கொள்ளுதலாகும். உண்மையான விசுவாசம் நமக்கு வேண்டுமானால், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பதின் மூலம் உண்மை இரட்சிப்பை நாம் தேட வேண்டும். உண்மை நற்செய்தியின் இந்த சத்தியத்தைக் குறித்து அறியாமலேயே நாம் நல்ல கிறிஸ்தவர்கள் என வலியுறுத்துவதின் மூலம் நம்மை நாமே ஏமாற்றினால், கர்த்தரின் கோபத்திலிருந்து நம் ஒருவராலும் கூட தப்பிக்க முடியாது.

இம்மக்களே தவறான நம்பிக்கையுடனுள்ளவர்கள்

இக்காலங்களில், இயேசுவைத் தமது இரட்சகராக விசுவாசிப்பவர்களில், இயேசுவைத் தவறாக புரிந்து கொண்டு அவரை விசுவாசித்தவர்கள் அநேகம். யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக உலகின் எல்லாப் பாவங்களையும் இயேசு தன் மீது ஏற்றுக் கொண்டார் என்ற சத்தியத்தை அவர்களுடைய நம்பிக்கை விசுவாசிக்காது. இயேசுவின் இரத்தத்தை மட்டுமே விசுவாசிப்பதின் மூலமாக தம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிக்கப்படுவதாக அவர்கள் விசுவாசிக்கின்றனர். யோவானால் இயேசு ஞானஸ்நானம் பெற்ற போது அவர்களின் எல்லா பாவங்களையும் அவர் தன்மீது ஏற்றுக் கொண்டார் என்பதை அவர்கள் பொருட்படுத்துவதில்லை.

வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்ட நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியிலிருந்து இத்தகைய நம்பிக்கை அடிப்படையிலேயே வேறுப்பட்டது.

இத்தகைய தவறான விசுவாசமுடைய அநேகர் இப்பூமியில் இருக்கிறார்கள். இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தை தமது இரட்சிப்பாக விசுவாசிப்பதின் மூலமாக தமது எல்லாப் பாவங்களிலிருந்தும் தாம் விடுதலையானதாக தவறுதலாக புரிந்து கொண்டு அதனை விசுவாசித்தாலும் அவர்களுடைய இருதயங்கள் இன்னமும் பாவம் நிரம்பியவையாகவே இருக்கின்றன. தம்முடைய பிடிவாதத்தினால், இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெற்ற போது அவர் தமது பாவங்களை தன்மீது எடுத்துக் கொண்டிராவிட்டாலும் கூட தமது எல்லாப் பாவங்களிலிருந்தும் தம்மால் இரட்சிக்கப்படமுடியும் என்று வலியுறுத்துகிறார்கள். இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவரையும் இயேசுவின் இரத்தத்தால் மட்டுமே இரட்சிக்க முடியும் என அவர்கள் திருப்தியடைகிறார்கள், ஆனால், உண்மையாக கூறினால், இத்தகைய விசுவாசங்களின் மூலமாக தமது சொந்தப் பாவங்களிலிருந்தே அவர்கள் விடுதலையாகவில்லை என்பதே உண்மை. ஆசரிப்புக்கூடார வாசலில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் வெளிப்படுத்தப்பட்ட நற்செய்தியின் சத்தியத்தை அரிந்து அதனை விசுவாசிப்பதின் மூலம் மட்டுமே நாம் இரட்சிக்கப்படவேண்டுமென கர்த்தர் நம்மிடம் கூறுகிறார்.

சில மக்கள் தம்முடைய சொந்த இருதயங்களையே வஞ்சிக்கிறார்கள். தம்முடைய இருதயங்கள் பாவம் நிறைந்ததாக இருந்தாலும் கூட, தாம் பாவமற்றவர்கள் என அவர்கள் விசுவாசிக்கின்றனர், ஆனால் கர்த்தரை அவர்களால் வஞ்சிக்க முடியாது, ஏனெனில் அவர்களின் இருதயங்களில் இன்னமும் பாவமிருக்கிறது. அவர்களுடைய இருதயங்களில் இன்னமும் பாவம் நிறைந்திருப்பதால், இம்மக்கள் நடுவே கர்த்தரால் சஞ்சரிக்க முடியாது. இந்த தவறான நம்பிக்கையிலிருந்து நாம்

திரும்ப வேண்டியிருப்பதாலும், உண்மையான நற்செய்தியை நாம் விசுவாசிக்க வேண்டியிருப்பதாலும், ஆசரிப்புக்கூடாரத்தின் வெளிப் பிரகார வாசலிலுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட கர்த்தரின் வார்த்தையை நாம் விசுவாசிக்க வேண்டும், இதன் மூலமாக நம் எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மால் இரட்சிக்கப்படமுடியும்.

ஆபிரகாமின் விசுவாசம் எதனால் சரியாகும்?

ஆதியாகமம் 17 இல் விருத்தசேதனத்தின் மூலமாக கர்த்தர் தன்னுடைய ஆசீர்வாத உடன்படிக்கையை ஆபிரகாமுடன் செய்தார். மறுபுறம், தம்முடைய பலிமுறையின் மூலமாக, ஆபிரகாமின் சந்ததியினராகிய இஸ்ரவேலர்கள், தம் கைகளை பாவபலியின் தலை மீது வைத்து தம் பாவங்களை அதன் மீது செலுத்தி, அதன் இரத்தத்தைச் சிந்தி பாவத்தைப் போக்கும் படியும் கர்த்தர் செய்தார் (லேவியராகமம் 1:1-4). இந்த பலி காணிக்கை மூலமாக, தம்முடைய மக்களுக்கு பாவமன்னிப்பு வழங்கவும், அவர்களுடன் என்றென்றும் இருக்கவும் கர்த்தர் விரும்பினார். இதனால் தான் பலியிடும் முறையை கர்த்தர் அவர்களுக்கு கொடுத்தார்.

ஆபிரகாம் விசுவாசித்த கர்த்தருடைய வாக்குதத்தம் கீழ் வருமாறு: *"உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி, உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்" (ஆதியாகமம் 17:6).* விருத்தசேதன அடையாளத்தின் மூலம் பெறக்கூடிய இரட்சிப்பின் ஆசீர்வாதமானது கர்த்தர் ஆபிரகாமுடனும் அவனின் சந்ததியாருடனும் செய்த உடன்படிக்கையாகும் (ஆதியாகமம் 17:5-10).

கர்த்தருக்கும் ஆபிரகாமிற்கும் இடையேயான உடன்படிக்கை அடையாளமாகிய விருத்தசேதனத்தைப் பெற்றுக் கொண்டதின்

மூலமாக, இஸ்ரவேல் மக்கள் கர்த்தரின் மக்களாகும் படி ஆசிர்வாதிக்கப்பட்டார்கள். யோவானிடமிருந்து இயேசு பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தின் மூலம் பழைய ஏற்பாட்டின் இந்த விருத்தசேதனமானது புதிய ஏற்பட்டின் போது நிறைவு செய்யப்பட்டது. இதுவே ஆவிக்குரிய விருத்தசேதனமாகும் (ரோமர் 2:29), இயேசுவின் ஞானஸ்நானத்தின் மீதுள்ள நமது விசுவாசத்தின் மூலம் அவர் மீது நமது பாவங்களைச் சுமத்துவதன் மூலம் நமது இருதயங்களின் எல்லாப் பாவங்களையும் துண்டித்து போடுவது இதுவாகும். இந்த ஆவிக்குரிய விருத்தசேதனத்தில் மனித நீதியின் இரட்சிப்பு காணப்படாமல், கர்த்தரின் நீதி காணப்படுகிறது.

புதிய ஏற்பாட்டு காலங்களில் வசிப்போராகிய நமக்கு, இயேசு தனது ஞானஸ்நானத்தின் மூலம் வெற்றிக்கொண்ட ஆவிக்குரிய விருத்தசேதனத்தை விசுவாசிக்கும் போது நமது உண்மை விசுவாசித்தின் மூலமாக மட்டுமே, கர்த்தர் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கை நிறைவேற முடியும். தம்முடைய பாவங்களிலிருந்து மன்னிப்பு பெறும்படியாக, இஸ்ரவேலர்கள் தம்முடைய கரங்களை பலி காணிக்கைகளின் தலையில் வைத்து அதன்மூலமாக பாவங்களை அதன் மீது செலுத்தியதினால், தம் பாவங்களை கழுவ பெற்றார்கள். இப்படி கைவைக்கப்பட்டதின் மூலமாக இஸ்ரவேலர்களின் பாவங்களை தன்மீது இந்த பலி காணிக்கை சுமந்ததால் அதற்கு பதிலாக தனது இரத்தத்தை சிந்த வேண்டியிருந்தது. கைவைப்பதையும் பலி காணிக்கையின் இரத்தத்தையும் விசுவாசிப்பதின் மூலமாக தமது எல்லாப் பாவங்களையும் கழுவ இஸ்ரவேலர்களால் முடிந்தது. வேறு வார்த்தையில் கூறினால், பழைய ஏற்பாட்டை பொறுத்தவரை, கைவைப்பதின் மூலம், எல்லாப் பாவங்களையும் பலி மிருகத்தின் மீது செலுத்த முடிந்தது, புதிய ஏற்பாட்டில் இயேசுவின் ஞானஸ்நானத்தையும் அவரின் சிலுவை இரத்தத்தையும் விசுவாசிப்பதின் மூலமாக அவைக் கழுவப்படுகின்றன.

கர்த்தரால் கொடுக்கப்பட்ட பாவ மன்னிப்பின் சத்தியமானது விருத்தசேதனத்தோடு நெருங்கிய தொடர்புடையது. ஆகவே

கர்த்தரின் அன்பை விசுவாசிக்க, விருத்தசேதனத்திற்கான அவசியப் பொருளான நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலம் வரும் இரட்சிப்பின் சத்தியத்தை அறிந்து கொள்வது முற்றிலும் அவசியமானதாகும். யாத்திராகமம் 25 இலிருந்து ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி கர்த்தர் கூறுகிறார்; இஸ்ரவேல் மக்களுக்கு இந்த ஆசரிப்புக் கூடாரத்தை கொடுத்தமைக்கான கர்த்தரின் நோக்கம், விருத்தசேதனத்திலுள்ள அவர்களின் விசுவாசத்தின் மூலம் அவர்களின் பாவங்களை சுத்தப்படுத்துவதேயாகும். விருத்தசேதனமே பாவமன்னிப்பை எடுத்து வந்தது என்பது என்றென்றும் மாறாத சத்தியமாகும், படைப்பிற்கு முன்னரேயே இவையனைத்தும் திட்டமிடப்பட்டன.

தன்னுடைய வார்த்தையை விசுவாசித்த ஆபிரகாமின் விசுவாசத்தைக் கர்த்தர் அங்கீகரித்தார். ஆசரிப்புக்கூடாரத்தின் பலியிடும் முறை இன்னமும் கொடுக்கப்பட்டிராவிட்டாலும், நோவாவும் கூட பலி காணிக்கையைக் கர்த்தருக்கு செலுத்தினான். புதிய ஏற்பாட்டின் காலத்தில், ஆபிரகாமுடனான அவரின் உடன்படிக்கையின் முக்கிய பொருளான நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை கர்த்தர் மனிதர்களுக்கு கொடுத்தார். அத்துடனே கூட, ஆபிரகாமின் விசுவாசமும் ஆசரிப்புக்கூடாரத்தின் பலியிடும் முறையும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை என்பதையும், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசு நமக்கு அருளிய நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவிக்கு இவை சமமானவை என்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

ஆகவே, ஆசரிப்புக்கூடாரத்தின் விளக்கமானது ஆபிரகாமின் விசுவாசத்துடனும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியுடனும் எப்படி தொடர்பு கொண்டுள்ளன என்பதைக் குறித்தும் இப்புத்தகத்தில் தெளிவாக காண்பதோடு, நமது கண்டுபிடிப்பின் மூலமாக, ஆசரிப்புக்கூடாரத்தின் மூலமாக அறிவிக்கப்பட்ட இரட்சிப்பின் சத்தியத்தை நமது இருதயங்களில் நாம் ஏற்றுக் கொண்டு அதனை விசுவாசிப்போமாக.

ஆசரிப்புக் கூடாரம்

ஆசரிப்புக்கூடாரமானது கர்த்தர் வாசஞ் செய்த இடமாகும். மேலும் மனித சரீரத்தில் வந்த நம் தேவனாகிய கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் நிழலும் இதுதான்.

ஆசரிப்புக் கூடாரமானது அகேசியா மரத்தின் 48 பலகைகளால் கட்டப்பட்ட சிறிய அமைப்பாகும், ஆசரிப்புக் கூடாரத்தின் வெளி பிரகாரத்தில் 60 தூண்கள் இருந்தன. ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப்பிரகாரத்தைச் சுற்றியிருந்த வேலியில் வெள்ளைச் சணலால் ஆன திரைகள் தொங்கவிடப்பட்டிருந்தன, இவை 60 தூண்களால் ஸ்திரப்படுத்தப்பட்டன. இதன் வாசலானது இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்து, இதன் உயரம் 2.5 மீட்டரும், அகலம் 10 மீட்டருமாயிருந்தது. இந்த வாசல் பிரகாரத்தின் கிழக்குப் பக்கத்தில் அமைந்திருந்தது.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்ட ஆசரிப்புக் கூடார வாசலில், கிழக்கு பக்கமாக தொங்கும் திரைச்சீலையின் வழியாக உள்ளே சென்றால், சர்வாங்க தகன பலி பீடத்தை நாம் காணலாம். சர்வாங்க தகனபலி பீடத்தை கடந்து பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைவதற்கு முன்னால், வெண்கல பாத்திரம் ஒன்று இருப்பதை நாம் காணலாம். இந்தப் பாத்திரத்தைக் கடந்து பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லும்போது, இடது பக்கமாக விளக்குத்தண்டையும், வலது பக்கத்தில் மேசையையும், நடுவில் நறுமண மேடையைத் தாண்டி மகா பரிசுத்த ஸ்தலத்தை மறைத்திருக்கும் திரைச்சீலைக்கு பின்னால் உடன்படிக்கைப் பெட்டியை மூடியிருக்கும் கிருபாசனம் உள்ளது.

இஸ்ரவேலர்களினதும் அவரை விசுவாசிக்கும் எல்லோரினதும் பாவங்களை மன்னித்த இயேசு கிறிஸ்துவின் நிழலாக ஆசரிப்புக் கூடாரம் இருக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தின் சொந்தக்காரர் நமது தேவனே. ஒரே தரமாக எல்லோருடைய பாவங்களையும் துடைத்த இரட்சகர் அவரே, அனைத்து

மனிதர்களின் பலி காணிக்கையும் அவரே.

இஸ்ரவேல் மக்கள் ஒவ்வொரு நாளும் பாவம் செய்தாலும் கூட, பலியிடும் முறைப்படி ஆசாரிப்பு கூடாரத்தினுள்ளே கலங்கமில்லாத பலி மிருகத்தின் தலை மீது சுமத்த முடிந்தது. இப்படியாக தான் பலியிடும் முறையின் மூலமாக, ஆசாரியர்களும் பலி காணிக்கைகளும் செய்த ஊழியத்தினை நம்பும் எவராலும் பாவ மன்னிப்பைப் பெற்று தமது பாவங்களைக் கழுவி பனியைப் போல் வெண்மையாக முடிந்தது. அது போலவே, ஆசரிப்புக் கூடாரத்தின் சாராம்சமான இயேசுவின் ஞானஸ்நானத்தையும் பலியையும் விசுவாசிப்பதின் மூலம், இஸ்ரவேல் மக்களாலும், புறஜாதியாரான நம்மாலும், நமது எல்லாப் பாவங்களுக்கும் மன்னிப்பைப் பெற்றோம் என்ற ஆசீர்வாதத்தை அணிந்து தேவனுடனே கூட நித்தியமாக வாழும் ஆசீர்வாதத்தையும் பெற்றோம்.

இஸ்ரவேலர்கள் மட்டுமின்றி, ஆசரிப்புக் கூடாரத்தின் தேவனாகிய இயேசுவை விசுவாசிப்பதின் மூலம் எல்லா புறஜாதியார்களாலும் கூட தம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலையடைய முடியும். கர்த்தர் ஒவ்வொருவருக்கும் கொடுத்த பாவ மன்னிப்பாகிய வரம் என்ன என்பதைக் குறித்து ஆசரிப்புக் கூடாரம் நமக்கு போதிக்கிறது. அதற்கு மேலும், ஆசரிப்புக் கூடாரமே இயேசு கிறிஸ்துவின் முக்கிய பொருளாகும்.

இயேசுவானவர் பாவிகளின் இரட்சகரானார். ஒவ்வொரு பாவியும் அவன்/அவள் யாராயிருந்தாலும், இயேசுவின் ஞானஸ்நானத்தையும், அவரின் சிலுவை இரத்தத்தையும், அவர் தாமே கர்த்தர் என்ற சத்தியத்தையும் விசுவாசிப்பதின் மூலம் பாவமற்றவர்களாக முடியும். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் மீதுள்ள நமது விசுவாசத்தின் மூலம் - வேறு வார்த்தைகளில் கூறினால், இயேசுவின் ஞானஸ்தானம், அவரின் இரத்தம், அவருடைய கர்த்தத்துவம் ஆகியவற்றை விசுவாசிப்பதின் மூலம் கர்த்தரின் தீர்ப்பிலிருந்து நம்மால் தப்ப முடியும். பரலோக ராஜ்யத்திற்கான வாசல் இயேசுவே

அப்போஸ்தலர் 4:12 கூறுகிறது, *"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்."* மக்களை அவர்களின் பாவங்களிலிருந்து இயேசுவைத் தவிர வேறு யாராலும் இரட்சிக்க முடியாது. இயேசுவைத்தவிர வேறு இரட்சகர் இல்லை. யோவான் 10:9 கூறுகிறது. *"நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்."* 1 தீமோத்தேயு 2:5 கூறுகிறது, *"தேவன் ஒருவரே தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே."* மத்தேயு 3:15 கூறுகிறது, *"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்."* இந்த சத்தியத்திற்கு இவ்வசனங்கள் யாவையும் சாட்சி கூறுகின்றன.

மனித சரீரத்தின் மூலமாக இயேசு இவ்வுலகிற்கு வந்தார், தன் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டதின் மூலமும் (இள நீல நூல்) தன்னுடைய இரத்தத்தைச் சிந்தியதின் மூலமும் (சிகப்பு நூல்), அவர் பாவிகளை இரட்சித்தார். எல்லாப் பாவங்களினதும் இரட்சிப்பின் வாசலாக இயேசு மாறினார். ஆசரிப்புக் கூடார வாசலினது இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் ஆனதை போல், இப்பூமிக்கு வந்த இயேசுவானவர், யோவான் ஸ்நானனிடமிருந்து பெற்ற தனது ஞானஸ்நானத்தின் மூலம், உலகின் பாவங்களையெல்லாம் முதலாவதாக அவர் தன்மீது ஏற்றுக்கொண்டார் இதனால் அவர், தேவாட்டுக்குட்டியாகிய பலி காணிக்கையானர் (யோவான் 1:29).

இரண்டவதாக, தன்னுடைய ஞானஸ்நானத்தினால் எல்லாப் பாவிகளினதும் மீறுதல்களையும் இப்படியாக தன்மீது ஏற்றுக் கொண்ட பிறகு, அவர்களின் இடத்திலிருந்து மரித்து அவரை விசுவாசிக்கும் அனைவருக்கும் புதியதொரு வாழ்வைக்

கொடுத்தார். மூன்றாவதாக இந்த இயேசு கர்த்தருமாவார். ஆதியாகமம் 1:1 கூறுகிறது *"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்."* ஆதியாகமம் 1:3 கூறுகிறது *"தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார், வெளிச்சம் உண்டாயிற்று."* இந்தக் கர்த்தர் இயேசுவைத் தவிர வேறு யாருமில்லை, தன்னுடைய வார்த்தையின் மூலமாக முழு பிரபஞ்சத்தையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்தது அவரே.

ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் உருவாக்கும்படி கர்த்தர் மோசேயிடம் கூறினார். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பாவிகளை நீதிமான்களாக்கும் தனது செய்கையை நிறைவேற்றினார், இதற்காக மனித சரீரத்தில் அவர் இந்த பூமிக்கு வந்து, தனது ஞானஸ்நானத்தினாலும் சிலுவை மரணத்தினாலும் தன் மக்களை அவர்களின் எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சித்தார். இந்த மூன்று ஊழியங்களே இயேசு பாவிகளை இரட்சித்த வழியாகும், இந்த சத்தியத்திற்கான அத்தாட்சியும் அவைகளே.

எபேசியர் 4:4-6 இல் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான், *"உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்."* இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை உருவாக்கப்பட்ட பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதை இவ்வசனம் குறிப்பிடுகிறது.

ஆசரிப்புக் கூடாரத்தினை ஆராய்வதின் மூலமாக, சரியான சத்தியத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும், இதன்மூலமாக நம் எல்லாப் பாவங்களிலிருந்தும் மன்னிக்கப்படுகிறதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய பரிசுத்தம் உங்களுடனே கூட இருப்பதாக. 🖂

பிரசங்கம்

1

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.





ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும்,
டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்படுத்தப்பட்ட பாவிகளின் இரட்சிப்பு

< யாத்திராகமம் 27:9-21 >

"வாசஸ்தலத்துக்குப் பிராகாரத்தையும் உண்டு பண்ணுவாயாக; தெற்கே தென்திசைக்கு எதிரான பிராகாரத்துக்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலால் செய்யப்பட்ட நூறுமுழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும். அவைகளுக்கு வெண்கலத்தினாலே இருபது தூண்களும், இருபது பாதங்களும் இருக்கவேண்டும்; தூண்களின் கொக்கிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும். அப்படியே வடபக்கத்தின் நீளத்திற்கும் நூறு முழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும்; அவைகளுக்கு இருபது தூண்களும், அவைகளுக்கு இருபது பாதங்களும் வெண்கலமாயிருக்க வேண்டும்; தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும். பிராகாரத்தின் மேற்பக்கமான அகலத்திற்கு ஐம்பது முழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும்; அவைகளுக்குப் பத்துத் தூண்களும், அவைகளுக்குப் பத்துப் பாதங்களும் இருக்கவேண்டும். சூரியன் உதிக்கிற திசையாகிய கீழ்ப்பக்கத்தின் பிராகாரம் ஐம்பதுமுழ அகலமாயிருக்கவேண்டும். அங்கே ஒரு புறத்திற்குப் பதினைந்து முழ நீளமான தொங்கு திரைகளும்,

அவைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும். மறுபுறத்துக்குப் பதினைந்து முழ நீளமான தொங்கு திரைகளும், அவைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும். பிராகாரத்தின் வாசலுக்கு இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல்வேலையாய்ச் செய்யப்பட்ட இருபதுமுழ நீளமான ஒரு தொங்குதிரையும் அதற்கு நாலு தூண்களும் அவைகளுக்கு நாலு பாதங்களும் இருக்கவேண்டும். சுற்றுப் பிராகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளியினால் பூண் கட்டப்பட்டிருக்கவேண்டும்; அவைகளின் கொக்கிகள் வெள்ளியினாலும் அவைகளின் பாதங்கள் வெண்கலத்தினாலும் செய்யப்பட்டிருக்க வேண்டும். பிராகாரத்தின் நீளம் நூறுமுழமும், இருபுறத்து அகலம் ஐம்பது ஐம்பது முழமும், உயரம் ஐந்து முழமுமாயிருப்பதாக; அதின் தொங்கல்கள் திரித்த மெல்லிய பஞ்சுநூலினால் செய்யப்பட்டு, அதின் தூண்களின் பாதங்கள் வெண்கலமாயிருக்க வேண்டும். வாசஸ்தலத்துக்கடுத்த சகல பணிவிடைக்குத் தேவையான எல்லாப் பணிமுட்டுகளும், அதின் எல்லா முளைகளும், பிராகாரத்தின் எல்லா முளைகளும் வெண்கலமாயிருக்கவேண்டும். குத்துவிளக்கு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும்படி இடித்துப் பிழிந்த தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னிடத்தில் கொண்டுவரும்படி இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடுவாயாக. ஆசரிப்புக் கூடாரத்தில் சாட்சி சந்நிதிக்கு முன்னிருக்கும் திரைச்சீலைக்கு வெளிப்புறமாக ஆரோனும் அவன்

குமாரரும் சாயங்காலம் தொடங்கி விடியற்காலம்மட்டும் கர்த்தருடைய சந்நிதானத்தில் அந்த விளக்கை எரியவைக்கக்கடவர்கள்; இது இஸ்ரவேல் புத்திரருக்கு தலைமுறை தலைமுறையாக நித்திய கட்டளையாயிருக்கக்கடவது."

ஆசரிப்புக் கூடாரத்தின் செவ்வக பிரகாரத்தின் வேலியானது 100 முழம் நீளத்தில் இருந்தது. வேதாகமத்தில் ஒருவனின் முழங்கையில் இருந்து அவனுடைய விரல்களின் நுனி வரையிலான நீளமே ஒரு முழம் என்று அமைக்கப்பட்டிருந்தது. இன்றைய அளவில் 45 செ.மீ (18 அங்குலங்கள்) இருக்கும். இதைப் போலவே ஆசரிப்புக் கூடாரத்தினுடைய செவ்வக பிரகாரத்தின் வேலி 100 முழங்கள் நீளம் இருந்தது, அதாவது 45 மீட்டர்கள் (150 அடிகள்) இருந்தது. மேலும் அதனுடைய அகலம் 50 முழங்கள் அதாவது அது கிட்டதட்ட 22.5 மீட்டர்கள் (75 அடி) அகலம் இருந்தது. இதன் காரணமாக பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்கு இடையே தங்கியிருந்த பொழுது அவருடைய வீட்டின் அளவு இதுவாக இருந்தது.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வெளிப்புற பிரகாரமானது வேலிகளால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது

நீங்கள் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய மாதிரியை படத்திலோ, ஒவியத்திலோ எந்த சந்தர்பத்திலாவது பார்த்திருக்கிறீர்களா? பொதுவாக பேசினால், ஆசரிப்புக் கூடாரம் கர்த்தர் தங்கும் வீடாகவும் அதாவது ஆசரிப்புக் கூடாரமாகவும் அதனுடைய பிரகாரமாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. இந்த கர்த்தருடைய வீட்டில் அதாவது

ஆசரிப்புக் கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலம் என்ற ஒரு சிறிய கட்டிடம் இருந்தது. பரிசுத்த ஸ்தலமானது நான்கு வித்தியாசமான போர்வைகளால் மறைக்கப்பட்டிருந்தது. ஒரு போர்வை மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலால் நெயப்பட்டிருந்தது. மற்றொன்று ஆட்டு ரோமத்தினாலும், மற்றொன்று சிவப்பு சாயம் அடிக்கப்பட்ட கன்றுகுட்டியின் தோலாலும் மேலும் மற்றொன்று மரநாயின் தோழாலும் செய்யப்பட்டிருந்தது. ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தின் கிழக்கு பகுதியில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றுடன் அதனுடைய வாசற்கதவு காணப்பட்டது. இந்த வாசற்கதவுக்குள் நுழைந்தால், தகன பலிபீடத்தையும், வெண்கல பாத்திரத்தையும் பார்த்திருக்க முடியும். வெண்கல பாத்திரத்தை கடந்துச் சென்றால் நாம் ஆசரிப்புக் கூடாரத்தையே பார்த்திருக்க முடியும். ஆசரிப்புக் கூடாரமானது பரிசுத்த ஸ்தலமென்றும் மகா பரிசுத்த ஸ்தலமென்றும் பிரிக்கப்பட்டிருந்தது.

இங்கு தான் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி காணப்பட்டது. ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தின் வேலியானது, மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் தொங்கல் கொண்ட 60 தூண்களுடன் கட்டப்பட்டிருந்தது. இன்னொரு புறம், ஆசரிப்புக் கூடாரமானது 48 பலகைகளையும் 9 தூண்களையும் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இதன் தோற்றத்தின் மூலம் கர்த்தர் நம்முடன் என்ன பேசுகிறார் என்பதை புரிந்துக் கொள்ள வேண்டுமென்றால் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வெளித் தோற்ற சிறப்புகளை குறித்ததான பொது எண்ணமாவது நமக்கு இருக்க வேண்டும்.

கர்த்தர் 48 பலகைகளால் கட்டப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்துக்குள் தங்கி இருந்தார். கர்த்தர், இஸ்ரவேல் மக்களுக்கு தன்னுடைய பிரசன்னத்தை, பகலில் ஆசரிப்புக்

கூடாரத்துக்கு மேலே ஒரு மேகஸ்தம்பத்தின் மூலமாகவும் இரவில் அக்கினிஸ்தம்பத்தின் மூலமாகவும் வெளிப்படுத்தினார். மேலும் கர்த்தர் தங்கியிருந்த பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளே, கர்த்தருடைய மகிமை நிறைந்திருந்தது. பரிசுத்தமான இடத்திற்குள், அப்பத்தினுடைய மேஜையும், விளக்குத்தண்டு மற்றும் தூபவர்க்க பலிபீடமும் இருந்தது. மேலும் மகா பரிசுத்தமான இடத்திற்குள் உடன்படிக்கைப் பெட்டியும் கிருபாசனமும் இருந்தது. இவை இஸ்ரவேலின் பொது மக்களுக்காக இருந்த பாதி அளவு இருக்கைகள்; ஆசரிப்புக் கூடாரத்தின் விதி முறைப்படி ஆசாரியரும் தலைமை ஆசாரியரும் மட்டுமே இந்த இடங்களுக்குள் நுழைய முடியும். *"இவைகள் இவ்விதமாய் ஆயத்தமாக்கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்கள்" (எபிரெயர் 9:6-7)* என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசனம் சொல்கிறது இன்றைய காலத்தில், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மீது சரியான நம்பிக்கையுடையவர்களால் மட்டுமே கர்த்தருக்கு சேவைச் செய்துக் கொண்டே அவருடன் தங்கள் வாழ்க்கையை வாழ முடியும்.

அப்பத்தினுடைய மேஜையின் மேல் வைக்கப்பட்டிருக்கும் அப்பத்தின் பெயர் என்ன? அது கர்த்தருடைய வார்த்தை என்று அர்த்தம். வாசனையுடைய பலிபீடம் என்றால் என்ன? இது ஜெபங்களைக் குறித்து நமக்குச் சொல்கிறது மிகவும் பரிசுத்தமான இடத்திற்குள், உடன்படிக்கைப் பெட்டியும், சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்ட கிருபாசனமும், பேழையின் மேல் போடப்பட்டிருந்தது. தேவதூதர்கள் தங்களின் இறக்கையை மேலே விரித்து, இரக்கத்தின் இருக்கையை தங்களின் இறக்கைகளால் மூடி, கிருபாசனத்தைப் பார்த்தபடி, அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிருபாசனத்தின் இடத்தில் தான்

கர்த்தருடைய கிருபை அளிக்கப்பட்டது. பத்துக் கட்டளைகள் செதுக்கப்பட்டிருந்த இரண்டு கல்வெட்டுக்களும், ஆரோனுடைய தளிர்விட்ட ஊன்று கோலும், மன்னாவால் நிறப்பட்ட ஜாடியும், உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தது. பேழை தங்க மூடியால் மூடப்பட்டிருந்தது. (கிருபாசனம்) மேலும் அதற்கு மேலே தேவ தூதர்கள் கிருபாசனத்தைப் பார்த்து கொண்டிருந்தனர்.

பாவ மன்னிப்பு பெற்றவர்கள் எல்லோரும் எங்கு வசிக்கிறார்கள்?

பரிசுத்தமான இடம் தான் பாவ மன்னிப்பு பெற்ற அனைவரும் இருக்கும் இடம். பரிசுத்தமான இடமானது 48 பலகைகளால் கட்டப்பட்டிருந்தது, இவை எல்லாமே தங்கத்தினால் பூசப்பட்டிருந்தது, இதைப் பற்றி நினையுங்கள். நீங்கள் ஒரு சில தங்கச் சுவர்களை பார்க்காமல், 48 தங்க பலகைகளைப் பார்க்கிறீர்கள் என்றால், அது எப்படி அருமையாக பிரகாசிக்கும்? பரிசுத்தமான இடத்தின் உட்புறம் அதனுடைய எல்லாப் பொருட்களும் இதே போல் சுத்தமான தங்கத்தினால் செய்யப்பட்டிருந்த காரணத்தினால், இவை அருமையாக பிரகாசித்தன.

நெருப்பில் இடப்பட்ட காணிக்கையின் பலிபீடமும் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வெளி பிரகாரத்தில் இருந்த வெண்கல பாத்திரமும் பித்தளையால் செய்யப்பட்டிருந்தது. மேலும் பிரகாரத்தினுடைய வேலி வெள்ளி மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலால் தயாரிக்கப் பட்ட துணியால் மூடப்பட்டிருந்தது. இதற்கு மாராக, பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருக்கும் எல்லா பொருட்களும் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தன. விளக்குத்தண்டு தங்கத்தால் செய்யப்பட்டிருந்தது. அதே போல அப்பம் வைக்கப்பட்டிருந்த

மேஜையும் தங்கத்தில் செய்யப்பட்டிருந்தது. பரிசுத்தமான இடத்தில் இருந்த எல்லா பொருட்களும் மற்றும் அதன் மூன்று சுவர்களும் சுத்தமான தங்கத்தினால் செய்யப்பட்டிருந்ததால் பரிசுத்த இடத்தினுடைய உட்புறம் எப்பொழுதுமே தங்க பிரதிபலிப்புடன் அருமையாக பிரகாசித்துக் கொண்டிருந்தது.

பரிசுத்த ஸ்தலத்தினுடைய உட்புறம் தங்க பிரதிபலிப்புடன் அருமையாக பிரகாசித்துக் கொண்டிருந்தது, இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் தங்களின் விலை மதிப்பு இல்லாத விசுவாசத்தின் வாழ்க்கையை கர்த்தருடைய ஆலயத்திற்குள் வாழ்ந்தார்கள் என்று நமக்கு சொல்கிறது. நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவிக்குள், தங்களுடைய விசுவாசத்திற்குள் வாழும் பரிசுத்தவான்கள், பரிசுத்த இடத்தில் காணப்படும் சுத்தமான தங்கத்தைப் போன்றவர்கள். பரிசுத்த இடத்திற்குள் வாழும் இப்படிப்பட்ட பரிசுத்தவான்களின் வாழ்க்கையானது ஆலயத்திற்குள் தங்கியிருக்கும் ஆசீர்வாதமான வாழ்க்கையாக இருக்கிறது. இது கர்த்தருடைய வார்த்தையில் வாழ்கிறது, ஜெபித்து அவரை ஸ்தோத்தரிக்கிறது, கர்த்தருடைய ஆட்சிக்கு முன் செல்கிறது. மேலும் எல்லா நாளும் ஆலயம் முழுவதுமாக அவருடைய கிருபையினால் மூடப்பட்டிருக்கிறது. பரிசுத்தமான இடத்திற்குள் இருக்கும் விசுவாசமான வாழ்க்கை இது தான், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியினால் இரட்சிக்கப்பட்ட நீதிமான்கள் மட்டுமே, பரிசுத்த இடத்திற்குள் விலை மதிப்பற்ற விசுவாசமான வாழ்க்கையை வாழ முடியும் என்பதனை உங்கள் இருதயங்களுக்குள் நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டும்.

கர்த்தர் பரிசுத்தமான இடத்தினுடைய வெளிப்புறத்தையும் உட்புறத்தையும் தெளிவாக பிரித்தார்

பெரும்பாலான வீடுகள் வேலியுடன் இருப்பதைப் போல ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரமும் 60 தூண்களையும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் துணியின் தொங்கல்களால் சூழப்பட்டவாரு ஒரு வேலியை பெற்றிருந்தது. பிரகாரத்தின் கிழக்கு பகுதியில், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் செய்யப்பட்ட வாயில் கதவு எல்லோரும் பார்ப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. இது 9 மீட்டர் (30 அடி) அகலம் உடையதாய் இருந்தது.

ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி நாம் படிக்கும் பொழுது நம்மிடமிருந்து கர்த்தருக்கு தேவைப்படும் அருமையான விசுவாசம் என்ன என்பதையும் இரட்சிக்கப்பட்டவர்களின் விசுவாசம் எப்படிப்பட்டது, ஆசரிப்புக் கூடாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் மூலமாக நம்முடைய தேவன் நம்மை எப்படி மீட்டுக்கொண்டார் என்பதை நாம் தெளிவாக உணர்ந்துக் கொள்ள வேண்டும். பரிசுத்த இடத்திற்குள் பிடிப்பட்டுள்ள அருமையான மற்றும் தங்கமான விசுவாசம் என்ன என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும், ஏனென்றால் நாம் முதலில் வெண்கல பாத்திரத்தையும், தகன பலிபீடத்தையும், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வெளி பிரகாரத்தில் வைக்கப்பட்டிருந்த வேலியையும் மற்றும் அவற்றிற்கு பயன்படுத்தப்பட்ட எல்லா பொருட்களையும் கவனமாக பார்க்க வேண்டும். இப்படி செய்வதின் மூலம், நாம் எந்த வகை விசுவாசத்தின் மூலமும் அருமையான தங்கமான பிரதிபலிப்புடைய பரிசுத்த இடத்தை நுழைய முடியும் என்பதனை நாம் கண்டு கொள்ள முடியும்.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வெளி பிரகாரத்தில் என்னவெல்லாம் இருந்தது? அங்கு வெண்கல பாத்திரமும்

தகன பலிபீடமும் இருந்தன. அது 60 மரக்கட்டை தூண்களால் சூழப்பட்டிருந்தது. மேலும் இந்த தூண்களின் மேலே, மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலினால் செய்யப்பட்ட தொங்கல்கள் பிரகாரத்தின் வெளியாக வைக்கப்பட்டிருந்தது. இந்த தூண்களுடைய வேலி மரத்தினால் செய்யப்பட்டிருந்தது. இந்த மரமானது மிகவும் கடினமாக இருந்த போதிலும், இலகுவானதாக இருந்தது. இந்த மரத்தால் செய்யப்பட்ட தூண்கள் கிட்டதட்ட 2.25 மீட்டர் (7.5 அடி) உயரமுடையதாய் இருந்தது. இது சராசரி உயரமுடைய பெரும்பாலான மக்களை வெளி பிரகாரத்தினுடைய வேலிக்கு வெளிப்புறம் இருந்து ஆசரிப்புக் கூடாரத்திற்குள்ளே எட்டிப்பார்ப்பதை சாத்தியமில்லாமல் ஆக்கியது. ஏறி நிற்பதற்காக எதையாவது ஒன்றை வைத்தால், ஒருவரால் பிரகாரத்திற்குள்ளே பார்க்க முடியும், ஆனால் இதைப் போல உதவி இல்லாமல், உள்ளே எட்டிப்பார்ப்பது சாத்தியமே இல்லை. நம்முடைய சொந்த மனித முயற்சியின் மூலம், கர்த்தருடைய ராஜ்ஜியத்திற்குள் நம்மால் எப்பொழுதுமே நுழைய முடியாது என்று இது நமக்கு சொல்கிறது.

வெளி பிரகாரத்தின் மரத்தூண்களின் அடி மூளையில், பித்தளை கூடு வைக்கப்பட்டிருந்தது, மேலும் அவற்றின் நுனி வெள்ளித் தலைப்பாகத்தால் மூடப்பட்டிருந்தது. தூண்கள் தமக்குத் தானே நிற்க முடியாததால் பக்கத்திலிருந்த ஒவ்வொரு தூண்களையும் வெள்ளி கயிறு பலமாக பற்றிக் கொண்டிருந்தது. மேலும் எதிர்கோணத்தில் இருக்கும் தூண்களைத் தாங்குவதற்காக தூண்களுடைய வெள்ளி உரையில் வைக்கப்பட்டிருந்த வெள்ளி கொக்கிகள், கயிறுடன் இருக்கும் வெண்கல ஆப்புடன் கட்டப்பட்டிருந்தது (யாத்திராகமம் 35:18).

ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தினுடைய நுழைவாயிலுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் என்ன?

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவைதான் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய நுழைவு வாயிலுக்காக உபயோகப்படுத்தப்பட்ட பொருட்களாகும். நுழைவு வாயிலினுடைய உயரம் 2.25 மீட்டராகவும் (7.5 அடி), அதனுடைய அகலம் 9 மீட்டராகவும் (30 அடியாகவும்) இருந்தது. இது இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்ட திரையாக இருந்தது. இது நான்கு தூண்களின் மேல் தொங்கவிடப்பட்டிருந்தது. இதனால், எப்பொழுதாவது யாராவது ஒருவர் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தை நுழைய முயற்சி செய்யும் பொழுது, அவனோ/அவளோ அதன் நுழைவாயிலை எளிதாக கண்டு பிடிக்க முடியும்.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய நுழைவு கதவுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் பொருட்களின் மூலம், கர்த்தர் அவருடைய குமாரனாகிய இயேசுவின் நான்கு வேலைகளின் மூலம் நம்மை நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் மீட்டுக்கொள்வார் என்பதை தெளிவு படுத்துகிறார். எல்லா 60 மரத்தூண்களும், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தினுடைய வேலியுடைய மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலும், கர்த்தர் அவருடைய குமாரனான இயேசுவின் மூலம் என்னையும் உங்களையும் நம்முடைய பாவத்திலிருந்து எந்த வகையில் மீட்டுக் கொள்வார் என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வெளி பிரகாரத்தின் நுழைவு வாயில் மூலமாக, கர்த்தர் நமக்கு இரட்சிக்கப்படுதலின் இரகசியத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறார். நாம் மறுபடியும் ஒரு முறை ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தினுடைய நுழைவு கதவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்களைப் பற்றி பார்ப்போம்: இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல். இந்த நான்கு நூல்களும், இயேசுவை விசுவாசித்து மீட்டுக் கொள்ளப்படுவதற்கு நமக்கு மிகவும் முக்கியமாயிருக்கிறது. இந்த பொருட்கள் எல்லாம் முக்கியமில்லை என்றால், வேதாகமம் இவற்றை அவ்வளவு விளக்கமாக எழுதியிருக்காது.

ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தினுடைய நுழைவாயிலில் பயன்படுத்தப்பட்டுள்ள எல்லா பொருட்களுமே, கர்த்தர் என்னையும், உங்களையும் மீட்டுக்கொள்வதற்கு மிகவும் முக்கியமானதாகும். ஆனாலும், வாயில் கதவானது இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது என்ற உண்மை பாவிகளை மீட்பதற்கு இது கர்த்தருக்கு மிகவும் முக்கியமாயிருக்கிறது ஏனென்றால், இந்த நான்கு நூல்களும் கர்த்தருடைய சரியான இரட்சிக்கப்படுதலுக்கு வெளிப்படுத்துதலாக இருந்தன. இதனால் தான் சீனாய் மலையின் மேல் மோசேயிக்கு கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய மாதிரியை காண்பித்ததுடன் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய நுழைவாயிலை இதன் படி செய்யுமாறும் அவனிடம் கூறினார்.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் பொருள் என்ன?

பரிசுத்தமான இடத்தினுடைய நுழைவு வாயில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்ட திரையினால் செய்யப்பட்டிருந்தது, மேலும் பரிசுத்த இடம் மற்றும் மகா பரிசுத்தமான இடத்திற்கு இடையில் இருக்கும் திரையும் இந்த நான்கு நூல்களால் தான் நெய்யப்பட்டிருந்தது. இது மட்டுமல்ல, ஆனால் தலைமை ஆசாரியனுடைய ஏபோதும் மார்புக் கவசமும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது. பின்பு இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை நமக்கு என்ன சொல்லுகின்றன? நம்மை மீட்டுக் கொள்வதற்காக தேவனுக்கு மிகவும் அவசியமான இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை நமக்கு சரியாக என்ன சொல்கின்றன? இந்த தலைப்பை நாம் விளக்கமாக ஆராய வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம்.

முதலில், நீல நிற நூல் இயேசு கிறிஸ்துவுடைய ஞானஸ்நானத்தைப் பற்றி நமக்கு சொல்லுகிறது. ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து அறியாமலிருக்கிறவர்களுக்கு நீல நிற நூல் இயேசு கிறிஸ்துவுடைய ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது, என்பது அவர்களுக்கு தெரியாது. இதைப் போலவே மறுபடியும் பிறக்காதவர்கள் பொதுவாக நீல நிற நூலின் அர்த்தத்தை "இயேசு கிறிஸ்து தான் கர்த்தர் மேலும் மனிதனுடைய சரீரத்தின் மூலமாக இந்த பூமிக்கு அவர் வந்தார் என்று சொல்லுகிறார்கள்." வேறு வகையில் பார்ப்போமானால்

மற்றவர்கள் நீல நிற நூல் என்பது வெறும் வார்த்தை தான் என்று முறையிடுகிறார்கள், ஆனால் வேதாகமம் நமக்கு சொல்லுகிறது 'இளநீல நிற நூல்' என்றால் இயேசுவின் ஞானஸ்நானம் என்று அர்த்தம். இயேசு உலகத்திற்கு வந்த பிறகு இந்த உலகத்தினுடைய பாவத்தை எல்லாம் தன் மீது இந்த ஞானஸ்நானத்தின் மூலமாக தான் பெற்றுக்கொண்டார் என்றும் வேதாகமம் சொல்லுகிறது. யோவான் ஸ்நானனிடமிருந்து இயேசு கிறிஸ்து பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தைத் தான் இளநீல நிற நூல் குறிப்பிடுகிறது என்று வேதாகமம் தெளிவாக காண்பிக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றிய வார்த்தையை படிக்கும் பொழுது, இயேசுவின் ஞானஸ்நானத்தில் இருக்கும் நம்முடைய விசுவாசத்தின் முக்கியதுவத்தை நமக்கு கர்த்தர் காண்பிக்க விரும்புகிறார் என்பதை நான் உணர தொடங்கினேன்.

காணிக்கைக் கொடுக்கும் பொழுது தலைமை ஆசாரியனால் அணியப்பட்டிருந்த அங்கியானதும் இளநீல நிற நூலால் நெய்யப்பட்டது தான். தலைமை ஆசாரியன் தன் தலையில் அணிந்திருந்த ஏபோதில் ஒரு தங்க தட்டு தொங்கவிடப்பட்டது. மேலும் ஏபோதில் கட்டிய மெல்லிய கயிரும் நீல நிறமாக தான் இருந்தது. மேலும் இந்த தங்க தட்டில் *"கர்த்தருக்கே பரிசுத்தம்"* என்ற வார்த்தை எழுதப்பட்டிருந்தது. தலைமை ஆசாரியனின் ஏபோதின் மேலே தங்க தட்டை கட்டிய நீல நிற நூல் இயேசுவின் ஞானஸ்நானம் தேவனுக்கு பரிசுத்தத்தை தருகிறது என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது என்பதை நாம் பார்க்கலாம்.

இந்த வழியில், ஏபோதின் தங்க தட்டை கட்டிய நீல நிற மெல்லிய நூல் மூலம், கர்த்தர் உண்மையான இரட்சிக்கப்படுதல் பற்றி நம்மிடம் பேசுகிறார். வேறு வார்த்தையில் கூற வேண்டுமானால் நமக்கு பரிசுத்தத்தைத் தரும் கடையாணியாக இருப்பது நீல நிறம்

மேலும் இது தான் இயேசுவின் ஞானஸ்நானமாயிருக்கிறது. நீல நிறம் பொதுவாக நமக்கு நீல வானத்தைக் குறித்து ஞாபகப்படுத்தினாலும், நீல நிறம் கர்த்தரை மட்டுமே குறிப்பிடுவதில்லை. எல்லா இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவைகளில் நீல நிற நூல் இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம் என்று உறுதியாய் கூறுகிறது. வேறு வகையாக சொன்னால், இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றதன் மூலம், இந்த உலகத்தில் உள்ள எல்லா பாவிகளுடைய பாவத்தையும் எடுத்துக்கொண்டார் என்று நீல நிற நூல் சொல்லுகிறது. (மத்தேயு 3:15) இயேசு ஞானஸ்நானத்தை எடுத்துக் கொண்டதன் மூலம் எல்லோருடைய பாவத்தையும் ஏற்காமல் இருந்தால், விசுவாசிகளாகிய நாம் தேவனுக்கு பரிசுத்தத்தை தந்திருக்க முடியாது. இயேசு எடுத்துக் கொண்ட ஞானஸ்நானம் மட்டும் இல்லாமல் இருந்தால் கர்த்தருக்கு முன்பாக நாம் எப்பொழுதுமே பரிசுத்தத்தால் மூடப்பட்டிருக்க மாட்டோம்.

மோசேயிற்கு காண்பிக்கப்பட்ட முறைப்படி ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தினுடைய நுழைவாயிலை நெய்யவேண்டும் என்ற கர்த்தரின் கட்டளையின் ஆவிக்குரிய அர்த்தம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? கர்த்தர் தங்கியிருந்த ஆசரிப்புக் கூடாரத்திற்குள் அழைத்துச் செல்லும் பிரகாரத்தினுடைய நுழைவாயில் இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து இல்லாமல் யாராலும் பரலோக ராஜ்ஜியத்தில் நுழைய முடியாது. இயேசு கிறிஸ்துவை குறிக்கும் பிரகாரத்தினுடைய வாயில் கதவானது இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் தெளிவாக நெய்யப்பட்டிருந்தது. ஏனென்றால் கர்த்தர், நம்முடைய இரட்சிக்கப்படுதலுக்கு நம்மை அழைத்துச் செல்லும்

உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்று இருந்தார். 'இரத்தாம்பர நிறம்' பரிசுத்த ஆவியானவரை குறிக்கிறது. இது இயேசுவே ராஜாதி ராஜா என்று நமக்கு சொல்கிறது சிவப்பு நிறம் இயேசு கிறிஸ்து சிலுவையின் மீது சிந்திய இரத்தத்தைக் குறிக்கிறது. நீல நிறம், சற்று முன்பு சொன்னதைப் போல, யோவான் ஸ்நானனிடமிருந்து இயேசு கிறிஸ்து பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை இயேசுவின் ஞானஸ்நானத்தையும், கர்த்தருடைய அவதாரத்தையும் மற்றும் சிலுவையின் மேலே அவருடைய மரணத்தையும் குறிக்கின்றன. இந்த மூன்று நூல்களிலும் தெரிவிக்கப்பட்ட இயேசுவினுடைய வேலைகள், "யெகோவா" முன்பாக நாம் பரிசுத்தமாய் செல்வதற்கான விசுவாசத்தை நமக்கு தருகிறது. இயேசு கர்த்தராக இருந்து, மனிதனுடைய சரீரத்தின் வழியாக இந்த பூமிக்கு வந்தார். ஞானஸ்நானத்தின் மூலம் பாவிகளுடைய பாவங்களை தன்னுடைய சரீரத்தின் மேல் எடுத்துக் கொண்டார், மேலும், தன் இரத்தத்தை சிந்தியதன் மூலம், மற்றவர்களுக்கு பதிலாக எல்லா பாவங்கள் மற்றும் சுபாவங்களின் தண்டனையை ஏற்றுக்கொண்டார். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை மிகுந்த ஆவிக்குரிய இரகசியமாய் இருக்கிறது.

இள நீல நிற நூல் கர்த்தரையோ அல்லது அவருடைய வார்த்தையையோ வெளிப்படுத்துகிறது என்று நீங்கள் இதுவரை நினைத்திருக்கலாம். ஆனால் இள நீல நிற நூல் உண்மையில் இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது என்பதனை நீங்கள் இப்போது தெளிவாக தெரிந்துக் கொள்ள வேண்டும். இயேசு நம்முடைய பாவங்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு, அவற்றை அவர்

மீது செலுத்தி கொண்ட ஞானஸ்நானமானது மிகவும் முக்கியமானது. மேலும் அவருடைய வேலையில் இருந்து இதை விடமுடியாது. பழைய ஏற்பாட்டின் ஆசாரிப்புக் கூடாரம் முதல் கர்த்தர் இதனுடைய முக்கியதுவத்தை நமக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஞானஸ்நானத்தின் வழியாக தான் நம்முடைய பாவங்களை இயேசு ஏற்றுக்கொண்டார்

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வேலியின் தூண்கள் அகேசியா மரத்தினால் செய்யப்பட்டிருந்தது, வெண்கல கூடு இந்த தூண்களுடன் கீழே வைக்கப்பட்டிருந்தது. மேலே, வெள்ளி தூண்களின் தலைப் பாகத்தால் மூடப்பட்டிருந்தது. பாவிகள் அவர்களுடைய பாவங்களுக்காக நியாயம் தீர்க்கப்படவேண்டும் என்று இது சொல்லுகிறது. தங்களுடைய பாவங்களுக்காக ஒருமுறை நியாயம் தீர்க்கப்படாமல் இருந்து அதன் மூலம் இரட்சிக்கப்படாமல் இருப்பவர்கள், கர்த்தருக்கு முன்பாக செல்லும் பொழுது அவர்களின் பாவத்திற்கான நிரந்தர தண்டனையை ஏற்றுக்கொள்வதற்காக தீர்க்கப்படுவார்கள்.

"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) என்று எழுதியிருப்பது போல பாவிகள் அவர்களுடைய பாவங்களுக்காக கர்த்தரின் பயமுள்ள நீயாயத்தீர்ப்புக்காக நிச்சயம் அனுப்பப்படுவார்கள். இதனால் பாவிகள் ஒருமுறை அவர்களுடைய பாவங்களுக்காக கர்த்தரால் நியாயம் தீர்க்கப்படவேண்டும். பின்பு அவருடைய கிருபையால் மூடப்பட்டு மறுபடியும் வாழவேண்டும். இது தான் மறுபடியும் பிறப்பது என்பதாகும். ஞானஸ்நானத்தின் மூலம் இயேசு கிறிஸ்து நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது தானாகவே எடுத்துக்கொண்டார்

என்று நீல நிற நூலின் விசுவாசமும் இயேசு சிலுவையின் மீது நியாயம் தீர்க்கப்பட்டதன் மூலம் எல்லா பாவிகளையும் விடுவித்தார் என்ற சிவப்பு நிற நூலின் இந்த விசுவாசத்தை விட எதுவும் நம்மை ஒரு முறை நம்முடைய எல்லாப் பாவங்களுக்காக மரிக்கச்செய்து மறுபடியும் பிறக்க செய்வதில்லை. தங்களுடைய விசுவாசமின்மையால், நியாயத்தீர்ப்பை விசுவாசத்துடன் கடந்து செல்ல முடியாதவர்களுக்கு நிரந்தர தண்டனை காத்துக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் உணரவேண்டும்.

கிறிஸ்து நம் எல்லோரையும் இரட்சிப்பதற்காக நம்முடைய எல்லாப் பாவங்களையும் சுமந்தார் என்பதற்கு இயேசுவின் ஞானஸ்நானம் தான் வழியாக இருந்தது. நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொள்வதற்காக, யோவான் ஸ்நானகனால் இயேசு ஞானஸ்நானம் பண்ணப்பட்டார். இயேசு கர்த்தராக இருந்து, நம்மை மீட்டுக் கொள்ள வேண்டியுள்ளது, மனிதனுடைய சரீரத்தின் மூலமாக இந்த பூமிக்கு வந்தார். யோவான் ஸ்நானகனின் ஞானஸ்நானத்தின் மூலம் பாவிகளுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுகொண்டார், மேலும் மனித குலத்தின் பிரதிநிதியாக பாவிகளுக்கு பதிலாக தன்னுடைய சரீரத்தை சிலுவையின் மேல் கொடுத்தும், தண்ணீரையும் இரத்தத்தையும் சிந்தியும் மற்றவர்களுக்கு பதிலாக தண்டனையை ஏற்றுக்கொண்டார். ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தின் வாசல், மீட்பராக இருந்து இயேசு நிறைவேற்றிய வேலைகளைப் பற்றி நமக்கும் விரிவாகவும் விளக்கமாகவும் சொல்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தின் வாசல் மூலமாக இயேசு பாவிகளுடைய மீட்பர் ஆகிவிட்டார் என்று கர்த்தர் நமக்கு தெளிவாக சொல்கிறார்.

மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டின் வார்த்தையைக் குறிக்கிறது. இது அதிக விளக்கமாகவும் மற்றும் ஒன்றை

ஒன்று பொருந்துமாரும் இருக்கிறது. இந்த மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலை உருவாக்குவதற்கு ஒவ்வொரு கயிற்றுப் புரிகளும் எவ்வளவு சிக்கலாக பின்னப்பட்டிருக்கும், இந்த மெல்லிய பஞ்சு நூலின் மூலம் கர்த்தர் அவர் நம்மை எப்படி மீட்டுக்கொண்டார் என்பதை விளக்கமாக சொல்கிறார்.

நாம் தரை விரிப்புகளைப் பார்க்கும்பொழுது பல வகையான நூல்களால் அவை பின்னப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம். இதைப் போலவே, இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்துடைய வாசலைச் செய்யவேண்டும் என்று இஸ்ரவேலர்களுக்கு கர்த்தர் சொன்னார் என இது சொல்லுகிறது. (தண்ணீரின் கர்த்தருடைய சிக்கலான வார்த்தைக்குள் ஒழிந்திருந்த ஞானஸ்நானம்) இரத்தம் (சிலுவை) மற்றும் பரிசுத்த ஆவி (இயேசு தான் கர்த்தர்) ஆகியவற்றின் மூலம் நம்மிடம் வந்த இயேசு, இரட்சிக்கப்படுதலின் கதவாக உள்ளார். கர்த்தருடைய மறைமுகமான வார்த்தையிலிருந்து வெளிப்படுத்தப்படும் இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கும் உண்மையான விசுவாசத்தைப் பெற்றிருப்பதன் மூலமும் அவருடைய அன்பினால் மூடப்படுவதன் மூலமும் நாம் இப்பொழுது விசுவாசத்தினால் முழுமையாக இரட்சிக்கப்பட்டுள்ளோம்.

இயேசு கிறிஸ்து நம்மை தற்செயலாக இரட்சிக்கவில்லை. நாம் ஆசரிப்புக் கூடாரத்தை பார்க்கும் பொழுது பார்க்க முடியும். இயேசு பாவிகளை சரியாக மீட்டுள்ளார். வேலியினுடைய தூண்களை மட்டும் நாம் பார்க்கும் பொழுது அவர் எப்படி நேர்த்தியாக மீட்டுள்ளார் என்பதனை நாம் உணரமுடியும். வேலியினுடைய எல்லா தூண்களுடைய எண்ணிக்கை ஏன் 60-ஆக இருக்கிறது, ஏனென்றால் எண் 6 மனிதனைக் குறிக்கிறது. அதே சமயம் எண் 3 கர்த்தரைக் குறிக்கிறது வெளிப்படுதல் 13 ஆம்

அதிகாரத்தில் 666 என்ற அடையாளம் எழுதப்பட்டிருக்கிறது, மேலும் இது தான் விலங்கினுடைய எண் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கூடவே அறிவுள்ளவர்களுக்கு இந்த எண்ணினுடைய மர்மம் தெரியும். இதனால், 666 என்ற எண் மனிதன் கர்த்தரைப் போல நடக்கிறான் என்று அர்த்தம். மனித குலத்தின் விருப்பம் தான் என்ன? சரியான ஆவிக்குரிய உயிரைப் போல ஆகக்கூடாது என்பது தானா? நான் உண்மையில் ஆவிக்குரிய உயிரை போல ஆக வேண்டும் என்றால், நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் நாம் மீண்டுமாக பிறக்க வேண்டும் கூடவே கர்த்தருடைய பிள்ளைகளாக வேண்டும் 60 தூண்கள் இந்த கருத்தை விரிவாக குறிக்கின்றன.

ஆனாலும், விசுவாசத்தை உடையவர்களாய் இருப்பதைவிட, மக்கள் பெருமை பாராட்டுகிறார்கள், தங்களுடைய சொந்த முயற்சியின் மூலமாக ஆவிக்குரிய தன்மையின் பங்குதாரர்களாக இருப்பதற்கான கெட்ட செயலை முயற்சிக்கிறார்கள். மனிதனுடைய இச்சைக்கேற்பவும், தங்களுடைய சொந்தமாக மனிதனால் செய்யப்பட்ட எண்ணங்களின் மீது இருந்த விசுவாசமின்மையையும், மனிதன் ஏன் கர்த்தருடைய எல்லா வார்த்தையையும் மறுபடியும் விளக்குகிறான் என்பதற்கு எந்த காரணமும் இல்லை. இவர்களிடம் விசுவாசம் இல்லை. கர்த்தருக்கு எதிராக நிற்கும் இச்சை மட்டுமே இவர்களிடம் இருக்கிறது. தங்களுடைய மாம்சத்தில் சரிநிலைமை அடைவதற்கும், தங்களுக்குதானே முழுமையாக வேண்டும் என்று முயற்சிக்கும் மாம்சத்தின் இச்சை மூலமாகத்தான் கர்த்தருடைய வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டவர்களாய் தங்கள் வாழ்க்கையை முடிக்கிறார்கள்.

இரட்சிக்கப்படுதலின் வார்த்தை ஆசரிப்புக் கூடாரத்தினுடைய எல்லா பொருட்களிலும் வெளிப் படுத்தப்பட்டிருந்தது

பாவிகளை மீட்பதற்காகவும் அவர்களை ஆசரிப்புக் கூடாரத்திற்குள் சேர்க்கவும், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய எல்லா பொருட்களும் மற்றும் பாத்திரங்களும் இயேசு கிறிஸ்துவுக்கு அவசியமாயிருந்தன. சர்வாங்க தகன பலிபீடம் அவசியமாயிருந்தது, வெங்கல தட்டு அவசியமாயிருந்தது மேலும் தூண்கள், வெங்கலக் கூடு, வெள்ளி தூண் தலைப்பாகம், கொக்கி மற்றும் வெள்ளி கயிறு ஆகியவையும் அவசியமாயிருந்தன. இந்த எல்லாப் பொருட்களும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் காணப்பட்ட பொருட்கள் ஆகும். மேலும் இவைகள் எல்லாம் பாவியை நீதிமானாக மாற்றுவதற்கு அவசியமாயிருந்தன.

இவை எல்லா பொருட்களுமே பாவிகளை பரலோக இராஜ்ஜியத்தில் நுழைய செய்வதற்கும் அங்கு வாழச் செய்வதற்கும் மிகவும் அவசியமாயிருந்தன, ஆனால் இவற்றில் மிகவும் முக்கியமானது நீல நிற நூல் (இயேசுவின் ஞானஸ்நானம்) ஆகும். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாசலை செய்வதற்காக பயன்படுத்தப்பட்டன. கர்த்தருக்குள் நாம் விசுவாசிக்கும் பொழுது நமக்கு தேவைப்படும் இயேசு கிறிஸ்துவினுடைய மூன்று வேலைகளையும் இந்த நூல்கள் குறிக்கின்றன. முதலாவதாக, இயேசு இந்த உலகத்திற்கு வந்து அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொண்டார். இரண்டாவதாக இயேசு தான் கர்த்தர் (ஆவி). மூன்றவதாக, யோர்தான் நதியில் யோவான் மூலம் அவர் தனக்குள் எல்லாருடைய பாவத்தின் தண்டனையையும் ஏற்றுக்

கொண்டதற்கு தண்டனையாக இயேசு சிலுவையின் மீது மரித்தார். பாவிகள் இரட்சிக்கப்படுவதற்கும் நீதிமானாவதற்கும் தேவைப்படும் உண்மையான விசுவாசத்தின் சரியான வரிசை இது தான்.

நாம் வேதாகமத்தை வாசிக்கும் பொழுது, நம்முடைய தேவன் எவ்வளவு மறைமுகமானவர் என்பதை நாம் உணரமுடியும். நம்மை இவ்வளவு விளக்கமாக, மெல்லிய பஞ்சு நூலில் உள்ள ஒவ்வொரு நூல் இழையைப் போல மீட்டுக் கொண்டவர் கர்த்தரை தவிர வேறு யாரும் இல்லை என்பதை நாம் தெளிவாக கண்டுக்கொள்ள முடியும். இன்னமும் அதிகமாக 9 மீட்டர் நீளம் கொண்ட இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்ட திரை மூலம் கர்த்தர், இஸ்ரவேலர்களை ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிற்கதவை கட்டும்படி செய்தார். இதைப் போலவே, மிகவும் தொலைவில் இருந்து யாராவது ஆசரிப்புக் கூடாரத்தை பார்த்தாலும் கூட ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தினுடைய வாயிற்கதவை மட்டும் பார்க்கமுடியும் என்பதையும் கர்த்தர் உறுதி செய்துக் கொண்டார்.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தினுடைய தூண்களில் தொங்கிக் கொண்டிருந்த தொங்கல்கள், கர்த்தருடைய பரிசுத்தத்தை வெளிப்படுத்தின. இதனால், பாவிகள் ஆசரிப்புக் கூடாரத்தை அணுகுவதற்கு பயப்படுவார்கள் என்பதையும், இயேசுவினுடைய ஊழியத்தை விசுவாசித்து அதன் மூலம் இரட்சிக்கப்பட்ட பிறகு தான் அவர்கள் பிரகாரத்திற்குள் நுழைய முடியும் என்பதையும் நாம் உணரமுடியும். இந்த இயேசுவின் ஊழியமானது, ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தினுடைய வாயிற்கதவிற்குள் நெயப்பட்டிருந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால்

வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக, இயேசு கிறிஸ்து பாவிகளுடைய எல்லா பாவங்களையும் ஏற்றுக்கொண்டு, அவர்களைத் நீர், இரத்தம் மற்றும் பரிசுத்த ஆவியின் மூலமாக மீட்டுக் கொண்டார் என்பதை அவர்களுக்கு கர்த்தர் வெளிப்படுத்தினார்.

இது மட்டும் அல்ல, ஆசரிப்புக் கூடாரத்தை அமைப்பதற்கு தேவைப்பட்ட எல்லா பொருட்களும், அதனுடைய பிரகாரத்தினுடைய நுழைவு கதவு உற்பட எல்லாமே பாவிகளை நீதிமான்களாக மாற்றுவதற்கு கர்த்தருக்கு தேவைப்பட்ட மறைமுகமான வார்த்தையை நமக்கு காண்பிக்கிறது. எல்லோரும் கண்டுபிடிக்கும் அளவிற்கு பெரியதாக ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தினுடைய வாயிற்கதவை அமைக்குமாறு இஸ்ரவேலர்களுக்கு, கர்த்தர் சொன்னதும் இந்த நுழைவு கதவானது இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் சிக்கலாக பின்னப்பட்டு செய்யப்பட்டிருந்ததாலும், பாவிகளை நீதிமான்களாக்கும் முக்கியமான வார்த்தையை நாம் எல்லோரும் தெளிவாக புரிந்துக் கொள்ளும்படி கர்த்தர் செய்தார்.

அகேசியா மரத்தைப் போல பாவத்தில் இருந்த நம்மை, இளநீலம் (இயேசுவின் ஞானஸ்நானம்), இரத்தாம்பரம் (இயேசு தான் கர்த்தர்), சிகப்புநூல் (சிலுவையின் இரத்தம்) என்பதன் மூலமாக கர்த்தர் நம்மை முழுமையாக மீட்டுக்கொண்டார் என்பதனை ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாசல் நமக்கு சொல்கிறது, இதை யார் முழுமையாக விசுவாசிக்கிறார்களோ, அவர்கள் தான் பரிசுத்த இடமாகிய, கர்த்தருடைய வீட்டிற்குள் நுழையமுடியும் என்பதனை கர்த்தர் தீர்மானித்து விட்டார்.

இயேசு கிறிஸ்து நம்மிடம் சொல்கிறார்

அருமையான பிரகாசிக்கும் விசுவாசத்தின் வாழ்க்கையை நாம் வாழ வேண்டும் என்றால், இயேசுவின் ஞானஸ்நானத்தின் மூலமாக நாம் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் கழுவப்பட்டு தேவனுக்கு முன்பாக போக வேண்டும் என்று கர்த்தர் நமக்கு சொல்லுகிறார். இதனால் தான் கர்த்தர் தாமே ஆசரிப்புக் கூடாரத்தினுடைய மாதிரியை மோசேயிற்கு காண்பித்தார். மோசேயின் மூலமாக அதைக் கட்டினால், இந்த ஆசரிப்புக் கூடாரத்தின் அமைப்பு மூலமாக இஸ்ரவேல் மக்களை அவர்களின் பாவத்தின் தண்டனையை பெறும் படி செய்தார். பரிசுத்த இடத்திற்குள்ளேயும் ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்திற்குள்ளேயும் நம்மை அழைத்துச் சென்ற விசுவாசத்தை நாம் திரும்ப பிடிப்போம். ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தின் மூலமாக, இயேசு நீர், இரத்தம் மற்றும் பரிசுத்த ஆவி ஆகியவற்றின் மூலமாக நம்மை மீட்டுக்கொண்டார் என்ற உண்மையில் நமக்கு இருக்கும் விசுவாசத்தைக் குறித்து கர்த்தர் தொடர்ந்து பேசுகிறார். நீலம், இரத்தாம்பரம், சிவப்பு ஆகிய நூல்களின் மூலம் நெய்யப்பட்டுள்ள பிரகாரத்தினுடைய வாயிற்கதவில் இருக்கும் நம்பிக்கை, பலிகொடுக்கப்படும் ஆடு மற்றும் இந்த பலி ஆட்டினுடைய இரத்தம் ஆகியவற்றின் மேலே கைகளை வைக்கும் தலைமை ஆசாரியனிடம் இருக்கும் விசுவாசம், தலைமை ஆசாரியன் தன்னுடைய கைகளையும், கால்களையும் கழுவிய வெண்கல பாத்திரத்தின் மேல் இருந்த நம்பிக்கையும் தான். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் நமக்கு இருக்கும் விசுவாசம் மட்டும் தான் சுத்தமான தங்கத்தின் விசுவாசம் என்று நமக்கு தெரியப்படுத்துகிறது, இது தான் நம்மை பரிசுத்த இடத்திற்குள்ளே அனுமதித்து அங்கு மகிமையுடன் வாழச்செய்கிறது.

ஆசரிப்புக் கூடாரத்தின் மூலம் கர்த்தர் மீட்பின் கிருபையையும் அவருடைய ஆசீர்வாதத்தையும் நாம் அனைவரும் பெற்றுக் கொள்வதற்கு அனுமதித்துள்ளார். ஆசரிப்புக் கூடாரத்தின் மூலமாக கர்த்தர் நமக்கு அளித்துள்ள ஆசீர்வாதங்களை நாம் தெரிந்துக் கொள்ள முடியும். நம்மை கர்த்தருடைய கிருபாசனத்திற்கு முன் செல்வதற்கும் எல்லோரும் ஒரே சமயத்தில் இரட்சிக்கப்படுவதற்கு சாத்தியப்படுத்திய மீட்பின் கிருபையை நாம் விசுவாசிக்கவும் உணரவும் முடியும் நீங்கள் இதை உணர்கிறீர்களா? ஆசரிப்புக் கூடாரத்தின் மூலம் நம்முடைய தேவன் உங்களையும் என்னையும் எவ்வளவு நேர்த்தியாக மீட்டுக்கொண்டுள்ளார், எவ்வளவு மறைவாக நம்முடைய இரட்சிக்கப்படுதலை அவர் திட்டமிட்டுள்ளார், இந்த திட்டத்தின்படி இதை எப்படி, அவர் நிறைவேற்றியுள்ளார் மேலும் பாவிகளாகிய நம்மை எப்படி நீதிமான்களாக மாற்றியுள்ளார் என்பதையும் நாம் பார்க்க முடியும்.

நீங்கள் எந்த வகையிலாவது, இந்த நேரம் வரையிலும் இயேசுவை மேலோட்டமாக விசுவாசித்திருந்தீர்களா? இள நீல நிறம் என்பதன் பொருள் வானம் என்பதை நீங்கள் விசுவாசித்தீர்களா? வெள்ளை மற்றும் சிவப்பு நிறத்தின் விசுவாசமாகிய ராஜாதி ராஜாவாகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, சிலுவை மேலே நம்மை மீட்டுக்கொண்டார் என்பதை மற்றும் நீங்கள் தெரிந்து வைத்திருக்கிறீர்களா? மேலும் இதற்கேற்ப விசுவாசிக்கிறீர்களா? ஆமாம் என்றால், உண்மையான விசுவாசத்தை கண்டுப்பிடிப்பதற்கு இது தான் நேரம். இயேசுவின் ஞானஸ்நானத்தையும், நீல நிறத்தின் விசுவாசத்தையும் பற்றி உங்களுக்குத் தெளிவாக தெரியும் என்று நான் நம்புகிறேன் கூடவே இதனால் கர்த்தர் உங்களுக்கு கொடுத்துள்ள அளவிட முடியாத மீட்பின் கிருபையை விசுவாசித்து உணருங்கள்.

கர்த்தர் நம்மை இரத்தம் மற்றும் பரிசுத்த ஆவியின் மூலமாக மட்டும் இரட்சிக்கவில்லை ஏன்? ஏனென்றால், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்பு ஆகிய நிறங்களைப் பற்றியும் இந்த மூன்று நிறங்களின் மூலமாக இயேசு நம்மை எப்படி மீட்பார் என்பதையும் கர்த்தர் தெளிவாக நம்மிடம் பேசுகிறார். ஆசரிப்புக் கூடாரத்தின் மூலமாக இயேசுவினுடைய இரட்சிக்கப்படுதலின் வேலையை விளக்கமாக, கர்த்தர் நமக்கு காண்பித்துள்ளார். ஆசரிப்புக் கூடாரத்தின் வழியாக நம்மை மீட்டுக்கொள்வார் என்று கர்த்தர் மோசேயின் மூலமாக வாக்குத்தத்தம் செய்தார். வாக்குத்தத்தம் செய்ததுப் போல இயேசு கிறிஸ்து மனிதனுடைய சரீரத்திற்குள் வந்து, யோர்தான் நதியின் நீரில் (நீல நிறம்) ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்துக் கொண்டார். இந்த ஞானஸ்நானத்தின் மூலமாக, இயேசு உண்மையில் பாவிகளை எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்டுக்கொண்டுள்ளார். எவ்வளவு உண்மையாக, எவ்வளவு சரியாக, எவ்வளவு மறைமுகமாக நம்முடைய மீட்பு இருக்கிறது.

பரிசுத்த இடத்திற்குள் நாம் நுழையும் பொழுது, விளக்குத்தண்டு, அப்பத்தின் மேஜை மற்றும் தூபவர்க்க பலிபீடத்தை நம்மால் பார்க்கமுடியும். மிகவும் பரிசுத்தமான இடத்திற்குள் நுழைவதற்கு முன்னால், தங்கத்தினால் அருமையாக பிரகாசிக்கும் பரிசுத்த இடத்தில் நாம் சிறிது நேரம் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இந்த இடம் நம் இருதயங்களுக்கு வார்த்தையின் அப்பத்தைப் போஷிக்கிறது, இது எவ்வளவு ஆசீர்வாதமாய் இருக்கிறது? கர்த்தருடைய ராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கு முன்னால் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியினால் மறுபடியும் பிறந்து முழுமையாக இரட்சிக்கப்பட்டவர்களாய் அவருடைய ஆலயத்தில் நாம் இருக்கிறோம். ஜீவ அப்பத்தை தரும் கர்த்தருடைய ஆலயம் தான் பரிசுத்தமான இடம்.

பரிசுத்த இடத்தில், அதாவது கர்த்தருடைய ஆலயத்தில் விளக்குத்தண்டு, அப்பத்தின் மேஜை மற்றும் தூபவர்க்க பலிபீடம் ஆகியவை இருந்தன. பிடி, கிளைகள், கிண்ணங்கள், அலங்கரிக்கும் கைப்பிடி மற்றும் பூக்களுடன் இருக்கும் விளக்குத்தண்டானது சுத்தமான ஒரே தங்க கட்டியை தட்டி செய்யப்பட்டது. சுத்தமான தங்கத்தால் தட்டி செய்யப்பட்ட விளக்குத்தண்டானது, நீதிமான்களாகிய நாம் கர்த்தருடைய ஆலயத்துடன் இணைய வேண்டும் என்று நமக்குச் சொல்கிறது.

அப்பத்தின் மேஜையின் மேல், புளிக்காத அப்பம் வைக்கப்பட்டிருந்தது. உலகத்தின் அசுத்தமான மற்றும் தீய போதனைகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கும் கர்த்தருடைய வார்த்தையின் தூய அப்பத்தை இது குறிக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த இடமாகிய கர்த்தருடைய ஆலயமானது புளிக்காமல் இருக்கும் கர்த்தருடைய வார்த்தையைப் போதிக்கிறது மேலும் கர்த்தருக்கு முன்பாக எந்த தீமையையும் செய்யாமல் உண்மையான விசுவாசத்தில் வாழ்கிறது.

பரிசுத்த இடத்திற்கு முன்னால் இருக்கும் திரைக்கு முன்னால் தூபவர்க்க பலிபீடம் இருந்தது. இதனால் தான் கர்த்தருக்கு ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கும் பாத்திரங்களின் மூலம், கர்த்தருக்கு முன்பாக நாம் செல்லும் பொழுது ஒற்றுமை மற்றும் அவருடைய வார்த்தை மற்றும் ஜெபத்தில் விசுவாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று கர்த்தர் நமக்கு சொல்லுகிறார். நீதிமான்களின் ஜெபத்தை மட்டுமே கர்த்தர் கேட்கிறார் (ஏசாயா 59:1-2; யாக்கோபு 5:16) கர்த்தருக்கு முன்பாக ஜெபிப்பவர்கள் மட்டுமே அவரை சந்திக்க முடியும்.

இதைப் போல, கர்த்தருடைய ஆலயத்தில் நாம் மீட்கப்படுவது நமக்கு எவ்வளவு சிறப்பானதாய் இருக்கிறது. என்று பரிசுத்த ஸ்தலம் சொல்கிறது. ஆசரிப்புக்

கூடாரத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ள முக்கியமான பொருட்களாகிய இளநீல நிற நூல் (இயேசுவின் ஞானஸ்நானம்), சிவப்பு நூல் (இயேசு தன் ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு, சிலுவையில் மரித்து நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக்கொண்டார்) மற்றும் இரத்தாம்பர நிறநூல் (இயேசுவே கர்த்தர்) இவை எல்லாம் நாம் வைத்துக் கொள்வதற்கு தவறாமல் இருக்கும் விசுவாசத்தைக் குறிக்கிறது. இந்த மூன்றும் நம்முடைய விசுவாசம் முழுவதையும் பொறுப்பேற்கிறது. இயேசு தான் தேவகுமாரன் என்றும் கர்த்தர் முக்கியமானவர் என்றும் அவர் நம்மை மீட்டுள்ளார் என்பதையும் நாம் விசுவாசிக்கும் பொழுது கர்த்தர் குடியிருக்கும், தங்கத்தில் பிரகாசிக்கும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நாம் நுழைய முடியும். இந்த மூன்று நூல்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ள இயேசுவை எந்த அளவிற்கு தீவிரமாக விசுவாசித்தாலும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நாம் நுழைய முடியாது. எல்லா கிறிஸ்தவர்களாலும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியாது.

தவறாக புரிந்துக் கொண்ட விசுவாசத்துடன் ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தில் தங்கியிருப்பவர்கள்

தங்களுடைய விசுவாசத்தில் நிலைத்து இருந்தாலும், பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழைய முடியாத பல கிறிஸ்தவர்கள் இன்று இருக்கிறார்கள். இதை வேறு விதமாக சொல்ல வேண்டும் என்றால், தங்களுடைய குருட்டு விசுவாசத்தினால் தங்களை மீட்டுக் கொள்ள முயற்சிக்கும் பலர் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவின்

இரத்தத்தை விசுவாசிப்பதன் மூலம் இரட்சிக்கப்படலாம் என்றும் அவரே தான் கர்த்தராக இருக்கிறார் என்றும் அவர் தான் இராஜாதிராஜா என்றும் நினைப்பவர்களை தவிர யாரும் சரியான மக்கள் இல்லை. அவர்கள் இயேசுவை சாதாரணமாக விசுவாசிக்கிறார்கள். இயேசுவின் இரத்தத்தை மட்டுமே விசுவாசிப்பது, சர்வாங்க தகன பலிபீடத்தின் முன் நின்று கொண்டு, "தேவனே இன்றும் ஒரு பாவியாக உள்ளேன். என்னை மன்னியும் தேவனே. என்னுடைய இடத்தில் இருந்து கொல்லப்பட்டு மரித்ததற்காக, நான் என்னுடைய எல்லா நன்றியையும் உமக்கு தருகிறேன், தேவனே, நான் உம்மை நேசிக்கிறேன்!" என்று குருட்டுத்தனமாக ஜெபிப்பது போன்றது.

இதை காலையில் செய்து முடித்த பிறகு அவர்கள் திரும்பவும் அவர்களுடைய வாழ்க்கைக்கு போகிறார்கள். பிறகு சாயங்காலத்தில் மறுபடியும் சர்வாங்க தகன பலிபீடத்திற்கு போய் அதே ஜெபத்தை செய்கிறார்கள். ஒவ்வொரு காலையும், மாலையும், மாதமும் பலிபீடத்திற்கு அடிக்கடி சென்று வரும் மக்களால் திரும்பவும் பிறக்க முடியாது. ஆனால் அவர்களுடைய சுய எண்ணத்தின்படியான தவறான விசுவாசத்தில் விழுந்துவிடுவார்கள்.

சிவப்பு ஜுவாலையுடன் பிரகாசிக்கும் சர்வாங்க தகன பலிபீடத்தின் மேலே அவர்கள் தியாகத்தின் காணிக்கையைப் போட்டு கூடவே அவர்களின் காணிக்கையை நெருப்பின் மூலம் தருகிறார்கள். அங்கு இருக்கும் நெருப்பில் எரியும் மாமிசத்தின் காரணமாக, அங்கு எரியும் மாமிசத்தின் வாசனைப் பரவுகிறது. மேலும் சர்வாங்க தகன பலிபீடமானது, நாம் கர்த்தரிடம், நம்முடைய பாவங்களை மறையச் செய்யவேண்டும் என்று அழுது கேட்கும் இடம் அல்ல, ஆனால் உண்மையில், நரகத்துடைய பயமூட்டும் நெருப்பை நமக்கு ஞாபகமூட்டும் இடமாக உள்ளது.

இருப்பினும் ஒவ்வொரு காலையும், மாலையும் மக்கள் இந்த இடத்திற்கு போய் "தேவனே நான் பாவம் செய்து விட்டேன், தயவு செய்து என் பாவங்களை மன்னியும்" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் உண்மையாகவே, தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டது போல தங்களுக்கு திருப்தியடைந்துக் கொண்டு, பிறகு வீட்டிற்கு திரும்பி போகிறார்கள். "♫நான் மன்னிக்கப்பட்டு விட்டேன், ♫நீங்கள் மன்னிக்கப்பட்டு விட்டீர்கள், ♫நாமெல்லோரும் மன்னிக்கப்பட்டு விட்டோம்" என்று பாடும் அளவிற்கு கூட மிகவும் சந்தோஷமாய் இருப்பார்கள். ஆனால் இத்தகைய எண்ணங்கள் வெறும் ஒரு நாள் வாழக்கூடியதாகவே இருக்கிறது. சிறிது நேரத்தில் அவர்கள் மறுபடியும் பாவம் செய்கிறார்கள். மறுபடியும் சர்வாங்க தகன பலிபீடத்திற்கு முன் நின்றுக் கொண்டு, 'தேவனே' நான் ஒரு பாவி என்று அறிக்கையிடுவதை தங்களுக்கு தாங்களே பார்க்கிறார்கள். ஒவ்வொரு நாளும் சர்வாங்க தகன பலிபீடத்திற்கு தொடர்ந்து போய் வந்துக் கொன்டிருப்பவர்களை, இயேசுவின் விசுவாசத்தில் நிலைத்திருக்கிறார்கள் என்று கருத முடியாது, அவர்கள் இன்னமும் பாவிகளாகவே உள்ளார்கள். இப்படிப்பட்ட மக்கள், கர்த்தருடைய பரிசுத்த இராஜ்ஜியத்தினுள் எப்பொழுதுமே நுழைய முடியாது.

பின்பு, யார் பாவத்தின் மீட்பை முழுமையாக பெற்றுக் கொண்டு, கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தினுள் நுழைய முடியும்? கர்த்தரால் அமைக்கப்பட்ட இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் இரகசியத்தை அறிந்து விசுவாசிப்பவர்களால் மட்டும் தான் இது முடியும். இதை விசுவாசிப்பவர்களால், அவர்களுடைய பாவத்தை தன் மீது செலுத்தியதை ஏற்றுக்கொண்ட இயேசுவின் மீதும் அவருடைய மரணத்தின் மீதும் உள்ள விசுவாசத்தின் மூலம் சர்வாங்க தகன பலிபீடத்தைக் கடக்க முடியும். வெண்கல பாத்திரத்தில் தங்களின் கால்களையும், கைகளையும் கழுவ

முடியும். இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தின் மூலம் அவர்களுடைய எல்லாப் பாவங்களும் அவர் மீது சென்று விட்டன என்று தங்களுக்குத் தாங்களே நினைவூட்டிக் கொள்ள முடியும். மேலும் கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியும். யாரேனும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் விசுவாசமுடையவர்களாய் இருந்து, பாவத்தின் மீட்பை பெற்றுக்கொண்டிருந்தால், அவர்களின் விசுவாசத்தின் மூலம் அவர்களால் பரலோக இராஜ்ஜியத்தினுள் நுழைய முடியும் ஏனென்றால் அவர்களுடைய விசுவாசம் கர்த்தரால் அங்கீகரிக்கப்படுகிறது.

இளநீல நிற நூலின் வேதாகம பொருள் இயேசுவின் ஞானஸ்நானம் என்பதை நீங்கள் விசுவாசித்து உணருவீர்கள் என்பதை நான் நம்புகிறேன். இன்றுப் பலர், இயேசுவை விசுவாசிப்பதை ஒப்புக்கொள்கிறார்கள், ஆனால் சிலர் மட்டுமே நீரை (இளநீல நிற நூல்) இயேசுவின் ஞானஸ்நானத்தை விசுவாசிக்கிறார்கள். இது மிகவும் ஆழ்ந்த வருத்தமான விஷயம். இயேசு இந்த உலகிற்கு கர்த்தராக முழுமையாக வராமல் இருந்து சிலுவையின் மீது மரித்திருந்த போதிலும், பல மக்கள் தங்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து மிகவும் முக்கியமான ஞானஸ்நானத்தின் விசுவாசத்தை விட்டுவிடுகிறார்கள் என்பது ஆழ்ந்த துயரத்திற்கு காரணமாயிருக்கிறது. இன்னமும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் விசுவாசத்தை அறிந்து விசுவாசிப்பதன் மூலம் கர்த்தரின் இராஜ்ஜியத்தில் நுழைபவர்களாக மாறுவீர்கள் என்பதை நான் விசுவாசித்து ஜெபிக்கிறேன்.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய நீலம், இரத்தாம்பரம் மற்றும் சிவப்பு நூல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள தேவனையும், நம்மை இரட்சித்த அதன் உண்மையான பொருளையும் விசுவாசிக்க வேண்டும்

என்னையும் உங்களையும் தேவன் காப்பாற்றியுள்ளார். ஆசரிப்புக் கூடாரத்தை நாம் பார்க்கும் பொழுது எவ்வளவு நேர்த்தியான முறையின் மூலம் தேவன் நம்மை மீட்டுள்ளார் என்பதை நாம் கண்டுபிடிக்க முடியும். இதற்காக அவருக்கு போதுமான அளவு நன்றி செலுத்த முடியாது. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலமாக தேவன் நம்மை மீட்டுள்ளார் என்பதற்கும், இந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் விசுவாசத்தை நமக்கு அவர் கொடுத்துள்ளார் என்பதற்கும் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோம்.

பாவிகள், கர்த்தருடைய கிருபையினால் மூடப்படாமலும் அவர்களுடைய பாவங்களுக்காக கர்த்தருடைய பயமுள்ள நியாயத்தீர்ப்பை கடந்து வராமலும், அவர்களால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் எப்பொழுதுமே நுழைய முடியாது. அவனுடைய/அவளுடைய பாவங்களுக்காக நியாயம் தீர்க்கப்படாதவர்களால் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வாயிற்கதவை திறந்து பரிசுத்த ஸ்தலத்திற்குள் எப்படி நுழைய முடியும்? அவர்களால் முடியாது! இப்படிப்பட்டவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழையும் பொழுது, முதலில் அடிக்கும் ஒளியிலேயே அவர்கள் குருடராக மாறும்படி சபிக்கப்படுவார்கள். "ஆஹா! இங்கு எவ்வளவு பிரகாசமாயிருக்கிறது ஒ, என்னால் ஏன் எதையும் பார்க்க முடியவில்லை. நான் வெளியில் இருக்கும் பொழுது,

பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழையும் பொழுதே ஸ்தலத்தில் இருக்கும் எல்லாப் பொருட்களையும் என்னால் பார்க்க முடியும் என்று நினைத்தேன். ஏன் என்னால் எதையும் பார்க்க முடியவில்லை? மேலும் ஏன் இங்கு கருமை முழுமையாக உள்ளது? பரிசுத்த ஸ்தலத்திற்குள் வெளியே இருக்கும் பொழுது என்னால் நன்றாக பார்க்க முடிந்தது. பரிசுத்த ஸ்தலம் பிரகாசமாக இருக்கும் என்று எனக்கு சொல்லப் பட்டிருந்தது, பின்பு ஏன் இங்கு இன்னமும் இருட்டாக உள்ளது?" அவர்களால் பார்க்கமுடியாது ஏனென்றால், அவர்கள் ஆவிக்குரிய குருடாகி விட்டார்கள். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் விசுவாசம் அவர்களிடத்தில் இல்லை. இதை போல, பாவிகளால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் எப்பொழுதுமே நுழைய முடியாது.

பரிசுத்த ஸ்தலத்திற்குள் நாம் குருடாகாமல் அவ்விடத்திலிருந்து எப்பொழுதிற்குமான வாழ்வின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளுவதற்கு நம்முடைய தேவன் நமக்கு உதவியுள்ளார். ஆசரிப்புக் கூடாரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் காணப்படும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலமாக, நம்முடையீ இரட்சிக்கப்படுதலின் முறையை கர்த்தர் நமக்கு சரியாக சொல்லியுள்ளார். மேலும் இந்த தீர்க்கதரிசன வார்த்தையின்படி அவர் உண்மையில் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலையாக்கியுள்ளார்.

நம்முடைய தேவன், நீர், இரத்தம் மற்றும் பரிசுத்த ஆவியின் மூலமாக நம்மை மீட்டுள்ளார். (1 யோவான் 5:4-8) இதனால் நாம் குருடாக மாற மாட்டோம். ஆனால் அவருடைய பிரகாசிக்கும் கிருபையில் எப்பொழுதும் வாழ்வோம் அவர் நம்மை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலமாக நம்மை மீட்டுள்ளார்.

நம்முடைய தேவன் கர்த்தருடைய மறைமுகமான வார்த்தையினால் நமக்கு வாக்களித்து கூடவே இந்த வாக்கை நிறைவேற்றியதன் மூலம் அவர் நம்மை மீட்டுள்ளார் என்று நமக்கு கூறியிருக்கிறார்.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள இயேசுவின் மறைவான வேலையின் மூலம் நீங்களும் நானும் இரட்சிக்கப்பட்டுள்ளோம் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஆம்! நாம் தற்செயலாகத்தான் இரட்சிக்கப்பட்டுள்ளோமா? இல்லை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகியவற்றில் விசுவாசமில்லாமல் நம்மால் இரட்சிக்கப் படமுடியாது.

நீல நூல் கர்த்தரைக் குறிப்பிடவில்லை. அது உலகத்தில் உள்ள எல்லாப் பாவிகளினதும் எல்லாப் பாவங்களையும் இயேசுவானவர் தன்மீது ஏற்றுக் கொள்ள யோர்தான் நதியில் பெற்றுக் கொண்ட ஞானஸ்னானத்தைக் குறிப்பிடுகிறது.

இளநீல நிற நூலை, இயேசுவின் ஞானஸ்நானத்தை விசுவாசிக்காமலேயே சர்வாங்க தகன பலிபீடத்தின் முன் நிற்பது சாத்தியம். சர்வாங்க தகன பலிபீடத்திற்கு அடுத்து அதுதான் இருக்கும். ஆனால் கர்த்தர் குடியிருக்கும் பரிசுத்த இடத்திற்குள் அவர்களால் நுழைய முடியாது. நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை முழுமையாக விசுவாசித்து, அதன் மூலம் பாவத்தின் மீட்பை பெற்றுக் கொண்ட கர்த்தருடைய பிள்ளைகளால் மட்டுமே ஆசரிப்புக் கூடாரத்தினுடைய கதவை திறந்து பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியும். பாவத்துடன் இருக்கும் யாராக இருந்தாலும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியாது. நம்முடைய மீட்பை அடைவதற்கு நாம் எவ்வளவு தூரம் நுழைய வேண்டியுள்ளது? ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்திற்குள் நுழைந்த உடனே நாம் இரட்சிக்கப்படுவதில்லை, ஆனால் கர்த்தர் தங்கியிருக்கும்

பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்தவுடன் நாம் இரட்சிக்கப்படுகிறோம்.

ஆசரிப்புக் கூடாரத்திற்கு உள் இருக்கும் விசுவாசத்திற்கும் ஆசரிப்புக் கூடாரத்திற்கு வெளியில் இருக்கும் விசுவாசத்திற்கும் உள்ள வேறுபாடு

ஆசரிப்புக் கூடாரத்தின் வெளி பிரகாரத்தில் இருக்கும் சர்வாங்க தகன பலிபீடமும் வெண்கல பாத்திரமும் முழுவதும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன. மேலும் வேலியானது மரக்கட்டை, வெள்ளி மற்றும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் நாம் நுழையும் பொழுது அங்கு இருக்கும் பொருட்கள் எல்லாம் முழுவதும் வித்தியாசமாய் இருக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தினுடைய சிறப்பு அம்சம் என்னவென்றால், அது ஒரு பொன் வீடு. மூன்றுப் புற சுவர்களும், தங்கம் பூசப்பட்ட 48 அகேசியா பலகைகளால் கட்டப்பட்டுள்ளது. அப்பத்தின் மேஜையும், தூபவர்க்க பலிபீடமும் கூட தங்கம் பூசப்பட்ட அகேசியா மரத்தால் தான் செய்யப்பட்டுள்ளது. கூடவே விளக்குத்தண்டானது தங்கக் கட்டியை தட்டியதன் மூலம் செய்யப்பட்டது. இதைப் போல, பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருக்கும் எல்லா பாத்திரங்களும் சுத்தமான தங்கத்தாலோ அல்லது சுத்தமான தங்கம் பூசப்பட்டோ செய்யப்பட்டிருந்தன.

இன்னொரு புறம், பலகைக்கு அடியில் இருக்கும் கூடுகள் எதனால் செய்யப்பட்டுள்ளன? அவை வெள்ளியால் செய்யப்பட்டிருந்தன. ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வேலியினுடைய தூண்களின் கூடுகள் வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கும் வேளையில், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலகைக்கான கூடுகள் வெள்ளியால்

செய்யப்பட்டிருந்தன. பிரகாரத்தினுடைய வேலியினுடைய தூண்கள் மரத்தால் செய்யப்பட்டிருக்கும் வேளையில், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலகைகள் தங்கம் பூசப்பட்ட அகேசியா மரத்தால் செய்யப்பட்டிருந்தன. ஆனால் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய கதவுகளுடைய ஐந்து தூண்களின் கூடுகளும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலகைகளுடைய கூடுகள் வெள்ளியால் செய்யப்பட்டிருந்த பொழுதிலும் அவற்றினுடைய கதவினுடைய தூண்களுடைய கூடுகள் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன. இது என்ன சொல்கிறது? கர்த்தருடைய பிரசன்னத்திற்குள் யார் வருகிறார்களோ, அவர்கள் அவனுடைய/அவளுடைய பாவத்திற்காக மரணத்திற்கு நியாயம் தீர்க்கப்படுவதை இது கூறுகிறது. நாம் நியாயம் தீர்க்கப்பட்டு மரணத்திற்குள் எறியப்பட்டால், பிறகு நாம் எப்படி கர்த்தருக்கு முன்பாக போக முடியும்? நாம் நாமாகவே மறித்தால், கர்த்தருக்கு முன்பாக நம்மால் போக முடியாது.

ஆசரிப்புக் கூடார வாசலின் ஐந்து தூண்களுடைய கூடுகளுக்கு பயன்படுத்தபட்டுள்ள வெண்கலத்தின் மூலமாக, நம்முடைய பாவங்களுக்காக நாம் நியாயம் தீர்க்கப்பட வேண்டியிருந்தாலும் அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் இயேசு அவர் மீது எடுத்துக்கொண்டார். மேலும் இந்த பாவங்களுக்காக நம்முடைய இடத்தில் இருந்து தண்டிக்கப்பட்டார் என்று கர்த்தர் சொல்லுகிறார். நம்முடைய பாவங்களுக்காக நாம் தான் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் நம்முடைய இடத்தில் இருந்து நம்முடைய எல்லா பாவங்களுக்கான தண்டனையை யாரோ ஒருவர் ஏற்றுக் கொண்டார். நமக்கு பதிலாக யாரோ ஒருவர் நமக்காக மரித்தார். நம்முடைய இடத்தில் இருந்து, பிறருக்கு பதிலாக தண்டிக்கப்பட்டு

இறந்தவர் இயேசு கிறிஸ்துவை தவிர வேறு யாரும் இல்லை.

நீல நிற நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள விசுவாசமானது இயேசு கிறிஸ்து அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக்கொண்டார் என்பதின் மற்றும் நம்முடைய எல்லா பாவங்களையும் மன்னித்து விட்டார் என்பதின் விசுவாசமாயிருக்கிறது. இயேசுவின் ஞானஸ்நானத்தின் மூலம் அவரிடம் செலுத்தப்பட்ட நம்முடைய எல்லாப் பாவங்களின் தண்டனையாக இயேசு கிறிஸ்துவின் உயிரை கர்த்தர் எல்லாப் பாவங்களுக்குமாக தீர்த்தப்படியாலும், நம்முடைய பாவங்களுக்கான எந்த தண்டனையையும் நாம் சந்திப்பதில்லை. இரத்தாம்பர நிற நூலின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள விசுவாசமானது, இயேசு சிலுவையின் மீது சிந்திய இரத்தத்தில் இருக்கும் விசுவாசமாயிருக்கிறது. நாம் நம்முடைய பாவங்களுக்காய் சந்திக்க வேண்டியிருந்த தண்டனையை இயேசு கிறிஸ்து பிறருக்காய் ஏற்றுக் கொண்டார் என்பதை இந்த விசுவாசம் விசுவாசிக்கிறது.

இயேசுவினுடைய ஞானஸ்நானத்தில் விசுவாசமுடையவர்களாய் இருந்து அவர் மீது தங்களுடைய எல்லாப் பாவங்களையும் செலுத்தியவர்களாலும், இந்த எல்லாப் பாவங்களின் காரணமாக இயேசு தன்னுடைய சரீர மரணத்துடன் சிலுவையின் மீது சிந்திய இரத்தத்தில் விசுவாசமுடையவர்களாய் இருந்து, தங்களுடைய எல்லாப் பாவங்களுக்காகவும் நியாயம் தீர்க்கப்பட்டவர்களால் மட்டுமே பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியும். இதன் காரணமாக தான் ஆசரிப்புக் கூடார வாசலின் கூடுகள் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன. இதைப் போல ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொண்டு நம்முடைய இடத்திலிருந்து தண்டிக்கப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தில்

நாம் விசுவாசிக்க வேண்டும்.

தங்களை மீட்டுக் கொண்ட இயேசு கிறிஸ்துவே கர்த்தர் (இரத்தாம்பர நிறம்), இயேசுவின் ஞானஸ்நானம் (இளநீல நிற நூல்) மற்றும் இயேசு மற்றவர்களுக்காக அவர்களுடைய இடத்தில் இருந்து அவர்களின் பாவங்களுக்காக தண்டிக்கப்பட்டார் (சிகப்பு நூல்) என்ற உண்மைகளை புரிந்து கொண்டவர்களால் மட்டுமே பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியும் என்று கர்த்தர் தீர்மானித்துள்ளார். இயேசுவை விசுவாசிப்பதின் மூலம் அவர்களுடைய எல்லாப் பாவங்களுக்காக ஒரு முறை நியாயம் தீர்க்கப்பட்டவர்களையும், தங்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் இயேசு மீட்டுக் கொண்டார் என்பதை விசுவாசிப்பவர்களையும் மட்டும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய கர்த்தர் அனுமதித்துள்ளார்.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய கதவினுடைய கூடுகள் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன. ஆதாமுடைய சந்ததியினராய் பிறந்த பாவிகள் யாராக இருந்தாலும் இளநீல நிற நூல் (இயேசுவின் ஞானஸ்நானம்), சிகப்பு நிற நூல் (பாவிகளுடைய இடத்தில் இருந்து, மற்றவர்களுக்காக நியாயம் தீர்க்கப்பட்ட இயேசு) மற்றும் இரத்தாம்பர நிற நூல் (இயேசு தான் கர்த்தர்) ஆகியவற்றில் விசுவாசமுள்ளவர்களை அவர் தங்குமிடமாகிய பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய கர்த்தர் அனுமதிக்கிறார். இந்த வார்த்தையையே வெண்கல கூடு கொண்டுள்ளது. கதவின் தூண்களினுடைய ஐந்து கூடுகளும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருப்பது கர்த்தருடைய நற்செய்தியை நமக்குச் சொல்கிறது. ரோமர் 6:23 இல் *"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டாகும் நித்தியஜீவன்"* என்று எழுதியிருப்பதைப் போல நீர் இரத்தம் மற்றும் ஆவியினால் இயேசு நம்முடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்து விட்டார் என்று இது நமக்குச் சொல்கிறது.

கர்த்தரையும் வார்த்தையையும் விசுவாசிக்க வேண்டுமே தவிர அதை அலட்சியப்படுத்தக்கூடாது

இயேசுவை நீங்கள் விசுவாசிப்பது அல்லது நீங்கள் ஆலயத்திற்கு செல்வதுநிபந்தனையில்லாமல் இரட்சிக்கப்பட்டுவிட்டீர்கள் என்று பொருளாகாது. நீர் மற்றும் ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்களால் மட்டுமே கர்த்தருடைய இராஜ்ஜியத்தை பார்க்கவும் நுழையவும் முடியும் என்று யோவான் 3-இல் நம்முடைய தேவன் சொல்கிறார். நீ யூதர்களின் போதகராக இருந்தும் கூட இன்னமும் உனக்கு மறுபடியும் எப்படி பிறப்பது என்பது தெரியவில்லை என்று யூதர்களின் தலைவனும் கர்த்தருடைய உண்மையான விசுவாசியுமான நிக்கோதேமுவிடம் முடிவாக சொல்கிறார். ஒருவர் நீர் மற்றும் ஆவியினால் மறுபடியும் பிறந்த பிறகு தான் அவளோ/அவனோ கர்த்தருடைய இராஜ்ஜியத்தை பார்க்கவும் நுழையவும் முடியும். நீல நிற நூல் (இயேசு ஞானஸ்நானம் பெற்றபொழுது, அவர் நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஒரே தரமாக தன் மீது எடுத்துக் கொண்டார்), சிவப்பு நிற நூல் (இயேசுவே மீட்பர், கர்த்தர் மற்றும் தேவ குமாரன்) ஆகியவற்றில் விசுவாசமுள்ளவர்களால் இருக்கும் இயேசுவை விசுவாசிக்கும் மக்களால் தான் மறுபடியும் பிறக்க முடியும். இதைப் போலவே, ஆசரிப்புக் கூடாரத்தின் ஒவ்வொரு மூலையிலும் காணப்படும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலமாக வந்த இயேசு கிறிஸ்துவே பாவிகளின் மீட்பர் என்று எல்லாப் பாவிகளும் விசுவாசிக்க வேண்டும்.

பல மக்கள் இந்த உண்மையை விசுவாசிக்காமல் இயேசுவை மட்டும் விசுவாசிக்கிறார்கள். இதனால் தான்

அவர்களால் மறுபடியும் பிறக்கவும் முடிவதில்லை அல்லது மறுபடியும் பிறப்பது என்ற வார்த்தையைப் பற்றி தெரிந்துக் கொள்ளவும் அவர்களால் முடிவதில்லை. நாம் இயேசுவை விசுவாசிக்கிறோம் என்று ஒப்புக்கொண்டாலும் கூட, நாம் மறுபடியும் பிறக்கவில்லை என்றால் நம்மால் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளேயோ பிதாவின் இராஜ்ஜியத்திற்குள்ளேயோ நுழைய முடியாது என்றும், சரியான விசுவாச வாழ்க்கையை நம்மால் வாழ முடியாது என்றும் தேவன் நமக்கு தெளிவாக சொல்லியுள்ளார்.

நம்முடைய மனிதன் உண்டாக்கும் எண்ணங்களில், கிறிஸ்தவர்கள் எப்படி விசுவாசித்தாலும் மறுபடியும் பிறப்பதற்கான அங்கீகாரத்தை அவர்களுக்கு அளிக்கப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நாம் ஆச்சரியப்படலாம். அது அப்படித்தானோ? இயேசுவின் நாமத்தைக் கூப்பிடுவதன் மூலமாகவும், மனித குலத்தை மீட்பதற்காக அவர் என்ன செய்தார் என்ற விவரங்களைக் கூட தெரிந்துக் கொள்ளாமல் அவரிடம் இருக்கும் விசுவாசத்தை வெறும் வார்த்தைகளில் தெரிவிப்பதன் மூலம் மட்டும் நாம் இரட்சிக்கப்பட்டு விடுவோம் என்றால், இயேசுவை விசுவாசிப்பது மக்களுக்கு மிகவும் எளிதாக இருக்கும். நாம் எப்பொழுதாவது புதிய கிறிஸ்தவர்களை சந்திக்கும் பொழுது, "♫நான் மன்னிக்கப்பட்டுவிட்டேன், ♫நீங்கள் மன்னிக்கப்பட்டு விட்டீர்கள், ♫நாமெல்லாரும் மன்னிக்கப்பட்டுவிட்டோம்," என்று பாடிக்கொண்டே அவருக்கு நன்றி கூறலாம். "பல விசுவாசிகள் இருக்கின்ற காரணத்தால், சாட்சியாய் இருப்பதில் என்ன தான் பயன்? செயல்கள் நன்றாக எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கின்றன. இது அற்புதமாக இருக்கிறது அல்லவா?" உண்மையில் இந்த நிலை இருந்தால், தேவனுடைய நாமத்தை யார் அழைக்கிறார்களோ அவர்கள் இரட்சிக்கப்படலாம் என்ற காரணத்தால், மக்கள் இரட்சிக்கப்படுதலை மிகவும் சுலபமாக நினைப்பார்கள்

மேலும் அவர்கள் விருப்பப்படி எப்படிபட்ட வாழ்க்கையை வாழ்ந்தாலும், இரட்சிப்பு அவர்களுக்கு வந்து விடும். ஆனால் இப்படிப்பட்ட குருட்டு விசுவாசத்துடன், நாம் மறுபடியும் பிறக்க முடியாது என்று கர்த்தர் நமக்கு சொல்லியிருக்கிறார். இதற்கு முரண்பாடாக யாரெல்லாம் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை தெரிந்துக் கொள்ளாமல் இரட்சிக்கப் பட்டுவிட்டோம் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் அனைவரும் சத்தியமின்மையை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று கர்த்தர் நமக்கு சொல்கிறார்.

மறுபடியும் பிறப்பது உங்களுடைய ஆவியே, சரீரம் அல்ல

இயேசு மனிதனாக மாறி, இந்த பூமிக்கு வந்து, கூடவே, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலமாக நம்மை மீட்டுக்கொண்டார். இயேசுவின், மாம்சமான தந்தையாய் இருந்த யோசேப்பு ஒரு தச்சன் (மத்தேயு 13:55), இயேசு அவருடைய வாழ்க்கையின் முதல் 29 வருடங்களை ஒரு தச்சனாக வேலை செய்து, தச்சு வேலைச் செய்யக்கூடிய தன் தகப்பனுக்கு கீழ் இருந்த குடும்பத்திற்குச் சேவைச் செய்தார். ஆனால் அவருக்கு 30 வயது ஆகும் பொழுது, அவர் தன்னுடைய பரிசுத்த வேலையைத் தொடங்க வேண்டியிருந்தது, அதாவது மக்களுக்கான ஊழியத்தை அவர் தொடங்க வேண்டியிருந்தது.

இயேசுவிடத்தில் மனித மற்றும் தெய்வீக குணங்கள் இரண்டும் இருந்ததைப் போல, மீண்டுமாக பிறப்பிக்கப்பட்ட நீதிமான்களாகிய நம்மிடத்திலும் இரண்டு வித்தியாசமான குணங்கள் உண்டு. நம்மிடம் ஆவி மற்றும் மாம்சம் இரண்டுமே இருக்கிறது. ஆனால் அவனுடைய/அவளுடைய ஆவி மறுபடியும் பிறக்காமல் இருந்து இயேசுவை

விசுவாசிக்கிறேன் என்று ஒருவர் சொல்லும் பொழுது, இந்த நபர் மறுபடியும் பிறக்கவில்லை என்று தான் அர்த்தம், அதாவது அவனிடத்திலே மறுபடியும் பிறந்த ஆவி இல்லை. அவனுடைய/அவளுடைய ஆவியில் மறுபடியும் பிறக்காமல் இருந்து, ஒருவர் இயேசுவை விசுவாசிக்க முயற்சி செய்தால், நிக்கோதேமுவைப் போல மாம்சத்தில் மறுபடியும் பிறக்க முயற்சி செய்யும் யாரோ ஒருவரைப் போல தான் இந்த நபர் இருக்கிறார், மேலும் எப்பொழுதும் அவர் மறுபடியும் பிறந்தவராய் இல்லை. தன்னுடைய சாரம்சத்தில் இயேசு கர்த்தராக இருந்தபோதிலும், அவர் பலவீனங்கள் நிறைந்த மனிதனுடைய மாம்சத்திலும் இருந்தார். இதைப் போல மறுபடியும் பிறந்து விட்டோம் என்று நாம் சொல்லும் பொழுது, நம்முடைய மாமிசம் அல்ல, நம்முடைய ஆவி தான் மறுபடியும் பிறந்து விட்டது என்று அர்த்தம்.

இயேசுவை விசுவாசிப்பதாக தெரிவிக்கும் எல்லோரும் எப்படியாவது மறுபடியும் பிறந்திருந்தால், நான் ஒரு சிறந்த போதகர் என்று தெரிந்துக் கொள்ளப்படுவதற்கு முயற்சி செய்திருப்பேன். ஏன்? ஏனென்றால் சத்தியத்தில் விசுவாசமில்லாதவர்களால் நான் இந்த அளவிற்கு கோபமடைந்திருக்க மாட்டேன், மேலும் அவர்கள் சத்தியத்தை தெரிய வருவார்கள் என்ற நம்பிக்கையுடன் என்னுடைய போதனையில் இவ்வளவு மழுங்கி இருந்திருக்க மாட்டேன். நான் ஒரு நல்லொழுக்கம், புத்தியுள்ள, தயவுள்ள, மென்மையான மற்றும் வேடிக்கையான போதகராக அறியப்பட்டிருப்பேன், மேலும் மக்கள் தங்களின் மாம்சத்தில் எப்படி பரிசுத்தமாக முடியும் என்பதை விளக்கும் போதகராகவும் நான் இருந்திருக்கலாம். ஆமாம், அப்படி இருக்கும் படி என்னுடைய உருவத்தை நான் அழகுப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் அதை நான் ஒரு போதும் செய்வதில்லை. இந்த பரிசுத்தவான் உண்மையில் இயேசுவின் பரிசுத்தமான மற்றும் இரக்கமுடைய உருவத்தை எடுத்துக் கொள்கிறார் என்ற எண்ணத்தை

உங்கள் மனங்களில் ஏற்படுத்தும் திறமை என்னிடம் இல்லை என்ற காரணத்தால் அல்ல, இதற்கு காரணம் மனிதனுடைய மாம்சம் மாற முடியாது என்பதாலும் மாம்சமாக சற்று அன்பாய், தயவாய், இரக்கமாய் இருப்பது, இந்த மனிதன் நீதிமானாய் மறுபடியும் பிறந்துவிட்டான் என்பதில்லை என்பதற்காகவும் தான். யாருமே மாம்சத்தில் மறுபடியும் பிறக்க முடியாது. கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிப்பதன் மூலம் மறுபடியும் பிறக்க வேண்டியது, மனிதனின் மற்றுமொரு பொருளான ஆவியே ஆகும்.

நீங்கள் இயேசுவை விசுவாசிக்கும் பொழுது சத்தியத்தை அறிந்துக் கொள்ள வேண்டும். *"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32).* கர்த்தருடைய சத்தியம் மட்டுமே நம்மை மறுபடியும் பிறக்கச் செய்வதுடன், பாவக் கட்டுகளில் இருந்து நம்முடைய ஆத்துமாவை விடுவித்து, நீதிமான்களாக நம்மை மறுபடியும் பிறக்கச் செய்கிறது. வேதாகமத்தை நாம் சரியாக தெரிந்துக் கொண்டு விசுவாசிப்பதுடன் கூடவே போதிக்கும் பொழுது தான் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்து, நம்முடைய உண்மையான விசுவாச வாழ்க்கையை வாழ்ந்து, மகா பரிசுத்த ஸ்தலத்தின் கிருபாசனத்திற்கு போக முடியும். நம்முடைய ஆத்துமாவை மறுபடியும் பிறக்கச் செய்யும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி தான் சத்தியம், கூடவே இதில் நமக்கு இருக்கும் விசுவாசமானது நம்முடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்து, விசுவாசத்தின் இராஜ்ஜியத்தில் கர்த்தருடன் வாழுவதற்கு நம்மை அனுமதிக்கிறது. நம்முடைய இருதயங்களில் இருக்கும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியானது ஆவிக்குரிய மற்றும் பிரகாசிக்கும் இராஜ்ஜியத்தில் இருக்கும் கர்த்தருடைய மறுபடியும் பிறந்த குழந்தைகளாக, தேவனுடன் மகிழ்ச்சியோடு வாழச் செய்கிறது.

இயேசுவை குருட்டுத்தனமாக விசுவாசிப்பது சரியான

விசுவாசம் அல்ல. மனித கோணத்தில் இருந்து பார்க்கும் போது என்னிடம் நிறைய குறைகள் இருக்கின்றன. இதை என் உதடுகளால் மட்டும் சொல்வதில்லை, ஆனால் எப்பொழுதாவது நான் ஏதாவது செய்யும் பொழுது, என்னிடம் நிறைய குறைகள் இருக்கின்றன என்பதை உணர ஆரம்பிக்கிறேன். உதாரணமாக, ஒரு வேதாகம முகாமில் கலந்து கொள்ளும் பரிசுத்தவான்களும் புதிய கிறிஸ்தவர்களும் சௌகரிகமாக வார்த்தையை கேட்பார்கள் என்பதற்காகவும், கர்த்தருடைய கிருபையினால் அவர்களுடைய இருதயங்களில் ஊக்கமடைவார்கள் என்பதற்காகவும் மறுபடியும் பிறந்ததற்கான ஆசீர்வாதத்தை பெறுவார்கள் என்பதற்காகவும், தங்களுடைய சரீரம் மற்றும் இருதயங்கள் ஆகிய இரண்டிலும் இளைப்பாறிய பின் திரும்புவார்கள் என்பதற்காகவும் ஒரு முறை நான் வேதாகம் முகாமிற்கு தயாராகிக் கொண்டிருந்தேன். அப்பொழுது முன்பே நினைத்து, செயல்படுத்தியிருக்க வேண்டிய பல காரியங்களில் நான் தவறியதைக் கண்டு பிடித்தேன். சிறிது கவணமாயிருப்பதின் மூலம் எளிதாக கவனிக்கப்பட்டிருக்க கூடிய காரியங்கள், தயாராகும் நேரம் முடிந்த பிறகும், முகாம் தொடங்குவதற்கு சற்று நேரத்திற்கு முன்பும் தான் தோன்றும். இந்த காரியங்களைப் பற்றி ஏன் முன்பே யோசிக்கவில்லை என்றும் ஏன் அவைகளை முன் கூட்டியே தயாரிக்கவில்லை என்றும் எனக்கு நானே வியப்பு அடைந்து கொள்கிறேன். ஒரு வேளை, வேதாகம முகாமிற்கான என்னுடைய திட்டத்தில் நான் சற்று அதிக கவனத்துடன் அக்கரையுடனும் இருந்திருந்தால், பரிசுத்தவான்களும் புதிய ஆத்துமாக்களும், நன்றாக கேட்டிருப்பார்கள், இரட்சிக்கப்பட்டிருப்பார்கள், மேலும் நன்மையான நேரத்தை செலவு செய்திருப்பார்கள். நான் ஒரு நாள் முழுக்க வேலை செய்தாலும், என்னிடத்தில் சாமர்த்தியமின்மை காரணமாக என்னுடைய

முயற்சிகளுக்கு கிடைக்கும் முடிவுகள் ஒத்துப்போகாத பல தருணங்கள் உண்டு. என்னிடம் நிறைய குறைகள் இருக்கின்றன என்ற உண்மையைப் பற்றி எனக்கு நானே நன்றாக தெரிந்து வைத்துள்ளேன்.

"நான் ஏன் இதைச் செய்ய முடியாது? இதைப் பற்றி ஏன் நினைக்கவில்லை? நான் செய்ய வேண்டியது எல்லாம், சற்று அதிக கவனத்துடன் இருக்க வேண்டியது தான், இருந்தாலும் ஏன் இதை என்னால் செய்ய முடிவதில்லை?" நான் உண்மையில் நற்செய்திக்கு ஊழியம் செய்யும் பொழுது, என்னுடைய குறைகளை அடிக்கடி உணருகிறேன். இதனால் "இது தான் நான். இப்படி தான் நான் முழுமையாகமல் இருக்கிறேன்," என்று என்னை நானே அடையாளங் கண்டு ஒப்புக் கொள்கிறேன். இதை என் உதட்டினால் மட்டும் சொல்லவில்லை, கூடவே, அடக்கமுள்ளவனாய் நடிக்க முயற்சி செய்வதுமில்லை. ஆனால் உண்மையில், ஒரு சிறிய பிரச்சனைக்கு கூட ஒழுங்கான தீர்வு காண முடியாமல் மனம் போனப் போக்கில் போகும் ஒருவனாகவே உள்ளேன். என்னுடைய பல குறைகளை, என்னைப் பார்த்தே உணர்ந்துக்கொள்கிறேன்.

இளநீல நிற நூலின் மூலமாக நாம் பரிசுத்தத்தைப் பெற்றுக் கொள்கிறோம்

மக்கள் அவர்களைப் பற்றி தாங்களே நினைக்கும் பொழுது, தவறுகள் எதுவும் இல்லாமல், எல்லா காரியங்களையும் நன்றாக செய்ய முடியும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது, அவர்களுடைய உண்மையான திறமையும் குறைபாடுகளும் தெளிவாக வெளிப்படுகிறது. தாம் உண்மையில் குறைபாடுடையவர்கள் என்பதையும், பாவஞ் செய்வதைத்

தவிர்க்க முடியாமல் தவறுகளைச் செய்வதையும் அவர்கள் அறிந்துகொள்வர். மேலும் தாங்கள் நன்றாக செயல்படுகிறோம். என்று மக்கள் நினைக்கும் போது தங்களுடைய விசுவாசம் எவ்வளவு நன்றாய் இருக்கிறது எனவும் இதனால் தாங்கள் கர்த்தருடைய இராஜ்ஜியத்துக்கு போகப் போகிறோம் எனவும் நினைத்துக் கொண்டு தங்களைத் தாமே ஏமாற்றிக்கொள்கிறார்கள்.

ஆனால் சரீரம் எப்பொழுதும் மாறுவதில்லை. குறையில்லாமல் எந்த சரீரமும் இல்லை, அது எப்பொழுதுமே தவறு செய்து அதனுடைய குறையை வெளிப்படுத்துகிறது. ஏதாவது ஒரு வகையில், உங்கள் சரீரம் சில நன்மைகள் செய்த காரணத்திற்காக நம்முடைய தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு போக முடியும் என்று நீங்கள் நினைத்தால் உங்கள் சரீரம் எவ்வளவு நல்லது செய்திருந்தாலும் சரி, அது கர்த்தருக்கு முன் உபயோகமற்றது என்பதை நீங்கள் உணரவேண்டும், சத்தியத்தின் வார்த்தையில் உள்ள விசுவாசம் மட்டுமே நாம் தேவனுடைய இராஜ்ஜியத்துக்கு போவதற்கு உதவி செய்யும். தேவன் நம்மை மீட்டுக்கொண்டுள்ள நீல நிற, சாம்பல் நிற மற்றும் சிவப்பு நிற நூல் தான் சத்தியத்தின் வார்த்தையாக உள்ளது. நம்முடைய தேவன், நீல நிற, சாம்பல் நிற, சிவப்பு நிற நூல்களின் மூலமாக மீட்டுக்கொண்ட காரணத்தால் இதை விசுவாசிப்பதன் மூலம் மட்டுமே நம்மால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியும்.

நீல நிற, சாம்பல் நிற மற்றும் சிவப்பு நிற நூல்கள் மூலமாக நம்மை கர்த்தர் டூரட்சிக்கப்வில்லை என்றால், நாமெல்லாரும் எப்பொழுதுமே பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியாது. நம்முடைய விசுவாசம் எவ்வளவு உறுதியாய் இருந்தாலும், நம்மால் அதற்குள் நுழைய முடியாது. ஏன்? ஏனென்றால் இது தான் நிலையாக இருந்தால், ஸ்தலத்திற்குள் நாம் நுழைய வேண்டும்

என்றால், ஒவ்வொரு நாளும் நம்முடைய சரீரத்தினுடைய விசுவாசம் நன்றாக் இருக்க வேண்டும் என்று இது பொருள் கொள்ளும். ஒவ்வொரு நாளும் நம்முடைய விசுவாசம் நன்றாக இருந்தால் தான் நம்மால் கர்த்தருடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியும் என்றால் இதைப் போன்ற பலவீனமான சரீரம் கொண்ட நம்மால் எப்படி, எப்பொழுதுமே ஒவ்வொரு நாளும் நம்முடைய விசுவாசத்தை நல்லதாக்கிக் கொண்டு, ஸ்தலத்திற்குள் நுழைய முடியும். பாவத்திற்கான மீட்பை நமக்கு நாமே பெற்றுக் கொள்ள எந்த வழியும் இல்லாத பொழுதும், ஒவ்வொரு நாளும் எப்பொழுதெல்லாம் நாம் பாவம் செய்கிறோமோ, அப்பொழுதெல்லாம் திரும்பி பார்க்க நம்மிடம் விசுவாசம் இல்லாமல் இருக்கும் பொழுது கடவுளுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்காக எப்பொழுதும், நம்முடைய விசுவாசத்தை நல்லதாக்கிக் கொள்ள நம்மால் எப்படி முடியும்? இதைத் தொடங்குவதற்காக நம்முடைய சரீரங்கள் எப்பொழுதுமே பாவம் செய்யாத பரிசுத்த சரீரங்களாக இருக்க வேண்டும் அல்லது நம்முடைய உபவாசத்தையும் மனந்திருப்புதலின் ஜெபங்களையும் ஒவ்வொரு நாளும் ஏறெடுக்கவேண்டும். ஆனால் யாருடைய சரீரம் எப்பொழுதுமே பரிசுத்தமாய் இருக்கிறது மேலும் இதை யார் எப்பொழுதுமே செய்ய முடியும்?

கர்த்தர் நம்மை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகியவற்றின் மூலம் இரட்சிக்கவில்லை என்றால் நம் யாராலும் பரலோக இராஜ்ஜியத்திற்குள் நுழைய முடிந்திருக்காது. நம்முடைய விசுவாசம் ஒரு சமயத்தில் நன்றாக இருக்கிறது ஆனால் அடுத்த சமயத்தில் அது மறைந்து விடுகிறது, இப்படித்தான் நாம் இருக்கிறோம். மறுபடியும் திரும்ப திரும்ப மறைவதற்காகத்தான் நம்முடைய விசுவாசம் இருக்கிறதா என்று குழுப்பமடைந்து விடுகிறோம். மேலும் முன்பு நமக்கு இருந்த

விசுவாசத்தையும் நாம் தொலைத்து விடுகிறோம். இயேசுவை முதலில் விசுவாசித்த பிறகும் கூட உடனடியாக அதிக பாவம் நிறைந்தவர்களாய் நாம் மாறிவிடுகிறோம். ஆனால் இயேசு இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள அவருடைய மீட்பின் திட்டத்தின் படியாக, திறமையில்லாத பாவிகளாகிய நம்மை சரியாக மீட்டுள்ளார். நம்முடைய பாவங்களுக்கான மீட்பை அவர் நமக்கு கொடுத்துள்ளார்.

நமக்கு இந்த சாட்சி இருக்கும் பொழுதுதான, தலைமை ஆசாரியர்களைப் போல நம்முடைய தலைப்பாகையில் 'கர்த்தருக்கே பரிசுத்தம்' என்ற தங்கதட்டை வைத்துக்கொள்ள முடியும் (யாத்திராகமம் 28:36-38). பின்பு நாம் நம்முடைய ஆசாரியத்துவத்தை வெளியில் கொண்டு வரலாம். இயேசுவுடைய ஆசாரியர்களாக இருந்து அவருக்கு ஊழியம் செய்யும் பொழுது மக்களிடத்தில் தங்களின் "கர்த்தருக்கே பரிசுத்தத்தை" சோதித்துக் கொள்ள முடிந்தவர்கள், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலமாக பாவத்தின் மீட்பை பெற்றுக் கொண்டதற்கான சாட்சியை தங்கள் இருதயங்களில் உடையவர்களாக இருக்கிறார்கள்.

தலைமை ஆசாரியனுடைய தலைபாகையில் ஒரு தங்கத் தட்டு இணைக்கப்பட்டிருந்தது, மேலும் இந்த தங்க தட்டை தலைபாகையுடன் கட்டியது ஒரு இளநீல நிற நூல் இழையாக இருந்தது. தலைப்பாகை இந்த இளநீல நிற நூல் இழையால் தான் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கர்த்தர் சொன்னாரா? நம்மை மீட்பதற்காக நம்முடைய தேவனுக்கு தேவைப்பட்டது இளநீல நிற நூலாகும், மேலும் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொள்வதற்காக இயேசு பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தை இந்த இளநீல நிற நூல் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டின் கைகளை கிடத்துவது போன்று புதிய

ஏற்பாட்டில், தேவன், அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்துக்கொன்டதின் மூலம் அவற்றை துடைக்காமல் இருந்திருந்தால், நாம் இயேசுவை எவ்வளவு விசுவாசித்தாலும், யெகோவாவிடமிருந்து பரிசுத்தத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. இதனால் தான் தங்கத்தட்டு, இளநீல நிற நூலால் தலைப்பாகையில் கட்டப்பட்டிருந்தது. மேலும், "கர்த்தருக்கே பரிசுத்தம்" என்று பதிக்கப்பட்டிருக்கும் தங்கத்தட்டுடன் இருக்கும் தலைமை ஆசாரியனை எல்லோரும் பார்க்கும் பொழுது அவர்களுடைய பாவங்களுக்கான மீட்பைப் பெற்றுக் கொள்வதன் மூலம் கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்பதை அவனோ/அவளோ தனக்குள்ளேயே ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

நாம் எப்படி நீதிமான்களானோம் என்பதை நாமும் ஞாபகப்படுத்தி பார்க்க வேண்டும். நாம் எப்படிநீதிமான்கள் ஆனோம்? மத்தேயு 3:15 யை வாசிப்போம் *"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான்."* இயேசு ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் நம்மெல்லோரையும் நம்முடைய பாவங்களில் இருந்து மீட்டுள்ளார். இயேசு தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய பாவங்களை அவர் மீது ஏற்றுக்கொண்டார். இதனால் யாரெல்லாம் இதை விசுவாசிக்கிறார்களோ அவர்கள் பாவமற்றவர்கள் ஆவர். இயேசு ஞானஸ்நானம் பெற்றிராவிட்டால் நாம் பாவமற்றவர்கள் என்று எப்படி நம்மால் தைரியமாக சொல்ல முடியும்? சிலுவையின் மீதான இயேசுவின் மரணத்தில், உங்கள் கண்களில் உண்மையான கண்ணீருடன், உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுவது மூலமாக மட்டும்தான் நீங்கள் பாவத்தின் மீட்பை பெற்றுக்

கொண்டீர்களா? இயேசுவுடன் எந்த உறவும் இல்லை என்பதால் அவருடைய மரணத்தில் துயரமடைவதற்கு கஷ்டப்படும் பல மக்கள் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்களுடைய தாத்தா, பாட்டியுடைய மரணத்தையோ அவர்கள் நோய் வாய்ப்பட்ட பொழுது அவர்கள் பட்ட கஷ்டத்தையோ அல்லது அவர்களுடைய கடந்த காலத்தின் கடினமான கஷ்டங்களையோ அல்லது துயரங்களையோ நினைப்பதின் மூலம் அவர்களுடைய கண்ணீரைச் சிந்துகின்றனர். நீங்கள் அதைப் போல நடிக்க முயற்சி செய்கிறீர்களோ அல்லது உண்மையாகவே இயேசுவின் மரணத்தில் கவலைப்படுகிறீர்களோ, அது பொருட்டல்ல, இந்த வழியில் உங்கள் பாவங்களை எப்பொழுதுமே அழிக்க முடியாது.

"கர்த்தருக்கே பரிசுத்தம்" என்ற பதிப்புடன் இருக்கும் தங்க தட்டானது, இளநீல நிற நூல் இழையின் மூலம் தலைமை ஆசாரியனின் தலைபாகிற்கு கட்டப்பட்டது தான், நம்முடைய பாவங்களை அகற்றி, நம்மை பரிசுத்தமாக்குகிற இயேசுவின் ஞானஸ்நானமாயிருக்கிறது. யெகோவா நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது சுமத்தியதாலும், இயேசுவின் ஞானஸ்நானத்தின் மூலம் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களும் அவர் மீது செலுத்தப்பட்டதாலும், இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொண்டதாலும், நம்முடைய இருதயங்கள் எவ்வளவு சூனியமான உணர்ச்சியுடன் இருந்தாலும் சரி, நம்முடைய செயல்களில் நாம் எவ்வளவு திறமையில்லாதவர்களாய் இருந்தாலும் சரி, நாம் நீதிமான்களாகி உள்ளோம். மேலும் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ள இளநீல நிற நூலின் வார்த்தையின் மூலம் சரியாக இரட்சிக்கப்பட்டுள்ளோம். நாம் நம்முடைய சரீரத்தை பார்க்கும் பொழுது அதன்மூலம் பெருமைப் பாராட்டமுடியாது. ஆனால் நம்முடைய இருதயங்களில்

உள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகியவற்றில் உள்ள விசுவாசித்தின் காரணமாக அதாவது இயேசு நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஞானஸ்நானத்தின் மூலமாக தன் மீது ஏற்றுக்கொண்டு, நம்முடைய தண்டனைகளை சிலுவையின் மீது ஏற்றுக் கொண்டார் என்பதைச் சொல்லும் சரியான நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியால், நாம் தைரியமாகவும் பயமில்லாமலும் நற்செய்தியைப் பற்றி பேசலாம். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி நம்மிடம் இருப்பதால் தான் நம்முடைய விசுவாசத்தின் மூலம் நீதிமான்களாக வாழ முடியும், மேலும் இந்த நீதியான விசுவாசத்தை மக்களுக்கு போதிக்க முடியும்.

தேவனுடைய கிருபைக்காக நாம் போதுமான அளவு நன்றி சொல்ல முடியாது. நம்முடைய மீட்பு தானாகவே வந்து விடாத காரணத்தால், நாம் இதற்கு இன்னமும் நன்றியுள்ளவர்களாய் உள்ளோம். நாம் பெற்றுக் கொண்ட மீட்பானது, அவனுக்கோ/அவளுக்கோ சரியான விசுவாசம் இல்லாமல் இருந்தும், யாராலும் பெற்றுக்கொள்ளக் கூடிய அற்பமான ஒன்றாக இல்லை. தேவனே, தேவனே என்று ஒருவனுடைய சொந்த விருப்பபடி தேவனைக் கூப்பிடுவது போல எல்லோரும் செய்தால் நாம் இரட்சிக்கப்பட்டுவிடுவோம் என்று பொருள் அல்ல. நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களும் மறைந்துவிட்டன என்பதற்கான மற்றும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலம் தேவன் நம்மை நேர்த்தியாக மீட்டுள்ளார் என்பதற்கான சாட்சி நம்முடைய இருதயங்களில் இருப்பதால், இந்த சிறப்பான மீட்பிற்கு நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாய் உள்ளோம்.

தேவக் குமாரனான இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லோரும் அவனுடைய/அவளுடைய இருதயத்தில் சாட்சியத்தை வைத்திருக்கிறார்கள் என்று

வேதாகமம் சொல்கிறது (1 யோவான் 5:10). நம்முடைய இருதயங்களில் சாட்சியில்லை என்றால், நாம் கர்த்தரை பொய் பேசுபவராக மாற்றிக் கொண்டிருப்போம். மேலும் இதனால் நாமெல்லோரும் நம்முடைய இருதயங்களில் முடிவான சாட்சியத்தை வைத்திருக்க வேண்டும். நீங்கள் இரட்சிக்கப்பட்டதற்கான சாட்சியை எனக்கு காண்பியுங்கள் என்று சில மக்கள் உங்களிடம் சவால் விட்டு கேட்டால், இதற்காக பின் வாங்க வேண்டும் என்பதற்கு எக்காரணமும் இல்லை. "மக்கள் பாவத்திற்கான மீட்பைப் பெற்றுக் கொள்ளும் பொழுது, பரிசுத்த ஆவியை அவர்கள் பரிசாக பெறுவார்கள், மேலும் இரட்சிக்கப்படுதலுக்கான தெளிவான சாட்சி அங்கு உள்ளது, சாட்சியை எனக்கு காண்பியுங்கள் என்று அவர்கள் கேட்பார்கள்." "நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி எனக்குள் இருக்கிறது. இதன் மூலம் தான் இயேசு என்னை முழுமையாக மீட்டுக் கொண்டார். நான் அவரால் சரியாக இரட்சிக்கப்பட்டுள்ள காரணத்தால், என்னிடம் பாவம் இல்லை" என்று நீங்கள் சாட்சியை தைரியமாக காண்பிக்கலாம்.

நீங்கள் இரட்சிக்கப்பட்டதற்கான சாட்சி உங்கள் இருதயங்களில் இல்லை என்றால் நீங்கள் இரட்சிக்கப்படவில்லை என்று அர்த்தம். எவ்வளவு ஆர்வத்துடன் மக்கள் இயேசுவை விசுவாசித்தாலும் சரி, இது இதற்குள்ளேயே அவர்களின் இரட்சிக்கப்படுதலுக்கு வழி வகுப்பது இல்லை. இது ஒரு திரும்பிக்கொடுக்கப்படாத அன்பாய் மட்டுமே இருக்கிறது, மற்ற நபர் எப்படி நினைக்கலாம் என்பதைப் பற்றி எந்த அக்கறையும் இல்லாத அன்பாக இது இருக்கிறது. நம்மால் நேசிக்கப்படமுடியாத ஒருவருக்கு குழப்பமான இருதயம் இருந்து, நம்மிடம் இருந்து அவர் எதிர்பார்த்து, அன்பை நினைத்து அவர்கள் நேசிக்கப்படுவதற்காக அவளோ/அவனோ ஏக்கத்துடன் நம்மை பார்த்தால், பதிலுக்கு இந்த நபரை நாம் நேசிக்க வேண்டும் என்று

அர்த்தம் இல்லை. இதைப் போல், தங்களுடைய இருதயங்கள் கர்த்தருக்காக வாஞ்சையாய் இருக்கிறது என்பதற்காக தங்களின் பாவங்களுக்கான மீட்பைப் பெற்றுக் கொள்ளாதவர்களை கர்த்தர் தம்முடைய கரங்களுக்குள் அணைத்துக் கொள்வதில்லை. இதைத் தவிர தேவையில்லாத பாவிகளின் அன்பு கர்த்தருக்கு அவசியம் இல்லை.

நாம் கர்த்தரை நேசிக்கும்பொழுது, சத்தியத்தில் உள்ள அவருடைய வார்த்தையை விசுவாசிப்பதின் மூலம் அவரை நேசிக்க வேண்டும். அவருக்கான நம்முடைய அன்பு ஒரு தலை நேசமாக மட்டுமே இருக்கக்கூடாது. அவருக்கான நம்முடைய அன்பை அவரிடம் சொல்ல வேண்டும். மேலும் அவரை நேசிப்பதற்கு முன், அவர் நம்மை உண்மையாய் நேசிக்கிறாரா இல்லையா என்பதை நாம் கண்டுப்பிடிக்க வேண்டும். நம்மை உண்மையில் நேசிக்காத ஒருவரிடத்தில் நம்முடைய அன்பு முழுவதையும் கொடுத்தால், முடிவில் உடைந்த இருதயத்துடன் தான் நாம் இருப்போம்.

நம் தேவன் நம்முடைய பாவங்களை மறைத்து நம்மை மீட்பின் கிருபையினால் மூடியுள்ளார் இதனால் அவற்றிற்காக தண்டிக்கப்படமாட்டோம். கர்த்தருடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்காகவும் கர்த்தருடன் இருப்பதற்காகவும் அவர் நம்மை அனுமதித்துள்ளார். மேலும் கர்த்தரின் கிருபையின் மூலம் பாவத்திற்கான மீட்பைப் பெற்றுக்கொள்ள உதவும் பரிசை அவர் நமக்குக் கொடுத்துள்ளார். கர்த்தருடைய மீட்பு, எண்ணமுடியாத பரலோகத்தின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நமக்கு கொண்டுவந்துள்ளது. கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள இந்த மீட்பானது, அவரிடமிருந்து இந்த எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள நமக்கு உதவியுள்ளது.

இயேசு நமக்கு கொண்டு வந்த இரட்சிப்பு

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகியவற்றால் நம் தேவன் நம்மை மீட்டுள்ளார். மூன்று வித்தியாசமான நூல்களால் ஆன மீட்பை அவர் நமக்கு தந்துள்ளார். இந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்பு நூலானது, கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள மீட்பின் பரிசை தவிர வேறு எதுவும் இல்லை. இந்த மீட்பின் பரிசு தான் நம்மை பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்து அங்கு வாழ உதவிச் செய்கிறது.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி உங்களையும் என்னையும் நீதிமான்களாக மாற்றியுள்ளது. இது நம்மை கர்த்தருடைய ஆலயத்திற்குள் வரவும் தூய்மையான வாழ்க்கை வாழவும் நம்மை அனுமதித்துள்ளது. மேலும் உண்மையான நற்செய்தியான கர்த்தருடைய ஆவிக்குரிய வார்த்தையில் வாழவும், அவருடைய கிருபையை பெற்றுக் கொள்ளவும் நமக்கு உதவியுள்ளது. கர்த்தருடைய கிருபாசனத்திற்கு முன் சென்று ஜெபிக்கவும் இதன் மூலம் நம்மை இது அனுமதித்துள்ளது. மேலும் இதன் மூலம் நம்முடைய கர்த்தர் அளித்துள்ள அளவில்லா கிருபையை, நாம் எடுத்து கொள்ளக் கூடிய விசுவாசத்தை இது தந்துள்ளது. நம்முடைய விசுவாசத்தின் மூலம் மட்டுமே, கர்த்தர் இந்த சிறப்பான ஆசீர்வாதங்களை நம்முடையதாக்கியுள்ளார். இதனால் தான், இரட்சிக்கப்படுதல் அவ்வளவு விலை உயர்ந்ததாக இருக்கிறது.

இயேசுவானவர் பாறையின் மேலே நம்முடைய விசுவாசத்தின் வீட்டைக் கட்டச் சொன்னார் (மத்தேயு 7:24). நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியினால் வரும் நம்முடைய மீட்பைத் தவிர இந்த பாறை வேறு எதுவும் இல்லை. இதைப் போல நாமெல்லாரும் இரட்சிக்கப்படுவதன் மூலம் விசுவாச வாழ்க்கை வாழவேண்டும். இரட்சிக்கப்படுவதன் மூலம் நீதிமான்களாக வேண்டும். இரட்சிக்கப்படுவதன் மூலம்

நிரந்தர வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். மற்றும் இரட்சிக்கப்படுவதன் மூலம் பரலோகத்திற்குள் நுழையவேண்டும்.

இந்த உலகத்தினுடைய முடிவு நேரங்கள் நம்மை அனுகிக் கொண்டிருக்கின்றன. இதனால் இந்த காலத்தில் சரியான வார்த்தை மூலம் இரட்சிக்கப்படவேண்டும் என்பதற்கு மக்களிடம் இன்னமும் அதிக காரணங்கள் இருக்கின்றன. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்பு நூலகளின் விசுவாசத்தை தெரிந்துகொள்ளாமலே, இயேசுவை விசுவாசிப்பதின் மூலம் ஒருவன் இரட்சிக்கப்படலாம் என்றும், விசுவாசத்தின் வாழ்க்கையைக் குறித்து பேசுவதற்கு எந்த அவசியமும் இல்லை என்றும், இந்த வழியில் இரட்சிக்கப்படுவதே போதுமானது என்றும் சொல்லக் கூடிய சில மக்கள் இருக்கிறார்கள்.

ஆனாலும் இதை நான் திரும்ப சொல்வதற்கு காரணம் என்னவென்றால் தங்கள் இருதயங்களில் பாவத்தின் மீட்பை பெற்றவர்களால் மட்டும் தான் கர்த்தர் அங்கீகரிக்கும் விசுவாசத்தின் வாழ்க்கையை வாழ முடியும். பாவத்தின் மீட்பைப் பெற்றுள்ள ஒவ்வொரு பரிசுத்தவான்களின் இருதயமும் பரிசுத்த ஆவியானவர் குடியிருக்கும் பரிசுத்த ஆலயமாக இருக்கிறது என்ற காரணத்தால் இந்த பரிசுத்தத்தை மாசுபடுத்தக் கூடாது என்பதற்காக அவனோ/அவளோ தங்களுடைய வாழ்க்கையை விசுவாசமாக வாழ வேண்டும்.

பாவிகள் வாழ்வதிலிருந்து ஒரு முழுமையான வித்தியாசமான கோணத்தில் தான் நீதிமான்கள் தங்களுடைய வாழ்க்கையை வாழ்கிறார்கள். கர்த்தருடைய பார்வையில் பாவிகள் வாழ்வது முற்றிலும் அவர் தரத்திற்கு கீழே உள்ளது. அவர்களுடைய வாழ்க்கை கபடத்தால் மட்டும் நிறைந்திருக்கிறது. சத்தியத்தின்படி வாழ்வதற்கு அவர்கள் மிகவும் முயற்சி செய்கிறார்கள். தாங்கள் எப்படி வாழ வேண்டும் என்றும், தாங்கள் எப்படி பேச வேண்டும் என்றும்

தாங்கள் எப்படி சிரிக்க வேண்டும் என்றும் தங்களுடைய சொந்த தரத்தை அமைத்துக் கொள்கிறார்கள்.

ஆனால் நீதிமான்கள் வாழும் விசுவாசத்தின் வாழ்க்கையிலிருந்து இது அகற்றப்பட்டுள்ளது. "உங்கள் முழு இருதயத்துடனும் பெலத்துடனும் உங்கள் தேவனாகிய கர்த்தரை நேசியுங்கள் மேலும் உங்கள் சொந்த சரீரத்தை நேசிப்பதுப் போல உங்கள் அயலாரை நேசியுங்கள்" என்று கர்த்தர் நீதிமான்களுக்கு விரிவாக சொல்லுகிறார். இது நீதிமான்களுக்கு கர்த்தர் கொடுத்துள்ள வாழ்க்கையின் மாதிரியாகும். நீதிமான்களாகிய நமக்கு நம் முழு இருதயத்துடன் கர்த்தரை நேசித்து நம்முடைய வாழ்க்கையை வாழ்வதும், நம் முழு பலத்துடனும் முழு விருப்பத்துடனும் அவருடைய சித்தத்தை தொடர்வதும் சரியாக இருக்கிறது. நம்முடைய அயலாரை மீட்பதற்கான அவருடைய வேலைகளில் எண்ண முடியாத முதலீடுகளை நாம் செய்ய வேண்டும். இது தான் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை.

நாம் பாவம் செய்வதில்லை என்பது தான் முக்கியம் என்று நினைக்கும் நிலையில் நாம் இருந்தால் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களின் விசுவாசமான வாழ்க்கையை நம்மால் பின்பற்ற முடியாது. நான் மறுபடியும் பிறப்பதற்கு முன்பு, முறை சார்ந்த பிரஸ்பைடேரியன் பிரிவில் நீதியான விசுவாசமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தேன், மேலும் சத்தியத்தின் வாழ்க்கையைப் பொருத்தமட்டும் அதை முழுமையாக வைத்துக் கொள்ள நான் முயற்சி செய்தேன். இப்பொழுதெல்லாம், மக்கள் இதை ஒரு பொழுதும் செய்வதில்லை. நீண்ட காலத்தில் இருந்து என்னுடைய மத வாழ்க்கையை நான் மேற்கொண்டு வருவதால், என்னுடைய அன்றாட வாழ்க்கையில் சத்தியத்தை வைத்துக் கொள்வதில் நான் மிகவும் பொருத்தமானவனாக இருந்தேன். நான் சத்தியத்திற்கு முழுமையாக கீழ்படிந்தவனாக இருந்தேன். இதனால் நான்

தேவனுடைய நாளில் வேலை செய்தது கிடையாது, ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் என்று வேதம் ஆணையிடுவதைப் போல ஞாயிற்றுக்கிழமைகளில் காரிற்குள் கூட போகாத அளவிற்கு நான் இருந்தேன். என்னைப் போல வாழ வேண்டும் என்று நான் உங்களிடம் கோரினால், அத்தகைய சட்டபூர்வமான வாழ்க்கையை வாழ யாரும் இருக்க மாட்டார்கள். நான் மறுபடியும் பிறப்பதற்கு முன், என்னுடைய வாழ்க்கை இப்படித் தான் நீதியாக இருந்தது, இருப்பினும், என்னுடைய மத நாட்களை எப்படி பக்தியுள்ளதாக நான் செலவு செய்திருந்தாலும் அது கர்த்தருடைய சித்ததுடன் ஒத்துப்போகவில்லை என்பதுடன் முற்றிலும் உபயோகம் இல்லாமல் இருந்தது.

வாசகர்களே, இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகியவை மீது உங்களிடம் விசுவாசம் இருக்கிறதா? இயேசுவினுடைய மீட்பு இந்த மூன்று நூல்களிலும் அடங்கியிருப்பதால் நம்முடைய விசுவாசத்தினால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நம்மால் நுழைய முடியும். நம்முடைய மீட்பு 2000 வருடங்களுக்கு முன்பாகவே நிறைவேற்றப்பட்டிருந்தது. இயேசு கிறிஸ்துவைப் பற்றி நாம் தெரிந்துக் கொள்வதற்கு முன்னரே, அவர் ஏற்கெனவே ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது ஏற்றுக் கொண்டார். மேலும் சிலுவையின் மீது மரித்ததன் மூலம் நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை சுமந்தார்.

பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுதல் இயேசு கிறிஸ்துவுக்குள் அமைந்திருக்கிறது

மறுபடியும் பிறக்காதவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் நுழையும் பொழுது, அதன் பிரகாரத்தின் நுழைவாயில்

வழியாக அவர்கள் நுழைவதில்லை, ஆனால் சட்ட விரோதமாக வேலியை தாண்டுகிறார்கள். "வேலியினுடைய மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஏன் இவ்வளவு வெண்மையாக உள்ளது? இது மிகவும் களைப்பூட்டக்கூடியதாய் இருக்கிறது. அவர்கள் இதை சிகப்பு அல்லது இளநீல வண்ணத்தால் வண்ணம் தீட்டியிருக்க வேண்டும். இன்றைய நாட்களில் இது தான் நாகரீகமாயிருக்கிறது. ஆனால் இந்த வேலி மிகவும் வெண்மையாக இருக்கிறது! இது அதிகமாக ஒட்டுகிறது. மேலும் இது ஏன் இவ்வளவு உயரமாக இருக்கிறது? இதன் உயரம் 2.25 மீட்டரை (7.5 அடி) விட அதிகமாக இருக்கிறது. என்னுடைய உயரம் 2 மீட்டரை கூட தொடுவதில்லை எனவிருக்கும்போது, நான் எப்படி இதற்குள் நுழைய முடியும்? சரி ஒரு ஏணியைப் பயன்படுத்தி இதை என்னால் தாண்டி விட முடியும்" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

இப்படிப்பட்ட மக்கள் தங்கள் சொந்த செயல்களுடன் நுழைய முயற்சிக்கிறார்கள். தங்களுடைய காணிக்கைகளாலும் தரும செயல்களாலும் பொறுமையாலும், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தினுடைய வேலியின் மேல் அவர்கள் ஏறி விடுகிறார்கள். மேலும் "என்னால் 2.25 மீட்டர் (7.5 அடி) உயரத்திலிருந்து குதிக்க முடியும்" எனக் கூறி கண்டிப்பாக கீழே குதித்து விடுகிறார்கள். ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்திற்குள் குதித்த பிறகு அவர்கள் திரும்பி பார்த்து, சர்வாங்க தகன பலிபீடத்தைப் பார்க்கிறார்கள். பின்பு அவர்கள் பலிபீடத்திலிருந்து தங்கள் பார்வையை பரிசுத்த ஸ்தலத்தை நோக்கி திருப்புகிறார்கள், மேலும் அதற்கு முன்னால் இருக்கும் வெண்கலப் பாத்திரத்தையும் அவர்கள் பார்க்கிறார்கள்.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வேலியின் தூண்களின் உயரம் 2.25 மீட்டர் (7.5 அடி) ஆக இருக்கிறது. ஆனால் கர்த்தர் குடியிருக்கும் பரிசுத்த ஸ்தலத்தின்

கதவினுடைய திரை மற்றும் தூண்களுடைய உயரம் 4.5 மீட்டர் (15 அடி) ஆக உள்ளது. அவர்களிடத்தில் போதுமான அளவு தீர்மானம் இருந்தால் அவர்களால் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்திற்குள் நுழைய முடியும். ஆனால் ஒரு வேளை அவர்கள் 2.25 மீட்டர் (7.5 அடி) உயர வேலியை தாண்டி குதித்து ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்திற்குள் நுழைந்தாலும், கர்த்தர் குடியிருக்கும் இடத்திற்குள் நுழைய முயற்சி செய்யும் பொழுது, அவர்கள் 4.5 மீட்டர் (15 அடி) உயர தூண்களையும் பரிசுத்த ஸ்தலத்தின் கதவினுடைய திரையையும் எதிர்க்கொள்வார்கள். மக்கள் 2.5 மீட்டர் (8.3 அடி) உயரத்தை தங்களுடைய சொந்த முயற்சியின் மூலம் தாண்டி குதித்து விடலாம், ஆனால் கர்த்தரால் அமைக்கப்பட்டுள்ள 4.5 மீட்டர் (15 அடி) உயரத்தை தாண்டி குதிக்க முடியாது. இது தான் அவர்களுடைய எல்லை.

நாம் இயேசுவை முதலில் விசுவாசிக்கும் பொழுது வெறும் மதமாக மட்டுமே விசுவாசிக்க முடியும் என்று இது சொல்கிறது. கூடவே, தங்களுடைய சொந்த விருப்பப்படி இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக சில மக்கள் விசுவாசிக்கலாம், மேலும் மீட்பர் என்பவர் நான்கு சிறந்த அறிஞர்களில் ஒருவரே என்றும் விசுவாசிக்கலாம். மக்கள் எப்படி விசுவாசிக்கிறார்கள் என்பதைப் பற்றி கவலைப்பட வேண்டாம், அவர்கள் தேர்ந்தெடுக்கக் கூடிய எந்த வகையில் வேண்டுமானாலும் அவர்கள் விசுவாசிக்கட்டும், அத்தகைய விசுவாசத்தின் மூலம் அவர்களால் மறுபடியும் பிறக்க முடியாது.

மறுபடியும் பிறக்க வேண்டுமானால் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகியவற்றால் ஆன நுழைவாயிலை விசுவாசத்தின் மூலம் அவர்கள் கடக்க வேண்டும். இயேசு தான் நமது மீட்பரும், சத்தியத்தின் கதவுமாயிருக்கிறார் என்றும், நீர் இரத்தம் மற்றும் ஆவியின் மூலம் நம்மை மீட்டுள்ளார் என்று விசுவாசிக்கும் பொழுது

கர்த்தருக்கு முன்பாக நாம் மறுபடியும் பிறக்கிறோம். மூன்று நூல்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ள இயேசுவின் வேலைகளை விசுவாசிக்கும் விசுவாசமானது, நீர், இரத்தம் மற்றும் ஆவி ஆகியவற்றின் விசுவாசத்தை தவிர வேறு எதுவும் கிடையாது. வேறு எதிலாவதில் விசுவாசமாயிருக்க மக்களுக்கு சுதந்திரமுண்டு ஆனால் அதை விசுவாசிப்பதின் மூலம் அவர்கள் இரட்சிக்கப்படலாம் என்பதற்கும் அதிகமாக ஆசீர்வதிக்கப்படலாம் என்பதற்கும் சரியான சாட்சியம் இல்லை. நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் நமக்கு இருக்கும் விசுவாசத்தின் மூலம் மட்டுமே கர்த்தருடைய ஒப்புதலையும் சிறந்த கிருபையையும், கர்த்தரின்ய இரட்சிக்கப்படுதலின் ஆசீர்வாதத்தையும் நம்மால் பெற முடியும். இந்த நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் உள்ள விசுவாசித்தின் குறிக்கோள் யாதெனில் கர்த்தருடைய கிருபையில் நம்மை மூடுவதே ஆகும்.

ஆசரிப்புக் கூடாரத்தை, ஒரு வீட்டுடன் இருக்கும் செவ்வக வடிவ பிரகாரமாக நீங்கள் கருதுகிறீர்களா? இது உங்கள் விசுவாசத்திற்கு எந்த பலனையும் கொண்டு வர முடியாது. ஆசரிப்புக் கூடாரம் முழு விசுவாசத்தைப் பற்றி நமக்கு சொல்லுகிறது, மேலும் இந்த விசுவாசம் என்ன என்பதை நாம் தெளிவாக தெரிந்து கொள்ளாமல், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய உயரம் அதனுடைய வேலியின் உயரமான 2.25 மீட்டர் (7.5 அடி) உயரத்தில் இருக்கும் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இது உண்மையல்ல. நாம் வாசலுக்குள் நுழையாமல் இருந்து, வேலிக்கு வெளியில் இருந்து ஆசரிப்புக் கூடாரத்தைப் பார்த்தாலும் கூட ஆசரிப்புக் கூடாரமானது வேலியை விட இரண்டு மடங்கு உயரமுடையதாய் இருக்கிறது என்பதை நம்மால் பார்க்க முடியும். ஆசரிப்புக் கூடாரத்தினுடைய அடிப்பாகத்தை நம்மால் பார்க்க முடியாவிட்டாலும் நம்மால் இதனுடைய நுழைவாயிலை தெளிவாக பார்க்கமுடியும். ஆசரிப்புக்

கூடார பிரகாரத்துடைய வேலியை விட ஆசரிப்புக் கூடாரம் உயரமாக நிற்கிறது என்பதை இது நமக்கு சொல்லுகிறது.

இயேசுவை விசுவாசிப்பதன் மூலம் பாவங்களின் மீட்பைப் பெற்றுக்கொண்டு இதன்படி ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தினுடைய நுழைவாயிலுக்குள் நுழைந்தவர்கள், சர்வாங்க தகன பலிபீடத்திலும் வெண்கல பாத்திரத்திலும் தங்களுடைய விசுவாசத்தை உறுதி செய்து கொண்ட பிறகு பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய வேண்டும். பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய ஆத்ம தியாகம் தவறாமல் இருக்க வேண்டும். பரிசுத்த ஸ்தலத்திற்குள் இருக்கும் பாத்திரங்கள், பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியில் காணப்படும் எல்லா பாத்திரங்களிலிருந்தும் வேறுபடுத்தி காண்பிக்கப் பட்டிருக்கவேண்டும்.

சாத்தான் எதை அதிகமாக வெறுக்கிறான் என்று உங்களுக்குத் தெரியுமா? பரிசுத்த ஸ்தலத்திற்கு உள்ளேயேயும் வெளியேயும் எல்லைக் கோடு வரையப்பட்டுள்ளதை அவன் வெறுக்கிறான். பரிசுத்த ஸ்தலத்திற்கு உள்ளேயும், வெளியேயும் பிரிப்பவர்களும் மத்தியில் கர்த்தர் வேலை செய்கிறபடியால் இப்படிப்பட்ட கோடு வரையப்பட்டிருக்கிறது என்பதை சாத்தான் வெறுக்கிறான். மேலும் இந்த கோடு வரையப்படுவதிலிருந்து மக்களை தடுக்க முயற்சிக்கிறான். ஆனால் இதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்: இந்த விசுவாச எல்லைக் கோட்டை யார் வரைகிறார்களோ அவர்களுள் கர்த்தர் தெளிவாக வேலைச் செய்கிறார், இந்த பிரிக்கும் கோட்டை வரையும் மக்களில் ஆண்டவர் பிரியமாயிருக்கிறார், மேலும் அவர்களுக்கு தன் ஆசீர்வாதத்தை அளிக்கிறார். இதனால் தங்களுடைய அருமையான விசுவாசத்தின் மூலம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் அவர்களால் வாழ முடியும்.

மக்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும் வகையாக ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப்பிரகாரத்தில்

உள்ள் அனைத்துப் பாத்திரங்களையும் பொருட்களையும் கர்த்தர் தயார் செய்து அவற்றை அங்கே வைத்திருந்தார் என்பதை நீங்கள் விசுவாசியுங்கள். இதனை விசுவாசிப்பதின் மூலம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நீங்கள் பிரவேசிக்கும் போது, கர்த்தர் தம்முடைய பெரிதான ஆசீர்வாதத்தையும் கிருபையையும் உங்களுக்கு நல்குவார்.

கிருபாசனமே இரட்சிப்பின் கிருபையை பெற்றுக் கொள்ளும் இடமாயிருக்கிறது

மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டியை மூடியிருந்த மூடிக்கு மேலே இருந்து, தங்களுடைய இறக்கைகளை விரித்தபடி இரண்டு தேவதூதர்கள் கீழே எட்டிப்பார்க்கிறார்கள். இரண்டு தேவதூதர்களுக்கும் இடையில் இருக்கும் இடம் தான் இரக்கத்தின் இருக்கை என்று அழைக்கப்படுகிறது. இரக்கத்தின் இருக்கையில் இருந்து தான் கர்த்தர் அவருடைய கிருபையை நம் மேல் அளிக்கிறார். இஸ்ரவேல் மக்களுக்கென்று கொடுக்கப்பட்ட காணிக்கையின் இரத்தத்தை தலைமை சாரிய இந்த கிருபாசனத்தின்மேலே ஏழு முறை தெளித்ததால், உடன்படிக்கைப் பெட்டியுடைய மூடி இரத்தத்தால் கறையாக்கப்பட்டிருந்தது. இப்படி தான் கர்த்தர் தீடீரென கிருபாசனத்தின்மேலே தோன்றி, இஸ்ரவேலின் மக்கள் மேலே அவருடைய இரக்கத்தை அளித்தார். இதை விசுவாசிப்பவர்களுக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம், பாதுகாப்பு மற்றும் துணை தொடங்கும் இதிலிருந்து, கர்த்தருடைய உண்மையான மக்களாய் அவர்கள் ஆகிறார்கள். மேலும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய தகுதியுடையவர்களாய் ஆகிறார்கள்.

உலகிலுள்ள பல கிறிஸ்தவர்களில் சிலரிடம் பரிசுத்த ஸ்தலத்திற்கு அனுமதிக்கக் கூடிய விசுவாசம் இருக்கிறது,

ஆனால் மற்றவர்களிடம் பரிசுத்த ஸ்தலத்திற்கு அனுமதிக்கக் கூடிய விசுவாசம் இல்லை. உங்களிடம் உள்ள விசுவாசம் எத்தகையது? இரட்சிப்பிற்கான சரியானக் கோட்டை வரையக்கூடியதும், கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்திற்குள் அழைத்துச்செல்வதுமான விசுவாசம் நமக்குத் தேவை, ஏனெனில் இப்படிச் செய்வதின் மூலம் மட்டுமே கர்த்தரால் நாம் பெரிதும் ஆசீர்வதிக்கப் படுவோம்.

ஆனால் இத்தகைய விசுவாசத்தைப் பெற்றுக் கொள்வது இலகுவானது அல்ல. இரட்சிப்பிற்கான சரியானக் கோட்டை மக்கள் வரைவதை சாத்தான் வெறுப்பதுடன் இந்தக் கோட்டைத் தெளிவில்லாததாக்குவதற்கு தன்னால் முடிந்த அனைத்தையும் அவன் தொடர்ந்து செய்கிறான். "நீ அப்படியாக விசுவாசிக்க வேண்டியதில்லை. எல்லோருமே அப்படி விசுவாசிப்பதில்லை, ஆகவே நீ ஏன் அதன் மேல் இத்தனை முக்கியத்துவத்தை வைத்து அதனை மீண்டும் மீண்டும் தொடர்ந்து கொண்டிருக்கிறாய்? இலகுவாக எடுத்துக்கொள், உலகத்தோடு ஒத்துப்போ." இப்படிக் கூறுவதின் மூலமாக இரட்சிப்பிற்கான சரியானக் கோட்டை மறைப்பதற்கு அவன் முயலுகிறான். மேலும் நம் மாமிசத்தின் பலவீனத்தை வெளிக்காட்டுவதன் மூலம் அவற்றினால் பிரச்சினை உருவாகும் படி அவன் செய்கிறான். கர்த்தரிடமிருந்து நம்மைப் பிரிக்கும் சாத்தானின் வஞ்சக வார்த்தைகளுக்கு செவிமடுக்கும் நபராக நீங்கள் இருக்கிறீர்களா? அல்லது உங்கள் இரட்சிப்பை அனுதினமும் நினைவு கூர்ந்து, கர்த்தரின் ஆலயத்துடனே ஐக்கியமாகி, கர்த்தரின் வார்த்தைகளைப் பின்பற்றி, ஜெபவாழ்க்கையை நடத்தி, கர்த்தர் உங்களுக்கு அருளிய கிருபையைப் பெற்றுக்கொண்டு உங்கள் வாழ்வை நடத்துவீர்களா?

உண்மையில், பாவமன்னிப்பு பெற்றவர்கள் தம்முடைய இரட்சிப்பைக் குறித்து நினைவு கூற விரும்புவர்.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் சஞ்சரிக்க அவர்கள் விரும்புவர். நற்செய்தியைத் தியானிப்பது உங்களுக்கு நலமானதும் அவசியமானதுமாகும். நீங்கள் இப்படிப் பட்டவர்களாக இல்லையா? "கோஷ், அது மீண்டும் அதே கதையாயிற்று, நாம் எப்போது இரட்சிக்கப்பட்டோம்? நிகழ்ச்சியும் அதற்கான சூழ்நிலையும் வேறுபாடானதாக இருக்கலாம், ஆனால் அது அதே பழைய கதையே. அது என்னை மிகவும் வருத்துகிறது!"

இதனைக் கூறக்கூடிய யாரும் இருக்கிறார்களா? என்னைக் குறித்த அதே கதையை மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருப்பதற்கு வருந்துகிறேன், ஆனால் நம் இரட்சிப்பைக் குறித்து ஒவ்வொரு நாளும் அசை போட வேண்டுமென வேதாகமம் கூறும் போது, என்னால் என்ன செய்ய முடியும்? புதிய ஏற்பாடும் பழைய ஏற்பாடும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை பற்றி நமக்கு கூறும் போது, கர்த்தருக்கு முன்பதாக இதனைப் பற்றிக் கூறுவது மக்களுக்கு எத்தகைய தீமையாக இருக்கமுடியும்? வேதாகமத்தின் அனைத்து வார்த்தைகளும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைப் பற்றி மட்டுமே பேசுகின்றன. "இரட்சிப்பு, விசுவாச வாழ்வு, விசுவாசம், ஆவிக்குரிய வாழ்வு, சாத்தானுக்கு எதிரான போர், நித்திய ஜீவன், நம்பிக்கை, மேலும் பரிசுத்த ஆவியானவர்"அஆகிய பரிசுத்தவான்களின் அனைத்து முக்கிய கருத்துக்களும் இந்த முக்கிய நற்செய்திக்கு தொடர்புடையவையாகும். டூதனைத் தவிர வேறெதையும் பேசுவது வேதப்புரட்டும் தவறான போதனையும் ஆகும். ஒரேவிதமாக தெரிந்தாலும், பொருளில் வேறுபாடு இருந்தால் அது தவறான போதனையாகும். வெளியில் ஒரே விதமாகவும், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவிக்கு உள்ளே வேறு விதமாகவும் இருக்கும் நற்செய்திகள் கள்ள மதங்களின் போலி போதகங்கள் ஆகும்.

கள்ள மதங்களின் வஞ்சக வார்த்தைகளை பரப்புவதை

விட்டு விட்டு ஒவ்வொரு நாளும் கர்த்தரின் வார்த்தையை கர்த்தரின் ஆலயம் பரப்புவது எத்தனை ஆச்சரியமானது? கர்த்தரின் ஆலயத்தில் ஐக்கியமாகி கர்த்தரின் தெளிவான வார்த்தையைக் கேட்டு அதனை விசுவாசிப்பது ஆசீர்வாதமாகும். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை எப்போதும் பிரசங்கிப்பதின் மூலமாக, கர்த்தரின் கிருபையை ஒவ்வொரு நாளும் எண்ணிப் பார்க்கவும், அவரிடம் ஜெபிக்கவும், அவருக்கு மரியாதைச் செலுத்தும் படியாகவும், தீமையை விட்டு விலகி நடக்கும் ஒரு வாழ்க்கையை வாழ, பரிசுத்தவான்களை கர்த்தரின் ஆலயம் ஏதுவாக்குகிறது. நீங்கள் பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ள உங்களை அனுமதிக்கும் சத்திய வார்த்தையை மீண்டும் கேட்டு அதனை விசுவாசிப்பது உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறதல்லவா? நானும் கூட அதிக மகிழ்ச்சியுடனேயே இருக்கிறேன்.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைத் தவிர வேறெந்த நற்செய்தியையும் போதிக்க நான் சென்றிருந்தால், அதனால் நான் அதிகம் துன்பப்பட்டிருப்பேன். இரட்சிப்பின் வார்த்தைக்கு பதிலாக வேறொரு மனித போதனையை பிரசங்கிக்க சென்றிருந்தால், நான் தப்பிக்க விரும்பியிருப்பேன். பேசுவதற்கு என்னிடம் எதுவும் இருக்காது என்பதே இதற்கான காரணமாகும். மற்ற பல்வேறு மனிதர்களைக் குறித்த காரியங்களை என்னால் பேசமுடியும், ஆனால் இவை எல்லாம் தேவையற்றவைகளாகவும், மறுபடியும் பிறந்தவர்களாகிய நம்மை அழிக்கும் போதனைகளாகும்.

கர்த்தராகிய இயேசுவானவர் நம்மை இரட்சிக்க பயன்படுத்திய நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியே கர்த்தரின் விலையேறப்பட்ட வார்த்தையாகும், அதனை நாம் மீண்டும் மீண்டும் அசைபோட்டாலும் அது இனிபாகவே இருக்கும். உங்களுக்கு கூறும்படியான அனேக கதைகள் எனக்குத் தெரியும், ஆனால் நம்மை இரட்சித்த

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைப் பற்றி பேசவே நான் விரும்புகிறேன். அப்பொழுது நான் பேரானந்தம் அடைகிறேன். இந்த இரட்சிப்பைக் குறித்து பேசிக் கொண்டிருக்கும் போது நான் மகிழ்ச்சியுடையவனாய் இருக்கிறேன், இப்போது தான் எனது பழைய நினைவுகள் மீண்டும் நினைவுக்கு வரும், அப்போது தேவன் என்னை எப்படி இரட்சித்தார் என்பதை என்னால் நினைவு படுத்த முடியும், அப்போது அவருக்கு ஒருமுறை நன்றி கூறி, இரட்சிப்பின் அப்பத்தினால் மீண்டுமாக போஷிக்கப் படுவேன்.

இந்த இரட்சிப்பின் வார்த்தையை கேட்கும் போது நீங்களும் இதனை வெகுவாக விரும்புவீர்கள் என்பதில் நான் உறுதியாயிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் இதே கதையாக இருக்கிறதே என நீங்கள் புகார் கூறலாம், ஆனால் மனதிற்குள்ளே இவ்வாறு எண்ணுவீர்கள், "நான் இதனை, இப்போது, மீண்டுமாக கேட்டேன், இது இன்னமும் சிறந்தது. தொடக்கத்தில் இது அவ்வளவு சிறப்பானதை இல்லை, ஆனால் அதை கேட்க தொடரும் பொழுது, மற்ற கதையை கவனிப்பதை விட இதை கவனிப்பது உபயோகமாய் இருக்கிறது என்பதை என்னால் பார்க்க முடிகிறது. இன்றைய கதை ஒரளவிற்கு விசேஷமாய் இருக்கலாம் என்று நான் நினைத்தேன், ஆனால் இது மறுபடியும் அதே கதை தான் என்று இதன் முடிவு எனக்கு சொல்கிறது. இருப்பினும், நான் இன்னமும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்." இப்படி தான் உங்களுடைய இருதயங்களும் நினைக்கிறது என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

சகோதர சகோதரிகளே நான் இங்கே பிரசங்கித்துக் கொண்டிருப்பது இயேசுவினுடைய வார்த்தையாகும். பிரசங்கிப்பவர்கள் இயேசுவின் வார்த்தையைப் போதிக்க வேண்டும். இயேசு நமக்கு என்ன செய்தார் என்பதையும், எழுதப்பட்ட வார்த்தையின் மூலம் நீர் மற்றும் ஆவியின் உண்மையை பரப்புவது தான் கர்த்தருடைய ஆலயம் செய்ய

வேண்டியதாய் இருக்கிறது. நாம் நம்முடைய விசுவாசத்தின் வாழ்க்கையை ஆலயத்தில் வாழ்கிறோம். பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைவதும், தங்க கட்டியை தட்டுவதன் மூலம் செய்யப்பட்ட ஏழு கிளைகளையுடைய விளக்குத்தண்டை ஏற்றுவதும், சுத்தமான தங்கத்தினுடைய வீட்டில் அப்பத்தை சாப்பிடுவதும், தூபவர்க்க பலிபீடத்தில் ஜெபிப்பதும், கர்த்தருடைய ஆலயத்திற்குள் போவதும், அவரை தொழுவதும், பொன் வீட்டில் இருப்பதும் நம்முடைய விசுவாசமான வாழ்க்கையாய் இருக்கிறதே தவிர வேறில்லை.

நீங்களும் நானும் கர்த்தர் கொடுத்த விசுவாசத்தின் வாழ்க்கையை இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாவத்தின் மீட்பை பெறுவதும் விசுவாசமான வாழ்க்கை வாழ்வதுமே, கர்த்தருடைய பொன் ஆலயத்திற்குள் இருக்கும் வாழ்க்கையாய் இருக்கிறது. *"ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது" (2 கொரிந்தியர் 4:16)* ஆசரிப்புக் கூடாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் இருக்கும் நம்முடைய விசுவாசத்தின் மூலம் பொன்னினால் பிரகாசித்து கொண்டிருக்கும் கர்த்தருடைய ஆலயத்தில் நம்முடைய ஆத்துமாக்கள் வாழ்கின்றன.

நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் தண்டனைகளிலிருந்தும் நம்மை மீட்டதற்காக கர்த்தருக்கு எப்பொழுதும் என் நன்றியை தெரிவிக்கிறேன். அல்லேலூயா! 🖂

பிரசங்கம்

2

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும்,
டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

நமக்காக துன்பப்பட்ட நமது தேவன்

< ஏசாயா 52:13-53:9 >

"இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார், அவர் உயர்த்தப்பட மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார். மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள். அப்படியே, அவர் அநேகம் ஜாதிகள்மேல் தெளிப்பார்; அவர்நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்துகொள்வார்கள். எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமும் இல்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை

எண்ணாமற்போனோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை."

முழு உலகமும் நற்செய்தியானது இப்போது பரவிக் கொண்டிருக்கிறது.

இவ்வுலகம் முடிவை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது. அரசியலிலிருந்து பொருளாதாரம் வரை அனைத்தும் முடிவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. வல்லரசு நாடுகள் தமது செல்வாக்கை உலகம் முழுவதும் விரிவு படுத்த முயல்வதால் போர் மேகம் இன்னமும் சூழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. என்னுடைய குடும்பத்திற்கு அருகேயுள்ள வடகொரியா, தான் அணு ஆயுதங்களைத் தயாரிக்க போவதாக அண்மையில் அறிவித்து, பன்னாட்டு சமுதாயத்திலும் பெரியதொரு கிளர்ச்சியை உருவாக்கிற்று. இத்தகைய பிரச்சினைகள் சூழ்ந்துள்ள உலகில், ஞானத்தினால் மட்டுமே தம்முடைய பிரச்சனைகளை இதில் சம்பந்தப்பட்டுள்ள அனைவராலும் தீர்க்க முடியும் என்பதையும், அறிவீனத்தினால் அப்படிச் செய்யலாகாது என்பதையும் மட்டுமே என்னால் நம்பமுடிகிறது, மேலும் அனைவருடனும் சுமுகமான உறவை வளர்த்துக் கொள்வதின் மூலம் மட்டுமே, ஒன்றாக எல்லோராலும் வாழ முடியும்.

அனுதினமும் நாம் ஜெபிக்கவேண்டும், இதனால் கர்த்தர் அதிக காலத்தைத் தருவார், ஆகவே நற்செய்தியை இன்னமும் அதிகமாக நாம் பரப்ப முடியும். நான் மரிக்க விரும்பாததினால் இதனைக் கூறவில்லை. உண்மையான நற்செய்தி இன்னமும் போதிக்கப்படாத நாடுகள் இருப்பதோடு சரியான நற்செய்தி மலரக்கூடிய நாடுகள் இன்னமும் இருப்பதே இதற்கான காரணம். நற்செய்தி முளைவிட்டு பூ பூக்கத் தொடங்கும் போது, நற்செய்தி இன்னமும் அதிகமாக பரப்பப்பட வேண்டியிருப்பதால், உண்மை நற்செய்தியைப் பரப்பும் எனது ஆவல் மேலும் தொடருகிறது.

எல்லாம் நல்லதிற்காக செயலாற்ற கர்த்தர் அருளுகிறார் என்பது உண்மைதான், ஆனால் மனிதர்கள் இத்தனை முட்டாள்களாக இருக்கிறார்கள் என்பதே, எனது பெரும் கவலையாக இருக்கிறது. தம்முடைய மரணத்தை தாம் என்று அடைவோம் என்று அவர்களுக்கே தெரியாத போதிலும் மற்றவர்களின் வாழ்க்கையை மக்கள் பயமுறுத்துகிறார்கள்; எல்லோரையும் மொத்தமாக கொலை செய்யும் அளவிற்கு அவர்களில் சிலர் செயல்படுகிறார்கள்.

உலகின் அனைத்து தலைவர்களின் இருதயங்களையும் கர்த்தர் ஆளுகிறார் என நான் விசுவாசிக்கிறேன். நமக்கு அவர் சமாதானத்தை அருளுவார் எனவும் நான் விசுவாசிக்கிறேன்.

இந்த காலத்தில், தமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவிற்காக இஸ்ரவேல் மக்கள் இன்னமும் காத்திருக்கின்றனர். அவர்களின் மேசியா இயேசுவே என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அவர்கள் காத்திருக்கும் மேசியா இயேசுவே என அவர்கள் அங்கீகரிப்பதுடன் அவரை விசுவாசிக்கவும் வேண்டும். நம் தேவனை பிரியப்படுத்தும் நற்செய்தி இஸ்ரவேலிற்கு நுழையும் காலம் அதிகமில்லை, மேலும் நற்செய்திக்கான கதவுகள் இன்னமும் திறக்கப்படாத நாடுகள் அதிகம் இருக்கின்றன. முழு உலகமும், நற்செய்தியானது மிகவும் நன்றாக பரவியிருக்கிறது, இதனால் இந்த முடிவு காலத்தில் அது முற்றிலுமாக மலர்கிறது.

மாணவர்கள் தம்முடைய பட்டத்தைப் பெற வேண்டுமானால், அவர்கள் நமது ஆங்கில பதிப்புகளை முற்றிலும் படிக்க வேண்டுமென வங்காள தேசத்திலுள்ள ஒரு வேதாகம பாடசாலை ஏற்பாடு செய்திருப்பதாக என்னிடம் கூறினார்கள். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை முதன்முதலாக சந்தித்த இந்த பாடசாலையின் மாணவர்கள், இதனைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கு முன்னரே, தம் பாவங்களுக்கான பாவ மன்னிப்பைப்

பெறுவர்.

இப்படியாக, உலகிலுள்ள அனைத்து இறையியலாளர்களும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை அறிந்து விசுவாசிப்பதின் மூலம் பாவமன்னிப்பை பெறுவார்கள் என்று நான் முதலில் விசுவாசிக்கிறேன். அவர்களுக்கு முன்னதாக பாவ மன்னிப்பை பெற்ற நாம் இது நடைபெறுவதற்காக இடைவிடாது ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டும். ஜெபிப்பது மட்டும் போதாது, ஆனால் விசுவாசித்தினால் நம் வாழ்க்கையை வாழவேண்டும்.

ஏசாயாவின் தீர்க்கதரிசனத்திற்கு 700 ஆண்டுகளுக்குப் பிறகு மேசியா இவ்வுலகிற்கு வந்தார்

இயேசு கிறிஸ்து இப்பூமியில் பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பு ஏசாயா ஒரு தீர்க்கதரிசியாக வாழ்ந்தான். இயேசு கிறிஸ்து வருவதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்பாக அவன் வாழ்ந்திருந்த போதிலும், மேசியாவைக் குறித்த பல செய்திகளை அவன் அறிந்திருந்தமையால், அவரைக் குறித்த எல்லாவற்றையும் ஏசாயா குறிப்பிட்டான், மேசியா எப்படி வருவார் இரட்சிப்பின் வேலையை அவர் எப்படிச் செய்வார் என்று தன் சொந்த கண்களால் நேரடியாக பார்த்ததைப் போல கூறினான். ஏசாயா 52:13 மற்றும் 53 மற்றும் 54 ஆம் அதிகாரங்கள் முழுவதும், விளக்கமாக, தொடர்ந்து, பாவத்திலிருந்து மனித குலத்தை மேசியா எப்படி இரட்சிப்பார் என தீர்க்கதரிசனம் கூறினான். இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வருவார் என்றும், தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலம் எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொள்வார் என்றும், தன் இரத்தத்தை

சிலுவையில் சிந்துவார் என்றும், இதன்மூலம் எல்லோருக்கும் இரட்சிப்பை எடுத்து வருவார் என்றும் இத்தனை துல்லியமாக தீர்க்கதரிசனம் கூறியிருப்பது மிகுந்த ஆச்சரியமான ஒன்றாகும். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் கூறப்பட்டு 700 வருடங்கள் கடந்த பிறகு, அவன் தீர்க்கதரிசனம் கூறியபடி இயேசு இவ்வுலகிற்கு வந்து எல்லாவற்றையும் நிறைவேற்றினார்.

மேசியா இவ்வுலகிற்கு வந்து ஞானஸ்நானத்தினால் செயல்படுவார் என தீர்க்கதரிசனம் கூறினான். ஏசாயா 52:13 இல் இப்படி தீர்க்கதரிசனம் கூறினார். *"இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார், அவர் உயர்த்தப்பட மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார்."* இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு மனித மாமிசத்தினால் வந்ததினாலும், தன் ஞானஸ்நானத்தினால் உலகின் எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொண்டதாலும், அவரால் தன் உயிரை சிலுவையில் கொடுக்க முடிந்தது. இதன் மூலமாக அனைத்து மனிதர்களின் பாவங்களுக்காகவும் தீர்க்கப்பட்டார். ஏசாயா தீர்க்கதரிசனம் கூறியதற்கினங்க, அனைத்தும் ஞானத்துடன் எதிர்கொள்ளப்பட்டது. இயேசு கிறிஸ்துவினால், மனித குலத்தின் அனைத்துப் பாவங்களும் மறைந்து போயிற்று, ஞானத்துடனே எதிர்கொள்ளப்பட்டது, அவருடைய பெயர் உயர்வடைந்ததுடன் மகத்துவமும் அடைந்தது, இவற்றையெல்லாம் ஏசாயா தீர்க்கதரிசனமாக கூறியிருந்தான். கிறிஸ்துவைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசனம் கூறியது நனவாகியது.

ஆயினும், நம் தேவன் இப்பூமிக்கு வந்த போது, இஸ்ரவேல் மக்கள் அவரை சரியாக தெரிந்து கொள்ளவில்லை. நம் தேவன் இப்பூமிக்கு வந்து இஸ்ரவேலரின் பாவங்கள் உட்பட உலகின் எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொண்டு, சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து மீண்டும் உயிரோடெழுந்த

போதிலும், இஸ்ரவேல் மக்கள் மேசியாவின் ஞானஸ்நானத்தையோ அவரின் இரத்தத்தையோ விசுவாசிக்கவில்லை. இந்த மேசியா ஏற்கனவே அவர்களின் நாட்டில் பிறந்து விட்டதையும், அவருடைய ஞானஸ்நானத்தினாலும் சிலுவையினாலும், இஸ்ரவேலர்களின் பாவத்தை மட்டுமல்லாது முழு மனிதகுலத்தின் பாவங்களையும் அவர் அழித்தார் என்பதை இஸ்ரவேலர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த இயேசு கிறிஸ்துவே தேவகுமாரான் என்பதையும், இஸ்ரவேல் மக்களின் மேசியாவும் இவரே என்று அவர்கள் உணரவில்லை. அவர்கள் இத்தனை வருடங்களாக காத்து கொண்டிருக்கும் மேசியா இயேசுவே என்பதை அவர்கள் இப்போது சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

உலகின் பாவங்களை மறையச் செய்யவே இயேசு பாடுகளை அனுபவித்தார்

இயேசு இவ்வுலகிற்கு வந்த போது, வார்த்தைகளால் விவரிக்க முடியாதபடியான பெரும்பாடுகளை அனுபவித்தார். ஏசாயா 53 இல் காட்டப்பட்டவாறு மேசியா துக்கமுள்ள மனிதராயிருந்தார். நம்முடைய அநேக பாவங்களை தன் மீது ஏற்றுக்கொண்ட அவர், பெரிதும் பாதிக்கப்பட்டார். நம்முடைய முகங்களை அவரிடமிருந்து மறைக்கும் அளவிற்கு நாம் மறைந்தோம் என்று வேதாகமம் கூறுகிறது.

ஆனால் இயேசுவை மேசியா என சிலர் ஏற்றுக் கொண்டனர். அவருடைய காலத்தின் மக்களால் அவர் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தமையால், இயேசு கிறிஸ்துவாகிய மேசியா தமது இரட்சகர் என ஏற்றுக் கொள்ளவும் விசுவாசிக்கவும் பலர் தவறினர். உலகின் பாவங்களிலிருந்து மனித குலத்தை இரட்சிக்கும் பிதாவின்

செய்கையை நிறைவேற்ற அவரின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து நம் தேவன் இப்பூமிக்கு வந்தார். இச்செயல்களை செய்யும் போது பெரிதும் நசுக்கப்பட்டார். கர்த்தர் தம்முடைய சாயலில் படைத்த மனிதனின் சரீரத்தில் அவர் தாமே உருவாகி இவ்வுலகிற்கு வந்தது மட்டும் போதாதற்கு, அவரை அடித்து, துன்புறுத்தி, நொருக்கி நசுக்கினர். இதனால் நாம் அவரிடமிருந்து நம் முகத்தை திரும்பிக் கொண்டோம், என வேதாகமம் நம்மிடம் கூறுகிறது. அதனைத் தாங்குவது நமக்கு மிகவும் கடினமாயிருந்தது. அவர் இப்பூமியிலிருக்கும் போது, அவரை மேசியா என மதிப்பதற்கு பதிலாக, அவரை ஏதோ பைத்தியம் பிடித்தவரைப் போல் பாவித்து நசுக்கினோம். அவருடைய தாழ்மையை வார்த்தைகளால் கூட விவரிக்க முடியாது. ஒருவர் தாழ்த்தப்பட்டு கேவலப்படுத்தப்படும் போது, அதனைக் காணவிரும்பாது நம் முகங்களைத் திருப்புவது போல், இஸ்ரவேலர்கள் தம்முடைய முகங்களை அவரிடமிருந்து திருப்பும் அளவிற்கு மேசியா தன் படைப்புகளுக்கு முன்னதாகவே நசுக்கப்பட்டார்.

இயேசு இப்பூமிக்கு வந்தப்போது, அவரின் உருவம் எப்படி இருந்தது? மேசியா இப்பூமிக்கு வந்தபோது, ஒரு புதிய செடியைப் போலவும், காய்ந்து போன நிலத்தில் உதித்த வேரைப் போலவும் இருந்தார். வேறு வார்த்தைகளில் கூறினார், அவருடைய வெளிப்புற தோற்றத்தை வைத்து அதிகம் கூறுவதற்கில்லை. நம்முடைய தேவனுடன் நம்மை ஒப்பிடும் போது, நம்மை விட சிறிதளவே இந்த மேசியா சிறிது அழகாகவோ கவரும்படியோ இருந்தார். அவருடைய வெளிப்புறத் தோற்றத்தைக் குறித்து பெருமைப் பாராட்டக் கூடாதபடி நம் மேசியா இருந்தார்.

மேசியா இப்பூமிக்கு வந்த போது, நாம் விரும்பக்கூடிய அல்லது மதிக்கக்கூடிய அழகுடைய வெளித்தோற்றம் அவரிடம் இருக்கவில்லை. ஆனால் அவருடைய இந்த

தோற்றத்தையும் பொருட்படுத்தாது, நம்முடைய மேசியாவாக ஞானத்துடனே செயல்பட்டார், பலியிடும் முறைக்கு ஏற்றபடியாக, நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொள்ளும்படியாக, யோவானினால் கைவைக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு தன் இரத்தத்தைச் சிந்தி, மரித்தோரிலிருந்து எழுந்து, நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை இரட்சித்தார். யோவானிடமிருந்து ஞானஸ்நானம் பெற்று நம் எல்லாப் பாவங்களையும் மேசியா தன்மீது ஏற்றுக் கொண்டதால், அவரால் சிலுவையில் அறையப்பட்டு, நமக்காக தன் இரத்தத்தைச் சிந்த முடிந்தது.

ஏசாயா 53:3 கூறுவதைப் போல *"அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்."* மேசியா இப்பூமிக்கு வரவேண்டியதாயிருந்ததாலும், கை வைக்கப்படுதலாலும் அதன்மூலம் உலகின் எல்லாப் பாவங்களையும் மறையச் செய்ய வேண்டியிருந்ததாலும், இஸ்ரவேல் மக்களாலும் ரோமச் சேவகர்களாலும் இப்படியாக நசுக்கப்பட வேண்டியிருந்தது.

மேசியா நசுக்கப்படவேண்டியதைக் குறித்து 700 வருடங்களுக்கு முன்பே தீர்க்கதரிசனம் கூறப்பட்டது

இப்பூமிக்கு மேசியா வரவேண்டும் எனவும், யோவானால் ஞானஸ்நானம் பெறவேண்டும் எனவும், சிலுவையில் தன் இரத்தத்தைச் சிந்துவார் எனவும், மரித்தோரிலிருந்து மீண்டுமாக உயிரோடெழும்புவார்

எனவும், இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 700 ஆண்டுகளுக்கு முன்னரேயே ஏசாயா தீர்க்கதரிசியால் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. மேசியாவின் வருகையைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் கூறியபடி இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வந்தார். அதாவது, மேசியாவாகிய இயேசு கன்னிப் பெண்ணிற்கு மாட்டுதொழுவத்தில் தாழ்மையுடன் பிறந்ததுடன், யோவான் ஸ்நானனிடமிருந்து அவர் பெற்ற தனது ஞானஸ்நானத்தினால் உலகின் பாவங்களை எல்லாம் தன்மீது ஏற்றுக் கொண்டு, சிலுவைக்குச் சென்று, நமது இரட்சிப்பிற்காக தனது இரத்தத்தைச் சிந்தி மரித்து, மூன்று நாட்களில் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார்.

பாவ நிவிர்த்தி நாளிலே பலி காணிக்கையின் தலை மீது கைகள் வைக்கப்பட்டு அதன் இரத்தம் சிந்தப்பட்ட போது, (லேவியராகமம் 16) இப்படியாக ஒரு வருடப் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்பட்டதைப் போல, யோவனிடமிருந்து பெற்ற தனது ஞானஸ்நானத்தின் மூலமாக இயேசு நம் எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்டு சிலுவையிலே, தீர்க்கதரிசன வார்த்தைக்கேற்றபடி மரித்தார். தன்னுடைய ஞானஸ்நானத்தினால் உலகின் எல்லாப் பாவங்களையும் தன்மீது சுமந்த பிறகு, தன்னுடைய ஊழிய வாழ்வின் மூன்றரையாண்டுகளில் இயேசு வேதனைகளைஅனுபவித்தார். யோவான் ஸ்நானனிடம் பெற்ற தனது ஞானஸ்நானத்தின் மூலமாக, உலகின் அனைத்துப் பாவங்களும் அவர் மீது சுமத்தப்பட்டது, இதனால் தான் அவர் இப்படியாக அடிக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு எல்லோராலும் நசுக்கப்பட்டார்.

இயேசுவே மேசியா என்று மட்டும் மக்கள் மறுதலிக்கவில்லை, ஆனால் விளக்க முடியாத அளவிற்கு சில யூதர்களும் ரோமர்களும் இயேசுவை வெறுத்து அவரைத் துன்புறுத்தவும் செய்தனர். எத்தனை முடியுமோ

அத்தனையாய் அவர் வெறுக்கப்பட்டு தள்ளப்பட்டார்.

யோர்தான் நதியில் யோவான் ஸ்நானனிடமிருந்து தான் பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக, மனித குலத்தின் அனைத்து பாவங்களையும் இயேசு ஒரேதரமாக தன்மீது சுமந்து, அதன்பிறகு சிலுவையில் தன் இரத்தத்தைச் சிந்தினார். தன் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக மேசியா யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு சிலுவையில் தன் இரத்தத்தை சிந்தினார். சிலுவையில் அவர் தொங்கும் போது ஆடைகள் அகற்றப்பட்டு, துப்பப்பட்டார். அந்நேரத்தில் இயேசுவை சுற்றியிருந்த மக்கள் அவரை கேலி செய்தனர், "நீர் தேவகுமாரரர் என்பது உண்மையானால், கீழேயிறங்கி உம்மை இரட்சித்துக் கொள்ளும்."

இயேசு தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலமாக தன்னுடைய ஊழிய வாழ்வைத் தொடங்கியபோது, மனித குலத்தினால் கொண்டு வரப்பட்ட பல்வேறு துன்பங்களை அவர் அனுமதித்தார். மனித குலத்திற்காக தனது ஞானஸ்நானத்தின் மூலமாக உலகின் பாவங்களையெல்லாம் இயேசு கிறிஸ்து தனது தோளில் சுமந்த போதிலும், அக்கால மக்கள் இதனைப் பொறுத்துக் கொள்ளாதவர்களால், அவர்களின் மேசியாவாக வந்த இயேசுவை வெறுத்ததுடன், அவரைத் தொடர்ந்து துன்பத்திற்குள்ளாக்கி அவரை வெட்கப்படுத்தினர். இயேசு இப்பூமியிலிருந்த போது புழுவைப் போல நடத்தப்பட்டார் என வேத வசனங்கள் கூறும் படியாக மேசியாவாகிய இயேசு வெறுக்கப்பட்டார்.

பரிசேயர்கள் இயேசுவை எத்தனையாய் வெறுத்தார்கள் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். தம்முடைய தலைமைப் பதவியையும் செல்வாக்கையும் அழித்துப் போடுவதாக தோன்றிய மேசியாவை பரிசேயர்களால் விட்டுவிட முடியவில்லை. ஆகவே அவர்கள் மேசியாவை வெறுத்தனர், அவரிடம் தவறு கண்டுபிடிக்க எப்போதும் முயன்றனர்,

அவர்களுடைய திட்டங்கள் தோற்றுப் போகும் ஒவ்வொரு நேரத்திலும் தனிப்பட்ட முறையில் அவர் மீது எல்லாவித தாக்குதல்களைத் தொடுக்கவும் அவர்கள் தயங்கவில்லை. மேசியாவானவர் எல்லாவித நகைப்புகளுக்கும் உள்ளானார். அதில் வெறுப்பும் தீமையும் கலந்த புறந்தள்ளுதல் நிறைந்திருந்தது. மேசியா எப்படியாக நொறுக்கப்படுவார் என ஏசாயா இப்படியாக தீர்க்கதரிசனம் கூறியிருந்தான். இவ்வுலகிலே இயேசுவிற்கு எந்த வகையான வரவேற்புக்கிடைக்குமென மேசியா வருவதற்கு 700 வருடங்களுக்கு முன்னதாக ஏசாயா தீர்க்கதரிசி கூறிய விளக்கமான தீர்க்கதரிசனத்தின் மூலம் இதனை நாம் உறுதிப்படுத்தலாம்.

நீரினாலும் இரத்தத்தினாலும் வந்த இயேசு கிறிஸ்துவை மக்கள் விசுவாசித்தார்களா?

ஆயினும் இத்தனை எதிர்ப்புகளையும் மீறி, மேசியாவாகிய இயேசு தனது செயல்களை நிறைவு செய்தார். இந்த மேசியா இயேசு கிறிஸ்து என்பதை இஸ்ரவேல் மக்களும் உலகம் முழுவதும் உள்ள அனைவரும் அறிந்து அவரை விசுவாசிக்க வேண்டும். இஸ்ரவேலர்களினதும், உலகம் முழுவதிலுமுள்ள அனைவரினதும் ஞானஸ்நானத்தை மேசியா பெற்றுக் கொண்டு, சிலுவையில் அறையப்பட்டு, இப்படியாக படுமோசமான அளவிற்கு நசுக்கப்பட்டார். இப்படிச் செய்ததின் மூலமாக, அவருடைய ஊழியங்களை விசுவாசிக்கும் அனைவரையும் அவர்களின் எல்லாப் பாவங்களிலிருந்தும் நிறைவாக இரட்சித்து இந்த விசுவாசிகளின் நம்பிக்கையை முற்றிலுமாக அங்கீகரித்துள்ளார். மேசியா தாழ்மையின் சாயலாக இவ்வுலகத்திற்கு வந்தார் எனவிருந்தும், அவர்

ஞானஸ்நானம் பெற்றார் எனவிருந்தும், சிலுவையில் மரித்து, ஒவ்வொருவருடைய பாவங்களையும் அழிப்பதற்கு மரித்தோரிலிருந்து மீண்டும் உயிரோடெழுந்தார் என்பதை விசுவாசிப்போர் மிகவும் குறைவானவர்களே. நாம் வாழ்வதற்கு, இயேசுவே உண்மையான இரட்சகர் எனவும் மேசியா எனவும் நாம் விசுவாசிக்க வேண்டும், ஏனெனில் அவர் இஸ்ரவேலரிற்கு மட்டுமின்றி முழு மனித குலத்திற்கும் மேசியாவாக இருக்கிறார்.

இயேசு தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய சொந்த பாவங்களையெல்லாம் தன்மீது ஏற்றுக் கொண்டு நம்முடைய சொந்த துக்கங்களையும் நம் சொந்த நோய்களையும், நம் சொந்த சாபங்களையும் சுமந்திருந்தாலும், சில மக்கள் "இத்தனை நொறுக்கப்படும் அளவிற்கு அவர் என்ன பாவம் செய்தார்?" என எண்ணலாம். ஆனால் இயேசு, பாவங்களற்ற தேவகுமாரன். நம்முடைய எல்லாப் பாவங்களையும் சுமந்தவராக, நம்முடைய இடத்திலிருந்து மேசியா துன்பமுற்றார், நமது பாவத்தின் எல்லாச் சாபங்களையும் துக்கங்களையும் நசுக்கப்படுதலையும் அவர் சுமந்தார். இயேசு இவ்வுலகிற்கு வந்து 33 வருடங்களாக வாழ்ந்திருந்தபோது அவர் அனுபவித்த நொறுக்கப்படுதலின் மூலமாக, நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் அவர் நம்மை இரட்சித்தார்.

மீண்டுமாக பார்க்கும்போது, ஏசாயா தீர்க்கதரிசியால் கூறப்பட்ட கர்த்தரின் வார்த்தையின் மூலமாக நீர் மற்றும் ஆவியால் வந்த மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவை அக்கால மக்கள் விசுவாசித்தார்களா? இப்போது நாம் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசித்தது யார்? இப்போதும் கூட, தாம் இயேசுவை விசுவாசிப்பதாக கூறிக்கொண்டாலும், அநேக மக்களுக்கு நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மீது ஆர்வமில்லை.

இங்கு இந்த முக்கிய வசனங்களில், தேவகுமாரன்

இப்பூமிக்கு வந்து, ஞானத்துடன் செயல்பட்டு, நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொண்டு, அவற்றிற்காக தீர்க்கப்பட்டு நம்மை இரட்சிப்பார் என்று தீர்க்கதரிசியாகிய ஏசாயா தீர்க்கதரிசனம் கூறுகிறான். ஆனால் அவர் நிறைவேற்றிய சத்தியத்தை அநேகர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும், இப்போதிலிருந்து, அனைத்து நாடுகளிலும் உள்ள எல்லா மக்களும் இயேசு கிறிஸ்துவைத் தமது மேசியாவாக அங்கீகரித்து அவரை உயர்த்துவார்கள் என்று நிச்சயமாயிருக்கிறேன். இஸ்ரவேல் மக்களின் பாவங்களினாலும், உங்களதும் எனதும் பாவங்களினாலும், முழு மனித குலத்தின் பாவங்களினாலும், மேசியாவாகிய இயேசு நொறுக்கப்பட்டார் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்களா? நீங்கள் இதனை விசுவாசிக்க வேண்டுமென ஏசாயா தீர்க்கதரிசி விரும்பியிருக்க வேண்டும், அதனால் தான் மேசியாவின் ஊழியத்தைக் குறித்து இப்படியாக அவன் தீர்க்கதரிசனம் கூறினான்.

வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போல மேசியா காணப்பட்டார்

மேசியாவாகிய இயேசு கிறிஸ்து வருவதைக் குறித்து இப்படித்தான் தீர்க்கதரிசியாகிய ஏசாயா முன்னறிவித்தான், அவர் இப்பூமிக்கு வரும்போது இரங்கத்தக்கத் தோற்றத்தில் இருப்பார் என அவன் கூறினான், *"இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமும் இல்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது" (ஏசாயா 53:2).* என மேசியா இருப்பார் என ஏசாயா கூறினான், மனித

மாமிசத்தினால் இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வந்தபோது, மக்களால் விரும்பப்படக்கூடிய எவ்விதத் தோற்றமும் இல்லாமல் அவர் இருந்தார், "அர்னால்ட் சுவார்ஷநேகரைப்" போன்றோ, "சில்வர்ஸ்டர் ஸ்டாலினைப்" போன்றோ அவர் உயரமான சதைப்பிடிப்புள்ள பயில்வான் அல்ல. நாம் அவரை நோக்கிப்பார்த்தால், அவரைக் குறித்து இரங்குபவர்களாகவும், அவருடனே கூட பச்சாதாபப்படுகிறவர்களாகவும் இருக்கும்படி அவர் சாதாரணமாக இருந்தார். அப்படியிருந்தும், அவருடைய வார்த்தை இருபுறமும் கருக்குள்ள பட்டயமாயிருந்தது.

மேசியாவாகிய இயேசு கிறிஸ்து தோற்றத்தில் மட்டும் ஏழ்மையானவராக இருக்காமல், பொருள்வளத்திலும் ஏழ்மையானவராகவே இருந்தார். அவருடைய மாமிசப்படியான தந்தையாகிய யோசேப்பு வெறும் தச்சன். இப்போதைப் போலவே, ஒரு தச்சனால் பராமரிக்கப்படும் குடும்பமானது, செல்வத்துடன் வாழ முடியாது. மிகவும் கடினமான உழைப்பினால் மட்டுமே சிறிதளவு அவர்களால் வாழமுடியும்.

மேசியா இப்பூமிக்கு வந்தபோது, பாடசாலை எதற்கும் அவர் செல்லவில்லை. இதனைக் காரணம் காட்டி அவரை கவிழ்க்க பரிசேயர்கள் முயன்றனர், ஆனால் அவர்களால் அப்படிச் செய்ய முடியவில்லை. ஏனெனில் அவர்களின் அம்முயற்சிகள் மேசியாவான இயேசு கிறிஸ்து தேவகுமாரர் என்பதையே வெளிப்படுத்தும். கமாலியேலின் பாடசாலையில் இயேசு காலடி எடுத்து வைக்கவில்லை, அது அக்காலத்தின் மிகச்சிறந்த பாடச்சாலையாக இருந்தது. அங்கு சட்டத்தைக் குறித்த மிகப்பெரும் அறிஞனாகிய கமாலியேல், சட்டத்தைப் போதித்து வந்தான். இப்பாடச்சாலையில், சட்டத்தைக் குறித்த மிகப்பெரிய ஆசிரியர்களிடமிருந்து மாணவர்கள் படிக்க முடிந்தது, இவ்வுலகின் அறிவில் மட்டும் பயிற்சி பெறாமல், சட்டத்தைக் குறித்தும் பயிற்சி பெற்றார்கள். இத்தகைய ஒரு

பாடசாலையில் இயேசு பயிற்சி பெறவில்லை. அவர் பாடசாலை ஒன்றில் படித்தார் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அப்படியிருந்தும் கூட, பழைய ஏற்பாட்டின் சட்டத்தைக் குறித்து மேசியா அனைத்தையும் அறிந்தவராயிருந்தார், மேசியாவைக் குறித்து பழைய ஏற்பாடு குறிப்பிட்ட இடங்களில், அதனைக் குறித்து மற்றவர்களை விட அதிக ஞானம் உடையவராயும் பெரிதான விசுவாசமுடையவராயும் இருந்தார். அவர் கூறிய எதுவும் தர்க்கரீதியாக பொருந்தாமலும், கர்த்தரின் சட்டத்திற்கு மாறுபட்டதாகவும் இருக்கவில்லை.

மேசியா ஏன் இப்படி நொறுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, நசுக்கப்படவேண்டும்?

இஸ்ரவேல் மக்களின் உண்மையான மேசியாவாக மாறுவதற்கும் அவர்களை அவர்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சித்து அவர்களை கர்த்தரின் மக்களாக்குவதற்கும், நம் மேசியா இவ்வுலகிற்கு வந்து தனது சித்தத்துடனே தன் எல்லா துன்பங்களையும், வெட்கக்கேடுகளையும், கொடுமைகளையும், கேவலப் பேச்சுகளையும் தழுவினார். இஸ்ரவேல் மக்களுக்காக மேசியா கடந்து சென்ற துன்பங்களும் தண்டனைகளும் மிக அதிக தியாகமும், நொறுக்கப்படுதலுமாகும். நமக்காக மேசியா அனுபவித்த நெருக்கப்படுதல்கள் மிகப்பெரிய துன்பமாக இருந்தபடியால், நாம் நமது முகத்தை அவரிடமிருந்து மறைத்துக் கொண்டிருக்கிறோம். நம் பாவங்களிலிருந்தும் நியாயத்தீர்ப்பிலிருந்தும் நம்மை இரட்சிக்கக் கூடிய மேசியாவாக இயேசுவானவர் இருப்பதினலே, எல்லா வகையான மனிதர்களுக்கும் முன்னதாக விவரிக்க முடியாத அளவு நசுக்கப்பட்டதன் மூலமும் நொறுக்கப்பட்டதன் மூலமும், அவர் நம்மை நம்

பாவங்களிலிருந்து விடுதலையாக்கினார். இயேசு இப்படியாக இவ்வுலகில் நசுக்கப்பட்டார்.

மேசியாவாகிய இயேசுவானவர் இத்தனையாய் நெருக்கப்பட்டு நொறுக்கப்பட்தினாலே, அக்காலத்தின் மக்களால் அவரைக் காணச் சகிக்கவில்லை. இயேசு உங்கள் மற்றும் எனது மேசியாவாகவும், எல்லா மனிதர்களின் மேசியாவாகவும் வந்தமையால், இந்த மேசியாவின் பாத்திரத்திற்கேற்ற செயல்களை நிறைவேற்றவும் முழுமைப் படுத்தவும் அவர் மிகவும் நசுக்கப்பட வேண்டியிருந்தது என்பதையும், அப்படி செய்ததினால் அவர் நம்மை பாவங்களிலிருந்தும் பாவத்தின் தண்டனையிலிருந்தும் விடுவித்தார் என்பதையும் நாம் மறக்கலாகாது.

மேசியா சிலுவையில் அறையப்பட்ட பிறகும் மக்கள் அவரை பரியாசம் செய்வதை நிறுத்தவில்லை: "நீர் ஏன் அங்கேயிருந்து கீழே இறங்கக் கூடாது? நீர் தேவகுமாரரானால், சிலுவையை விட்டு கீழே இறங்கும். நீர் எப்பட் தேவகுமாரராயிருக்க முடியும்? நீர் தேவகுமாரரேயானால், கீழே இறங்கி, உமக்கு அருகில் இருக்கும் கள்ளனைக் காப்பாற்றும்; அது ஏன் உம்மையே காப்பாற்றிக்கொள்ளும்!" அவர்கள் தொடர்ந்து கேலி செய்தனர்: "ஓ, நீர் ஏன் இந்த கற்களை அப்பமாக்கக் கூடாது? நீர் தேவகுமாரனாக இருந்தால் அதனை நிரூபியும்! நாம் நம்பும்படியாக அடையாளங்களைக் காட்டும். அதனைச் செய்யமுடியாவிட்டால் நீர் எத்தகைய மேசியாவோ? எத்தனைப் பரிதாபம்!"

மக்கள் இப்படியாக மேசியாவை அவமானப்படுத்தி, தாழ்மைப்படுத்தி முடிவில்லாது கேலி செய்தனர். அவர்கள் அவரின் ஆடைகளை அகற்றினர், முகத்தில் அறைந்தனர், அவர் மீது துப்பினர். கிறிஸ்து மிகப்பெரிய பரியாசங்களையும், அவமானங்களையும், தாழ்மையையும் சந்தித்தார். இந்த வகைக் கொடுமையை இதற்கு முன்னர்

பார்த்திருக்கவும் முடியாது, இனிமேல் பார்க்கவும் முடியாது. அவருக்கு சிலுவை மரணம் தண்டனையாக வழங்கப்பட்டது, இத் தண்டனை அக்காலத்திய மிகமோசமான குற்றவாளிகளுக்காக நியமிக்கப் பட்டிருந்தது. நமது மேசியா சேவகர்களால் தாக்கப்பட்டார், அருடைய கைகளும், கால்களும் சிலுவையில் ஆணியால் அறையப்பட்டன, மேலும் அவரின் சரீரத்திலிருந்த எல்லா இரத்தமும் சிந்தப்பட்டது.

இத்தகைய தன்டனைகளையும், வேதனையையும், நசுக்கப்படுதலையும் இயேசுவானவர் சுமந்ததினாலே, நமக்காக, அவரால் அவரின் மேசியாவிற்குரிய ஊழியத்தை நிறைவேற்ற முடிந்தது. அவர் சிலுவையில் அறையப்பட்டதினாலே, நம்முடைய எல்லாப் பாவங்களையும், நமது பாவத்திற்கான எல்லாத்தண்டனைகளையும் சுமந்தார். நானும் நீங்களும் அனுபவிக்கவேண்டிய எல்லா நசுக்கப்படுதல்களையும் நம்முடைய இடத்திலிருந்து அவர் அனுபவித்ததுடன், நமக்காக தன்னுடைய சொந்த வாழ்வையே கொடுத்தார். இயேசுவே நமது இரட்சகர் என்று விசுவாசிக்கும் நமக்கு இப்போது இந்த மேசியா இரட்சகராயினார், அவர் தன் விருப்பத்துடனே நமது மேசியாவாகினார். அவர் தன்னுடைய பிதாவின் சித்தப்படி இப்பூமிக்கு வந்து நமது பாவங்களையெல்லாம் தன்மீது ஏற்றுக்கொண்டு, நமக்காக பாவத்தின் தண்டனையை சிலுவையில் சுமந்து சென்று மரித்து, மரித்தோரிலிருந்து மீண்டும் உயிரோடெழும்பினார்-இவற்றையெல்லாம் நம்மை இரட்சிக்கவே செய்தார்!

என் சகோதர சகோதரிகளே, இந்த வித்தியாசமானர்களுக்கு முன்பாக இத்தகைய துன்பங்களையும் தாழ்மையையும் அனுபவிப்பது இயேசுவிற்கு இலகுவாயிருந்தது என நீங்கள் எண்ணுகிறீர்களா? நாம் அவருடைய இடத்திலிருந்து

இத்தகையத் தண்டனைகளை எல்லாம் அனுபவித்து, ஆடைகளில்லாமல் நிர்வாணிகளாய், அவமானப்படுத்தப்பட்டு, துன்புறுத்தப்பட்டு சிலுவையில் அறையப்பட்டிருந்தால், அதுவும் நமது சொந்த குடும்பதாரோ அல்லது கணவர்களுக்கு முன்னதாகவோ அல்லது மனைவிகளுக்கு முன்னதாகவோ, அல்லது நமக்கு அன்பானவர்களுக்கு முன்னதாகவோ மட்டுமில்லாது நமது எதிரிகளுக்கும் முன்னதாக சிலுவையில் அறையப்பட்டிருந்தால் அப்படி அறையப்படுவதற்கு முன்னரேயே நாம் பைத்தியம் பிடித்தவர்களாகியிருப்போம். கிறிஸ்துவானவர் சிலுவையில் அறையப்பட்டதினாலே, அவரின் தாழ்மையை எல்லோராலும் காணமுடிந்தது. ஏதோ மறைவான இடத்தில் இல்லாமல், உயரமான இடத்தில் சிலுவையில் அறைந்ததினால், எல்லோராலும் அவரைச் சுட்டிகாட்டி துப்ப முடிந்தது.

கிறிஸ்துவானவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக இன்னமும் பெரிய துன்பங்களும், துக்கங்களும், கஷ்டங்களும் அவருக்கு வந்தன. இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னதாக எல்லாவித துன்பங்களையும் மக்கள் அவருக்கு கொடுப்பதை நிச்சயப்படுத்தினர். பெருந்திரளான மக்களுக்கு முன்னதாக அவர் எடுத்து வரப்பட்டு அவர்கள் நடுவில் தீர்க்கப்பட்டார், அப்போது அவரை நோக்கித் துப்பினார்கள். அத்துடன் மட்டுமல்லாமல், தலைமை ஆசாரியனின் வேலைக்காரனால் தன் முகத்தில் அடிக்கப் பட்டார். அவரை உமிழ்ந்தார்கள்! மக்கள் அவருடைய முகத்தில் அறைந்தார்கள், அடித்தார்கள், கல்லை எறிந்தார்கள்! மேசியாவாகிய இயேசு வேறு எதற்காகவும் இல்லாது நமக்காகவே இந்த நசுக்கப்படுதலை அனுபவித்தார்!

நமக்காக அவர் நசுக்கப்பட்டார் என வேதவசனங்கள் கூறுகின்றன, அது கூறுகிறது *"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய*

அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" (ஏசாயா 53:5) மேசியா அத்தகைய பாடுகளினூடே சென்றதினால், இஸ்ரவேலர் உட்பட எல்லா மக்களையும் அவர்களின் பாவங்களிலிருந்தும், அப்பாவங்களுக்கான தண்டனையிலிருந்தும் அவரால் அவர்களை விடுவிக்க முடிந்தது. யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக உலகின் பாவங்களையும் அப்பாவங்களுக்கான தண்டனையையும் இந்த மேசியா ஏற்றுக்கொண்டார், தன்னுடைய சொந்த மக்களாலும், ரோம படைவீரர்களாலும், உலகின் பல நாட்டு மக்களாலும் நசுக்கப்பட்டதின் மூலமாக மேசியாவாக தனது ஊழியத்தைச் செய்து முடித்தார்.

மேசியாவானவர் தன்னை எதிர்த்து நின்ற மக்களைக்கூட அவர்களின் எல்லாப் பாவங்களிலும் இருந்து இரட்சிப்பார் என்று கர்த்தர் தீர்க்கதரிசனம் கூறினார். அவர் முழு மனித குலமும் செய்த எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிப்பார் - இப்படியாக அவரைக் குறித்து தீர்க்கதரிசனம் கூறப்பட்டதற்கினங்க, இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு மேசியாவாக வந்து, இத்தகைய அனைத்து நொறுக்கப் படுதல்களுக்கும் ஊடாகச் சென்று தன்னுடைய விலையேறப்பட்ட இரத்தத்தைச் சிந்தியதன் மூலம் நம்முடைய பாவங்களிலிருந்தும் அதற்கான தண்டனைகளிலிருந்தும் உங்களையும் என்னையும் இரட்சித்தார்.

மேசியாவை விசுவாசிப்பதின் மூலமாக பாவத்திலிருந்தும், பாவத்தின் தண்டனைகளிலிருந்தும் இரட்சிப்பானது, பலிக் கிரயத்தைக் கொடுக்காமல் நமக்கு கிட்டவில்லை. இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வந்து எல்லா வித நொறுக்கப்படுதல்களையும் அனுபவித்ததினால் தான், நம்மால் பாவமற்றவர்களாக முடிந்தது, மேலும் நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும் நமது மேசியா

தீர்க்கப்பட்டதினாலேயே, இதனை நமது இருதயங்களில் விசுவாசிப்பதின் மூலமாக, இரட்சிப்பின் வரத்தையும் பாவ மன்னிப்பையும் பெற்று கர்த்தரின் பிள்ளைகள் ஆனோம். நம்முடைய மேசியாவினாலேயே நம்மால் சந்தோஷத்தின் பிள்ளைகளாக முடிந்தது.

இந்த மகிழ்ச்சியை நமக்கு கொடுத்தமைக்காகவும் அவருடைய ஆசீர்வாதங்களினால் நம்மை நிரப்பியதற்காகவும் மேசியாவிற்கு நாம் நன்றியறிதலுடையவர்களாய் இருக்க வேண்டும். மேசியா நமக்கு கொடுத்த இரட்சிப்பானது நமது விசுவாசத்தின் மூலம் மட்டுமே நமக்கு வந்தது, நாம் நமது சொந்தத்திலிருந்து அவருக்கு எதையும் கொடுக்காவிட்டாலும், அவர் தாமே தன்னுடைய விலை மதிப்பில்லாத காணிக்கையை பிதாவாகிய கர்த்தரிடம் கொடுத்தார். இந்த நசுக்கப்படுதலினால் பாடுகள் பட்டதன் மூலம் கர்த்தர் தாமே நம்மை இரட்சித்தார் என விசுவாசித்து அதற்காக அவருக்கு நன்றி கூறவும் வேண்டும்.

இஸ்ரவேலே கேள், திரும்பி இயேசு கிறிஸ்துவை நீ விசுவாசி

இஸ்ரவேல் மக்கள் மனந்திரும்பி மேசியாவாகிய இயேசுவைத் தமது இரட்சகராக விசுவாசிக்க வேண்டும், இந்த நொடிப்பொழுது வரையிலும், தம் மேசியா ஏற்கெனவே வந்து விட்டார் என்பதை இஸ்ரவேலர்கள் இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை. தீர்க்கதரிசியாகிய ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்ததைப் போல, கர்த்தரின் ஊழியராகிய மேசியா இப்பூமிக்கு வருவார், மேலும் மேசியா இவ்வுலகிற்கு வந்து, தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலம் மனித குலத்தின் எல்லாப் பாவங்களையும் தன்மீது ஏற்றுக் கொண்டு சிலுவையில்

மரித்து நம்மை இரட்சித்தார் என்று இந்த தீர்க்கதரிசன வார்த்தைக் கூறியதைப் போல, இரட்சிப்பிற்கான அனைத்து செயல்களையும் இயேசு கிறிஸ்து நிறைவேற்றினார். இஸ்ரவேல் மக்கள் இப்போது திரும்பி இந்த சத்தியத்தை அறிந்து அதனை விசுவாசிக்கவேண்டும். அவர்களுடைய சொந்த மனிதர்களே இயேசுவை சிலுவையிலறைந்த பாவத்தைச் செய்தார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். மேலும் அவர்கள் தம்மைத் தாமே அறிந்து கொள்ள வேண்டும். தாம் தம்முடைய பிறப்பிலிருந்து பாவக்குவியல்களே என்பதை ஏற்றுக் கொண்டு இப்போது இந்த மேசியாவை விசுவாசிப்பதின் மூலமாக, அவர்கள் தம்முடைய பாவங்களிலிருந்தும் பாவத்தின் தண்டனையிலிருந்தும் இரட்சிக்கப்படவேண்டும்.

இப்போது வேறு மேசியா இல்லை. இயேசு கிறிஸ்து ஏற்கெனவே மேசியாவாக வந்ததினால், வேறு மேசியா இல்லை. அங்கு எப்படி இன்னொரு மேசியா இருக்க முடியும்? அங்கு எப்படி இன்னொரு இரட்சகர் இருக்க முடியும்? எதிர்காலத்தில் இன்னும் பல கஷ்டங்களை இஸ்ரவேல் மக்கள் அனுபவிக்கும் போது, ஹாலிவுட் கதாநாயகனான சூப்பர்மேனைப் போன்று, யாராவது ஒருவர் வந்து, அவர்களின் மேசியா ஆவான் என்று இஸ்ரவேலர்கள் நம்பிக்கொண்டிருக்க முடியுமா?

இப்போதிலிருந்தாவது, இயேசு கிறிஸ்துவைத் தமது மேசியாவாக இஸ்ரவேலர்கள் அங்கீகரிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து தம்முடைய உண்மையான மேசியா என அவர்கள் விசுவாசிக்க வேண்டும். 2000 வருடங்களுக்கு முன்பு அவர்களின் மேசியா இப்பூமிக்கு வந்து விட்டார், அவர்களை ஆபிரகாமின் உண்மையான பிள்ளைகளாக்குவதற்காகவும் அவர்களுடைய பாவங்களை எடுத்துக் கொள்வதற்காகவும், அவர்கள் விருத்தசேதனம் பண்ணப்படுவதைப் போல் ஞானஸ்நானம் பெற்று,

சிலுவையில் அறையப்பட்டார், அவர்கள் ஆவிக்குரிய விருத்தசேதனம் பெற வேண்டும் என்பதற்காகவே இதனைச் செய்தார். யோவானிடம் அவர் பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாகவும், சிலுவையைச் சுமந்து நசுக்கப்படுவதற்காக தன் இரத்தத்தைச் சிந்தியதாலும் மரித்தோரிலிருந்து மீண்டும் உயிரோடெழுந்ததாலும் அவர்களின் பாவங்களை எல்லாம் மறையச் செய்த உண்மையான இரட்சகராக இயேசு மாறினார்.

மேசியாவை விசுவாசிப்பதற்காக இஸ்ரவேலர்கள் மனந்திரும்ப வேண்டும். இப்போது இஸ்ரவேல் மக்கள் இயேசு கிறிஸ்துவைத் தமது இரட்சகராக ஏற்றுகொள்வது மட்டுமே நிறைவேறவேண்டிய ஒன்றாய் இருக்கிறது. ஏசாயாவால் தீர்க்கதரிசனம் கூறப்பட்ட மேசியாவானவர் இயேசு கிறிஸ்துவே என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இந்த தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டவர் இயேசுவே அன்றி வேறு யாரும் இல்லை என்பதை அவர்கள் உணர்ந்து அதனை விசுவாசிக்கவேண்டும். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நிறைவேறியது. அவர் அதில் சிறிதளவு விஷயங்களைக் கூட விட்டுவிடவில்லை. முக்கிய வசனங்களில், அவர் அநேக ஜாதிகளின் மேல் தெளிப்பார் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஏசாயா 52:14-15 கூறுகிறது *"மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடினாலே, அவரைக்கண்ட அநேகர் பிரமிப்படைந்தார்கள். அப்படியே, அவர் அநேகம் ஜாதிகள்மேல் தெளிப்பார்; அவர்நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்துகொள்வார்கள்."*

இப்பூமிக்கு வந்ததின் மூலமாக இயேசு கிறிஸ்து

மிகவும் கொடிய பாடுகளைப்பட்டார், இப்பூமியிலுள்ள கொடிய குற்றவாளிகள் மரண தண்டனைப் பெறும் போது அவர்கள் அனுபவித்த வேதனைகளை விட அவருடைய வேதனை அதிகமாயிருந்தது. இவ்வுலகின் கொடிய குற்றவாளிகளுக்கும் மேலாக அதிக வேதனையையும் நசுக்கப்படுதலையும் தன்மீது ஏற்றுக் கொண்டவராய் தன்னைத்தானே அவர் பலியாக்கினார். அவரை விசுவாசிப்பதின் மூலமாக பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும் அவருடைய மக்களை அவர் இரட்சித்தார். இப்படியாகவே அவர் அவர்களை இரட்சித்தார்.

மக்கள் இரட்சிப்பைக் குறித்த ஆச்சரியமான செய்தியை கேள்விப் படுவார்கள், அதனை அவர்கள் இதுவரைக் கேட்டதுமில்லை பார்த்ததுமில்லை. இயேசு கிறிஸ்துவே மேசியா என்பதை இன்னமும் கேள்விப்படாத அனைவரும் அதனைக் கேள்விப்பட்டு அதனை விசுவாசிப்பார்கள்.

இயேசுவே மேசியா, அவர் ஒரு முறை வந்தார் மேலும் மீண்டும் அவர் வருகிறார்

இன்று நாம் இறுதி காலத்தை நோக்கி சென்றுக் கொண்டிருக்கிறோம். அது மரணம் மற்றும் உபத்திரவத்தின் காலமாக இருக்க போகிறது, ஆயினும், மேசியாவை விசுவாசிப்பவர்களுக்கு மரணத்தைக்குறித்த பயமில்லை. அதற்கு மாறாக, அவர்களுடைய மரணத்திற்குப் பின்னால் வரும் உயிர்தெழுதலுக்காகவும், பரலோகத்தின் சந்தோஷத்திற்காகவும் காத்திருக்கின்றனர். உலகின் மீது இருள் கவிழ்கிறது என்பதன் பொருள் நீதிமான்களாகிய நாமும் இருண்டுபோய் விடுவோம் என்பதல்ல, இந்த நற்செய்தி நன்கு பரவிய பிறகு, மேசியா நிச்சயமாக திரும்புவார்.

நம்முடைய மேசியாவாகிய இயேசு கிறிஸ்து, கர்த்தரின்

ஆட்டுகுட்டியாகவும், பலி காணிக்கையாகவும் இவ்வுலகிற்கு வந்தார். மேலும் தன்னுடைய சரீரமானது யோவானால் ஞானஸ்நானம் பெறும்படி செய்து, அதனை சிலுவைக்கு கொடுத்தார். கத்தரிப்பவர்களுக்கு முன்னால் நிற்கும் செம்மறியாட்டைப் போல, மேசியாவாகிய இயேசு அமைதியாக நம் பாவங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நியாயத்தீர்ப்பிற்காக சிலுவையில் பெரிதான துன்பங்களையடைந்து, மூன்று நாட்களிலே மரித்தோரிலிருந்து மீண்டும் உயிரோடெழுந்து, விசுவாசிக்கும் அனைவருக்கும் நிறைவான இரட்சகராயினார்.

அக்காலத்தில் இயேசு கிறிஸ்துவே மேசியா என்று அறிந்தவர்கள் மிகவும் சிலரே. 2000 வருடங்களுக்கு முன்னால் இவ்வுலகில் அமைதியாக பிறந்து, தன் ஞானஸ்நானத்திற்குப் பிறகு மூன்று வருடங்களுக்கு ராஜ்யத்தைக் குறித்த நற்செய்தியை அறிவித்து, சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து மீண்டும் உயிரோடெழுந்தார் என்று வெகு சிலருக்கே இயேசு கிறிஸ்து மேசியாவாகியது தெரியும். கர்த்தரை நோக்கிப் பார்த்து அவரை விசுவாசித்தவர்கள், நம் தேவன் அமைதியாக தன் கடமைகளை செய்து முடித்த மேசியா என்று அறிவித்தனர்.

மேசியா இப்பூமிக்கு வந்து நொறுக்கப்பட்டதின் மூலமாக நம் பாவங்களிலிருந்து இரட்சித்தார் என அக்கர்த்தரின் ஊழியர்கள் உலகம் முழுவதும் பரப்பினர். அச்சிடும் தொழில் நுட்பத்தை வளரச்செய்தும், உலகின் வரலாற்றினை மாற்றியமைத்தும், வல்லமையானதும் செல்வம் நிறைந்ததுமான நாடுகள் இந்த நற்செய்தியைப் பரப்புமாறு செய்து, கர்த்தர் தாமே நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை உலகம் முழுவதும் பரப்பி வருகிறார்.

இயேசுவே மேசியா. இயேசுவே மேசியா. இயேசுவே மேசியா! இயேசுவை உங்கள் மேசியாவாக விசுவாசித்தால்

நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். இயேசுவே தேவகுமாரர். இம்முழு பிரபஞ்சத்தையும் படைத்தவர் இயேசுவே. நம்முடைய இரட்சகராகிய மேசியா அவரே! இயேசுவே மேசியா என்பதையும், அவருடைய ஞானஸ்நானத்தைக் குறித்தும், அவருடைய சிலுவை மரணத்தைக் குறித்தும் உயிர்தெழுதலைக் குறித்தும், கர்த்தரின் ஊழியர்கள் தொடர்ந்து பிரசங்கித்து வருகின்றனர்.

2,000 வருடங்களுக்கு முன்னதாக, இயேசு என்ற இளைஞர் இவ்வுலகிற்கு வந்தார் என்பதையும், அவர் 30 வயதினராகும் போது, யோவானால் ஞானஸ்நானம் பெற்று மனிதகுலத்தின் பாவங்களையெல்லாம் தன்மீது ஏற்றுக்கொண்டார் என்பதையும், சில இஸ்ரவேலின் இளைஞர்கள் அறிந்தனர். அச்சமயத்தில் இயேசுவின் சொந்த சீடர்களுக்கு மட்டுமே, அவர் மேசியா என்பது தெரியும். உண்மையாகவே கர்த்தருக்கு பயந்த வெகு சில மக்களுக்கே இந்த ஞானமானது பகிர்ந்து கொள்ளப்பட்டது - மற்றவர்களுக்கு இச்சத்தியம் மறைக்கப்பட்டிருந்தது. மேசியா உலகின் பாவங்களையெல்லாம் சிலுவைக்கு எடுத்துச் சென்றார் என்பதையும் அவர் அதில் மரித்தார் என்பதையும், மரித்தோரிலிருந்து அவர் மீண்டும் உயிரோடெழுந்தார் என்பதையும், இஸ்ரவேல் நாட்டின் 500 இற்கும் குறைவான பரிசுத்தவான்களே (1 கொரிந்தியர் 15:6) அறிவர். மற்றவர்களுக்கு இதைப் பற்றி எதுவும் தெரியாது.

இயேசு கிறிஸ்து மரித்து மீண்டும் உயிரோடு எழுந்த ஐம்பதாவது நாளில், பரிசுத்த ஆவியானவர் அவரின் சீடர்கள் மேல் அறையிலிருந்து ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களின் மீது இறங்கினார். இதன்மூலமாக அவர்கள் அன்னிய பாஷைகளில் பேசி இயேசு கிறிஸ்துவே மேசியா என்பதை அறிவிக்கத் தொடங்கினர், அதன் பிறகு அவருடைய சீடர்கள் மரணபயம் ஏதுமின்றி "இயேசுவே மேசியா.

மேசியாவே நம் இரட்சகர், உயிரோடெழும்பிய இயேசு நம் மேசியா" என்று துணிச்சலுடன் அறிவிக்கலாயினர். இப்போது அநேக மக்கள் விசுவாசிக்கத் தொடங்கினர்.

மேசியாவாகிய இயேசுவின் மூலமாக, நம்முடைய எல்லாப் பாவங்களில் இருந்தும், அப்பாவங்களுக்கான தண்டனையிலிருந்தும் கர்த்தர் உங்களையும் என்னையும் இரட்சித்தார். நம்மை இவ்வாறாக நமது பாவங்களிலிருந்தும் நியாயத்தீர்ப்பிலிருந்தும் இரட்சிக்க இத்தனைப் பெரிதான நசுக்கப்படும் பாடுகளை அவர் அனுபவித்ததினால், நாம் முற்றிலுமாக அவரை விசுவாசிக்க வேண்டும்; விசுவாசிக்காதவர்கள் கூட மனம் வருந்தி, முற்றிலுமாக திரும்பி விசுவாசிப்பதுடன், இந்த சத்தியத்தை விசுவாசத்துடனே பரப்பவேண்டும்.

இப்போது கூறப்போனால், இஸ்ரவேல் மக்கள் மிகவும் தீவிரமான ஒரு நிலையில் பயந்தவர்களாய் உள்ளனர். ஆகவே கர்த்தர் அவர்களுக்கு உண்மையாகவே பேசிய ஆசரிப்புக்கூடார வார்த்தையை அவர்கள் கேட்கவேண்டும். நாமும் கூட இப்போது முடிவு காலங்களுக்குள் பிரவேசித்துக் கொண்டிருக்கிறோம். ஆசரிப்புக்கூடாரத்தில் காணப்பட்ட நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியானது நிச்சயமாக இஸ்ரவேல் மக்களைச் சென்றடையும். கர்த்தர் அவர்களுக்கு கூறிய மேசியாவானவர் இயேசு கிறிஸ்துவே என்று நிச்சயமாக அவர்கள் விசுவாசிப்பர்.

பலியிடும் முறையைக் குறித்து இஸ்ரவேல் மக்களிடம் கர்த்தர் ஏற்கெனவே பேசியுள்ளார். அதனை அவர்கள் விசுவாசித்தும் உள்ளனர், குறிப்பாக, இந்த ஆசரிப்புக் கூடாரத்தின் பலியிடும் முறைக்கு ஏற்றபடி காணிக்கைகளை செலுத்த இன்னமும் அவர்கள் விருப்பமுள்ளவர்களாய் உள்ளனர். வனாந்தரத்தில் வாழும் அடிப்படைவாதிகள் இஸ்ரவேலர்களின் நடுவில் இன்னமும் இருக்கவே செய்கிறார்கள். இப்போதும் கூட, இத்தகைய வனாந்தரத்தில் வாழுகிறார்கள். வேறு வார்த்தைகளில்

கூறினால், முன்பு அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் காணிக்கை அளித்ததைப் போல் அதே விதமான காணிக்கைகளை இன்னமும் கொடுக்கின்றனர். அவர்கள் ஆரோனின் சந்ததியினராவர். தம்முடைய குடும்பங்களில் பாரம்பரியத்தைக் காப்பாற்றுவதற்காக நகரங்களில் வாழுவதற்கு பதிலாக வனாந்தரத்தில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இஸ்ரவேலராயிருந்தாலும், அவர்கள் தனித்து வாழும் கோத்திரமாக, சாதாரண மனிதர்களிடமிருந்து பிரிந்து வாழுபவர்களாகவே உள்ளனர். மேசியா ஏற்கெனவே நம்மிடம் வந்து விட்டார் என்பதையும் நமது விசுவாசித்திற்கேற்றபடி அவர் நம்மை இரட்சித்தார் என்ற ஆசரிப்புக்கூடார வார்த்தைகளையும் இம்மக்களுக்கும் கூட நாம் பிரசங்கிக்க வேண்டும்.

இயேசு இப்பூமிக்கு வந்து, இப்படியாக நசுக்கப்பட்டு, நம்முடைய இடத்திலிருந்து நியாயந்தீர்க்கப்பட்டதற்காக அவருக்கு நாம் நன்றி கூறவேண்டும். நமது இரட்சகராக, நம்முடைய பாவங்களில் இருந்தும் பாவத்தின் தண்டனையிலிருந்தும், உங்களையும் என்னையும் காப்பாற்றவே அவர் இவற்றைச் செய்தார்.

"நேசம் மரணத்தைப்போல் வலிது; நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது"

ஒரு தவறான அஞ்சலாக வந்ததைப் போல், நாம் அனைவரும் நம்முடைய அனைத்துப் பாவங்களிலிருந்தும், பாவத்திற்கான நியாயத்தீர்ப்பிலிருந்தும் இரட்சிக்கப்பட்டது எதேச்சையானது அல்ல. நமக்கு சிலவேளைகளில், சங்கிலித் தொடராக, இந்தக் கடிதத்தை 20 பேருக்கு அறிவிக்க வேண்டுமெனவும், அப்படிச் செய்யாவிட்டால் நாம் அழிந்து போவோம் என்றும் கூறும் கடிதம் நம்

இரட்சிப்பு அல்ல. நம்முடைய இருதயங்களில் ஆசையை வயிற்றுக்கு நிரப்ப ஒரு டெலிபோன் போதுமென்கும், இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம் எனக் கூறும் பிஸ்ஸா விளம்பரங்களைப் போன்று, நமது பாவங்களில் இருந்து இரட்சிப்பு வருவதில்லை.

கர்த்தர் தன்னுடைய குமாரரை அனுப்பி, நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர்மீது சுமத்தி, அவரைப் பாடுகளை அனுபவிக்கச் செய்து, நம்முடைய இந்த எல்லாப் பாவங்களுக்குமாக அவர் நொறுக்கப்பட்டதின் விளைவாக நம் இரட்சிப்பு வந்தது. இதனால் தான் நீங்களும் நானும் அவரை முழு இருதயத்துடனே விசுவாசித்து அவருக்கு நன்றியும் கூறவேண்டும். நம்முடைய இரட்சிப்பு எப்படி வந்தது என்பதை நன்கு அறிந்த பிறகு, கிழிந்து போன காலணிகளை போல அதனை எப்படி வீசி விட முடியும், உடைந்து போன தேவையில்லாத கருவியை போல் எப்படி எறிந்து விட முடியும், அல்லது அது வேறு யாருக்கோ சொந்தமானது என எப்படி நாம் அலட்சியமாக இருக்க முடியும்?

கர்த்தரின் ஆலயத்திற்கு சென்றும் கூட, உங்களில் யாராவது பாவ மன்னிப்பை இன்னமும் பெறாமல் இருக்கிறீர்களா? நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிக்காதவர்கள் இன்னமும் இங்கே இருக்கிறார்களா? இங்கு அத்தகைய மக்கள் இருந்தால், காலம் மேலும் செல்லுவதற்கு முன்னதாக அவர்கள் மனந்திரும்பி மேசியாவை விசுவாசிக்க வேண்டும். நீங்கள் இழந்து போனவர்களாகவும், எப்பாதையின் வழியே செல்லுவது என்பதையும் அறியாதவர்களாய் இருந்தால், உங்கள் முழு இருதயத்துடனும் சத்திய வார்த்தையை விசுவாசியுங்கள், இதனை விசுவாசிக்கிறவர்கள் தேவகுமாரரின் அன்பை நிராகரிக்கிறார்கள், அவர்களுக்காகவே இப்பாடுகளினூடே சென்று அவர்களை இரட்சிக்க இந்த அன்பே காரணமாயிருந்தது.

அவருடைய அன்பை குறைவாக மதிப்பிட்டு அதனைத் தள்ளி விடுபவர்கள் சாபங்களினால் தொடரப்படுவர். வேத வசனம் நம்மிடம் கூறுகிறது, *"நேசம் மரணத்தைப்போல் வலிது; நேசவைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது" (உன்னதப்பாட்டு 8:6).* கர்த்தருடைய அன்பு வல்லமையுடையதாகவும் மகத்துவமானதாகவும் இருக்கிறது, ஆகவே அதனை நிராகரிக்கும் மக்கள் இறுதியில் கொடிய தண்டனையை அடைவர். வேறு வார்த்தைகளில் கூறினால், ஒருவன் பாவத்துடன் இருக்கும்போதே மரித்தானானால், அவன்/அவள் நரகத்தில் இரக்கமில்லாத வேதனையை அடைவான் என்று இது நமக்கு கூறுகிறது. வெறுப்பும் பாதாளத்தைப் போன்று கொடியது. இந்த அளவு மேசியா உங்களை நேசித்திருக்கும் போது, உங்களை இரட்சிப்பதற்காகவே அவர் ஞானஸ்நானம் பெற்று, தன்னுடைய சொந்த இரத்தத்தைச் சிந்தி, எல்லாவித நொறுக்குதல்களினாலும் பாடு பட்டிருக்கும் போது, இந்த அன்பை நீங்கள் விசுவாசிக்காமல் அதனைத் தள்ளிவிட்டால், நீங்கள் இந்த கொடிய வேதனையை நிச்சயமாக அனுபவிப்பீர்கள். அது நரகத்தை தவிர வேறில்லை.

கர்த்தர் இப்படியாக கூறினார், *"அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறபடியே" (எபிரெயர் 9:27).* நாம் மரிக்கும் போது, நம் மாமிசம் அழிந்து போகும் ஆனால் கர்த்தருக்கு முன்னதாக அது நமது முடிவல்ல. கர்த்தரின் அன்பை நிராகரிப்பவர்களை கொடூரமாக விழப்பண்ணுவதற்காக, அவர்கள் மரித்து போகாமல் நித்திய காலமும் வாழும் படி அவர் செய்ததுடன், இரக்கமில்லா வேதனைகளை அவர் அவர்களுக்கு அளிப்பார். வேறு வார்த்தைகளில் கூறினால், அவர்களை அவர் நித்தியமாக எரியும் நெருப்பில் போட்டு அதன் வேதனைகளை, தொடர்ந்து இடைவிடாது, என்றென்றும்

அளிப்பார். இந்த கொடிய பாடுகள் கர்த்தரின் கொடிய வெறுப்பைத் தவிர வேறில்லை. இத்தகைய ஒரு காரியத்தைச் செய்ய கர்த்தரால் கூடாது என நீங்கள் எண்ணுகிறீர்களா? கர்த்தருக்கு சாத்தியமில்லாதது எதுவுமில்லை என்பதை மறந்து போகாதீர்கள்!

நம்மீதான மிகப்பெரும் கர்த்தரின் அன்பானது, நமக்காக அவரை பாடுகளை அனுபவிக்கச் செய்து, நம்முடைய எல்லா சாபங்களிலிருந்தும், நம் எல்லாப் பாவங்களிலிருந்தும், நம் எல்லாத் தண்டனைகளிலிருந்தும் நம்மை இரட்சித்தது, மேசியாவின் இந்த அன்பை உங்களின் எந்தப் பிரச்சனையால் கரைக்க முடியும். மேசியாவின் அன்பை விட பெரிதானது ஒன்றுமேயில்லை. இந்த மேசியாவின் மீது விசுவாசமில்லை எனில், கர்த்தரின் அன்பு நம்முடையதாகாது. இந்த அன்பு நமக்கு இந்த கர்த்தரால் மட்டுமே கொடுக்கப்பட்டது, நம்முடைய மேசியாவாகியவர் அவரே, அவரை நம்மிடம் அனுப்பியது அவருடைய பிதாவேயாகும். மகத்துவமுள்ள திரியேகக் கர்த்தர் இப்படியாக நம்மை அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களிலிருந்தும், தண்டனைகளிலிருந்தும் இப்படியாக நம்மை இரட்சித்தார். இதனால் தான் நாம் மேசியாவை விசுவாசிக்க வேண்டும், நாம் அவருக்கு நன்றி கூற வேண்டும், நாம் அவருக்கு மகிமைச் செலுத்த வேண்டும், என்பதுடன் இதனால் தான் நாம் இந்த மேசியாவின் மீதுள்ள நமது விசுவாசத்தில் திருப்தியடைய வேண்டும்.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைக் கொடுத்த மேசியாவிற்கு நாம் எத்தனை நன்றி உள்ளவர்களாயிருக்கவேண்டும்? இந்த அன்பு எத்தனை பெறுமதியானதென்பதும், இவ்வுலகத்திலுள்ள எதுவும் இதற்கு ஈடாகாது என்பதும், ஒருவருக்கு தெரிந்திருந்தால் அவன்/அவள் நிச்சயமாகவும் அறிவீனமானவராகவும் முட்டாள் மனிதராகவும் இருக்க மாட்டார். நமக்காக நம் தேவன் எத்தகைய கொடிய பாடுகளையும்

துன்பங்களையும் கடந்து சென்றார்? நாம் மிகுந்த குறைப்பாடுடையவர்களாயிருந்தாலும் அவருடைய அன்பிற்கு நாம் நன்றியறிதல் உடையவர்களாய் இருப்பதினாலே, அதனைக் குறித்த அறிவில்லாதிருப்பவர்களுக்கு இந்த அன்பைப் பரப்ப நம்மிடம் எஞ்சியுள்ள நம் பலத்தை அர்ப்பணிக்கிறோம்.

கர்த்தருடைய இந்த செயல்களைச் செய்வதற்கு, நாமும் கூட கஷ்டங்களையும் பாடுகளையும் சந்திக்க வேண்டும். நாம் மட்டும் செழித்திருக்க வேண்டுமென சிந்திக்கலாகாது. அவருடைய தியாகம் நிறைந்த அன்பைப் பெற்று அதனைத் தரித்தவர்களாய் நாம் இரட்சிக்கப்பட்டிருந்தால், இந்த அன்பை மற்றவர்களுடனே கூட நாம் பகிர்ந்து கொள்ளவும் வேண்டும். மாமிசத்தின் அன்பினால் அல்லாமல், அவருடைய உண்மையான அன்பினால், நம் பாவங்களை அழிப்பதற்கு இயேசு கிறிஸ்து எல்லாப் பாடுகளையும் அனுபவித்தது போல, நாமும் அவருடைய செயல்களைச் செய்ய வேண்டும். கஷ்டங்களையும், நசுக்கப்படுதலையும், வெறுப்பையும், பாடுகளையும், தள்ளி விடப்படுதலையும் நாம் விருப்பத்துடன் தழுவ வேண்டும். மற்றவர்கள் தம் பாவ மன்னிப்பை இதனால் பெறுவார்கள் என்றால் அவற்றை நாம் அனுபவிக்க வேண்டும். அன்பின் பெயரினால் இத்தகைய வெறுப்பின் பாடுகளை நாம் அனுபவிக்கவேண்டும். நீங்களும் நானும் உண்மையாகவே பாவ மன்னிப்பைப் பெற்றிருந்தால், அத்தகைய அன்பு நம்மிருதயங்களில் காணப்படும் என்பதை விசுவாசிக்கிறேன்.

தாம் முன்பு எப்படியிருந்தோம் என்பதை நன்றாக அறிந்த மறுபடியும் பிறந்தவர்களுக்கு, இயேசுவின் இரட்சிப்பின் அன்பைக் கொடுப்பது எத்தனைப் பெரிதானதும் உறுதியானதும் என்பது தெரியும் *"மரம் நல்லதென்றால், அதின் கனியும் நல்லதென்று சொல்லுங்கள்; மரம் கெட்டதென்றால், அதின் கனியும்*

கெட்டதென்று சொல்லுங்கள்; மரமானது அதின் கனியினால் அறியப்படும்" (மத்தேயு 12:33), என்பதிற்கினங்க, இரட்சிப்பின் கனியைச் சுமப்பவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாவர். நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன், முற்றிலுமாக உங்கள் பாவங்களில் ஆழ்ந்திருந்தீர்கள், அது எந்த அளவு என்றால் நீங்கள் நரகத்தில் எறியப்பட்டால் கூட, அதனைக் குறித்து முணுமுணுக்கமாட்டீர்கள். கர்த்தர் இப்பூமிக்கு மனித சரீரத்தில் வந்து, உங்களுக்காக நசுக்கப்பட்டதையும், உங்களின் சார்பாக அவர் பாடுகளை அனுபவித்ததின் மூலமாக உங்களை உங்கள் பாவங்களிலிருந்தும் நியாயதீர்ப்பிலிருந்தும் இரட்சித்ததையும் விசுவாசித்தீர்கள், இப்படி விசுவாசித்தினாலே நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள். இந்த அன்பை நீங்கள் பெற்றிருந்தால், மற்றவர்களுக்காக வாழக்கூடிய ஆசையுடைய இருதயங்களை நீங்களும் நானும் நிச்சயமாய் பெற்றிருப்போம்.

இத்தகைய இருதயம் ஒருவருக்கு இல்லையென்றால், அவன்/அவள் இன்னமும் பாவ மன்னிப்பை பெறவில்லை. சரியாக கூறவேண்டுமானால், பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொண்டதைப் போல இந்நபர் நாடகம் ஆடிக் கொண்டிருக்கிறார்.

கிறிஸ்து நம்மை நேசித்ததினாலே, நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நியாயத்தீர்ப்பிலிருந்தும் இரட்சிப்பதற்காக கிறிஸ்து எல்லாப் பாவங்களையும் அனுபவித்ததைப் போல இந்த அன்பை விசுவாசித்து நாம் இரட்சிக்கப்பட்டிருந்தால் இத்தகைய அன்பு நம் சொந்த இருதயங்களிலும் கூட காணப்படும். ஏன்? கிறிஸ்து இப்போது நம்மிருதயங்களில் வாழ்வதே இதற்கான காரணம். நமக்காக அவர் நொறுக்கப்பட்டதைப் போலவும், நம்மை நேசித்ததைப் போலவும், மற்றவர்களுக்காக வாழும் ஆசையுடையவர்களாய், அவர்களுக்காக கஷ்டங்களைச் சந்திக்க வேண்டும். பாவ மன்னிப்பு பெற்றவர்களாய் நாம்

இருப்பதினாலே நம் இருதயங்களில் எப்பாவங்களும் விட்டுவிடப் படவில்லை, நம்முடைய இருதயங்களெல்லாம் மாறுதலடைந்து இயேசு கிறிஸ்துவின் இருதயத்தைப் போன்றதாயின.

இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வந்தமைக்காகவும், ஞானஸ்நானம் பெற்று சிலுவையிலே தன்னுடைய இரத்தத்தைச் சிந்தியமைக்காகவும், நமக்காக பாடுகளைத் தழுவியமைக்காகவும், இப்படிச் செய்ததின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை விடுதலையாக்கி நம் மேசியாவாகியமைக்காகவும் அவருக்கு நான் நன்றி கூறுகிறேன். ✉

பிரசங்கம்

3

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.





ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

வாழுகின்ற கர்த்தராகிய யாவே

< யாத்திராகமம் 34:1-8 >

"கர்த்தர் மோசேயை நோக்கி: முந்தின கற்பலகைக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக்கொள்; நீ உடைத்துப்போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவேன். விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, சீனாய் மலையில் ஏறி, அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமுகத்தில் வந்து நில். உன்னோடே ஒருவனும் அங்கே வரக் கூடாது; மலையிலெங்கும் ஒருவனும் காணப்படவுங் கூடாது; இந்த மலையின் சமீபத்தில் ஆடுமாடு மேயவுங் கூடாது என்றார். அப்பொழுது மோசே முந்தின கற்பலகைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்து, அதிகாலமே எழுந்திருந்து, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே அவ்விரண்டு கற்பலகைகளையும் தன் கையிலே எடுத்துக்கொண்டு, சீனாய்மலையில் ஏறினான். கர்த்தர் ஒரு மேகத்தில் இறங்கி, அங்கே அவன் அருகே நின்று, கர்த்தருடைய நாமத்தைக் கூறினார். கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய

பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார். மோசே தீவிரமாகத் தரைமட்டும் குனிந்து பணிந்துகொண்டான்."

நாம் விசுவாசிக்கும் இந்த கர்த்தர் உண்மையில் யார் என்பதை கண்டுபிடிக்க வேண்டும்

யாத்திராகமம் 3:13-16 ஐப் பார்ப்பதன் மூலம் நாம் தொடங்குவோம்: *"அப்பொழுது மோசே தேவனை நோக்கி: நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப்பினார் என்று அவர்களுக்குச் சொல்லும்போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன் என்றான். அதற்குத் தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார். மேலும், தேவன் மோசேயை நோக்கி: ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்வாயாக; என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம். நீ போய், இஸ்ரவேலின் மூப்பரைக் கூட்டி, அவர்களிடத்தில்: ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் எனக்குத் தரிசனமாகி, உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, எகிப்தில் உங்களுக்குச்*

செய்யப்பட்டதைக் கண்டேன் என்றும்."

கர்த்தராகிய யாவே என்பது யார்?

எபிரெய மொழியில் தேவனுடைய பெயர் யாவே அல்லது யவ் என்றும் வழக்கமாக யேகோவா என்றும் அழைக்கப்படுகிறது. மேலும் யேகோவா என்றால் அவராலேயே இருப்பவர் என்று பொருள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டும் என்றால் கர்த்தர் ஒரு படைப்பு அல்ல. ஆனால் அவராகவே அவர் இருக்கிறார், முழு உலகத்தையும் அதில் உள்ள எல்லாவற்றையும் உருவாக்கிய படைப்பாளர் அவர்.

நாம் 6:2-7 ஐப் பார்போம்: *"மேலும், தேவன் மோசேயை நோக்கி: நான் யேகோவா, சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை. அவர்கள் பரதேசிகளாய்த் தங்கின தேசமாகிய கானான் தேசத்தை அவர்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களோடே என் உடன்படிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறேன். எகிப்தியர் அடிமைகொள்ளுகிற இஸ்ரவேல் புத்திரரின் பெருமூச்சையும் நான் கேட்டு, என் உடன்படிக்கையை நினைத்தேன். ஆதலால், இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: நானே கர்த்தர்; உங்கள் மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி நான் உங்களை விடுவித்து, உங்களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி, ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்டு, உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன்; உங்கள் மேல் எகிப்தியர் சுமத்திய சுமைகளை நீக்கி உங்களை விடுவிக்கிற உங்கள்*

தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள்."

மேலே உள்ள 3ஆம் வசனம் கூறுகிறது, *"சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை."* ஜேம்ஸ் மன்னரின் மொழிப்பெயர்ப்பில் "என் பெயர் தேவனால்" என்பது "என் பெயர் யோகோவாவால்" என்று எழுதப்பட்டுள்ளது. எபிரெய மொழியில் யோகோவா என்றால் இருக்கும் ஒன்று அல்லது ஒரு உண்மையான கர்த்தரின் சரியான பெயர் என்று பொருள். கர்த்தர் தன்னுடைய பெயரான யேகோவா என்பதை மனித குலத்திற்கு தெரிவிக்கவில்லை. இதனால் அந்த காலத்தில் வாழ்ந்த மக்கள் அவரை கர்த்தர் என்று மட்டுமே அழைத்தார்கள். ஆனால் இப்போது இஸ்ரவேலின் மக்களை காப்பாற்றுவதற்காக, கர்த்தர் அவருடைய பெயரான யோகோவா என்பதை இந்த உலகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் தெரியப்படுத்த விரும்புகிறார். "நான் தான் யாவே, நான் தான் நானாக இருக்கிறேன், அவராலே அவர் இருப்பவர்," கர்த்தர் இப்படித் தான் அவர் தெரியப்பட வேண்டும் என்று விரும்புகிறார்.

ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு உடைய கர்த்தர் அவராலே அவர் இருக்கிறார் மிகவும் பழமையான காலத்திற்கு முன்பே, எல்லாவற்றின் ஆதி தொடக்கத்திற்கு முன்பே கூட, அவர் ஜீவனோடு இருந்திருக்கிறார். வேறு வார்த்தைகளில் சொன்னால், கர்த்தர் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டும், இருந்துக் கொண்டும் இருக்கிறார். இஸ்ரவேலின் மக்களை, ஆபிரகாமின் குழந்தைகளை, எகிப்தில் 430 வருடங்கள் அடிமைகளாக இருக்க கர்த்தர் அனுமதித்துள்ளார். மேலும் பிறகு, அவர்களை அவர்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து கூடவே கானான் தேசத்திற்குள் அழைத்து செல்வேன் என்று அவர்

வாக்களித்திருந்தார். அவர் வாக்களித்தது போல, யோகோவா கர்த்தர் 430 வருடங்களுக்கு பிறகு தோன்றி, பாரோனின் துன்புறுத்தலில் இருந்து இஸ்ரவேல் மக்களை விடுவிக்குமாறு மோசேயிற்கு உத்தரவிட்டார். நான் யோகோவா, நான் நானாகவே உள்ளேன், உங்கள் கர்த்தர் என் மக்கள் போகட்டும். அவருடைய மக்களுக்காக அவர் மோசேயிற்கு முன் தோன்றி மேலும் அவருடைய மக்களை விடுவிக்குமாறு பாரோனிடத்தில் கட்டளையிட்டார், ஏனென்றால் யோகோவா கர்த்தருக்கு இஸ்ரவேல் மக்களுடைய கஷ்டங்கள் தெரிந்திருந்தது. ஏனென்றால், இவருடைய மக்கள் அவர்களின் துயரங்களுக்கு அடியில் புலம்பிக்கொண்டிருந்தது அவருக்குத் தெரியும். அவர்களை அவர்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பேன் என்று கர்த்தர் சொன்னார்.

ஆபிரகாமிற்கு வாக்கு கொடுத்ததிலிருந்து 430 வருடங்களுக்கு பிறகு கர்த்தர் இஸ்ரவேல் மக்களிடத்தில் வந்து தம்மைத்தான் அவர்களுக்கு முன்பு காண்பித்தார். நான் தான் யோகோவா, நான் தான் கர்த்தர், நான் தான் உங்கள் தகப்பனான ஆபிரகாமிற்கு, நான் உன் குழந்தைகளை எகிப்திலிருந்து கானான் தேசத்திற்குள் அழைத்து செல்வேன் என்று கொடுத்த வாக்கை நிறைவேற்ற நான் வந்திருக்கிறேன். மேலும் உங்களுடைய எல்லாத் துயரங்களும் எனக்குத் தெரியும். இதைத் தான் யோகோவா கர்த்தர் சொன்னார் என்று இப்போது பாரானிடம் போய்ச் சொல்லுங்கள்.

கர்த்தர் உண்மையில் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் கர்த்தராக உள்ளார் என்பதை நாம் உணர வேண்டும். கர்த்தர், என்னுடைய உங்களுடைய கர்த்தராகவும் உள்ளார். அப்படியானால் அவருடைய பெயர் என்ன? அவருடைய பெயர் யேகோவா, அவராலே அவர் இருக்கிறார் என்பது இதன் பொருளாகும். அவராலே அவர் இருப்பவராக இருந்து, இந்த உலகம் படைக்கப்படுவதற்கு

முன்னரே கர்த்தர் இருந்திருக்கிறார் அவருடைய தோற்றம் அவராலே வந்ததே தவிர வேறு யாராலும் வரவில்லை.

நாம் கர்த்தருடைய பெயரின் பொருளைப் புரிந்துக் கொள்ளவேண்டும்

கர்த்தர் உண்மையில் அவராலே அவர் இருக்கிறார் அவரே நம்மை படைத்தவர் அவரே நம் மீது ஆட்சி செய்பவர் மற்றும் அவரே நம்மை பாவத்திலிருந்து விடுவித்துள்ளார், என்பதை விசுவாசித்து உணருவது முக்கியமானதாக இருக்கிறது. யேகோவா கர்த்தரை நாம் உண்மையான கர்த்தராக விசுவாசிக்க வேண்டும். ஏனென்றால் இந்த யேகோவா கர்த்தர் தான் உண்மையில் இந்த உலகத்தை படைத்தார், மேலும் இன்னமும் கூட தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறார்.

இஸ்ரவேல் மக்களைப் போல, நீங்களும் நானும் கர்த்தரை விசுவாசிக்கிறோம், மேலும் அவருடைய பிரசன்னத்திற்கு முன்பாக அவருடைய கட்டளைகளையும் கூட பெற்றுள்ளோம். எல்லா சத்தியத்தையும் வைத்துக்கொள்வதற்கு இஸ்ரவேல் மக்கள் தவறியது போலவே, நாமும் கூடவே சத்தியத்தின் படி வாழ தவறிவிட்டோம். இதைப் போலவே, கர்த்தருக்கு முன்பாக நமக்கு இருக்கும் பாவங்களின் காரணமாக நாமும் தடுக்க முடியாத ஆனால் பாவத்தின் பயமூட்டும் நியாயதீர்ப்புக்கு ஆளாக்கப்பட்டுள்ள ஒரு வகையான உயிராக இருந்துள்ளோம். வேறு வகையில் சொன்னால் நம்முடைய பாவங்களினால், நாம் உண்மையில் நம்முடைய பாவங்களுக்காக அவரால் தண்டிக்கப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

இதனால் தான் நம்மில் ஒவ்வொருவரும் அவனுடைய/அவளுடைய சொந்த பாவங்களுக்கான

பிராயச்சித்தமாக கர்த்தருக்கு ஒரு மீட்கும் விலையை கொடுக்க வேண்டும். பாவத்திலிருந்து நாம் மீட்கப்பட வேண்டுமானால், கர்த்தராகிய தந்தைக்கு விசுவாசத்துடன் நம்முடைய சொந்த வாழ்க்கைக்கு சமமான அளவு பிராயசத்தின் கூலியை நாம் கொடுக்க வேண்டும். அவருடைய நியாயத்தீர்ப்பை திருப்தி படுத்தவும், கர்த்தருடைய இரக்கமுள்ள அன்பையும் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நம்முடைய சொந்த வாழ்க்கைக்கு சமமான தியாகத்தின் காணிக்கையை நாம் உண்மையில் கொடுக்க வேண்டும். நம்முடைய பாவங்களுக்காக உண்மையான வாழ்க்கையின் பிராயச்சித்தத்தைக் கொடுப்பதின் மூலம் மட்டுமே மனிதகுலமான நமக்கும் கர்த்தருக்கும் இடையே அமைதியை திரும்ப கொண்டு வரமுடியும். விசுவாசித்தின் மூலமாக மட்டும் தான் நாம் நம்முடைய பாவங்களிலிருந்தும் தண்டனைகளிலிருந்தும் விடுவிக்கப்பட முடியும்.

இது உண்மையான காரணமாய் இருப்பதால் எப்பொழுதாவது கர்த்தருக்கு முன் நாம் போகும் பொழுது, நாம் அவருக்கு முன் செய்த பாவங்களின் காரணமாக இந்த பாவங்களுக்காக நாம் நியாயந்தீர்க்கப்பட்டு தண்டிக்கப்படுவோம் என்பதில் நம்மால் எதுவும் செய்ய முடியாது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். கர்த்தரை நம் மீட்பராக நாம் விசுவாசிக்கும் பொழுது நம்முடைய பாவங்களுக்காக நாம் நரகத்தில் தள்ளப்படுவோம், என்பதையும் நம்முடைய பாவங்களுக்கான கூலியை செலுத்தி, நம்மை பாவத்தின் நியாயத்தீர்ப்பிலிருந்து விடுதலையாக்கியுள்ள மேசியாவை நம்முடைய சொந்த இரட்சகராக நாம் அடையாளம் கண்டு கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருக்கு முன்பாக நாம் செல்லும் பொழுது நாம் ஞானஸ்நானத்தையும் இயேவின் இரத்தத்தையும், நம்முடைய பாவங்களுக்கான பலி காணிக்கையையும்

விசுவாசிக்க வேண்டும். மேலும் அவரை மேசியாவாக விசுவாசித்து அவரை அப்படியே அடையாளங் கண்டு கொள்ள வேண்டும். கர்த்தருடைய கட்டளையை நாம் கைகொள்ள தவறிய காரணத்தால் அவருக்கு முன் நாமெல்லாரும் பாவியாகி உள்ளோம் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துதான் நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து விடுவித்துள்ளார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

கர்த்தருடைய பாவத்தின் தண்டனைக்கு ஆளாக்கப்படுவதை நம்மால் தவிர்க்க முடியாது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இப்படி நம்முடைய பாவத்தன்மையை ஒப்புக்கொள்வது முதல் கர்த்தர் நமக்கு தந்துள்ள பாவத்தின் மீட்பிற்கான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள நாம் தகுதியுடையவர்களாய் ஆகிறோம். மேலும் கர்த்தருடைய இரக்கத்தை சேர்த்து வைத்துக் கொள்ள கூடியதும் அவரின் பாவத்திற்கான மீட்பைப் பெற்றுக்கொள்ள கூடியதுமான நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தை நம்மால் கட்ட முடிகிறது.

நம்மை அவருடைய சொந்த குழந்தைகளாக்க, கர்த்தர் நம்மை அவருடைய சொந்த சாயலில் படைத்தார், ஆனால் நம்மை பலவீனத்தில் பிறக்க அனுமதித்தார். ஆதாமின் சந்ததிகளாயிருந்து நாமெல்லாரும் பாவிகளாக பிறந்துள்ளோம், ஆனால் நம்மை அவருடைய குழந்தைகளாக்குவதற்கு கர்த்தரால் இது முன்கூட்டியே திட்டமிடப்பட்டது.

நம்முடைய பாவங்களுக்கான நியாயதீர்ப்பை தடுக்க முடியாத உயிராக நாம் இருந்தோம், ஆனால் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக, கர்த்தர் அவருடைய சொந்த குமாரனை நம்மிடம் அனுப்பி, நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும் நம்மை மன்னித்துள்ளார். தேவகுமாரனான இயேசு, கர்த்தருடைய திட்டத்திற்கு கீழ்படியும் வகையில் அவருடைய ஞானஸ்நானத்தைப்

பெற்றுக் கொண்டு, சிலுவையின் மீது மரித்தார். யோவானிடமிருந்து இயேசு பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தினால் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களும் அவருடைய குமாரன் மீது சென்று விட்டது. சிலுவையின் மீதான நம்முடைய இரத்தத்தினால் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை மீட்டுள்ளார் என்பதையும், இப்படித்தான் அவர் நம்முடைய எல்லாப் பாவங்களுக்குமான தண்டனைகளையும் ஏற்றுக்கொண்டார் என்பதையும் நமக்குள் யார் விசுவாசிக்கிறார்களோ அவர்களுக்கு யோகோவா கர்த்தர் புதிய வாழ்க்கையை கொடுத்துள்ளார்.

புதிய வாழ்க்கையைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்கும் எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்கப்பட வேண்டும் என்பதற்கும் மேலும் கர்த்தருடைய குழந்தைகளாக வேண்டும் என்று நாம் விசுவாசிக்கும் பொழுது இயேசுவின் ஞானஸ்நானமும் அவருடைய இரத்தமுமே நம்மை அனுமதிப்பதற்கு போதுமான தியாகத்தின் காணிக்கையாய் இருந்தது. விசுவாசிப்பதின் மூலம் நாம் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்கப்படவேண்டும். மேலும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் இருக்கும் விசுவாசத்தின் மூலம் கர்த்தருடைய மக்களாய் ஆவதற்கு நம்மை அனுமதிக்கும் அந்த விசுவாசத்தினை நாம் பெற்றிருக்க வேண்டும். இது தான் உண்மை, உண்மையாய் இப்படிபட்ட விசுவாசத்தை உடையவர்களாய் மட்டுமே கர்த்தருடைய சொந்த மக்களாக ஆகமுடியும்.

இந்த உலகத்தினுடைய மதங்களுடைய எல்லா தெய்வங்களும் மனித குலத்தினுடைய சொந்த படைப்பினுடைய பொருளாக மாத்திரம் இருக்கின்றன

யோகோவா கர்த்தர், இயேசு கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவரை தவிர மற்ற எல்லா தெய்வங்களும் மனித குலத்தால் படைக்கப்பட்ட வெறும் உலக பிரகாரமான தெய்வங்கள் தான். கர்த்தரை தவிர அதனாலே அது இருக்கக் கூடிய எதுவும் இந்த உலகத்தில் கிடையாது. இதனால் தான் யேகோவா கர்த்தர் "நான் தான் நானாக இருக்கிறேன்" என்று கூறினார்.

உண்மையில் அவனாலே அவன் இருக்கக்கூடிய யாராவது இருந்தார்களா? புத்தர் அவருடைய தாயின் கருப்பையில் இருந்து பிறந்தார், ஆனால் அவர் வெறும் கர்த்தருடைய படைப்புதான். இதே போல கன்பூசியசும், முகமதுவும், பெற்றோர்களிடமிருந்து தான் பிறந்தார்கள், இதனால் இவர்களெல்லாம் கர்த்தரால் படைக்கப்பட்ட உயிர்களாய் மாத்திரமே இருக்கின்றனர். புத்தருடைய தொண்டர்கள் வடிவமைத்துள்ள அல்லது செதுக்கியுள்ள அவருடைய சிலைகளானது மனிதனுடைய சொந்த படைப்பாக மாத்திரமே இருக்கின்றன. கர்த்தர் படைத்துள்ள உலோகங்கள் மற்றும் கற்களாலேயே இச்சிலைகள் செய்யப்பட்டன. சூரியனிலிருந்து, சந்திரன் வரைக்கும், நட்சத்திரங்கள், நீர், காற்று, கூடவே இந்த பிரபஞ்சத்தின் நட்சத்திர கூட்டங்கள் எல்லாமே கர்த்தரால் படைக்கப்பட்டன. கர்த்தரால் படைக்கப்படாத எதுவும் இந்த உலகத்தில் கிடையாது தேவ தூதர்களும் ஆவிக்குரிய உயிரினங்களும் கூட கர்த்தரால் படைக்கப்பட்டது தான்.

நாம் விசுவாசிக்கும் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியவர்களுடைய கர்த்தராக இருக்கும் 'யேகோவா' கர்த்தர் மட்டுமே 'அவராலே அவர் இருக்கிறார்'

யேகோவா கர்த்தர் வேறு யாராலும் படைக்கப்படவில்லை அவர் அவராலே மட்டும் இருக்கிறார், அவர் மட்டும் தான் இந்த முழு உலகத்தினுடைய படைப்பாளராக இருக்கிறார் மேலும் அவர் மட்டும் தான் என்னையும் உங்களையும் படைத்தவராக இருக்கிறார். நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து விடுவித்து., நம்மை அவருடைய சொந்த மக்கள் ஆக்கி கொள்வதற்காக இந்த யேகோவா கர்த்தர் மட்டும் தான் அவருடைய சித்தத்தில் திட்டம் தீட்டி உள்ளார்.

கர்த்தர் இப்படி திட்டமிட்டப்படியால் அழுதுகொண்டே இந்த உலகத்தில் பிறக்கும் படியும், வெறுங்கையோடு திரும்பும் படியும் நம்மை படைத்துள்ளார். மேலும் இந்த திட்டத்தினால் தான், அவர் நம்மை இந்த உலகத்தில் கஷ்டப்பட அனுமதித்துள்ளார். இதனால் கர்த்தரை தேடி அவரை சந்திப்பதை தவிர நம்மால் வேறு எதுவும் செய்ய முடியாது.

கர்த்தரை நாம் விசுவாசிக்கிறோம் என்று நாம் சொல்லும் பொழுது நம்முடைய பாவங்கள் மற்றும் கர்த்தருடைய கட்டளையை செயல்படுத்த தவறியதாலும், கர்த்தருக்கு முன்பு மரணம், நரகம் மற்றும் கொடூர வேதனைகளின் தண்டனையை நாம் சந்திக்க வேண்டியிருப்பதை தடுக்க முடியாது உயிர்களாக இருக்கிறோம் என்பதை நாம் உண்மையில் ஒப்புக்கொள்ள வேண்டும். நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவாகிய மேசியாவை நாம் விசுவாசிப்பதற்கு முன்னால், நரகத்தில் தள்ளப்படுவதையும் பாவத்திற்கான பயமூட்டும் நியாயத்தீர்ப்பை நாம் சந்திக்க வேண்டியிருப்பதையும் தடுக்க முடியாத பாவிகளாய் இருக்கிறோம் என்பதையும் எண்ணி முதலில் நம்மை நாமே அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

யேகோவா கர்த்தர் எல்லாம் அறிந்தவராகவும், சர்வ வல்லமையுள்ளவராகவும் இருக்கிறார்

எல்லாம் அறிந்தவராகவும், சர்வ வல்லமையுள்ளவராகவும் இருக்கும் கர்த்தர் தான் உண்மையில் நம்மை படைத்த மற்றும் இந்த உலகத்தை ஆட்சி செய்யக் கூடிய ஒரே கர்த்தராக உள்ளார். நாம் எந்த வகையான பாவிகளாய் இருக்கிறோம் என்பதை கர்த்தருக்கு முன்பாக ஒப்புக்கொள்ள வேண்டும், அதாவது நம்முடைய பாவங்களுக்காக கர்த்தருடைய பயமூட்டும் கடுங்கோபத்துக்கு ஆளாக்கப்படுவதை நாம் தடுக்க முடியாது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை விடுவிக்க வந்த தேவ ஆட்டுக்குட்டியை விசுவாசிப்பதின் மூலமாகவும், நம்முடைய எல்லாப் பாவங்களையும் இந்த தியாக காணிக்கையின் மீது சுமத்துவதின் மூலமாகவும் நம்முடைய பாவத்தின் எல்லாப் பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டுவிடும் என்ற சத்தியத்தை நாம் விசுவாசிக்க வேண்டும். உண்மையில் நாம்தான் நம்முடைய பாவங்களுக்காக நியாயம் தீர்க்கப்பட்டு மரித்திருக்க வேண்டும். ஆனால் தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலமாக இந்த பலி காணிக்கை நம்முடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்ட காரணத்தால் நம்முடைய பாவங்கள் எல்லாம் கழுவப்பட்டன. இந்த சத்தியத்தை நாம் விசுவாசிக்க வேண்டும் இந்த பலி காணிக்கை மூலமாக தனக்கு சாத்தியமில்லை என்பதே எதுவும் கிடையாது என்று இருக்கும் கர்த்தாதி கர்த்தர், நரகத்திற்கு தள்ளப்படுவதை தடுக்க முடியாத நம்மை, நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் இரட்சித்துள்ளார் என்பதை நாம் உணரவேண்டும். இதை விசுவாசிப்பவர்கள் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் உண்மையான விசுவாசிகளாய் உள்ளனர்.

மேசியாவை மனம் போன போக்கில் விசுவாசிப்பது தவறு. நாம் கர்த்தரை விசுவாசிக்கிறோம் என்று சொல்லும் பொழுது, வேதாகமத்தின் ஆழமான அஸ்திபாரத்தினால் நம்முடைய விசுவாசம் நிறுவப்பட்டிருக்க வேண்டும், "நான் தான் நானாக இருக்கிறேன், நான் தான் யோகோவா" என்று சொல்லப்பட்ட அவருடைய வார்த்தையின் மீது நம்முடைய அஸ்திபாரத்தை அமைத்து கொள்ள வேண்டும்.

இஸ்ரவேல் மக்களுக்கு அவர்கள் பின்பற்ற வேண்டும் என்று கர்த்தர் கொடுத்த கட்டளைகளை பின்பற்ற அவர்கள் தவறிவிட்டார்கள். இஸ்ரவேல்களுக்கு கர்த்தர் கொடுத்த கட்டளைகள், இக்காலத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நம்மெல்லாருக்கும் சேர்த்தே கொடுக்கப்பட்டிருந்தது. நீங்கள் உண்மையில் கர்த்தரை விசுவாசிக்க வேண்டும் என்றாலும் உங்கள் விசுவாசத்தின் மூலம் உண்மையில் நீங்கள் ஆபிரகாமின் குழந்தைகளாக வேண்டுமென்றாலும், கர்த்தர் 613 கட்டளைகளை இஸ்ரவேலர்களுக்கு மட்டும் அல்ல ஆனால் நமக்கும் இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் மற்றும் இந்த முழு உலகத்திற்கும் கொடுத்துள்ளார் என்பதை நீங்கள் அடையாளங்கண்டுக்கொள்ள வேண்டும். மேலும் இஸ்ரவேலர்களைப் போல நாமும் கட்டளைகளைக் கடைப்பிடிக்க தவறிவிட்டோம். மேலும் இதனால் நாம் முன் கூட்டியே தீர்க்கப்பட்டு விட்டோம், ஏனென்றால் "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) என்பதை நாம் அடையாளங் கண்டு கொள்ள வேண்டும்.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னித்து விட்டார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். இப்படி செய்ய வேண்டும் என்றால், நாம் மீட்பின் சத்தியத்தை தேடி போக வேண்டும், இதன் மூலம் தான் நம்முடைய தேவன் நம்முடைய பாவங்களிலிருந்தும், நம்முடைய பாவத்திற்கான

தண்டனையிலிருந்தும் நம்மை விடுவித்துள்ளார்.

கர்த்தருடைய கண்டிப்பான கட்டளைகளை பின்பற்ற நாம் தவறி இருக்கும் பொழுதிலும், நாம் பயங்கரமான பாவிகள் என்று உணராவிட்டாலும், நம்முடைய பாவங்களுக்காக நாம் நியாயம் தீர்க்கப்பட இருக்கிறோம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளா விட்டாலும், நம்மால் மேசியாவை எப்பொழுதுமே விசுவாசிக்க முடியாது. கர்த்தர் மக்களின் பாவங்களை ஏற்கெனவே நியாய தீர்ப்பு புத்தகத்தில் எழுதி வைத்திருக்கும் பொழுது பாவத்தோடு இருந்தாலும் கூட அவர்களால் பரலோகத்திற்குள் நுழைய முடியாது என்று விசுவாசித்தால், கர்த்தருடைய சத்தியத்தை தாங்களாகவே மாற்றி, பிரோயஜனம் இல்லாமல் கர்த்தருடைய பெயரைக் கூப்பிடும் பாவத்தைச் செய்து கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட மக்களை எப்பொழுதுமே அவர்களுடைய பாவத்திலிருந்து மீட்க முடியாது. அவர்கள் அவர்களுடைய பாவங்களுக்காக நியாயந்தீர்க்கப்படுவார்கள், மேலும் கர்த்தரை விசுவாசிக்கிறார்களா இல்லையா என்று அவர்கள் அக்கரையில்லாமல் இருந்ததற்காக, நரகத்தின் தண்டனையால் தண்டிக்கப்படுவார்கள், அவர்கள் கர்த்தரை அடையாளங்கண்டுக் கொள்ளவில்லை இந்த மக்கள் ஒன்றாக மனம் திரும்பி, அவர்களுடைய அவிசுவாசத்திலிருந்து திரும்ப வேண்டும்.

இந்த வேளையிலும் கூட, கர்த்தர் நம்முடைய இருதயங்களில் இருக்கிறார், மேலும் இந்த எல்லா இடங்களிலும் அவரே இருக்கிறார். மேலும் நம்மைப் பற்றி எல்லாமும் அவருக்குத் தெரியும்.

கர்த்தர் உயிரோடு இருந்தாலும், அவரை விசுவாசிக்காத மக்கள் இருக்கிறார்கள், அவரை இகழ்பவர்களும் உண்டு. ஆனால் நம்மெல்லாருக்கும் நம்முடைய பாவங்களுக்காக பலி காணிக்கை தேவைப்படுகிறது. இதனால் தான் கர்த்தர் அமைத்திருந்த

மீட்பின் வழியின் படி இஸ்ரவேல் மக்களை, ஆசரிப்புக் கூடாரத்தினுடைய தகன பலிபீடத்தின் பிராயசித்தத்தின் காணிக்கையை தரும்படி கர்த்தர் செய்தார்.

கர்த்தர் உண்மையில் அவராலே அவர் இருக்கிறார். முன்பு இருந்தவரும் இப்பொழுது இருப்பவரும் அவரே. நம்முடைய முப்பிதாக்களிடத்தில் வாழ்ந்து, தோன்றி, நீண்ட காலத்திற்கு முன்பே விசுவாசத்தைப் பற்றி பேசிய கர்த்தர் அவர். இப்போதும் அவர் வாழ்ந்து கொண்டும், தோன்றியபடியும், நம்மிடம் பேசுகிறார். அவர் நமக்கு மத்தியில் கிரியைச் செய்கிறார், நம்மை நடத்துகிறார் மேலும் நம்முடைய வாழ்க்கையின் மீது ஆட்சி செய்கிறார்.

நாம் மறக்க கூடாத சத்தியம்

நாம் மீட்கப்பட்டிருந்தாலும் எப்பொழுதுமே மறக்க கூடாத ஒரு விஷயம் இருக்கிறது. அது நாம் நிரந்தரமாய் நியாயந்தீர்க்கப்படுவதை நம்மால் தடுக்க முடியாது என்பதாகும். அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாகவும், சிலுவையின் மீது அவர் சிந்திய இரத்தத்தின் மூலமாகவும், நம்முடைய தேவன் நம்மை இது போன்ற நம்முடைய எல்லாப் பாவங்களின் நியாயத்தீர்ப்பிலிருந்தும் விடுவித்துள்ளார். தேவனுக்கு முன்பு நாம் நிற்க போகும் நாள் வரையிலும் இந்த சத்தியத்தை ஒரு போதும் மறக்க கூடாது. மேலும் இதை நம்முடைய இருதயங்களில் எப்பொழுதுமே விசுவாசிக்க வேண்டும். கர்த்தரை ஸ்தோத்தரிக்கும் பரலோக இராஜ்ஜியத்தில் நாம் இருந்தாலும் கூட நாம் இதை விசுவாசிக்க வேண்டும். தங்களுடைய பாவங்களுக்காக நிரந்தரமாய் சபிக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்படுவதை தடுக்க முடியாத மக்களை, நம்முடைய தேவனை மீட்பராக விசுவாசிக்க செய்ய, மக்களாகிய நம்மை அனுமதித்ததற்காகவும் மேலும் நமக்கு

நித்திய வாழ்வை கொடுத்ததற்காகவும், நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய பாவங்களுக்காக நாம் நிரந்தரமாக நியாயம் தீர்க்கப்பட இருக்கிறோம், என்பதை நாம் ஒப்புக்கொள்ள விட்டால் என்ன? கர்த்தரை ஸ்தோத்தரிப்பதற்கு நம்மிடம் எந்த காரணமும் இருக்காது. நம்முடைய பாவங்களுக்காக நிரந்தரமாய் நியாயம் தீர்க்கப்பட இருப்பதை தடுக்க முடியாத மனித உயிர்களாகிய நம்மை, உண்மையில் கர்த்தர் மீட்டுள்ளார். நம் தேவன் அவருடைய ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டு, நமக்காக அவருடைய இரத்தத்தை சிந்திய காரணத்தால் நாம் அவரை விசுவாசித்து கூடவே அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். இதனால் தான் நீங்களும் விசுவாசிக்க வேண்டும். இதனால் தான் நாமொல்லாரும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை போதிக்க வேண்டும். இயேசு பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தையும் மேலும் அவர்களுடைய பாவத்திற்காக அவர் சிந்திய இரத்தத்தையும் விசுவாசிப்பவர்களிடத்தில் கர்த்தரை ஸ்தோத்தரிப்பதற்கான இருதயங்கள் இருக்கின்றன. தேவன் அவர்களை அவர்களுடைய பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மீட்டுகொண்டதால், ஒவ்வொரு நாளும் அவர்களுடைய விசுவாசத்துடன் அவரை ஸ்தோத்தரிக்கிறார்கள்.

பிரச்சனை என்னவென்றால், இயேசுவை சில மக்கள் தவறாக புரிந்துக் கொண்டுள்ளார்கள். அவரைப் பற்றிய அவர்களுடைய அறிவு ஒருதலையாகவும், பாதியளவு வெறுமையாகவும் இருக்கிறது. இந்த வகையான மக்கள் மனசாட்சி கெட்டுபோன மக்களாகவும், தாங்கள் பாவம் செய்கிறோம் என்பதையும் கூட உணராத மக்களாகவும் இருக்கிறார்கள், ஏன் என்றால் அவர்கள் எல்லோரும்

அவர்களுடைய எல்லா வகையான பாவங்களாலும் நிரப்பப்பட்ட மக்களாகவும் இருக்கின்றர்கள். பாவம் செய்து விட்டு அதை பாவம் என்று அடையாளங் கண்டு கொள்ளாதவர்களைத் தவிர வேறு யாரும் பாவிகள் கிடையாது.

பாவம் செய்வதிலிருந்து தடுக்க முடியாத பலவீனமான உயிர்களாய் இருந்தாலும், நாம் ஒவ்வொரு முறை பாவம் செய்யும் பொழுதும் அதை ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் நம்முடைய தேவனுடைய ஞானஸ்நானத்தையும் அவருடைய சிலுவையின் இரத்தத்தையும் அதாவது நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை நாம் உறுதி படுத்திக் கொள்ள வேண்டும். இதனால் கர்த்தருக்கு முன்பாக நாம் பாவிகளாக இருப்போம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். மேலும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை நாம் உண்மையாக விசுவாசிப்பதன் மூலம், நாம் விடுவிக்கப் பட்டபடியால் மூச்சுவிடலாம். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசத்தின் மூலம் நாம் நம்முடைய சமாதானமான மனதைப் பெற்றுள்ளோம்.

நாம் பாவமின்மையைப் பற்றி பேசும் பொழுது நாம் உண்மையில் பாவம் செய்தாலும் கூட, நாம் நம்முடைய பாவங்களை அடையாளங் கண்டு கொள்ள முடியாது என்று இது சொல்வதில்லை. நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பவர்கள் பாவத்தை பாவம் என்று அடையாளங் கண்டுக் கொள்ள வேண்டாம் என்று இது சொல்வதில்லை. நாம் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் உண்மையில் விடுவிக்கப்பட்டிருந்தாலும், நாம் இன்னமும் நாம் செய்யும் பாவங்களையொல்லாம் அடையாளங் கண்டுக்கொள்கிறோம் ஏனென்றால் அவை நம்முடைய பாவங்களாக உள்ளன. நாம் நம்முடைய பாவங்களுக்காக நிரந்தரமாக நியாயந்தீர்க்கப் படுவதை நம்மால் தடுக்க முடியா விட்டாலும், நம் தேவன் அவருடைய

ஞானஸ்நானத்தின் மூலமாக நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் பாவத்தின் தண்டனையிலிருந்தும் மீட்டுள்ளார் என்பதையும் சிலுவையின் மீதான அவருடைய இரத்தத்தையும் அவருடைய உயிர்ப்பித்தலையும் நாம் எப்பொழுதும் மறக்க கூடாது. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகிய நூல்களின் மூலமாக நம் தேவன் நம்மை மீட்டுள்ளார் என்பதை நாம் ஒரு போதும் மறக்க கூடாது, ஆனால் அதை விசுவாசித்து அதற்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். நாம் முன்பு எப்படியிருந்தோம் என்பதை ஞாபகப்படுத்தி பார்க்க வேண்டும். நம்முடைய பாவங்களுக்காக நாம் நிரந்தரமாக நியாயந்தீர்க்கப்படுவதை தடுக்க முடியாத மோசமான உயிர்களாய் ஒரு சமயத்தில் இருந்தோம் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தரால் கொடுக்கப்பட்ட பாவ மன்னிப்பின் மீட்பிற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும். மேலும் அவருடைய சிறந்த மீட்பின் கிருபைக்காக அவருக்கு ஒவ்வொரு நாளும் நன்றி சொல்ல வேண்டும். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் இருக்கும் விசுவாசிகளின் விசுவாசமானது இதைத் தவிர வேறில்லை.

யேகோவா கர்த்தர் இன்னமும் உயிரோடிருக்கிறார்

ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கு கர்த்தராய் இருந்தது போல, இப்பொழுது அவர் எனக்கும் உங்களுக்கும் கர்த்தராக உள்ளார். *"தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார்" (1 கொரிந்தியர் 14:33).* போலியான மற்றும் கண்ணைக் கவரும் செயல்களைச் செய்யும் கிறிஸ்தவர்களுக்கு அவர் கர்த்தர் அல்ல, ஆனால் நற்செய்தியாகிய நீர் மற்றும்

ஆவியை விசுவாசிப்பவர்களுக்கு அவர் கர்த்தராக இருக்கிறார். "ஆம்" என்று கர்த்தருக்கு கீழ்ப்படிவதிலும் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிப்பதிலும் நமக்கு விசுவாசம் உண்டு. கர்த்தர் நம்முடைய கர்த்தராக இருப்பார். "நீ நரகத்திற்காக முன் கூட்டியே தீர்மாக்கப்பட்டிருக்கிறாய்" என்று அவர் நம்மிடம் சொல்லும் பொழுது, "ஆம், நீங்கள் சரியாக தான் சொல்கிறீர்கள்" என்று நாம் அவரிடம் சொல்கிறோம். "நீ சாகும் நாள் வரையிலும் தொடர்ந்து பாவம் செய்து கொண்டிருப்பாய்" என்று அவர் நம்மிடம் சொல்லும் பொழுது, "ஆம், நீங்கள் சொல்வது சரி தான்" என்று அவரிடம் சொல்லுகிறோம். மேலும் அவர் நம்மிடம், "ஆனால் நான் உங்களை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலமாக உங்களை மீட்டுக் கொண்டேன்" என்று சொல்லும் பொழுது "ஆம், நீங்கள் சொல்வது மிகவும் சரி" என்று மட்டும் தான் மீண்டும் சொல்ல முடியும். இப்படித்தான் "ஆமாம்" என்று சொல்லி அவருக்கு கீழ்ப்படியும் கர்த்தருடைய மக்களாக ஆகியுள்ளோம். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியினால் நம்மை மீட்டுக் கொண்ட அவருடைய கிருபைக்காக நம் கர்த்தருக்கு நன்றி செலுத்துக்கிறேன்.

நீர், இரத்தம் மற்றும் ஆவியின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம் தேவன் நம்மை மீட்டுள்ளார் என்பதையும் இதன் மூலம் கர்த்தருடைய இராஜ்ஜியத்தின் மக்களாக நம்மை மாற்றியுள்ளார் என்பதையும் நாம் நம்முடைய இருதயங்களில் விசுவாசித்து அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி தான் கர்த்தர் உங்களுக்கு அளித்துள்ள மீட்பின் பரிசு என்பதை விசுவாசித்து தேவனுக்கு நன்றி சொல்லுங்கள்.

என்னுடைய பாவங்களுக்காக நான் நரகத்திற்கு தள்ளப்படுவதை தடுக்க முடியாத என்னை

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலம் நிரந்தரமாக மீட்டுக்கொண்டதற்காக, என்னுடைய விசுவாசத்துடன் கர்த்தருக்கு எப்பொழுதும் ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். உண்மையில் நாம் முழுமையாக வெண்கலமாக இருந்தோம்,அஅதாவது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பிலிருந்து நாம் தப்பிக்க முடியாது என்பதை நாம் ஞாபகம் வைத்துக் கொண்டு இதனால் நம்மால் தப்பிக்க முடியாது, ஆனால் நம்மை பாவத்திலிருந்து விடுவிக்க, இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நம்மை மீட்டுக்கொண்டதற்காக, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் ஒளிந்திருக்கும் நற்செய்தியின் உண்மையை விசுவாசித்து அவருக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

யேகோவா கர்த்தர் மட்டும் தான் முழுமையான மனித குலத்தின் கர்த்தர். மேலும் அவர் முழு மனித குலத்தின் இரட்சிப்பின் கர்த்தராகினார். நாம் எல்லோரும் யேகோவா கர்த்தரை நம்முடைய சொந்த கர்த்தராக விசுவாசிக்க வேண்டும். ✉

பிரசங்கம்

4

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.



ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

சீனாய் மலைக்கு மேசேயை கர்த்தர் அழைத்ததற்கான காரணம்

< யாத்திராகமம் 19:1-6 >

"இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் முதலாம் நாளிலே, சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்தார்கள். அவர்கள் ரெவிதீமிலிருந்து பிரயாணம் புறப்பட்டு, சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்து, அந்த வனாந்தரத்தில் பாளயமிறங்கினார்கள்; இஸ்ரவேலர் அங்கே மலைக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள். மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக் கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த

ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்."

இஸ்ரவேல் மக்களை கர்த்தர் ஏன் தேர்ந்தெடுத்தார்?

முக்கியமான பகுதி யாத்திராகமம் 19:1-6 இலிருந்து வருகிறது. இந்த பகுதி பெரிதாக இல்லையென்றாலும் இதைப் பற்றி நான் சொல்வதற்கு அதிகம் இருக்கிறது. இந்த பகுதியில், யாத்திராகமம் 19-ஆம் அதிகாரத்திலிருந்து 25 ஆம் அதிகாரம் வரையிலும் வெளிப்பட்டுள்ள சத்தியத்தைப் பற்றியும் நான் பேச ஆசைப்படுகிறேன். இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து தப்பித்து சீனாய் காட்டு பகுதிக்கு வந்து மூன்று மாதங்கள் ஆகியிருக்கிறது. கர்த்தர் அவர்களை சீனாய் மலைக்கு முன் தங்க வைத்து, மலைக்கு மேலே வரும்படி மோசேயை அழைத்தார்.

இப்படி மோசேயை வரவழைத்த பிறகு இஸ்ரவேலர்களிடத்தில் கர்த்தர் அவருடைய வார்த்தையை பேசினார். *"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள்."* கர்த்தர் இஸ்ரவேல் மக்களை அவருடைய விசேஷமான பொக்கிஷம் ஆக்குவதற்கும் மேலும் அவருடைய இராஜ்ஜியத்தின் ஆசாரியர்களாக அவர்களை மாற்றுவதற்காக தான் கர்த்தர் அவர்களை அழைத்து உயர்த்தினார்.

இஸ்ரவேல் மக்களை கர்த்தர் எகிப்திலிருந்து

விடுவித்ததற்கும் இது தான் நோக்கமாயிருந்தது. இஸ்ரவேல் மக்களை தன்னுடைய விசேஷமான பொக்கிஷம் ஆக்கி கொள்வதற்கு அவர்களுக்கு அவருடைய சத்தியத்தையும், அவர்களை பாவங்களிலிருந்து மீட்பதற்காக ஆசரிப்பு கூடாரத்தினுடைய தியாகத்தின் முறையையும் கொடுத்தார். இதுவே அவர்களை தன்னுடைய விசேஷ பொக்கிஷமாக கர்த்தர் பயன்படுத்திய முறை இதன் மூலம் அவர் அவர்களுடைய எல்லா பாவங்களையும் கழுவுவார், அவர்களை தன்னுடைய சொந்த மக்களாக ஆக்கி கொள்வார் மற்றும் நாட்டினுடைய ஆசாரியர்களாகவும் அவர்களை கண்டுகொண்டார். இதைப் போல இஸ்ரவேலர்கள் இதை தெளிவாக உணரவேண்டும். மேலும் கர்த்தருக்கு அவர்களிடமிருந்து தேவைப்படும் விசுவாசத்தை திரும்பவும் பெற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய ஆசாரியர்களின் இராஜ்ஜியமாக அவர்கள் தேசத்தை ஆக்குவதற்காக ஒருபுறம் கர்த்தர் அவர்களுக்கு 613 கட்டளைகள் எழுதப்பட்ட சத்தியத்தை அவர்களுக்கு கொடுத்தார் மற்றும் மறுபுறம் அவர் அவர்களை ஆசரிப்பு கூடாரத்தை கட்டச் செய்தார்.

இதனால் இஸ்ரவேலர்கள் தங்களுடைய மேசியாவாக வந்த இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கா விட்டால், அவர்கள் தங்களுடைய இருதயங்களுடன் மனந்திரும்பி அவரை விசுவாசிக்க வேண்டும். ஆசரிப்பு கூடாரத்தினுடைய தியாக முறையின் பாவ காணிக்கையின் பொருளாக இருக்கும் இயேசு யோவானிடம் இருந்து பெற்றுக் கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாகவும் சிலுவையின் மீதான அவருடைய இரத்தத்தின் மூலமாகவும் அவர்களுடைய எல்லா பாவங்களையும் கழுவி விட்டார். இதைப் போல, ஆபிரகாமின் சந்ததியாராகிய தங்களை எகிப்துக்கு வெளியே அழைத்து வந்ததன் மூலம் அவருடைய சொந்த மக்களாக ஆக்கி கொண்டார் என்ற

உண்மையையும் ஆசரிப்பு கூடாரத்தினுடைய காணிக்கைகள் மூலமாகவும் அவர்களுடைய எல்லா பாவங்களையும் கழுவி விட்டார் என்ற உண்மையையும் இஸ்ரவேல் மக்கள் சந்தேகமில்லாமல் ஒப்புக்கொள்ள வேண்டும். அக்காலத்தில் கர்த்தருடைய சட்டத்தை இஸ்ரவேல் மக்கள் கடைப்பிடிக்க முடியாமல் இருந்ததால், கர்த்தரால் அமைக்கப்பட்டிருந்த பலி முறைக்கு ஏற்ப அவருக்கு பலி காணிக்கைகள் கொடுப்பதன் மூலம் அவர்கள் அவர்களுடைய பாவங்களுக்காக மன்னிக்கப்பட வேண்டியிருந்தது. இந்த பலி காணிக்கைகளெல்லாம், மனித குலத்தை தன்னுடைய பாவங்களிலிருந்து இப்போது மீட்ட மீட்பரான இயேசு கிறிஸ்துவை முன் கூட்டியே சொல்வதாக இருந்தது.

இன்னமும் கூட இஸ்ரவேலர்கள் மோசேயை சிறந்த தீர்க்கதரிசியாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் இதில் சரியாக இருக்கிறார்கள், ஏனென்றால் தங்களுடைய பாவங்களிலிருந்து மீட்ட இயேசு கிறிஸ்துவை மேசியாவாக அவர்கள் விசுவாசிப்பதில்லை. அவர்கள் புதிய ஏற்பாட்டை கர்த்தருடைய வார்த்தையாக கருதுவதில்லை ஆனால் பழைய ஏற்பாட்டையே கர்த்தருடைய வார்த்தையாக கருதுகிறார்கள். இயேசு மோசேயை விட சிறந்த தீர்க்கதரிசி மட்டும் அல்ல, ஆனால், பரலோக இராஜ்ஜியத்தின் தலைமை ஆசாரியராகவும், இஸ்ரவேலர்கள் காத்துக் கொண்டு நம்பியிருந்த மேசியாவாகவும் இருக்கிறார் என்பதை நாம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். ஆசரிப்பு கூடாரத்தினுடைய பலி காணிக்கையின் பொருளாக இருந்தது மேசியாவை தவிர வேறு யாரும் இல்லை என்பதை விசுவாசத்தினால் இஸ்ரவேலர்கள் இப்பொழுது உணரவேண்டும்.

இஸ்ரவேலர்கள் மோசேயை மரியாதையான இடத்தில் வைக்கும்படி கர்த்தர் செய்தார், ஆனால்...

இஸ்ரவேலர்களுக்கு முன்பாக கர்த்தர் மோசேயை ஏன் அவ்வளவு உயரமாக உயர்த்தினார்? மோசேயின் மூலமாக பேசப்பட்ட கர்த்தருடைய எல்லா வார்த்தையையும் அவர்கள் ஏற்றுக் கொண்டு விசுவாசிக்கவே அப்படிச் செய்தார். வேறு வகையில் சொல்ல வேண்டுமென்றால் மோசே இஸ்ரவேலர்களிடம் என்ன பேசினானோ அவையெல்லாம் கர்த்தருடைய சொந்த வார்த்தைகள் என்று அவர்களை விசுவாசிக்கச் செய்யவே கர்த்தர் இப்படிச் செய்தார். இஸ்ரவேல் மக்களுக்கு முன்பாக அவனை உயர்த்துவதற்காக கர்த்தர் மோசேயை சீனாய் மலைக்கு அழைத்தார். இது இஸ்ரவேலர்களை மோசேயிக்கும், கர்த்தருக்கும் பயப்படச் செய்தது. மேலும் இஸ்ரவேலர்கள், மோசே கர்த்தரிடம் பேசியதைப் பார்த்து, அவனை விசுவாசிக்க முன் வந்தனர், ஏனெனில் கர்த்தர் மோசேயிடம், அவருடைய நண்பனிடம் பேசுவதைப் போல பேசினார்.

இதைப் போல, இஸ்ரவேல் மக்களுக்கு மோசே வெளியிட்ட கர்த்தருடைய வார்த்தையை கர்த்தர் அவர்களிடம் பேசிய வார்த்தையால் இஸ்ரவேலர்களால் முழுமையாக விசுவாசிப்பட்டது. ஆனாலும், மோசேயை மிகவும் உயர்வாக கருதி, தங்களுடைய இருதயங்களுக்குள் மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாமல் இஸ்ரவேல் மக்கள் ஒரு பெரிய தவறைச் செய்து விட்டார்கள் உடனடியாக இஸ்ரவேலர்கள் தங்களுடைய மேசியாவை அடையாளங்கண்டு கொள்ள தவறிவிட்டார்கள். மேலும் இதனால் அவருடைய மீட்பின் அன்பை நிராகரித்தனர். அவர்களுக்கு முன்பு ஒரு பெரிய காரியம் இப்பொழுது இருக்கிறது-அது மோசேயை விட சிறந்த தீர்க்கதரிசியாகிய

இயேசு கிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராக தம் இருதயங்களுக்குள் ஏற்றுக் கொள்வதாகும்.

கர்த்தர் தமக்கொரு ஆசரிப்புக் கூடாரத்தை அமைக்குமாறும் அவருக்கு பலி காணிக்கையைக் கொடுக்குமாறும் இஸ்ரவேல் மக்களுக்கு கட்டளையிட்டார்

மோசேயின் மூலமாக கர்த்தர் அவருடைய சத்தியத்தையும் கட்டளையையும் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்தார். மேலும் ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டும்படி அவர்களிடம் சொன்னார். ஆசரிப்புக் கூடாரத்தில், இஸ்ரவேலர்களின் பாவத்தை உண்மையில் அகற்றிய கர்த்தருடைய இரக்கத்தின் அன்பு அதனுடைய பலி முறையின் மூலம் வெளிப்பட்டது. ஆசரிப்புக் கூடாரத்தினுடைய இந்த பலி அமைப்பின் மூலமாக, ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியினருக்கும் கர்த்தர் பாவத்தின் மீட்பையும் கொடுத்துள்ளார். மேலும் அவர்களுடைய எல்லாப் பாவங்களையும் அவர் கழுவி விட்டார். இதனால் கர்த்தருடைய சொந்த மக்கள் ஆவதற்காக அவர்களிடம் எந்த குறையும் இருக்காது.

கர்த்தர் அவருடைய பத்து கட்டளைகள் பொறிக்கப்பட்டுள்ள இரண்டு கல் பலகைகளை இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்தார். பத்து கட்டளைகள், கர்த்தருக்கும் மனித குலத்திற்கும் இடையே வைக்கப்பட வேண்டிய முதல் நான்கு கட்டளைகளாலும் மனித உறவுகளுக்குள் வைக்கப்பட வேண்டிய மற்ற ஆறு கட்டளைகளாலும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பத்து கட்டளைகளைத் தவிர, இஸ்ரவேல் மக்களுக்கு அவர்களுடைய அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நூற்று கணக்கான கட்டளைகளைக் கர்த்தர் கொடுத்துள்ளார்.

இஸ்ரவேலர்களின் இருதயங்களில் கர்த்தர் மட்டுமே தனித்துவமும், சரியான பரிசுத்தமானதுமான உயிரோடிருப்பவர் என்பதைக் காண்பிப்பதற்காகவே அவர்களுக்கு இவ்வளவு சத்தியத்தையும் கட்டளையையும் கொடுத்தார். இஸ்ரவேலின் ஆவிக்குரிய மக்களுக்கு, அதாவது இயேசுவை தங்கள் மீட்பராக விசுவாசிப்பவர்களுக்கு கர்த்தரை தவிர வேறு எந்த பரிசுத்தம் நிறைந்தவரும் இருக்க முடியாது. அவர் தான் யோகோவா என்ற சத்தியத்தை கானான் தேசத்திற்குள் நுழைவதற்கு முன் இஸ்ரவேல் மக்களுக்கு தெளிவாக போதிக்க வேண்டும் என்பதற்காக, அவருடைய சத்தியத்தை அவர்களிடம் கொடுப்பதற்காக சீனாய் மலையில் மோசேயிடம் கர்த்தர் பேசினார். மேலும் எப்பொழுதெல்லாம் கர்த்தருடைய கட்டளைகளை முறித்து அவர்கள் பாவம் செய்தார்களோ, அப்பொழுதெல்லாம், அவர் அமைத்து வைத்துள்ள பலி முறைக்கு ஏற்ப, ஆசரிப்பு கூடாரத்தில் பலி காணிக்கையை கொடுப்பதின் மூலம் அவர்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் அவர்களை மன்னிக்கவும் செய்தார்.

இஸ்ரவேல் மக்கள் சத்தியத்தையும் கட்டளையையும் கர்த்தரிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள்

யாத்திராகமம் 24:3-8ஐ நாம் பார்க்கலாம்: *"மோசே வந்து, கர்த்தருடைய வார்த்தைகள் யாவையும் நியாயங்கள் யாவையும் ஜனங்களுக்கு அறிவித்தான். அப்பொழுது ஜனங்களெல்லாரும் ஏகசத்தமாய்: கர்த்தர் அருளின எல்லா வார்த்தைகளின்படியும் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைத்து, அதிகாலமே*

எழுந்து, மலையின் அடியில் ஒரு பலிபீடத்தைக் கட்டி, இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களை நிறுத்தினான். இஸ்ரவேல் புத்திரரின் வாலிபரை அனுப்பினான்; அவர்கள் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தி, கர்த்தருக்குச் சமாதானபலிகளாகக் காளைகளைப் பலியிட்டார்கள். அப்பொழுது மோசே அந்த இரத்தத்தில் பாதி எடுத்து, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் தெளித்து, உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்து, ஜனங்களின் காதுகேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள். அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து, ஜனங்களின்மேல் தெளித்து, இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்."

மோசேயின் மூலம் இஸ்ரவேல் மக்களுக்கு சத்தியத்தை கொடுக்கும் பொழுது தன்னுடைய இரத்தத்தினால் கர்த்தர் உடன்படிக்கைச் செய்தார். கர்த்தருடைய சத்தியம் தான் வாழ்க்கையின் சத்தியம் என்று இது சுருக்கமாக சொல்லுகிறது. இஸ்ரவேலர்களிடத்தில் கர்த்தர் அவருடைய வாழ்க்கையின் சத்தியத்தைப் பேசினார். மேலும் இஸ்ரவேல் மக்கள் அவருடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டியிருந்தது.

இதைப் போலவே தகன பலியின் இரத்த காணிக்கையையும், அமைதி காணிக்கையும் கொண்டு வரும்படி இஸ்ரவேலர்களிடத்தில் மோசே சொன்னான். மோசே அவனுடைய மக்களைக் கூட்டி, சட்டத்தையும், கட்டளைகளையும், கர்த்தருடைய உடன்படிக்கையையும் அவர்களுக்கு வாசித்து காட்டும்படி கர்த்தர் செய்தார். அதன் பிறகு, மோசே அவர்களிடம் "கர்த்தர் உங்களுக்கு கட்டளையிட்ட படி நீங்கள் கீழ்ப்படிவீர்களா?" என்று

கேட்டான். தாம் எல்லோரும் அவருக்கு கீழ்ப்படிவோம் என்று இஸ்ரவேலர்கள் ஒரே குரலில் கர்த்தருக்கு பதிலளித்தார்கள்.

"நான் உங்களை பாதுகாத்து இராஜ்ஜியத்தின் ஆசாரியர்களாக உங்களை ஆக்குவேன்" என்று கர்த்தர் மோசேயின் மூலமாக இஸ்ரவேலர்களுக்கு வாக்களித்தார். பின்பு மோசே தகன பலியின் இரத்தத்தையும் அமைதியையும் அவர்கள் மேலே தெளித்தான். ஒருவன் பாவம் செய்யும் பொழுது, அவளோ/அவனோ பலி காணிக்கையின் மூலமாக மன்னிக்கப்பட வேண்டும் என்று இது காண்பித்தது. கர்த்தர் பேசியதை, வாழ்வின் வார்த்தையாக நாம் ஏற்று கொள்ள வேண்டும். மோசே காணிக்கையின் இரத்தத்தை எடுத்து அவனுடைய மக்களின் மேல் தெளித்து பிறகு *"இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே"* எனக் கூறினான். கர்த்தருடைய வார்த்தை வாழ்க்கையுடைய வார்த்தையாய் இருப்பதால், அதை நாம் கைக்கொள்ளவில்லை என்றால் பின்பு நாம் பலி காணிக்கையின் தலையின் மேல் நம்முடைய கைகளை வைப்பதின் மூலம் நம்முடைய பாவங்களை அதற்குள் செலுத்த வேண்டும், அதை கொன்று நம்முடைய பாவங்களுக்காக அதனுடைய பலி காணிக்கையை கர்த்தருக்கு கொடுக்க வேண்டும்.

இந்த கர்த்தருடைய சட்டத்தில் நம்முடைய பாவங்களுக்கு தண்டனை இருக்கிறது, ஆனால் அதே சமயத்தில் நம்முடைய பாவங்களை கழுவி விடும் பலி முறையும் அங்கு இருக்கிறது என்பதையும் நாம் அறிய வேண்டும். இதனால், கர்த்தருடைய சட்டத்தையும் கட்டளையையும் நாம் கையாளும் பொழுது, இந்த சட்டத்திலும் கட்டளைகளிலும், நம்முடைய பாவங்களுக்கு மீட்பை நமக்கு தரக் கூடிய காணிக்கை காணப்படுகிறது என்பதை நாம் அடையாளங் கண்டுகொள்ளும்பொழுதே,

அவற்றை நாம் நம்முடைய இருதயங்களுக்குள் ஏற்றுக் கொள்ள முடியும். இந்த விசுவாசம் கண்டிப்பாக தேவை. கர்த்தருடைய சட்டத்தை நாம் கடைப்பிடிக்கும் பொழுது நாம் ஆசீர்வதிக்கப்படுவதால், நம்முடைய பலி காணிக்கையின் மூலம், நாம் நம்முடைய பாவங்களைக் கழுவ வேண்டும் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். இதைப் போல பாவம் செய்தவர்கள், பலி காணிக்கையின் தலையின் மேலே கைகளை வைத்து அவர்களுடைய பாவங்களை அதற்குள் செலுத்தி கூடவே அதனுடைய பலி இரத்தத்தை எடுத்து கர்த்தருக்கு படைப்பதின் மூலமாகவும் அவர்களுடைய பாவங்களுக்கான மீட்பை பெற்றுக் கொள்ள வேண்டும். சட்டமும் பலி முறையும் தான் வாழ்க்கையின் சட்டம் என்பதையும், இதன் மூலம் தான் கர்த்தரிடம் இருந்து புதிய வாழ்வை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும் நாம் எல்லோரும் உணர்ந்து விசுவாசிக்க வேண்டும்.

இதனால், கர்த்தருடைய சட்டம் நம்முடைய பாவங்களைக் குறித்து நமக்கு போதிக்கும் வேளையில், இயேசு கிறிஸ்து யோவானிடமிருந்து பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தின் மூலமாகவும் சிலுவையின் மீதான அவருடைய இரத்தத்தின் மூலமாகவும் நம்முடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்டன என்று நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி இதற்கு எதிராக நமக்கு காண்பிக்கிறது இதனால் தான் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை மீட்டுள்ள சத்தியமாக இது உள்ளது.

பழங்காலங்களில், கோத்திரத்தார் ஒருவருகொருவர் சத்தியம் செய்து கொள்ளும் பொழுது சில வகையான பலி காணிக்கையை கொண்டு வந்தார்கள். அவர்கள் ஆடு செம்மறியாடு மற்றும் காளைகளை கொண்டு வந்து, அவற்றினுடைய தொண்டையை அறுத்து அதிலிருந்து எடுக்கப்படும் இரத்தத்தினால், ஒப்பந்தத்தைக் குறித்துக் கொண்டார்கள். ஒப்பந்தத்தினுடைய முக்கியமான

நிபந்தனைகளை இது சுட்டிக்காட்டியது, ஏனென்றால், என்னுடன் நீ செய்து கொண்ட உடன்படிக்கையை நீ கைக்கொள்ளவில்லை என்றால் பிறகு நீ கண்டிப்பாக இந்த முறையில் இறப்பாய் என்று இது குறிப்பிட்டது. சுருக்கமாக கூறினால் இரத்தத்தினால், அவர்களுடைய ஒப்பந்தம் அமைக்கப்பட்டது.

இதைப் போல, கர்த்தர் இரத்தத்தினால் அவருடைய சட்டத்தை அமைத்துள்ளார். அவருடைய 613 சட்டங்களையும் கட்டளைகளையும் கடைப்பிடிக்க நாம் தவறினால், நம்முடைய பாவங்களுக்காக நாம் கொல்லப்படுவோம் என்று அவர் நமக்கு வேறு விதமாக சொன்னார். ஆனால் அதே சமயத்தில், ஆசரிப்பு கூடாரத்தினுடைய பலி காணிக்கையின் மூலமாக, விசுவாசத்துடன் அவருக்கு காணிக்கை கொடுப்பதின் மூலம் நம்முடைய பாவங்களுக்கான மீட்பை பெற்றுக் கொள்ளும் படி அவர் நமக்கு சொல்லி இருக்கிறார்.

கர்த்தருடைய சட்டத்தின் வார்த்தையை முக்கியமானதாக எடுத்து கொள்ளவில்லை என்றால் நம்முடைய பாவங்களுக்காக, கர்த்தரிடமிருந்து வரும் பெருங்கோபத்திலிருந்து நாம் எப்பொழுதும் தப்பிக்க முடியாது. ஆனால் நமக்காக அவர் அமைத்து வைத்துள்ள பலி காணிக்கைகளை நாம் அவருக்கு கொடுத்தால், கர்த்தர் இந்த எல்லாப் பலி காணிக்கைகளையும் பெற்றுக் கொண்டு நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மன்னிப்பார். நாமெல்லாரும் இந்த வாழ்க்கையின் சட்டத்தை விசுவாசிக்க வேண்டும். இஸ்ரவேல் மக்கள் தம் எல்லோருடைய பாவங்களையும் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலி முறையின் மூலம் கர்த்தர் மன்னிப்பார் என்றும், இதன் மூலம் நம்முடைய பாவங்களுக்கான மீட்பை இருதயங்களுக்குள் பெற்றுக் கொள்ளலாம் என்றும் இந்த மீட்பின் சட்டம் சொல்லுகிறது. யாரெல்லாம் கர்த்தருடைய சட்டத்தை வெறுக்கிறார்களோ

அவர்களெல்லோரும் கர்த்தருடைய அன்பின் இரக்கத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளனர், மேலும் இதைப் போல சட்டத்தையும் பலி முறையையும் மீட்பின் சத்தியமாக நம்முடைய சொந்த வாழ்க்கையை போல் நாமெல்லோரும் விசுவாசிக்க வேண்டும்.

இதனால் தான் மோசே இரத்தத்தால் ஒப்பந்தத்தை வாசித்தான், மேலும் இஸ்ரவேல் மக்கள் மீது தெளிக்கப்பட்ட இந்த இரத்தத்தினால், கர்த்தருக்கு அவர்களுடைய உடன்படிக்கையை இரத்தத்தினால் செய்தார்கள். இதனால் நாம் இந்த சட்டத்தை இரத்தத்தினால் அமைத்து கைக்கொள்ளவில்லை என்றால் நாமெல்லாரும் இறக்க வேண்டும் என்பதை உணர்ந்து, சட்டத்துடன், கர்த்தருக்கான நம்முடைய தகன காணிக்கை மற்றும் அமைதி காணிக்கையின் பலி ஆக இருக்கும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களுக்கான மீட்பையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலி முறைக்கு ஏற்ப கர்த்தருக்கு நம்முடைய பலி காணிக்கைகளை கொடுப்பதின் மூலம் நாமெல்லாரும் நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும் மன்னிக்கப்படுவோம் என்ற சத்தியத்தை நாமெல்லாரும் அறிந்து விசுவாசிக்க வேண்டும். டீளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் மனித குலத்தின் பாவ மீட்பைக் குறித்து கர்த்தர் நமக்கு தெளிவாக போதித்துள்ளார். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு, பலி காணிக்கையின் தலையின் மீது தங்களுடைய கைகளை வைத்து தம் எல்லாப் பாவங்களையும் அதன் மேல் செலுத்த வேண்டும். மேலும் இந்த பலி, தன்னுடைய இரத்த காணிக்கையை, தகன காணிக்கையின் பலி பீடத்தினுடைய கொம்புகள் மீது சிந்த வேண்டும். மேலும் எஞ்சியுள்ள அதனுடைய இரத்தம்

நிலத்தின் மீது ஊற்றப்பட வேண்டும்.

பாவம் மற்றும் மரணத்தின் சட்டத்திற்கு முற்றிலும் தேவைப்பட்ட பலி காணிக்கை இது தான், எனவே, நம்முடைய விசுவாசத்தின் மூலம் நம்முடைய பாவங்களை அகற்றி போடும் பலி காணிக்கையால் சத்தியம் செய்யப்பட்டுள்ள பாவத்தின் மீட்பை நாமெல்லாரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆசரிப்புக் கூடாரத்தின் பலி முறையை நமக்கு கொடுத்ததன் மூலம் கர்த்தர் நமக்கு மீட்பின் சட்டத்தைக் கொடுத்துள்ளார். இதனால் நாம் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிப்போம். மேலும் நம்முடைய எல்லா பாவங்களுக்காகவும் மன்னிக்கப்படுவோம். சட்டமும் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலி முறையும் கர்த்தர் மனித குலத்திற்கு கொடுத்துள்ள இரண்டு சட்டங்கள் ஆகும். இவ்விரண்டு சட்டங்களையும் நம்முடைய இருதயங்களுக்குள் ஏற்றுக் கொள்வதின் மூலம் கர்த்தர் கொடுத்துள்ள பாவத்தின் மீட்பின் ஆசீர்வாதத்தை நாமெல்லாரும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் எப்படி மீட்கப்படுவோம்?

கர்த்தர் மோசேயிற்கு கொடுத்த பலி முறையின் மூலமாக, அவர்களுடைய பலி காணிக்கையின் மூலமாக அவர்களுடைய பாவ மன்னிப்பில் இருக்கும் விசுவாசத்தின் மூலமாக மட்டுமே, அவர்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிப்பு சாத்தியம் என்பதை இஸ்ரவேல் மக்களுக்கு அவன் காண்பித்தான்.

கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட பலி காணிக்கையில் விசுவாசம் இருக்கும் நம்முடைய விசுவாசத்தை நாம் அவருக்கு கொடுக்கும் பொழுது, அவர் நம்முடைய விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டு நம்முடைய எல்லா

பாவங்களிலிருந்தும் நம்மை இரட்சிப்பார். ஏன்? ஏனென்றால் கர்த்தர் ஏற்கெனவே முழு மனித குலத்தையும் அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்டுள்ளார் மேலும் யார் விசுவாசிக்கிறார்களோ, அவர்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து புனிதப்படுத்தும் அவருடைய ஆசீர்வாதத்தை அவர் தருகிறார். தனித்துவத்துடன் இருக்கும் ஒருவரால் அமைக்கப்பட்ட பலி முறையின் மூலமாக இரட்சிப்பின் சட்டத்தை நாம் அறிந்து கொள்ளும்படி கர்த்தர் செய்துள்ளார். இயேசு கிறிஸ்து அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாகவும், சிலுவையின் சிந்திய அவருடைய இரத்தத்தின் மூலமாகவும் அவனுடைய/அவளுடைய பாவங்களையெல்லாம் நிரந்தரமாக கழுவி விட்டார் என்ற உண்மையை ஒருவர் விசுவாசிக்காமலோ, அறியாமலோ இருந்தால், அவனோ/அவளோ கண்டிப்பாக தண்டிக்கப்படுவார்கள். கர்த்தருடைய அன்பின் இரக்கத்தை நாமெல்லாரும் விசுவாசிக்க வேண்டும்.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலி முறையின் மூலமாக கர்த்தர் நம்மை மீட்டுள்ளார். பலியின் தலையின் மீது நம்முடைய கைகளை வைத்து அதன் மீது நம்முடைய பாவங்களை செலுத்தும்படி அவருடைய இரட்சிப்பின் முறை இருந்தது. இதைப் போல இந்த சத்தியத்தை யார் விசுவாசிக்கிறார்களோ, அவர்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து கழுவ அனுமதித்துள்ள கிருபையின் நற்செய்தியை நாமெல்லாரும் விசுவாசிக்க வேண்டும். கர்த்தருக்கு முன்பாக பலி முறையையும் சட்டத்தையும் அடையாளங் கண்டு கொள்ளாதவர்களால் நிரந்தரமாக எப்பொழுதுமே பாவத்தின் இரட்சிப்பை பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால் கிருபையின் நற்செய்தியை விசுவாசிக்கும் எல்லோராலும் நிரந்தரமாக அவர்களுடைய பாவத்தின் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

கர்த்தர் நம்மை பாவம் செய்யக்கூடாது என்று மட்டும்

சொல்ல வில்லை ஆனால் ஒவ்வொரு நாளும் பாவம் செய்வதை தடுக்க முடியாத, பாவம் செய்யும் பாவமுள்ள உயிர்களாக நாம் இருக்கிறோம் என்று அவர் நமக்கு போதித்தார். ஆதலால் இந்த பாவங்களுக்கான இரட்சிப்பை பெற்றுக் கொள்வதற்காக நம்முடைய பலி காணிக்கையை அவருக்கு தரும்படி நமக்கு சொன்னார். ஒரு பாவி எப்பொழுது பலி காணிக்கையை தர வேண்டும் என்று இதனால் தான் கர்த்தர் கூறினார், *"மண்ணினாலே பலிபீடத்தை எனக்கு உண்டாக்கி, அதின்மேல் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் சர்வாங்க தகனபலியாகவும் சமாதானபலியாகவும் செலுத்துவாயாக; நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்" (யாத்திராகமம் 20:24).*

இஸ்ரவேலர்கள் கர்த்தருக்கு கொடுத்த பலி காணிக்கையானது பலியினுடைய தலையின் மீது தம் கைகளை வைத்து தங்களுடைய பாவங்கள் அதற்குள் செலுத்தப்பட்டு, அதனுடைய இரத்தத்தை எடுத்து தகன பலி பீடத்தின் மேல் ஊற்றி காணிக்கையை கொடுக்க வேண்டியிருந்தது. கர்த்தரால் கொடுக்கப்பட்டுள்ள இரட்சிப்பின் சட்டம் கர்த்தருக்கு வேண்டியிருந்த காணிக்கை சடங்குகள் சம்மந்தப்பட்ட ஒன்றாக இருக்க வில்லை. ஆனால் கர்த்தருடைய கிருபையில்லை என்றால் நிச்சயமாக அவர்கள் நரகத்திற்கு தள்ளப்படுவார்கள் என்பதை விசுவாசித்து, தங்களுடைய எல்லாப் பாவங்களையும் விசுவாசத்துடன் பலி காணிக்கைக்குள் செலுத்தும் ஒரு உத்திரவாதமுள்ள ஒன்றாக இருந்தது.

நம்முடைய தேவன் யோவானால் ஞானஸ்நானம் செய்யப்பட்டார் மேலும் நம்முடைய பாவங்களை மறைய செய்வதற்காக அவருடைய இரத்தத்தை சிலுவையில் சிந்தினார். இதே மாதிரியான பலி காணிக்கையின் மூலமாக நம்முடைய பாவங்களை அகற்ற முடிவு செய்தார்.

இந்த விசுவாசமான காணிக்கையானது இயேசு கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்ட புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பின் காணிக்கையை முன் கூட்டியே கூறியது. அதாவது இயேசு இந்த உலகத்திற்கு வந்தார், யோவானிடமிருந்து பெற்றுக் கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தினால் இந்த உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்டார். சிலுவையில் மரித்தார், மேலும் இதன் மூலம் முழு மனித குலத்தையும் அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சித்தார். நம் எல்லோருடைய இருதயங்களில் இந்த சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலமாக நாம் கர்த்தருடைய பிள்ளைகளாகிறோம்.

இறையியல் விசுவாசத்தை நாம் விட்டு விட வேண்டும்

யாத்திராகமம் 20:25-26 கூறுகிறது, *"எனக்குக் கல்லினால் பலிபீடத்தை உண்டாக்க வேண்டுமாகில், அதை வெட்டின கல்லுகளால் கட்டவேண்டாம்; அதின்மேல் உளியிட்டவுடனே, அதை அசுசிப்படுத்துவாய். என் பலிபீடத்தின் மேல் உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு, படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம்."* இந்த வசனத்தில் கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைக் காண நாம் கவனம் செலுத்த வேண்டும். இஸ்ரவேலர்கள் கல்லினால் பலி பீடத்தை கட்ட வேண்டும் என்றால் அவர்கள் அதை உருவம் கொடுக்கப்பட்ட கல்லால் கட்ட கூடாது என்றும், ஆனால் உண்மையான வடிவத்திலும் உருவத்திலும் இருக்கும் கற்களால் தான் கட்ட வேண்டும் என்றும் கர்த்தர் கூறினார். பலி பீடத்தைக் கட்டவேண்டும் என்றால் இப்படித் தான் செய்ய வேண்டும் என்று கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு சொன்னார். இது என்ன

சொல்லுகிறது? அவருடைய மீட்பில் நமக்கு இருக்கும் விசுவாசத்தை ஏற்றுக் கொள்ளும் போது கர்த்தர் மகிழ்கிறார் என்றும் இது மனித எண்ணத்தால் எப்பொழுதுமே கூட்டவே மாற்றியமைக்கவே முடியாது என்றும் இது சொல்லுகிறது.

"என் பலிபீடத்தின் மேல் உன் நிர்வாணம் காணப்படாதபடிக்கு, படிகளால் அதின்மேல் ஏறவும் வேண்டாம்" என்ற வார்த்தையின் மூலம் மனிதனால் உருவாக்கப்பட்ட மத விசுவாசத்தின் மூலம் அவரைத் தொழுது கொள்ள வேண்டாம் என்று கர்த்தர் நம்மை எச்சரிக்கிறார். உலகத்தில் உள்ள எல்லா மதங்களும், மனிதனால் அமைக்கப்பட்ட விசுவாச அமைப்பே தவிர வேறில்லை. மக்கள் தங்களுடைய விசுவாசமான மத வாழ்க்கையை வாழும்போதே படிப்படியாக பரிசுத்தமாக முயற்சி செய்வது குறித்து சொல்லும் பொதுவான மற்றும் அடிப்படையான தத்துவத்தை தங்களுடைய சொந்த மதத்திற்குள்ளேயே அமைத்துக் கொள்கிறார்கள். இதனை கர்த்தருடைய சட்டத்திற்கேற்ப அமைத்துக் கொள்கிறார்கள். கர்த்தருடைய சட்டத்திற்கேற்ப நேர்மையான வாழ்க்கை வாழும் பொழுதே அவர்கள் அதிகமாக புனிதப்படுத்தபடுவார்கள் என்று கிறிஸ்துவ மத வாதிகளும் கூட முறையிடுகிறார்கள்.

ஆனால் இது உண்மையா? கண்டிப்பாக இல்லை! மக்கள் ஆதாமின் சந்ததியாராக பிறப்பதினால், அவர்களுடைய பாவங்களுக்காக கர்த்தருடைய சட்டத்தை பின்பற்ற முடியாமல் இருப்பதுடன், தம் பாவங்களின் காரணமாக அவர்கள் சந்திக்க வேண்டிய நிச்சயமான மரணத்தை தவிர்க்க முடியாது. இதனால் உலகத்தினுடைய எல்லா பாவங்களிலிருந்தும் இது போன்ற எல்லா மக்களையும் மீட்பதற்காக ஆசரிப்பு கூடாரத்தின் பலிமுறையை கர்த்தர் அழைத்தார், மேலும் அவர்கள் எல்லோரையும் அவர் மீட்டுள்ளார்.

இதனால் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிற்கதவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால், கர்த்தர் நமக்காக அமைத்துள்ள நம்முடைய மீட்பையும் நம்முடைய பாவ மன்னிப்பையும், நற்செய்தியின் கிருபையையும் நாமெல்லாரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து கர்த்தருடைய வார்த்தையாக உலகத்திற்கு வந்தார். ஆசரிப்பு கூடாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால், முன்னறிவிக்கப்பட்டதைப் போல அவருடைய வேலையைச் செய்தார், என்றும் இதற்கேற்ப நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவித்துள்ளார் என்றும் வேத வசனத்தில் எழுதப்பட்டுள்ளதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

ஆனால் மதம் மற்றும் இறையியல் விசுவாசம் மட்டுமே உடைய மக்களைப் பற்றி என்ன? அவர்களுடைய அன்றாட பாவங்களிலிருந்து மன்னிக்கப்படுவதற்கு அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? மனத்திரும்பி ஜெபிப்பதின் மூலமாகவும், கடைசியில் அதிகமாக புனிதபடுத்தும் போதனையின் மூலமாக நீதிமானாக முயற்சி செய்வதின் மூலமாகவும் அவர்களுடைய பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள இது போன்ற மக்கள் முயற்சி செய்கிறார்கள். மனிதனுடைய சொந்த படைப்பான போதனை விசுவாசம் மாயையாய் இருக்கிறது. ஒருவருடைய சொந்த முயற்சியால் கர்த்தரை சந்திக்க முயற்சி செய்வது கர்வமிகுந்ததாய் இருக்கிறது. மேலும் இது ஒருவருடைய சொந்த படைப்பான மத தீமை என்ற உண்மையை தவிர வேறில்லை.

கர்த்தருக்கு முன்பாக தங்களுடைய எல்லாப் பாவங்களையும் மறைய செய்வதற்கு அவர்களால் செய்ய

கூடியது ஒன்றும் இல்லை என்பதை மக்கள் முதலில் ஒப்புக்கொள்ள வேண்டும். நாம் இந்த உலகத்தில் பிறந்த பொழுது நம்முடைய சொந்தப் பாவங்களைச் செய்ய கூடியதிலிருந்து தடுக்க முடியாத, ஆனால் பாவம் செய்யக் கூடியவர்களாக நாமெல்லாரும் பிறந்துள்ளோம். இதனால் நாம் எப்பொழுதுமே அதிக பாவங்களைச் செய்துக் கொண்டிருக்கிறோம். கர்த்தர் அவருடைய சட்டத்தின் மூலம், நம்மை பாவம் செய்ய வேண்டாம் என்று எத்தனையாய் கூறினாலும் அவருக்கு முன்பாக பாவம் செய்யக்கூடியவர்களாகவும் அவருடைய சட்டத்தின் முழு அமைப்பையும் உடைப்பதை தவிர்க்க முடியாதவர்களாகவுமே இருக்கிறோம். ஆகவே நாம் பாவமானவர்கள் என்று கர்த்தருடைய சட்டத்திற்கு முன்பாக நாம் அறிக்கை செய்ய வேண்டும். மேலும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் வெளிப்படுத்தப் பட்டுள்ள நம்முடைய தேவனாகிய இயேசுவின் செயல்களின் மூலம் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் கர்த்தர் மீட்டுள்ளார் என்ற இரட்சிப்பின் உண்மையை நம்முடைய முழு இருதயங்களுடன் நாம் விசுவாசிக்க வேண்டும்.

உலகத்தினுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை விடுதலையாக்குவதற்காக தேவனே அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய சொந்த பலி காணிக்கை ஆனார் என்பதையும் இதன்படி உலகத்தினுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை மீட்டுள்ளார் என்ற கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிப்பதை தவிர வேறு எந்த வழியும் இல்லை. யேகோவாவைத் தவிர வேறு எந்த கர்த்தரும் கிடையாது என்றும் கிறிஸ்துவின் மூலமாய் இல்லாமல் யாரும் பிதாவினிடத்தில் வர முடியாது என்றும் வேதாகமம் நமக்கு சொல்லுகிறது (யோவான் 14:6). கர்த்தருடைய சட்டத்தின்

வார்த்தையை விசுவாசித்து அதனை ஏற்றுக் கொள்வதின் மூலம் நாம் பாவிகளாகிறோம், மேலும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பதின் மூலம் நாம் நம்முடைய பாவங்களிலிருந்து மீட்கப்படுகிறோம். இது தான் சத்தியமும் கர்த்தருக்குள் நமக்கு இருக்கும் விசுவாசமுமாயிருக்கிறது.

இதைப் போல அவருடைய இரட்சிப்பை நாமெல்லாரும் விசுவாசிக்க வேண்டும், ஏனென்றால் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்பதற்காக நம் தேவன் அமைத்து வைத்துள்ள பாவ மன்னிப்பின் சட்டத்திற்கேற்ப இது இருக்கிறது. கிறிஸ்தவம் என்பது உலகில் உள்ள பல மதங்களுள் ஒன்றில்லை. ஆனால் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் தோன்றிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் நம்முடைய விசுவாசத்தின் அஸ்திவாரத்தில் கட்டுப்பட்டுள்ள மீட்பின் சத்தியம் இது.

மேலே உள்ள முக்கிய வசனத்தின் மூலம் நம்மை ஏன் கர்த்தர் அழைத்துள்ளார் என்பதை உணர வேண்டும்

என்னையும் உங்களையும் அவருடைய சிறப்பான ஜனமாவதற்கு கர்த்தர் அழைத்துள்ளார் என்பதை நாமெல்லாரும் உணரவேண்டும். நம்முடைய சொந்த செயல்களாலும் முயற்சிகளாலும் நீங்களும் நானும் கர்த்தருடைய மக்களாக எப்பொழுதுமே ஆக முடியாது. ஆனால் நரகத்தினுடைய அழிவு மற்றும் தண்டனையிலிருந்தும் சட்டத்தினுடைய சாபத்திலிருந்தும் நம்மை விடுவிக்க இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார் என்ற சத்தியத்தை விசுவாசித்ததனால் நீங்களும் நானும் கர்த்தருடைய பிள்ளைகளாகி உள்ளோம்.

யோவானால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதையும் சிலுவை மீது அவருடைய இரத்தத்தைச் சிந்தியதையும் விசுவாசிக்கும் நம்மை முழுமையாக அவர் மீட்டுள்ளார். தேவகுமாரனாகிய மேசியா, மனித சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக ஒரே சமயத்தில் மனித குலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொண்டார், நம்முடைய பாவங்களுக்கு கூலி கொடுப்பதற்காக, மரணத்தின் மூலம் நமக்காக அவரையே பலியாக்கினார், மீண்டும் மரணத்திலிருந்து எழுந்தார். இதனைத் தங்களுடைய முழு இருதயங்களுடன் விசுவாசிப்பவர்களுக்கு மீட்பராகியுள்ளார்.

கர்த்தருடைய இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் மனித குலத்திற்கு சரியான பாவமன்னிப்பைக் கொடுத்துள்ளார் என்று அவர் நமக்கு சொல்லுகிறார் "நான் இந்த உலகத்திற்கு வந்தேன், யோவானால் ஞானஸ்நானம் செய்யப்பட்டேன், மேலும் என்னுடைய இரத்தத்தை சிலுவையின் மீது சிந்தி உங்கள் பாவங்களுக்கு மன்னிப்பை அளித்துள்ளேன் என்ற என்னுடைய செயலை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?" என்று தேவன் நம்மை கேட்கிறார். கர்த்தருக்கு முன்பாக நாம் சொல்லக்கூடியது எல்லாம் "ஆமாம்" தான். நாம் இரட்சிக்கப்படுவதற்காக, கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள பாவ மன்னிப்பை விசுவாசிப்பதைத் தவிர வேறு வழியில்லை. பழைய ஏற்பாட்டு நாட்களின் இஸ்ரவேலர்கள் மட்டும் அல்ல, இன்றைய நீங்களும் நானும் முழு உலகத்தினுடைய எல்லா மக்களும் கர்த்தர் ஏன் மோசேயை சீனாய் மலைக்கு அழைத்து முக்கியமான வசனத்தினுடைய இந்த வார்த்தையை ஏன் பேசவேண்டும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு பத்து கட்டளைகளைக்

கொடுத்திருந்தார். கூடவே அவர்களுடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக விசுவாசத்துடன் ஒரு மண் பலிப்பீடத்தை கட்டும்படி அவர்களிடம் கூறினார் (யாத்திராகமம் 20:24). இதைப் போல, கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் தெரிவிக்கப்பட்டுள்ள நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் இருக்கும் நம்முடைய விசுவாசத்தின் மூலமாக, நாமும் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்கப்படவேண்டும்.

கர்த்தருடைய பெயர் என்ன? அவருடைய பெயர் 'யாவே' அப்படியென்றால் 'நான் நானே தான்' அதாவது அவராலே அவர் இருப்பவர் தான் கர்த்தர். பின்பு எப்படி அவர் நம்மிடம் வந்தார்? நீர் மற்றும் ஆவியின் மூலமாக அவர் நம்மிடம் வந்தார் (யோவான் 3:5). நம்முடைய தேவன் மனித சரீரத்தினால் இந்த உலகத்திற்கு வந்தார், யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டதன் மூலம் மனித குலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்டார், மேலும் சிலுவை மரணத்தின் மூலம் நமக்காக அவர் பலியானார். இது எல்லாம் சத்தியமாக இருப்பதால் ஆசரிப்பு கூடாரத்தினுடைய பிரகாரத்தின் நுழைவு வாயிலில் இருக்கும். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் வெளிப்படுத்தப்பட்டுள்ள விசுவாசத்தை உடையவர்களாய் இருக்கும்படி கர்த்தர் நமக்கு கூறியுள்ளதை நாமும் அப்படியே விசுவாசிக்க வேண்டும். கர்த்தரால் கொடுக்கப்பட்டுள்ள பாவமன்னிப்பை அறிந்து, நம்முடைய சொந்த எண்ணங்களை நிராகரிக்கும் பொழுது தான் உண்மையான விசுவாசம் வருகிறது. இப்படிப் பட்ட தாராளமான அன்பை நமக்கு கொடுத்ததற்கு நம்மால் அவருக்கு போதுமான அளவு நன்றி கூற முடியாது, ஏனென்றால் கர்த்தருக்கு முன்பாக நாம் பெருமைப்

பாராட்டக் கூடிய ஒன்றும் நம்மிடம் இல்லை.

கர்த்தருடைய வேதாகமத்தின் ஆழ்ந்த அறிவில் நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தை நாம் வைக்க வேண்டும். இந்த விசுவாசத்தின் அஸ்திபாரத்தைக் குறித்து கர்த்தர் இஸ்ரவேல் மக்களிடத்தில் பேசினார், மேலும் அவர் நம்மிடமும் பேசினார். இன்னமும் கூட ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தின் நுழைவு வாயிலின் நிறங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தை நீங்கள் எல்லோரும் உணர்ந்து விசுவாசிக்க வேண்டும். இந்த விசுவாசத்தின் அஸ்திபாரத்தை அமைக்கும் நிறங்களாக இவை இருக்கின்றன. நாம் உண்மையான கர்த்தரை விசுவாசிக்க வேண்டும். நம்முடைய பாவங்களிலிருந்து உங்களையும் என்னையும் மீட்டு கொள்வதற்கு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய பாவங்களை கர்த்தர் தாமே எடுத்துக் கொண்டு சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தைச் சிந்தினார்.

இஸ்ரவேலின் ஆவிக்குரிய மக்களாக வேண்டும் என்ற நீங்களும், மதமாக்கப்பட்ட கிறிஸ்தவத்தால் அழிக்கப் பட்ட பலி முறையை திரும்ப அமைப்பதின் மூலம் உங்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிக்கப் படுவதற்கு நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிக்க வேண்டும். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகியவற்றால் வெளிப்படுத்தப் பட்டுள்ள இந்த நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை நீங்களும் நானும் தெரிந்து கொண்டு கூடவே மீண்டும் ஒரு முறை நம்முடைய பாவ மன்னிப்பின் விசுவாசத்திற்கான அஸ்திபாரத்தை அமைக்க வேண்டும். இதனால் இது உறுதியாகவும் நன்றாகவும் நிற்கக் கூடும்.

நம்முடைய விசுவாசத்துடன் இயேசுவுக்கு நன்றி சொல்ல வேண்டும். நரகத்திற்கு தள்ளப்படுவதை தடுக்க முடியாத நம்மை அவர் காப்பார். பிதாவாகிய கர்த்தர் இயேசு கிறிஸ்துவை நமக்காக அனுப்பினார், அவருடைய

சத்தியத்தின் வார்த்தையின் மூலம் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகிய நூலாக அவர் வந்தார். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவருடைய நான்கு ஊழியங்களினால் நம்முடைய தேவன் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சித்துள்ளார் என்ற இந்த சத்தியத்தை முழுமனதாக விசுவாசிப்பதின் மூலமாகவும், நம்முடைய எல்லா நன்றியையும் நாம் கர்த்தருக்கு செலுத்துகிறோம். மோசேயை சீயோன் மலைக்கு கர்த்தர் ஏன் அழைத்தார் என்ற காரணத்தை நாம் நன்றாக தெரிந்து கொண்டு விசுவாசிக்கும் பொழுது மட்டுமே உண்மையான பாவ மன்னிப்பின் மேல் சரியான விசுவாசத்தின் அஸ்திபாரத்தை அமைத்தவர்கள் என்று நம்மால் அழைக்கப்பட முடியும். சீனாய் மலையிலிருந்து கர்த்தர் ஏன் நம்மை அழைத்தார், என்ற காரணத்தை நீங்களும் நானும் உணர்ந்து அதை விசுவாசிக்க வேண்டும். இது பலி காணிக்கையின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை மன்னிப்பதற்காகவும் நம்மை அவருடைய சொந்த பிள்ளைகளாக்குவதற்குமேயாகும்.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகார நுழைவு வாயிலில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியத்தில் இருந்து, கர்த்தரின் இரக்கத்தின் அன்பை இன்னமும் அதிகமாக உங்களால் சந்திக்க முடியும். நீங்கள் எல்லோரும் இந்த கர்த்தருடைய இரக்கத்தின் அன்பை விசுவாசித்து, அவற்றை உங்கள் இருதயங்களுக்குள் ஏற்றுக் கொள்வீர்கள் என்பது என்னுடைய நேர்மையான விசுவாசமும் ஜெபமுமாய் இருக்கிறது. ✉

பிரசங்கம்

5

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆசரிப்புக் கூடாரத்திற்கு இஸ்ரவேலர்கள் எப்படி காணிக்கைச் செலுத்த வந்தார்கள்: வரலாற்று பின்னணி

< ஆதியாகமம் 15:1-21 >

"இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்; ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார். அதற்கு ஆபிராம்: கர்த்தராகிய ஆண்டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக் கர்த்தனாய் இருக்கிறானே என்றான். பின்னும் ஆபிராம்: தேவரீர் எனக்குப் புத்திர சந்தானம் அருளவில்லை; இதோ என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருக்கிறான் என்றான். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல, உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று சொல்லி, அவர் அவனை

வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். பின்னும் அவர் அவனை நோக்கி: இந்தத் தேசத்தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும்பொருட்டு, உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்து வந்த கர்த்தர் நானே என்றார். அதற்கு அவன்: கர்த்தராகிய ஆண்டவரே, நான் அதைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதினால் அறிவேன் என்றான். அதற்கு அவர்: மூன்று வயதுக் கிடாரியையும், மூன்று வயது வெள்ளாட்டையும், மூன்று வயது ஆட்டுக்கடாவையும், ஒரு காட்டுப் புறாவையும், ஒரு புறாக்குஞ்சையும், என்னிடத்தில் கொண்டுவா என்றார். அவன் அவைகள் எல்லாவற்றையும் அவரிடத்தில் கொண்டு வந்து, அவைகளை நடுவாகத் துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்; பட்சிகளை அவன் துண்டிக்கவில்லை. பறவைகள் அந்த உடல்களின்மேல் இறங்கின; அவைகளை ஆபிராம் துரத்தினான். சூரியன் அஸ்தமிக்கும்போது, ஆபிராமுக்கு அயர்ந்த நித்திரை வந்தது; திகிலும் காரிருளும் அவனை மூடிக்கொண்டது. அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய். இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த

பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள். நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்; நல்ல முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவாய். நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்; ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை என்றார். சூரியன் அஸ்தமித்துக் காரிருள் உண்டானபின்பு, இதோ, புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினி ஜுவாலையும் தோன்றின. அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதி துவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும் கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்."

கர்த்தருடைய வார்த்தையில் இருந்த ஆபிரகாமின் விசுவாசம்

வேதாகமத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஆபிரகாமின் விசுவாசத்தின் மீது நான் மிகுந்த மதிப்பையும், இரசிப்பையும் வைத்துள்ளேன். ஆபிரகாமுடைய விசுவாசத்தைப் பார்க்கும் பொழுது, அவனுடைய விசுவாசத்தின் எல்லா கஷ்டமான பாடுகளையும் நம்மால் பார்க்க முடியும். இதன் மூலம் தான் யேகோவாவினுடைய வார்த்தைகளை அவன் பின்பற்றினான். மேலும் ஆபிரகாமுடைய இந்த விசுவாசத்தை இரசிப்பதை நம்மால் தவிர்க்க முடியாது. ஆதியாகமம் 12:3 இல் *"உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச்*

சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்கஎெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என கூறப்பட்டுள்ளதைப் போல், ஆபிரகாமை கர்த்தர் சிறப்பாக ஆசீர்வாதித்தார்; இங்கு கர்த்தர் சொல்லியிருக்கிறார், இந்த சிறந்த ஆசீர்வாதம் ஆதியாகமம் 15:1 யிலும் காண்பிக்கப்பட்டுள்ளது, *"நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்"* என்று இங்கு ஆபிரகாமிற்கு கர்த்தர் தெரிவித்துள்ளார். கர்த்தர் ஆபிரகாமிற்கு இது போன்ற சிறந்த அன்பை வைத்திருந்ததால் அவர் அவனுடைய சொந்தமான கர்த்தர் ஆனார்.

சால்டியர்களின் ஊர் இல் இருந்து ஆபிரகாமை வழி நடத்தியதற்கு பிறகு கர்த்தர் அவனுக்கு முன்பாக தோன்றி *"நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்"* என்று அவனிடம் சொன்னார். கர்த்தர் இதைச் சொன்ன பொழுது, "நீர் எனக்கு என்ன தருவீர்" என்று ஆபிரகாம் பதிலுக்கு அவரிடம் கேட்டான். ஆபிரகாமினுடைய இந்த வார்த்தைகள், கர்த்தரால் எனக்கு என்ன தரமுடியும், என்று அவனுடைய சந்தேகமான இருதயத்திலிருந்து வரும் அவிசுவாச வார்தைகளுடைய கேள்விகள் இல்லை. ஆனால், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்ற ஆபிரகாமினுடைய ஆர்வமுள்ள வாஞ்சையை இவை அடக்கியிருந்தன. அப்படியானால் கர்த்தரிடமிருந்து ஆபிரகாம் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதம் இதுதானா? "நீங்கள் எனக்கு என்ன தருவீர்கள்? ஏனென்றால் நான் குழந்தையில்லாமல் இருக்கிறேன், என்னுடைய வேலைக்காரனான எலியாசர் என்னுடைய வாரிசாக உள்ளான், அவன் என்னுடைய தத்தெடுக்கப்பட்ட மகனாக இருப்பதால், என்னுடைய எல்லா சொத்துக்களையும் உரிமையோடு பெற்றுக் கொள்வான், நீங்கள் எனக்கு என்ன தருவீர்கள்?" என்று ஆபிரகாம் கர்த்தரிடத்தில் சொன்னதில் இது வெளிப்பட்டிருக்கிறது.

இங்கு அவனுடைய சொந்த மகனுக்காக அவன் எப்படி ஆவலோடு காத்திருந்தான் என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். சொந்த குழந்தைகள் இருக்கக் கூடாது என்று வேண்டுமென்றே முடிவெடுத்தவர்களால் ஆபிரகாமினுடைய ஆர்வமுடைய வாஞ்சையுடன் ஒத்துணர்வு கொள்ள முடியாது. ஆனால் அவனுடைய சொந்த மகனே தன் வாரிசாக இருக்க வேண்டுமென அதிகமாக விருப்பப்பட்டான்.

கர்த்தருடைய சாயலால் படைக்கப்பட்ட அவருடைய குழந்தைகளுக்கு அவருடைய எல்லா ஆசீர்வாதங்களையும் கொடுப்பது போல, மக்களுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் மிகவும் சிறந்ததை கொடுக்க வேண்டும் என்ற ஆவலான விருப்பம் இருக்கிறது. இதைப் போல "என்னுடைய வேலைக்காரன் என் வாரிசாய் இருப்பான்" என்று கர்த்தரிடத்தில் ஆபிரகாம் சொன்ன பொழுது, கர்த்தரால் அவன் எவ்வளவு ஆசீர்வதிக்கப் படவேண்டும் என்று விரும்பினான் என்பதை நாமெல்லாரும் உணரவேண்டும். இதனால் அவனுடைய சொந்த குழந்தையை அவனுடைய சொந்த வாரிசாக பெற்றுக்கொள்ள முடியும். பின்பு கர்த்தர் ஆபிரகாமிடத்தில் சொன்னார். "அது உண்மையல்ல. உன்னுடைய சொந்த சரீரத்தில் இருந்து வரும் ஒருவனே உன்னுடைய வாரிசாக இருப்பான். உன்னுடைய வேலைக்காரனாகிய தமஸ்குவின் எலியாசர் அல்ல. உன்னுடைய மனைவியினுடைய சரீரத்தில் இருந்து பிறக்கும் ஒருவனே உன்னுடைய வாரிசாக இருப்பான்."

பின்பு கர்த்தர் ஆபிரகாமை வெளியே அழைத்து வந்து வானத்தைப் பார்த்து நட்ச்சத்திரங்களை எண்ணும்படி சொன்னார். அதனால் ஆபிரகாம் மேலே உள்ள நட்சத்திரங்களைப் பார்த்தான், எண்ணமுடியாத நட்சத்திரங்களும் அழகான நட்சத்திர கூட்டங்களும் வான்கோட்டிற்கு அருகே தொங்கிகொண்டிருந்தன.

நட்சத்திரங்களை எண்ணி, அவற்றினுடைய எண்ணிக்கையை சொல்ல முடியுமா? என்று கர்த்தர் ஆபிரகாமிடத்தில் சொன்ன பொழுது, எண்ண முடியாத அளவிற்கு, மிகவும் அதிகமான நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று ஆபிரகாம் பதிலளித்தான். வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போல அதிகமான சந்ததிகளை தருவேன் என்று கர்த்தர் ஆபிரகாமிற்கு வாக்களித்தார்.

கர்த்தர் அவனுக்கு கொடுத்த இந்த சத்திய வார்த்தையை ஆபிரகாம் விசுவாசித்தான். இப்படித்தான் கர்த்தருடைய எல்லா வார்த்தையை விசுவாசித்து, விசுவாசித்தின் தகப்பனாக ஆனான். இதனால் கர்த்தர் அவனிடத்தில் சொன்னார், "உன்னுடைய விசுவாசம் சரியானது. நீ உண்மையில் என்னுடைய வார்த்தையை விசுவாசிக்கிறாய். இதனால் வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களைப் போல அதிகமான சந்ததிகளை கொடுத்து நான் உன்னை ஆசீர்வதிப்பேன்."

ஆபிராகமுடைய பலி காணிக்கையும் கானான் தேசத்தைப் பற்றிய கர்த்தரின் வாக்குத்தத்தமும்

கர்த்தர், ஆபிரகாமை சால்டியர்களின் தேசத்திலிருந்து வெளியே நடத்தி வந்துடன் அவனுக்கும் அவனுடைய சந்ததியினருக்கும் கானான் தேசத்தை தருவேன் என்று அவனுக்கு வாக்களித்தார். கர்த்தர் இந்த சத்தியத்தை நிறைவேற்றுவார் என்பதற்கு சாட்சி இருந்ததா? "மூன்று வயதுடைய செம்மறி கடாவையும், புறாவையும் மற்றும் ஒரு இளம் புறாவையும் என்னிடம் கொண்டு வா. உன்னுடைய சந்ததியினருக்கு கானான் தேசத்தை தருவேன், என்று உன்னிடம் நான் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு இவை தான் சாட்சிகள்" என்று கர்த்தர் ஆபிரகாமிற்கு சொன்னதில்

இது காண்பிக்கப்பட்டுள்ளது. ஆபிரகாமின் சந்ததியினர், தங்களுடைய பாவங்களிலிருந்து கழுவப்படுவதற்கு, கர்த்தருக்கு பலி காணிக்கையை கொடுப்பார்கள் என்று இது நமக்கு காண்பிக்கிறது. மேலும் இந்த விசுவாசத்தின் மூலமாக அவர்கள் கானான் தேசத்திற்குள் நுழைவார்கள் என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தமாகவும் இது இருந்தது.

பலி கொடுக்கும் வேளையில் ஆபிரகாம் ஆழ்ந்த நித்திரைக்கு சென்ற பொழுது, கர்த்தர் அவனுக்கு முன்பாக தோன்றி, அவனுக்கு வாக்களித்தார், *"அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய். இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள். நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்; நல்ல முதிர்வயதிலே அடக்கம்பண்ணப்படுவாய். நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்; ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை" (ஆதியாகமம் 15:13-16).*

வேறு வார்த்தைகளில் கூறினால், எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் மக்களை விருத்தியடைய செய்வேன் என்றும் பின்பு அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துச் செல்வேன் என்றும் கர்த்தர் வாக்களித்தார். மேலும் இப்படி செய்வதற்கு ஆசரிப்புக் கூடாரத்தில் அவர்களுடைய பாவங்களை அகற்றும் காணிக்கைகளை கொடுக்கும்படி செய்ய கர்த்தர் முடிவெடுத்ததால் இந்த வாக்கை நிறைவேற்றுவேன் என்று ஆபிரகாமிற்கு காண்பிப்பதற்காக, ஆபிரகாமின் பலி காணிக்கையின் வெட்டப்பட்ட மாம்ச துண்டுகளுக்கு இடையே ஒரு எரியும் ஒளி கடந்து செல்லும் படி கர்த்தர் செய்தார்.

இந்த வழியில், ஆபிரகாமையும் அவனுடைய சந்ததியினரையும் அவருடைய சொந்த மக்கள் ஆக்குவேன் என்ற ஆபிரகாமிற்கான கர்த்தருடைய வாக்கு, பலி காணிக்கையில் உணர்த்தப்பட்டுள்ள பாவ கடனின் காணிக்கையிலிருந்து வந்தது, கர்த்தர் ஆபிரகாமிற்கு வாக்கு கொடுத்தார், *"எகிப்தின் நதி துவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும் கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன்."* பலி காணிக்கையின் மூலமாக ஆபிரகாம் மற்றும் அவனுடைய சந்ததியினரின் பாவங்களை தேவன் கழுவுவார் என்பதைக் காண்பிப்பதற்காக தான் கர்த்தர் இதை வாக்களித்தார். கர்த்தர் ஆபிரகாமிற்கு கொடுத்த இந்த வாக்கை நிறைவேற்றியதின் செயல் முறை பழைய ஏற்பாட்டின் வரலாறு முழுவதிலும் காண்பிக்கப்பட்டுள்ளது.

கர்த்தர் யோசேப்பை எகிப்தினுடைய முதலமைச்சராக ஆக்கியதுடன் யாக்கோபுவினுடைய எல்லா குடும்பத்தையும், அவர்களை பெருக செய்வதற்காக எகிப்து தேசத்திற்கு அழைத்துச் சென்றார் (ஆதியாகமம் 41:37-45; ஆதியாகமம் 47). ஆனால், காலங்கள் கடந்து செல்கையில், யோசேப்பினுடைய, எகிப்திற்கான குறிப்பிடத்தக்க பொது சேவையை அறியாத ஒரு புதிய பர்வோன் தோன்றி அந்த தேசத்தில் அப்பொழுது விருத்தியாகி கொண்டிருந்த இஸ்ரவேல் மக்களை அடிக்கடி துன்புறுத்தத் தொடங்கினான். சீக்கிரமாகவே இஸ்ரவேலர்கள் அடிமைகளாக்கப்பட்டனர், எகிப்திற்காக அடிமைகளாக வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர் (யாத்திராகமம் 1:8-14). இருந்த போதிலும், இஸ்ரவேல் மக்கள் விருத்தியடைந்தார்கள். இதனால் பர்வோன், இன்னமும் அதிகமான அடிமைச் சுமைகளை அவர்கள் மீது

சுமத்தினான். எகிப்தில், இஸ்ரவேல் மக்கள் 400 வருடங்கள் அடிமைகளாக இருந்து துயரப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது தான் கடைசியாக ஒரு மீட்பரைத் தேட ஆரம்பித்தார்கள்.

மோசேயின் மூலமாக, அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து தப்பிக்க, எகிப்து தேசத்திலிருந்து அவர்களை வெளியே அழைத்து வந்தார் (யாத்திராகமம் 14:21-25). எகிப்து தேசத்திலிருந்து தப்பித்து வந்த இஸ்ரவேல் மக்களுக்கு மோசேயின் மூலமாக ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலிமுறையை கர்த்தர் அவர்களுக்கு கொடுத்து, அவர்களுடைய பலியை கொடுக்கச் செய்து அவர்களுடைய பாவங்களை கழுவினார். இஸ்ரவேல் மக்கள் இப்படிதான் கர்த்தரிடமிருந்து சட்டத்தையும் (யாத்திராகமம் 20) ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலி முறையையும் (லேவியராகமம் 1-4) பெற்றுக் கொண்டார்கள். ஆசரிப்புக் கூடாரத்தினுடைய சட்டத்தின் மற்றும் பலி முறையின் மூலமாக, இஸ்ரவேலர்கள், அவர்களுடைய பாவங்களை மன்னிக்கும் பலி காணிக்கையைப் பற்றி தெரிந்து கொண்டார்கள். மேலும் இந்த சத்தியத்தை விசுவாசித்தவர்களை கர்த்தர் அவருடைய சொந்த மக்களாக்கினார். மேலும் இஸ்ரவேலை மதகுருக்களின் இராஜ்ஜியமாகவும் கர்த்தருடைய பரிசுத்த தேசமாகவும் ஆசீர்வாதித்தார் (யாத்திராகமம் 19:6).

கடைசியில், பலி காணிக்கையின் மூலமாக, ஆபிரகாமிற்கு வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களைப் போல அதிகமான சந்ததிகளை தருவேன் என்றும் கானான் தேசத்தை அவர்களுக்கு தருவேன் என்றும் கர்த்தர் கொடுத்த வாக்கை அவர் நிறைவேற்றினார் என்பதை நாம் கண்டு பிடிக்க முடியும். இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு சென்ற பொழுது, 20-வது வயதிற்கு மேல் இருந்த ஆண்கள் மற்றும் போரில் சண்டையிடக் கூடியவர்களின் எண்ணிக்கை 600,000 ஆக இருந்தது. கர்த்தர் ஆபிரகாமிற்கு

கொடுத்த வாக்கை நிச்சயமாக கடைப்பிடித்தார்.

கர்த்தருடைய சத்தியத்தின் வாக்கை விசுவாசித்தான் என்ற ஆபிரகாமுடைய விசுவாசத்தைப் பார்த்து அவனுடைய இந்த விசுவாசத்தை அங்கீகரித்தார். ஆபிரகாமின் விசுவாசத்தின் காரணமாக கர்த்தர் அவனை ஆசீர்வாதித்தார். வேறு வார்த்தைகளில் கூறினால், கர்த்தர் ஏன் ஆபிரகாமை நேசித்து, ஆசீர்வாதித்தார் என்பதற்கான காரணம் அது கர்த்தருடைய வார்த்தையில் அவனுக்கு இருந்த விசுவாசமேயாகும். கர்த்தருடைய வார்த்தையை ஆபிரகாம் விசுவாசித்ததால் அவர் அவனுடைய விசுவாசத்தினால் சந்தோஷமடைந்தார். ஆதலால் ஆபிரகாமிடமிருந்து அவனுடைய சந்ததியினரால் கொடுக்கப்பட்ட பலி காணிக்கையின் மூலமாக கர்த்தருடைய விருத்தசேதனத்தின் சத்தியத்தை நிறைவேற்றவும், இஸ்ரவேல் தேசத்தை கட்டவும் நினைத்தார்.

ஆபிரகாம் அவனுடைய பலி காணிக்கையை கர்த்தருக்கு கொடுத்ததினால் அவனுடைய விசுவாசம் கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டது என்று நாம் பார்க்கிறோம். நம்முடைய செயல்களினால் அல்ல, ஆனால் கர்த்தருடைய வார்த்தையில் நமக்கு இருக்கும் விசுவாசத்தின் மூலம் இந்த விசுவாசம் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மன்னிக்க அனுமதித்துள்ளது. ஆபிராகம் செய்தது போல, அவருடைய வார்த்தையை விசுவாசிப்பதின் மூலம் அவர்களுடைய பாவங்களை பலி காணிக்கையினால் வெட்டியெறியக்கூடிய ஆவிக்குரிய விருத்தசேதனத்தை பெற்றவர்களுக்கு கர்த்தர் கானான் தேசத்தை அவருடைய ஆசீர்வாதமாக அனுமதித்துள்ளார். இதைப் போலவே ஆபிரகாம் வைத்திருந்த அதே விசுவாசத்தை கர்த்தர் நம்மிடமிருந்து கேட்கிறார். இன்று உங்களையும் என்னையும் ஆபிரகாமைப் போல அவருடைய வார்த்தையை விசுவாசிப்பதின் மூலம் நம்முடைய

இருந்தயங்களுக்குள் பாவமன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இதனால் கர்த்தருடைய இராஜ்ஜியத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கர்த்தர் நினைக்கிறார். பிதாவாகிய கர்த்தர் நம்முடைய பாவங்களையெல்லாம் இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின் மூலம் அவருக்குள் செலுத்தி, முழு மனிதகுலத்திற்கான தேவ ஆட்டுக்குட்டியாய் அவரை ஆக்கினார். ஆபிரகாம் செய்தது போல இந்த சத்தியத்தை விசுவாசிக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். இப்படிப் பட்ட விசுவாசிகளை நிரந்தரமாக அவருடைய சொந்த மக்கள் ஆக ஆக்கி கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்.

கர்த்தருடைய வார்த்தையில் ஆபிரகாமிற்கு இருந்த விசுவாசத்தினால் அவன் அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்டதைப் போல, இன்றும் கூட ஆபிரகாம் வைத்திருந்த விசுவாசத்தை நீங்களும் நானும் வைப்பதின் மூலம் கர்த்தருடைய எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளலாம். கர்த்தர் மோசேயை சீனாய் மலைக்கு அழைத்து சட்டத்தையும் பலிக் காணிக்கையையும் அவனுக்கு கொடுத்தார். மேலும் அவருடைய வார்த்தையை விசுவாசித்தவர்களை அவருடைய சொந்த மக்கள் ஆகும்படி ஆசீர்வாதித்தார்

கர்த்தருடைய சட்டத்தை கடைப்பிடிக்க நாம் தவறியிருந்தாலும் ஆசரிப்புக் கூடாரத்தில் உணர்த்தப்பட்டுள்ள பாவத்தின் கடன் மூலம், நம்மையும் அவருடைய மக்களாக கர்த்தர் மாற்றியுள்ளார். ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப் படுத்தப்பட்டுள்ள நம்முடைய சத்தியத்தில் இருக்கும் விசுவாசத்தின் மூலம் கர்த்தர் நம்மை அவருடைய நிரந்தர ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார். இதைப் போல் ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலம் நாமெல்லாரும் கர்த்தருடைய

மக்களாக வேண்டும். கர்த்தர் இயேசு கிறிஸ்துவை நமக்கு காண்பித்து, ஆசரிப்புக் கூடாரத்தின் மூலம் நம்முடைய மீட்பை நமக்கு கொடுத்துள்ளார் என்று நம்முடைய இருதயங்களில் நாம் விசுவாசிக்கும் பொழுது மட்டுமே அவருடைய அதிகமான ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்தது போல, அவருடைய வார்த்தையின் அடிப்படையில் அவரை நாம் விசுவாசிக்க வேண்டும்

ஆபிரகாம், அவனுடைய நல்ல செயல்களுக்காக அல்லாமல் கர்த்தருடைய வார்த்தையில் அவனுக்கு இருந்த விசுவாசத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டான். சட்டத்தின் மூலம் கர்த்தர் நம்மை நம்முடைய பாவங்களை தெரிந்து கொள்ள செய்துள்ளார். மேலும் அவருடைய ஆசரிப்புக் கூடாரத்தின் மூலமாக நம்முடைய பாவங்களை பரிசுத்தமான பலி காணிக்கைக்குள் செலுத்தியும் அதனுடைய இரத்தத்தை கர்த்தருக்கு கொடுக்க செய்ததன் மூலமாகவும், நம்முடைய எல்லா பாவமன்னிப்பையும் பெற்றுக்கொள்ளும்படி அவர் செய்துள்ளார். இதே வழியில் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு, சிலுவையின் மீதான அவருடைய மரணத்தினாலும், மரித்தோரிலிருந்து மீண்டும் எழுந்தது மூலமும் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மன்னித்துள்ளார். இந்த சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலம் மட்டும் தான் நம்முடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்டு கர்த்தருடைய பிள்ளைகளாக முடியும். இந்த சத்தியத்தை தங்களுடைய இருதயங்களினால்

விசுவாசிப்பவர்களால் மட்டுமே கர்த்தருடைய எல்லா ஆசீர்வாதங்களையும் பெற முடியும் என்று வேதம் நமக்கு சொல்கிறது. கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிப்பதின் மூலம் அவருடைய மீட்பின் வார்த்தையை, இந்த முழு உலகத்திலும் எங்கும் காணப்படாத மிகவும் பொக்கிஷமான நம்முடைய சொந்த ஆசீர்வாதமாக நாம் ஆக்க வேண்டும்.

ஆபிரகாம் கர்த்தரிடம் இருந்து அதிகமான ஆசீர்வாதங்களை ஏன் பெற்றான்? கர்த்தர் அவனுக்கு சொன்னதை விசுவாசித்ததினால் அவன் ஆசீர்வாதிக்கப்பட்டான். இன்றும் கூட வேதாகமத்தில் எழுதியுள்ள கர்த்தருடைய வார்த்தையை நீங்களும் நானும் விசுவாசித்தால், ஆபிரகாமுடைய அதே விசுவாசத்தை நாம் பெற்றுக் கொண்டு பரலோகத்தினுடைய அநேக ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள முடியும். இதனைச் செய்வது அவ்வளவு கடினமானதல்ல. நாங்கள் கர்த்தருடைய மக்கள் என்று காண்பிக்கும் சாட்சியை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால், நாம் செய்ய வேண்டியது நம்முடைய ஜெப செயல்கள் மூலமாக அவரை சந்தோஷப்படுத்த முயற்சி செய்யாமல் நம்முடைய இருதயங்களினால் அவருடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டும்.

ஆபிரகாமுடைய சந்ததியினருக்கு கானான் தேசத்தைத் தருவேன் என்று கர்த்தர் அவருடைய வார்த்தையினால் அவனுக்கு வாக்களித்தார். இன்றைய காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அனைவரும், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய தீர்க்கதரிசனத்தினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள இயேசுவினுடைய நான்கு ஊழியங்களும் நம்மை நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் மீட்டுள்ளது என்று நாம் விசுவாசிக்க வேண்டும். மேலும் இப்படி விசுவாசிப்பதின் மூலம் நம்முடைய பாவங்களுக்கான கடனை நாம் பெற்றுக் கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளாகி, பரலோகத்தின்

இராஜ்ஜியத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

கர்த்தருடைய ஒரு வார்த்தையும் பயணற்றவை அல்ல, அவருடைய எல்லா வார்த்தையும் உண்மையாய் இருப்பதால் அவருடைய வார்த்தையை நாம் கண்டிப்பாக விசுவாசிக்க வேண்டும். நாம் அவருடைய நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் வார்த்தையை கண்டிப்பாக தெரிந்துக்கொள்ள வேண்டும், அதனை தவறாமல் விசுவாசிக்க வேண்டும். ஏன்? ஏனென்றால் இது தான் முற்றிலுமான உண்மை. நீங்கள் இப்பொழுது விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் உங்கள் முழு இருதயத்துடன் சத்தியத்தை விசுவாசித்து, உங்கள் வாயினால் அறிக்கையிடுவீர்களானால் நீங்கள் கர்த்தரால் அங்கீகரிக்கப் படுவீர்கள். *"நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்" (ரோமர் 10:10).* இதனால் தான் விசுவாசம் அவ்வளவு முக்கியமாயிருக்கிறது, மேலும் நம்முடைய முழு இருதயங்களுடனும் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டியது மிகவும் முக்கியமாய் இருக்கிறது. மனிதன் சொல்லும் வார்த்தையை அல்ல ஆனால் கர்த்தருடைய எழுதப்பட்ட வார்த்தையை விசுவாசிப்பதற்கு நமக்கு கஷ்டமாய் இருக்கிறது. மேலும் நம்முடைய சொந்த எண்ணங்கள் மற்றும் உணர்ச்சியினால் வார்த்தையை விசுவாசிக்காமல், அதை உள்ளபடியே நம்முடைய உண்மையான இருதயங்களினால் விசுவாசிப்பது தான் நமக்கு முக்கியமாய் இருக்கிறது. இதனால் தான் கர்த்தருடைய ஊழியக்காரரும் முன்பு மீட்கப் பட்டவர்களும் கர்த்தருடைய வார்த்தையை உள்ளபடியே போதிக்கிறார்கள்.

விருத்த சேதனத்தின் அடையாளம் மூலம் ஆபிரகாம் மற்றும் அவனுடைய சந்ததியினரிடம் கர்த்தர் அவருடைய உடன்படிக்கையை ஏற்படுத்தி ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலி முறையை அவர்களுக்கு கொடுத்தார். இதனால்

மேசியாவாகிய இயேசு கிறிஸ்து வருவார் என்று அவர்களால் விசுவாசிக்க முடிந்தது. இவர் தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலமாகவும் சிலுவையின் மீதான அவருடைய இரத்தத்தின் மூலமாகவும் அவர்களுடைய எல்லாப் பாவங்களையும் மன்னிப்பார். மேலும் இதனால் இந்த விசுவாசத்தின் மூலமாக கர்த்தருடைய இராஜ்ஜியத்திற்குள் அவர்களால் நுழைய முடியும்.

கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தையை நான் விசுவாசிக்கிறேன். கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்ததின் மூலம் ஆபிரகாம் மட்டும் ஆசீர்வதிக்கப் படவில்லை, ஆனால் அவனைப் போல, அவருடைய வார்த்தையை விசுவாசிப்பதின் மூலம் நாமும் கூட ஆசீர்வதிக்கப்படலாம். நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை மீட்பதற்காக தான் கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்தை கட்டினார் என்று நான் விசுவாசிக்கிறேன். இதனால் தான் கர்த்தர் ஆபிரகாமினுடைய சந்ததியினரை சீனாய் மலைக்கு அழைத்துச் சென்று ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பலி முறையையும் சட்டத்தையும் அவர்களுக்கு கொடுத்தார். இந்த சத்தியம் தான் கர்த்தருடைய கிருபை ஆக இருக்கிறது என்பதை நாமெல்லாரும் உணரவேண்டும். ✉

பிரசங்கம்

6

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

கர்த்தரின் வாக்குத்தத்தம் ஏற்படுத்திய விருத்தசேதன உடன்படிக்கை இன்னமும் நம்மீது ஆற்றல் செலுத்துகிறது

< ஆதியாகமம் 17:1-14 >

"ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் என்றார். அப்பொழுது ஆபிராம் முகங்குப்புற விழுந்து வணங்கினான். தேவன் அவனோடே பேசி: நான் உன்னோடே பண்ணுகிற என் உடன்படிக்கை என்னவென்றால், நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய். இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும். உன்னை மிகவும்

அதிகமாய்ப் பலுகப்பண்ணி, உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள். உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன். நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும், உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்றார். பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: இப்பொழுது நீயும், உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததியும், என் உடன்படிக்கையைக் கைக்கொள்ளுங்கள். எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்; உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம்பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும்; வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப் பிள்ளையும், அப்படியே விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும். உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும், உன் பணத்திற்குக்

கொள்ளப்பட்டவனும், விருத்தசேதனம் பண்ணப்படுவது அவசியம்; இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக் கடவது. நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையிருந்தால், அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் என்றார்."

ஆதியாகமம் புத்தகம் 17-ஆம் அதிகாரத்தில், கர்த்தர் ஆபிரகாமுடன் ஏற்படுத்தின விருத்த சேதன உடன்படிக்கையானது நமக்கு ஆவிக்குரிய விருத்த சேதனத்தை காண்பிக்கிறது. இதன் மூலம் தான் ஆசரிப்புக் கூடாரத்தில் இருக்கும் பலி காணிக்கையின் தலையின் மேல் அவர்களுடைய கைகளை வைத்து, பாவங்களை அங்கு செலுத்தியதால், எல்லாப் பாவங்களும் இஸ்ரவேலர்களிடமிருந்து துண்டிக்கப் பட்டது. வேறு வார்த்தைகளில் கூறினால், கர்த்தர் ஆபிரகாமுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையானது, பாவ காணிக்கை மற்றும் சர்வாங்க தகன பலிபீடத்திற்கு முன் கொல்லப்பட்ட ஒன்றாக இருந்தது. கர்த்தர் ஆபிரகாம் மற்றும் அவனுடைய சந்ததியினரின் கர்த்தராக இருப்பார் என்றும் ஆசரிப்புக் கூடாரத்தை கருத்தில் கொண்டு, ஆபிரகாமினுடைய சந்ததியினர் தங்களுடைய கைகளை பலி காணிக்கையின் தலையின் மேல் தங்கள் வைத்து, அவர்களுடைய பாவங்களை அதற்குள் செலுத்தவேண்டும் என்று கூறியது தான் கர்த்தர், விருத்தசேதனத்தினால் ஆபிரகாமுடன் செய்த சத்தியம். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசு யோவானிடமிருந்து பெற்றுக் கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக உலகத்தினுடைய எல்லா

பாவங்களையும் எடுத்துக் கொள்வார் என்பதை இது நமக்கு காண்பிக்கிறது என்பதை நாம் உணர்ந்து விசுவாசிக்க வேண்டும்.

ஆபிரகாமிற்கு கர்த்தர் வாக்களித்தார் *"அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்" (ஆதியாகமம் 15:5).* ஆபிரகாமிற்கு முன்பாக கர்த்தர் மறுபடியும் தோன்றி, மீண்டும் ஒரு முறை வாக்களித்தார், *"உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்பண்ணி, உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள். உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்" (ஆதியாகமம் 17:6-7).*

ஆபிரகாமிற்கும் அவனுடைய சந்ததியினருக்கும் கர்த்தர் செய்த சத்தியம் விருத்தசேதனத்தின் மூலமாக வந்தது. கர்த்தருக்கு இஸ்ரவேலர்கள் பலி காணிக்கையைக் கொடுக்கும் பொழுது நடத்தப்படும் பலியின் மீது கைகளை வைப்பதோடு இந்த விருத்த சேதனம் சரியாக ஒத்துப்போனது. இயேசு யோவானிடமிருந்து பெற்றுக் கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தினால் உலகத்தினுடைய பாவங்களை தன் மீது எடுத்துக் கொண்டதினால் பாவத்தின் கடன் நிறைவேற்றப்பட்டது என்று புதிய ஏற்பாட்டு காலத்திற்கு முன்பே இது கூறியது. ஆபிரகாமிற்கு கர்த்தர் வாக்களித்த பழைய ஏற்பாட்டினுடைய விருத்த சேதனமானது இயேசுவின் ஞானஸ்நானத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள ஆவிக்குரிய விருத்தசேதனமாகிய பாவத்தைக் கழுவுதல்

புதிய ஏற்பாட்டில் தெளிவாக்கப்பட்டுள்ளது என்பதை நாம் உணர்ந்து விசுவாசிக்க வேண்டும். ஆசரிப்புக் கூடாரத்தில் பலி காணிக்கையை கொடுக்கும் பொழுது, ஆபிரகாமினுடைய விசுவாசம் இஸ்ரவேலர்களுக்கு தேவைப்பட்டது என்று இது மேலும் நமக்குச் சொல்லுகிறது.

கர்த்தர் ஆபிரகாமிடம் கூறினார், *"உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்; வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நியனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப் பிள்ளையும், அப்படியே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்" (ஆதியாகமம் 17:11-12).* வேறு வார்த்தைகளில் கூறினால், கர்த்தர் ஆபிரகாமிற்கும் அவன் சந்ததியினருக்கும் விருத்த சேதனத்தின் மூலமாக வாக்களித்தார். ஆபிரகாமிற்கும், அவனுடைய சந்ததியினருக்கும் கர்த்தராக இருப்பேன் என்று கர்த்தர் வாக்களித்தார், ஆனால் பதிலுக்கு ஆபிரகாமும் அவனுடைய சந்ததியினரும் விருத்த சேதனம் செய்யவேண்டியிருந்தது. *"உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும், உன் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும், விருத்தசேதனம் பண்ணப்படுவது அவசியம்; இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக் கடவது" (ஆதியாகமம் 17:13).*

இதனால் தான், உலகத்தில் உள்ள எல்லா மக்களிலும், இஸ்ரவேல் ஆண்கள் மட்டும், ஆபிரகாமினுடைய நாட்களிலிருந்து அவர்களுடைய முன்தோலை வெட்டி எடுக்க வேண்டியிருந்தது. இப்போதெல்லாம், விருத்தசேதனம் அதனுடைய ஆரோக்கிய பயன்களின் காரணமாக மிகவும் அதிகமாக பரவி விட்டது, ஆனால் அக்

காலத்தில், இஸ்ரவேல் ஆண்கள் மட்டுமே விருத்தசேதனம் செய்து இருந்தார்கள். கர்த்தர் ஆபிரகாமிற்கு செய்த சத்தியத்தின் அடையாளமாக இது இருந்தது. மற்றும் ஆபிரகாமையும் அவனுடைய சந்ததியினராகிய இஸ்ரவேல் மக்களையும் கர்த்தர் அவர்களோடு ஏற்படுத்தின உடன்படிக்கையை அவர்களுடைய மாம்சத்தில் சுமக்கும்படி செய்தார்.

ஆதியாகமம் 17:11 கூறுகிறது, *"உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம்பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்."* உடன்படிக்கையின் அடையாளமாக விருத்த சேதனம் இருந்தது. இதனை மீண்டும் ஞாபகப்படுத்துவதற்காக கர்த்தர் இப்படியாக வாக்குத்தத்தம் செய்தார். *"நீங்கள் என் மக்கள் என என்னால் எப்படி அறிந்து கொள்ள முடியும்? உங்கள் விருத்த சேதன தழும்புகளைக் கண்டு அதனை அறிந்து கொள்வீர்கள். இப்போதிலிருந்து உங்களுக்குள் பிறந்த ஆண்கள் அனைவரும் விருத்த சேதனம் செய்து கொள்ளவேண்டும். இதன் மூலமாக எனது உடன்படிக்கையானது நித்திய உடன்படிக்கையாக உங்கள் மாமிசத்தில் எப்போதும் இருக்கும். நான் உங்களின் கர்த்தராகவும் உங்கள் சந்ததியினரின் கர்த்தராகவும் இருப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்கிறேன். நான் உங்களை ஆசீர்வதிப்பேன் என்றும், பெருகப் பண்ணுவேன் என்றும், கானான் தேசத்திற்குள் உங்களைப் பிரவேசிக்கச் செய்து, அதில் உங்களை வாழச் செய்வேன் என்றும், உங்களிடமிருந்து தேசங்களை உருவாக்குவேன் என்றும், உங்களிலிருந்து ராஜாக்களை உருவாக்குவேன் என்றும் வாக்குத்தத்தம் செய்கிறேன்" (ஆதியாகமம் 17:4-14).*

ஆபிரகாமுடனும் அவனுடைய சந்ததியினரிடமும் கர்த்தர் ஏற்படுத்தின உடன்படிக்கை அவர்களுடைய மாம்சத்தில் காணப்படும் என்று அவர் சொன்னார். வேறு

வார்த்தைகளில் கூறினால், இஸ்ரவேல் ஆண்களுடைய விருத்த சேதனத்தில் இருந்த தழும்புகளில் கர்த்தருடைய சத்தியம் முத்திரையிடப்பட்டிருந்தது. விருத்தசேதனத்தின் மூலமாக இஸ்ரவேல் மக்களுக்கு கர்த்தர் அவருடைய வாக்குத்தத்தத்தைச் செய்தார். மேலும் இதன்படி ஆண்கள் விருத்தசேதனம் செய்துள்ளார்களா இல்லையா என்பதைப் பொருத்து அவர்கள் ஆபிரகாமினுடைய சந்ததிகளா, இல்லையா என்று தீர்மானிக்கப்பட்டது. இதன் காரணமாக, விருத்தசேதனம் செய்தவர்கள், கர்த்தரால் அடையாளங் காணப்பட்டு ஆபிரகாமின் சந்ததிகளாக ஆசீர்வதிக்கப்பட்டனர். அதே சமயம் விருத்தசேதனம் செய்யாதவர்கள் இப்படி அடையாளங் கண்டு கொள்ளப்படவில்லை.

ஆபிரகாம் இஸ்ரவேல் மக்களின் மிகவும் முக்கியமான மனிதனாக இருக்கிறான்

இஸ்ரவேல் மக்களுக்கு சட்டத்தின் தந்தையாகிய மோசேயை விட மிகவும் முக்கியமான மனிதனாக இருப்பது விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாம் ஆகும், அவனை விட பெரியவன் வேறு யாரும் இல்லை. நோவாவை ஞாபகம் வைத்து கொள்ளாத இஸ்ரவேல் மக்கள் பலர் இருந்தாலும், ஆபிரகாமை ஞாபகம் வைக்க தவறியவர்கள் சில பேர் தான் இருப்பார்கள். சேம், சேத் அல்லது மெதூசலா ஆகியவர்களை சில மக்கள் மட்டுமே ஞாபகம் வைத்திருப்பார்கள். ஆனால் ஆபிரகாமை, இஸ்ரவேல் மக்களுடைய மறக்க முடியாத விசுவாசத்தின் தந்தையாக அடையாளங் கண்டு கொண்டு, விசுவாசித்து, பின் தொடர்கிறார்கள். இதைப் போல், கர்த்தர் ஆபிரகாமின் மூலம் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் இன்னமும் பயனுள்ளதாக இருக்கிறது.

"நாம் ஆபிரகாமுடைய சந்ததிகள், நம் மக்கள் நம்முடைய சரீரத்தில் விருத்தசேதனத்தின் அடையாளத்தைச் சுமக்கிறார்கள். இதனால் கர்த்தர் நம்முடைய கர்த்தர் என்பதுடன் நாம் அவருடைய சொந்த மக்களுமாயினோம்" என்று விசுவாசித்து இஸ்ரவேல் மக்கள் அவர்களுக்கு அவர்களே முழுமையாக புரிந்துக் கொண்டுள்ளார்கள். கர்த்தர், விருத்தசேதனத்தின் மூலமாக ஆபிரகாமுடன் ஏற்படுத்தின உடன்படிக்கையை, இஸ்ரவேல் மக்கள் இன்னமும் விசுவாசிக்கும் காரணத்தால் தான் அவர்கள் தங்களை தாங்களே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக கருதுகிறார்கள்.

ஆபிரகாமிற்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள்: அவனுடைய சட்டப்படியான மனைவி சாராள், இவள் சாரா என்று கர்த்தரால் பின்பு பெயர் சூட்டப்பட்டாள், கூடவே சாராளுடைய வேலைக்காரியாக இருந்த அவனுடைய இரண்டாவது மனைவியான ஆகர் ஆவாள். சாராள் ஆபிரகாமிற்கு பிள்ளைகளைப் பெற்று தர மாட்டாள் என்பது போல அவனுக்கு தோன்றியதால், ஆபிரகாம் அவனுடைய சொந்த எண்ணத்தில், ஆகரின் மூலம் பிள்ளை பெற விரும்பினான் (ஆதியாகமம் 16:1-4). ஆனால், சாராள் ஆபிரகாமுடைய சட்டப்படியான மனைவியாக இருப்பதால், அவளுடைய சொந்த பிள்ளையின் மூலம் தான், வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போல, அதிகமான சந்ததியினரை ஆபிரகாமிற்கு கர்த்தர் தருவார் என்று அவர் தெளிவாக சொன்னார். சாராளினுடைய சரீரத்திலிருந்து பிறந்தவர்களை மட்டும் தான் தன்னுடைய சொந்த மக்களாக அடையாளம் கண்டுக் கொள்வேன் என்று கர்த்தர் வாக்களித்த காரணத்தால், இரண்டாவது மனைவியான ஆகரிடமிருந்து பிறந்த இஸ்மவேலின் சந்ததியினர் கர்த்தருக்கு முன்பாக அவருடைய மக்களாக அடையாளம் கண்டு கொள்ளப்படவில்லை.

இஸ்ரவேல் மக்கள் விருத்த சேதனம் செய்து கொள்ள

வில்லை என்றால் கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த வாக்கு பயனற்றதாகி விடும். கர்த்தர் அவருடைய உடன்படிக்கையின் அடையாளமாக அவர்களை விருத்த சேதனம் பண்ணச் சொன்னார். இதனால் இந்த விருத்த சேதனம் அவர்களுடைய மாம்சங்களில் இருக்கும். இதைப் போல, இஸ்ரவேலர்கள் விருத்த சேதனம் செய்து கொள்ளுவதில் உறுதியாய் இருந்தார்கள். ஏனென்றால் விருத்த சேதனம் செய்யாமலிருப்பது கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை பயனில்லாதது ஆக்கி விடும். இஸ்ரவேல் மக்களுள் விருத்த சேதனம் பண்ணாமல் இருப்பது, கர்த்தருடைய வாக்கை உண்மையாக கருதாத புறஜாதியாரைப் போன்றது என்று அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆவிக்குரிய விருத்தசேதனம்

கர்த்தர், ஆபிரகாம் மற்றும் அவனுடைய சந்ததியினரிடம் ஏற்படுத்திய உடன்படிக்கையானது, இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்த பொழுது, யோவான் ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெற்றதன் மூலம் மனித குலத்தினுடைய பாவங்களை தன் மீது எடுத்துக்கொண்டு நிறைவேற்றிய பாவ மன்னிப்பின் மூலம் முழுமையாக நிறைவேற்றப்பட்டது.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தின் வாயிலையும், அதன் திரைச்சீலையையும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்ததின் மூலம் செய்யவேண்டும் என்று இஸ்ரவேலர்களுக்கு கர்த்தர் கூறினார். இந்த ஆசரிப்புக் கூடாரத்தினுடைய விளக்கமான அமைப்பின் மூலம், இயேசு கிறிஸ்துவின் மூலம் வரும் மீட்பை கர்த்தர் நமக்கு போதித்துள்ளார். தேவன் இந்த

உலகத்திற்கு வந்து, தன்னுடைய 30-வது வயதில் யோவானிடமிருந்து பெற்றுக் கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக மனித குலத்தினுடைய பாவத்தை ஏற்றுக்கொண்டார் என்றும், சிலுவையின் மீது மரித்து, மரணத்திலிருந்து மீண்டும் எழுந்து, இதன் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்துவிட்டார் என்றும் இந்த உண்மையை விசுவாசிப்பவர்கள் அனைவரும் ஆபிரகாமினுடைய சந்ததிகள்தான். ஆசரிப்புக் கூடாரத்தினுடைய இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றை விசுவாசிக்கும் மக்களுடைய கர்த்தராக அவர் ஆகியுள்ளார்.

இயேசுவின் ஞானஸ்நானத்தை விசுவாசிப்பதின் மூலம், நாமெல்லாரும் ஆவிக்குரிய விருத்தசேதனத்தை செய்து கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களும் அவருக்குள் செலுத்தப்பட்டு விட்டது என்பதை விசுவாசித்து நம்முடைய இருதயங்களிலிருந்து பாவங்களை துண்டிப்பதைத் தவிர இந்த ஆவிக்குரிய விருத்தசேதனம் என்பது வேறில்லை (ரோமர் 2:29).

இதைப் போல் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பதின் மூலம் பாவமன்னிப்பை பெற்றவர்கள் எல்லோரும் கர்த்தருடைய இராஜ்ஜியத்தின் ராஜாக்களாகவும், அவருடைய பிள்ளைகளாகவும் உள்ளனர். *"உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்" (ஆதியாகமம் 17:6)* என்று கர்த்தர் வாக்குத்தத்தம் செய்ததைப் போல, அவருடைய மக்கள் உண்மையில் உலகம் முழுவதிலும் எழுந்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் ஆபிரகாமின் சந்ததியினராக வேண்டும் என்றால், இயேசு இந்த பூமியில் பெற்றுக் கொண்ட

ஞானஸ்நானத்தையும், அவருடைய சிலுவையின் மரணத்தையும் விசுவாசிக்க வேண்டும். இதைப் போல, இயேசுவினுடைய ஞானஸ்நானத்தை தெரிந்துக் கொண்டு விசுவாசிப்பது எவ்வளவு முக்கியம் என்பதை என்னால் போதுமான அளவு வற்புறுத்தி கூறமுடியாது. இயேசு கிறிஸ்து தான் இராஜாதி இராஜா இரத்தாம்பர நிறத்தை அணிந்து வந்த "ராஜாதி ராஜா" அவர்தான் (யோவான் 19:5) இயேசு கிறிஸ்து தான் உலகத்தினுடைய ராஜாவாகவும் அதன் சிருஷ்டிகருமாயிருக்கிறார். அவர் மட்டும் தான் கர்த்தரால் உருவாக்கப்பட்ட மகனாக இருப்பதால், பிதாவினுடைய விருப்பத்திற்கு கீழ்ப்படிந்து நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து விடுவிப்பதற்காக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஒரெ நேரத்தில் ஏற்றுக்கொண்டார். நம்முடைய பாவங்களை எடுத்துப் போடுவதற்காக, நம்முடைய இருதயங்களில் இருந்து நம்முடைய எல்லாப் பாவங்களையும் வெட்டி எடுத்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக அவற்றை அவருடைய சரீரத்திற்குள் ஏற்று, சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தை சிந்தியதன் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும் நியாயந்தீர்க்கப்பட்டார். இதைப் போல, இந்த சத்தியத்தை விசுவாசிக்கும் எல்லோராலும் ஆபிரகாமுடைய சந்ததிகளாக முடியும்.

ஆபிரகாம், அவனுடைய குடும்பத்தார் மற்றும் அவனுடைய சந்ததிகள் எல்லோரும் உடல்ரீதியாக விருத்தசேதனம் செய்யப்பட்டனர். புறஜாதியாரிடமிருந்து காசு கொடுத்து வாங்கப்பட்ட அடிமைகளும் கூட விருத்த சேதனம் செய்யப்பட்டனர். உடன்படிக்கையை அவர்கள் விசுவாசித்து, விருத்த சேதனம் செய்து கொண்ட பிறகு இந்த புறஜாதி அடிமைகளும் கூட ஆசீர்வதிக்கப் பட்டு, கர்த்தர் அவர்களுடைய கர்த்தர் ஆனார். இதைப் போல,

விசுவாசத்தின் மூலம் தான் நாம் கர்த்தருடைய பிள்ளைகள் ஆகிறோம், விசுவாசத்தின் மூலம் நாம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுக்கிறோம், விசுவாசத்தின் மூலம் நாம் பரலோகத்திற்குள் நுழைகிறோம், மேலும் விசுவாசத்தின் மூலம் தான் நாம் இந்த பூமியில் ராஜாக்களாக வாழ்கிறோம். இந்த விசுவாசமானது, புதிய ஏற்பாட்டுக் காலத்தில், இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக இந்த உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்டார் என்று விசுவாசிப்பவர்களின் விசுவாசமாயிருக்கிறது.

இருந்த போதிலும், இயேசுவினுடைய இந்த ஞானஸ்நானம் அந்த அளவிற்கு முக்கயமானது இல்லை என்று சில மக்கள் முறையிடுகிறார்கள். ஏனென்றால், சிலுவையின் மீதான அவருடைய இரத்தத்தை விசுவாசிப்பதின் மூலம் மட்டும் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் விசுவாசிக்கிறார்கள். ஆசரிப்புக் கூடாரத்தினுடைய காலத்தில் செய்யப்பட்ட பலி காணிக்கையினுடைய தலையின் மீது கைகளை வைப்பதை அவர்கள் விசுவாசித்திருந்தாலும் இயேசுவினுடைய சொந்த ஞானஸ்நானத்தின் மீது அவர்கள் குறைந்த முக்கியத்துவத்தை முதலாம் வருகைக்கு முன்னதாகவும், மோசேயினுடைய ஆசரிப்புக் கூடாரத்திற்கு முன்னதாகவும் ஆபிரகாமினுடைய விசுவாசம் அங்கீகரிக்கப்பட்டதால், இயேசுவினுடைய ஞானஸ்நானத்தின் தெளிந்த வார்த்தையை விசுவாசிக்காமலும் கூட சிலுவையினுடைய இரத்தத்தின் வார்த்தையை மட்டும் விசுவாசிப்பதின் மூலம் அவர்கள் இன்னமும் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று இதனால் அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

கர்த்தர் ஆபிரகாமிடம், மூன்று வயது காளை, மூன்று வயது பெண் ஆடு, மூன்று வயது செம்மறிகடா, ஒரு மணி புறா மற்றும் ஒரு இளம் புறா ஆகியவற்றைக் கொண்டு

வரச் சொன்னார். ஆபிரகாமிற்கும், அவனுடைய சந்ததியினருக்கும் கானான் தேசத்தை அவர்களுடைய உரிமையாக கொடுப்பார் என்பதை அவன் உணரவேண்டும் என்பதற்காக தான் கர்த்தர் இப்படிச் சொன்னார். இதைச் சொன்ன போது, சர்வாங்க தகன பலிபீட பலி காணிக்கையை தன் மனதில் கர்த்தர் நினைத்திருந்தார் என்பதை நாம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். *"சூரியன் அஸ்தமித்துக் காரிருள் உண்டானபின்பு, இதோ, புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினி ஜுவாலையும் தோன்றின"* என்று ஆதியாகமம் 15:17 சொல்லுகிறது. ஆபேலுடைய சர்வாங்க தகன பலி காணிக்கையும் அவனுடைய விசுவாசத்தையும் கர்த்தர் அங்கீகரித்தார். ஆனால் சர்வாங்க தகன பலிபீட பலி காணிக்கையை விசுவாசிக்காத காயீனுடைய விசுவாசத்தைக் கர்த்தர் அங்கீகரிக்கவில்லை.

இன்றைய கிறிஸ்தவர்களுக்கு மத்தியில், விசுவாசத்துடன் ஆவிக்குரிய விருத்தசேதனம் செய்யாமலும் கூட, இயேசுவைக் குருட்டுத்தனமாக விசுவாசிப்பதின் மூலம் அவர்கள் மீட்க்கப்படுகிறார்கள் என்று தவறாக புரிந்துக்கொள்ளும் பல கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். இயேசுவினுடைய ஞானஸ்நானத்தின் மூலமாக அவர்களுடைய எல்லாப் பாவங்களும் அவருக்குள் செலுத்தப்பட்டது என்ற சத்தியத்தை விசுவாசிக்காமல் இயேசுவினுடைய மரணத்தை மட்டும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள். இந்த மக்கள் கர்த்தருடைய சொந்த மக்களாகவே முடியாது, ஏனென்றால் இந்த வழியில் விசுவாசிப்பது, அவர்களுடைய இருதயங்களிலிருந்து அவர்களுடைய பாவத்தை அகற்றாது. விருத்தசேதனம் செய்யப்பட்ட மாம்சத்தில் தான் அவருடைய உடன்படிக்கையின் அடையாளம் இருக்கிறது என்று கர்த்தர் சொன்னதால் விருத்தசேதனம் செய்யாதவர்கள், கர்த்தருடைய இந்த சத்தியத்துடன் சம்பந்தம்

இல்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

யோவான் ஸ்நானகனிடமிருந்து இயேசு பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தை விசுவாசிக்காமல் மக்கள் அவர்களுடைய பாவத்தில் இருந்து மீட்கப்பட முடியுமா? இப்படிப்பட்ட மக்கள் கர்த்தருடைய பிள்ளைகளாக முடியுமா? அவர்கள் பரலோகத்திற்குள் நுழைய முடியுமா? அவர்கள் அவருடைய ராஜ்ஜியத்தின் ராஜாக்கள் ஆக முடியுமா? இந்த கேள்விகளுக்கான பதில் இல்லை என்றே ஒலிக்கிறது! இன்று நாம் வாசித்த முக்கியமான இந்த வசனத்திற்கான பதிலை இந்த சாட்சி அளிக்கிறது. இன்று ஆபிரகாமிற்கு கர்த்தர் கொடுத்த வாக்கானது, இயேசு கிறிஸ்துவை நம்முடைய மீட்பராகவும் அவருடைய ஞானஸ்நானம் மற்றும் சிலுவையின் மீதான அவருடைய இரத்தம் ஆகியவற்றை விசுவாசித்ததன் மூலம் பாவ மன்னிப்பை பெற்றுக் கொண்ட உங்களிடமும் என்னிடமும் கொடுத்த வாக்குத்தத்தமாய் இருக்கிறது. இப்படி விசுவாசிப்பவர்களுக்கு, கர்த்தர் ஆபிரகாமுடன் பேசிய அதே ஆசீர்வாதத்தின் வார்த்தை பொருந்தும்.

இயேசுவின் உண்மை விசுவாசிகள் தம் சொந்த தத்துவங்களை பின்பற்ற மாட்டார்கள்

வேதாகமத்தில் உள்ள கர்த்தருடைய வார்த்தை மீட்கப்படுதலின் முழுமையானதும் தெளிவானதுமான சத்தியமாயிருக்கிறது. நாம் எவ்வளவு அதிகமாக வாசித்து, எவ்வளவு அதிகமாக சிந்திக்கிறேமோ அந்த அளவு தெளிவாகும். இன்றைய கிறிஸ்தவர்கள் தம்முடைய சொந்த எண்ணங்களின் அடிப்படையில் கர்த்தரை விசுவாசித்து பின்பற்றுவதின் மூலம் அவர்களுடைய விசுவாசம் தவறாக புரிந்துக் கொள்ளப்படுகிறது. மேலும்

அவர்கள் விசுவாசித்துக் கொண்டிருப்பது உண்மையில் பொய்யானது என்பதை இன்னமும் அறியாமலிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மக்களுடைய விசுவாசத்தின் அஸ்திபாரமே தவறு. இயேசு அவர்களை எப்படியோ மீட்டுள்ளார் என்பதைக் குருட்டுத் தனமாக விசுவாசிப்பது அவர்களுடைய மனசாட்சியை திருப்திபடுத்துவதற்கு போதுமானதாக இருக்கும், ஆனால் கர்த்தர் அவர்களுடைய குருட்டு விசுவாசத்தை அங்கீகரிப்பதில்லை என்பதை அவர்கள் உணரவேண்டும்.

நம்முடைய தேவனை பின்பற்ற வேண்டும் என்பவர்கள் முதலில் அவனோ/அவளோ தங்களையே வெறுத்து அவனுடைய/அவளுடைய சிலுவையை சுமக்க வேண்டும் என்று அவர் சொன்னார். கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிப்பவர்கள், அவனுடைய/அவளுடைய சொந்த எண்ணங்களை விட்டு விட வேண்டும், மேலும் கர்த்தருடைய வார்த்தை உண்மையில் என்ன சொல்கிறது என்பதிற்கேற்ப விசுவாசிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து அவருடைய ஞானஸ்நானத்தினாலும் சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தை சிந்தியதன் மூலமாகவும் மரணத்திலிருந்து மீண்டும் எழுந்ததின் மூலமாகவும் நமக்கு பாவமன்னிப்பைக் கொடுத்துள்ளதாக, நீங்களும் நானும் இன்று விசுவாசிக்க வேண்டும்.

இந்த நாட்களில், இப்படி விசுவாசிக்காமல் வேறுவகையாக விசுவாசிப்பதற்கு தங்களுடைய சொந்த வழிகள் அவர்களிடமிருக்கின்றன என்று கூறி இயேசுவின் பெயரை குருட்டுத்தனமாக பற்றி கொள்ளும் பல மக்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மக்களுடைய விசுவாசம், இயேசுவால் கொடுக்கப்பட்ட நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியுடன் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. உதாரணத்திற்கு, இப்படித்தான் அவர்கள் மீட்கப்பட்டார்கள் என்று வலியுறுத்தும் வகையில், ஆழ்ந்த மலைகளில் அவர்கள் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கும் பொழுது

இயேசு இதனைக் காண்பித்தார் என்று கூறும் சில மக்கள் இருக்கிறார்கள். மற்றுமொரு உதாரணத்தில், ஆலயத்திற்கு சென்றதாலும் உபவாசம் இருந்ததாலும் முழு இரவு ஜெபத்தில் பங்கேற்றதாலும் அவர்களுடைய எல்லாப் பாவங்களும் மறைந்து விட்டன என்று கூறும் மக்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய மனந்திரும்புதலின் ஜெபங்களினால், அவர்களை துன்பப்படுத்திய அவர்களுடைய பாவங்களிலிருந்து வெளிவர முடியாதது தான் இதற்கு காரணம்.

நம்முடைய தேவனால் கொடுக்கப்படும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலம் கிட்டும் உண்மையான மீட்கப்படுதலுடன், இந்த வகையான விசுவாசம் தொடர்பில்லாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட விசுவாசம் நம்மிடம் இருந்தால், கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிப்பார் என்று அவருடைய வார்த்தையில் எங்கு சொல்லப்பட்டிருக்கிறது? எங்கும் இல்லை. கர்த்தர் முற்றிலுமான ஒருவர் என்றும் இயேசு தான் கர்த்தர் என்றும் இந்த மக்கள் குருட்டு தனமாக தெரிந்து கொண்டுள்ளார்கள். இவர்கள் கிறிஸ்துவின் பெயரை எடுத்து அவர்களுடைய கர்த்தரை பற்றியதான அற்பமான, நிச்சயமில்லாத ஞானத்தை அவர்களுடைய விசுவாசமில்லாத விசுவாசத்துடன் சேர்க்கிறார்கள். இதன் காரணமாக, அவர்கள் தங்களுடைய சொந்த பாவங்களை மறந்துவிட்டு, கர்த்தருடைய நாமத்தை உபயோகமில்லாமல் அழைத்து, கர்த்தருடைய கடுங்கோபத்தை இன்னமும் அதிகமாக சேர்த்துவைக்கிறார்கள். இப்படிப்பட்ட மக்கள் தங்களுடைய சொந்த போலியான இயேசுவையும் தங்களுடைய சொந்த மீட்பின் வசனத்தையும் அமைத்து, தம்முடைய சொந்த கற்பனையிலிருக்கும் இந்த கட்டுகதைகளை விசுவாசிக்கிறார்கள்.

ஆதியாகமம் 17:14 சொல்கிறது, *"நுனித்தோலின் மாம்சம் விருத்தசேதனம் பண்ணப்படாதிருக்கிற*

நுனித்தோலுள்ள ஆண் பிள்ளையிருந்தால், அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடியால், தன் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவான்" ஆவிக்குரிய விருத்த சேதனத்தின் மூலமாக நம்மை நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் கர்த்தர் இரட்சிப்பார் என்று அவர் தெளிவாக நமக்கு வாக்களித்துள்ளார். நீர் மற்றும் ஆவியினால் மீண்டும் பிறந்தவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளாவர்கள் என்று கர்த்தர் நமக்கு சந்தேகத்திற்கு இடமில்லாமல் வாக்களித்துள்ளார். இதைப் போல, இயேசுவினுடைய ஞானஸ்நானத்தை விசுவாசிக்காமல் அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தை மட்டும் விசுவாசிப்பவர்கள் எப்பொழுதுமே கர்த்தருடைய பிள்ளைகள் ஆக முடியாது. இப்படிப்பட்ட மக்கள் கர்த்தரை மறுதலித்துள்ளார்கள், ஏனென்றால் கர்த்தரால் வாக்களிக்கப்பட்ட நற்செய்தியை அவர்கள் விசுவாசிக்கவில்லை, மேலும் இதனால் கர்த்தருடைய மக்களில் இருந்து அவர்கள் அகற்றப்பட்டு, அவரால் சபிக்கப்படுவார்கள்.

நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்கக்கூடிய விசுவாசத்தின் அஸ்திபாரமானது, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைத் தவிர வேறு ஒன்றும் இல்லை, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி, நம்முடைய அஸ்திபாரமாக அமைக்கப்படும் பொழுது மட்டுமே நாம் பலமாகவும் முழுமையாகவும் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டும். தங்களுடைய இருதயங்களில் ஆவிக்குரிய புறஜாதியாரால் கர்த்தருடைய வார்த்தையை அவர்களுடைய இருதயங்களுக்குள் எப்படி எடுத்துச் செல்ல முடியும்? இதை அவர்களால் எப்பொழுதுமே செய்யமுடியாது. நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியால் நம்மை ஆவிக்குரிய விருத்தசேதனம் செய்வதற்கு, இந்த கண்டிப்பான அஸ்திபாரம் இல்லாமல், நம்மை கர்த்தருடைய பிள்ளைகளாவதற்கு அனுமதிப்பதால், கர்த்தருடைய

வார்த்தை, நமக்கு புத்தியுள்ள ஞானமாக மட்டுமே வருகிறது.

இதனால் தான் மீண்டும் பிறந்த ஊழியகாரர்களின் ஆவிக்குரிய போதனைகள், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது என்பதுடன் அவர்களால் தான் இதைப் புரிந்து கொள்ள முடியும். வேறு வார்த்தைகளில் கூறினால், நீர் மற்றும் ஆவியினால் மறுபடியும் பிறந்தவர்களால் மட்டுமே கர்த்தருடைய வார்த்தையை கேட்டு புரிந்து கொள்ள முடியும். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை பற்றி ஒன்றும் அறியாத மக்களை நாம் சந்திக்கும் பொழுது, நாங்கள் எல்லோரும் ஒரே கர்த்தரை விசுவாசிக்கிறோம், முற்றிலும் வேறு பட்ட கர்த்தரைப் பற்றி பேசுவதுபோல நாங்கள் ஒரு போதும் நினைப்பதில்லை என்று அவர்கள் கூறினாலும், சிலுவையினுடைய இரத்தத்தின் மூலமாக மீண்டும் பிறந்துள்ளோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். உண்மையான கர்த்தர் இங்கே யார்? ஆபிரகாமிற்கு தன்னுடைய வாக்குத்தத்தத்தைக் கொடுத்த கர்த்தர் தான் உண்மையான கர்த்தர்.

"இப்படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடன்படிக்கையாக இருக்கக் கடவது" (ஆதியாகமம் 17:13) என்று ஆபிரகாமிற்கும் அவனுடைய சந்ததியினருக்கும் வாக்குத்தத்தம் செய்தார். நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பை நாம் பெற்றுக் கொண்டோம் என்று சொல்லும் அடையாளம் எங்கே? இது நம்முடைய இருதயங்களில் காணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தை நம்முடைய இருதயங்களில் விசுவாசிப்பதின் மூலமும் உண்மையான நற்செய்தியை விசுவாசிப்பதின் மூலமும் ஆவிக்குரிய விருத்தசேதனத்தைப் பெற்று கொண்ட இருதயமுடைய கர்த்தருடைய பிள்ளைகளாகியுள்ளோம். நம்முடைய பாவங்களுக்காகவும், அவற்றை எல்லாம் தன் மீது பெற்றுக் கொள்வதற்காக தேவன் ஞானஸ்நானம் பெற்றார் என்றும்,

இதனால் நாம் ஆவிக்குரிய விருத்தசேதனம் செய்யப்பட்டுள்ளோம் என்றும் நம்முடைய இருதயங்களில் விசுவாசிப்பதின் மூலம் நாம் அவருடைய பிள்ளைகளாகிறோம்.

இந்த சத்தியத்தில் நமக்கு இருந்த விசுவாசத்தின் மூலமாகத் தான் நாம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் இயேசு கிறிஸ்துவுக்குள் செலுத்தியுள்ளோம், இதனால் இயேசு இந்த பாவங்களை சிலுவைக்கு சுமந்து, நம்முடைய இடத்தில் கொல்லப்பட்டு, மரணத்தில் இருந்து மீண்டும் எழுந்து, இதன் மூலம் நம்மை நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் இரட்சித்தார். வேறு வார்த்தைகளில் கூறினால், விசுவாசத்தின் மூலம் தான் நாம் கர்த்தருடைய பிள்ளைகளாகி உள்ளோம். விசுவாசத்தின் மூலம் தான் நாம் பாவமற்றவர்களாக ஆகியுள்ளோம் பின்பு நம்மிடம் ஏதாவது பாவம் இருக்கிறதா? நிச்சயமாக இல்லை! நம்மிடம் எந்த விதமான பாவமும் இல்லை! அற்புதமான நற்செய்தியின் சத்தியத்தின் மூலம் இவையெல்லாம் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நீங்களும் நானும் ஆபிரகாமுடைய சந்ததிகள் ஆகமுடியுமா?

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய இளநீலம், இரத்தாம்பரம், சிகப்பு நூல் ஆகியவற்றால் தெரிவிக்கப்பட்டுள்ள இயேசுவினுடைய செயல்களை விசுவாசித்து ஆவிக்குரிய விருத்த சேதனத்தை நாம் செய்து கொண்டபடியால், நாம் ஆபிரகாமுடைய சந்ததிகளாகியுள்ளோம். இயேசுவினுடைய ஞானஸ்நானத்தையும், அவருடைய சிலுவை இரத்ததையும் நாம் விசுவாசித்ததால் தான் ஆவிக்குரியதாக விருத்த சேதனம் செய்யப்பட்டு, கர்த்தருடைய பிள்ளைகளாகியுள்ளோம். இயேசு

அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்டு, நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும் நியாயம் தீர்க்கப்பட்டார் என்பதை விசுவாசிப்பதாலேயே பாவமன்னிப்பை நாம் பெற்றுள்ளோம். இப்படித்தான் நீங்களும் நானும், ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக ஆகியுள்ளோம்.

நீர் மற்றும் ஆவியால் மீண்டும் பிறந்துள்ளவர்கள், தாம் யார் என்பதை இப்பொழுது அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிக்கும் நீங்களும் நானும், விசுவாசத்தின் மூலம் ஆவிக்குரிய விருத்தசேதனம் செய்யப்பட்ட கர்த்தருடைய பிள்ளைகளாகவும், அவருடைய சொந்த மக்களாகவும் உள்ளோம்.

கர்த்தருடைய எல்லாப் படைப்புகளையும் ஆட்சி செய்யக்கூடியவர்களும் அவருடைய முழு சிறப்பையும் அனுபவிக்க கூடியவர்களுமாகிய நாம் வரும் ஆயிரம் வருட இராஜ்ஜியத்தின் இராஜாக்களாக இருக்கிறோம். இப்படிதான் நம்முடைய தகுதி மாறியுள்ளது. இந்த உலகத்தில் இருக்கும் மக்களுக்கு உண்மையில் நாம் யார் என்று தெரியுமா? அவர்களுக்குத் தெரியாது. கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்ததின் மூலம் ஆவிக்குரிய தகுதி மாறியவர்களாய் நாம் இருக்கிறோம். இதைப் போல, நம்மைப் பற்றி நாம் இப்பொழுது தெளிவாகவும் நம்பிக்கையுடனும் தெரிந்துகொள்ள முடியும்.

கர்த்தருடைய வார்த்தையால் மீண்டும் பிறந்தவர்களுக்குத் தாம் யார் என்பது நன்கு தெரியும். தங்களுடைய உலகப் பிரகாரமான மத சமுதாயங்களில் தங்களுக்கு தாமே விளம்பரப்படுத்திக் கொள்ளுவதற்கு அடிமையான அவர்கள், முற்றிலுமாக ஒன்றும் அறியாதவர்களாய் இருந்தாலும், இத்தகைய தவறான தத்துவங்களைப் போதிப்பவர்கள், கர்த்தருடைய உண்மையான மக்களாகிய மீண்டும் பிறந்தவர்களை

ஆர்வமின்றி பார்க்க கூடியவர்கள், அவர்களிடமிருந்து நாம் அடிப்படையாகவே வித்தியாசமாக உள்ளோம். இஸ்ரவேல் மக்கள் தம்மை தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக விசுவாசித்து, இஸ்மவேலுடைய சந்ததியினரை வித்தியாசமாக கருதுவதால், ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததிகளாகிய நமக்கும், நம்மை நாமே கர்த்தருடைய தேர்தெடுக்கப்பட்ட மக்களாக கருதுவதற்கு உரிமை இருக்கிறது.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பவர்கள், விசுவாசத்தின் மூலம் ஆபிரகாமினுடைய சந்ததியினராகியுள்ளோம். ஆசரிப்புக் கூடாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் நற்செய்தியில் நமக்கு இருக்கும் விசுவாசத்தின் மூலம், பரலோக இராஜ்ஜியத்திற்குள் நம்மால் பிரவேசிக்க முடியும்.

வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போல அதிகமான சந்ததிகளை உருவாக்குவேன் என்று ஆபிரகாமிற்கு வாக்களித்தது போல நமக்கான இந்த உடன்படிக்கையின் நிறைவேற்றுதலை நாம் நம் கண்களால் பார்க்க முடியும். கர்த்தர் நம்மீது அருளிய ஆசீர்வாதம் இதுதான்.

நம்முடைய இருதயத்தின் விருத்த சேதனங்களின் மூலமாக, உலகத்தினுடைய பாவங்களிலிருந்து கர்த்தர் நம்மை மீட்டுள்ளார். ஆசரிப்புக் கூடாரத்தினுடைய நுழைவாயில் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் இந்த விசுவாசத்தின் விருத்தசேதனம் செய்யப்பட்டுள்ளது. ✉

பிரசங்கம்

7

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.



ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

விசுவாசத்திற்கான அத்திவாரத்தை அமைத்த ஆசரிப்புக் கூடாரத்தின் கட்டுமான பொருட்கள்

< யாத்திராகமம் 25:1-9 >

"கர்த்தர் மோசேயை நோக்கி: இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக. நீங்கள் அவர்களிடத்தில் வாங்கவேண்டிய காணிக்கையாவன, பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிகப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டுமயிரும், சிகப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலும், தகசுத்தோலும், சீத்திம் மரமும், விளக்கெண்ணெயும், அபிஷேகதைலத்துக்குப் பரிமளவர்க்கங்களும், தூபத்துக்குச் சுகந்தவர்க்கங்களும், ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகக் கற்களும் இரத்தினங்களுமே. அவர்கள் நடுவிலே நான் வாசம் பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக. நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய

எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக."

பரிதாபமான வாழ்க்கைகள்

"ஒரு வாழ்வின் கவிதை" என்ற தலைப்புடைய கவிதையில், ஹென்றி வேட்ஸ்வேர்த் லாங்ஃபெல்லோ, "துன்பமான எண்களில் எனக்கு சொல்லாதீர்கள், 'வாழ்க்கை ஒரு காலியான கனவு!'" என்று எழுதியிருந்தான்.

இருப்பினும், அதைப் பற்றி நீங்கள் உண்மையில் நினைத்தால், மனிதர்களுடைய வாழ்க்கை உண்மையில் மிகவும் பரிதாபமானது தான். இந்த உலகத்தினுடைய பண்படுத்தப்படாத பூமியில் இருக்கும் ஒரு தனிமையான தற்காலிகமான வாழ்க்கைக்குப் பிறகு எல்லோருடைய வாழ்க்கையும் பயனற்ற குப்பைக்கு திரும்புவது போல தெரிந்தாலும் கூட, பூமி முடிவாக சேரும் இடம் கிடையாது. பாவத்தின் காரணமாக எல்லா நபர்களுடைய வாழ்க்கையும், நிரந்தரமாக இருக்கக் கூடிய நரகத்தினுடைய பயங்கரமான பாடுகளாகவே இருக்கும்.

கல்லறைக்கு அப்பால் உள்ள உலகத்திற்கும், அவர்களுடைய சொந்த மரணத்திற்கும், இன்னமும் மக்கள் அலட்சியம் காட்டுபவர்களாகவே உள்ளனர். இந்த உலகத்தில் வாழும் பொழுது மக்கள், எந்த பயனும் இல்லாமலும், நரகத்திற்கு நோக்கியும் சென்றுக் கொண்டிருக்கும் தங்களை மீட்ட கர்த்தரை சந்திக்க முடியாமல் வாழ்கிறார்கள். இது தான் வாழ்க்கை. ஆனால், வாழ்க்கைக்கு சேர வேண்டியது இதுவாக இருந்தால், நாம் எத்தனை பரிதாபமானவர்களாகவும், இரங்கத் தக்கவர்களாகவும் இருப்போம்?

இப்படிப்பட்ட வாழ்க்கைகளுக்காக மேசியா காத்துக் கொண்டிருக்கிறார். இந்த திறந்த உலகத்திற்குள்,

குறிக்கோள் இல்லாமல் சுற்றுவதற்கும், இருட்டுக்குள் மறைவதற்கு மட்டும் கவனமில்லாமல் வீசப்பட்டிருந்தால், அவர்கள் ஒரு பரிதாபமான கொடுமையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பார்கள். நம்மை சுற்றியிருப்பவர்களை பார்த்து நாமெல்லாரும் இதை அடையாளம் கண்டு கொள்ளலாம்.

அன்று ஒரு நாள், நான் காரில் இருக்கும்பொழுது, சாலையை ஒட்டி நடந்துக்கொண்டிருந்த 60 வயது மதிக்கதக்க ஒரு முதியவரைக் கண்டேன். எனக்கு பின்னால் முதுகை காட்டி அவர் நடந்து கொண்டிருக்கும் பொழுது, அவருடைய தலை கீழே சாய்ந்தவாரும், அவருடைய தோல்கள் வளைந்தவாரும், அவரிடமிருந்த இருந்த எல்லாமே பார்ப்பதற்கு சற்று வித்தியாசமாக இருப்பது போல இருந்தது. நான் சத்தம் போட்டு அழைத்த பொழுது அவர் திரும்பிப் பார்த்தார். அப்பொழுது அவருடைய முகம் துயரத்தால் நிறைந்திருந்தது. இந்த முதியவருடைய பாவனையைப் பார்த்து சற்று நேரத்திற்கு நான் ஆழ்ந்து யோசித்தேன். இந்த முதியவர் அவருடைய வாழ்க்கையை எவ்வளவு அர்த்தமில்லாதது என்று நினைத்து கொண்டிருப்பார். தனிமையாக அவர் விழுந்தது, இந்த அர்த்தமில்லாமையின் உணர்விற்கு இன்னமும் அதிக அர்த்தமில்லமையை சேர்த்து, இது அவரை அவருடைய வாழ்க்கையின் இன்னமும் அதிகமான பயனற்ற நிலையை நினைக்கச் செய்தது. இந்த மனிதருடைய வாழ்க்கை மட்டும்மல்ல, ஆனால் எல்லோருடைய வாழ்க்கையுமே பரிதாபமானதாகும்.

நேரம் அவர்களை கடந்துச் செல்கையில், திடீரென அவர்களைச் சுற்றி ஆழமான சுறுக்கங்களை மக்கள் காணும் வரை, அவர்களுக்கு வயதாகிக் கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் உணருவதில்லை. நின்று சுற்றி திரும்பிப் பார்த்து, தாம் எங்கே நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கு கூட

சந்தர்ப்பம் கிடைக்காத அளவிற்கு, பலர் தங்களுடைய வாழ்க்கையில் அதிகமான கஷ்டங்களைச் சந்தித்துள்ளார்கள். எல்லாப் பெற்றோர்களும் வாழ்ந்து, தங்களுடைய குழந்தைகளுக்காகவும், குடும்பத்திற்காகவும் கடினமாக உழைத்திருந்தாலும், தங்களுடைய சொந்த வாழ்க்கையின் முடிவை சந்திக்கும் பொழுது அவர்களுடைய வாழ்க்கையில் ஒன்றும் இருப்பதில்லை என்று சோகத்தை வார்த்தைகளால் கூற இயலாது.

அவர்களுடைய உணர்ச்சிகளால் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் விரைவில் தங்களுடைய கண்ணீரால் நிறைகிறார்கள். அதிக நேரம் கடந்த பிறகும், பல வருடங்கள் சென்ற பிறகும், திரும்பி பார்ப்பதற்கு கடைசியாக அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. இதை அவர்கள் செய்யும் பொழுது இந்த கடைசியாக விழுந்த தனிமையின் காட்சி எவ்வளவு புரியாத வகையில் தங்களுடைய சொந்த பிரதிபலிப்புகளுக்கு பொருந்துகிறது என்பதைத்தான் அவர்களால் நினைக்க முடியும். அந்த விழுதலுடன் எல்லா இலைகளும் விழுந்து போய், துன்புறுத்துகின்ற குளிர்காலத்தை சந்திக்கும் பொழுது, இதே முறையில் அவர்களுடைய வாழ்க்கையும் விரைவில் மறைந்துவிடும் என்பதை அவர்கள் காணுகிறார்கள். இதை உணர்வதற்கு இவ்வளவு காலம் பிடித்தது என்பதைக் குறித்து உண்மையில் அவர்கள் வருத்தப்படலாம். தேவனைச் சந்திக்காமலேயே தாம் இறந்து விட இருக்கும் பொழுது இந்த மக்களுக்கு என்ன நம்பிக்கை இருக்கிறது? மேசியாவை சந்திக்காமல் தங்களுடைய முடிவிற்கு வந்த இது போன்ற மக்கள் எப்பொழுதும் பரிதாபமாயிருக்கிறார்கள்.

தேவனை நான் சந்திக்காமல் இருந்தால் நானும் ஒரு பரிதாபமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கலாம். நீங்கள் எப்படி? நீங்கள் தேவனை சந்திக்கவில்லை என்றால், இப்பொழுது நீங்கள் எங்கே முட்டிக் கொண்டிருப்பீர்கள்?

தேவனை சந்திக்க முடியாமல் இருந்ததால் தங்களுடைய சொந்த துக்கத்தை சேர்த்து வைத்துள்ள அநேக மக்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்கள்.

தங்களுடைய சொந்த துக்கத்தை சேர்த்து வைத்துள்ள அநேக மக்களைப் பற்றி நினைக்கும் பொழுது அது என் இருதயத்தை உடைக்கிறது. இந்த பன்றிகள் எல்லாம் அவைகளின் முடிவை சந்திக்கும் வரை தங்களுக்கு தங்களே போஷித்து கொள்ளும். ஆனால் நம்முடைய வாழ்க்கை இந்தப் பன்றிகளிலிருந்து வேறுபட்டது. ஏனென்றால் நாம் ஆழ்ந்து யோசித்து, நிகழ்காலத்திற்கு அடுத்துள்ள முடிவில்லாத எதிர்காலத்தை பார்க்க வேண்டும். அநேக மக்கள் தங்களுடைய கடைசி நாளை நிறைய வருத்ததுடன் சந்திக்கிறார்கள். நிரந்தரமான பரலோக ராஜ்ஜியம் உண்டு என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அதற்குள் நுழைவதற்கு அவர்கள் தகுதியற்றவர்கள் என்று கருதுகிறார்கள், ஏனென்றால் அவர்கள் பாவத்தோடு இருந்திருக்கிறார்கள். வாழ்க்கை முழுவதும் இது போன்ற வருத்தங்கள் இருக்க கூடிய பலர் இருக்கிறார்ள். அவர்களுடைய இந்த வருத்தப்படக் கூடிய தலை எழுத்து என்னை விசனப்படவும் புலம்பவும் செய்கிறது.

கர்த்தரால் அமைக்கப்பட்டுள்ள நல்ல இடத்திற்கு இவர்களால் செல்ல முடியாமல் இருப்பதும், அவர்களுடைய வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றாமல் இந்த உலகத்தில் இருந்து மறைந்து விடப் போகிறார்கள் என்று இந்த வாழ்க்கையைப் பற்றி நாம் நினைக்கும் பொழுதும் இந்த ஆத்துமாவுக்காக பரிதாபப்படவும் அவர்களுடைய தலையெழுத்திற்காக வருத்தப்படவும் தான் முடியும். இதனால் தான் ஒரு கடுமையான கஷ்டமான கடல் பயணத்திற்கு வாழ்க்கை அடிக்கடி ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது. வாழ்க்கையை பற்றி குறிப்பிடும் பொழுது, மனித உலகத்தினுடைய

கசப்புணர்வில் வாழ முயற்சி செய்வது, இப்படிப்பட்ட கடலில் வாழ்வது போன்றது என்று மக்கள் சொல்லுகிறார்கள். ஏனென்றால் தங்களுடைய பிறப்பிலிருந்து இறப்புவரை, வாழ்வதற்காக உதையையும் கூச்சலையும் அனுபவிக்க வேண்டும்.

வாழ்க்கை இதுதான் என்று நமக்கு நாமே ஞாபகப்படுத்தி கொள்ளும் பொழுது இந்த ஆசரிப்புக் கூடாரத்தினுடைய சத்தியத்தை எல்லா மக்களுக்கும் விளக்குவதும் தேவனை சந்திப்பதற்கு அவர்களுக்கு உதவுவதும் முக்கியமான அவசர வேலை என்பதை நாம் நிச்சயத்துடன் உணர்கிறோம். ஏன்? ஏனென்றால் பலி காணிக்கையின் மூலமாக கர்த்தர் அவருடைய சொந்த வீட்டில், அவர்களைச் சந்திப்பதின் மூலம் இந்த பாவமான மக்களுக்கு அவர்களுடைய மீட்பைத் தருகிறார். ஆசரிப்புக் கூடாரம் வனாந்தரத்தில் அமைக்கப்பட்ட கர்த்தருடைய வீடு. கர்த்தருடைய வீடாகிய இந்த ஆசரிப்புக் கூடாரத்தில் பலி காணிக்கையினால் நிறைவேற்றப்பட்டுள்ள பாவ மன்னிப்பின் கிருபையின் மூலம் கர்த்தர் பாவிகளை சந்திக்கிறார். "நான் தங்கும் இடமாகிய என் வீட்டை உங்களால் கட்டுவேன். மேலும் இந்த ஆசரிப்புக் கூடாரத்திற்குள் இருக்கும் கிருபாசனத்திர்கு மேலே நான் உங்களைச் சந்திப்பேன்" என்று கர்த்தர் நமக்குச் சொல்லுகிறார். ஆசரிப்புக் கூடாரமாகிய கர்த்தருடைய வீட்டில் தான் கர்த்தரை சந்திப்பதற்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய சத்தியத்தில் இருக்கும் இந்த விசுவாசமானது இந்த உலகத்தில் உள்ள எந்த பொருளுக்கும் மாற்றப்பட முடியாது. மேலும் இது எந்த விலையைக் கொண்டும் வாங்க முடியாத அதிக பொக்கிஷமாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவை நம்முடைய மீட்பராக விசுவாசிக்கும் கிறிஸ்தவ விசுவாசம் உடையவர்களாய் இருக்கும் நான் இன்னமும் அதிக

ஆசீர்வாதமான சாலையில் கால் வைப்பதற்கு இந்த ஆசரிப்புக் கூடாரத்தை பற்றிய சரியான ஞானமும் விசுவாசமும் தான் வழி என்று நான் விசுவாசிக்கிறேன்.

நாம் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறோம்

நாம் வாழ்வது போல, ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையை வாழுபவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று ஆச்சரியப்பட்டு கொண்டு என் இருதயம் மகிழ்ச்சியான நினைவால் நிறைந்திருக்கிறது. வாழ்க்கை, இத்தனை பரிதாபமான வாழ்வாக இருந்தாலும், பல மக்கள், அவர்களுடைய சொந்த தலை விதியை முழுமையாக அறியாமல் இருக்கும் பொழுதே அவர்களுடைய வாழ்க்கையை தொடர்ந்து நடத்துகிறார்கள். ஆனால், கர்த்தருக்கு முன்பாக அவர்களுடைய வாழ்க்கை எப்படி பிடிப்பாக இருந்தது என்பதை அவர்கள் அடையாளம் காணவேண்டும் என்றும், அவர்களுடைய இருதயங்களை மனந்திரும்ப செய்ய வேண்டும் என்றும் கர்த்தர் விரும்புகிறார். மற்றொருபுறம், கர்த்தர் இலவசமாக அவர்களுக்கு கொடுத்துள்ள நற்செய்தியை கவனிக்காமலும் தங்களுடைய இருதயங்களில் ஒரு சிறிய இடத்தைக் கூட திறக்காமலும் தங்களுடைய வாழ்க்கையை இன்னமும் வாழ முயற்சி செய்கிறார்கள்.

கர்த்தர் பர்வோனிற்கு கொண்டு வந்த பத்து கொள்ளை நோய்களை குறித்து யாத்திராகமம் நமக்கு சொல்லுகிறது. எகிப்து தேசத்திற்கு மொத்தமாக பத்து கொள்ளை நோய்கள் கொண்டு வரப்பட்டன. எகிப்தில் இருக்கும் தன்னுடைய மக்களை விடுவிக்குமாறு கர்த்தர் பர்வோனிடத்தில் கட்டளைக் கொடுத்தார். அவன் அவருக்கு கீழ்ப்படியவில்லை என்றால் பத்து கொள்ளை நோய்களை

கொண்டு வருவேன் என்று பர்வோனிடத்தில் கர்த்தர் சொன்னார். ஆனால் பர்வோன் கர்த்தர் அவனுக்குச் சொன்னதைக் கவனிக்காமல் பிடிவாதமாக அவருடைய கட்டளையை தடுத்து, கர்த்தர் வாக்களித்திருந்த பத்து கொள்ளை நோய்களையும் பெற்றான். பர்வோனுடைய வீண்பிடிவாதம் தவறான நோக்கமுடையதாக இருந்தது. கர்த்தருடைய எல்லாத் தண்டனைகளையும் பெற்றுக் கொண்டு, சாத்தானால் பிடிக்கப்பட்டிருந்தது, இஸ்ரவேல் மக்களை அவன் கடைசியாக விடுவித்ததற்கு காரணாமாயிருந்தது. இது நாம் ஒவ்வொருவருக்குள்ளும் காணப்படும் தவறான பிடிவாதத்தைக் குறிக்கிறது.

இருந்த போதிலும், இது போன்ற மக்கள் கர்த்தருடைய ஆசரிப்புக் கூடாரத்தில் அவரால் அமைக்கப்பட்டுள்ள பாவத்தின் மீட்பை பெற்றுக்கொண்டு விசுவாசத்துடன் அவருடன் வாழலாம். ஒரு கழுதையினுடைய பிடிவாதத்துடன் கர்த்தருடைய சத்தியத்தை விசுவாசிக்காமல், தொடர்ந்து இதை நிராகரிக்க கூடிய அளவிற்கு இந்த மக்கள் இன்னமும் பிடிவாதமாயிருக்கிறார்கள். இதனால் தான், கர்த்தருடைய சத்தியத்தை சந்திக்கமுடியாமல் அவர்களுடைய வாழ்க்கையை பாவிகளாக வாழ்ந்து, அவர்களுடைய சொந்த அழிவை சந்திக்கும் அநேக மக்கள் இருக்கிறார்கள். இது என்னைத் துன்பத்தை விட அதிகமாக வேதனைப்படுத்துகிறது. கர்த்தருக்கு முன்பாக பல மக்கள் பிடிவாதமாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மக்கள் பெரும் கஷ்டத்தை சந்திக்கும் பொழுது சிறிது நேரத்திற்கு வளைந்து கொடுத்தாலும், கர்த்தருடைய விருப்பத்தை நிராகரிப்பதற்கு முன் எங்கு இருந்தார்களோ அங்கு திரும்பவும் போகிறார்கள். மறுபடியும் அவர்களுடைய பிடிவாதமான வழிகளைப் பெற்றுக் கொள்வதால், இரண்டாவது கொள்ளை நோயை அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும். இந்த இரண்டாவது

கொள்ளை நோயினால், அவர்கள் சற்று வளைந்து கொடுப்பார்கள். ஆனால் இது நீண்ட காலத்திற்கு நிலைக்காது, ஏனென்றால் திரும்பவும் கர்த்தருக்கு கீழ்ப்படியாமையைத் தொடங்கி அவரிடம் சவால் விடுவார்கள். மேலும் அவர்கள் மூன்றாவது கொள்ளை நோய்க்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதைத் தொடர்ந்து நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு மற்றும் ஒன்பது கொள்ளை நோய்களுக்கும், கடைசி கொள்ளை நோய்க்கும் பிறகு முடிவாக சரணடையும் வகையில் ஆளாக்கப்படுகிறார்கள், பிறகு அழிக்கப்படுகிறார்கள்.

கடைசி கொள்ளை நோய் வரும்பொழுது, மேசியா அவர்களுக்கு என்ன செய்தார் என்பதை விசுவாசிக்காததற்காக, நரகத்தினுடைய பாடுகளை ஏற்றுக் கொள்ள கூடிய அநேக மக்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட மக்களுடைய வாழ்க்கை எத்தனை முட்டாள் தனமானது? இதனால் தான் எல்லோருடைய வாழ்க்கையுமே அவ்வளவு பரிதாபமாக இருக்கிறது.

கர்த்தருக்கு முன்பாக மக்களுடைய வாழ்க்கை பரிதாபமானதாக இருந்தாலும், ஆசரிப்புக் கூடாரத்தில் கர்த்தரை சந்திப்பது உங்களுக்கு ஆசீர்வாதமானது என்பதை நீங்கள் உணரவேண்டும். மேலும் இந்த உணர்தலுடன் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய இந்த வார்த்தையின் மேல் சஞ்சரிக்க வேண்டும்.

கர்த்தர் நம்மிடமிருந்து கேட்கும் காணிக்கைகள்

சீனாய் மலைக்கு வந்து, அவருடைய முழு சட்டத்தின் வரிசையையும் அவருக்கு கொடுக்குமாறு மோசேயிற்கு கர்த்தர் கட்டளையிட்டார். "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்; ஒரு

சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; கொலை செய்யாதிருப்பாயாக; விபசாரம் செய்யாதிருப்பாயாக; களவு செய்யாதிருப்பாயாக; பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக" என்று மோசேயிக்கு அவர் பத்து கட்டளைகளைக் கொடுத்தார். மேலும் இஸ்ரவேலர்கள் தங்களுடைய அன்றாட வாழ்கையில் கடைப்பிடிக்க வேண்டிய மற்ற சட்டங்களைப் பற்றியும் அவர்களிடம் பேசினார். மொத்தமாக கர்த்தருடைய 613 கட்டளைகளும் சட்டங்களும் அங்கு இருந்தன.

இஸ்ரவேலர்கள் கால்நடையை தொலைத்தால் என்ன செய்யவேண்டும், மற்ற ஒருவனுடைய கால்நடை குழியில் விழுந்து விட்டால் என்ன செய்யவேண்டும், அவர்கள் தகாப் புணர்ச்சி கொள்ளாமல் இருக்க வேண்டும், அவர்களிடம் வேலையாட்கள் இருந்தால், அவர்களை ஏழாவது வருடம் விடுவிக்க வேண்டும். தங்களுடைய பெண் வேலைக்காரியை தங்களுடைய ஆண் வேலைகாரனுடன் திருமணம் செய்ய அனுமதித்து, அவர்களுக்கு குழந்தை இருந்தால், அந்த ஆண் வேலையாளை ஏழாவது வருடம் சுதந்திரமாக வாழ அனுமதிக்க வேண்டும் என்றும், இதைப் போன்ற 613 கட்டளைகள் அதில் அடங்கியிருந்தன. இஸ்ரவேலர்கள் தங்களுடைய அன்றாட வாழ்வில் கர்த்தரின் பார்வையில் விசுவாசத்துடன் கடைப்பிடிக்க வேண்டிய இதைப் போன்ற எல்லா சட்டங்களையும் கர்த்தர் மோசேயிற்கு சொன்னார்.

மோசேயை மலைக்கு கீழே சென்று, பெரியவர்களை

ஒன்று திரட்டி, அவருடைய கட்டளைகளை அறிவிக்குமாறு அவனிடம் கூறினார். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு இஸ்ரவேல் மக்கள் ஏற்றுக் கொண்டு, அவருடைய எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவோம் என்று அவர்களுடைய இரத்தத்தால் சத்தியம் கொண்டார்கள் (யாத்திராகமம் 24:1-4).

பின்பு கர்த்தர், மோசேயை மறுபடியும் ஒரு முறை மலைக்கு அழைத்து, இந்த முறை ஆசரிப்புக் கூடாரத்தை கட்டுமாறு கட்டளை கொடுத்தார்.

கர்த்தர் மோசேயிடம் பேசினார், *"இஸ்ரவேல் புத்திரர் எனக்குக் காணிக்கையைக் கொண்டுவரும்படி அவர்களுக்குச் சொல்லு; மனப்பூர்வமாய் உற்சாகத்துடன் கொடுப்பவன் எவனோ அவனிடத்தில் எனக்குக் காணிக்கையை வாங்குவீர்களாக" (ஆதியாகமம் 25:2).* பின்பு அவருடைய காணிக்கையைப் பட்டியலிட்டார்: *"நீங்கள் அவர்களிடத்தில் வாங்கவேண்டிய காணிக்கையாவன, பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிகப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டுமயிரும், சிகப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத்தோலும், தகசுத்தோலும், சீத்திம் மரமும், விளக்கெண்ணெயும், அபிஷேகதைலத்துக்குப் பரிமளவர்க்கங்களும், தூபத்துக்குச் சுகந்தவர்க்கங்களும், ஏபோத்திலும் மார்ப்பதக்கத்திலும் பதிக்கும் கோமேதகக் கற்களும் இரத்தினங்களுமே" (யாத்திராகமம் 25:3-7).*

கர்த்தர் இந்த காணிக்கையை கொண்டு வர சொல்வதற்கு பின்னால் ஒரு உறுதியான நோக்கம் இருந்தது. பாவம் இல்லாத கர்த்தர் தங்கக் கூடிய ஒரு பிரகாசிக்கும் கர்த்தருடைய வீட்டை இந்த பூமியின் மேல் கட்டி, இதனால் அவர் இஸ்ரவேல் மக்களைச் சந்தித்து, அவர்களுடைய பாவங்களை மறை செய்வது அந்த நோக்கமாய் இருந்தது. ஆனாலும் இன்றைய ஆலயங்களைப் போல ஒரு ஞாபகார்த்த மாளிகை கட்ட,

கர்த்தர் அவர்களிடம் பணம் கொண்டு வர சொன்னார் என்று இது சொல்லவில்லை. இன்றைய கிறிஸ்தவத்தின் தவறான தீர்க்கதரிசிகள், தங்களுடைய சொந்த ஆசைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக, அவர்களுடைய ஆலய கட்டிடங்களை கட்ட முயற்சி செய்யும் பொழுது, இந்த பகுதியை அடிக்கடி தவறாக பயன்படுத்துகிறார்கள்.

இதற்கு எதிராக, கர்த்தர் இஸ்ரவேலர்களிடத்தில் இந்த காணிக்கைகளை கொண்டுவரச் சொன்னார். ஏனென்றால் அவருடைய சொந்த வீட்டை கட்டுவதற்கு அவற்றை பயன்படுத்தி அங்கு அவர்களை அதிகமாக ஆசீர்வதிப்பதற்காகவும் நம்முடைய நியாயத்தீர்ப்பில் இருந்து நம்மை மீட்பதற்காகவும், நம்மை நம்முடைய பாவங்களில் இருந்து விடுவிப்பதற்காகவும், கர்த்தர் இந்த காணிக்கைகளை பெற்றுக் கொண்டார். கர்த்தர் பரிதாபமான நம்மை சந்திப்பதற்காகவும், நம்முடைய பாவங்களை கழுவுவதற்காகவும், நம்முடைய பாவங்களை மறையச் செய்வதற்காகவும், நம்மை அவருடைய சொந்த மக்களாக்குவதற்காகவும் இதை அவர் பெற்றுக் கொண்டார்.

காணிக்கை கொண்டு வரவேண்டும் என கர்த்தர் அவர்களிடத்தில் கட்டளையிட்டதில் மறைந்துள்ள ஆவிக்குரிய பொருள்

நாம் மேலே செல்வதற்கு முன்னால், கர்த்தர் அவரிடத்தில் கொண்டுவரும் படி கட்டளையிட்ட பொருட்களின் ஆவிக்குரிய அர்த்தத்தை பற்றி சிந்திக்க சிறிது நேரத்தை செலவழிப்போம். இதன் பிறகு அதனுடைய வெளிச்சத்தில் நம் விசுவாசத்தை ஆராய்வோம்.

தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம்

தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் எங்கு உபயோகப்படுத்தப்பட்டது என்று முதலில் நாம் கண்டு பிடிக்கவேண்டும். ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்திலும், மகா பரிசுத்த ஸ்தலத்திலும் மற்றும் அவற்றுள் காணப்பட்ட பொருட்களான விளக்குத் தண்டு, அப்பத்தின் மேஜை, தூபவர்க்க பலி பீடம், கிருபாசனம் மற்றும் உடன்படிக்கைப் பெட்டி ஆகியவற்றில் தங்கம் பயன்படுத்தப்பட்டது. தங்கம், கர்த்தருடைய வார்த்தையில் உள்ள விசுவாசத்தைக் குறிக்கிறது, மேலும் மீட்பின் கிருபையை வெள்ளி குறிக்கிறது. மேசியாவால் மட்டும் கொடுக்கப்பட்டுள்ள மீட்பின் பரிசை விசுவாசிக்கும் விசுவாசத்தை உடையவர்களாகவும், நம்முடைய தேவன் நம்முடைய எல்லாப் பாவங்களையும் எடுத்து, நமக்காக நியாயந் தீர்க்கப்பட்டார் என்பதை விசுவாசிக்கும் விசுவாசத்தை உடையவர்களாக நாம் இருக்கவேண்டும் என்றும் இது நமக்குச் சொல்லுகிறது.

இதற்கு பதிலாக, ஆசரிப்புக் கூடாரத்தினுடைய தூண்களின் குழிவிலும், அதனுடைய ஆப்பிலும், வெண்கல பாத்திரத்திலும் சர்வாங்க தகன பலிபீடத்திலும், வெண்கலம் பயன்படுத்தப்பட்டது. எல்லா வெண்கல பாத்திரங்களும் பூமிக்கு மேலே வைக்கப்படவோ அல்லது புதைக்கப்படவோ வேண்டும். இது, மக்களுடைய பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது, மேலும் நம்முடைய பாவங்களுக்காகவும் சட்டத்தை கைக்கொள்ள தவறியதற்காகவும் நாம் தண்டிக்கப்பட உள்ளோம் என்று வெண்கலம் நமக்கு சொல்லுகிறது.

அப்படியானால், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் ஆகியவற்றின் ஆவிக்குரிய பொருள் என்ன? கர்த்தரால் கொடுக்கப்படும் மீட்பின் பரிசை பெற்றுக் கொள்வதற்கான விசுவாசத்தின் அஸ்திபாரத்தை அவை அமைக்கிறது

நாமெல்லாரும் சட்டத்தை முழுமையாக கைக்கொள்ள முடியாத பாவிகள் என்றும், நம்முடைய பாவங்களுக்காக பதிலாக, தேவன் இந்த உலகத்திற்கு வந்து, ஆசரிப்புக் கூடாரத்தில் கொடுக்கப்படும் பாவ காணிக்கையின் பலி காணிக்கையாகி நம்முடைய இடத்திலிருந்து நம்முடைய பாவங்களுக்காக தண்டிக்கப்பட்டார் என்றும் வேதம் நமக்கு சொல்லுகிறது.

பாவிகள் அவர்களுடைய பாவ பிரச்சனையை தீர்ப்பதற்காக, ஆசரிப்புக் கூடாரத்திற்கு ஒரு பரிசுத்தமான மிருகத்தை கொண்டு வந்தார்கள், மேலும் பலி முறைக்கு ஏற்ப, தங்கள் கைகளை அதன் தலையின் மேல் வைப்பதின் மூலம் தங்களுடைய பாவங்களை அதற்குள் செலுத்தினார்கள். அவர்களுடைய பாவங்களை ஏற்றுக் கொண்ட பலி காணிக்கை தன் இரத்தத்தை சிந்தி, கொல்லப்பட்டது. இப்படி செய்வதின் மூலம், நரகத்திற்கு தள்ளப்பட (வெண்கலம்) வேண்டிய இஸ்ரவேல் மக்கள், தங்களுடைய பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ள முடியும் (வெள்ளி). மேலும் விசுவாசத்தின் மூலம் பாவத்திற்கான தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் (தங்கம்).

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல்

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகிய இவை தான் அடிக்கடி பயன்படுத்தப்படும் மற்ற பொருட்களாகும். ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிற்கதவிலும், பரிசுத்த ஸ்தலத்தினுடைய நுழைவாயிலிலும், பரிசுத்த ஸ்தலத்தையும், மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பிரிக்கும் திரைக்கு இடையிலும் இந்த நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேவன் ஒரு ஸ்திரியினுடைய

குழந்தையாக வருவார் என்றும், நம்முடைய தேவன் இந்த உலகத்திற்கு உண்மையில் வந்து ஞானஸ்நானம் எடுத்தும் கொள்ளப்பட்டும் பாவிகளை தங்களுடைய பாவங்களிலிருந்து என்று மேலும் கர்த்தரே நம்மை மீட்பார் என்றும் ஆதியாகமம் 3:15 யில் தீர்க்கதரிசக்கப்பட்டுள்ளது போல இந்த நான்கு நூல்களும் நமக்கு சத்தியத்தை சொல்லுகின்றது.

இந்த நான்கு நூல்களும் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய நுழைவாயிலுக்கு மட்டும் பயன்படுத்தப்படவில்லை, ஆனால் தலைமை ஆசாரியனுடைய துணிகளுக்கும், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய திரைச் சீலைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, நீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் அவருடைய வேலையை நிறைவேற்றுவதன் மூலம் நம்மை நம்முடைய பாவங்களில் இருந்து மீட்பார் என்பதின் கர்த்தருடைய உடன்படிக்கையாக இது இருந்தது. நம்முடைய தேவன் இந்த வாக்கை கைக் கொண்டு, உலகத்தினுடைய பாவங்களிலிருந்து நம்மை உண்மையில் மீட்டுள்ளார்.

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய நுழைவாயிலுடைய கஷ்டமான பகுதி நீல நிற நூல் தான் இயேசு கிறிஸ்து, மேசியாவாக இந்த பூமிக்கு வந்து, ஏன் சிலுவையின் மீது மரிக்க வேண்டும். இதற்கு காரணம் அவர் ஞானஸ்நானம் எடுக்கப்பட்டிருந்தது தான். நீல நிற நூல் இயேசுவின் ஞானஸ்நானத்தை குறிக்கிறது, இரத்தாம்பர நிற நூல இயேசு தான் இராஜா என்று நமக்கு சொல்லுகிறது. சிகப்பு நூல் அவருடைய கொள்ளப்படுதலையும் இரத்தம் சிந்துதலையும் குறிக்கிறது. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் தேவையான கட்டும் பொருட்களாய் இருக்கிறது, இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு மேசியாவாக வந்து நம்முடைய எல்லா பாவங்களையும் அவர் மீது

எடுத்துக் கொண்டு நமக்கு கொடுத்த மீட்பின் பரிசை இது அமைக்கிறது.

உலகத்தில் உள்ள பல மக்கள், இயேசு கிறிஸ்து தான் தேவமைந்தன் என்றும் மேலும் அவர் தான் அடிப்படையில் கர்த்தர் என்றும் அழுத்தி சொல்லுகிறார்கள். ஆனால் ஆசரிப்புக் கூடாரத்தின் மூலமாக இது போன்ற போதனைகள் முழுமையன சத்தியமாக இருக்க முடியாது என்று கர்த்தர் நமக்கு சொல்லுகிறார்.

1 பேதுரு 3:21 இல் அப்போஸ்தலனாகிய பேதுரு கூறினான், *"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன் படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது."*

இயேசு கிறிஸ்து அவருடைய மீட்பின் சத்தியத்தை நிறைவேற்றினார் என்றும், நம்மை மீட்கக்கூடிய எதிர் வகையாகிய விசுவாசத்திற்கு அவருடைய ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளவது மூலம் முழுமையான அஸ்திபாரத்தை அமைத்தார் என்று இது நமக்கு தெரியப்படுத்துதியது. நம்முடைய மேசியா யார்? மேசியா என்றால் மீட்பர் இயேசு இந்த உலகத்திற்கு வந்து, நம்முடைய எல்லா பாவங்களையும், உலகத்தினுடைய எல்லா பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொள்வதற்காக ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டால் என்றும் உண்மையில் அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக அவற்றை எல்லாம் அவர் மீது எடுத்துக் கொண்டார் என்று இது நமக்கு சொல்லுகிறது.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் யினால் நெயப்பட்டது மூலம் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வாசலை காட்டும்படி கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு சொன்னார். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய

பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் யின் சத்தியத்தை நிறைவேற்றும் நோக்கத்தோடு தான் ராஜாதி, ராஜாவாகவும் பரலோகத்தின் தேவனாகவும் இருக்கும் நம் தேவன் இந்த உலகத்திற்கு மனித சரீரத்தின் மூலம் வந்தார். நம்முடைய தேவன் மனித் சரீரத்தின் மூலம் வந்தார், கர்த்தருடைய எல்லா நீதிகளையும் நிறைவேற்றக்கூடிய ஞானஸ்நானத்தை மனித குலத்தின் பிரதிநிதியாகிய யோவான் ஸ்நானகனிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

தலைமை ஆசாரியன் பலி காணிக்கையின் தலையின் மேலே அவனுடைய கைகளை வைப்பதின் மூலம் இஸ்ரவேலர்களின் பாவங்கள் அதற்குள் செலுத்தப்பட்டு அது அவர்களுடைய இடத்தில் இருந்து அவர்களுடைய பாவங்களுக்காக தண்டிக்கப்படுவதை ஏற்றுக்கொண்ட பழைய ஏற்பாட்டின் பலி காணிக்கையுடன் இது ஒத்துப் போகிறது. வேறு வார்த்தைகளில் கூறினால், பழைய ஏற்பாட்டினுடைய பலி காணிக்கையை போல புதிய ஏற்பாட்டில், எல்லா பாவிகளுடைய பாவங்களுக்காக ஞானஸ்நானம் பெற்று, இதனால் உலகத்தினுடைய பாவங்களுக்காக தண்டனையும் ஏற்றுக்கொண்டு பலி காணிக்கையாக இயேசு வந்தார். கர்த்தருடைய பலி ஆடாக, யோவானால் ஞானஸ்நானம் பெற்று நீல நிற நூலினுடைய சத்தியத்தை இயேசு நிறைவேற்றினார். இந்த ஞானஸ்நானத்தின் மூலம் மனித குலத்தினுடைய பாவங்களை ஒரே தரமாக அவர் தன் மீது எடுத்துக் கொண்டார். கிறிஸ்தவர்கள், இளநீல நிற நூலில் இருக்கும் சத்தியத்தையும் இயேசுவினுடைய ஞானஸ்நானத்தையும் தெரிந்துக் கொள்ளவும் விசுவாசிக்கவும் முடியாமல் இருந்ததால் ஒரே தரமாக அவர்களுடைய பாவத்திற்கான மீட்பை பெற்றுக்கொள்ளவில்லை.

இதனால் மற்ற உலக பிரகரமான மதங்களின் மக்களை விட மோசமான மக்களாக பல கிறிஸ்தவர்கள் மாறி உள்ளார்கள். நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்துக்

கொள்ளுவதற்காக இயேசு பெற்றுக் கொண்ட இந்த ஞானஸ்நானத்தைப் பற்றிய சரியான கருத்து கிறிஸ்தவர்களிடம் இல்லாமல் இருக்கும் பொழுது அவர்களுடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் முதலில் இருந்து சரியாக அமைக்கப்பட முடியாது.

சரியாக சொல்ல வேண்டும் என்றால், மேசியா இந்த உலகத்திற்கு வந்து, நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்துக் கொண்டதற்கான முறையும் சத்தியமுமாய் இளநீலநிற நூல் இருக்கிறது. மேலும் சிகப்பு நிற நூல் அவருடைய இரத்தத்தை குறிக்கிறது. இயேசுவினுடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களும் அவருக்குள் செலுத்தப்பட்டதன் காரணமாக தான் அவர் கொல்லப்பட்டு அவருடைய இரத்தத்தைச் சிந்தி, சிலுவையின் மீது இறந்தார். இயேசு, யோவானிடமிருந்து பெற்றுக் கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய பாவங்களை அவர் மீது ஏற்றுக்கொண்டதாலே சிலுவையின் மீது அவர் மரித்தார். மேலும் இந்த உண்மையினால் தான், நமக்காக சிலுவையின் மீதான அவருடைய பலி உபயோகமற்றதாக இருக்கவில்லை. மேசியாவாகிய, இயேசு கிறிஸ்து அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை முழுமையாக சுமந்து, கொல்லப்பட்டதன் மூலமாகவே, அவர் நம்முடைய மீட்பை நிறைவேற்ற முடிந்தது.

இயேசு கிறிஸ்து தான் கர்த்தர் என்றும் அவர் தான் ராஜாதி ராஜா என்றும் இரத்தாம்பர நிற நூல் சொல்லுகிறது. இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாக இரத்தாம்பர நிற நூல் இருந்தாலும், யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெறாமலும், யோவான் மனித குலத்தினுடைய பிரதிநிதியாக இல்லாமலும், இதனால் அவர் தன் மீது நம்முடைய பாவங்களை எடுத்துக் கொள்ளாமலும் இருந்து (இளநீல நிற நூல்), எவ்வளவு துயரத்துடனும்

வேதனையுடனும் அவர் சிலுவையின் மீது மரித்திருந்தால் (சிகப்பு நூல்), அவருடைய மரணம் உபயோகமற்றதாக மட்டுமே இருந்திருக்கும். பழைய ஏற்பாட்டில் கர்த்தர் பேசிய தீர்க்கதரிசன வார்த்தையெல்லாம் புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் நமக்கு சொல்லுகிறது.

இன்றைய கிறிஸ்தவம் இளநீல நிற நூலின் அர்த்தத்தை தொலைத்து விட்டது

இன்றைய கிறிஸ்தவத்தின் நான்கு நூல்களில் இளநீல நிற நூலை நிராகரிப்பதற்கும், ஒருவருடைய சொந்த விருப்பத்திற்கேற்ப கர்த்தருடைய வார்த்தையை விளக்குவதற்கும், இன்னமும் ஒரு குறிக்கப்பட்டுள்ள சுபாவம் இருக்கிறது. இந்த பெரிய பாவம் கண்டிப்பாக தண்டிக்கப்படும்.

நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்பதற்கு, நம்முடைய மேசியாவாகிய இயேசு கிறிஸ்து மனித சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்து, ஞானஸ்நானம் பெற்று கொல்லப்பட்டார் என்று இரட்சிப்பின் சத்தியத்தை ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தின் நுழைவாயிலுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை நமக்கு சொல்லுகின்றன. இயேசு நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொண்டார்.

இயேசு நம்முடைய பாவங்களை அவர் மீது எப்படி எடுத்துக் கொண்டார்? யோவானிடமிருந்து பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தின் மூலமாக அவர் நம் எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்டார். நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்துக் கொண்டதன் மூலமாக தான் இயேசு கிறிஸ்து நம்முடைய உண்மையான மீட்பர்

ஆனார். இதனால் தான் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய நுழைவாயில் இந்த நான்கு நூல்களால் நெய்யப்பட வேண்டியிருந்தது. இயேசு இந்த உலகத்திற்கு வந்து, ஞானஸ்நானம் பெற்று, சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தை சிந்தி, மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிரோடு எழுந்ததால், அவர் கர்த்தராக இருக்கிறார் என்று இது நமக்கு சொல்லுகிறது.

இதைப் போல ஆசரிப்புக் கூடா பிரகாரத்தினுடைய வாசலில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் அமைக்கப் பட்டிருந்தது. பரலோக இராஜ்ஜியத்திற்குள் நம்மை அழைத்து செல்லும் இரட்சிப்பின் கதவாக இயேசு இருக்கிறார். இந்த கதவு இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டது. இயேசு தான் பாவிகளுடைய மீட்பர். இயேசுவினுடைய ஞானஸ்நானமும் அவருடைய மரணமும், பாவிகளை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்ட அவருடைய மீட்பின் பரிசாய் இருக்கிறது.

இன்றைய கிறிஸ்தவம், இயேசுவினுடைய ஞானஸ்நானத்தை சரியாக புரிந்து கொள்ள தவறியதால் தான் அதனால் உண்மையான கர்த்தரைச் சந்திக்க முடியாமல் போயிற்று. மாறாக, உலகப்பூர்வமான மதங்களில் ஒன்றாக மாறுவதில் முடிந்துள்ளது. நம்முடைய விசுவாசத்தை பொருத்தவரை இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் சத்தியத்தின் மேல் விசுவாசத்தின் பிடிப்பான அஸ்திபாரத்தை நாம் அமைக்கவேண்டும். இந்த விசுவாசத்தின் அஸ்திபாரமானது, நம்முடைய தேவன் இந்த உலகத்திற்கு வந்து, அவருடைய இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலமாக உலகத்தினுடைய எல்லாப்

பாவங்களிலிருந்தும் என்னையும், உங்களையும் மீட்டுள்ளார் என்பதின் உண்மையாக இருக்கிறது.

இயேசு இந்த உலகத்திற்கு வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாகவும், சிலுவையின் மீதான அவருடைய இரத்தத்தின் மூலமாகவும், நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்டுள்ள மீட்பின் பரிசை நிறைவேற்றியுள்ளது. இன்னமும் குறிப்பாக கூறினால், இயேசு இந்த உலகத்திற்கு மனித சரீரத்தில் வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக உலகத்தினுடைய பாவங்களை அவர் மீது எடுத்துக் கொண்டு, சிலுவையின் மீதுள்ள அவருடைய இரத்தத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களுக்கும் பிராயச்சித்தமானார். இதனால் சிலுவையின் மீது மரித்து நம்முடைய பாவங்களுக்கான தண்டனையைச் சுமந்தார் (1 யோவான் 5:4-8). நீர் மற்றும் இரத்தத்தின் மூலமாக நம்மை மீட்ட இந்த இயேசு அடிப்படையாக நம்மை படைத்த கர்த்தராகவும், நம்மை இரட்சித்த இரட்சிப்பின் வரத்தை நமக்கு கொடுத்தவராகவும் இருக்கிறார். நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் தன்டனைகளிலிருந்தும் நம்மை மீட்ட இந்த இயேசு, நம்முடைய உண்மையான மீட்பராகியுள்ளார். இதைத் தான் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய கட்டும் பொருட்கள் நமக்கு சொல்லுகின்றன.

இதைப் போல, இந்த பொருட்களை விசுவாசிப்பதின் மூலம் நாம் நம்முடைய விசுவாசத்தை அமைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய சொந்த மீட்பராகவும், மேசியாவாகவும் வந்த இந்த இயேசுவை விசுவாசிக்கும் பொழுது, அவர் பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தையும், சிலுவையின் மீது அவர் நமக்காக ஏற்றுக்கொண்ட எல்லாத் தண்டனைகளையும், மரணத்தில் இருந்து அவருடைய உயிர்தெழுதலையும் நாம் நம் முழு இருதயங்களுடனும் தெளிவாகவும் கண்டிப்பாகவும் விசுவாசிக்க வேண்டும். அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாகவும் சிலுவையின்

மீது சிந்திய அவருடைய இரத்தத்தின் மூலமாகவும் நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் நமக்கு மீட்பின் பரிசை கொடுத்துள்ள மீட்பரானவர் ஒரு மனிதனாக இருக்கவில்லை ஆனால் மனித குலத்தையும் முழு உலகத்தையும் படைத்த படைப்பாளராக இருந்தார். இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலில் நம்முடைய விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். இப்படிப்பட்ட விசுவாசத்தின் அறிக்கையில்லாமல் இயேசுவை நம்முடைய மீட்பராக விசுவாசிப்பது நிரூபிக்க முடியாதது.

நீங்கள் எப்பொழுதாவது அமைதி அஞ்சல் வார்த்தை விளையாட்டை விளையாடியிருக்கிறீர்களா? ஒரு வாக்கியம் எழுதப்பட்டுள்ள அட்டை ஒரு நபருக்கு கொடுக்கப்படுகிறது. அந்த நபரில் இருந்து விளையாட்டு தொடங்குகிறது. முதலாம் நபர் அந்த வாக்கியத்தை யாருக்கும் தெரியாமல் வாசிக்கிறார், பிறகு உதட்டினுடைய அமைப்பைக் கொண்டு, இந்த வார்த்தையை தெரிவிக்கிறார். பின்பு உதட்டினுடைய அசைவை வாசிக்கும் மற்ற நபர், அதை மூன்றாவது நபருக்கு தெரிவிக்கிறார், இந்த உதட்டசைவை அடுத்த நபர் கவனிக்கிறார், இதே முறையில் நான்காவத் நபருக்கு இதை சொல்லுகிறார். இதை கடைசி நபரை அடையும் வரை செய்கிறார்கள். முதலில் சொல்லப்பட்ட வாக்கியத்தை கடைசி நபர் சரியாகச் சொன்னால் அவருக்கு இந்த விளையாட்டினுடைய புள்ளி போய் சேரும். உண்மையான வாக்கியம் தவறாக கூறப்படுவதால் தான் இந்த விளையாட்டு வேடிக்கையாக உள்ளது. உதாரணத்திற்கு, "பேனைப் போடுங்கள்" என்ற வாக்கியத்தால் இந்த விளையாட்டு தொடங்கப்பட்டிருந்தால், பல நபர்களுக்கு இது அஞ்சல் செய்யப்பட்ட பிறகு, இது மாற ஆரம்பித்து விடுகிறது. 'கடைசியில்' "கழுதையைத் திருப்புங்கள்" என்று கடைசி நபர் சொல்லலாம். இது முற்றிலும் வித்தியாசமான வாக்கியத்தில் முடிகிறது.

இந்த கடைசி நபர் முற்றிலும் வித்தியாசமான

வாக்கியத்தை சொல்வது போல, அமைதி அஞ்சல் வார்த்தை விளையாட்டை விளையாடுவது போல, இன்றைய கிறிஸ்தவர்கள் முற்றிலுமாக விசுவாசத்தை தவறாக அமைத்து விட்டார்கள். ஏன் இந்த நிலமை? ஏனென்றால் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிறத்தினுடைய விசுவாசத்தின் மீது தம் விசுவாச அஸ்திபாரத்தை அமைக்க இன்றைய கிறிஸ்தவம் தவறிவிட்டது. இந்த இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற விசுவாசத்தின் மேல் இதனுடைய அஸ்திபாரம் அமைக்கவில்லை. விசுவாசத்தினுடைய அஸ்திபாரம் பொய்யாக இருக்கும் பொழுது, நாம் எவ்வளவு ஆர்வமாக இயேசுவை விசுவாசித்தாலும், அவருடைய போதனைகளை நம்முடைய வாழ்க்கையில் செயல்படுத்த எவ்வளவு முயற்சித்தாலும், நம்மால் இதைச் செய்ய முடியாது.

நம்முடைய தேவன், ஆசரிப்புக் கூடாரத்தை கட்டுவதற்காக அவர்களுடைய காணிக்கைகளை அவரிடம் கொண்டு வர வேண்டும் என்று இஸ்ரவேலர்களுக்கு சொன்ன பொழுது, முதலில் தங்கம், வெள்ளி வெண்கலம் ஆகியவற்றையும், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றை பிறகும் கொண்டு வரும்படி அவர்களிடம் சொன்னார். இயேசு கிறிஸ்து யோவானிடம் இருந்து பெற்றுக்கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாகவும், அவருடைய சிலுவை இரத்தத்தின் மூலமாகவும், அவருடைய உயிர்தெழுதலின் மூலமாகவும் நம்மை மீட்டுள்ளார் என்றும் இந்த கட்டிட பொருட்கள் நமக்கு காண்பிக்கின்றன.

இளநீல நிற நூல், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய எல்லா நுழைவாயிகளுக்கும் மட்டும் பயன்படுத்தப் படாமல், தலைமை ஆசாரியனுடைய அங்கியிலும் கூட பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவன் எப்படி இந்த உலகத்திற்கு வந்தார் என்றும், எப்படி சரியாக, அவர் என்னையும்

உங்களையும் மீட்டுக்கொண்டார் என்றும் நமக்கு சொல்லும் நற்செய்தி இதுதான். இதைப் போன்ற விசுவாசத்தினுடைய இந்த நான்கு அமைக்கும் பொருட்களாகிய இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை எவ்வளவு முக்கியமானவை என்று இது நமக்குச் சொல்லுகிறது. இவை உண்மையில் நம்முடைய விசுவாசத்திற்காக இருக்கின்றன. இந்த வார்த்தையின் அடிப்படையில் நாமெல்லாரும் நம்முடைய விசுவாசத்தின் பிடிப்பை அமைக்க வேண்டும். இதற்கு பிறகு தான் கர்த்தரை விசுவாசித்து நாம் நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பை பெற்றுக்கொள்ளவும், இந்த வார்த்தைக் கூறும் அவருடைய வேலையாளாகவும் முடியும். மேலும் தேவன் திரும்பி வரும் பொழுது, இந்த விசுவாசத்துடன் கர்த்தருக்கு முன்பு நம்பிக்கையுடன் நிற்கக் கூடிய விசுவாசத்தின் மக்களாகவும் முடியும்.

கொரியாவில், அந்நிய பொருட்களை சிறந்தது என்று கருதக்கூடிய இச்சகம் பேசுவது இன்னமும் இருக்கிறது என்பது உண்மைதான். இந்த இயல்பானது என் நாட்டினுடைய போதகர்களுக்கு மத்தியிலும் இருக்கிறது. இவர்கள், மேற்கத்திய நாட்டு போதகர்கள் கூறியதில் அதிக நம்பிக்கை வைக்கிறார்கள். மேலும் கர்த்தருடைய வார்த்தையை விட இவர்களுடைய வார்த்தையை அதிகமாக சார்ந்து இருக்கிறார்கள். அவர்கள் இந்த அறியாமையிலிருந்து விடுவிக்கப்பட்டு அவரை விசுவாசித்தும், சார்ந்தும், கர்த்தருடைய வார்த்தையை அவர்கள் விசுவாசிக்க வேண்டும். ஏனென்றால், நம்முடைய தேவனின் ஞானஸ்நானத்தினுடைய சத்தியமும், அவருடைய இரத்தமும், அவர் தான் கர்த்தர் என்று உண்மையும், அடிப்படையாக நம்முடைய இரட்சிப்பின் கதவாகியும் உள்ளது.

"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து"

(மத்தேயு 16:16). என்று அப்போஸ்தலனாகிய பேதுரு கூறியதைப் போல, நீங்கள் விசுவாசித்தால், நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்பதற்கு, தேவன் இந்த பூமிக்கு வந்தார் என்பதை நீங்கள் விசுவாசிப்பதுடன், தன் ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்து கொண்டதன் மூலமாகவும், சிலுவையின் மீது மரித்ததின் மூலமாகவும், மரணத்திலிருந்து மறுபடியும் எழுந்ததின் மூலமாகவும் தேவன் நம்முடைய உண்மையான மீட்பின் கர்த்தராக ஆனார் என்பதையும் நீங்கள் தெரிந்துக்கொண்டு விசுவாசிக்க வேண்டும். நம்முடைய தேவனுடைய ஞானஸ்நானமும், சிலுவையின் மீதான இரத்தமும் தான் நம்மை இரட்சிப்பின் பரிசை பெற்று கொள்ளச் செய்யும் உண்மையான விசுவாசத்தின் அஸ்திபாரமாகவும் இருக்கிறது. கர்த்தருடைய வார்த்தைக்கு ஏற்ப இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகிய விசுவாசத்தை நாம் விசுவாசிக்காவிட்டால், இதை உண்மையான விசுவாசம் என்று நாம் எப்படி அழைக்க முடியும்?

சட்டம் வரவிருக்கும் நல்லவைகளின் நிழலாகும்

தேவன் இந்த உலகத்திற்கு மனித சரீரத்தில் வந்து, அவருடைய மரணத்தின் மூலம் நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக்கொண்டு, மரித்தோரிலிருந்து மறுபடியும் எழுந்து, இதன் மூலம் நம்முடைய இரட்சகர் ஆனார் என்று ஆசரிப்புக் கூடாரத்தினுடைய கட்டுமானப் பொருட்கள் நமக்கு காண்பிக்கின்றன. இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் மூலமாக நம் தேவன் நமக்கு மீட்பின்

பரிசை தருவேன் என்று பழைய ஏற்பாட்டில் வாக்களித்துள்ளார். ராஜாதி ராஜாவாக இருந்து ஞானஸ்நானம் எடுத்து, பாவிகளுக்காக கொல்லப்பட்ட இயேசு கிறிஸ்துவை தவிர இந்த உடன்படிக்கையை யாரும் நமக்கு தரவில்லை. வேறு வார்த்தைகளில் கூறினால், இந்த கர்த்தர், நம் கர்த்தராகிய மேசியாவாக நம்மிடத்தில் வந்தார். இதைப் போல, இந்த சத்தியத்தை முழுமையாக தெரிந்துக் கொள்வதின் மூலமாகவும், விசுவாசிப்பதின் மூலமாகவும், நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தை நாம் அமைக்க வேண்டும். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பதின் மூலம், நாமெல்லாரும் மீட்பின் பரிசை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் ஆகியவை ஆசரிப்புக் கூடாரத்திற்காக பயன்படுத்தப்பட்டன. இந்த பொருட்கள் நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தைக் குறிக்கின்றன. கர்த்தருக்கு முன்பாக, நம்முடைய பாவங்களுக்காக நரகத்திற்குள் தள்ளப்படுவதை நாம் தடுக்க முடியாது. ஆனால் இதைப் போன்று நம்மை போன்ற விசுவாசிக்கும் மக்களுக்கு, மீட்பின் பரிசை நம் தேவன் கொடுத்துள்ளார். மனித குலத்தினுடைய பலி காணிக்கையாக இயேசு யோவானால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு, கொல்லப்பட்டு, இதன் மூலம் நம்மை முழுமையாக நம்முடைய பாவங்களிலிருந்து மீட்டுள்ளார். நரகத்தைத் தடுப்பதற்கு நம்மிடம் எந்த வழியும் இல்லை. ஏனென்றால் நம்முடைய பாவங்களுக்காக நாம் தண்டிக்க படவுள்ளோம் என்பது நமக்குத் தெரியும். மேலும் நம்முடைய எல்லாப் பாவங்களையும் மறையச் செய்யும் விசுவாசத்தை எப்படி பெற்றுக்கொள்வது என்பது நமக்குத் தெரியாது. ஆனால் கர்த்தரில் இரட்சிப்பின் பரிசு இருந்தது. இயேசு உலகத்திற்கு வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லா பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொண்டு, சிலுவையில் மரித்து இதன் மூலம்

நம்முடைய பாவங்களின் பிரச்சினைகளையும் தண்டனைகளையும் தீர்த்தார். இது தான் இரட்சிப்பின் பரிசு.

கர்த்தர் தம்முடைய இரட்சிப்பின் வேலையை நிறைவேற்றி, நமக்கு இரட்சிப்பின் பரிசை கொடுத்துள்ளார் என்பதை விசுவாசிப்பதின் மூலம், நாம் நம்முடைய விசுவாசத்தினால் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டுள்ளோம். இதனால் தான் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலத்தின் விசுவாசத்தை, கர்த்தர் தன்னிடத்தில் கொண்டு வரச் சொன்னார். ஏனென்றால் நரகத்திற்கு தள்ளப்படுவதை தடுக்கமுடியாத அவர்களை இரட்சிப்பின் பரிசை கொடுத்ததின் மூலம் முழுமையாக மீட்டுள்ளார். உண்மையில், தேவன் இந்த பூமிற்கு வந்து, நம்முடைய எல்லா பாவங்களையும் அவர் மீது எடுத்து கொண்டு, நம்முடைய எல்லா தண்டனைகளையும் ஏற்றுக்கொண்டு, நம்மை மீட்டதால் தான் இந்த இரட்சிப்பின் பரிசை விசுவாசிப்பதின் மூலம் கர்த்தருக்கு முன்பாக நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம்.

இயேசு கிறிஸ்து, இப்பொழுது நம்முடைய நிறைவான இரட்சகராகியுள்ளார். இதனால் நாம் அவருடைய இரட்சிப்பின் பரிசில் நம்முடைய விசுவாசத்துடன் பிடிப்பாக நிற்க வேண்டும். ஏனென்றால் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை விசுவாசத்தின் பரிசாய் இருக்கின்றன. சொந்த கருத்தின் படி நாம் விசுவாசிக்கக் கூடாது என்று கர்த்தர் விரும்புகிறார்.

ஆட்டின் மயிர், சிகப்பு சாயம் பூசப்பட்ட செம்மறி ஆட்டுகடாவின் தோல் மற்றும் மரநாய் தோல்கள்

இவை ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வாசல்களைச்

செய்வதற்கு பயன்படுத்தப் பட்டன. முதலாம் வாசல் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது. இதன் மீது ஆட்டினுடைய ரோமத்தால் ஆன இரண்டாவது திரை வைக்கப்பட்டிருந்தது. பிறகு இது, செம்மறி ஆட்டுக்கடாவினுடைய சிகப்பு சாயம் பூசப்பட்ட தோலால் மூடப்பட்டிருந்தது. கடைசியாக மரநாயினுடைய தோல் மேலே வைக்கப்பட்டிருந்தது. இந்த முறையில், ஆசரிப்புக் கூடாரத்தை நான்கு வித்தியாசமான பொருட்களாலான மூடிகள் மூடின.

ஆசரிப்புக் கூடாரத்தின் மேல் போடப்பட்டிருந்த மூடியானது மரநாயின் தோலால் செய்யப்பட்டிருந்தது. இதனால், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய மூடியின் மேல் பரப்பில் இந்த கருப்பு மரநாய் தோல்கள் தான் இருந்தன. மரநாய் ஒரு வகைக் கீரி, அதனுடைய தோலின் அளவு, மனிதனுடைய தோலின் அளவோ அல்லது சற்று சிறிதாகவோ இருக்கும். மேலும் நீரைத் தடுக்கும் வகையிலும் இருந்தது. இதனால் தான் மரநாய் தோல்கள், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய மேல் பகுதிக்கு மூடியாக உபயோகப் படுத்தப்பட்டன. இதன் காரணமாக, ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வெளிதோற்றம் கவரக்கூடிய வகையில் இல்லாமலும் பார்ப்பதற்கு அழகில்லாமலும் இருந்தது. இயேசு நமக்காக உலகத்திற்கு வந்த பொழுது அவர் இப்படிப்பட்ட ஏழ்மையான தோற்றத்திலும், அவருடைய தோற்றத்தில் எதையும் விரும்பத்தகாதவாரும் வந்தார் என்று இது நமக்கு சொல்லுகிறது.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, நமக்காக பலியானர் என்று சிகப்பு சாயம் பூசப்பட்ட செம்மறியாட்டு தோல் நமக்கு சொல்லுகிறது. அதே சமயம், நம்முடைய பலி காணிக்கையாக ஞானஸ்நானம் எடுத்து, இதன் மூலம் நம்முடைய பாவங்களை அவர் மீது ஏற்றுக்கொண்டும், சிலுவையின் மீது பலியாகியும் அவர் நம்மை மீட்டார் என்று

ஆட்டினுடைய ரோமம் சொல்லுகிறது.

வேறு வார்த்தைகளில் கூறினால், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய மூடியினுடைய பொருட்கள், நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையாக இருக்கின்றன. இந்த சத்தியங்கள் நிச்சயமாக தொலைந்து போக முடியாத, விசுவாசத்தின் கட்டுமானப் பொருட்களாக இருக்கின்றன. இரட்சிப்பின் பரிசை நமக்கு கொடுப்பதற்கு, இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு நம்முடைய பலி காணிக்கையாக வந்தார். பரிசுத்தமான பலி மிருகங்கள் (ஆடு, செம்மறியாடு மற்றும் காளைகள்) இஸ்ரவேலர்களின் பாவங்களை, கைகளை அவற்றின் தலைகள் மீது வைத்து அவற்றிற்குள் செலுத்துவதின் மூலம் ஏற்று கொண்டன, மேலும் அவர்களுடைய இடத்தில் இருந்து அவைகள் கொல்லப் பட்டன. இவை தங்களுடைய இரத்தத்தைச் சிந்தியும் எரிக்கப்பட்டும், அவர்களை அவர்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்டது. இந்த பலி முறையானது இஸ்ரவேலர்களின் பாவ மன்னிப்புக்காக கர்த்தரால், பழைய ஏற்பாட்டில் அமைக்கப்பட்டிருந்தது.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு பலி ஆடாக வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம், அதாவது கைகளை வைப்பதின் மூலம் நம்முடைய பாவங்களை தன்மீது ஏற்றுக்கொண்டார். தன்னுடைய இரத்தத்தை சிந்தியபடி பலி காணிக்கை கொல்லப்பட்டதைப் போலவும், கைகளை வைப்பதின் மூலம் இஸ்ரவேலர்களின் பாவங்களை ஏற்றுக்கொள்வதற்காக சர்வாங்க தகன பலிபீடத்தில் எரிக்கப்பட்ட பலி காணிக்கையைப் போலவும், ஞானஸ்நானத்தைப் பெற்று சிலுவையின் மீது மரித்து இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்கான எல்லாத் தண்டனைகளையும் ஏற்றுக் கொண்டார். மேலும் இதன் மூலம் உலகத்தினுடைய பாவங்களிலிருந்தும் நம்மை இரட்சித்தார்.

சர்வாங்க தகன பலிபீட கொம்புகளின் மேல்

தெளிக்கப்பட்ட பலி காணிக்கையினுடைய இரத்தத்தால் நியாயதீர்ப்பு புத்தகத்தில் இருந்த பெயர்கள் அகற்றப்பட்டன. இதனால் தான் இயேசு ஞானஸ்நானம் பெற்று, அவருடைய இரத்தத்தைச் சிந்தி, அதன் மூலமாகநம்முடைய நிரந்தர பிராயச் சித்தத்தை நிறைவேற்றினார். மேலும் இந்த உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அகற்றினார். இதைப் போல ஆசரிப்புக் கூடாரத்தினுடைய எல்லாப் பொருட்களும், இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய ஊழியத்தை பற்றியும் நம்மிடம் பேசுகின்றன. உலகத்தினுடைய பாவங்களிலிருந்து இதன் மூலம் நம்மை மீட்டுள்ளார் என்று இது நமக்கு சொல்லுகிறது. பழைய ஏற்பாட்டில் இருந்து புதிய ஏற்பாடு வரை, இயேசு நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்டுள்ளார் என்ற வார்த்தை முழுமையான உண்மை, இது எந்த தவறுகளிலிருந்தும் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு, நம்முடைய பலி காணிக்கையாக வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்துக் கொண்டார் என்பதை அநேகமாக இன்றைய கிறிஸ்தவர்கள் விசுவாசிப்பதில்லை. ஆனால் இதற்கு பதிலாக அவர்கள், சிலுவையின் மீதான அவருடைய மரணத்தை மட்டும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் விசுவாசிக்கிறார்கள். இந்த கிறிஸ்தவ விசுவாசமானது, இளநீல நிற நூலை விட்டுவிட்டு, சிகப்பு மற்றும் இரத்தாம்பர நிற நூல்களால் மட்டும் நெய்யப்பட்டுள்ள ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய சட்டமில்லாத நுழைவாயிலாய் இருக்கிறது. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் செய்யப்பட்ட மூடியின் எந்த அவசியத்தையும் பார்க்காத, தவறாக புரிந்து கொண்ட விசுவாசத்தை மட்டுமே அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

மேலும் இதற்கு பதிலாக, சிகப்பு சாயம் பூசப்பட்ட செம்மறி ஆட்டினுடைய தோல் மற்றும் மரநாயினுடைய தோலின் இரண்டு மூடிகள் மட்டும் தான் அவர்களுக்கு தேவைப்படுகிறது என்று விசுவாசிக்கிறார்கள்.

உலகம் முழுவதிலும் வரையப்பட்டுள்ள ஆசரிப்புக் கூடாரத்தினுடைய அநேக ஓவியங்களை நாம் பார்க்கும் பொழுது, இளநீல நிற நூலின் சிறு அடையாளத்தைக் கூட நாம் கண்டுப்பிடிக்காத வகையில் அவைகள வரையப்பட்டுள்ளன. இந்த படங்களை வரைந்த மக்கள் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை அறியாமலிருப்பதால், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தில் இருக்கும் வாசல்கள் எல்லாம் சிகப்பு மற்றும் வெள்ளை நிறங்களால் மூடப்பட்டுள்ளன. ஆனால் இப்படிப்பட்ட விசுவாசம் கர்த்தருக்கு முன்பாக எப்பொழுதுமே சரியான விசுவாசமாய் இருக்கமுடியாது.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாசலுக்கு அதிகமாக உபயோகப் படுத்தப்பட்ட நூல் இளநீல நிற நூல் தான். இதனை தொடர்ந்து இரத்தாம்பர நிற நூலும், பிறகு சிகப்பு நிற நூலும் அதன் பிறகு வெள்ளை நிற நூலும் பயன்படுத்தப்பட்டன. இதனால், பிரகாரத்தினுடைய வாசலைப் பார்க்கும்பொழுது, இந்த நான்கு நிறங்களும் ஒரே சமயத்தில் பார்வைக்கு வர வேண்டும். அதனால் இயேசுவினுடைய ஞானஸ்நானத்தைப் பற்றிய எந்த ஞானமும் இல்லாத விசுவாசத்தை உடைய அதிக மக்கள் இந்த உலகத்தில் இருப்பதால், ஆசரிப்புக் கூடாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட நான்கு நிற நூல்களை அவர்கள் ஒதுக்கிவிட்டார்கள். மேலும் இதற்கு பதிலாக ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வாசலை இரண்டு நூல்களால் மட்டுமே கட்டியுள்ளார்கள்.

இப்படிச் செய்வதின் மூலம், பல மக்களை இவர்கள் ஏமாற்றுகிறார்கள். இந்த மக்களிடம் கர்த்தரை பற்றிய குறைந்த அறிவே இருக்கிறது. மேலும் அவருடைய

வார்த்தையை பற்றி சற்றும் அறியாமல் இருக்கிறார்கள். இவை எல்லாம் தவறான தீர்க்கதரிசனங்கள். இந்த மக்களைப் பற்றி குறிப்பிடும் பொழுது, கோதுமைக்கு மத்தியில் சாத்தான் விதைத்த களைகள் என்று இயேசு விளக்குகிறார் (மத்தேயு 13:25). வேறு வார்த்தைகளில் கூறினால், ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாசலில் இருக்கும் அவர்களுடைய ஓவியங்களில் இளநீல நிற நூலை விட்டு, தவறான பொய்களைப் பரப்பும் மக்களாகியுள்ளார்கள். இதனால் தான், அநேக மக்கள் இயேசுவை விசுவாசித்தாலும், பாவமுடையவர்களாய் இருக்கிறார்கள். மேலும் இயேசுவின் மீது அவர்களுக்கு விசுவாசமிருந்தாலும் அவர்களுடைய பாவங்களின் காரணமாக, அழிவுக்குத் தள்ளப்படுகிறார்கள்.

நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் உறுதியாய் இருக்க வேண்டும். சட்டமில்லாத விசுவாசத்தின் அஸ்திபாரத்தில் கட்டப்படும் பொழுது, உங்கள் ஆத்துமா நீண்ட கால மத வாழ்வை வாழ்தற்கு இது எந்த நன்மையைத் தரும்? தவறான விசுவாசம் ஒரே அறிவிப்பில் உடைந்து போய் விடும். நம்முடைய வீடு எவ்வளவு அழகாக இருந்தாலும், இதனை வெடித்த விசுவாசத்தின் அஸ்திபாரத்தில் கட்டினால், இது என்ன நன்மையைத் தரும்? நீங்கள் கர்த்தரை எவ்வளவு சுறுசுறுப்பாக தொழுதிருந்தாலும், உங்கள் வீட்டை மணல் மீது தான் கட்டியுள்ளீர்கள். புயல் வரும் பொழுதும், காற்று எழும் பொழுதும், புயல் உருவாகும் பொழுதும், அது ஒரேயடியாக உடைந்து போய் விடும்.

ஆனால், உறுதியான விசுவாசத்தின் அஸ்திபாரத்தை உடையவர்கள் பற்றி என்ன? அதை எவ்வளவு அசைத்தாலும் கீழே விழுவதில்லை. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்திய பாறையின் மேல் கட்டப்பட்ட வீடு எப்பொழுதுமே கீழே விழாது என்று கர்த்தர் நமக்குச்

சொன்னார். இது தான் உண்மையான நிலை. பாறையின் விசுவாசம் என்றால் என்ன? இது தான் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்தியத்தை விசுவாசிக்கும் விசுவாசம். இப்படிப்பட்ட விசுவாசத்தில் வீட்டைக் கட்டியுள்ளவர்களின் விசுவாசம் எப்பொழுதுமே உடையாது. இதனால் தான், நம்முடைய விசுவாசம் திடமான மற்றும் உறுதியான அஸ்திபாரத்தில் இருக்க வேண்டியது அவசியம். கர்த்தர் நமக்காக என்ன செய்துள்ளார் என்பதை சரியாக நாம் விசுவாசிக்காவிட்டால், இப்படிப்பட்ட விசுவாசம், கர்த்தரால் வேண்டப்படாத தவறான மத விசுவாசமாக மாறிவிடும்.

சீத்தீம் மரம், எண்ணெய் மற்றும் வாசனைப் பொருட்கள்

ஆசரிப்புக் கூடாரத்தினுடைய தூண்கள், சர்வாங்க தகன பலிபீடம், பலகைகள் மற்றும் பரிசுத்த ஸ்தலத்தினுடைய பொருட்கள் எல்லாம் சீத்தீம் மரத்தால் செய்யப்பட்டிருந்தன. வேதாகமத்தில் இருக்கும் மரமானது மனிதர்களைக் குறிக்கிறது. (நியாயதிபதிகள் 9:8-15; மாற்கு 8:24) இங்கே மரமானது நம்முடைய மனித குணங்களுடன் இருக்கும் நம்மை குறிக்கிறது. இந்த சீத்தீம் மரத்தினுடைய மரக்கட்டைகள் தூண்களுக்கும், சர்வாங்க தகன பலிபீடத்திற்கு மேலும் ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சீத்தீம் மரத்தினுடைய வேர்கள் எப்பொழுதும் பூமிக்கு அடியில் புதைந்து இருப்பதைப் போல, எல்லா நேரமும் நாம் பாவம் செய்வதை நம்மால் தடுக்க முடியாத அளவிற்கு நம்முடைய அடிப்படைகள் இருக்கின்றன என்று இது நமக்கு சொல்லுகிறது. அநீதியாய் தொடர்ந்து இருப்பதையும் எப்பொழுதும் பாவம்

செய்வதையும் தடுக்க முடியாது என்று மக்கள் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இதே சமயத்தில், சீத்தீம் மரம் இயேசு கிறிஸ்துவினுடைய கருணையை குறிக்கிறது. மனித சரீரத்தில் வந்த மேசியா உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக் கொண்டு, மனித குலத்திற்காக பிரதிநிதியாக இருந்து நியாயந்தீர்க்கப் பட்டார். அவர் தான் கர்த்தர். இதனால் உடன்படிக்கைப் பெட்டி, அப்பத்தின் மேஜை, தூபவர்க்க பலி பீடம் மற்றும் பலகைகள் எல்லாம் சீத்தீம் மரக் கட்டையால் செய்யப்பட்டன. இதன் மேல் சுத்தமான தங்கம் வைக்கப்பட்டிருந்தது.

விளக்கிற்கு தேவையான எண்ணெய்யும் அபிஷேகம் செய்யும் எண்ணெய்க்கான மற்றும் நல்ல வாசனை பொருளுக்கு தேவையான வாசனை பொருட்கள், ஆகியவை இயேசு கிறிஸ்துவுக்குள் நமக்கிருக்கும் நம்முடைய விசுவாசத்தைக் குறிக்கின்றன. இயேசு என்ற பெயரிற்கான பொருள் தன்னுடைய மக்களை அவர்களின் பாவங்களிலிருந்து மீட்கும் ஒருவர் என்பதாகும். அபிஷேகிக்கும் ஒருவர் என்பது கிறிஸ்து என்ற பெயரின் பொருள். இது இயேசு கிறிஸ்து தான் கர்த்தர் என்றும் நம்மை மீட்ட பரலோகத்தின் தலைமை ஆசாரியன் இவர் தான் என்றும் நமக்கு சொல்லுகிறது. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, மனித சரீரத்தில் நம்முடைய தேவன் இந்த பூமிக்கு வந்து, நமக்காக சிலுவையின் மீது பலியாகி, இதன் மூலம் இரட்சிப்பின் பரிசை நமக்கு கொடுத்துள்ளார். தலைமை ஆசாரியனின் பாத்திரத்தை இயேசு எடுத்து, நமக்கு நம்முடைய இரட்சிப்பைக் கொடுத்துள்ளார், இதுவே உண்மையில் மிகவும் அழகான வேலையாகும்.

தலைமை ஆசாரியனுடைய மார்பு தட்டிலும் ஏபோதிலும் வைக்கப்பட உள்ள கோமேதகக் கற்களும் இரத்தினங்களும்

ஏபோது மற்றும் தலைமை ஆசாரியனுடைய மார்பு தட்டில் வைக்கப்பட உள்ள பன்னிரெண்டு வித்தியாசமான விலையுயர்ந்த கற்கள் இங்கு கூறப்பட்டுள்ளன. தலைமை ஆசாரியன் முதலில் உள் சட்டையை அணிந்தான், பின்பு இளநீல நிற அங்கியை அணிந்தான் பிறகு அங்கிற்கு மேலே ஏபோதை அணிந்தான், அதன் மீது மார்பு தட்டு வைக்கப்பட்டது. இது பலி சடங்கின் பொழுது அணியப்பட்டது. மேலும் இந்த மார்பு தட்டின் மீது பன்னிரெண்டு விலையுயர்ந்த கற்கள் வைக்கப்பட்டன. இஸ்ரவேல் மக்களையும் மற்ற எல்லா மக்களையும் அவனுடைய மார்பிற்குள் அனைத்து கொண்டு கர்த்தருக்கு முன்பாக போய், அவருக்கு அவர்களுடைய பலி காணிக்கைகளைக் கொடுப்பது தான் தலைமை ஆசாரியனின் பங்காய் இருந்தது என்று இது நமக்கு காண்பிக்கிறது.

பரலோகத்தின் தலைமை ஆசாரியராகிய இயேசுவும், அவருடைய மார்புக்குள் உலகத்தினுடைய எல்லா தேசங்களையும் அனைத்து கொண்டு, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்து கொள்வதற்கு அவருடைய சொந்த சரீரத்தை கொடுத்தார். மேலும் நம்முடைய சார்பாக பலியாவதற்கு இதன் மூலம் பிதாவாகிய கர்த்தருக்கு அவருடைய மக்களை அர்ப்பணித்தார். மார்பு தட்டின் மீது வைக்கப்பட்டிருந்த பன்னிரெண்டு கற்களும், இந்த உலகத்தினுடைய எல்லா தேசங்களையும் குறிக்கிறது, மேலும் அவற்றை அணிந்த தலைமை ஆசாரியன், இதைப் போல உலகத்தினுடைய எல்லா தேசங்களையும் அவருடைய மார்புக்குள் அணைத்து கொண்டு மீட்டுள்ள இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது.

நம்முடைய கர்த்தர் தனக்காக ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டுவதற்கு இஸ்ரவேலர்களை கொண்டு வரச் சொன்ன காணிக்கைகள் இவையே, கர்த்தர் அவர்களை ஆசரிப்புக் கூடாரத்தையும் அவருடைய தங்கும் இடத்தையும் இந்த காணிக்கையின் மூலமாக கட்ட சொன்ன உண்மைக்கு ஒரு ஆவிக்குரிய பொருள் இருக்கிறது. கர்த்தர் அவருக்கு கொடுத்த சட்டத்தை கைக்கொள்ள முடியாததால், இஸ்ரவேல் மக்கள் எப்பொழுதுமே பாவத்துடன் இருந்தார்கள். இதனால் தான் மோசேயின் மூலமாக கர்த்தர் அவர்களிடம் ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டச் சொன்னார். மேலும் பலி காணிக்கையால் பாவ மன்னிப்பு வழங்கப்பட்டது. வேறு வார்த்தைகளில் கூறினால், அவர்களுடைய காணிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவருடைய வீட்டை கட்டுவதற்கு இந்த எல்லா காணிக்கைகளையும் பயன்படுத்தி, பலி முறையின் தேவைகளுக்கு ஏற்ப, அவர்களை பலி காணிக்கையைக் கொடுக்கச் செய்தும், கர்த்தர் இஸ்ரவேலர்களின் எல்லா பாவங்களையும் அகற்றினார். இப்படித்தான், ஆசரிப்புக் கூடாரத்தில், இஸ்ரவேல் மக்களுடன் கர்த்தரால் தங்க முடிந்தது.

இருந்தபோதிலும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றை விசுவாசிக்காத அநேக கிறிஸ்தவர்கள் இந்த பூமியில் இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலத்தைக் கொண்டு வர சொன்னபோது, இந்த காணிக்கைகளால் கூறப்பட்டுள்ள சத்தியத்தை அவர்கள் ஏன் விசுவாசிப்பதில்லை?

நம்முடைய பாவங்களுக்காக, நாமெல்லோரும் நரகத்திற்கு தள்ளப்பட வேண்டியவர்களாய் இருக்கவில்லையா? நீங்கள் நரகத்திற்கு தள்ளப்படுவீர்கள் என்பதை ஏற்றுக் கொண்ட காரணத்தால் இந்த உலகத்திலுள்ள பல மதங்களுள் ஒன்றாக கிறிஸ்தவத்தை

விசுவாசித்தீர்கள் அல்லவா? இதுவரை இப்படி நீங்கள் விசுவாசித்திருந்தால் நீங்கள் மனந்திரும்பி இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் விசுவாசத்திற்கு திரும்பவேண்டும். நீங்கள் பாவத்தின் மாமிசம் என்றும் உங்களுடைய பாவங்களுக்காக நீங்கள் நரகத்திற்கு தள்ளப்பட உள்ளீர்கள் என்றும் கர்த்தருடைய கட்டளைகளுக்கு முன்பாக உணர்ந்து நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை நீங்கள் விசுவாசிக்க வேண்டும்.

நீங்கள் நரகத்திற்கு தள்ளப்படவிருந்தாலும், நம்முடைய தேவன் மேசியாவாக இந்த உலகத்திற்கு வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் உங்களுடைய பாவங்களை தன் மீது ஏற்றுக்கொண்டு, இந்த பாவங்களை சிலுவைக்கு சுமந்து, அதன் மீது இரத்தத்தைச் சிந்தியதின் மூலம், அவர் பலியாகி இதன் மூலம் என்னையும் உங்களையும் நம்முடைய பாவங்களிலிருந்தும் தண்டனைகளிலிருந்தும் இரட்சித்துள்ளார் என்ற நற்செய்தியின் சத்தியத்தை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிக்காமல் நாம் நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தை எப்பொழுதும் அமைக்க முடியாது.

நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தைப் பற்றி நினைக்க வேண்டும்

இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களுடைய விசுவாசத்தை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கர்த்தர் நமக்குச் சொல்லுகிறார். இந்த இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களுடைய விசுவாசம் உண்மையில் நம்மிடம்

இருக்கிறதா என்றும். அல்லது இளநீல நிற நூலை விட்டு விட்டு, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலிகளில் மட்டும் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மையை விசுவாசிக்கிறோமா என்று நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

நம்முடைய சொந்த விருப்பங்களுக்கு மட்டும் பொருந்தும் தவறான விசுவாசத்தைக் கர்த்தரிடம் நாம் எடுத்துச் சொல்லுகிறோமா இல்லையா என்று நமக்கு நாமே பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும். இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களை அவரிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று கர்த்தர் நமக்கு சொல்லும் பொழுது, ஏதாவது ஒரு வகையில் நாம் அவருக்கு கறுப்பு நிறமுடைய நைலான் நூலை கொடுப்பதில்லையா? "கர்த்தவே நீர் கேட்ட நூல் ஆசரிப்புக் கூடாரத்திற்கு உபயோகமில்லாதது போல் தோன்றுகிறது. இது மழையினால் அழுகிப் போய் விடும், மேலும் இதை தேடுவதற்கும், எடுத்து வருவதற்கும் சோர்வாக இருக்கிறது. இதற்கு பதிலாக இந்த நைலான் நூலை பயன்படுத்தி பாரும். நீர் இதை நன்கு பராமரித்தால் 50 வருடங்களுக்கோ, 100 வருடங்களுக்கோ கூட நீடிக்கும் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்க முடியும். மேலும் இதை நீங்கள் மண்ணில் புதைத்து வைத்தாலும் 200 வருடங்களுக்கு மேல் ஆனாலும் கூட மக்கிவிடாது. இது அருமையானதாக இல்லையா?"

இதைத் தான் நாம் கர்த்தரிடத்தில் ஏதாவது ஒரு வகையில் சொல்லுகிறோம் இல்லையா? நம்மை நாமே நன்றாக பார்த்து, இந்த வகையான மோசமான மற்றும் மூட பழக்க வழக்கமான விசுவாசத்தை கர்த்தரிடத்திற்கு கொண்டு செல்வதில்லை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் இந்த வகையான விசுவாசம் நம்மிடம் இருந்தால் நாம் இப்பொழுதே மன்னிப்பு கேட்கவேண்டும். வேறு வார்த்தைகளில் கூறினால், நாம் திரும்பவேண்டும்.

நாம் உண்மையிலேயே நல்ல கிறிஸ்தவர்கள், என்று தமக்குத் தாமே நினைத்து கொள்பவர்கள் நம்முள் அநேகர் உண்டு. ஆனால் ஒரு பார்வையில், அவர்களுடைய ஞானமும், விசுவாசமும் தவறாக உள்ளதைக் காணலாம்.

இன்றைய கிறிஸ்தவத்தை ஊடுருவியுள்ள விசுவாசம்

கிறிஸ்தவர்கள் அநேகமாக விசுவாசிப்பது மெய்ஞானத்தைத் தான். கர்த்தருடைய வார்த்தை உண்மையில் என்ன சொல்லுகிறது என்பதை பற்றி இந்த மக்களுக்கு எந்த எண்ணமும் கிடையாது. ஏனென்றால் மேசியா அவர்களுக்கு கொடுத்துள்ள சத்தியத்தின் வார்த்தை அவர்களுக்கு தெரியாது. அவர்களுடைய சொந்த எண்ணத்திற்கும் உணர்ச்சிகளுக்கும் ஏற்ப தேவனை விசுவாசித்து அவரைப் பின்பற்றுகிறார்கள். மேலும் இது போன்ற உணர்ச்சிகள் உண்மையானவைகள் என்று அவர்கள் நம்பியுள்ளார்கள். தமக்குத் தாமே கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணுவதாலும் அவர்களுடைய ஜெபத்தின்போது அவர்கள் உணரும் சொந்த உணர்ச்சியையும் எண்ணத்தையும் விசுவாசத்துடன் பின்பற்றுவதாலும் கர்த்தரிடத்தில் இருக்கும் உண்மையான விசுவாசம் என்ன என்பதை அவர்களால் சரியாக பிரித்துணர முடியாது.

இதைப் போல, தங்களுடைய சொந்த யோசனைககளில் அதிகமாக அசைபோடும் தங்களுடைய சொந்த எண்ணங்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் ஏற்ப கர்த்தரை விசுவாசிப்பதே விசுவாசத்தின் விசுவாசம் என்றும் உபவாசம் இருக்கும் பொழுதும், ஸ்தோத்திரம் செலுத்தும் பொழுதும், விசுவாசிக்கும் பொழுதும், காலை வேளையில் ஜெபங்கள் ஏறெடுக்கும் பொழுதும், ஜெபம் பண்ணுவதற்காக மலையின் மேல் ஏறும் பொழுதும், பாவம்

செய்யும் பொழுது மனந்திரும்புதலின் ஜெபம் பண்ணும் பொழுதும், மற்றும் இதை போன்ற காரியங்கள் செய்யும் பொழுதும் அவர்களுக்கு கிடைக்கும் எண்ணங்களினால் கர்த்தரை விசுவாசித்து வாழும் மக்கள் எல்லோரும் குழப்பவாதிகளேயாவர். வேறு வார்த்தைகளில் கூறினால், ஒருவருடைய சொந்த எண்ணங்களைப் பற்றி கொண்டு வாழும் விசுவாசத்தின் வாழ்க்கையானது மேசியா கூறிய இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் விசுவாசம் கிடையாது.

இன்றைய கிறிஸ்தவர்களில் அநேகமாக 99.9% சதவிகிதத்தினர் வரலாற்று பூர்வமாக குழப்பவாதிகளாக இருந்திருக்கலாம்.. வேறு வார்த்தைகளில் சொன்னால் ஆதி கால ஆலயங்களை தவிர, முழு கிறிஸ்தவமும் இத்தகைய விசுவாசத்தைப் பின் தொடர்ந்து வந்தது என்றால் அது மிகையல்ல. இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களில் விசுவாசம் இல்லாதவர்கள், தங்களுடைய சொந்த எண்ணங்கள் விசுவாசமாயிருக்கிறது என்ற எண்ணத்திற்கு ஏமாறுகிறார்கள். அவர்கள் தங்களுடைய ஜெபங்களில் கர்த்தரை பார்த்து சந்தித்தாக கூறுகிறார்கள். அவர்கள் ஸ்தோத்தரிக்கும் பொழுதெல்லாம் சிறப்பாக உணருவதாக நம்மிடம் சொல்லுகிறார்கள்.

"நாம் இந்த ஸ்தோத்தரிக்கும் கூட்டத்தில் ஒன்று கூடினோம். எங்கள் கைகளை உயர்த்தி எங்களுடைய பாவங்களை ஒன்றாக அறிக்கையிட்டோம். நாங்கள் சிலுவையைப் பற்றி அதன் காலடியில் சில சடங்குகளை செய்தோம், பின்பு எங்களுடைய இருதயங்களெல்லாம் அக்கினியால் நிரப்பப்பட்டது. மேலும் கிறிஸ்து சிறப்பாக நேசிக்கும்படியானார். கிறிஸ்து சிந்திய இரத்தத்திற்காக எங்களுடைய இருதயங்களில் மிகவும் நன்றியுள்ளவர்களானோம். இதனால் தான் அவர் இரத்தம் சிந்தினார் என்பதை இன்னமும் அதிகமாக உணர்ந்து

தேவன் நம்முடைய எல்லாப் பாவங்களையும் கழுவி விட்டார் என்பதை நாங்கள் இன்னமும் அதிக ஆர்வமாக விசுவாசித்தோம். இந்த முழு அனுபவத்தையும் நாங்கள் நேசித்தோம்" என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு நாள் அவர்களுடைய உணர்ச்சிகள் குறையும் பொழுது. "எல்லா எண்ணங்களும் வற்றி போய் விட்டது என்றும், எங்களுடைய இருதயங்களில் நாங்கள் பாவம் உள்ளவர்களாக உள்ளோம் என்றும்" அவர்கள் கூறுகிறார்கள். இந்த வகையான விசுவாசம் குழப்பத்தின் விசுவாசத்தைத் தவிர வேறில்லை.

ஒருவருடைய பிரிவு மற்றும் வேறுபாட்டின் வித்தியாசங்களை கருதாது இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களுடைய விசுவாசத்தை கர்த்தருக்கு தருவதில்லை. ஆனால் நைலான் நூலின் விசுவாசத்தை தருகிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் தம்முடைய மாயமான விசுவாசத்தைக் கொண்டுவருகிறார்கள் வேறு வார்த்தைகளில் கூறினால் இது வெகு தூரத்திற்கு முன்பு விழுந்து விட்ட ஒன்றாகவும், கர்த்தர் பார்க்க விரும்பாத ஒன்றுமாக இருக்கிறது.

துறைமுக கம்பங்களில் படகுகளை கட்ட பயன்படுத்தப்படும் தடியான கயிறுகளை நீங்கள் எப்பொழுதாவது பார்த்ததுண்டா? மாயக்காரர்கள் கர்த்தருக்கு இந்த வகையான பொருளைத் தாத் கொடுப்பார்கள். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றை கொண்டு வரும்படி நம்முடைய தேவன் நமக்கு சொன்ன பொழுது. "தேவனே இந்த விசுவாசத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கர்த்தரிடத்தில் சொல்லி சில மக்கள் இந்த தடி கயிறை அவரிடத்தில் கொண்டு போகிறார்கள். கப்பல் நிற்கும் இடத்திற்கும் பெரிய கப்பல்கள் ஒவ்வொன்றிற்கும் இடையில் கட்டுவதற்கு பயன்படுத்தப்படும் இரும்பு சங்கிலிகளையும் கூட, சில

மக்கள் அவரிடம் கொண்டு செல்கிறார்கள். இந்த தடியான இரும்பு சங்கிலிகளை சுற்றிய பிறகு இதனை ஏற்றுக் கொள்ளுமாறு அவரிடம் கேட்டு, கர்த்தருடைய பாதத்தில் இதை வைக்கிறார்கள்.

ஆனால் இந்த இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களுடைய விசுவாசத்தை கொண்டு வர வேண்டும் என்று கர்த்தர் நம்மிடம் கூறி இருக்கிறார். இரும்பு சங்கலிகளை கொண்டு வர வேண்டும் என்று நமக்கு சொல்லவில்லை. தங்களுடைய கண்களில் எது சிறப்பாக இருக்கிறதோ அல்லது கண்டுபிடிப்பதற்கு எது அவர்களுக்கு எளிதாக இருக்கிறதோ அவற்றை அவரிடம் பலர் கொண்டு செல்கிறார்கள். இரும்பு சங்கிலிகள், கயிறுகள், நைலான் நூல்கள் அல்லது அம்புவேர் கொடியுனும் கூட கர்த்தரிடத்திற்கு போகும் மக்கள் இருந்தாலும், கர்த்தர் உண்மையில் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற காணிக்கைகளை மட்டுமே பெற்றுக் கொள்கிறார். இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களுடைய விசுவாசத்தை மட்டுமே அவர் ஏற்றுக் கொள்வார் என்று கர்த்தர் நியமித்துள்ளார். இதைப் போல இந்த இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களுடைய விசுவாசத்தைக் கர்த்தருக்கு முன்பு நாம் எடுத்துச் செல்ல வேண்டும்.

மேசியா எந்த காணிக்கையும் பெற்றுக் கொள்வதில்லை

ஏபோது மற்றும் மார்பு தட்டில் பொருத்தப்படுவதற்கு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் ஆகியவைகளை இஸ்ரவேலர்கள் கர்த்தரிடத்திற்கு எடுத்து செல்ல வேண்டியிருந்தது. ஆனாலும் சிலர் பித்தளைகளையும்,

இரும்பையும் கர்த்தரிடத்திற்கு எடுத்து வருகிறார்கள். எல்லா வகையான பொருட்களையும் ஏற்றுக் கொள்ள கூடிய மறுபடியும் சுழற்சி முறையில் உருவாக்கும் கிடங்கை அவர் வைத்திருக்கிறாரா? நிச்சயமாக இல்லை!

எந்த வகையான குப்பையையும் ஏற்றுக்கொள்ள கூடிய ஒருவராக இயேசு இல்லை. அவரிடத்திற்கு நீங்கள் எடுத்து செல்லும் எந்த உபயோகமற்ற பொருளையும் எடுத்துக் கொண்டு, மறுபடியும் உருவாக்கும் கிடங்கை நடத்தவில்லை. நம்முடைய பாவங்களை மன்னிக்கும் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களுடைய அவருடைய இரக்கத்தை நம்மீது அருள வேண்டிய மேசியாவாக இயேசு இருக்கிறார். மேலும் அவருடைய உண்மையான அன்பை நமக்கு தர வேண்டுபவராகவும் இருக்கிறார். இதனால் தான் இயேசு அன்பின் ராஜா என்று அழைக்கப்படுகிறார். நம்முடைய மேய்ப்பர் உண்மையில் அன்பின் ராஜாவாக இருக்கிறார். இயேசு தான் உண்மையில் நம்முடைய உண்மையான மேசியா. முற்றிலுமாக தேவைப்படும் சில சிறப்புகளை விளக்கி, நம்மிடமிருந்து தேவைப்படும் விசுவாசத்தை இந்த மேசியா அமைத்துள்ளார். இந்த விசுவாசத்துடன் கர்த்தருக்கு முன்பாக நாம் போகும் பொழுதுதான் நமக்கு அவர் வாக்களித்துள்ளதைக் கொடுப்பார்.

மேசியாவின் மீது விசுவாசம் கொண்டவர்களுக்கு மத்தியில், அவரைப் பற்றி தவறாக புரிந்துக் கொண்ட ஞானத்தின் அடிப்படையில், விளக்க முடியாத அளவிற்கு பிடிவாதம் உள்ளவர்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை நாம் இன்னமும் பார்க்கிறோம். கர்த்தருக்கு முன்பாக தன்னுடைய வீண் பிடிவாதத்தின் வழியை அமுல்படுத்திய பர்வோனைப் போல அதிகமாக மோசக்காரர்களாகவும் கெட்டவர்களாகவும் இருக்கிறார்கள். "யேகோவா தன்னை வெளிப்படுத்தியுள்ளார்; அவருடைய மக்களை போக விடு" என மோசே அவனிடம் சொன்ன பொழுது "யார் அந்த

யேகோவா?" என்று பர்வோன் பதிலளித்தான்.

கர்த்தருடைய பிரசன்னம் அவனுக்கு விளக்கப்பட்ட பொழுது அவனுடைய கீழ்ப்படியாதமையின் விலையையும் நன்மையையும் கணக்கிட்ட பிறகு, அவன் நிச்சயமாக அவரிடத்தில் சரணடையவும் வளைந்து கொடுக்கும்படியும் இருந்திருப்பான். அவன் இன்னமும் முற்றிலுமாக விசுவாசிக்க முடியாமலும், அவனுடைய பிடிவாதத்தை வலியுறுத்த வேண்டியிருந்தாலும் அவன் சற்று நேரம் அதைப் பற்றிக்கொள்ள முயற்சி செய்திருக்கலாம். ஆனால் இரண்டு கொள்ளை நோய்களுக்கு பிறகு அவன் விட்டுக் கொடுத்திருக்க வேண்டும். பர்வோன் தன்னுடைய முழு தேசமும் தவளைகளால் மூடப்பட்டு கொள்ளை நோய்வாய் பட்டிருந்தாலும் பிடிவாதத்தை இன்னமும் பற்றி கொண்டான், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருந்தது, அவனுடைய முட்டாள் தனத்தையும் பரிதாபத்தையுமே குறிக்கிறது.

தவளைகள் மட்டும் அல்ல, ஆனால் பேனும் பர்வோனுடைய அரண்மனையை தொற்றியது. ஒருவர் வலது புறமும் இடது புறமும் திரும்பினால் முழு எகிப்து தேசத்தில் எங்கும் பார்த்தாலும் பேன் நிரப்பப்பட்டு இருந்தாலும், பர்வோன் இன்னமும் சரணடைய வில்லை. எல்லா இடமும் பேன் நிரப்பப்பட்டு இருக்கும் பொழுது எப்படி ஒருவர் இருக்க முடியும்? இந்த சூழ்நிலையில், "கர்த்தருக்கு நான் கீழ்ப்படியாததால் உண்மையான ராஜா யார் என்று அவர் எனக்கு காட்டுகிறார். நான் இந்த உலகத்தில் இருக்கும் என்னுடைய சாம்ராஜ்ஜியத்தின் ராஜாவாக இருக்கலாம் ஆனால் அவருடனும் ஒப்பிடும் பொழுது நான் ஒன்றுமில்லை. இந்த உலகத்தின் பரப்பின் மேல் இருக்கும் சிறந்த தேசத்தினுடைய ராஜாவாக நான் இருந்தாலும், இந்த உலகம் முழுவதும் எனக்கு அதிகாரம் இருந்தாலும், கர்த்தர் என்னை விட இன்னமும் சக்தி வாய்ந்தவர். மேலும் என்னுடைய கீழ்ப்படியாமையினால்

அவர் எனக்கு இந்த கொள்ளை நோய்களை கொண்டு வருகிறார்" என்று அவன் உணர்ந்து சரண் அடைந்திருக்க வேண்டும்.

அவனுடைய எதிர்ப்பின் விலை என்னவாக இருக்கும் என்று அவன் பார்த்த பிறகு, விரைவாக சரணடைவதே பர்வோனிற்கு ஞானமுள்ள விஷயமாக இருந்திருக்க வேண்டும். பர்வோன் தான் எவ்வளவு சக்தியுள்ளவன் என்பதைக் கருதாமல், கர்த்தருக்கு எதிராக நிற்பதற்கு எந்த வழியும் இல்லை என்ற முடிவை அவன் அடைந்திருந்தால், "சரி, கர்த்தாவே நீர் முதல் இடத்தை எடுத்துக்கொள்ளும்; நான் இரண்டாவது இடத்தை எடுத்துக் கொள்கிறேன்" என்று கூறி அவரிடம் சரணடவதே அவன் செய்யக் கூடியதாய் இருந்திருக்க வேண்டும். ஆனால் இப்படி கீழ்ப்படிவதற்கு பர்வோன் மறுத்ததால் அவனுடைய முழு தேசமும் மக்களும் பேனால் கொடிய நோய் பட்டனர்.

இதனால், எந்த எகிபதியனாலும் எதுவுமே செய்ய முடிய வில்லை. எல்லோரும், போனால் தொடர்ந்து வேதனை படுத்தப்படும் பொழுது, பேனிலிருந்து வெளியே வருவதை தவிர ஒருவரால் வேறு என்ன செய்ய முடியும்? தம் சொந்த வீடுகளை எரிக்கவும், கிராமங்களை நிரப்பியுள்ள பேன்களின் துர்நாற்றத்தை எரிக்கவும் தீப்பந்தத்துடன் சுற்றி ஒடும் இந்த பரிதாபமான எகிப்தியர்களைப் பற்றி நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியும்.

மனிதன் செய்யக்கூடிய காரியங்கள் உண்டு, மனிதனால் செய்யக் கூடாத காரியங்களும் உண்டு. கர்த்தர் மகத்துவமுள்ள தேவனாய் இருக்கிறபடியால், வாழ்வையும், மரணத்தையும், சந்தோஷத்தையும், துக்கத்தையும், ஆசீர்வாதங்களையும், சாபங்களையும் கர்த்தர் தான் நிர்வகிக்கிறார். இது தான் சூழ்நிலையாக இருக்கும் பொழுது, நம்மில் நாம் நம்பிக்கையை வைத்து கர்த்தருக்கு எதிராக நிற்பதை விட, நாமெல்லாரும் பகுத்தறிவுடன் யோசித்து நம்முடைய பிடிவாதத்தை ஒழிப்பதற்கான

நியாயமான முடிவை அடைய வேண்டும். நமக்கு மத்தியிலேயே ஒருவருடைய சொந்த வழியை அமுல்படுத்தி, மற்றவர்களை பணிய செய்ய முயற்சி செய்யலாம், ஆனால் மேசியாவுடன் செயாலாற்றும் பொழுது இதற்கு சாத்தியமில்லை.

கர்த்தருக்கு முன்பாக எந்த வகையான நபராக நாம் இருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டும். கர்த்தருக்கு எதிராக நாம் பற்றிக் கொள்ள வேண்டுமா, அல்லது நம்முடைய இருதயங்கள் நேர்மையாகவும் தாழ்மையாகவும் இருக்க வேண்டுமா, என்பதைப் பற்றி நாம் மனப்பூர்வமாக கருத வேண்டும். மேலும், கர்த்தருக்கு முன்பாக நாலெல்லாரும் தாழ்மையோடு இருக்க வேண்டும் என்ற கண்டிப்பான முடிவை நாம் அடைய வேண்டும். மனிதனுக்கு முன்பு, நாம் நம்முடைய பிடிவாதத்தைப் பற்றிக் கொள்ளலாம், மேலும் சிலவேளைகளில் அதனுடைய விளைவுகளையும் சந்திக்கலாம். ஆனால் கர்த்தருக்கு முன்பாக, நம்முடைய இருதயங்கள் முற்றிலுமாக தாழ்மையாக இருக்க வேண்டும்.

"கர்த்தாவே, நான் தவறு செய்து விட்டேன்"அஎன்று ஒப்புக் கொள்பவர்கள் தான், சரியான வழியை தேர்ந்தெடுப்பவர்களாக உள்ளனர். தங்களுடைய சபிக்கப்பட்ட வாழ்க்கையிலிருந்து மீட்கப்படக் கூடிய மக்கள் இவர்களேயாவர். தங்களுடைய பாவங்களினால், கர்த்தரை விட்டவர்களுக்கு, கர்த்தருடைய கரங்களில் அணைக்கப்படுவதற்கும், அவருடைய வாழ்வு கொடுக்கும் நீரில் வாழ்வதற்குமான வழி, நீர் மற்றும் ஆவியில் மறுபடியும் பிறப்பது தான். இப்படிப்பட்ட வாழ்க்கை, இந்த உலகத்தின் வானந்தரத்தில் கனியில்லாமல், பூமியின் காலியான மற்றும் வறண்ட நிலத்தில் மிதந்து கொண்டு, ஒரு கைப்பிடி தூசுக்கு திரும்பும்படி இருக்கும் பொழுது, நம்முடைய வாழ்க்கையில் இருந்து நாம் எதை எதிர்ப்பார்க்க முடியும்?

தூரசுக்கு திரும்பும்படியும் அக்கினி கடலுக்குள் தள்ளப்படும்படியும் இருக்கும் நமக்கு மீட்க்கப்படுவதற்கான ஒரே வழி, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பது தான். மேலும் இதன் மூலம் நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பை பெற்றுக்கொள்ளலாம். இது கர்த்தருக்கு எதிராக நின்றதற்கும், நிரந்தர அழிவிற்கு அனுப்ப வருபவர்களின் பயமில்லாத மற்றும் நம்பிக்கையில்லாத வாழ்க்கைக்கும், கர்த்தருடைய அன்பின் இரக்கத்தினுடைய இரட்சிப்பின் அன்பின் மூலம் அவருக்கு முன்பாக, அவர்களுடைய பாவங்களுக்காக அற்புதமாக மறுபடியும் புதுப்பிப்பதற்கும் நாமெல்லாரும் இந்த இரட்சிப்பினால் மூடப் படவேண்டும்.

ஒருவன் முற்றிலுமாக இறக்கக்கூடியவனாய் இருந்து, கர்த்தரிடத்தில் எப்படி சவால் விட முடியும்? இதைப் போன்ற காணிக்கைகளை கொண்டு வர வேண்டும் என்று கர்த்தர் நமக்குச் சொல்லும் பொழுது நாம் எல்லோரும் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும். கர்த்தருக்கு நாம் எந்த காணிக்கையை கொண்டு செல்ல வேண்டும் என்று அவர் நமக்கு சொல்லும் மேலே உள்ள முக்கியமான வசனத்தைப் பார்த்து "இந்த வகையான விசுவாசத்தை தான் தம்மிடத்திற்கு நாம் கொண்டு வர வேண்டும் என்று அவர் கூறுகிறாரா" என்ற உணர்விற்கு நாமெல்லோரும் வர வேண்டும்.

தலைமை ஆசாரியனுடைய மார்பு தட்டிற்கு மேல், பன்னிரெண்டு விலையுயர்ந்த கற்களும் பொருத்தப் பட்டிருந்தன. மேலும் நியாயத்தீர்ப்பின் மார்பு தட்டிற்கு கீழே, ஒளிகள் மற்றும் மேன்மைகள் என்று பொருள் கொள்ளும் ஊரிம்மும் தும்மிம்மும் வைக்கப் படவேண்டியிருந்தது, இதனால் இஸ்ரவேல் மக்கள் மீது, தலைமை ஆசாரியனால் உண்மையான நியாயத்தீர்ப்பை பெற முடிந்தது.

கர்த்தருடைய ஊழியர்களால் மட்டுமே அவர்களிடம் தங்கியிருக்கும் பரிசுத்த ஆவியின் ஒளியையும்,

கர்த்தருடைய வார்த்தையை சிந்துவதின் மூலம் அவர்களுடைய ஆவிக்குரிய பிள்ளைகள் மீது நீதியான நியாயத்தீர்ப்பையும் அளிக்கமுடியும் என்ற உண்மையைத் தவிர வேறு எதையும் இது குறிப்பதில்லை.

இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் சத்தியம் தான் உண்மையான சத்தியம் என்றும் உண்மையான இரட்சிப்பு என்றும் கர்த்தருக்கு முன்பாக, நாமெல்லோரும் இப்பொழுது உணர வேண்டும். இந்த இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் சத்தியம் தான் நம்மை வாழ்க்கைக்கு கொண்டு வரும் உண்மையான இரட்சிப்பாகும். மேலும் இதை தவிர நம்முடைய இரட்சிப்பை எதுவும் தருதில்லை. இது தெளிவாகவும் உண்மையாகவும் கர்த்தருடைய வார்த்தையின் அடிப்படையில் அமைந்துள்ளது.

ஆசரிப்புக் கூடாரத்தின் எல்லாப் பொருட்களும், பாவத்திலிருந்து மனிதன் இரட்சிக்கப்படுவதற்கானது

இன்னமும் முட்டாள் தனத்தினால் பிடிவாதமாக, மக்கள் விசுவாசிக்க மறுக்கிறார்கள், அவர்களுக்கு என்ன ஆகும்? அவர்கள் எப்பொழுதும் இரட்சிக்கப் படமாட்டார்கள், நாம் நம்முடைய முட்டாள் தனத்தை தூக்கி எறிய வேண்டும். மேலும் நாம் நம்முடைய சொந்த எண்ணங்களையும் பிடிவாதத்தையும் தூக்கி எறிய வேண்டும். மேலும் இதற்கு பதிலாக அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு நம்முடைய இருதயங்களை தர வேண்டும். நம்முடைய சொந்த கீழ்ப்படியாத வழியை வற்புறுத்தி கொண்டு கர்த்தருக்கு எதிராக நிற்க கூடாது. இப்படி நாம் அடுத்த மக்களுக்கு முன்பாக செய்யலாம், ஆனால் கிறிஸ்தவர்களாக இருப்பதால், கர்த்தருக்கு முன்பாக

இருக்கலாகாது. ஆனால் முட்டாள் மனிதர்கள் கர்த்தருக்கு எதிராக நின்று, மற்ற மனிதர்களுக்கு முன்பாக தாழ்மையாக இருக்கிறார்கள். இது தான் அவர்களிடத்தில் இருக்கும் தவறு. கர்த்தருக்கு முன்பாக நாம் முகம் மண்ணில் படும்படி எறிய வேண்டும், மேலும் கர்த்தர் நம்முடன் பேசியது எல்லாம் சரி என ஒப்புக்கொள்ள வேண்டும்.

மேலும், இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் வார்த்தையை நம்பி விசுவாசிக்க வேண்டும். விசுவாசம் என்பது கர்த்தருடைய வார்த்தையை நம்புவதாகும். கர்த்தருடைய பாதங்களில் நாம் விழுந்து, அவருக்கு முன்பாக நம்முடைய எல்லா உபத்திரவங்களையும் அறிக்கையிடும் பொழுது, கர்த்தர் நிச்சயமாக நமக்கு பதிலளிப்பார். அவர் நமக்காக செய்துள்ளதை நாம் நன்றியுடன் பிறகு ஏற்றுக்கொள்ள வேண்டும். இது தான் விசுவாசம். இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களைத் தவிர, எந்த அர்த்தமில்லாத மற்றும் பைத்தியக்கார தனத்தில் கர்த்தருக்கு நம் விசுவாசத்தைக் காண்பிக்க முடியும்? நாம் அவருக்கு மீன் பிடிக்கும் கயிரையோ அல்லது உலோக சங்கிலியையோ தான் கொண்டு செல்கிறோமா? கர்த்தருக்கு முன்பு சில உபயோகமற்ற நூல்களைக் கொண்டு வந்து, "இது தான் என்னுடைய சொந்த விசுவாசம், இப்படித் தான் இவ்வளவு உறுதியாக நான் விசுவாசித்தேன். இது தான் குறிப்பாக நான் வைத்த உறுதியான விசுவாசம்" - என்று அவரிடம் சொல்லுவது விசுவாசம் இல்லை, ஆனால் கர்த்தருக்கு முன்பாக ஒருவன் தன்னை முட்டாளாக்கி கொள்வதாய் இருக்கிறது.

மேசியாவிற்கு முன்பாக ஒருவன் அவனுடைய/அவளுடைய பிடிவாதத்தை விட்டுக் கொடுக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறினால், ஒருவன் அவனுடைய, அவளுடைய விருப்பத்தைக் கர்த்தருக்கு

முன்பாக வளைந்து கொடுக்க வேண்டும். கர்த்தருக்கு முன்பாக நாம் எல்லோரும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். கர்த்தர் நமக்கு என்ன சொல்லுகிறார் மற்றும் அவர் நமக்காக என்ன முடிவெடுக்கிறார் என்பதற்கு ஏற்ப நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இதைத் தவிர கிறிஸ்தவர்களின் சரியான விசுவாசம் ஏதுவும் கிடையாது. கர்த்தருடைய வார்த்தைக்கு ஏற்ப கீழ்ப்படிவதும் விசுவாசிப்பதும் தான் சரியான நிலையும், விசுவாசமான இருதயமுமாய் இருக்கிறது. இதை தான், கர்த்தருக்கு முன்பாக நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

நிச்சயமாக நமக்கு மத்தியில், ஒருவருடைய சொந்த சாதனையை நாம் பெருமைப்படுத்தலாம், ஒருவருக்கொருவர் ஒற்றுப் பார்க்கலாம், ஒருவருக்கு ஒருவர் போட்டிபோடலாம், மற்றும் ஒருவருக்கு ஒருவர் சவால் விடுக்கலாம். இதுவும் கர்த்தருக்கு முன்பாக ஒரே மாதிரியாக இருப்பதை அளவிடும் உபயோகமற்ற செயலாக இருந்தாலும் மனிதர்களுக்கு மத்தியில் குறைந்த விருப்பம் உடைய ஒன்றாகவும் ஆனால் தொடர்ச்சியாக ஈடுபடும் படியாகவும் இருக்கிறது.

நாய் குட்டிகளும் கூட அவர்களுடைய எஜமானன் யார் என்று அடையாளம் கண்டு கொண்டு அவற்றினுடைய எஜமான்களுக்கு ஒப்புக்கொடுத்து, அவர்களுக்கு கீழ்ப்படிகிறது. வேறு வார்த்தைகளில் கூறினால், நாய்களும் கூட அவற்றினுடைய எஜமானர்களுக்கு கீழ்ப்படிந்து, அவர்களுடைய குரல்களை அடையாளம் கண்டு கொண்டு, அவற்றினுடைய எஜமானர்களை மட்டும் பின்பற்றுகிறது. நாய்கள் அவற்றினுடைய எஜமான்களால் சோதிக்கப்படும் பொழுது, அவை அவற்றினுடைய தவறான செயல்களை அடையாளம் கண்டு கொண்டு கீழ்படும் படியாக அவற்றினுடைய தலைகளைக் குணிந்து, மேலும் எல்லா வகையான அழகான சிறு தந்திரங்களை செய்வதின் மூலம் அவற்றினுடைய எஜமான்களின் நல்ல

கிருபைக்கு திரும்ப முயற்சி செய்கிறது. மிருகங்கள் கூட இதைச் செய்யும் பொழுது, தங்களுடைய சொந்த எண்ணங்களின் விசுவாசத்தைக் காட்டுவதின் மூலம், இன்னமும் மக்கள் கர்த்தரிடத்தில் சவால் விடுவதைத் தொடருகின்றனர். வேறு வார்த்தைகளில் கூறினால், தங்களுடைய சொந்த வழிகளையும் சொந்த எண்ணங்களையும் வற்புறுத்தினாலும் கர்த்தரிடத்தில் பற்றி கொள்வதைத் தொடருகின்றனர்.

அவருடைய இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் மூலம், மனித குலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் மறையும் படி கர்த்தர் செய்துள்ளார். மேலும் நம்முடைய தேவனுடைய வேலைகளை, விசுவாசிக்கும் விசுவாசத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும், என்று மட்டுமே அவர் நமக்கு சொல்லி இருக்கிறார். இருந்தாலும் இன்னமும் மக்கள் கீழ்ப்படியாமலும் கர்த்தருக்கு சவால் விடுமாறும் இருக்கின்றனர்.

நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவரிம் கொண்டுவரும்படி நம் தேவன் கூறி இருக்கிறார். மேலும் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் மூலம் அவற்றை எல்லாம் மறையச் செய்ததின் மூலம், அவர் நமக்கு பாவத்தின் மீட்பைக் கொடுத்துள்ளார். இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் விசுவாசத்தை கொண்டு வர வேண்டும் என்று கர்த்தர் நமக்கு சொல்லி இருக்கும் பொழுது, மக்கள் இதை இன்னமும் விசுவாசிப்பதில்லை. மேலும் தங்களுடைய சொந்த எஜமானனிடம் எதிர்க்கிறார்கள் இந்த மக்கள் சபிக்கப்படுவார்கள்.

மேசியாவிடத்திற்கு, அவர்களிடம் இருந்து அவர் கேட்கும் விசுவாசத்தை கொண்டு வராமல், அவர்களிடமிருந்து அவர் கேட்காத விசுவாசத்தை கொண்டு வரும் பொழுது, அவர் கோபம் மட்டுமே படுவார். அவர்கள்

கர்த்தருக்கு முன்பு அவர்களுடைய பிடிவாதத்தை கொண்டு வந்து, "இந்த வகையிலும், இந்த அளவிற்கும் என்னுடைய விசுவாசத்தை நான் வைத்திருக்கிறேன். நன்கு செய்யப்பட்ட இந்த வேலைக்காக என்னைப் பாராட்டுங்கள்" என்று அவரிடம் சொல்லுகிறார்கள். உண்மையில் இந்த விசுவாசத்தில் இந்த காலம் முழுவதும் அவர்களுடைய விசுவாசத்தை வைத்த படியால், கர்த்தர் அவர்களைப் புகழுவாரா?

நம்முடைய வாழ்க்கையில், பிடிவாதம் தேவைப்படும் நேரங்கள் இருக்கலாம். ஆனால் தவறான விசுவாசத்தின் பிடிவாதம் கர்த்தருக்கு முன்பு முற்றிலும் உபயோகமற்றது. நம்முடைய பாவங்களை மறையச் செய்வதற்கு கர்த்தர் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலைப் பயன்படுத்தினார். இரத்தாம்பர நிற நூலை அல்லது சிகப்பு நிற நூலை மற்றும் உலோக சங்கிலிகளை மட்டும் அவர் பயன்படுத்தினார் என்று வேதாகமம் சொல்லவில்லை. இதைப் போல நைலான் நூலைப் பயன் படுத்தியதையும் குறிப்பிடவில்லை. கர்த்தருடைய வீட்டிற்குள்ளேயும் நமக்கு கொடுக்கப் பட்டுள்ள அவருடைய சட்டத்திற்குள்ளேயும், மேசியா, நம்மிடமிருந்து இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் விசுவாசத்தை மட்டும் கேட்டுள்ளார்.

இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து பின் தொடர்பவர்களே கிறிஸ்தவர்கள் என்று குறிப்பிடப் படுகிறார்கள். நாமும் கிறிஸ்தவர்கள் தான் ஆனாலும் இயேசுவை தங்களுடிய சொந்த இரட்சகராக விசுவாசித்த பொழுதிலும் மறுபடியும் பிறக்காத பாவத்தின் மீட்பை பெற்றுக் கொள்ளாத இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் விசுவாசம் இல்லாத அநேக மக்கள் இருக்கிறார்கள் இவர்கள் எல்லோரும் நரகத்திற்க் போய் சேரும் பெயர் கிறிஸ்தவர்கள் தான் எனென்றால், அவர்களுடைய சொந்த வழிகளுக்கு ஏற்ப

விசுவாசிக்கிறார்கள் உண்மையான கிறிஸ்தவர்களாய் இல்லாமல் மத வாதிகளாய் மட்டும் இருக்கிற படியால் இந்த மக்களை கர்த்தர் தண்டிப்பார்.

கர்த்தருக்கு முன்பாவது நாமெல்லோரும் நேர்மையாக இருக்க வேண்டும் மேலும் எப்படி நாம் உண்மையாக இருக்கிறோமோ அப்படியே நம்மை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். ஒவ்வொரு தருணமும் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு வினாடியும், நம்முடைய பாவங்களுக்காக நாம் நரகத்திற்கு தள்ளப்பட உள்ளோம் என்பதை நாம் அறிக்கை விட வேண்டும். மேசியாவிற்கு முன்பு இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் விசுவாசத்தை நாமெல்லோரும் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படி விசுவாசிப்பதுவே சரியான செயலாகும். மேலும் எப்பொழுதெல்லாம் நாம் அறிக்கையிடுகிறோமோ அப்போது, மேசியா நமக்கு என்ன செய்தார் என்பதையும், நம்மை பாவங்களிலிருந்து விடுவிப்பதற்காக அவர் ஞானஸ்நானம் எடுத்தார் என்பதையும், அவருடைய மரணத்தின் மூலம் நம்முடைய பாவங்களுக்காக அவர் நியாயந்தீர்க்கப் பட்டார் என்பதையும், நமக்கு நாமே ஞாபகம் படுத்திக் கொண்டு எல்லா முறையும் நம்முடைய மீட்பை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும், இந்த விசுவாசத்தைத் தான் கர்த்தர் நம்மிடமிருந்து கேட்கிறார்.

மேசியா இப்படியாக செய்யவேண்டும் என்று சொன்னது போல நாம் செய்யும் வரைக்கும் நம்மால் கர்த்தரை சந்தோஷப்படுத்த முடியாது. ஏன்? ஏனென்றால் அவருடைய இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் மூலம் அவர் நம்முடைய நிரந்தர மீட்பராகியுள்ளார். கர்த்தர் நமக்கு என்ன செய்துள்ளார் என்பதை நாம் ஒவ்வொரு தருணமும் விசுவாசிக்க வேண்டும். இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் விசுவாசம் உண்மையாய் இருப்பதால் ஒவ்வொரு நாளும் நாம் செய்யும் நம்முடைய

பாவங்களிலிருந்து மீட்கப்படுவதற்கு அது இன்னமும் அதிகமாக தேவைப்படுகிறது.

நம்முடைய சொந்த முயற்சியின் பலன்களை கர்த்தருக்கு கொடுப்பதாக இருந்தால் அவர் அதில் பிரியப்படுவாரா?

பூமியின் பொருட்களை நாம் கர்த்தருக்கு கொடுப்பதாக இருந்தால், கர்த்தருடைய கோபத்தை மட்டும் நாம் நம்மீது சேர்த்து வைத்துக் கொண்டிருக்க மாட்டோம், ஆனால் அவருக்கு எதிராக ஒரு சவாலை விடுத்து, நாம் ஒரு பெரும் பாவத்தையும் செய்து கொண்டிருப்போம். இப்படிப்பட்ட விசுவாசம் துரோகமானது, ஏனென்றால் இது கர்த்தருக்கு எதிராக நிற்கிறது, இந்த உலகத்தில் உள்ள எந்த பொருளும் அது எவ்வளவு விலையுயர்ந்ததாகவும், விலை அதிகமாகவும் இருந்தாலும், அவற்றால் கர்த்தரை சந்தோஷப்படுத்த முடியாது. இந்த உலகத்தினுடைய இப்படிப்பட்ட பொருட்களை கர்த்தரிடத்தில் கொண்டு செல்வது எப்பொழுதுமே கர்த்தரால் புகழப்படும் சரியான விசுவாசம் இல்லை. உலகப்பூர்வமான காரியங்களில் அவர்கள் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் கர்த்தர் இப்படிப்பட்ட பொருள் விஷயங்களை ஏற்றுக் கொள்வதில்லை. கர்த்தர் நம்மிடம் இருந்து கேட்கும் உண்மையான விசுவாசத்தை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் இந்த விசுவாசத்தையும் அவருக்கு கொடுக்க வேண்டும்.

கர்த்தருடைய வார்த்தையில் இருப்பதைப் போலவே அதை விசுவாசிக்கும் விசுவாசமாய் நம்முடைய விசுவாசம் இருக்க வேண்டும். கர்த்தர் நம்மிடமிருந்து கேட்டுள்ள காணிக்கைகளை அப்படியே எடுத்துக் கொள்ளும்படி அது இருக்க வேண்டும். எல்லா வேளையிலும் ஒவ்வொரு தருவாயிலும் நமக்காக கர்த்தர் என்ன செய்துள்ளார்

என்பதை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். மேலும் நாம் நம்முடைய சொந்த பலவீனத்தையும் குறைகளையும் ஒப்புக்கொள்ள வேண்டும். கர்த்தர் நமக்கு அருளியுள்ள அதிகமான ஆசீர்வாதங்களை நாம் ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும், அவர் விருப்பத்துடன் நம்மைச் சந்தித்துள்ளார் என்பதையும் நாம் சரியாக தெரிந்து கொண்டு விசுவாசிக்க வேண்டும்.

மாயையின் எல்லா விசுவாசத்தையும் நாம் தூக்கி எறிய வேண்டும், மேலும் கர்த்தரால் பேசப்பட்ட வார்த்தையை விசுவாசிக்கும் விசுவாசத்தை மட்டுமே நாம் பெற்றுக் கொள்ளவேண்டும். கர்த்தருக்கு நாம் கொடுக்க வேண்டியது இந்த விசுவாசத்தின் காணிக்கைகள் தான். கர்த்தருக்கு, நாம் சரியான விசுவாசத்தின் காணிக்கைகளை கொடுக்கும் பொழுது தான் அவர் சந்தோஷப்படுவார், நம்மைச் சந்தித்து நம்முடைய விசுவாசத்தை ஏற்றுக் கொள்வார். மேலும் இதைச் செய்யும் பொழுது தான், கர்த்தர் நமக்காக அமைத்து தயாரித்து வைத்துள்ள ஆசீர்வாதங்களை எல்லாம் நமக்குக் கொடுப்பார்.

வார்த்தையில் நாம் சஞ்சரிக்கும் பொழுது "நம்மிடம் இருந்து கர்த்தர் கேட்கும் விசுவாசம் என்ன? எந்த வகையான ஜெபம் அவருக்கு வேண்டும்?" என்று நாம் யோசித்து பார்க்க வேண்டும். இதற்கு பிறகு தான் விசுவாசத்தில் இருக்கும் ஜெபத்தைத் தவிர வேறு எதையும் கர்த்தர் நம்மிடமிருந்து கேட்கவில்லை என்பதை உணருகிறோம். இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் மீட்பின் விசுவாசத்திற்குள் கர்த்தர் நமக்கு என்ன கொடுத்துள்ளார் என்பதை ஏற்றுக் கொண்ட விசுவாசத்திற்குள் வழங்கப்படும் ஜெபங்களை நம்முடைய தேவன் நம்மிடமிருந்து கேட்கிறார். கர்த்தர் நம்மிடமிருந்து கேட்பதெல்லாம், விசுவாசத்திற்குள் இருக்கும் இந்த நன்றியுள்ள ஜெபம் தான். அவருடைய பாதங்களில் வைக்க அல்லது அவருக்கு கொடுக்க முயற்சி செய்யும் நம்முடைய

சொந்த தயாரிப்புகள் எதையும் அவர் எப்பொழுதுமே ஏற்றுக்கொள்வதில்லை. இதைச் செய்யக் கூடாது என்பதை நாமெல்லோரும் உணர வேண்டும்.

"இல்லை, இல்லை, உங்களிடமிருந்து எனக்கு வேண்டிய விசுவாசம் அது அல்ல. உங்களுக்காக நான் ஞானஸ்நானம் பெற்றேன். உங்களுடைய எல்லாப் பாவங்களையும் மறையச் செய்ய, இந்தப் பாவங்களுக்காக நாம் நியாயந் தீர்க்கப்பட்டு, சிலுவையின் மீது மரிப்பதற்கு முன்னர், உங்களுடைய பாவங்களை என் மீது எடுத்து கொள்வதற்கு தான் இதைப் பெற்று கொண்டேன். உங்கள் மீட்பர் நானே. ஆனால் அடிப்படையாக நான் உங்கள் கர்த்தர். நான் தான் ராஜாதி ராஜா. ஆனால் நான் உங்கள் கர்த்தராய் இருப்பதால் நான் இந்த பூமிக்கு வந்து எல்லாவற்றையும் நிறைவேற்றினேன். உங்களுடைய இருதயங்களில் என்னுடைய அதிகாரத்தை அடையாளம் கண்டு கொள்வதற்கும், நான் தான் உங்களுடைய உண்மையான கர்த்தர் என்று முழுமனதுடனும் அறிக்கையிட நீங்கள் என்னை உண்மையாக விசுவாசிக்க வேண்டும்." என்று கர்த்தர் நமக்கு சொல்லுகிறார். கர்த்தர் நமக்கு இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றைக் கொடுத்துள்ளார். மேலும் கர்த்தர் நம்மிடமிருந்து கேட்கும் விசுவாசம் இது தான்.

இந்த இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் விசுவாசத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். "நல்லது, இது இன்னமும் சற்று நினைவிலிருக்கிறது. இன்னமும் நான் சற்று சரியாக செய்து கொண்டிருக்கிறேன், மேலும் காரியங்கள் நன்றாக போய் கொண்டிருக்கின்றன. இது உடையவில்லை என்றால் ஏன் ஒட்ட வைக்க வேண்டும். இதே வழியில் நான் ஏன் இதனை விசுவாசிக்க வேண்டும்? நான் இந்த வழியில் விசுவாசிக்கிறேன் அல்லது அந்த வழியில்

விசுவாசிக்கிறேன், அவை எல்லாம் ஒன்று தானே?" என்று உங்களுக்கு நீங்களே நினைத்துக் கொள்ளலாம். இல்லை, அவை ஒன்றல்ல! உங்களுடைய இருதயங்களில் இதைத் தவிர வேறு ஏதாவது விசுவாசம் இருந்தால், நீங்கள் கண்டிப்பாக இரட்சிக்கப் படவில்லை. இது போன்ற இருதயங்களில் பாவம் இன்னமும் இருப்பதால் நீங்கள் உங்களுடைய இருதயங்களை மாற்றி கொண்டு, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிக்கும் விசுவாசத்திற்கு திரும்ப வேண்டும்.

உண்மையான நற்செய்தியை விசுவாசிப்பவர்களின் இருதயங்களும், விசுவாசிக்காதவர்களின் இருதயங்களும் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயிருக்கிறது. கர்த்தருக்கு இது தெரியும். மேலும் மறுபடியும் பிறந்துள்ள நமக்கும் இது தெரியும். உங்களைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளும் பொழுது உங்களை நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். "கர்த்தாவே நான் உண்மையில் பாவமுள்ளவன். என்னை இரட்சியும்." இப்படி நீங்கள் உங்கள் இருதயங்களை மாற்றி கொண்டு உங்களுடைய மீட்பை கேட்கும் பொழுது கர்த்தர் அவருடைய சத்தியத்தினால் உங்களைச் சந்திப்பார்.

நம்முடைய தேவன் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்டார்

நம்முடைய தேவன் நமக்காக ஞானஸ்நானம் பெற்று, அதன்பிறகு கொல்லப்பட்டார். மத்தேயு 3 இல் எழுதியிருப்பதைப் போல, இதைத் தான் தேவன் நமக்காக செய்துள்ளார். இதை நாம் விசுவாசிக்கும் பொழுது இதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்துகிறோம். இயேசு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட பொழுது நம்முடைய எல்லாப் பாவங்களும் அவர் மீது சுமத்தப்பட்டன. அவர்

கொல்லப்பட்ட பொழுது நம்முடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்டதால் தான் இந்தப் பாவங்களை சிலுவைக்கு அவரால் சுமந்து செல்ல முடிந்தது. நம்முடைய சொந்த பாவங்களுக்காக மட்டும் அல்ல, ஆனால் முழு உலகத்தினுடைய எல்லாப் பாவங்களுக்காகவும் அவர் நியாயம் தீர்க்கப்பட்டார்.

நம்முடைய தேவன் ஆசரிப்புக் கூடாரத்திற்கான கட்டுமானப் பொருட்களின் காணிக்கைகளை அவரிடம் கொண்டு வரும்படி நமக்கு சொல்லும்பொழுதோ, அல்லது நமக்கு அவர் ஏதாவது சொல்லும் பொழுதோ அவர் ஒரு இடைவிடா வரிசையுடன் செல்கிறார். "இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களை" என்னிடம் கொண்டு வாருங்கள் என்று அவர் கூறுகிறார். இளநீல நிறம் முதலில் வருகிறது. மேலும் அவருடைய மெல்லிய பஞ்சு நூலின் குறிப்பு மூலம் இதை பின் தொடருகிறார். இதன் மூலம் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிக்க சொல்லுகிறார். சிலுவையின் இரத்தத்தை முதலில் விசுவாசிப்பதும், அதன் பின் இயேசுவினுடைய ஞானஸ்நானத்தை விசுவாசிப்பதும், முதலில் நன்றாகத் தெரியும். ஆனால் இது தவறு. இயேசு ஞானஸ்நானம் பெற்றதால் தான் சிலுவையின் மீது அவரால் இரத்தம் சிந்த முடிந்தது. சிலுவையின் இரத்தத்தை முதலில் விசுவாசிப்பதும், அதன் பின் இயேசுவினுடைய ஞானஸ்நானத்தை விசுவாசிப்பதும் சரியல்ல என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கர்த்தர் இப்படிப்பட்ட விசுவாசத்தை அனுமதிப்பதேயில்லை.

மனித சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்த நம்முடைய தேவன் 30 வயது ஆகும் பொழுது நம்முடைய பாவங்களை தன் மீது எடுத்துக் கொள்வதற்கு, அவர் முதலில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். இப்படிச் செய்த பிறகு அவர் இந்த உலகத்தினுடைய பாவங்களை சிலுவைக்கு எடுத்துச் சென்று அவருடைய மரணத்தின் மூலம்

நியாயந்தீர்க்கப்பட்டு, பிறகு மரணத்தில் இருந்து மறுபடியும் எழுந்து இதன்மூலம் நம்முடைய இரட்சகர் ஆனார். இதைப் போல அவர் நிறைவேற்றிய அவருடைய வேலைகளின் வரிசைக்கு ஏற்ப கர்த்தர் நமக்குச் செய்துள்ளதை நாம் விசுவாசிக்க வேண்டும். இப்படித்தான் நாம் விசுவாசிக்க வேண்டும். இப்படி செய்யும் பொழுது தான் குழப்பமடையாத அளவு அல்லது எப்பொழுதும் அசைக்க முடியாத அளவு நம்முடைய விசுவாசம் முழுமையாக நிற்க முடியும், மேலும் நற்செய்தியை நாம் மற்றவர்களுக்கு பரப்பும் போது இதற்கு ஏற்ப நாம் செய்ய வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறினால், கர்த்தரை எது சந்தோஷப்படுத்துகிறதோ அதற்கு ஏற்ப நாம் விசுவாசிக்க வேண்டும்.

விசுவாசத்தின் எந்த காணிக்கையை அவரிடத்திற்கு கொண்டு வர வேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்? இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் விசுவாசத்தை கொண்டுவர வேண்டும் என்று அவர் உங்களிடம் சொல்லுகிறார் அல்லவா? உங்களிடம் இந்த விசுவாசம் இருக்கிறதா? நீங்கள் எந்த சந்தர்ப்பத்திலாவது பின்வரிசையில் இதை விசுவாசிக்கிறீர்களா? "நான் இந்த வழியில் விசுவாசிக்கிறேனோ அல்லது அந்த வழியில் விசுவாசிக்கிறேனோ அது ஒரு பொருட்டு அல்ல, நான் இன்னமும் விசுவாசிக்கிறேன் அதுதான் முக்கியம். சிகப்பு நூலை முதலிலும், இளநீல நிற நூலை பிறகும் இரத்தாம்பர நிற நூலை அதற்கு பிறகும் நான் விசுவாசிக்கிறேன்." இப்படியாக நீங்கள் விசுவாசித்தால், நீங்கள் மறுபடியும் விசுவாசிக்க வேண்டும். உங்களுடைய இந்த வரிசையாக இல்லாத விசுவாசத்தை தேவன் அங்கீகரிப்பதேயில்லை.

நம்முடைய தேவன் நியாயந்தீர்ப்பின் கர்த்தரும் சத்தியத்தின் கர்த்தருமாய் இருக்கிறார். இதைப் போல தவறான விசுவாசத்தை அவர் அங்கீகரிப்பதில்லை. விசுவாசத்தினுடைய வரிசை கலந்து இருக்கும் பொழுது,

விசுவாசம் சரியாக நிற்க முடியாத காரணத்தால் கர்த்தர் இந்த விசுவாசத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று நினைத்தாலும் அவரால் முடியாது. வீட்டைக் கட்டி முடித்த பிறகு அஸ்திபாரத்தை அமைக்க முயற்சி செய்யமுடியாது என்பதைப் போல இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்களை எடுத்துக் கொண்டதால் தான் பின்னால் அவர் கொல்லப்பட முடிந்தது.

ஆகவே கர்த்தர் நமக்கு என்ன சொல்லி இருக்கிறார் என்பதற்கு ஏற்ப நாம் விசுவாசிக்க வேண்டும். சரியான விசுவாசத்திற்கான மூலைக்கல்லை நடுவது இதுவே. கர்த்தர் நம்மை சரியாகவும் நியாயமாகவும் நீதியாகவும் மீட்டுள்ளபடியால் நம்மீதுள்ள அவருடைய உத்தரவை நம்மால் மாற்றமுடியாது. நாம் சிலுவையினுடைய இரத்தத்தையும் பின்பு இயேசு கிறிஸ்துவினுடைய ஞானஸ்நானத்தையும் விசுவாசித்தால் இந்த விசுவாசமானது தவறு. மேலும் இப்படி விசுவாசிப்பவர்களின் இருதயங்களில் பாவம் இன்னமும் காணப்படுகின்றன. ஏனென்றால் அவர்களுடைய பின்வாங்கிய கட்டளைகளின் விசுவாசத்தின் காரணமாக அவர்களுடைய பாவங்கள் கழுவப்பட வில்லை. இது உண்மையில் அருமையானது. இதை தவிர ஆச்சரியமூட்டும் விசுவாசம் வேறு எதுவும் இல்லை.

மேசியாவிற்கு முன்னர் சிலுவையின் மீதான இயேசுவினுடைய இரத்தத்தை மட்டுமே நம்முள் பலர் விசுவாசித்தோம். இயேசு என்னுடைய எல்லா நியாயத்தீர்ப்பையும் சுமந்தார், இதனால் நாம் முழுமையாக மீட்கப்பட்டுள்ளோம். நம்முடைய இரட்சிப்பானது நமக்காக சிலுவையின் மீது மரித்த இயேசுவிடம் இருந்து வந்தது. இதை யார் விசுவாசிக்கிறார்களோ அவர்கள் இப்பொழுது இரட்சிக்கப்பட்டுள்ளார்கள் என்று நாம் விசுவாசித்தோம். பிறகு நாம் இயேசுவின் ஞானஸ்நானத்தின் உண்மையான அர்த்தத்தை உணர்ந்தோம். இதனால் நம்முடைய தவறான

விசுவாசத்திற்கு மேலே உண்மையான விசுவாசத்தை சேர்த்துள்ளோம். பின்பு என்ன ஆனது? நம்முடைய பாவங்கள் உண்மையில் மறைய வில்லை. இந்த வகையான விசுவாசம் முழுமையாக அறிவிற்குரியதாகவும், போதனைக் குரியதாகவும் இருக்கிறதே தவிர, நம்முடைய இருதயங்களுக்கான உண்மையான விசுவாசமாய் இருக்க முடியாது.

உங்களுடைய விசுவாசம் இப்படி இருந்தால் நீங்கள் உடனடியாக அதை மாற்ற வேண்டும். முதலில் உங்களுடைய விசுவாசம் சரியாக இருக்க வில்லை என்பதை நீங்கள் தெளிவாக ஒப்புக் கொள்ள வேண்டும். பிறகு ஒரே சமயத்தில் உங்களுடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் கட்டளையை மறுபடியும் மாற்றுவது தான். "இந்த உலகத்திற்கு வந்து யோர்தான் நதியில் யோவான் ஸ்நானகனால், நம்முடைய தேவன் ஞானஸ்நானம் எடுத்த பொழுது அவர் என்னுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்டார். இயேசு ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டபடியால் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களும் அவர் மீது செலுத்தப் பட்டபடியால், என்னுடைய எல்லா பாவங்களும் கூட இயேசுவின் மீது செலுத்தப் பட்டது. அதன் பிறகு என்னுடைய எல்லாப் பாவங்களின் கூலியை கொடுப்பதற்காக சிலுவையின் மீது அவர் தன்னுடைய இரத்தத்தைச் சிந்தினார்." இப்படி தான் நீங்கள் விசுவாசிக்க வேண்டும்.

"நான் இந்த வழியில் விசுவாசிக்கிறேனோ அல்லது அந்த வழியில் விசுவாசிக்கிறேனோ யார் கவனிக்கப் போகிறார்கள்? தேவனுடைய இந்த நான்கு ஊழியங்களையும் விசுவாசிப்பது தான் முக்கியமானது. ஏன் இந்த வரிசையில் அவ்வளவு அழுத்தமாகவும் பிடிவாதமாகவும் இருக்க வேண்டும்?" நீங்கள் எந்த

வகையிலாவது இந்த யோசனையை இன்னமும் பற்றி இருக்கிறீர்களா? இயேசு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதற்கு பிறகு தான் சிலுவையின் மீது மரித்தார் என்ற இந்த உண்மையை நீங்கள் உங்கள் இருதயங்களுக்கு எடுத்து செல்ல வேண்டும். மேலும் நீங்கள் விசுவாசிக்க வேண்டிய சத்தியம் இது தான்.

பரிசுத்த ஆவியானவர் அநியாயத்தை ஏற்றுக் கொள்வதேயில்லை. இந்த உலகத்தில் உள்ளது போல நமக்காக மேசியா என்ன செய்துள்ளார் என்பதை நாம் விசுவாசிக்கும் பொழுது மட்டும் தான் பரிசுத்த ஆவியாகிய கர்த்தர் நம்முடைய விசுவாசத்தை அங்கீகரிக்கிறார். "இயேசுவினுடைய இந்த நான்கு செயல்களையும் நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, ஆமென். நீங்கள் சரியாக விசுவாசிக்கிறீர்களோ அல்லது பின் வரிசையில் விசுவாசிக்கிறீகளோ, நீங்கள் இந்த வழியில் விசுவாசிக்கிறீகளோ அல்லது அந்த வழியில் விசுவாசிக்கிறீகளோ விசுவாசித்தால் சரி, ஆமென். நீங்கள் என் குழந்தைகள்." என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லவில்லை.

பிதாவாகிய கர்த்தருடைய விருப்பத்திற்கு ஏற்ப மேசியாவாகிய இயேசு இந்த உலகத்திற்கு வந்து பிதாவினுடைய கட்டளையைச் செய்தார். இப்படி தான் அவருடைய 33 வருட வாழ்க்கையை இந்த பூமியில் வாழ்ந்தார். இந்த உலகத்திற்கு வந்து, ஞானஸ்நானத்தின் மூலமாகவும், மரணத்தின் மூலமாகவும், உயிர்தெழுதலின் மூலமாகவும் அவர், அவருடைய வேலையாகிய நம்முடைய மீட்பை நிறைவேற்றி, அதன் பிறகு பரலோகத்திற்கு ஏறினார். அதன் பிறகு அவர் நமக்கு பரிசுத்த ஆவியானவரை அனுப்பி வைத்தார்.

பாவத்திற்கான மீட்பை பெற்றுள்ள நம்முடைய இருதயங்களில், பரிசுத்த ஆவியாகிய கர்த்தர் குடியிருக்கிறார். மேலும், தேவன் அவர்களுக்காக என்ன

செய்துள்ளார் என்பதை விசுவாசிப்பவர்களின் விசுவாசத்தை அவர் அங்கீகரித்தார். இதனால் தான் நாம் நம்முடைய சொந்த எண்ணங்களுக்கு ஏற்ப விசுவாசிக்க முடியாது. நீங்களும் நானும் இயேசுவை விசுவாசித்தாலும், ஏதாவது வகையில் நீங்கள் பின் வரிசையில் தலைகீழாக விசுவாசிப்பதில்லையா? இப்படி இருந்தால் நீங்கள் மறுபடியும் சரியாக விசுவாசிக்க வேண்டும்.

நீங்கள் இதைச் செய்யும் பொழுது பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயங்களில் செயலாற்றுகிறார். நாம் முழுமையாக குறைபாடுடையவர்களாக இருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயங்களை உறுதியாக பற்றிக் கொள்கிறார், நம்முடன் எப்போதும் இருக்கிறார். மேலும் அவருடைய கிருபையை நமக்கு அளிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நமக்கு சக்தியைத் தருகிறார். நமக்கு பலத்தைத் தருகிறார். நம்மை ஆறுதல் படுத்துகிறார். நம்மை ஆசீர்வதிக்கிறார். அவர் நமக்கு அருமையான எதிர்காலத்தை வாக்களிக்கிறார். மேலும் விசுவாசிப்பவர்களாகிய நம்மை, விசுவாசத்திலிருந்து அவருடைய நிரந்தர ராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கான தகுதியை இழக்க வைக்காத விசுவாசம் வரை அவர் நம்மை நடத்துகிறார்.

தேவன் நமக்காக என்ன செய்துள்ளார் என்பதை நாம் விசுவாசிக்கும் பொழுதோ அல்லது நம்முடைய காணிக்கைகளை அவரிடத்திற்கு கொண்டு வர வேண்டும் என்று அவர் சொல்லும் பொழுதோ, இது தான் நமக்கு தேவை. அதாவது நீர் மற்றும் ஆவியினால் அவர் நம்மை மீட்டுள்ளார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். ஆசரிப்புக் கூடாரத்திற்குள் இருக்கும் எல்லா பொருட்களும் முக்கியமானவை, ஏனென்றால் நீர் மற்றும் ஆவியில் மறுபடியும் பிறக்கும் இரகசியத்தை அவை நமக்கு தொடர்ச்சியாக கூறுகின்றன. வேறு வார்த்தைகளில் கூறினால், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பல பொருட்களின்

மூலம் கர்த்தர் நமக்கு ஒன்றைச் சொல்ல நினைக்கிறார் - அது நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியே ஆகும்.

நம்முடைய விசுவாசத்திற்கு, அதனுடைய அஸ்திபாரம் மிகவும் முக்கியம்

நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தை முதலில் உறுதியாக அமைக்காமல், நாம் விசுவாசத்தின் வீட்டை கட்டினால், எவ்வளவு காலம் நாம் இயேசுவை விசுவாசிக்கிறோமோ அவ்வளவு அதிக பாவங்களை நாம் சேகரிக்கிறோம். அதிக மனந்திரும்புதலின் ஜெபங்களை நாம் ஏறெடுக்க வேண்டும். மேலும் அதிக ஏமாற்றுக்கார பாவிகளாகிறோம். ஆனால் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் தேவன் நம்மை மீட்டுள்ளார் என்ற மீட்பின் பரிசை விசுவாசிக்கும் பொழுது, நாமெல்லோரும் கர்த்தருடைய பிள்ளைகளாக முடியும். அதனால் நாமெல்லோரும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்தியத்தை விசுவாசிக்க வேண்டும், மற்றும் நாமெல்லோரும் இப்படி கர்த்தருடைய பிள்ளைகளாக வேண்டும்.

விசுவாசத்தின் அஸ்திபாரத்தை முழுமையாக உடையவர்கள் எப்பொழுதுமே அவர்களுடைய ஆசாரிய தன்மையை பிரகாசிக்கும் ஒளியில் தொடர முடியும். இதனை அவர்கள் குறைபாடுகள் இருக்கும் பொழுது கூட தொடரமுடியும். வேறு வார்த்தைகளில் கூறினால், ஆசாரிய தன்மையின் வேலைகளான இந்த உலகத்தினுடைய எல்லா மக்களையும் அவர்களுடைய மார்புக்குள் அனைத்துக் கொள்ளுவது, அவர்களுடைய பாவ மீட்பிற்காக சுவிசேஷத்தை ஊழியம் செய்வது, ஆகியவற்றை அவர்களால் நிறைவேற்ற முடியும்.

இதற்கு மாறாக விசுவாசத்தின் அஸ்திபாரம் தெளிவாய் இல்லாதவர்கள் அதிக நேரம் செல்லச் செல்ல அதிக கபடர்கள் ஆகிறார்கள். அவர்கள் கெட்டவர்கள் ஆகிறார்கள். அவர்கள் அதிக ஏமாற்றுகார மதவாதிகளாகிறார்கள். ஒரு மரத்தை அதனுடைய கனியால் நாம் அறியலாம் என்று நம்முடைய தேவன் நமக்குச் சொல்லியுள்ளது போல, இது போன்ற மக்களால் சுமக்கப்படும் பழங்கள் எல்லாம் வெறுப்புள்ளதாகவும், அசுத்தமாகவும், ஏமாற்றக் கூடியதாகவும் இருக்கின்றன. ஆனால் மறுபடியும் பிறந்தவர்களாகிய நாம் ஒரு போதும் ஏமாற்றுக்காரர்கள் அல்ல. அவர்கள் எல்லோரும் உண்மையானவர்கள். அவர்களிடம் தம் குறைபாடுகள் இருந்தாலும், அவர்களெல்லோரும் உண்மையானவர்கள். அவர்களிடம் தம் குறைபாடுகள் இருந்தாலும், அவர்களெல்லோரும் நேர்மையுள்ளவர்கள். அவர்கள் அவர்களுடைய சொந்த பலவீனங்களையும் தவறான செயல்களையும் அடையாளம் கண்டு கொண்டு, பிரகாசிக்கும் ஒளியின் மையத்தில் வாழ்கிறார்கள். நம்முடைய எல்லாப் பாவங்களையும் அகற்றுவதற்காக நம்முடைய தேவன் ஞானஸ்நானம் பெற்றதாலும், மரித்ததாலும், இதன்மூலம் அவர் நம்முடைய எல்லா பாவங்களையும் மறையச் செய்துள்ளார், என்ற இந்த சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலமும் நாம் நம்முடைய பாவங்களுக்கான மீட்பைப் பெற்றுள்ளோம். நாம் முழுமையாக இல்லாத பொழுதிலும், நாம் பாவம் செய்தாலும், நாம் பலவீனமாய் இருந்தாலும், நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் உறுதியாய் இருப்பதால் நம்முடைய வாழ்க்கை இன்னமும் பிரகாசமாய் இருக்கிறது. ஏனென்றால் நம்முடைய இருதயங்கள் எப்பொழுதும் பாவமில்லாமல் இருக்கின்றன. நம்முடைய குறைபாடுகளால் சில நேரங்களில் நாம் தவறான வழியில் போகலாம், ஆனாலும் மற்றவர்களை அழிவிற்கு அழைத்துச் செல்லும் தவறான வழிக்குப் போவதில்லை. நாம்

முழுமையாக இல்லாவிட்டாலும், கர்த்தர் பிரியப்படும் வழியிலே நாம் நடக்கிறோம், படிபடியாக முன்னேறி, நற்செய்தியை இன்னமும் அதிகமாக தாங்கிக் கொண்டு கர்த்தரை மகிழ்ச்சியூட்டும் பாதையில் நாம் செல்லுகிறோம். இயேசு நம்மை சரியாக மீட்டுக் கொண்டதால் இது சாத்தியமாக்கப் பட்டுள்ளது.

நமது மேசியாவும் நமது மீட்பருமான இயேசு கிறிஸ்து இப்படி நம்மை முழுமையாக நான்கு நூல்களினால் இரட்சித்திராவிட்டால் நம்மால் மீட்கப்பட்டிருக்க முடியாது. அவர் நம்மை மீட்டுள்ளபடியால் நாம் மீட்கப்பட்டுள்ளோம். மேலும் இதனால் தான் நாம் விசுவாசிக்கிறோம், நற்செய்தியை பரப்புகிறோம், மற்றும் நம்முடைய விசுவாசத்துடன் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம். நம்முடைய விசுவாசத்தின் மூலம் தான் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறோம், நம்முடைய விசுவாசத்தின் மூலம் தான் அவருக்கு ஊழியம் செய்கிறோம். மேலும் நம்முடைய விசுவாசத்தின் மூலம் தான் அவரை பின் தொடர்கிறோம். இப்படிப்பட்ட ஒருவராக நாம் மாறியுள்ளோம். வேறு வார்த்தைகளில் கூறினால், நம்முடைய விசுவாசத்தின் மூலம் கர்த்தரை சந்தோஷப் படுத்துபவர்களாகியுள்ளோம். விசுவாசத்தின் அஸ்திபாரம் உறுதியாய் நிற்கக் கூடியவர்களாகியுள்ளோம்.

விசுவாசத்தின் அஸ்திபாரத்தை சரியாக அமைக்காதவர்கள் அதைச் சரியாக அமைக்க வேண்டும். இதனால் தான் எபிரெயர் 6:1-2 சொல்லுகிறது, *"ஆகையால், கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் விட்டு, செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல், தேவன்பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு என்பவைகளாகிய அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்துபோவோமாக."*

மேலும், இந்த வசனங்கள் என்ன கூறுகின்றன? "இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார்?"; "இந்த ஞானஸ்நானமானது பழைய ஏற்பாட்டின் கைகளை வைப்பதற்கு ஒப்பனையானதா?"; "நாம் மறுபடியும் வாழ்வோமா?"; மேலும் "நிரந்தர நியாயத்தீர்ப்பு என்றால் என்ன?"; போன்ற கேள்விகளுக்கு அஸ்திபாரத்தை உறுதியாக அமைக்கச் சொல்லுகிறது. முழுமையான விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ளவும் அதனுடைய அஸ்திபாரத்தை முதலில் இருந்தே உறுதியாக அமைக்கவும் நமக்கு இது சொல்லுகிறது. இதனால் நாம் அசைக்கப்படவோ அல்லது இந்த விஷயங்களால் மறுபடியும் நம்முடைய அஸ்திபாரத்தை அமைக்க கட்டாயப் படுத்தப்படவும் மாட்டோம். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றை விசுவாசிக்கும் விசுவாசம் தான் நம்முடைய தேவன் நம்முடைய மீட்பை சரியாக நிறைவேற்றியுள்ளார் என்பதை விசுவாசிக்கும் முழுமையான விசுவாசமாகும். இந்த விசுவாசத்தின் அஸ்திபாரத்தில் நாம் உறுதியாய் நிற்க வேண்டும், மேலும் நாம் அங்கிருந்து ஓட வேண்டும். நாம் விசுவாசத்தின் பந்தயத்தை ஓடவேண்டும்.

எபிரெயரிலிருந்து எடுக்கப் பட்டுள்ள மேலே உள்ள பகுதியை வைத்து, இயேசுவினுடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்கள் அவருக்குள் செலுத்தப்பட்டுவிட்டன என சொல்ல முடியாது என்றும், விசுவாசத்தின் அஸ்திபாரத்தை மறுபடியும் கட்ட வேண்டாம் என இந்தப் பகுதி நமக்கு சொல்லுகிறது என்றும் கூறி, சில மக்கள் விளக்கம் தருகிறார்கள். ஆனால் நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் முதலிலேயே சரியாக கட்டப்பட்டிருந்தால் அதை மறுபடியும் கட்ட வேண்டாம் என்று கர்த்தர் நமக்கும் சொல்லி இருப்பாரா? சரியான விசுவாசத்தின் அஸ்திபாரம் இல்லாதவர்கள் இந்த அஸ்திபாரத்தை அமைக்க வேண்டும் என்றும் மேலும்

விசுவாசத்தின் அஸ்திபாரம் சரியாக உள்ளவர்கள் அதை இன்னமும் உறுதியாகவும் பலமாகவும் ஆக்கி கொண்டு முன்னால் ஓட வேண்டும் என்று இந்த பகுதி நமக்கு சொல்லுகிறது.

நம்மை மீட்பதற்காக ஆசரிப்புக் கூடாரத்தை கட்டும்படியும் அவருடைய மக்களிடமிருந்து காணிக்கைகளை ஏற்றுக் கொள்ளும்படியும் கர்த்தர் மோசேயிற்கு கட்டளையிட்டார். தங்கம், வெள்ளி, வெண்கலம், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல், ஆட்டு ரோமம், சிகப்பு சாயம் பூசப்பட்ட செம்மறியாட்டு தோல், மர நாயின் தோல் மற்றும் சீத்தீம் மரத்தினுடய மரக்கட்டைடையை அவரிடத்திற்கு கொண்டு வர வேண்டும் என்று கர்த்தர் இஸ்ரவேல் மக்களுக்கு கட்டளையிட்டார். இந்த பொருட்களில் வைக்கப்பட்டுள்ளது போல உங்களையும் என்னையும் இந்த உலகத்தினுடைய பாவங்களிலிருந்து விடுவித்ததன் மூலம் நம்முடைய தேவன் நமக்கு மீட்பின் பரிசைக் கொடுத்துள்ளார். இந்த வழியில் தான் இந்த காணிக்கைகளை அவரிடத்தில் கொண்டு வர வேண்டும் என்றும், ஆசரிப்புக் கூடாரத்தை கட்ட வேண்டும் என்றும், அதனுடைய பலி முறையை அமைக்க வேண்டும் என்றும், கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு சொன்னார். மேலும் இந்த பலி முறையின் தேவைகளுக்கு ஏற்ப, அவருக்கு அவர்களுடைய பலி காணிக்கைகளை கொடுத்த இஸ்ரவேலர்களின் பாவங்களை மன்னித்தார்.

இயேசு கிறிஸ்துவால் சரியாக நிறைவேற்றப்பட்டுள்ள நம்முடைய மீட்பை, முன்கூறப்பட்ட இளநீலம், இரத்தாம்பரம், சிகப்பு மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றை

விசுவாசிப்பது முழுமையாக்குகிறது

இயேசு கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்ட சரியான சத்தியத்தை நம்மால் விசுவாசிக்க முடியாவிட்டால், ஒரே சமயத்தில் நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தை அமைக்காவிட்டால், நம்முடைய விசுவாசம் தொடர்ச்சியாக அசைக்கப்படும். நம்முடைய தேவன் நம்மை முழுமையாக மீட்டுள்ளார் என்ற உண்மையில், அறிவும், உணர்தலும், விசுவாசமும் இல்லாமல், நாமெல்லோரும் நம்முடைய சொந்த முயற்சியின் மூலம் நம்முடைய மீட்பை அடைய முயற்சி செய்யத் தொடங்கிவிடுவோம். இப்படிப்பட்ட விசுவாசம் முழுமையானது அல்ல, ஆனால் தவறாக புரிந்துக் கொள்ளப்பட்டது.

நாம் எபிரெயர் 10:26-31 ஐப் பார்ப்போம். *"சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டுமூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப் பாருங்கள். பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பாரென்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம். ஜீவனுள்ள தேவனுடைய கைகளிலே விழுகிறது பயங்கரமாயிருக்குமே."*

சத்தியத்தின் ஞானத்தை பெற்றுக் கொண்ட பிறகு, நாம் வேண்டுமென்றே பாவம் செய்தால், பாவத்திற்கென்று பலி ஒரு போதும் இருப்பதில்லை ஆனால் பய மூட்டும் நியாயதீர்ப்பு மட்டும் தான் இருக்கிறது என்று வசனம் நமக்கு சொல்லுகிறது. இங்கு சத்தியத்தின் ஞானத்தை பெற்றுக் கொண்ட பிறகு, வேண்டும் என்றே பாவம் செய்பவர்கள் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை தெரிந்து கொண்ட பிறகும் கூட அதை விசுவாசிக்காதவர்களுக்கு ஒப்பிடப் படுகிறார்கள். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் கர்த்தர் நம்மை மீட்டுள்ளார் என்ற உண்மையையும், தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலத்தின் மூலம் நம்மை அவர் மீட்டுள்ளார் என்பதையும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல், ஆட்டு ரோமம், சிகப்பு சாயம் பூசப்பட்ட செம்மறியாட்டு தோல், மற்றும் மர நாயின் தோல் ஆகியவற்றின் மூடிகள் மூலம் அவர் ஆசரிப்புக் கூடாரத்தினுடைய கூரையை அமைத்துள்ளார் என்பதையும் நாம் விசுவாசிக்க வேண்டும். நாமெல்லோரும் இந்த விஷயங்களைத் தெளிவாக தெரிந்துக் கொண்டு, நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தை உறுதியாக அமைக்க வேண்டும். நம்மை முழுமையாக இரட்சிப்பார் என்று நம்முடைய தேவன் நமக்கு வாக்களித்தார்.

மேலும் நேரம் வந்த பொழுது, அவர் மீது நம்முடைய பாவங்களை பெற்றுக் கொள்வதற்கு அவர் ஞானஸ்நானம் பெற்று, சிலுவையின் மீது மரித்து, மரணத்தில் இருந்து மறுபடியும் எழுந்து, இதன் மூலம் நம்மை முழுமையாக மீட்டுள்ளார். நம்முடைய மீட்பின் அஸ்திபாரத்தை முழுமையாக அமைத்த இந்த இயேசு கிறிஸ்துவை விசுவாசித்ததின் மூலம் நாம் இதனால் சரியாக மீட்கப் பட்டுள்ளோம்.

ஆனால் இந்த சத்தியத்தை அறிந்து அதை விசுவாசிக்க மறுப்பவர்களெல்லோரும் அவர்களுடைய கடைசி நியாயதீர்ப்பின் நாள் வரும் பொழுது கண்டிப்பாக கர்த்தருடைய பயமூட்டும் நியாயதீர்ப்பைச் சந்திப்பார்கள். அவர்களுக்கு பயமூட்டும் கோபம் மட்டுமே இருக்கும் என்றும் வேதாகமம் சொல்லுகிறது. மேலும் அவர்களுடைய நரகத்தின் வேதனை நெருப்பால் பக்குவபடுத்தப்பட்டது போல அவ்வளவு அதிகமாக இருக்கும் என்று அது விளக்குகிறது (மாற்கு 9:49). ஒரு சில பயமூட்டும் நியாயத்தீர்ப்பின் கோபம் மட்டுமே அங்கு இருக்கும் என்று அது நமக்குச் சொல்லுகிறது.

சட்டத்தைக் கடைப்பிடிக்க தவறியது இந்த பயமூட்டும் நியாயத்தீர்ப்பிற்கு அழைத்து செல்லும் என்றால் கர்த்தருடைய குமாரனால் கொடுக்கப் பட்டுள்ள அவர்களுடைய மீட்பை விசுவாசிக்காதவர்களுக்கு நியாயத்தீர்ப்பு எவ்வளவு அதிகமாக இருக்கும்? மனிதனுடைய சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்த தேவனை, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு, இந்த உலகத்தினுடைய பாவங்களை சிலுவைக்குச் சுமந்து சென்று, அவருடைய மரணத்தின் மூலம் பாவங்களுக்கான எல்லா தண்டனையையும் பெற்று, மரணத்தில் இருந்து மறுபடியும் எழுந்து இன்னமும் வாழ்ந்து கொண்டு இருக்கும் நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவை நாமெல்லோரும் விசுவாசிக்க வேண்டும்.

நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் உறுதியாக அமைக்கப் படவேண்டும்

ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்ட வேண்டும் என்று கர்த்தர் ஏன் மோசேயினிடத்தில் கூறினார்? ஆசரிப்புக் கூடாரத்தில்

பயன்படுத்தப் பட்டுள்ள ஒவ்வொரு பொருளையும் நாம் பார்க்கும் பொழுது, இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு மனித சரீரத்தில் வந்து, யோவான் ஸ்நானகனிடமிருந்து பெற்றுக் கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்களை அவர் மீது ஏற்றுக் கொண்டு உலகத்தினுடைய பாவங்களை சிலுவைக்கு சுமந்துச் சென்று, அதன் மீது மரித்து, மரணத்திலிருந்து மறுபடியும் எழுந்து, பரலோகத்திற்கு மறுபடியும் சென்று, பிதாவாகிய கர்த்தருடைய் சிங்காசனத்தின் வலது பக்கம் உட்கார்ந்து, இப்பொழுது நம்முடைய நிரந்தரமான கர்த்தராக ஆகியுள்ளார் என்ற சத்தியத்தை அவைத் தெரிவிக்கின்றன என்பதை நம்மால் பார்க்க முடியும். அதனுடைய வாசலிருந்து, அதனுடைய தூண்கள் மற்றும் அதனுடைய வெண்கலப் பாத்திரம் வரைக்கும், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய எல்லா பொருட்களும் நற்செய்தியின் சத்தியத்தை நமக்கு காண்பிக்கின்றன. வேறு வார்த்தைகளில் கூறினால், முழு பழைய ஏற்பாடும் இயேசு கிறிஸ்துவினுடைய ஞானஸ்நானம், அவருடைய மரணம், அவருடைய அடையாளம் மற்றும் அவருடைய மீட்பின் வேலைகளை நமக்குச் சொல்லுகின்றன.

பழைய ஏற்பாட்டிலிருந்து புதிய ஏற்பாடு வரை நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை, அதாவது இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்தியத்தை பற்றி அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதுதெல்லாம் கூறுகிறார்கள். அவர்கள் போதிக்கப்பட்டு அடிக்கடி கேட்டதால் இந்த சத்தியம் எவ்வளவு விலையுயர்ந்தது என்பதை நாம் மறந்து விட கூடும். ஆனால் இந்த சத்தியம் எவ்வளவு முக்கியமானது? சாலமோன் ராஜா காலத்தில் தங்கமும், வெள்ளியும் அதிகமாக இருந்ததால், அவை கற்களைப் போல கருதப்பட்டது. இப்படிப்பட்ட காலத்தில் நாம் வாழ்வது போல, கர்த்தருடைய ஆலயத்தில் ஒவ்வொரு

நாளும் இந்த சத்தியத்தின் வார்த்தையை நாம் கேட்பதால் நாம் சில நேரங்களில் இந்த மீட்பை சாதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் கர்த்தருடைய ஆலயத்திற்கு வெளியில் இந்த உண்மையை எங்கும் கேட்கமுடியாது என்றும், இந்த இரட்சிப்பு இல்லாமல் யாரும் மீட்கப் படமுடியாது என்றும், விசுவாசத்தின் அஸ்திபாரத்தை உறுதியாக அமைக்க முடியாது என்றும் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்பு மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் ஆகிய நான்கு நூல்களினால் நம்முடைய தேவன் நம்மை முழுமையாக மீட்டு நம் விசுவாசத்தின் அஸ்திபாரத்தை உறுதியாக அமைத்துள்ளார் என்ற உண்மையை நீங்களும் நானும் மீட்க்கப்பட்டுள்ள விசுவாசமானது விசுவாசிக்கிறது. நாமெல்லோரும் இதை நம்முடைய இருதயங்களில் விசுவாசிக்க வேண்டும் என்று நான் மறுபடியும் ஒரு முறை அறிவுறுத்துகிறேன். கர்த்தர் நமக்கு வாக்களித்தார், மேலும் அவர் நமக்கு வாக்களித்தது போல, இந்த உலகத்திற்கு ஒரு பெண்ணின் வித்தாக வந்தார் (ஆதியாகமம் 3:15). அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்து கொண்டு, சிலுவையின் மீது நம்முடைய எல்லா பாவங்களுக்கான தன்டனையைப் பெற்று, மரணத்தில் இருந்து மறுபடியும் எழுந்து இதன் மூலம் நம்மை சரியாக மீட்டுள்ளார். இந்த சத்தியம் விளக்குவதற்கும் புரிந்து கொள்வதற்கும் சுலபமான சத்தியமாய் இருப்பதால், நாம் இந்த நற்செய்தியை உலகம் முழுவதிலும் எல்லா நாட்களிலும் போதிக்கலாம். உண்மையை இன்னமும் அறியாத பல பாவிகள் இருக்கிறார்கள், இருப்பினும் இந்த சத்தியத்தை அறியாதவர்களை விட கர்த்தருடைய ஆலயத்தில் இருந்தும் கூட விசுவாசிக்காதவர்கள், இன்னமும் அதிக பரிதாபமானவர்கள்.

உங்களுடைய பாவங்களுக்கான மீட்பை நீங்கள் பெற்றிருந்தாலும், உங்களுடைய எண்ணங்கள் இன்னமும் கெட்டதாக இருக்கும். ஆனால் உங்களுடைய இருதயங்கள் தாழ்மையாக மாறியுள்ளது. ஆனால் இப்படி இல்லாத ஏமாற்றுக்காரர்கள் வெளிதோற்றத்தில் தம்மை சாதுவானவர்களாக காட்டிக் கொள்ள முயற்சி செய்தாலும், ஒவ்வொரு நாளும் கர்த்தரையும் எண்ணற்ற மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கும் அளவிற்கு அவர்களுக்கு உள்ளே அவ்வளவு தீமை இருக்கிறது. நீங்களும் நானும் விசுவாசத்தின் அஸ்திபாரத்தை உறுதியாக அமைக்க வேண்டும் நம்முடைய தேவன் நமக்கு இவ்வளவு உறுதியாக அமைத்துள்ள இரட்சிப்பின் மீது அதை விசுவாசித்து நாம் கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும்.

ஆசரிப்புக் கூடார பொருட்களைப் போன்ற உறுதியான விசுவாசம்

இப்படிப்பட்ட காணிக்கைகளை கொண்டு வந்து அவருடைய ஆசரிப்புக் கூடாரத்தை கட்ட வேண்டும் என்று கர்த்தர் நமக்குச் சொன்னார். இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து இதன் மூலம் நம்மை ஆவிக்குரியதாக மீட்டுள்ளார் என்பதை விசுவாசிக்கும் விசுவாசத்தின் மக்களாக நீங்களும் நானும் ஆக வேண்டும். ஆசரிப்புக் கூடாரத்திற்கு பயன் படுத்தப்பட்டுள்ள கட்டிட பொருட்களை போல விசுவாசத்தை பெற்றுக் கொண்டு கர்த்தருக்கு முன்பாக நாம் உறுதியாய் நிற்க வேண்டும். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இந்த வகையான விசுவாசம் உண்மையில் உங்களிடம் இருக்கிறதா? நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி இன்னமும் கர்த்தருடைய ஆலயத்தினால் போதிக்கப்படுகிறது. இது உண்மையான விசுவாசத்தின் அஸ்திபாரமாய் இருப்பதினால், இதை போதுமான அளவு

என்னால் வலியுறுத்த முடியாது.

இந்த உலகத்தினுடைய பல ஆலயங்களும் பிரிவுகளும், இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்து கொண்டார் என்ற சத்தியத்தை இன்னமும் அறியாமலிருக்கின்றன. மேலும் இதற்கு பதிலாக சிலுவையின் மீதான இயேசுவின் இரத்தத்தை மட்டுமே விசுவாசிக்கின்றன. இந்த சூழ்நிலைகளிலும் கூட, நம்முடைய தேவன் இன்னமும் நாம் சத்தியத்தை கண்டுபிடிக்க அனுமதித்துள்ளார். யோர்தான் நதியில் யோவான் ஸ்நானகனால் இயேசு ஞானஸ்நானம் பெற்றதினலேயே அவர் சிலுவையின் மீது ஆணியடித்து அறையப்பட்டார். அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக் கொண்டதால் தான் அவர் சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார்.

இதைப் போல சிலுவையினுடைய இரத்தத்தை மட்டுமே விசுவாசிப்பதின் மூலம் பாவத்திற்கான இரட்சிப்பை பெற்று கொண்டுள்ளதாக கூறுபவர்களின் விசுவாசம் தவறான விசுவாசமாய் இருக்கிறது. அவர்கள் எவ்வளவு பக்தியுள்ளவர்களாக இருந்தாலும் அவ தானாகவே விழுந்து விடும். இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்று எவ்வளவு சத்தமான குரலில் மக்கள் கூட்டத்திற்கு சோர்வில்லாமல் போதித்தாலும், அது பொருட்படுத்தப் படாமல் சிலுவையினுடைய இரத்தத்தை மட்டும் விசுவாசிக்கும் அவர்களுடைய விசுவாசமானது மனந்திரும்புதலின் ஜெபங்களை மட்டுமே ஏறெடுக்கிறது. மேலும் அவர்களுடைய சொந்த பாவத்தின் பிரச்சினையைக் கூட தீர்க்கமுடியாது இது மழை பெய்யும் பொழுதும், காற்று வீசும் பொழுதும், புயல் வரும் பொழுதும், விழுந்து விடக் கூடிய வெடிப்புள்ள அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டுள்ளதாக இருக்கிறது.

இயேசுவை நான் விசுவாசிக்கத் தொடங்கி 10

வருடங்களுக்கு மேல் இயேசுவினுடைய ஞானஸ்நானத்தைப் பற்றி விளக்கமாக கேட்டதில்லை. இருப்பினும் இயேசு அவருடைய சத்தியத்தின் வார்த்தை மூலம் என்னைச் சந்தித்தார். மேலும் நான் நீர் மற்றும் ஆவியினால் மறுபடியும் பிறக்க முடிந்தது. இப்பொழுது உலகம் முழுவதிலும் சத்தியத்தைத் தேடிக் கொண்டு ஆனால் அதை இன்னமும் அடையாத பல மக்கள் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நான் அவர்கள் எல்லோரிடமும் பேச வேண்டும், இதனால் நீர் மற்றும் ஆவியின் சத்தியத்தை அவர்கள் கேட்கக்கூடும். மேலும் அவர்களுடைய இருதயங்களில் இதை விசுவாசிப்பதின் மூலம் அவர்களுடைய பாவங்களுக்கான இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மறுபடியும் பிறப்பதற்கு முன்னால், நீங்களும் கூட மத வாழ்க்கையை வாழ்ந்திருப்பீர்கள். அந்த சமயத்தில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கமாட்டீர்கள். அது மட்டுமல்ல, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியையோ அல்லது இயேசு ஞானஸ்நானம் பெற்ற பொழுது நம்முடைய பாவங்கள் அவருக்குள் செலுத்தப்பட்டன என்பதைப் பற்றியும் நீங்கள் கேள்விப் பட்டிருக்க மாட்டீர்கள்.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்தியம் இருப்பது போலவே அதை தெரிந்துக் கொண்டு விசுவாசிப்பது கிறிஸ்தவர்களுக்கு முக்கியமாய் இருக்கிறது. விசுவாசத்தின் அஸ்திபாரம் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் அமைக்கப்படும் பொழுது தான் நாமெல்லோரும் நம்முடைய விசுவாசத்தில் உறுதியாகவும் பலமாகவும் நிற்க முடியும். நீங்கள் இது வரை இப்படி விசுவாசிக்கவில்லை என்றால் இன்னமும்

தாமதமாகவில்லை, நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இப்பொழுதே இப்படி விசுவாசிக்க வேண்டும். நீங்கள் இப்படி விசுவாசிக்கும் பொழுது மட்டுமே உங்களால் முழுமையாக மீட்கப்படவும் உங்களுடைய அஸ்திபாரத்தை உறுதியாக அமைக்கவும், இந்த அஸ்திபாரத்தின் மீது உங்களுடைய விசுவாசத்தை அமைக்கவும் முடியும்.

கர்த்தருடைய ஆலயத்தில் இருப்பவர்களும் விசுவாசத்தின் அஸ்திபாரத்தை உறுதியாய் அமைக்க வேண்டும்

"இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக் கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப் படுவான்" என்று மத்தேயு 24:40 சொல்லுகிறது. நாமெல்லோரும் ஒரே சத்தியத்தை விசுவாசிக்க வேண்டும் என்று போதித்து, கர்த்தருடைய ஆலயத்தில் ஒன்றாக அதே நற்செய்திக்கு ஊழியம் செய்யும் போது, நம்முள் சிலர் விடப்பட்டு விட்டால் அதை விட எது அதிக வருந்ததக்கதாக இருக்கும்?

கர்த்தருடைய வார்த்தை அறிவுடையதாகவும் பணிவாகவும் இருப்பதால், கட்டாயத்தினால் யார் மீதாவது விசுவாசத்தைத் திணிக்க முடியாது. உங்களுக்கு போதிக்கப்பட்டுள்ள கர்த்தருடைய வார்த்தையை நீங்கள் இப்படி பணிவாய் கேட்கும் பொழுது நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கிறீர்கள் என்ற உண்மையை மனதில் மையப்படுத்தி இதை சரியான மனதுடன் விசுவாசிக்க வேண்டும். மோசே இஸ்ரவேல் மக்களுக்கு என்ன சொன்னான் என்பதை அவர்கள் கேட்ட பொழுது அவர்கள் அதை அவனுடைய சொந்த வார்த்தைகளாக கருதாமல் கர்த்தருடைய வார்த்தையாக கருதினர். அதுபோல கர்த்தரின் வார்த்தை என்ன சொல்லுகிறது என்பதைப் பற்றி உங்களுக்கு சொல்லும் பொழுது கர்த்தருடைய இந்த

வார்த்தைக்கு ஏற்ப நீங்கள் விசுவாசிக்கிறீர்களா இல்லையா என்பதை பரிசோதித்து பார்க்க வேண்டும். நீங்கள் வார்த்தையை அமைதியுடன் கருத வேண்டும். மேலும் அது உங்களுக்கு என்ன சொல்லுகிறதோ அதனை விசுவாசிக்க வேண்டும்.

கர்த்தருடைய வார்த்தையை பற்றிய தம்முடைய சரியான மனநிலைக்காக பெரோயா விசுவாசிகள் வேதாகமத்தில் பாராட்டப் பட்டார்கள். பெரோயாவில் இருக்கும் விசுவாசிகள், *"மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்" (அப்போஸ்தலர் 17:11).* சுருக்கமாக கூறினால், அவர்கள் அவருடைய வார்த்தையை அவர்களுக்கு போதிக்கப்பட்டதைப் போலவே விசுவாசித்தார்கள்.

உண்மையான விசுவாசமானது கர்த்தருடைய வார்த்தையை தேடும் நியாயமான மற்றும் சரியான மனநிலை உடைய இருதயத்தில் இருந்து வருகிறது. உங்கள் விருப்பத்திற்கு எதிராக விசுவாசிக்க கட்டாயப் படுத்துவது ஏதாவது அர்த்தமாகுமா? ஒருவர், வேறொருவரை விசுவாசிக்க கட்டாயப்படுத்துவாரானால் இது உண்மையில் முழுமையாக பயனற்றதாக இருக்கும். ஏனென்றால் இப்படி கட்டாயப்படுத்தப்பட்ட ஒருவரும் அவனுக்கோ/அவளுக்கோ விசுவாசிக்க வேண்டும் என்று சொன்னதை அவசியமாக விசுவாசிக்க மாட்டார்கள். கர்த்தருக்கு முன்பதாக ஒருவர் அவனுடைய/அவளுடைய சுதந்திர விருப்பத்தில் என்ன விசுவாசிக்கிறார் என்பதையே எல்லா பொருட்களும் சார்ந்துள்ளது. அவனுக்கோ/அவளுக்கோ அதே கதை மறுபடியும் மறுபடியும் சொல்லப்பட்டும் கூட, அவர் விசுவாசிக்கவில்லை என்றால் நரகத்தில் முடிவதை தவிர

இந்த நபருக்கு வேறுவழியில்லை.

இதனால், இந்த உலகம் முழுவதும் இருக்கும் எல்லாப் பாவிகளும் நமது பரிதாபத்தை பெறுகின்றார்கள். ஆனால் நாமெல்லோரும் கர்த்தருடைய ஆலயத்தின் ஒரே கூரைக்குள் இருந்தும் கூட அவருடைய வார்த்தையில் இருப்பதைப் போலவே நம்முள் சிலர் விசுவாசிக்க வில்லை என்றால், அவர்கள் இன்னமும் அதிக பரிதாபமானவர்களாய் இருக்கிறார்கள். ஒரே கர்த்தருடைய ஆலயத்தில் நம்முடன் சரீர பூர்வமாக அவர்கள் இருந்தும் கூட நரகத்தில் முடிந்து போகிற நம்மை விட அதிக பரிதாபமானவர்கள் யாராக இருக்க முடியும்?

இயேசுவிற்கு பன்னிரெண்டு சீடர்கள் இருந்தார்கள், அவர்களுள் யூதாஸ் மட்டுமே இயேசுவை மேசியா என்றும் மீட்பரென்றும் விசுவாசிக்கவில்லை. இதனால் யூதாஸ் இயேசுவை எப்பொழுதுமே போதகர் என்று அழைத்தான். பேதுருவும் சில வேளைகளில் இயேசுவை போதகர் என்று தான் அழைத்தான். ஆனால் அவன் இயேசுவை முடிவில் விசுவாசிக்கத் தொடங்கி, "தேவனே, நீர் தான் கிறிஸ்துவும், கர்த்தருடைய மகனுமாய் இருக்கிறீர். நீர் தான் கர்த்தருடைய மைந்தன். என்னுடைய பாவங்களை மறையச் செய்ய வந்த மீட்பர். நீர் தான் மீட்பின் கர்த்தர்." என்று அறிக்கையிட்டான்.

வேறு வார்த்தைகளில் கூறினால், பேதுருவின் விசுவாசம் யூதாஸின் விசுவாசத்தில் இருந்து வேறுப்பட்டிருந்தது. யூதாஸ் இயேசுவைக் காட்டிகொடுத்த பிறகு, தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டான். யூதாஸ் மற்ற பதினொரு சீடர்களிடம் இருந்திருந்தாலும், இறுதியில் இயேசு கிறிஸ்து உண்மையில் யார் என்பதை அடையாளங்கண்டு கொள்ள தவறி, இதனால் நரகத்தில் முடிந்தான். இதற்கு எதிராக பேதுரு அதிக குறைகளையுடைய, பொறுமையில்லாத மனிதனாக இருந்தாலும், இயேசு கிறிஸ்துவை அடையாளம் கண்டு

கொண்டதாலும், அவனுடைய சொந்த மீட்பராக அவரை விசுவாசித்ததாலும் மீட்கப்பட்டான்.

இதைப் போல ஒருவர் சத்தியத்தை அறிந்து, அவனுடைய/அவளுடைய இருதயத்தில் விசுவாசிக்கிறாரா இல்லையா என்பதை பொருத்து இரட்சிப்பு அமைந்திருக்கிறது. அவனோ/அவளோ சத்தியத்தை அறிந்தும் கூட அதை விசுவாசிக்கவில்லை என்றால், அவர்கள் இன்னமும் அதிகமான தண்டனைகளை சந்திப்பார்கள் (லூக்கா 12:48). இதனால் தான் நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் உறுதியாகவும் நேராகவும் இருக்க வேண்டும் என்று கர்த்தர் நமக்கு சொல்லுகிறார்.

நம்முடைய விசுவாசம் எப்படி இருக்கிறது?

நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் இப்பொழுது உறுதியாக்கப்பட்டுள்ளதா? அது உறுதியாக இருக்கிறதா? தேவன் உங்களை இரட்சித்தார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீர் மற்றும் ஆவியின் மூலம் நம்முடைய தேவன் நம்மை இரட்சித்துள்ளார். நம்முடைய பிரிவு மட்டும் போதிக்கும் வேறுப்பட்ட போதனை இதுவல்ல. கர்த்தர் பழைய ஏற்பாட்டில் வாக்குத்தத்தம் செய்ததும், புதிய ஏற்பாட்டில் இயேசு நிறைவேற்றியதுமாய் இது இருக்கிறது. அதாவது இப்படித் தான் கிறிஸ்து நம்மை மீட்டார் என்பதாய் இருக்கிறது.

மனித சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்து அவருடைய ஞானஸ்நானத்தின் (இளநீல நிற நூல்) மூலம் இந்த உலகத்தினுடைய பாவங்களை தன் மீது ஏற்றுக் கொண்டு இந்தப் பாவங்களை சிலுவைக்கு எடுத்துச் சென்று, மரித்து (சிகப்பு நிற நூல்), மரித்தோரிலிருந்து மறுபடியும் எழுந்து, இதன் மூலம் நம்மை மீட்டுள்ள இயேசு தான் ராஜாதி ராஜா (இரத்தாம்பர நூல்). பழைய ஏற்பாட்டில் உள்ளது போல

செய்வார் என்று அவர் வாக்களித்துள்ளார். மேலும் புதிய ஏற்பாட்டில் இந்த சத்தியத்தை நிறை வேற்றியதின் மூலம் உண்மையில் நம்மை மீட்டுள்ளார். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இதைத் தவிர உறுதியான விசுவாசத்தின் அஸ்திபாரத்தை அமைப்பது வேறு எதுவும் இல்லை.

உலகம் முழுவதிலும் பல ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள், இருந்தாலும் அநேகருக்கு அவர்களுடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் மெல்லியதாகவே இருக்கிறது. இப்பொழுது கிடைக்கும் பல கிறிஸ்தவ புத்தகங்களை படிப்பதின் மூலம், மக்களுக்கு சரியான விசுவாசம் இருக்கிறதா இல்லையா என்பதை நாம் கண்டுபிடிக்க முடியும். இந்த புத்தகங்களின் எழுத்தாளர்கள் கிறிஸ்தவ சமுதாயத்தின் தலைவர்களாக இருக்கக்கூடும் மேலும் அவர்களுடைய புத்தகங்களை படிப்பதின் மூலம், அவர்களுக்கு சத்தியத்தில் சரியான ஞானம் இருக்கிறதா, இல்லையா என்று நம்மால் கண்டு பிடிக்க முடியும். அவனுக்கோ/அவளுக்கோ சத்தியத்தைப் பற்றி தெரிந்த அளவிற்கு இந்த தலைவர்களில் ஒருவருக்கு தெரியாமல் இருந்தாலோ அல்லது விசுவாசிக்காமல் இருந்தாலோ, இந்த தலைவரை பின்பற்றுபவர்கள் எல்லோரும் நரகத்திற்கு தள்ளப்படுவார்கள். பல ஆயிர மக்களில் ஒருவர் என்று குறைந்த அளவு மக்களுக்கே சத்தியத்தைப் பற்றி தெரியும் என்பது தான் சோகமான உண்மை. இதனால் சத்தியத்தை அறிந்த சிலர் நற்செய்தியை முழு உலகம் முழுவதிலும் உண்மையாய் பரப்ப வேண்டும்.

கர்த்தர் நம் மூலம் செயலாற்றுகிறார், நீங்களும் நானும் நற்செய்தியை போதிப்பதை தடுக்க முடியாது. உலகம் முழுவதிலும் இந்த நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை பிரசங்கிக்காமல் இருப்பது கர்த்தருக்கு முன் பெரிய பாவம் செய்வதற்கு ஒப்பாயிருக்கிறது. உண்மையில் நாம் இந்த வேலையை விசுவாசத்துடன் தாங்கி பின் தொடர வில்லை

என்றால் கர்த்தருக்கு முன்பாக பெரிய பாவம் செய்துக் கொண்டிருக்கிறோம். இதைத் தடுக்க முடியும் என்று நமக்குத் தெரிந்தாலும் மக்களை நரகத்திற்கு அனுப்பும் பாவம் இது தான். சத்தியத்தை அறிந்த நாம், நம்முடைய வாயை மூடி வைத்ததால், மக்களை அவர்களுடைய அறியாமையால் நரகத்தில் அனுப்பிய மன்னிக்க முடியாத பாவமாய் இது இருக்கிறது.

நமக்கு கொடுக்கப்பட்ட வேலையை நாம் நிறைவேற்றவில்லை என்றால், இந்த மக்கள் நம்மை எதிர்பார்கள், ஏனென்றால் இது நம்முடைய அவசியமான வேலையாய் இருக்கிறது. *"காவற்காரன் பட்டயம் வருவதைக் கண்டும், அவன் எக்காளம் ஊதாமலும் ஜனங்கள் எச்சரிக்கப்படாமலும், பட்டயம் வந்து அவர்களில் யாதொருவனை வாரிக்கொள்ளுகிறது உண்டானால், அவன் தன் அக்கிரமத்திலே வாரிக்கொள்ளப் பட்டான்; ஆனாலும் அவன் இரத்தப்பழியைக் காவற்காரன் கையிலே கேட்பேன்" (எசேக்கியேல் 33:6),* என்று வேதாகமம் நம்மை எச்சரிக்கிறது. முதலில் அறிந்து முதலில் விசுவாசித்த நாம் இந்த காவல்காரனின் வேலையைச் செய்ய வேண்டும்.

இந்த நற்செய்தியை நமக்கு கொடுத்ததற்காகவும் இந்த சத்தியத்தை நாம் அறிந்து கொள்ள உதவியதற்காகவும் தேவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இந்த உலகத்தில் இந்த சத்தியத்தை அறிந்து, இந்த நற்செய்தியை விசுவாசிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலராக நாம் இருக்கிறோம் என்பதை நான் உணரும்பொழுது, நான் அவருக்கு இன்னமும் அதிகமாக நன்றி செலுத்துகிறேன். இந்த உலகம் முழுவதிலும் பல போதகர்களுக்கும் பாமர விசுவாசிகளுக்கும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை நாங்கள் போதித்துள்ளோம். ஆனால் இந்த நற்செய்தியை முன்பு உண்மையில் தெரிந்து கொண்டு விசுவாசித்த யாரும் இல்லை என்ற உண்மையை ஒவ்வொரு நாளும் நாங்கள் உறுதி செய்து கொண்டோம். எங்கள் மூலம்,

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியினுடைய சத்தியத்தின் போதகர்கள், உலகம் முழுவதிலும் தோன்றி கொண்டிருக்கிறார்கள். எங்களைப் போல அவர்களும் கூட விசுவாசித்தின் உறுதியான அஸ்திபாரத்தை உடையவர்களாக இருந்து, இந்த உறுதியான விசுவாசத்தை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

நற்செய்தியை பரப்பக்கூடிய இது போன்ற மக்கள் அநேகர் இருந்தால், நாங்கள் சற்று எளிதாக சுவாசித்து, நற்செய்தியைப் போதிப்பதிலிருந்து சற்று ஓய்வு எடுக்க முடியும். ஆனால், கவலைப்படும்படி இந்த உலகத்தில் இந்த விசுவாசத்தை தெரிந்து விசுவாசிக்கும் அநேக மக்கள் இன்னமும் இல்லை. இந்த உலகத்தினுடைய வரலாற்றில், சீர்திருத்தத்தின் சாதனைகளை பலர் அதிகமாக மதிப்பிட்டுள்ளார்கள். நாம் இதை விளக்கமாக ஆராயும் பொழுது சீர்த்திருத்தத்தின் பொழுது வேதாகம அஸ்திபாரத்தினுடைய முதல் இலக்கை சீர்த்திருத்தவாதிகள் மாற்றி வைத்திருந்தார்கள் என்பதை நாம் கண்டு பிடிக்க முடியும். மற்றும் அதை பின் தொடர்ந்த எல்லா பொருளுமே மாற்றி வைக்கப்பட்டிருந்தது. இந்த தவறுகள் திருத்தப்பட்டது கருதப்படாமல் இருந்தும், முதலாம் இலக்கு இன்னமும் மாற்றி வைக்கப்பட்டிருந்தும், இது இன்னமும் குறைவுடையதாகவே இருக்கிறது. இதைப் போல கிறிஸ்தவத்தின் வரலாறும் மாற்றி எழுதப்பட வேண்டும்.

நீங்கள் எல்லோரும் உங்களுடைய உறுதியான விசுவாசத்தின் அஸ்திபாரத்தினால் கர்த்தருக்கு முன்பாக நிற்பீர்கள் என்றும், இந்த விசுவாசத்தின் அஸ்திபாரத்தின் மேல் உண்மையான நற்செய்தியை தாங்கும் நோக்கத்திற்காக நீங்கள் உங்கள் வாழ்க்கையை வாழ்வீர்கள் என்றும் நான் விசுவாசித்து ஜெபிக்கிறேன். நீங்கள் நற்செய்திக்காக வாழும் பொழுது, உங்களுடைய இருதயங்கள் இயற்கையாக சந்தோஷத்தால் நிரப்பப்படும்.

ஒருவர் நர்செய்திக்காக வாழும் பொழுது அவனுடைய/அவளுடைய இருதயம் ஆவிக்குரிய ஒன்றாக மாற்றப்படுகிறது. மேலும் உங்களுடைய இருதயங்களில் பரிசுத்த ஆவியானவர் நிரம்பி அவற்றில் வேலையும் செய்யும் பொழுது, அவை எல்லாம் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும்.

ஆனால், நீங்கள் நற்செய்திக்காக வாழாமல், பாவத்தின் மீட்பை பெற்றுக் கொண்டும், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை அறிந்துக் கொண்டும், உங்களுடைய மாம்சங்களின் வாஞ்சைகளை மட்டும் ஏற்றுக்கொள்வீர்களானால் பின்பு நீங்கள் பொருளற்ற, வெற்று வாழ்க்கையில் முடித்துக் கொள்வீர்கள்.

இந்த விலைமதிப்பற்ற நற்செய்தியையும், நம்முடைய மீட்பை இலவசமாக நமக்கு கொடுத்ததற்காகவும். கர்த்தருக்கு நான் நன்றி செலுத்துகிறேன். நீங்கள் எல்லோரும் உங்களுடைய விசுவாசத்தை மறுபடியும் ஒரு முறை ஆராய்ந்து, இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் சரியான இரட்சிப்பின் வரத்தைப் பெற்றுக் கொள்வீர்கள் என்பது என்னுடைய ஜெபமும் விசுவாசமுமாயிருக்கிறது. ✉

பிரசங்கம்

8

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.



ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும்,
டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆசரிப்புக் கூடார வாசலின் நிறம்

< யாத்திராகமம் 27:9-19 >

"வாசஸ்தலத்துக்குப் பிராகாரத்தையும் உண்டுபண்ணுவாயாக; தெற்கே தென்திசைக்கு எதிரான பிராகாரத்துக்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலால் செய்யப்பட்ட நூறுமுழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும். அவைகளுக்கு வெண்கலத்தினாலே இருபது தூண்களும், இருபது பாதங்களும் இருக்கவேண்டும்; தூண்களின் கொக்கிகளும் அவைகளின் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும். அப்படியே வடபக்கத்தின் நீளத்திற்கும் நூறுமுழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும்; அவைகளுக்கு இருபது தூண்களும், அவைகளுக்கு இருபது பாதங்களும் வெண்கலமாயிருக்க வேண்டும்; தூண்களின் கொக்கிகளும் பூண்களும் வெள்ளியினால் செய்யப்படவேண்டும். பிராகாரத்தின் மேற்பக்கமான அகலத்திற்கு ஐம்பது முழ நீளமான தொங்குதிரைகள் இருக்கவேண்டும்; அவைகளுக்குப் பத்துத் தூண்களும், அவைகளுக்குப் பத்துப் பாதங்களும் இருக்கவேண்டும். சூரியன் உதிக்கிற திசையாகிய கீழ்ப்பக்கத்தின் பிராகாரம் ஐம்பதுமுழ அகலமாயிருக்கவேண்டும். அங்கே ஒரு புறத்திற்குப் பதினைந்து முழ நீளமான தொங்கு திரைகளும், அவைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும். மறுபுறத்துக்குப் பதினைந்து முழ நீளமான தொங்கு

திரைகளும், அவைகளுக்கு மூன்று தூண்களும், அவைகளுக்கு மூன்று பாதங்களும் இருக்கவேண்டும். பிராகாரத்தின் வாசலுக்கு இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிகப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல்வேலையாய்ச் செய்யப்பட்ட இருபதுமுழ நீளமான ஒரு தொங்குதிரையும் அதற்கு நாலு தூண்களும் அவைகளுக்கு நாலு பாதங்களும் இருக்கவேண்டும். சுற்றுப் பிராகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளியினால் பூண் கட்டப்பட்டிருக்கவேண்டும்; அவைகளின் கொக்கிகள் வெள்ளியினாலும் அவைகளின் பாதங்கள் வெண்கலத்தினாலும் செய்யப்பட்டிருக்க வேண்டும். பிராகாரத்தின் நீளம் நூறுமுழமும், இருபுறத்து அகலம் ஐம்பது ஐம்பது முழமும், உயரம் ஐந்து முழமுமாயிருப்பதாக; அதின் தொங்கல்கள் திரித்த மெல்லிய பஞ்சுநூலினால் செய்யப்பட்டு, அதின் தூண்களின் பாதங்கள் வெண்கலமாயிருக்க வேண்டும். வாசஸ்தலத்துக்கடுத்த சகல பணிவிடைக்குத் தேவையான எல்லாப் பணிமுட்டுகளும், அதின் எல்லா முளைகளும், பிராகாரத்தின் எல்லா முளைகளும் வெண்கலமாயிருக்கவேண்டும்."

வழக்கமான கிறிஸ்தவர்களின் விசுவாசித்திற்கும் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கும் இடையில் தெளிவான வித்தியாசங்கள் இருக்கின்றன. மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள், கர்த்தர் நம்முடைய எல்லாப் பாவங்களையும் அகற்றிவிட்டார் என்பதை தெரிந்து கொண்டு விசுவாசிக்கிறார்கள். வழக்கமான கிறிஸ்தவர்கள், ஒருவருடைய சொந்த எண்ணங்களின்

அடிப்படையில், மத வழக்கங்களின் விஷயமாக மட்டும் இயேசுவை விசுவாசிக்கிறார்கள். இருப்பினும், கர்த்தரை ஒரு மத பொருளாக மட்டும் விசுவாசிப்பவர்கள் அதிகமாக வெற்றியடைகிறார்கள். இந்த தவறான போதனைகளின் வெற்றிகளைப் பார்த்து உண்மையான சத்தியத்தை போதிப்பவர்களும் கூட மனமுடைந்து போகும் அளவிற்கு இவர்கள் வெற்றியடைகிறார்கள். இப்படிப்பட்ட தவறான மத ஏமாற்றம் மற்றும் வஞ்சகத்திற்கு கிறிஸ்தவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை மக்கள் தெளிவாக தெரிந்து கொண்டதால் இவர்கள் மனம் உடைந்து போனார்கள்.

நானும் கூட இதனால் சில காலம் மனம் உடைந்து போயிருந்தேன். ஏனென்றால் சத்தியத்தை சந்தித்ததால் நான் மறுபடியும் பிறந்தேன், மேலும் கர்த்தருடைய வேலைக்காக என்னை ஒரு கருவியாக பயன்படுத்தியதற்காக நான் அவருக்கு நன்றிச் செலுத்துகிறேன். கர்த்தருடைய வார்த்தை தொலைவாகவும், பரவலாகவும் பரவுவதற்கு என் இருதயம் விரும்பியதால், பல மக்கள் பொய்களால் தங்களுடைய மத வாழ்க்கையை ஏமாற்றி வாழ்வதைப் பார்த்த பொழுது நான் ஆழ்ந்த சோகம் அடைவதை என்னால் தடுக்கமுடியவில்லை.

இருப்பினும் பரிசுத்த ஆவியானவர் என்னுடைய இருதயத்தில் இருக்கிறார் என்பதும், என்னுடைய தோல்விகளை பொருட்படுத்தாது என்னுடைய இருதயத்தில் பாவம் இல்லை என்பதும் தெளிவாக இருக்கிறது. இதனால் என்னுடைய இருதயத்தில் நன்றியுணர்ச்சி காணப்படுகிறது, மேலும் நான் விசுவாசிக்கும் நற்செய்தியை குறித்து எனக்கு எந்த வெட்கமும் இல்லை. உலகம் முழுவதிலும் உள்ள மக்களுக்கு இந்த நற்செய்தியை நான் போதிக்கும் பொழுது, இந்த சத்தியத்தின் வார்த்தையை அவர்கள் கேட்டு விசுவாசிக்கும் பொழுது, அவர்களுக்கும் கூட, கர்த்தருக்கு முன்பாகவும் மக்களுக்கு முன்பாகவும் எந்த வெட்கமும்

இருக்காது. ஏனென்றால் இந்த சத்தியத்தை அவர்கள் விசுவாசிக்கும் பொழுது, அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய பிள்ளைகளாகிறார்கள்.

நீங்களும் விசுவாசத்தின் மூலம் இதே ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். நீங்கள் வேத பாடங்களை படிக்காமல் இருந்தாலும் கூட இந்த நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பதின் மூலம் உங்கடைய பாவங்களுக்கான மன்னிப்பை பெற்றுக் கொள்ளவும், கர்த்தருடைய பிள்ளைகளாகவும், உங்களுடைய இருதயங்களுக்குள் பரிசுத்த ஆவியானவரையும் பெற்றுக் கொள்ளவும் முடியும். மேலும் பரிசுத்த ஆவியானவரின் மூலம், கர்த்தருடைய வேலையாட்களுடன் நீங்கள் நடக்கவும் முடியும். இது தான் தெளிவான சத்தியம் மற்றும் இப்படி விசுவாசிப்பது தான் உண்மையான சத்தியம்.

பொய்களால் நிரப்பப்பட்ட உலகத்தில் நான் வாழ்ந்து கொண்டிருந்தாலும், என்னுடைய இருதயத்தில் இந்த உண்மையான சத்தியம் இருப்பதால், இந்த தருணம் வரையிலும் நற்செய்தியின் சத்தியத்தை என்னால் போதிக்க முடிந்தது. ஆசரிப்புக் கூடாரத்தின் தலைப்பைப் பற்றிய வார்த்தையை நான் போதிக்க தொடங்கியது முதல், பொய் பேசுபவர்களின் திட்டங்களைப் பற்றி, அதிக தெளிவாக நான் தெரிந்து கொண்டேன். மேலும் இதன் மூலம் பொய்யிலிருந்து உண்மையை நான் கண்டுபிடித்தேன். ஆசரிப்புக் கூடார சத்தியத்தை நான் அறிவித்து கொண்டிருப்பதற்கு இது தான் காரணம் ஆசரிப்புக் கூடாரத்தின் மூலம் உண்மையான சத்தியத்தை பரப்புவதின் மூலம் பொய்யையும் சத்தியத்தையும் மக்களால் கண்டுப்பிடிக்க முடிகிறது என்பது எனக்கு அதிக சந்தோஷத்தை கொடுக்கிறது.

ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றிய இந்த புத்தகத்தை நான் எழுதும் பொழுது இதனுடைய கலைச் சொற்களை கையாள

முயற்சி செய்வது தான் எனக்கு மிகவும் கடினமான வேலையாக இருந்தது. இந்த காரியத்திற்காக உண்மையான தாள்களை பார்ப்பதற்காகவும், ஆசரிப்புக் கூடாரத்துடன் தொடர்புடைய கடினமான வார்த்தைகள் எந்த தவறான தகவல்களையும் தெரிவிக்ககூடாது என்பதை உறுதி செய்வதற்காகவும், இது போன்ற வாசகர்களால் தவறாக புரிந்து கொள்ளப்பட்ட கருத்துக்களுக்காகவும் அதிக அளவு கவனத்தை நான் செலவளித்தேன். ஆசரிப்புக் கூடாரத்தை பற்றிய என்னுடைய சொந்த புரிந்து கொள்ளுதல் மற்றும் ஞானத்தை பொருட்படுத்தாது, ஆசரிப்புக் கூடார மாதிரிகள் மற்றும் அதனுள்ளே மறைந்துள்ள ஆவிக்குரிய அர்த்தங்கள், குறைந்த ஞானம் உடையவர்களுக்கு விளக்க வேண்டும் என்பதற்கு ஆசரிப்புக் கூடார முக்கியதுவத்தைப் பற்றி சுருக்கமாகவும் கண்டிப்பாகவும் எப்படி நான் விளக்க முடியும் என்பதில் உறுதியில்லாததால், இந்த காரியத்தைக் குறித்து நான் எவ்வளவோ கவலைப்பட்டேன்.

இதை குறித்து முதலில் மக்கள் கேட்டவுடனே புரிந்து கொண்டு விசுவாசித்தால் நன்றாக இருக்கும். ரோம் ஒரே நாளில் கட்டப்படவில்லை, இதை போல எல்லா விஷயங்களிலும் சத்தியத்தையும் உண்மையான விசுவாசத்தை பரப்புவதும் ஒரே நாளில் முடிந்து விடாது. ஆனால், சிறிது சிறிதாக நம் இருதயத்தில் ஆழமாக தோன்றும் பொழுது இது மெதுவாக சாதிக்கப்படுகிறது. இதனால் தொடக்கத்திலிருந்து மிக ஆழமாக தோன்றும் இது மெதுவாக சாதிக்கப்படுகிறது. இதனால் தொடக்கத்திலிருந்து மிக ஆழமாக தோண்டுவதைப் பற்றி நான் குறிப்பாக நான் கருத வேண்டியிருந்தது. ஏனென்றால் எல்லோராலும் இதைப் புரிந்து கொள்ள முடியாது. இந்த புத்தகத்தை எழுதும் பொழுது நான் சந்தித்த ஒரு மிகவும் கடினமான சவால்களில் ஒன்றாக இருந்தது இது தான்.

இருப்பினும் கர்த்தருடைய ஆவியானவரினால் அதிக

பிரச்சனைகள் இல்லாமல் இந்த புத்தகம் கடைசியில் வெளி வந்தது. இதற்காக நான் மிகவும் சந்தோஷமும் படுபவனாகவும் நன்றியுள்ளவனாகவும் உள்ளேன் என்பதை சொல்ல வேண்டியது இல்லை. இந்த புத்தகத்தின் மூலமும் பொய்யிலிருந்து சத்தியத்தைக் கண்டுபிடித்ததன் மூலமும், இன்றைய நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியினுடைய விசுவாசிகள் எப்படி விலைமதிப்பற்றதாகவும் தெளிவாகவும் சந்தேகத்திற்கிடமில்லாமலும் மீட்கப்பட்டுள்ளார்கள் மற்றும் இதற்கு எதிராக இந்த நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் விசுவாசிகளை தவிர மற்ற நற்செய்திகளின் விசுவாசிகளுடைய மதம் மற்றும் உபயோகமில்லாத விசுவாசம் இருக்கிறது என்பதை நான் வெளிப்படுத்துவேன். எல்லாவற்றிற்கும் மேலாக என்னுடைய பாவங்களிலிருந்து என்னை மீட்டுக் கொண்டதற்காக நான் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இயேசுவை விசுவாசிப்பதாக கூறி தாங்கள் பாவமற்றவர்கள் என்று நிபந்தனையில்லாமல் கூறும் இப்படிப்பட்ட சுவிசேஷகர்கள் இன்று அநேகம் பேர் இருக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்கள் எல்லா வகையான கண்டுபிடிக்க முடியாத மாயையான விசுவாசத்தால் நிரப்பப்பட்டிருக்கின்றன. ஆசரிப்புக் கூடாரத்தை நான் படிக்கும் பொழுது அவர்களுடைய விசுவாசம் எப்படி உபயோகமற்றதாகவும், தவறானதாகவும் இருக்கிறது என்பதை நான் உணரத் தொடங்கினேன். மேலும் இந்த உணருதலால் என்னுடைய மீட்பிற்காக என்னுடைய முழு இருதயத்துடன் இன்னமும் அதிகமாக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாசலும் வேலியும்

முக்கியமான வசனத்திலிருந்து ஆசரிப்புக் கூடார செவ்வக பிரகாரத்தினுடைய நீளம் 45 மீட்டராகவும் மற்றும் அதனுடைய அகலம் 22.5 மீட்டராகவும் (75 அடி) இருந்தது. ஒரு முலம் என்பது 0.45 மீட்டருக்கு (1.5 அடிக்கு) சமமான நீளத்தின் அளவாய் இருப்பதால்; ஆசரிப்புக் கூடார பிரகாரம் எல்லா திசையிலும் 60 தூண்களால் சூழப்பட்டிருந்தது என்பதும், ஒவ்வொரு தூணின் உயரமும் 2.25 மீட்டராகவும் (7.5 அடி), அதனுடைய கிழக்கு பகுதியில் 9 மீட்டர் அகலம் கொண்ட வாசல் இருந்தது. மேலும் 135 மீட்டர்களில் மீதி இருந்த முழு வேலி கிட்டதட்ட 126 மீட்டர்கள் நீளமும் வெள்ளை மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலின் தொங்கல்களால் சூழப்பட்டிருந்தது என்ற உண்மையை நாம் கண்டுப்பிடிக்க முடியும்.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாசல் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது. மேலும் அது 9 மீட்டர் அகலமும் 2.25 மீட்டர் (7.5 அடி) உயரமும் இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறினால் இந்த நான்கு வித்தியாசமான நூல்களும் 9 மீட்டரின் (30 அடி) கீழ் 2.25 மீட்டர் (7.5 அடி) அளவுடைய திரையை செய்வதற்காக நெய்யப்பட்டது. இளநீல நிற நூல் முழு நீளத்திற்கும் முதலில் நெய்யப்பட்டது, பிறகு இரத்தாம்பர நிற நூல் 2.25 மீட்டர் உயரத்திற்கு நெய்யப்பட்டது. பிறகு சிகப்பு நிற நூல் 2.25 மீட்டர் (7.5) மீட்டருக்கு நெயப்பட்டது. வெள்ளை நூலின் நெய்தலைத் தொடர்ந்து 2.25 மீட்டர் (7.5 அடி) உயரம் இருந்த பாயை போல நெய்யப்பட்ட தடியான மற்றும் உறுதியான திரை செய்யப்பட்டது. இப்படியாக 2.25 மீட்டர் (7.5 அடி) உயரமும் 9 மீட்டர் (30 அடி) அகலமும் இருக்க கூடிய திரை நெய்யப்பட்டு ஆசரிப்புக் கூடார கிழக்கு பகுதியில்

இருக்கும் பிரகாரத்தினுடைய நான்கு தூண்களின் மேலே போடப்பட்டது.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்திற்குள் அப்படியே நுழைவதற்கு, பாயை போன்று உள்ள திரையை மக்கள் மேலே இழுக்க வேண்டும். மற்ற வாயில்களை போல இல்லாமல் ஆசரிப்புக் கூடார வாயில் மரக்கட்டையால் செய்யப்பட்டது அல்ல, அதனுடைய தூண்கள் மரத்தால் செய்யப்பட்டிருந்தாலும் இந்த தூண்களின் மேலே தொங்க விடப்பட்டிருந்த வாசல், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்ட திரையாக இருந்தது.

உங்கள் சுற்றுலாவின் பொழுது சர்க்கஸ் காட்சிக்கு நீங்கள் சென்றிருக்கலாம். மேலும் சர்க்கஸ் கூடாரம் எப்படி கட்டப்படுகிறது என்பதை பார்த்திருக்கலாம். வழக்கமாக அதனுடைய கதவுகள் கெட்டியான துணியால் செய்யப்பட்டிருக்கும். ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில், இந்த வகை கதவுக்கு ஒப்பாயிருக்கிறது. இது கெட்டியான துணியால் செய்யப்பட்டிருந்ததால், இது கடுமையான கதவுகளில் இருப்பது போல இழுப்பதாலோ, தள்ளுவதாலோ திறக்கப்படவில்லை. ஆனால் இதற்கு பதிலாக நுழைவதற்காக இது மேலே இழுக்கப்பட்டது. இது ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுக்கு மட்டும் இருந்த நிலை அல்ல, ஆனால் பரிசுத்த ஸ்தலத்தினுடைய வாயிலுக்கும் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் இருக்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் இதே நிலை தான்.

ஆசரிப்புக் கூடார பிரகாரம், பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலம் ஆகியவற்றின் மூன்று வாயில்களையும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் செய்ய வேண்டும் என்று இஸ்ரவேலர்களுக்கு கர்த்தர் ஏன் சொன்னார்? இந்த கட்டளைக்கு பின்னால் கர்த்தருடைய விருப்பம் என்னவாக

இருந்தது என்று நாம் கண்டு பிடிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டினுடைய எல்லா நல்ல விஷயங்களும் வரவிருக்கும் ஒரு உண்மையான பொருள் அதாவது இயேசு கிறிஸ்துவின் நிழலாக இருக்கிறது என்று எபிரெயர் புத்தகம் நமக்கு சொல்லுகிறது (எபிரெயர் 10:1).

இதைப் போல, ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாசல் இயேசு கிறிஸ்துவினுடைய ஞானஸ்நானத்திற்கும், சிலுவையின் மீதான அவருடைய மரணத்திற்கும், மற்றும் அவருடைய சொந்த அடையாளத்திற்கும் சிக்கலானதாக சம்மந்தப்பட்டுள்ளது. இதைப் போல, புதிய ஏற்பாட்டைப் பார்ப்பதின் மூலம் இந்த புரிந்து கொள்ளுதலை நாம் அடைய முடியும், உண்மையான பொருளை பார்க்காமல் அதனுடைய நிழலை கண்டு கொள்வது கடினம். ஆனால் அது என்ன அல்லது யார் நிழலை அளிக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கும் பொழுது அது என்ன என்பதை நாம் உணரமுடியும். பழைய ஏற்பாட்டில் இருந்து கர்த்தர் உருவாக்கிய பாவிகளுடைய மீட்பர் யார் என்பதை நாமெல்லோரும் உணரவேண்டும். ஆசரிப்புக் கூடார உண்மையான பொருளாக அவரை தெரிந்துக் கொண்டு, அவருடைய செயல் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை மீட்டுள்ளது என்பதை விசுவாசிக்க வேண்டும்.

பின்பு ஆசரிப்புக் கூடார உண்மையான பொருள் யார், அது பாவிகளுடைய மீட்பராக ஆன ஒருவரா? அது இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாருமில்லை. நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு எப்படி வந்தார் மேலும் நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து எப்படி இரட்சித்துள்ளார் என்பதை நாம் ஆராயும் பொழுது அவர் பாவிகளை இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் மூலம் இரட்சித்துள்ளார் என்ற உறுதியான சத்தியத்தை நம்மால் கண்டு பிடிக்க முடியும்.

இயேசுவினுடைய பாவிகளின் மீட்பை புரிந்து

கொள்வதில் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலில் தெரிவிக்கப்பட்டுள்ள சத்தியத்தை தெரிந்துக் கொண்டு விசுவாசிப்பது மிகவும் முக்கியம். ஆசரிப்புக் கூடாரத்திற்குள் ஆராய்ந்து பார்க்கும்பொழுது அதனுடைய பிரகாரத்தினுடைய வாயில் நான்கு நூல்களால் செய்யப்பட்டிருந்தது என்பது தான் நாம் உணரவேண்டிய முதல் விஷயம். மேலும் இந்த வாயிலுடைய மர்மத்தை நாம் தீர்க்கும்பொழுது தான், இயேசு கிறிஸ்துவினுடைய எல்லா வேலைகளையும் நாம் உறுதியாக புரிந்து கொள்ள முடியும். இந்த நான்கு நூல்களால் நெய்யப்பட்ட திரை வாயிலை பார்த்து இயேசுவை எப்படி நாம் தெரிந்துக் கொண்டு விசுவாசிக்க வேண்டும் என்றும், எந்த வகையான விசுவாசம், தவறான விசுவாசம் என்பதையும் நாம் தெளிவாக புரிந்து கொள்ளமுடியும்.

ஆசரிப்புக் கூடார வெளி பிரகாரம் செம்மறியாட்டு மந்தையைப் பற்றி நமக்கு ஞாபகப்படுத்துகிறது. நம்முடைய மேசியாவாகிய இயேசு கர்த்தருடைய ஆட்டு மந்தையின் கதவாய் இருக்கிறார். மேலும் நல்ல மேய்ப்பராகவும் ஆகியுள்ளார் (யோவான் 10:1-5). பிரகாரத்தைச் சுற்றியுள்ள தூண்களைப் பற்றி நாம் நினைக்கும் பொழுது, அவருடைய ஆடுகளாகிய மறுபடியும் பிறந்த பரிசுத்தவான்களின் கதவாகவும், நல்ல மேய்ப்பராகவும் ஆகியுள்ள மேசியாவை அது நமக்கு ஞாபகப்படுத்துகிறது.

மேய்ப்பரானவர் அவருடைய ஆடுகளை பாதுகாப்பதற்காக ஆட்டு மந்தையைச் சுற்றிலும் மரக்கட்டைகளை நட்டு, அங்கு ஒரு கதவைச் செய்து இந்த கதவு வழியாக அவர் அவருடைய ஆடுகளை பாதுகாக்கிறார். இந்த கதவு வழியாக மேய்ப்பரானவர் அவருடைய ஆடுகளுடன் நெருங்கிய ஐக்கியம் வைத்து அவற்றைப் பாதுகாக்கிறார். அவருடைய ஆடுகளாய் இல்லாத எல்லோரும் இந்த கதவின் வழியாக உள்ளே

நுழைவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. மேய்ப்பர் ஆடுகளுக்கும் ஓநாய்களுக்கும் உள்ள வித்தியாசத்தை கண்டுபிடிக்கிறார். இதனால்தான் ஆடுகளுக்கு மேய்ப்பர் தேவை.

இருப்பினும், மேய்ப்பரால் நடத்தப்படுவதை மறுக்கும் சில ஆடுகள் இந்த ஆடுகளுக்கு மத்தியில் இருப்பதற்கான சாத்தியம் இருக்கிறது. மரணத்தின் வழி வஞ்சகமானதாகவும் ஆபத்தான ஒன்றாகவும் இருக்கும் பொழுது, அது அழகாக இருக்கிறது என்றும், நல்ல வழி என்றும் நினைத்து கொண்டு இப்படிப்பட்ட சில ஆடுகள் மரனத்தின் வழிக்குள் நுழையலாம். ஏனென்றால் அவை மேய்ப்பரின் குரலுக்கு செவி கொடுக்கவில்லை. மேலும் அவரால் நடத்தப்படுவதற்கு இந்த ஆடுகள் மறுத்து விட்டன. மேய்ப்பரால் நன்கு போஷிக்கப்பட்டும், மதிக்கப்பட்டும் தங்களுடைய வாழ்க்கையை வாழலாம். மேலும் அவரால் அவர்களுடைய வாழ்க்கையை அழகாகக் வாழலாம். நம்முடைய மேசியாவாகிய இயேசு கிறிஸ்து தான் நம்முடைய மேய்ப்பர்.

ஆசரிப்புக் கூடார வாயிலுடைய நான்கு நிறங்களையும் இயேசு கிறிஸ்து நமக்கு காண்பித்தார்

ஆசரிப்புக் கூடார வாயிலாக போடப்பட்டிருந்த திரை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது. நான்கு வித்தியாசமான நிறங்களால் ஆன இந்த நூல் ஆசரிப்புக் கூடார வாயில் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டது. மேசியா இந்த உலகத்திற்கு வந்து இழந்த ஆடுகளை இரட்சிப்பதற்கு நிறைவேற்ற வேண்டியதை -அதாவது உலகம் முழுவதும் உள்ள

ஆவிக்குரிய இஸ்ரவேலர்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்பது மற்றும் அவர்களை கர்த்தருடைய பாவமற்ற மக்களாக மாற்றுவதுமாகிய - நான்கு ஊழியங்களை இவை தெரிவித்தன.

அவருடைய நான்கு ஊழியங்களின் மூலம் நம்மிடத்திற்கு வந்த மேசியா யார் என்பதை நாம் தெரிந்து கொண்டால், பிறகு இந்த விசுவாசத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நாம் கழுவப்பட்டு உள்ளோம். நம்முடைய எஞ்சிய வாழ்க்கையை நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை போதிப்பதற்காக அர்பணித்துள்ளோம். மற்றும் இந்த விசுவாசத்தின் மூலம் பரலோகத்திற்குள் நுழைவோம் என்பது தெளிவான சத்தியமாய் இருக்கிறது. இதனால் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் மூலம் மேசியா நம்மிடத்திற்கு வந்து நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை இரட்சித்துள்ளார் என்ற சத்தியத்தின் வார்த்தையை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

மேசியாவினுடைய இந்த நான்கு ஊழியங்களில் விசுவாசிப்பதின் மூலம் உங்களுடைய பாவங்களுக்கான மீட்பை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டுமா? பின்பு நாம் ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி கற்றுக் கொள்வோம். இந்த நான்கு ஊழியங்களைப் பற்றி தெரிந்தவர்கள் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்பு நூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப் பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப் பட்ட பாவத்தின் மீட்பை பெற்றுக் கொள்வதின் மூலம் நீதிமான்கள் ஆவார்கள்.

இஸ்ரவேல் மக்கள், நான்கு வித்தியாசமான நிறங்களால் ஆன நூல்களால் நெய்யப்பட்ட ஆசரிப்புக் கூடார வாயிலைப் பார்த்து மேசியா எதிர்காலத்தில் வந்து இந்த நான்கு ஊழியங்களையும் நிறைவேற்றுவார் என்பதை விசுவாசிக்க வேண்டியிருந்தது.

எல்லாப் பாவிகளும் விசுவாசிக்க வேண்டிய சத்தியம்

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் தொங்கல்களை நாம் பார்த்திருந்தால், கர்த்தர் எப்படி பரிசுத்தமாய் இருக்கிறார் என்பதை உணர்ந்து, மீட்பருக்கான நம்முடைய தேவையை அடையாளம் கண்டிருப்போம். கர்த்தருடைய பரிசுத்தத்தைப் பற்றி தெரிந்து கொண்ட எல்லோரும், கர்த்தாவே என்னுடைய பாவங்களுக்காக நான் நரகத்திற்கு தள்ளப்பட உள்ளேன் என்பதை நான் உணர்ந்து கொள்கிறேன், ஏனென்றால் நான் பாவகுவியலாக இருக்கிறேன் என்று சொல்லி ஒப்புக் கொள்வதை தடுக்க முடியாது. பிரகாரத்தினுடைய தூண்களின் மேலே தொங்கி கொண்டிருக்கும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலைப் பார்க்கும் பொழுது, அதனுடைய சுத்தமும் உயர்வும் அதிகமாக இருக்க கூடும் என்பதால் மக்கள் அவர்களுடைய இருதயங்களில் காணப்படும் பாவங்களை அடையாளம் கண்டு கொண்டு, அவர்கள் கர்த்தருடன் வாழ்வதற்கு முழுமையாக தகுதியில்லாதவர்கள் என்பதை உணர்ந்திருப்பார்கள். எப்பொழுதெல்லாம் யாருடைய இருதயங்கள் கர்த்தருக்கு முன்பு போவதற்கு நேராக முயற்சி செய்வதில்லையோ, அவர்களுடைய பாவங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இதைப் போல கர்த்தருக்கு முன்பாக போவதற்கு மக்கள் பிரியமில்லாமல் இருந்திருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய பாவங்கள் வெளிப்படுத்தப்பட்டு விடும் என்று பயப்படுகிறார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட பாவமான மக்கள் அவர்களுடைய மீட்பர் அவருடைய இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலினால் அவர்களுடைய பாவத்தின் பிரச்சனையை தீர்த்து வைத்துள்ளார் என்பதை உணரும்

பொழுது, அதிக இரட்சிப்பின் திட விசுவாசத்துடனும், அவர்களுடைய இருதயங்களில் நம்பிக்கையுடனும், கர்த்தருக்கு முன்பாக நம்பிக்கையோடு அவர்களால் செல்ல முடியும்.

ஆசரிப்புக் கூடார வாயிலில் காண்பிக்கப்பட்டுள்ள நான்கு சத்தியங்களும், மேசியா இந்த உலகத்திற்கு மனித சரீரத்தில் வந்து, யோவானிடமிருந்து பெற்றுக் கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தினால் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொண்டு சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தைச் சிந்தினார் என்று நமக்குச் சொல்லுகிறது. யார் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியினால் ஆசரிப்புக் கூடார சத்தியத்தை சரியாக தெரிந்து கொண்டு விசுவாசிக்கிறார்களோ அவர்களால் பாவத்திற்கான மீட்பை நிரந்தரமாக பெற்றுக்கொள்ள முடியும். இயேசுவினுடைய ஞானஸ்நானமும் அவருடைய மரணமும், இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமும் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் முழுமையாக டூரட்சித்துள்ளார் என்ற சத்தியமும் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுடைய நான்கு நிறங்களை போன்ற மீட்பாய் இருக்கிறது.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் பாவிகளை அவர்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்து மீட்டுள்ள மேசியாவினுடைய ஊழியத்தைப் பற்றி நமக்கு காண்பிக்கிறது. மனித குலத்திற்கு கர்த்தர் கொடுத்துள்ள இரட்சிப்பின் சத்தியம் இந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. யாருடைய இருதயங்களில் பாவம் இருக்கிறதோ அவர்களெல்லோரும், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தின் மீட்பை

விசுவாசிப்பதின் மூலம் அவர்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மன்னிக்கப்படுகிறார்கள்.

இந்த உலகத்தில் எண்ணமுடியாத மதங்கள் பரவியுள்ளன. இந்த எல்லா உலகபூர்வமான மதங்களும் அவற்றினுடைய சொந்த எண்ணங்களால் ஆக்கப்பட்டு, சொந்த தத்துவங்களால் மேலே வந்து, பரிசுத்தத்தை அடைவதற்கு மக்களை முயற்சி செய்யவைக்கின்றன. ஆனால் இந்த உலகப்பூர்வமான மதங்களின் மூலம் ஒருவரும் தம்முடைய பாவங்களிலிருந்து கழுவப்படவில்லை. அவர்கள் பாவத்தால் நிரப்பப் பட்டுள்ளார்கள் என்பதை உணராமல் அவர்களுடைய சொந்த எண்ணங்களின் அடிப்படையில் அவர்களுடைய சொந்த இரட்சிப்பின் தத்துவங்களை விசுவாசித்து உருவாக்கியது தான் இதற்கு காரணம். எல்லோரும் ஒரு பாவக் குவியலாய் இருந்து அவனோ/அவளோ எப்பொழுதும் பரிசுத்தமாக முடியாததால் ஒருவர் அவனுடைய/அவளுடைய அடிப்படை பாவத்தின் இயற்கையிலிருந்து எவ்வளவு தான் வெளியில் வர முயற்சி செய்தாலும் ஒருவராலும் ஒரு பொழுதும் இதை சாதிக்க முடியாது. இதனால் தான் அவனுடைய/ அவளுடைய பாவங்களிலிருந்து விடுவிக்க கூடிய மீட்பர் ஒவ்வொருவருக்கும் கண்டிப்பாக தேவை. அதாவது இயேசு எல்லோருக்கு தேவைப்படுகிறார், இயேசு கிறிஸ்துவை தவிர மனிதர்களுக்கு எந்த உண்மையான மீட்பரும் இல்லை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

கர்த்தருடைய சட்டம், பாவிகளை கர்த்தருடைய வீட்டிற்குள் அனுமதிக்காததால் மேசியா நம்முடைய எல்லாப் பாவங்களையும் அகற்றிவிட்டார் என்பதை நாம் தெரிந்து கொண்டு விசுவாசிக்க வேண்டும்.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைத் தவிர, மனித குலத்தினுடைய பாவங்களை நிரந்தரமாக மன்னித்து விட்ட நற்செய்தி வேறில்லை. உலகப்பிரகாரமான மதங்களின்

தத்துவங்களின் மீது ஒருவருடைய விசுவாசத்தை வைப்பது அவனுடைய/அவளுடைய பாவங்களுக்காக அவனுடைய/அவளுடைய மிகுந்த கஷ்டத்திற்கு மட்டுமே அழைத்துச் செல்லும். ஏனென்றால் நம்முடைய பரிசுத்தமான கர்த்தர் எல்லாப் பாவிகளுடைய பாவச் செயலுக்காக தண்டிப்பார்.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியம் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியினால் நிறைவேற்றப் பட்டுள்ளது. ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் சிகப்பு நூலால் மட்டுமோ அல்லது இரத்தாம்பர நூல் மற்றும் சிகப்பு நூலால் மட்டுமோ செய்யப்பட்டுள்ளது என்பதை யாராவது கூறுவதை நீங்கள் எப்பொழுதாவது கேட்டிருக்கிறீர்களா? அப்படியென்றால், ஆசரிப்புக் கூடார வாயில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டது என்பதை இந்த தருவாயில் இருந்து நீங்கள் உணர வேண்டும். ஒரு நெசவாளனால் செய்யப்பட்ட இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்ட திரையினால் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலை அமைக்க வேண்டும் என்று கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு தெளிவாக கட்டளையிட்டார்.

இருப்பினும், ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் சிகப்பு நூலால் மட்டும் நெயப்பட்டுள்ளது என்பதை அநேக மக்கள் தவறாக நினைத்தபடியால், நம்முடைய தேவனுடைய உண்மையான நான்கு ஊழியங்களின் மர்மத்தை அவர்களால் தீர்க்க முடியவில்லை. இதனால் தான் இயேசுவை அவர்கள் விசுவாசித்த பொழுதிலும் அவர்களுடைய இருதயங்களில் பாவம் இருந்தது. இயேசு

அவருடைய இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் ஊழியங்களின் மூலம் உங்களுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துவிட்டார் என்பதை இப்பொழுது உணர்ந்து, இந்த சத்தியத்தை விசுவாசியுங்கள். இந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நிறைவேற்றப்பட்ட இரட்சிப்பின் வேலையானது உங்களை உங்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்டுள்ளது. இந்த நான்கு ஊழியங்களின் மூலம் இயேசு உங்களுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துவிட்டார் என்பதை நீங்கள் உணரவேண்டும். வேறு வார்த்தைகளில் கூறினால், இந்த சத்தியத்தைப் பற்றி அறியாமல் இருந்து கொண்டு பாவ மீட்பிற்கான உங்களுடைய சொந்த தரங்களை அமைப்பது முற்றிலும் தவறு.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் அர்த்தம் என்னவாய் இருக்கிறது, என்று சில மக்கள் அறியாமல் இருக்கும் பொழுதும் கூட இயேசு கிறிஸ்துவை மீட்பராக விசுவாசிப்பதின் மூலம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் ஒருவர் மீட்கப்படலாம் என்று தவறாக கூறுகிறார்கள். கிறிஸ்தவ சமுதாயத்தின் தலைவர்களிடம், இயேசுவினுடைய நான்கு ஊழியங்களை பற்றி நாம் கேட்கும் பொழுது அதைப் பற்றி அவர்களுள் பலர் அறியாமல் இருக்கிறார்கள் என்பதை நாம் கண்டு பிடிக்கலாம். சிகப்பு நிற நூலின் ஊழியத்தை மட்டும் விசுவாசிக்கிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இன்னொரு விஷயத்தை அவர்கள் விசுவாசிப்பதாய் இருந்தால், இரத்தாம்பர நிற நூலின் ஊழியத்தையும் விசுவாசிக்கிறோம் என்று அவர்கள் சொல்லாமல் இருப்பினும், நம்முடைய தேவன் இளநீலம், இரத்தாம்பரம்,

சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் மனித குலத்தின் மீட்பிற்காக எல்லா வேலைகளையும் நிறைவேற்றினர். இதை போல, நம்முடைய தேவன், நமக்காக அவருடைய நான்கு இரட்சிப்பின் ஊழியங்களையும் செய்தார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். ஆசரிப்புக் கூடார வாயிலுடைய இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற இருதயம் யாருக்கெல்லாம் இருக்கிறதோ அவர்கள் அதை தெரிந்து கொண்டு விசுவாசிக்கலாம்.

"இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் உண்மையான அர்த்தத்தை நான் எப்படி புரிந்து கொள்ள வேண்டும்?" இந்த நூல்களின் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலின் சத்தியத்தை தேடி இந்த கேள்விகளை நீங்கள் யாரிடமாவது கேட்ப்பதாக இருந்தால், பதிலுக்கு நீங்கள் கடிந்து கொள்ளப்படலாம். "வேதாகமத்தை அதிக ஆழமாகவும் விளக்கமாகவும் தெரிந்து கொள்ள நீங்கள் முயற்சி செய்யக்கூடாது; அது உங்களுக்கு தீங்கை கொண்டு வரலாம்." மேலும் உங்களுடைய தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை ஒதுக்கிவிடலாம். மனமுடைந்து அநேக மக்கள், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றைப் பற்றிய அவர்களுடைய தெரிந்துக் கொள்ளும் ஆர்வத்தை இழக்கலாம். மேலும் வாயிலின் மூலம் விளக்கமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள மேசியாவை நீங்கள் எப்பொழுதும் சந்திக்க மாட்டீர்கள்.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் பங்கைப் பற்றி உணராமல் மேசியாவை சந்திக்க முயற்சி

செய்பவர்கள், கிறிஸ்தவத்தை மற்ற உலக பிரகாரமான மதங்களில் ஒன்றாக விசுவாசிக்கும் மத வாதிகளாக மட்டுமே இருக்கிறார்கள். கர்த்தருடைய வீட்டிற்குள் நுழைவதற்கு ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கர்த்தருடைய இரட்சிப்பின் நான்கு ஊழியங்களின் சத்தியத்தை நாம் சரியாக தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் இந்த சத்தியத்தை கண்டுபிடித்தவர்கள் புதிய ஏற்பாட்டு காலத்தில் இருக்கும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியினால் தேவன் அவற்றை நிறைவேற்றியுள்ளார் என்பதை உணர வேண்டும்.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலை, இளநீலம், இரத்தாம்பரம், சிகப்பு நூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்ய வேண்டும் என்று மோசேயிற்கு கர்த்தர் கட்டளையிட்டார். பின்பு இதனுடைய ஆவிக்குரிய அர்த்தம் என்ன? ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுக்கு பயனபடுத்தப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் ஒவ்வொரு நிறமும் நம்முடைய பாவங்களை மறைய செய்வதற்கு இயேசு நமக்காக செய்த வேலையாய் இருக்கிறது. இதனால் இந்த நூல்களும், சணல் நூலும் ஒன்றுக்கொன்று சிக்கலாக தொடர்புடையதாக இருக்கின்றன. இதைப் போல் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவிக்கு முக்கியத்துவம் கொடுத்து விசுவாசிப்பவர்கள் இயேசுவினுடைய நான்கு ஊழியங்களை அவர்களுடைய நிரந்தர பாவத்தின் மீட்பாக விசுவாசிக்கலாம்.

இப்படி அல்லாமல், இளநீல நிற, இரத்தாம்பர நிற

மற்றும் சிகப்பு நிறங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இரட்சிப்பின் சத்தியத்தை ஒதுக்கி அதை தெரிந்துக் கொள்ள முயற்சி செய்யாமல் இருப்பது மேசியாவை அலட்சியப்படுத்துவதற்கான ஒருவருடைய முழுமையான வெளிப்பாடாய் இருக்கிறது. மேலும் இதுவே அவனுக்கு எதிராக நின்று கொண்டிருக்கும் எதிரியாகிறது. அநேக மக்கள் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தை அலட்சியப்படுத்துவதாக இருந்து, கிறிஸ்தவத்தை பல உலக பிரகாரமான மதங்களில் ஒன்றாக மட்டுமே மாற்றி கொண்டிருக்கிறார்கள். இயேசுவினுடைய நான்கு ஊழியங்களை இந்த மக்கள் அலட்சியத்துடன் கருதினால், பிறகு கிறிஸ்துவுக்கு எதிராக நிற்கும் உலக பிரகாரமான மதங்களின் கனிகள் இவர்கள் தான் என்பதற்கு இது தான் சாட்சி. இருப்பினும் அதிர்ஷடவசமாக நமக்கு இன்னமும் விசுவாசம் இருக்கிறது, ஏனென்றால் இந்த உலகத்தில் அநேக மக்கள் இன்னமும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவிக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலால் வெளிப்படுத்தப்பட்டுள்ள பாவ மீட்பிற்கான ஆவிக்குரிய சத்தியத்தியினுடைய ஞானம் மக்களுக்கு இருக்கும் பொழுது பரலோகத்தின் எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் அவர்களால் பெற்றுக்கொள்ள முடியும். ஏனென்றால் இந்த விசுவாசம் தான் மேசியாவை சந்திப்பதற்கு ஒருவர் தெரிந்து கொண்டு விசுவாசிப்பதற்கு தேவைப்படும் உண்மையான விசுவாசமாயிருக்கிறது. நாம் அதற்குள் ஒரே ஒரு முறை மட்டும் இல்லாமல் நிரந்தரமாக தங்க வேண்டும். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால் இந்த சத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

கர்த்தருடைய வீட்டிற்குள் யாரெல்லாம் நுழைய வேண்டுமோ, அவர்களெல்லோரும் இளநீலம்,

இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தை கண்டுபிடிக்க வேண்டும். மேலும் இதற்கு ஏற்ப கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும்.

தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றுபவராக வந்த மேசியா

கன்னியினுடைய சரீரத்தின் மூலம் மேசியா பிறப்பார் என்று கர்த்தர் அவருடைய வார்த்தையினால் தீர்க்க தரிசனம் கூறினார். ஏசாயா 7:14 சொல்லுகிறது. *"ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்"* வேறு பக்கம் மீகா 5:2 மேசியா பெத்லேகேமில் பிறப்பார் என்று குறிப்பிடுகிறது: *"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது."* பழைய ஏற்பாட்டினுடைய இந்த வார்த்தையினால் தீர்க்கதரிசனம் கூறப்பட்டது போல மேசியா இந்த உலகத்திற்கு வந்தார். கர்த்தருடைய வார்த்தைக்கு ஏற்ப தீர்க்கசரிசனங்களை நிறைவேற்றுவதற்காக அவர் மனித சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்தார்.

பின்பு மனித வரலாற்றின் எந்த பகுதியில் மேசியா வந்தார்? இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு எப்பொழுது வந்தார்? ரோம பேரரசன் அகஸ்து ராயனுடைய (கி.மு. 27-கி.பி. 14 வரை) ஆட்சியின் பொழுது அவர் இந்த

உலகத்திற்கு வந்தார்.

இயேசு யோவனிடமிருந்து பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தின் மூலமாகவும், அவருடைய மரணதின் மூலமாகவும், சிலுவையின் மீதான அவருடைய இரத்தம் சிந்துதலின் மூலமாகவும், என்னையும், உங்களையும், நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் தண்டனைகளிலிருந்தும் விடுவிப்பதற்காக இந்த உலகத்திற்கு வந்தார். இஸ்ரவேல், ரோம சாம்ராஜ்ஜியத்தின் குடியேற்ற நாடாக மாறின பொழுதும், அதனுடைய பேரரசனாக அகஸ்து ஆட்சி செய்து கொண்டிருக்கும் பொழுதும், மனித குலத்தின் மீட்பராக வந்தார். இஸ்ரவேல் ரோம நாட்டின் குடியேற்ற நாடாக இருந்ததால் அது ரோம கட்டளைகளைப் பின்பற்ற வேண்டியிருந்தது. அந்த சமயத்தில் முழு ரோம சாம்ராஜ்ஜியத்தில் இருந்த எல்லோருக்கும் கணக்கெடுப்பை பதிவு செய்வதற்காக அவனுடைய/அவளுடைய பிறந்த நகரத்திற்கு திரும்ப வேண்டும் என்று பேரரசன் அகஸ்து ராயன் கட்டளை கொடுத்திருந்தான். அகஸ்து ராயனுடைய கட்டளைகளைப் பின்பற்றி இந்த கணக்கெடுப்பு உடனே தொடங்கியது. இந்த கணக்கெடுப்பு சாம்ராஜ்ஜியத்தில் இருக்கும் ஒவ்வொருவரையும் இஸ்ரவேலில் இருப்பவர்களையும் சேர்த்து கணக்கில் கருதப்படுவதால், இஸ்ரவேலர்களும் கூட அவர்களுடைய பிறந்த நகரங்களுக்கு திரும்ப வேண்டியிருந்தது. இந்த தருணத்திலிருந்து இயேசு கிறிஸ்து மனித குலத்தினுடைய வரலாற்றில் வேலை செய்து கொண்டிருந்தார்.

பழைய ஏற்பாட்டு வார்த்தையின் நிறைவேறுதலைப் பாருங்கள்

இந்த சமயத்தில் யூதா தேசத்தில், கன்னி மரியாளின் கர்பப்பையில் மேசியா ஏற்கெனவே கருவுற்றிருந்தார். இந்த மரியாள் யோசேப்பிற்கு நிச்சயிக்கப்பட்டிருந்தாள். இஸ்ரவேலின் பன்னிரெண்டு இனங்களுக்குள் யூத இனத்திலிருந்து தான் ராஜாக்கள் தொடர்ந்து பிறப்பார்கள் என்று வாக்களித்தது போல மரியாள் மற்றும் யோசேப்பு ஆகிய இருவரும் யூதா இனத்திலிருந்து வந்தார்கள்.

இதனால் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என் ரோம அரசன் அகஸ்து ராயன கட்டளையிட்ட பொழுது யூத இனத்தாராகிய மரியாள் ஏற்கெனவே அவளுடைய கர்பப்பையில் ஒரு பிள்ளையை சுமந்து கொண்டிருந்தாள். அவளுடைய நேரம் அருகே வந்து அவள் பிரசவிக்கும் பொழுது பேரரசரின் கட்டளையினால் அவள் யோசேப்பினுடைய பிறந்த நகரத்திற்கு போய் கணக்கெடுப்பிற்காக பதிவு செய்ய வேண்டியிருந்தது. இதனால் எந்த வேலையிலும் பிரசவிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் பொழுது கூட மரியாள் யோசேப்புடன் பெத்தலகேமிற்குச் சென்றாள். மரியாள் அவளுடைய பிரசவ வலி நேரத்திற்கு கடந்து செல்லும் பொழுது, அவர்கள் அவளுக்கென்று ஒரு அறையை கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர்களால் அந்நகரத்தில் எந்த அறையையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் அவர்களுக்கு எந்த இடம் கிடைத்ததோ அவர்கள் அதைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. இறுதியில் அவர்கள் ஒரு மாட்டு தொழுவத்தில் தங்க வேண்டியிருந்தது. மரியாள் அவளுடைய பிள்ளையாகிய இயேசுவை மாட்டுத் தொழுவத்தில் பிரசவித்தாள்.

கி.பி. 1 இல் இயேசு பிறந்து மாட்டுத் தொட்டியில் வைக்கப்பட்டிருந்தார். கர்த்தாதி கர்த்தர் மனித சரீரத்தில்

இந்த உலகத்திற்கு வந்தார். மிருகங்கள் முன்பு தங்கியிருந்த இடத்திற்கு மனித குலத்தின் மீட்பர் வந்தார். நம்முடைய மேசியாவாவதற்கு இயேசு தாழ்மையான இடத்தில் பிறந்தார் என்றும், இந்த எல்லா காரியங்களும் படைப்பிற்கு முன்னரே கர்த்தரால் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்தது என்றும் இது சொல்லுகிறது. யாவே கர்த்தர் மனித குலத்தினுடைய வரலாற்றை நகர்த்துகிறார் என்று மக்களுக்கு தெரிந்திருந்தாலும் கூட அவர்களை இரட்சிப்பதற்கு கர்த்தரே இந்த பூமிக்கு வருவார் என்பதை யாராலும் உணர முடியவில்லை. எனவே எல்லா மனிதர்களையும் அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்கு மனிதனுடைய தாழ்மையான சரீரத்தில் இந்த பூமியில் பிறந்து தம்மைத் தானே தாழ்த்தி அவனையோ/அவளையோ அவர் மீட்பார் என்பதை யார் வேண்டுமானாலும் உணருவதை கர்த்தர் சாத்தியப்படுத்தினார்.

பின்பு ஏன் மற்ற எல்லா இடங்களிலும் இல்லாமல் பெத்லகேமில் இயேசு பிறந்தார்? அவர் ஏன் மாட்டு தொழுவத்தில் பிறந்திருக்க வேண்டும் என்றும், எல்லா காலங்களிலும் இல்லாமல் இஸ்ரவேல் ரோமால் அதனுடைய குடியேற்ற நாடாக அடக்கப்பட்டபொழுது பிறந்திருக்க வேண்டும் என்றும், நாமும் கூட ஆச்சரியப்படலாம். ஆனால் இந்த எல்லா காரியங்களும் அவருடைய மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்கு கவனமாக வரையறுக்கப்பட்ட அவருடைய விரிவான அருளுக்கு கீழ் வந்தது என்று நாம் விரைவில் கண்டுபிடிக்கலாம்.

யோசேப்பும் மரியாளும் அவர்களுடைய பிறந்த நகரத்தில் கணக்கெடுப்பிற்கு பதிவு செய்த பொழுது இந்த நகரத்திலிருந்து வந்தவர்கள் தான் என்பதற்கான சாட்சியை அவர்கள் கொடுக்க வேண்டியிருந்தது. மேலும் அவர்களுடைய சரியான அடையாளத்தை உறுதிப்படுத்த

வேண்டும், பெத்லகேமில் பல தலைமுறைகளாக அவர்களுடைய மூதாதையர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை நிரூபிப்பதற்காக, வேண்டிய சாட்சிகளை அவர்கள் கொடுத்தால் மட்டுமே கணக்கெடுப்பிற்காக அவர்களால் பதிவு செய்ய முடியும். இதனால் அவர்களுடைய மூதாதையர்கள் யார் இருந்தார்கள் என்பதையும் யாருடைய வீடுகளுக்கு அவர்கள் சேர்ந்தார்கள் என்பதையும் அவர்கள் இணைக்க வேண்டும். மேலும் கணக்கெடுப்பின் பொழுது அவர்களுடைய குடும்பத்தினுடைய வம்சத்தினுடைய இது போன்ற எல்லா விவரங்களையும் பதிவு செய்ய வேண்டும். இவற்றில் ஒன்றும் கூட கண்டுபிடிக்க முடியாததாலும் ஒதுக்கப்பட முடியாததாலும் யோசேப்பு மற்றும் மரியாளுடைய சரியான அடையாளங்களை வரலாற்று பூர்வமாக பதிவு செய்வதின் மூலம் மனித குலத்தினுடைய வரலாறு இயேசுவினுடைய பிறப்பை கூட அறிவிக்கும் என்று கர்த்தர் உறுதி செய்தார் (மத்தேயு 1:1-16, லூக்கா 3:23-38) இவை எல்லாம் பழைய ஏற்பாட்டு வார்த்தையினுடைய தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் செய்த வேலைகளாய் இருக்கிறது.

மீகா 5:2 கூறுகிறது, *"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது."* பிறப்பினுடைய நாள் வந்தது என்றும் யோசேப்பையும் மரியாளையும் அதே நகரத்தில் வரவழைத்ததின் மூலம் சரியாக தீர்க்கதரிசனம் கூறப்பட்ட பெத்லகேம் நகரில் மீட்பர் பிறந்தார் என்பது கர்த்தர் அவருடைய தீர்க்கதரிசிகளின், தீர்க்கதரிசங்களை நிறைவேற்றுவதற்காக இந்த வேலையைச் செய்தார் என்று சொல்லுகிறது என்று தெரிவிக்கிறது. மனித

குலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அகற்றுவதற்காக கர்த்தருடைய திட்டமிட்ட செயலாக இது இருக்கிறது. பழைய ஏற்பாட்டினுடைய தீர்க்கதரிசன வார்த்தையை நிறைவேற்றுவதற்கான இயேசு பெத்லகேமின் சிறு பட்டணத்தில் பிறக்க வேண்டியிருந்தது.

நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் இயேசு கிறிஸ்து பெத்லகேமின் சிறிய நகரத்தில் பிறந்தார். மேலே குறிப்பிட்டுள்ளது போல (மீகா 5:2) கர்த்தர் அவருடைய தீர்க்கதரிசியான மீகாவின் மூலம், அவருடைய தீர்க்கதரிசன வார்த்தையை ஏற்கெனவே கொடுத்திருந்தார். பாவிகளுடைய மீட்பராவதற்காக மேசியா எப்படி அவருடைய மக்களிடத்திற்கு வருவார் என்று நம்முடைய தேவன் வருவதற்கு 700 வருடங்களுக்கு முன்னரே, ஏசாயா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் கூறியிருந்தான் (ஏசாயா 53). கர்த்தருக்கு மீகா தீர்க்கதரிசனம் கூறியது போல இயேசு கிறிஸ்து பெத்லகேமில் பிறந்தார். அவர் எப்பொழுதுமே, அவருடைய தீர்க்கதரிசனத்தில் எல்லா வார்த்தைகளையும் நிறைவேற்றுகிறார்.

ஒரு வரலாற்று உண்மையாக மரியாளும் ஜோசப்பும் கணக்கெடுப்பிற்கு பதிவு செய்வதற்காக அவர்களுடைய மூதாதையர்களின் பிறப்பு நகரத்திற்கு சென்ற பொழுது இந்த தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டது. மரியாள் பெத்லகேமிற்கு வந்த பொழுது பிள்ளை பிறக்க போவதற்கான நேரம் வரும் என்பதை உறுதி செய்ததன் மூலம் கர்த்தர் அவருடைய வார்த்தையை நிறைவேற்றினார். இதனால் இந்த நகரத்தில் பிரவேசிப்பதைத் தவிர அவளுக்கு வேறு எந்த வழியும் இருக்காது.

இங்கு கர்த்தர் அவருடைய தீர்க்கதரிசன வார்த்தையை நம்மிடம் பேசுபவராகவும், இது போன்ற எல்லா வார்த்தையையும் இதற்கு ஏற்ப நிறைவேற்றுபவராகவும் இருக்கிறார் என்பதை நாம் கண்டுபிடிக்கிறோம். இதிலிருந்து ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய

வாயிலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள "மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல்" கர்த்தருடைய வார்த்தையின் சிறப்புத்தன்மையின் முழுமையைக் குறிக்கிறது என்பதை நாம் கண்டுபிடிக்க முடியும். படைப்பிற்கு முன்னரே கர்த்தர் மனித குலத்தினுடைய மீட்பை விரிவாக திட்டமிட்டுள்ளார். மேலும் இதை, அவருடைய தீர்க்கதரிசன வார்த்தைக்கு ஏற்ப தவறாமல் நிறைவேற்றியுள்ளார்.

இதனால் பழைய ஏற்பாட்டினுடைய வார்த்தை கண்டிப்பாக கர்த்தருடைய வார்த்தையாய் இருக்கிறது என்றும் புதிய ஏற்பாட்டினுடைய வார்த்தையும் கர்த்தருடைய வார்த்தையாய் இருக்கிறது என்றும் நம்மால் உணரமுடியும். முழு உலக மற்றும் இந்த பூமியினுடைய எல்லா வரலாற்றையும் கர்த்தர் ஆட்சி செய்து நகர்த்துகிறார் என்பதை நாம் உணர்ந்து விசுவாசிக்க முடியும். வேறு வார்த்தைகளில் கூறினால், கர்த்தர் முழு உலகத்தையும் படைத்தது போல, எல்லா மக்களின் மேலும் எல்லா நிலைமைகளின் மேலும் அவர் ஆட்சி செய்கிறார் என்பதை நமக்கு காண்பித்துள்ளார். இதனால் ஒருவருடைய சொந்த விருப்பத்திற்கேற்ப அது எந்த காரியமாக இருந்தாலும் அவர் அதை அனுமதிக்கும் வரை ஒன்றும் சாதிக்கப்பட முடியாது என்று கர்த்தர் நமக்கு காண்பித்திருந்தார்.

குழந்தை இயேசு பிறந்து இந்த உலகத்திற்கு வந்த பொழுது மிருகங்களின் தங்குமிடத்தைத் தவிர வேறு எங்கும் பிறக்க முடியவில்லை. ஏனென்றால் சத்திரத்தில் எந்த அறையும் இல்லை. மேலும் அவர் தாமே பெத்லகேம் நகரில் பிறந்தார். இவை எல்லாம், கர்த்தருடைய விசுவாச தன்மைக்கு ஏற்ப அவருடைய தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட அருளின் அருமையான சாதனைகள் என்பதை நாம் உணர வேண்டும்.

இதனால் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்டுள்ள மீட்பராகிய நம்முடைய கர்த்தர் தான் இந்த உலகத்தினுடைய வரலாற்றை நகர்த்திக்

கொண்டிருக்கிறார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும். இந்த சத்தியம் தான் அவர் எல்லாவற்றையும் ஆட்சி செய்கிறார் என்பதை நமக்கு காண்பிக்கும் கர்த்தருடைய வார்த்தையாய் இருக்கிறது. ஏனென்றால் கர்த்தர் தான் எல்லோருடைய தேவனாகவும் இருக்கிறார்.

பெத்லகேமின் சிறு நகரத்தில் இயேசு கிறிஸ்து பிறந்தது ஒரு விபத்தான சம்பவமோ அல்லது வேதாகமத்தினுடைய வார்த்தையை திறமையாக கையாண்டதன் மூலமோ கண்டுபிடிக்கப்பட்ட தன்னிச்சையான ஒன்று இல்லை என்று இதனால் இப்பொழுது நிருபிக்கப்பட்டுள்ளது. இதைத் தான் கர்த்தர் கூறினார். மேலும் இது தான் கர்த்தர் இயேசுவின் மூலம் நிறைவேறியதுமாயிருக்கிறது.

இதை நாம் தெரிந்துகொண்டு விசுவாசிக்க வேண்டும். இதை நாம் நம்முடைய இருதயங்களுக்கு எடுத்துச் சென்று நம்முடைய மேசியாவினுடைய மீட்பு தான் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நிறைவேற்றப்பட்ட சத்தியம் என்று விசுவாசிக்க வேண்டும். பாவத்தின் மீட்பும் கூட, எதிர்பாராத விதமாக சாதிக்கப்பட்டுள்ள ஒன்றில்லை. ஆனால் கர்த்தருடைய அருளில் தயாரிக்கப்பட்ட இயேசுவினுடைய நான்கு ஊழியங்களின் மூலம் இது சாதிக்கப்பட்டுள்ளது என்பதை கர்த்தர் நமக்கு காண்பித்துள்ளார்.

அதன் மேலும், கிறிஸ்தவம் பல உலகபிரகாரமான மதங்களில் ஒன்றல்லை என்று இது காண்பிக்கிறது. உலக பூர்வமான மதத்தை தொடங்கியவர்கள் வெறும் மனிதர்களே. ஆனால் கிறிஸ்தவத்தை தொடங்கியவர் நம்முடைய மீட்பர் இயேசு என்றும், நம்முடைய இந்த மேசியா தான் கர்த்தர் என்றும், இதில் இருந்து தான் கிறிஸ்தவத்தின் சத்தியம் தொடங்கிறது என்பதை கர்த்தர் நமக்கு காண்பித்திருக்கிறார். வேறு வார்த்தைகளில் கூறினால்

நாம் விசுவாசிக்கும் கிறிஸ்தவமானது, வேறு உலக பிரகாரமான மதம் போன்றதல்ல என்று கர்த்தர் நமக்கு சாட்சி சொல்லுகிறார். மற்ற உலக பிரகாரமான மதங்களைப் போல இல்லாமல் கர்த்தரால் கொடுக்கப்பட்ட எல்லா கிருபையினாலும் கிறிஸ்தவம் அமைக்கப்பட்டுள்ளது. *"சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக"* என்று ரோமர் 11:36 இல் எழுதியிருப்பது போல நம்முடைய மீட்பராக அவருடைய ஒரே குமாரனையும், நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்காக நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியையும் பரிசுத்த ஆவியானவருடைய தங்குமிடத்தையும் பரலோக இராஜ்ஜியத்தையும் நமக்கு கொடுத்தார். இதனால் நம்முடைய முழு இருதயங்களுடன் கர்த்தருக்கும், கர்த்தருடைய வார்த்தைக்கும் பயந்து கீழ்ப்படிய வேண்டும் என்று நாமெல்லோரும் நம்முடைய இருதயங்களில் விசுவாசிக்க வேண்டும்.

இந்த பூமியின் மீது மேசியாவினுடைய பிறப்பானது படைப்பிற்கு முன்னரே பிதாவாகிய கர்த்தரால் தீர்மானிக்கப்பட்ட இரட்சிப்பின் திட்டத்திற்கு ஏற்ப இருந்தது. நம்முடைய மீட்பு, இதனுடன் சரியாக திட்டமிடப்பட்டிருந்தது. இந்த சத்தியம் தான் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் உண்மையான பொருள் என்பதை தெளிவாக உணர்ந்து கொள்ள கர்த்தர் நம்மை அனுமதித்துள்ளார். இதனால் நம்முடைய பாவங்களின் மீட்பாக நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலம் நம்மிடம் வந்துள்ள மீட்பை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். மேலும் அப்படியே விசுவாசிக்கவும் வேண்டும். இந்த விசுவாசத்தின் மூலம் தான் நீங்களும் நானும் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்கப்படலாம். நான்கு நிறங்களின் இந்த சத்தியம்

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் வார்த்தையில் இருக்கும் நம்முடைய விசுவாசத்தின் மூலம் முழுமையாக்கப்பட்டுள்ளது என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்து இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நம்மை மீட்டுக்கொண்ட மீட்பர்

பாவிகளை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்டுள்ள இயேசு கிறிஸ்துவின் செயல்கள் நான்காக இருக்கின்றன. இளநீல நிற நூல் (இயேசுவின் ஞானஸ்நானம்), இரத்தாம்பர நிற நூல் (இயேசுவே ராஜாதி ராஜா -வேறுவார்த்தையில் கூறினால் கர்த்தர்) சிகப்பு நிற நூல் (இயேசுவினுடைய இரத்தம்) மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் (பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் விரிவான வார்த்தையின் மூலம் எல்லா பாவிகளையும் அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பது முழுமையானது). இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலம் இயேசு சரியான மீட்பராகினார்.

நீர் மற்றும் ஆவியின் மூலம் நம்மிடம் வந்து, இளநீல நிற நூல் (இயேசுவின் ஞானஸ்நானம்), இரத்தாம்பர நிற நூல் (இயேசு தான் கர்த்தர்) சிகப்பு நிற நூல் (இயேசுவினுடைய இரத்தம்) மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் (பழைய ஏற்பாட்டின் வார்த்தையினால் மீட்பை சாதித்த இயேசு) மூலம் நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்டது இயேசு என நாம் விசுவாசிக்கும் வரையிலும் இந்த பாவங்களிலிருந்தும் இந்த பாவங்களுக்கான தண்டனைகளிலிருந்தும் நாம் எப்பொழுதுமே

விடுவிக்கப்பட முடியாது என்பதை நாம் உணர வேண்டும். இப்படி நம்மை நம்முடைய பாவங்களிலிருந்தும், தண்டனைகளிலிருந்தும் மீட்காமல் நம்முடையு தேவன் சரியான மீட்பராகி இருக்க முடியாது.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாயிலுடைய திரை ஏன் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது என்பதற்கான காரணத்தை நாம் ஆவிக்குரியதாக உணர வேண்டும். எல்லோரும் வாயிலை அடையாளம் கண்டு அதனை எளிதில் கண்டு பிடித்து விடுவார்கள் என்பதற்காக ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் இந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் செய்யப்பட்டிருந்தது. கர்த்தர் இந்த வாயிலின் வழியாக யாரை வேண்டுமானாலும் அவருடைய பிரகாசிக்கும் வீட்டிற்குள் நுழைய அனுபதித்தார்.

ஆசரிப்புக் கூடாரமே கர்த்தருடைய பிரகாசிக்கும் வீடாய் இருக்கிறது. ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் மற்றும் வேலியில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இரட்சிப்பின் சத்தியத்தை உணராமல், கர்த்தருடைய வீட்டிற்குள் நுழைய வேண்டும் என்று விரும்புபவர் யாராலும் அப்படி நுழைய முடியாது. ஆசரிப்புக் கூடாரத்தில் தொங்கி கொண்டிருக்கும் வெள்ளை பஞ்சு திரையினுடைய பரிசுத்தத்தை ஒதுக்குவபவர்கள், வாயில் வழியாக ஆசரிப்புக் கூடாரத்திற்குள் நுழைவதில்லை. ஆனால் வேறு வழியாக மேலே ஏறுகிறார்கள். இவர்கள் கள்ளர்களாகவும், திருடர்களாகவும் இருக்கிறார்கள் என்று கர்த்தர் சொன்னார். மீட்பினுடைய வாயில் இயேசு கிறிஸ்துவை குறிக்கிறது (யோவான் 10).

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலம் இந்த வாயில் நெய்யப்பட்டது என்று வேதாகமம் நமக்குச்

சொல்லும் பொழுது அவருடைய பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் உண்மையான வார்த்தையின் மூலம், கர்த்தருடைய குமாரனாக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, யோவானால் ஞானஸ்நானம் பெற்று, சிலுவையின் மீது மரித்து, மரணத்திலிருந்து மறுபடியும் எழுந்து, இதன் மூலம் நம்முடைய மீட்பராகியுள்ளார் என கர்த்தர் நமக்கு தெளிவாக காண்பிக்கிறார். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மர்மத்தை நாம் கண்டுப்பிடிக்க முடியும். இந்த உலக பாவத்திற்கான நியாயத்தீர்ப்பில் இருந்து நம்மை இரட்சிப்பதற்காக வந்த தேவ குமாரன் இயேசு கிறிஸ்து என்றும் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் வார்த்தையின் மூலம் மனித குலத்தினுடைய மீட்பை இப்பொழுது சாதித்துள்ள மீட்பர் அவர்தான் என்றும் விசுவாசிப்பதற்கு கர்த்தர் நம்மை அனுமதித்துள்ளார் என்பதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் ஏன் இந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். இளநீல நிற நூல் நமக்கு என்ன சொல்லுகிறது? மேலும் இரத்தாம்பர நிற நூல், சிகப்பு நிற நூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் நமக்கு என்ன சொல்லுகிறது? கர்த்தருடைய திட்டத்தை நாம் உணரும் பொழுது இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் வேலை எல்லாம் நம்முடைய மீட்பிற்கான கர்த்தருடைய திட்டமாகவும், நித்திய வாழ்க்கையின் சத்தியமாகவும் இருக்கிறது என்றும், இதனால் நம்முடைய பாவத்திற்கான இரட்சிப்பின் விசுவாசத்தின் மூலம் அவருடைய ராஜ்ஜியத்திற்குள் நாம் நுழைய முடியும் என்றும் நம்மால் உணர முடியும்.

நீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலை நாங்கள் தெரிந்து கொண்டு விசுவாசிக்கிறோம் என்று நாம் சொல்லும் பொழுது இயேசு ஏன் யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெற்று சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தை சிந்தினார் என்பதற்கான காரணமும், மேசியா என்பவர் யார், பழைய ஏற்பாட்டினுடைய பலி முறையினுடைய எல்லா மர்மங்களும், புதிய ஏற்பாட்டினுடைய நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை பற்றி நமக்கு நன்றாக தெரியும் என்று இது சொல்லுகிறது. சுருக்கமாக, நித்தியமாக மீட்கப்படுவதற்கு சத்தியத்தை ஆர்வத்துடன் தேடும் எல்லா விசுவாசிகளுக்கும் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலில் தெரிவிக்கப்பட்டுள்ள சத்தியம் தேவைப்படுகிறது.

ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி பல மக்களுக்கு நன்றாக தெரியும் என்பது போல தோன்றுகிறது. ஆனால் இது சரியான நிலைமை அல்ல. ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுக்குள் நெய்யப்பட்டுள்ள இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல் என்றால் என்ன என்பது பற்றி மக்கள் சற்றும் அறியாமலிருக்கிறார்கள். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவைகளின் மர்மம் புரிந்துக் கொள்வதற்கு கஷ்டமாக இருப்பதால், அவற்றைக் கற்று கொள்வதற்கும் விசுவாசிப்பதற்கும் பல மக்களுக்கு உண்மையான ஆசை இருக்கிறது. இருப்பினும் யாராலும் இந்த மர்மத்தைப் புரிந்து கொள்ள முடியாததால், பலர் அவர்களுடைய சொந்த கருத்துக்களின் அடிப்படையில் இதை பிழையாக விளக்குவதில் முடித்துள்ளார்கள். பல மத தலைவர்கள் இந்த சத்தியத்தை, அவர்களுக்கு தோன்றிய வழிகளிளெல்லாம் தவறாக புரிந்து கொண்டு தவறாக விளக்கியுள்ளார்கள் இவர்கள் இதை அவர்களுடைய சொந்த மத முடிவுகளுக்காக மட்டும்

உபயோகித்துள்ளார்கள். ஆனால் இந்த பொய்யர்களால் ஏமாற்றம் தொடர்வதற்கு, கர்த்தரால் கிறிஸ்தவர்களை ஒரு போதும் அனுமதிக்க முடியவில்லை. இதனால் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்தியத்தின் அர்த்தத்தை தெளிவாக அவர் விளக்க வேண்டியும் இதன் மூலம் அவர்களை அவர்களுடைய பாவத்திலிருந்து மீட்க வேண்டியும் இருந்தது.

புதிய ஏற்பாட்டிலிருந்து 1 யோவான் 5:6-8 குறிப்பிடுகிறது. *"இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர். பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; பூலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது."* நம்முடைய தேவன் மனித சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்களை எடுத்துக் கொண்டு அவருடைய இரத்தத்தை சிந்தியதின் மூலம் நம்மை இரட்சித்துள்ளார் என்று இந்த பகுதி குறிப்பாக தெரிவிக்கிறது. இதனால் தான் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் எல்லாமே இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது.

முதலில் இளநீல நிற நூல் நமக்கு எதைக் காண்பிக்கிறது? இயேசு, இந்த உலகத்திற்கு வந்து, யோவானிடமிருந்து பெற்றுக் கொண்ட அவருடைய

ஞானஸ்நானத்தின் மூலம் உலகத்தினுடைய பாவங்களை பெற்று, பாவிகளுடைய உண்மையான மேசியாவாக ஆன இயேசுவை பற்றிய உண்மையின் ஒரு பகுதியை நமக்கு காண்பிக்கிறது. யோர்தான் நதியில் யோவானிடமிருந்து இயேசு பெற்றுக்கொண்ட இந்த ஞானஸ்நானம், ஒட்டு மொத்தமாக உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்து கொள்வதை இயேசுவிற்கு சத்தியமாக்கியது. இயேசு எல்லா மனித குலத்தினுடைய பிரதிநிதியாகவும் இருந்து யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் செய்யப் பட்டு, உலக்த்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவருடைய தோலின் மேல் சுமந்தார். இப்படி எல்லா மனிதர்களுடைய பாவங்களும் கிறிஸ்துவினுடைய சொந்த தலைக்குள் செலுத்தப்பட்டதால் இந்த சத்தியத்தை விசுவாசிப்பவர்களின் இருதயங்களில் பாவம் இருப்பதில்லை.

இரண்டாவதாக ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலில் நெய்யப்பட்டுள்ள இரத்தாம்பர நிற நூலின் உண்மையான அர்த்தம் என்ன? இயேசு கிறிஸ்து தான் ராஜாதி ராஜா என்று இது நமக்குச் சொல்லுகிறது. இயேசு உலகத்தை படைத்தார். படைப்பாக இல்லாமல், படைப்பாளராகவும் இந்த உலகத்திற்கு வந்த உண்மையான மேசியாவாகவும் இருக்கிறார். மேசியாவாகிய அவர் மனித சரீர தோற்றத்தில் ஏற்கெனவே இந்த உலகத்திற்கு வந்தார். மேலும் யோவானிடமிருந்து அவர் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தின் மூலமாகவும் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவருடைய பலி மரணத்தின், மற்றும் உயிர்தெழுதலின் மூலமும் அவர்களுடைய மேசியாவை அடையாளம் கண்டு பயந்து, விசுவாசித்த அவருடைய எல்லா மக்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் அவர்களுடைய பாவத்தின் நியாய தீர்ப்பிலிருந்தும் இயேசு இரட்சித்துள்ளார்.

இயேசு நம்முடைய முழுமையான கர்த்தராகவும்

மேசியாவாகவும் இருக்கிறார். அவர் தான் முற்றிலுமான மீட்பர். இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொண்டதாலும், சிலுவையின் மீது இரத்தம் சிந்தி மரித்ததாலும், அவருடைய மரணத்தில் இருந்து உயிர்தெழுந்ததன் மூலமாகவும், அவர் நம்முடைய எல்லாப் பாவங்களை மட்டும் தூய்மையாக்க வில்லை, ஆனால் நம்முடைய இடத்திலிருந்து பிறருடைய பாவத்திற்கான நியாயத்தீர்ப்பை ஏற்றுக்கொண்டார்.

மூன்றாவதாக, சிகப்பு நிற நூல், இயேசு சிலுவையின் மீது சிந்திய அவருடைய இரத்தத்தைக் குறிக்கிறது. மேலும் விசுவாசிக்கும் நமக்கு கிறிஸ்து புதிய வாழ்க்கையைக் கொடுத்திருக்கிறார் என்பது தான் இதனுடைய அர்த்தம். இந்த சிகப்பு நிற நூலினுடைய சத்தியம் இயேசு கிறிஸ்து யோவானிடமிருந்து பெற்றுக்கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக உலகத்தினுடைய பாவங்களை அவர் மீது எடுத்துக்கொண்டு நம்முடைய சொந்த பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பை மற்றும் பெற்றுக்கொள்ளவில்லை ஆனால் பாவத்திற்காக மரித்தவர்களுக்கு வாழ்வு தரும் விசுவாசத்தை அருளியதின் மூலம் விசுவாசிகளுக்கு புதிய வாழ்க்கையையும் கொடுத்தார் என்று நமக்குச் சொல்லுகிறது. அவருடைய ஞானஸ்நானம் மற்றும் அவர் சிந்திய இரத்தத்தை விசுவாசிப்பவர்களுக்கு இயேசு புதிய வாழ்க்கையை கொடுத்துள்ளார்.

பின்பு மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் என்ன பொருளைத் தருகிறது? புதிய ஏற்பாட்டிலும், பழைய ஏற்பாட்டிலும் எழுதியிருந்த அவருடைய இரட்சிப்பின் சத்தியத்தை கர்த்தர் நிறைவேற்றினார் என்று இது வெளிப்படுத்துகிறது. மேலும் இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக்கொண்டு புதிய

ஏற்பாட்டில் சிலுவையின் மீது நம்முடைய பாவங்களுக்காக நியாயந்தீர்க்கப்பட்ட பொழுது கர்த்தர் அவருடைய உடன்படிகையின் வார்த்தையினால் இஸ்ரவேலர்களுக்கும் நமக்கும் வாக்களித்த மீட்பை அவர் நிறைவேற்றினார் என்று இது நமக்குச் சொல்லுகிறது.

"சீயோன் குமாரத்தி திராட்சத்தோட்டத்தில் உள்ள ஒரு குச்சுபோலவும் வெள்ளரித் தோட்டத்திலுள்ள ஒரு குடிசைபோலவும், முற்றிக்கை போடப்பட்ட ஒரு பட்டணம் போலவும் மீந்திருக்கிறாள்." என்று ஏசாயா 1:18 இல் யாவே கர்த்தர் சொல்லி இருந்தார். மேலும் ஆசரிப்புக் கூடாரத்தில் பலிகள் எப்படி வழங்கப்படுகிறது என்பதை ஆளுகை செய்யும் பழைய ஏற்பாட்டினுடைய பலி முறைக்கு கீழ் இஸ்ரவேல் மக்களுடைய பாவங்கள் கைகளை வைப்பதின் மூலம் பலி ஆட்டிற்குள் செலுத்தப்படுகிறது என்பது தான் இஸ்ரவேலர்களுக்கும் நமக்கும் கர்த்தர் கொடுத்த சத்தியமாயிருக்கிறது. உலகத்தினுடைய எல்லா மக்களையும் அவர்களுடைய தினசரி பாவங்களிலிருந்தும் வருடாந்தர பாவங்களிலிருந்தும், வருங்காலத்தில் தேவ ஆட்டுக்குட்டியின் மூலம் அவர் மீட்பார் என்ற சத்தியத்தின் கர்த்தருடைய வெளிப்படுத்தலாக இது இருந்தது.

மேசியா வருவார் என்ற சத்தியத்தின் அடையாளமாகவும் இது இருந்தது. இதனால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டினுடைய வழிகளுக்கு ஏற்ப அவருடைய ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டதின் மூலம் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொண்ட பொழுது இது கர்த்தருடைய உடன்படிக்கையின் நிறைவேறுதலாய் இருந்தது. அவருடைய சத்தியத்தின் வார்த்தையையும் நமக்கு கொடுத்த பிறகு, வாக்களித்ததைப் போல அவர் அவற்றை எல்லாம் நிறைவேற்றியுள்ளார் என்பதை கர்த்தர் நமக்கு காண்பித்துள்ளார். இயேசு பெற்றுக்கொண்ட

ஞானஸ்நானம், உடன்படிக்கையின் படி கர்த்தர் அவருடைய எல்லா உடன்படிக்கையையும் நிறைவேற்றியுள்ளார் என்று இந்த சத்தியம் வெளிப்படுத்துகிறது.

நீர், இரத்தம் மற்றும் ஆவியினால் வந்த இயேசு கிறிஸ்து

இயேசு ஏன் யோவானால் ஞானஸ்நானம் செய்யப்பட்டார்? மனித குலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்து கொள்வதும், நம்முடைய சார்பாக பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பை பெற்றுக்கொள்வதும் இதற்கு காரணமாயிருந்தது. மனித குலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் மறைய செய்வதற்கும், நம்முடைய உண்மையான மீட்பர் ஆவதற்கும், இயேசு யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டு சிலுவைக்குச் சென்று, இரத்தம் சிந்தி அதன் மேல் மரித்தார். இப்படி செய்ததின் மூலம் அவர் நம்முடைய எல்லாப் பாவங்களை மட்டும் கழுவவில்லை, ஆனால் நம்முடைய சார்பாக இந்த பாவங்களுக்கான எல்லா நியாயத்தீர்ப்பையும் பெற்றுகொண்டு, இதன் மூலம் நம்முடைய நித்திய மீட்பராகவும் ஆகியுள்ளார். இயேசு, யோவானால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்ட பொழுது நம்முடைய எல்லாப் பாவங்களும் அவருக்குள் செலுத்தப்பட்டது. மேலும் உலகத்தினுடைய இந்த பாவங்களை, அவர் சிலுவைக்கு சுமந்து சென்றார். இயேசு, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டதாலும் உலகத்தினுடைய இந்தப் பாவங்களை சிலுவைக்குச் சுமந்து சென்றதாலும், கொல்லப்படவும், அவருடைய இரத்தத்தைச் சிந்தவும், நம்முடைய இடத்திலிருந்து மரிக்கவும் வேண்டியிருந்தது.

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு,

நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." என்று ஏசாயா 53:5 சொல்லுகிறது. நம்முடைய மூதாதையனான ஆதாமிடமிருந்து நமக்கு பரம்பரை சொத்தாக வந்த நம்முடைய உண்மையான பாவங்கள் மற்றும் நம்முடைய வாழ்க்கை முழுவதும் நாம் செய்யும் நம்முடைய சொந்த பாவங்கள் ஆகியவை, நம்முடைய தேவனுடைய ஞானஸ்நானத்தின் மூலமாக அவருக்குள் செலுத்தப்பட்டது. மேலும் இந்த எல்லாப் பாவங்களுக்காகவும் அவர் நியாயந்தீர்க்கப்பட்டார். இப்படி நீர் மற்றும் இரத்தத்தின் மூலம் நம்மிடம் வந்து, நம்முடைய தேவன் நம்முடைய எல்லாப் பாவங்களையும் மறையச் செய்துள்ளார் (1 யோவான் 5:5-8).

அப்படியானால், நம்முடைய எல்லாப் பாவங்களையும் பொருப்பெடுத்துக் கொண்டு அவற்றை எல்லாம் மறையச் செய்த நம்முடைய மீட்பரும் மேசியாவுமான இந்த இயேசு கிறிஸ்து யார்? *"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்"* என்று ஆதியாகமம் 1:1 குறிப்பிடுகிறது. உலகத்தை அவருடைய வார்த்தையால் படைத்த இந்த பெரிய கர்த்தர் யார்? என்னையும் உங்களையும், உலகத்தினுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிப்பதற்காக, அவருடைய ஞானஸ்நானத்தின் நீரினால் வந்தவரும் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களுக்காகவும் நியாயந் தீர்க்கப்படுவதற்கு, சிலுவையின் மீது இரத்தத்தைச் சிந்தி, மீட்பராக வந்த பாவிகளுடைய மேசியாவை தவிர அவர் வேறு யாரும் இல்லை. நீர், இரத்தம் மற்றும் ஆவியின் மூலமாக இயேசு நம்மை நம்முடைய பாவங்களிலிருந்தும் நியாயத்தீர்ப்பில் இருந்தும் விடுவித்துள்ளார். நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக்கொள்வதற்கும்,

நம்முடைய இடத்திலிருந்து இந்த பாவங்களுக்காக நியாயந்தீர்க்கப்படுவதற்கும் நம்முடைய தேவன் நம்மிடத்திற்கு நம்முடைய மீட்பராக வந்தார்.

இயேசு கிறிஸ்து தேவகுமாரனாகவும் தாமே கர்த்தராகவும் இருக்கிறார், ஏனென்றால் அவர் தான் நம்முடைய கர்த்தர். இயேசு என்றால் "அவருடைய மக்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து விடுவிக்கும் மீட்பர்" என்று அர்த்தம். (மத்தேயு 1:21) "கிறிஸ்து" அதாவது கிரேக்கத்தில் *"பசிலியஸ்"* என்றால் "ராஜாதி ராஜா" என்று அர்த்தம். இயேசு தான் முழு உலகத்தையும் படைத்த படைப்பாளராகவும் எல்லோருடைய முற்றிலுமான ஆட்சியாளராகவும் பாவிகளுடைய மீட்பராகவும் சாத்தானை நியாயந்தீர்க்கும் ராஜாதி ராஜாவாகவும் இருக்கிறார்.

இந்த முழுமையான கர்த்தர் அவருடைய சொந்த சாயலினால் மனிதனைப் படைத்தார். அவருடைய சொந்த படைப்பான நாம், பலவீனங்களினால் இரட்சிப்பதற்கு வாக்களித்தார். மேலும் இந்த சத்தியத்தை நிறைவேற்றுவதற்காக அவர் நம்மிடம் வந்தார். மேலும் நம்மை பாவமற்றவர்களாகவும் கர்த்தருடய முழுமையான மக்களாக்குவதற்காகவும், நம்முடைய தேவனே நீர், இரத்தம் மற்றும் ஆவியின் மூலம் நம்மிடம் வந்தார் நம்முடைய எல்லாப் பாவங்களையும் மறையச் செய்வதற்காக படைப்பாளராகிய மேசியா மனித சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்தார்.

யோர்தான் நதியில், யோவானிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதன் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் தன் மீது எடுத்துக்கொண்டார். மேலும் சிலுவையின் மீது மரித்ததின் மூலம் நம்முடைய இடத்திலிருந்து நம்முடைய எல்லாப் பாவங்களுக்காகவும் அவர் நியாயந் தீர்க்கப்பட்டார். இயேசு நமக்கு மேசியாவாக இருந்தாலும், அவர் நம்முடைய மீட்பராகவும், நம்முடைய வாழ்க்கையின் தேவனாகவும்

இருப்பதால், அவரை விசுவாசிப்பதின் மூலம் புதிய மற்றும் நித்திய வாழ்க்கையை நாம் ஈட்ட முடியும். இதனால் மேசியா நம்முடைய கர்த்தராக ஆகியுள்ளார். இதனால் தான் ஆசரிப்புக் கூடார வாயிலின் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது. ஏனென்றால், நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்முடைய பாவங்களின் நியாயந்தீர்ப்பிலிருந்தும் விடுவிக்கும் நீர் மற்றும் ஆவியின் மர்மமாய் இது இருந்தது.

தேவன் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சித்துள்ளார் என்ற சத்தியம் பொய்யானாது இல்லை. நம்முடைய தேவன் அவருடைய மீட்பை சந்தேகத்துடன் நமக்கு வாக்களிக்க வில்லை. அதை அவர் முரட்டுத்தனமாக சாதிக்கவில்லை. அவர் நம்மை அவருடைய நீர் மற்றும் இரத்தத்தினால் இரட்சித்துள்ளார் என்ற அவருடைய உறுதியான சத்தியத்தைத் தவிர அவரை விசுவாசிப்பவர்களின் விசுவாசத்தை தன்னிச்சையாக அங்கீகரிக்கவும் முடியவில்லை. இதனால் நம்முடைய தேவன் பெயரளவில் அவரை விசுவாசிப்பவர்களைக் குறித்து, *"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்தேயு 7:21)* என்று சொன்னார்.

கள்ளப் போதகர்கள் இயேசுவின் நாமத்தினால் மக்கள் பரிசுத்த ஆவியை மக்கள் பெற்றுக் கொள்ளும்படி செய்தார்கள் என்றும், அவருடைய நாமத்தினால் பிசாசுகளை வெளியே துரத்தினார்கள் என்றும் அவருடைய நாமத்தினால் பல அற்புதங்களைச் செய்தார்கள் என்றும் வலியுறுத்துகிறார்கள், ஆனால் மத்தேயு 7:23 இல் *"நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்"* என்று

கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறார். கிறிஸ்தவர்களுக்குள் பாவமானவர்கள் அநேகர் இருக்கிறார்கள் என்றும், நியாயத்தீர்ப்பின் நாளன்று அவர்களுடைய பாவங்களுக்காக நியாயம் தீர்க்கப்படுவார்கள் என்றும், பிறகு நரகத்திற்கு தள்ளப்படுவார்கள் என்றும் இது நமக்கு சொல்லுகிறது.

"இயேசுதான் நம்முடைய மீட்பர், இயேசு நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் சந்தேகத்திற்கு இடமின்றி இரட்சித்துள்ளார்" என்று, தெளிவாக அறிக்கையிடும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இது போன்ற முறையீடுகளை செய்த பொழுதிலும் மேசியா அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் அவர்களுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக்கொண்டு, அவர்களுடைய பாவங்களையும் சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தை சிந்தியதின் மூலம் இந்த பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பையும் ஏற்றுகொண்டார் என்பதை கற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்வதில்லை. இந்த மக்கள் எல்லோரும் பாவமானவர்களாக இருந்து கொண்டு கர்த்தருக்கு முன்பாக செல்வார்கள். ஏனென்றால் அவர்கள் பல உலக பிரகாரமான மதங்களில் ஒன்றை முழுமையாக வழிபட்டு கொண்டிருந்தது போல பெயரளவில் மட்டுமே விசுவாசிக்கிறார்கள்.

இதைப்போல் *"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்"* என்று கர்த்தர் சொல்லியிருக்கும் சித்தத்திற்கு ஏற்ப அவர்கள் விசுவாசிக்காததால் அவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இயேசுவை மக்கள் விசுவாசிக்கிறார்களோ இல்லையோ தங்களுடைய இருதயங்களில் பாவம் உடையவர்கள் கர்த்தருடைய பரலோக ராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியாது. பாவம் காணப்படாதவர்கள் அதற்குள் நுழைவதற்கு தகுதியில்லாதவர்களாய் இருக்கிறார்கள். இதனால் இந்த

உலகத்தில் இருக்கும்பொழுது இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலம் மட்டுமே பரலோகத்திற்குள் நுழைய தகுதியுடையவர்களாக ஆகிறார்கள் என்பதை அவர்கள் உறுதிச் செய்துகொள்ள வேண்டும். ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாயிலுடைய திரையை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்படுவதின் மூலம் செய்வது மேசியாவினுடைய அருளாக இருந்தது. பாவங்களினால் நரகத்திற்கு தள்ளப்படவுள்ளவர்கள் இதை விசுவாசிக்க வேண்டும்.

மக்கள் இந்த சத்தியத்தைப் பற்றி அறியாமல் இருப்பதாலும், அவர்கள் சுயமாக பெற்றுக்கொண்ட அவர்களுடைய தவறான ஞானத்தினாலும், இயேசுவை விசுவாசிப்பதால் அவர்கள் இன்னமும் பாவமானவர்களாக இருக்கிறார்கள். ஆசரிப்புக் கூடார பொருட்களில் மறைந்திருக்கும் சத்தியத்திற்கு ஏற்ப விசுவாசிப்பதற்கு பதிலாக அவர்கள் சுயமாக அவர்களுடைய மீட்பரை பற்றி நினைத்தாலும், இந்த நினைவுகளின் அடிப்படையில் அவர்களுடைய சொந்த இரட்சிப்பின் தத்துவங்களை உருவாக்கியதாலும் கர்த்தருக்கு மனந்திரும்புதலின் ஜெபங்களை அளிப்பதனால், அவர்களுடைய சொந்த முயற்சியின் மூலம் மீட்பு வருகிறது என்று விசுவாசிப்பதாலும், அவர்களுடைய படிப் படியாக பரிசுத்தமாதலை அடைய முயற்சி செய்வதாலும் அவர்களிடம் இன்னமும் பாவம் இருக்கிறது.

இந்த உலகத்தில் இயேசுவை தங்களுடைய சொந்த மீட்பராக கூறுபவர்கள் அநேகர் இருக்கிறார்கள். இருப்பினும் இயேசுவினுடைய ஞானஸ்நானத்தையும் அவருடைய இரத்தத்தையும் விசுவாசிப்பதில்லை. இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலை தங்களுடைய மீட்பாக விசுவாசிப்பதற்கு பதிலாக நீங்கள்

பாவமானவர்களாக இருந்தாலும் கூட, இயேசுவினுடைய இரத்தத்தை விசுவாசிப்பதின் மூலம் கர்த்தருடைய பரிசுத்த ராஜ்யத்திற்குள் நுழைய முடியும் என்று நினைக்கும் அநேகர் இந்த உலகத்தில் இருக்கிறார்கள்.

பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் ஆகியவற்றின் பொருத்தம்

கர்த்தருடைய எல்லா வார்த்தைக்கும் அதனுடைய பொருந்தும் ஜோடி இருக்கிறது என்று ஏசாயா 34:16 இல் கர்த்தர் நமக்கு சொல்லுகிறார். வேறு வார்த்தைகளில் கூறினால், கர்த்தருடைய வார்த்தைகள் எல்லாமே பொருந்துகிறது. கர்த்தருடைய பழைய ஏற்பாட்டினுடைய வார்த்தைகளுடன் பொருந்துகிறதா இல்லையா என்று நம்மை நோக்கி பார்க்கும் படி அவர் சொன்னார். பழைய ஏற்பாட்டில் எழுதியுள்ளதுக்கு, புதிய ஏற்பாட்டில் அதனுடைய தொடர்பு வார்த்தை இருக்கிறது. உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்கள், தங்களுடைய கைகளை பலி ஆட்டின் மீது வைப்பதின் மூலம் அவர்களுடைய பாவங்களை அதற்குள் செலுத்தினார்கள். இது புதிய ஏற்பாட்டில், நம் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக்கொள்வதற்காக இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டு இதன் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களும் அவருக்குள் செலுத்தப்பட்டதுடன் இது பொருந்துகிறது.

இயேசு அவருடைய நீர் மற்றும், இரத்தத்தின் மூலம் இந்த உலகத்திற்கு பலி காணிக்கையாகவும் பாவிகளுடைய மீட்பராகவும் வந்தார். அவருடைய ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டதன் மூலம் உலகத்தினுடைய பாவங்களை அவர் எடுக்காமல் இருந்திருந்தால், சிலுவையின் மீது மரிப்பதற்கு அவருக்கு

எந்த அவசியமும் இருந்திருக்காது. நம்முடைய தேவன், இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலினால் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தெளிவாக மறையச் செய்துள்ளார். இதுவும் கூட கர்த்தருடைய வார்த்தையால் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. உடனே இந்த வார்த்தையின் மூலம் நம்முடைய தேவன் நம்மிடம் வந்து, நம்முடைய சிவப்பான பாவங்களை கழுவிவிட்டு, அவற்றை பனியை போல வெள்ளையாக மாற்றினார்.

இந்த சத்தியத்தை உணருவதற்கு முன், சந்தேகமில்லாமல் நாம் முடிவில்லாத பாவங்களால் வழிந்து கொண்டிருந்தோம். இதனால் கர்த்தருக்கு முன் பெருமைப்படுத்தி கொள்ள நம்மிடம் ஒன்றுமில்லை. கர்த்தர்க்கு முன்பு பெருமைப்படுத்தி கொள்ள நம்மிடம் ஒன்றுமில்லை என்பது மட்டும் அல்ல, ஆனால் அவருக்கு முன்பு நம்பிக்கையுடன் இருப்பதற்கு நம்மிடம் ஒன்றுமே இல்லை. வேறு வார்த்தையில் கூறினால், காட்டுவதற்கு கூட நம்மை அனுமதிக்க கூடிய ஒன்றுமில்லை. கர்த்தருக்கு முன்பாக "ஆம், நீங்கள் செய்வது சரிதான்" என்று மட்டுமே நம்மால் சொல்ல முடியும்.

"நீ நரகத்திற்கு தள்ளப்படவுள்ள, பாவங்களின் விதையாய் இருக்கிறாய்."

"ஆம் நீங்கள் சொல்வது சரிதான்; தயவு செய்து என்னை மீட்டுக் கொள்ளுங்கள்."

"நீர் இரத்தம் மற்றும் ஆவியின் மூலம் இந்த வழியாக நான் உங்களை மீட்டுள்ளேன்."

"ஆம், கர்த்தாவே, நான் விசுவாசிக்கிறேன்."

எல்லா முறையும் "ஆம்" என்று மட்டுமே நம்மால் சொல்ல முடியும். கர்த்தருக்கு முன்பாக நின்று, "நான் இதைச் செய்தேன், அதைச் செய்தேன். இந்த அளவிற்கு நன்றாக நான் என் ஆலயத்தை தாங்கினேன். நான் இயேசுவை முழுமனதுடன் விசுவாசிக்கிறேன். வேறு யாரும் கற்பனை பண்ணி பார்க்கமுடியாத அளவிற்கு

பிடிவாதத்துடன் நான் என் விசுவாசத்தை பாதுகாத்துள்ளேன்" என்று நாம் அவரிடம் சொல்ல முடியாது.

தேவன் நம்முடைய எல்லாப் பாவங்களையும் எப்படி மறைய செய்தார்? நீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் மூலமும், பழைய ஏற்பாட்டின் மற்றும் புதிய ஏற்பாட்டின் வார்த்தையின் மூலமும் அவற்றை அவர் மறைய செய்தார் என்று நமக்கு காண்பித்துள்ளார். பழைய ஏற்பாட்டில், இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் மூலமாக நம்முடைய பாவங்களை அவர் மறைய செய்தார். ஆனால் புதிய ஏற்பாட்டில் இயேசு, இந்த பூமிக்கு மனிதனுடைய சரீரத்தில் வந்து யோவானிடமிருந்து பெற்றுக் கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொண்டு, சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தைச் சிந்தியதன் மூலம், நம்முடைய எல்லாப் பாவங்களையும் இந்தப் பாவங்களுக்கான தண்டனைகளையும் பொறுப்பெடுத்துக் கொண்டு அவர் நம்முடைய மீட்பரானார்.

ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதன் மூலம், நம்முடைய தேவன் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் ஒரே சமயத்தில் எடுத்துக் கொண்டார் (மத்தேயு 3:15). நம்முடைய உலக பிரகாரமான எல்லாப் பாவங்களும் இயேசுவினுடைய தோலுக்குள் செலுத்தப்பட்டது. அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் உலகத்தினுடைய நம்முடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்ட பிறகு அவர் இந்த பாவங்களை சிலுவைக்குச் சுமந்து சென்று, மரித்து, அவருடைய இரத்தத்தைச் சிந்தி, சிலுவையின் மீது மரித்து, மரணத்திலிருந்து மறுபடியும் எழுந்து, இதன்மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் மறையச் செய்தார். இப்படி இயேசு கிறிஸ்து நம்முடைய நிச்சயமான மீட்பராக ஆகியுள்ளார்.

நாம் பெற்றுக்கொண்ட கர்த்தருடைய நீதியானது, நீர்,

இரத்தம் மற்றும் ஆவியின் மூலம் இந்த உலகத்திற்கு வந்த இயேசு கிறிஸ்துவை விசுவாசித்ததின் மூலம் பெற்றுக்கொண்ட நீதியாய் இருக்கிறது. இது நாம் சரியாக பெற்றுக்கொண்ட மீட்பாய் இருக்கிறது. கர்த்தருக்கு முன்பு பெருமையடித்துக் கொள்வதற்கு எதுவும் இல்லை.

நம்முடைய நிச்சய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலம் நாம் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளோம். வேறு வார்த்தைகளில் கூறினால், பாவிகளாக இருந்த நாம் இயேசுவினுடைய ஞானஸ்நானத்தையும், நமக்காக அவர் சிந்திய இரத்தத்தை விசுவாசிப்பதின் மூலமும் பாவத்திற்கான மீட்பை பெற்றுள்ளோம். இயேசுவினுடைய இரட்சிப்பின் செய்கை நம்முடைய இரட்சிப்பின் 70 சதவிகிதத்திற்கும், மீதியுள்ள 30 சதவிகிதம் பாவம் செய்யக் கூடாது என்ற நம்முடைய சொந்த முயற்சிக்கும், கருதபடுவதாய் இருந்தால் படிப் படியாக நாம் பரிசுத்தமாவதற்கும், சிறிது சிறிதாக நம்முடைய மீட்பு நிறைவேற்றப்படுவதற்கும், நாம் முழு இரவும் ஆர்வத்துடன் ஜெபம் பண்ணிக் கொண்டு தங்க வேண்டியதாகவும், நம்முடைய மனந்திரும்புதலின் ஜெபங்களை வழங்கியும் சமுதாயத்தைத் தாங்கியும் அல்லது சாத்தியமாகக்கூடிய எதையும், எல்லாவற்றையும் முயற்சி செய்வதில் நம் ஒவ்வொரு நாளையும் செலவளிக்க வேண்டியிருக்கும்.

ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் *"நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலே தேவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ் செய்கிறேன். ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே*

நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை." (ரோமர் 7:24-8:1) இல் என்று சொன்னான். இப்படி பவுல் அறிக்கையிட்டதைப் போல அவன் விசுவாசித்ததைப் போல நாமும் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து இந்த மரண சரீரத்தின் மூலம் 100 சதவிகிதம் நம்மை முழுமையாக இரட்சித்துள்ளார் என்று வேதாகமம் நமக்கு சொல்லுகிறது. பின்பு யார் நம்மை தண்டிக்க முடியும்? யாரும் ஒரு போதும் நம்மை தண்டிக்க முடியாது. ஏனென்றால் இயேசு கிறிஸ்து நம்முடைய சொந்த பாவங்களை கருதாமல் 100 சதவிகிதம் நம்மை ஏற்கெனவே இரட்சித்துள்ளார்.

நீங்களும் நானும் கூட ஆவிக்குரிய பரிசேயராக இருந்தோம்

உங்களில் சிலர் ஒரு சிறிய அளவிற்கு இயேசுவை தெரிந்து கொண்டு நீண்ட காலமாக விசுவாசித்திருக்கலாம். வேறு வார்த்தையில் கூறினால், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை நீங்கள் சந்தித்ததற்கு முன்னரே இயேசுவை உங்களுடைய மீட்பராக நீங்கள் விசுவாசித்தீர்கள். பத்து வருடங்களுக்கு மறுபடியும் பிறக்காமலே நான் ஒரு கிறிஸ்தவனாக இருந்தேன்.

இயேசுவை எங்களுடைய சொந்த மீட்பராக நாம் விசுவாசித்த பொழுது இது புத்துணர்ச்சி அளிக்கும் அனுபவமாக இருந்தது. இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் சத்தியத்தை பற்றி நாம் அறியாமல் இருந்தாலும் கூட இயேசுவை நம்முடைய மீட்பராக சந்தேகத்திற்கு இடமில்லாமல் விசுவாசிப்பதின் மூலம் நாம் மீட்கப்படுவோம் என்று நாம் நினைக்கும் அளவிற்கு இந்த தொடக்கம் அவ்வளவு புத்துணர்ச்சியாய இருந்தது.

இயேசுவை முதலில் நான் விசுவாசித்த பொழுது, என்னுடைய இருதயம் மகிழ்ச்சியால் நிரப்பப்பட்டிருந்தது. இதனால் நான் இயேசுவை முதலில் விசுவாசித்த பொழுது மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால் ஐந்து வருடங்களுக்குப் பிறகு என்னை நான் பார்க்க தொடங்கினேன். மேலும் நான் செய்துள்ள பாவங்களால்நான் சூழப்பட்டுள்ளதை பார்த்தேன். மேலும் நான் இன்னமும் விடுதலையாகவில்லை என்பதை அடையாளம் கண்டு கொண்டேன். என்னுடைய தொடக்க கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல் ஐந்து வருடங்களில் நான் பாவங்கள் செய்தேனா இல்லை எதையுமே செய்யவில்லையா என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்னை உங்களுக்கு தெரியுமோ இல்லையோ, விடை தெளிவாக உள்ளது, ஆம் நான் செய்தேன் இந்த நேரத்தில் சத்தியம் எனக்கு தெரியாத பொழுது நான் பாவம் செய்த ஒவ்வொரு முறையும் நான் சித்திரவதை அடைந்தேன். மேலும் இந்த கொடூர துன்பத்திலிருந்து வெளியே வருவதற்கு மனந்திரும்புதலின் ஜெபங்களை நான் அளிக்க வேண்டியிருந்தது. சில வேலைகளில் மூன்று நாட்களுக்கு கூட நான் உபவாசமிருக்க வேண்டியிருந்தது. "♫வல்லமையான கிருபை! ♫என்னைப் போன்ற ஒரு துரதிஷ்டசாலியை மீட்டுள்ள இந்த சத்தம் எவ்வளவு இனிமையாய் இருக்கிறது! ♫" என்று கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்ல என்னை அனுமதித்து பின்பு என்னுடைய இருதயத்தின் சுமை சற்று குறைவது போல தோன்றியது. ஆனால், இதற்கு பிறகு நிச்சயமாக மறுபடியும் பாவம் செய்வதில் நான் முடிப்பேன். என்னிடம் பல குறைபாடுகள் இருந்தாலும், நான் களங்கம் நிறைந்தவனாய் இருந்தாலும், ஒவ்வொரு நாளும் நான் பாவம் செய்த பொழுது, இப்படிச் செய்ததற்கு என்னையே நான் வெறுத்திருக்கிறேன். என்னுடைய பாவத்தின் பிரச்சனைகளை ஒரு முறை கூட என்னை தீர்க்க

முடியவில்லை.

இந்த சூழ்நிலைகளில், இன்னமும் ஐந்து வருடங்கள் சென்றன. மேலும் இப்படி பத்து வருடங்களுக்கு கிறிஸ்தவனாக இருந்த பொழுது, திடீரென அந்த எல்லா வருடங்கள் முழுவதும் எவ்வளவு பாவங்களை நான் செய்துள்ளேன் என்பதை கண்டுபிடித்து அதிர்ச்சியடைந்தேன். ஒவ்வொரு நாளும் இது போன்ற பெரிய பாவங்கள் செய்து கொண்டிருந்த என்னை பார்த்தவுடன் மிகவும் சோகமடைந்தேன். மேலும் மனமுடைந்து போனேன். சட்டத்திற்கு முன்பு நான் நின்ற பொழுது நான் எவ்வளவு பாவமானவனாக இருந்தேன் என்பதை கண்டுபிடித்தேன். கர்த்தருக்கு முன்பு நிற்பது எனக்கு மிகவும் கடினமானது. இயேசுவை நன்கு தெரிந்து கொள்ளவும், அவரை விசுவாசிக்கவும். நல்ல மனச்சாட்சியுடன் முறையிடக்கூட முடியாத பாவியாக நான் மாறினேன். இதனால் கிறிஸ்தவனாக நான் பத்தாவது வருடத்திற்குள் நுழையும் பொழுது எனக்கு நானே என்னுடைய பாவத்தன்மையை அறிவித்துக்கொள்வதை என்னால் தடுக்க முடியவில்லை.

இயேசுவை முதலில் விசுவாசித்த பொழுது நல்ல கிறிஸ்தவனாக இருந்தேன் என்று நான் நினைத்தேன். ஆனால் நேரம் கடந்த பிறகு கர்த்தருக்கு முன்பாக பெருமையடித்து கொள்ள என்னிடம் ஒன்றும் இல்லை என்பதை அதிகமதிகமாக நான் உணர்ந்தேன். "நான் ஒரு பரிசேயன், பரிசேயன் வேதாகமத்தில் மட்டும் காணப்படுவதில்லை. ஏனென்றால் நான் இன்றைய பரிசேயனாய் உள்ளேன் என்று நான் கண்டு கொண்டேன்."

பரிசேயர் தங்களுடைய போலியான பரிசுத்தத்தை உடைய ஒரு வகை மக்களாக இருக்கிறார்கள். தங்களுடைய பகுதிகளில் வேதாகமத்தை செருகியபடி ஒவ்வொரு ஞாயிற்று கிழமையும் ஆலயத்திற்கு செல்லும் வழியில், காலை வணக்கம், அல்லேலூயா, என்று அவர்களுடைய சக

கிறிஸ்தவர்களிடத்திம் சத்தமிடுகிறார்கள். மேலும் அவர்கள் ஜெபித்துக் கொண்டிருக்கும் பொழுதும், யாராவது சிலுவையைப் பற்றி பேசுக்கொண்டிருப்பதை ஒவ்வொரு முறை அவர்கள் கேட்கும் பொழுதும், இறுதியில் அழுகிறார்கள். நானும் கூட இயேசுவினுடைய இரத்தத்தை நினைத்துக்கொண்டு அதிக கண்ணீரை வடித்திருக்கிறேன். உண்மையான ஆராதனை இது தான் என்று நினைத்தேன். ஆனால் இந்த உலகத்தில் வாழும் பொழுது, பாவத்திற்கு மேல் பாவம் செய்து கொண்டு எல்லோரும் அவர்களைப் பற்றி கண்டுபிடிக்கிறார்கள். இதனால், மக்கள் மறுபடியும் ஒரு முறை, மனந்திரும்புதலின் ஜெபங்களை கொடுப்பதற்கு திரும்புகிறார்கள். அவர்கள் சிறிது காலத்திற்கு சிறப்பாக உணரலாம். ஆனால் விரைவிலோ அல்லது தாமதமாகவோ, அவர்கள் எல்லோரும் இந்த மனந்திரும்புதலின் ஜெபங்களிலிருந்து ஒடி விடுவார்கள். ஏனென்றால் அவர்கள் செய்துள்ள பாவங்கள் அநேகம் இருக்கின்றன. சில மக்கள் அந்நிய பாஷையிலேயும் பேசுகிறார்கள். பிறகு தரிசனங்களை காண்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லோரும் பிரயோஜனமற்றவர்கள். அவர்கள் எந்த வகையான முயற்சி செய்திருந்தாலும் சரி, அவர்களுடைய இருதயங்களில் இருக்கும் அவர்களுடைய பாவங்களின் பிரச்சனையை தீர்ப்பதற்கு இதனால் எந்த உபயோகமும் இல்லை.

கர்த்தருக்கு முன்பாக அவர்கள் மதிப்பில்லாதவர்கள் என்பதை இறுதியில் அவர்கள் உணர்ந்து, அவர்களுடைய பாவங்களுக்காக நரகத்திற்கு தள்ளப்படவுள்ளார்கள் என்பதை கண்டு கொள்வார்கள், இந்த உணர்தல் தாமதமாக வந்தாலும் கூட, இது இன்னமும் ஒரு அதிர்ஷடமான வரவாய் இருக்கும். இயேசுவை எவ்வளவு நீண்ட காலத்திற்கு நாம் விசுவாசித்தோமோ, அவ்வளவு பயங்கரமான பாவிகளாய் நாம் இருந்தோம் என்பதை அதிகமாக நாம் உணருவோம். ஆனால் இதை மறைப்பதில்

பரிசேயர்கள் சிறந்தவர்கள். அவர்களுடைய பக்திக்காக அவர்களை சுற்றியுள்ளவர்கள் அவர்களை அங்கீகரிக்கும் அளவிற்கு தங்களுடைய இருதயங்களில் பாவங்களை மறைப்பதிலும் ஏமாற்றுத்தனம் செய்வதிலும் சிறந்தவர்களாய் இருக்கின்றார்கள்.

இந்த உலகத்தினுடைய மதவாதிகள் சிறப்பாக ஒருவரை ஒருவர் மதிக்கிறார்கள் ஆனால் மற்றவர்களிடமிருந்து கிடைக்கும் மதிப்பும், அங்கீகாரமும் கருதப்படாமல் கர்த்தருக்கு முன்பு அவர்கள் நிற்கும் பொழுது அவர்கள் வேறும் பெரிய பாவத்தின் குவியலாக மட்டுமே இருக்கிறார்கள்.

சத்தியத்தைப் பற்றி நமக்கு தெரியாத பொழுது நாமும் கூட, நம்முடைய மனந்திரும்புதலில் ஜெபங்களை ஊக்கத்துடன் ஏறெடுத்துக்கொண்டிருந்தோம். ஆனால் சற்று நேரத்திற்கு பிறகு நாம் சோர்ந்து விடுகிறோம். இதனால் "தேவனே உமக்கு என்ன செய்யவேண்டும் என்று தோன்றுகிறதோ அதை செய்யும். என்னிடம் அதிக பாவங்கள் இருக்கின்றன. நான் மறுபடியும் பாவம் செய்துவிட்டேன். இதைப் பற்றி உம்மிடம் சொல்லுவதற்கு தர்ம சங்கடமாயிருக்கிறது," என்று இறுதியில் ஜெபிப்போம். இதனுடைய வழி அதிக கடினமாய் இருந்தாலும், நாம் நம்முடைய பாவங்களை அறிக்கையிடும் பொழுதெல்லாம் அவர் சந்தோஷப்படுவார். மேலும் அவருடைய நீதியினால் நம்முடைய பாவங்களை அவர் மன்னிப்பார். மேலும் எல்லா அநீதியிலிருந்தும் சுத்தப்படுத்துவார் என்று நம்மிடம் சொல்லப்பட்டதால், "தேவனே நான் பாவம் செய்துவிட்டேன், தேவனே தயவு செய்து என்னை மன்னியும்!" என்று அவரிடம் நாம் தொடர்ந்து ஜெபித்தோம். இருப்பினும் நம்முடைய இருதயங்களில் பாவம் விடப்பட்டிருந்தது.

கர்த்தரிடம் ஜெபிப்பதற்கு மக்கள் எப்பொழுதெல்லாம் தங்களுடைய தலையை குனிகிறார்களோ, அவர்களுடைய பாவங்களைப் பற்றி அவர்களுடைய மனச்சாட்சி

ஞாபகப்படுத்தி அவர்களுடைய இருதயங்களை சாப்பிட்டுவிடுகிறது. "இவ்வளவு பாவம் செய்து கொண்டு கர்த்தரிடத்தில் ஜெபிப்பதற்கு உனக்கு எவ்வளவு தைரியம்?" நம்முடைய மனச்சாட்சி நம்மிடம் சொல்லிக்கொண்டு நம்முடைய இருதயங்களை வேதனைப்படுத்துகிறது.

இதனால் சற்று நேரத்திற்கு பிறகு நம்மிடம் அதிகமாக சொல்லுவதற்கு எதுவும் இல்லாததால் "தேவனே தேவனே" என்று முடிவில் அழுகிறோம். அடிக்கடி ஒரு மலைக்கு மேலே போய் தேவனுடைய நாமத்தைப் பற்றி நாம் சத்தம் போட்டுக்கொண்டிருப்பதை நாமே பார்த்தோம். மக்களுடைய கவனத்தைக் கவருவதைத் தடுப்பதற்காக நாம் இரவில் தாமதமாக ஒரு மலையின் மீது ஏறி, அங்கிருந்த ஒரு குகைக்குள் நுழைந்து தேவனுடைய நாமத்தை குறித்து அழுதுள்ளோம். ஆனால் இதுவும் கூட நமக்கு நாமே தகுதியை பெற்றுக்கொள்வதாக இருந்தது. மேலும் இப்படி நம்முடைய பாவங்கள் நம்முடன் இருந்தன.

"நாம் ஒரு பொழுதும் பாவமானவர்கள் இல்லை" என்று நமக்கு நாமே சொல்லிக்கொண்டு நம்முடைய மனச்சாட்சியை சமாதானம் படுத்தி கொள்ளவும் நாம் முயற்சி செய்திருப்போம். "என்னுடைய பாவங்களை மறையச் செய்யும் அளவிற்கு கர்த்தர் அதிக இரக்கமானவராய் இருக்கிறார். நான் மூன்று நாட்களுக்கு உபவாசம் இருந்து ஜெபித்திருக்கிறேன். எல்லாவற்றிற்கும் அதிகமாக அந்த அளவிற்கு நான் பாவம் செய்யவில்லை என்று நினைக்கிறேன். நம்முடைய இரக்கமான கர்த்தர் என்னை மன்னிக்கமாட்டாரா என்ன?"

நாம், கர்த்தரை அவருடைய இரக்க தன்மைக்கு ஸ்தோத்தரிக்க வேண்டியிருந்தால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வோமா? கர்த்தருக்கு முன் நாம் பாவமானவர்களாய் இருக்கும் பொழுது நாம் நம்முடைய இருதயங்களை எப்படி ஏமாற்றிக் கொள்ளமுடியும்? நாம் இப்படி ஒரு போதும் செய்ய முடியாது. நம்முடைய ஆலயங்களினுடைய

தலைமை தாங்கும் இடங்களுக்கு நாம் எவ்வளவு உயரம் ஏறியிருந்தாலும், மற்றவர்களால் எவ்வளவு கட்டளையிடப்பட்டு இருந்தாலும் சரி. சுயமாக இன்னமும் பாவம் செய்வதை நாம் தொடரும் வரையிலும் இந்த பாவங்களிலிருந்து எப்பொழுதுமே விடுதலையாக முடியாது. மேலும் இப்படி இறுதியில் ஏமாற்றுக்காரனாக ஆகியுள்ளோம்.

பாவமான ஆசைகள் நம்முடைய இருதயங்களில் தொடர்ந்து எழுந்து கொண்டிருக்கின்றன. சிலுவையின் மீதான இயேசுவினுடைய இரத்தத்தை பற்றி எண்ணமுடியாத முறை நாம் பேசி இருந்தாலும், சிலுவையின் மீதான அவருடைய இரத்தத்தை நினைத்து கொண்டு நாம் அதிக கண்ணீர் வடித்திருந்தாலும், நாம் நல்ல கிறிஸ்தவர்களாய் இருந்திருந்தாலும், சரியான நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை சந்திக்கும் வரை நாம் இன்னமும் பாவமானவர்களாகவே இருந்தோம். கிறிஸ்துவின் எல்லாச் சடங்குகளுக்கு ஏற்ப வாழ்ந்திருந்த போதிலும் இன்னமும் நம்மிடம் பாவம் இருந்தது. இது பரிசேயர்களின் மதமாய் இருந்தது. இந்த வகையான விசுவாசம் உடைய அநேக மக்கள் இன்னமும் இந்த பூமியில் இருக்கிறார்கள். மேலும் அவர்கள் நம்முடைய கிறிஸ்தவ சமுதாயத்திலும் கூட காணப்படுகிறார்கள்.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களும் மறைந்தன

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைத் தெரிந்து கொள்வதற்கு முன்பும், இந்த நற்செய்தியை விசுவாசிப்பதற்கு முன்பும் நம்முடைய இருதயங்களில் பாவம் இருந்தது. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல்

மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்தியத்தை நாம் விசுவாசிப்பதற்கு முன்னால் நம்முடைய மனச்சாட்சி பாவமானதாய் இருந்தது. நேர்மையாக கூறினால், கர்த்தருக்கு முன் நாமெல்லோரும் பாவிகளாக இருந்தோம். மேலும் நம்முடைய பாவங்களுக்காக நாமெல்லோரும் நரகத்திற்கு தள்ளப்பட வேண்டியிருந்தோம், ஏனென்றால் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது. இப்படி, நம்முடைய பாவங்களினால் நாம் அதிகமாக துன்புறுத்தபட்டோம், மேலும் நம்முடைய பாவங்களுக்கான, நம் மீதான கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால், நாம் ஆவிக்குரியதாகவும் சரீர ரீதியாகவும் நரகத்திற்கு தள்ளப்படவேண்டியிருந்தோம்.

நாம் பல மக்களை கிறிஸ்தவத்திற்கு மாற்றி அவர்களுக்கு போதித்துள்ளோம். நம்முடைய மனச்சாட்சியை கூட சுத்தப்படுத்த முடியாமல் இருக்கும் பொழுது நாம் வேலை செய்தோம். கர்த்தருக்கு முன் இதை நம்மால் மறுக்க முடியாது. நம்முடைய இருதயங்கள் பாவமானவைகள் என்றும் நாம் நரகத்துக்கு தள்ளப்படவுள்ளோம் என்றும் கர்த்தருக்கு முன்பு நாம் கண்டு கொள்கிறோம்.

என்னிடம் எப்பொழுதுமே தீர்க்கமுடியாத ஒரு கேள்வி இருந்தது. "நம்முடைய தேவன் இந்த உலகத்துக்கு வந்த பொழுது அவர் ஏன் ஞானஸ்நானம் செய்யப்பட்டார்?" இயேசு, ஏன் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டார் என்று கண்டுபிடிக்க விருப்பப்பட்டேன். ஏன் எந்த காரணத்திற்காக இயேசு ஞானஸ்நானம் எடுக்க வேண்டியிருந்தது? நம்முடைய சொந்த ஞானஸ்நானத்தை, இயேசுவில் நமக்கு இருக்கும் விசுவாசத்தின் அடையாளாமாக என்னால் புரிந்து கொள்ளமுடிந்தது. ஆனால் யோவான் ஸ்நானகனால், இயேசு ஏன் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார் என்பதை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அவர் ஏன்

ஞானஸ்நானம் அளிக்கப்பட்டார்? ஏன்?

"பாதிரியாரே என்னிடம் ஒரு கேள்வி இருக்கிறது? நான் கேட்டால் வருந்துவீர்களா?" என்று கிறிஸ்தவ சமுதாயத்தில் இருக்கும் சில தலைவர்களிடம் கேட்டேன்? "கேளுங்கள்" அவர்கள் என்னிடம் சொன்னார்கள். இதனால் நான் அவர்களிடம் கேட்டேன். "இது வேதாகமத்தைப் பற்றியது. புதிய ஏற்பாட்டில் யோவானிடமிருந்து இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் என்று தெளிவாக இருக்கிறது. ஆனால் அவர் ஏன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் என்பதில் நாம் உறுதியாக இல்லை. உங்களுக்கு ஏன் என்று தெரியுமா பாதிரியாரே?" "அது கூட உங்களுக்கு தெரியாதா? எங்களுடைய ஞாயிறு பள்ளியில் இருக்கும் எங்களுடைய பிள்ளைகளுக்கு கூட தெரிந்ததாய் இது இருக்கிறது. வேதாகம புத்தகங்களிலும், வேதாகம அகராதியிலும் இது காணப்படுகிறது. நம்மை உதாரணத்தால் மாதிரியாக நம்மை நடத்துவதற்கும், அவருடைய பணியை நமக்கு காண்பிப்பதற்கும் இயேசு ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளவில்லையா?" என்று என்னிடம் சொல்லி பிறகு சிரித்தார்கள். இதனால் "ஆனால், பாதிரியாரே நம்முடைய ஞாயிறு பள்ளியில் இருக்கும் பிள்ளைகளுக்கு கூட இது தெரியும் அளவிற்கு, பதில் அவ்வளவு சுலபமாக இருந்திருக்குமானால், இதை உண்மையான புத்தகத்திலும் வரலாற்று பூர்வமாகவும் ஆராய்தேன். ஆனால் அவருடைய ஞானஸ்நானம் அதில் குறிப்பிடவில்லை. இயேசு, யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதற்கு காரணம் எதுவும் இருந்திருக்காது" என்று நான் சொன்னேன்.

நான் தொடர்ந்து கேட்க தொடங்கினேன். நான் கிறிஸ்தவன் ஆன பின்பு சரியாக பதிலை தேட தொடங்கினேன். அந்த கேள்விக்கான விடையை கண்டுபிடிப்பதற்கு வருடங்களை அர்பணிப்பதை தவிர எனக்கு வேறு வழி இருக்கவில்லை. இந்த கேள்வியின்

மீதான எல்லா ஆய்வுகளையும் நான் பார்த்தேன். இப்படி, நான் எல்லாவற்றையும் கேட்ட பொழுதிலும், தேடின பொழுதிலும், விசாரித்த பொழுதிலும் கூட இயேசுவினுடைய ஞானஸ்நானத்தை தெளிவாகவும், நிச்சயமாகவும் விளக்கிய எதையும் எங்கும் என்னால் பார்க்க முடியவில்லை. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் வெளிப்படுத்தப்பட்டிருந்த நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மீது கர்த்தர் என்னை ஞானம் அடைய செய்யும் வரை, இறுதி பதிலை கண்டுபிடிப்பதற்காக நான் போராடினேன்.

இயேசுவின் ஞானஸ்நானத்தை பற்றிய தீர்க்க முடியாத புதிரால் நான் பிடிக்கப்பட்டிருந்த பொழுது, மத்தேயு 3:13-17 ஐப் படிக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. *"அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது."*

இந்த வார்த்தையை படித்து, "இது தான் பதில்.! பழைய ஏற்பாட்டின் பலி காணிக்கையாக இயேசு இருந்திருந்தது தான் அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதற்கு

காரணம். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றில் மறைந்திருந்த அவருடைய இரட்சிப்பின் சத்தியம் இது தான்" என்று இறுதியில் நான் உணர்ந்தேன்.

பழைய ஏற்பாட்டில் கர்த்தர் அனுப்புவதாக வாக்களித்திருந்த எலியா தான் யோவான் ஸ்நானகன். நியாயத்தீர்ப்பு நாளுக்கு முன்னால் எலியாவை அனுப்புவேன் என்று மல்கியா 4:5 இல் கர்த்தர் சொல்லி இருந்தார். மேலும் நம்மிடம் அனுப்புவதாக அவர் வாக்களித்திருந்த இந்த எலியா, யோவான் ஸ்நானகனை தவிர வேறு யாரும் இல்லை என மத்தேயு 11:14 நமக்குச் சொல்லுகிறது. இதனால் நான் எலியாவைப் பற்றி கண்டுபிடித்தேன். ஆனால் யோவான் ஸ்நானகனால் இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது பற்றி இன்னமும் உறுதியாக இருக்கவில்லை. பின்பு மத்தேயு 3:13-17ஐ மறுபடியும் திரும்பிபார்த்து மேலும் அந்த பகுதியை *"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது"* மறுபடியும் ஒரு முறை வாசித்தேன். பின்பு, என்னுடைய எல்லா சந்தேகங்களும் மறைந்து போயின. எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்கு, அவர் அவருடைய ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டார். இயேசு, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக எல்லா மக்களையும் மீட்கக் கூடிய நீதியின் செயலை நிறை வேற்றினார்.

ஆசரிப்புக் கூடார பலி முறையில் பலி காணிகையின் தலையின் மீது கைகளை வைப்பதைப் போல, ஞானஸ்நானம் பழைய ஏற்பாட்டின் கைகளை வைப்பதைப் போல இருந்தது. தகன பலி பீடத்திற்கு முன்பு பாவிகள் இந்த பலி காணிக்கையை கொண்டுவருவதும் அவற்றின் மீது அவர்களுடைய கைகளை வைப்பதும், இதன் மூலம் அவர்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, அவர்களுடைய பலி காணிக்கைகளுக்குள் அவற்றை செலுத்துவதும், இஸ்ரவேல் மக்களுடைய எல்லாப் பாவங்களையும் தலைமை ஆசாரியன் அறிக்கையிட்டு அவர்களுக்காகவும் இஸ்ரவேலர்களுக்காகவும் பலி காணிக்கைகளுக்குள் அவற்றை செலுத்துவதும், புதிய ஏற்பாட்டு காலத்தில் யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்ட இந்த காரியங்களும் ஒன்றுக்கொன்று பொருந்துகின்றன. உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக்கொள்வதற்காகவும் எல்லோருடைய பாவங்களையும் மறையச் செய்வதற்காகவும், இயேசு இப்படி அவருடைய ஞானஸ்நானத்தை (கைகளை வைப்பதின் மூலம்) பெற்றுக்கொண்டார் என்பதை நான் இறுதியில் உணர்ந்தேன்.

இதனால் மூல வேதாகம புத்தகத்தை நான் பார்த்தேன். *"இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது"* என்ற வார்த்தை கிரேக்கத்தில் எப்படி எழுதியிருந்தது என்பதை நான் பார்த்தேன். "”Αφες ἄρτι, οὕτως γὰρ πρέπον ἐστὶν ἡμῖν πληρῶσαι πᾶσαν δικαιοσύνην." இந்த வார்த்தையில் "இப்படி" மற்றும் "நீதி" என்பவை கிரேக்கத்தின் "ஹூடோஸ் (οὕτως γὰρ)" மற்றும் "டிக்காய்சூன் (δικαιοσύνην)" என்ற வார்த்தைக்களுக்குச் சமமானது. முதலில் இருப்பது இந்த வழியில் கிட்டதட்ட இந்த முறையினால் மட்டும் அதிக பொருந்துவது, அல்லது இந்த வழியின் மீது என்று பொருள் தருகிறது. மற்றும்

பின்னர் இருப்பது "நீதி, கர்த்தருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயம் விசாரித்தல் அல்லது சமத்துவம்" என்று பொருள் தருகிறது.

இயேசு பாவிகளை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்டார் என்று இது நமக்கு சொன்னது. இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதன் மூலமும், அவருடைய இரத்தத்தைச் சிந்தியதன் மூலமும் கர்த்தருடைய நீதியை நிறைவேற்றினார் என்று இது நமக்கு கூறியது. வேறு வார்த்தைகளில் கூறினால், அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்டார் என்று இது கூறுகிறது. நமக்கு இவ்வளவு குழப்பத்தையும் புத்தி களக்கத்தையும் அளித்தது என்ன என்பதின் உண்மையான அர்த்தத்தை இப்பொழுது நான் உணர்ந்துள்ளதால் நம்முடைய எல்லா புதிர்களும் இப்படி தீர்ந்துவிட்டன. இயேசு நம்முடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக் கொண்டதால் தான், அவர் சிலுவைக்குச் சென்று இந்த பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பாக மரித்தார். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் மறைந்துள்ள சத்தியம் இதுவாக இருக்கிறது.

வேறு வார்த்தைகளில் கூறினால், யோவானிடமிருந்து இயேசு பெற்றுக்கொண்ட ஞானஸ்நானம் நம்முடைய இரட்சிப்பின் இன்றியமையாத பொருளாய் இருந்தது என்றும், அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் ஒரே சமயத்தில் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவர் தன் மீது எடுத்துக் கொண்டார் என்றும், மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாகிய நாம் உணர்ந்தோம். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் இருக்கும் அதே சத்தியத்தை நீங்களும் கூட உணரவேண்டும். அப்படி உணர்ந்தால் மட்டுமே உங்களுடைய ஆத்துமாக்கள் ஒளியூட்டப்படும்.

யோவானிடமிருந்து இயேசு பெற்றுக்கொண்ட

ஞானஸ்நானத்தின் நாளை நம்மால் ஒரு போதும் மறக்க முடியாது. நம்முடைய எல்லாப் பாவங்களும் அவருக்குள் செலுத்தப்பட்டு விட்டன என்பதை நாம் உணர்ந்த நாளை நாம் ஒரு போதும் மறக்க முடியாது. இந்த சத்தியத்தை பற்றியதான நம்முடைய உணர்தலின் மூலம் நம்முடைய இருதயங்களில் தோன்றியுள்ள மாற்றங்களை நாம் பார்த்துள்ளோம். ஏரியில் அலைகள் அடித்து கொண்டிருப்பது போல நம்முடைய இருதயங்கள் முழுவதும் அது பரவியுள்ளது. இருட்டிற்குள் துளைத்து கொண்டு இரட்சிப்பின் சத்தியத்தை நாம் தெரிந்துகொள்வதற்கு நம்மை அனுமதிக்கும் விடியற்காளையின் பிரகாசிக்கும் ஒளி நமக்குள் நுழைந்தது.

இயேசு பெற்றுக்கொண்ட ஞானஸ்நானம் உலகின் பாவங்களை அவர்மீது சுமத்தியது

மத்தேயு 3:13-17 ஐ வாசித்த பிறகு நீண்ட நேரத்திற்கு ஒரு வார்த்தையை கூட என்னால் பூர்த்தி செய்ய முடியவில்லை. நான் பாவமானவனாக இருந்தாலும் இயேசு அவருடைய ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டு *"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது"* என்று சொன்னார். இதனால் இயேசுவினுடைய ஞானஸ்நானம் தான் (இளநீல நிற நூல்) சிலுவையின் மீது அவர் சிந்த வேண்டியிருந்த இரத்தத்திற்கு காரணம். இந்த இயேசுவே கர்த்தராக இருந்தார் (இரத்தாம்பர நிற நூல்), மேலும் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் வார்த்தையின் மூலம் (மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல்) உண்மையான இரட்சிப்பின் சத்தியத்தை அவர் நமக்கு போதித்தார். வேறு வார்த்தைகளில் கூறினால், இயேசு நம்முடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக்கொண்டார்.

"பிறகு நம்மிடம் இன்னமும் பாவம் இருக்கிறதா இல்லையா? யோவான் ஸ்நானகனால் இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பொழுது எல்லோருடைய பாவமும் அவருக்குள் செலுத்தப்பட்டது. நம்முடைய சொந்த பாவங்களும் கூட அவருக்குள் செலுத்தப்பட்டதா? அந்த சமயத்தில் உலகத்தினுடைய பாவங்கள் அவருக்குள் செலுத்தப்பட்டதா? நம்முடைய தாயார்களுடைய கருவில் நாம் இருக்கும் பொழுது நம்மிடம் ஏற்கெனவே இருந்த பாவங்கள் உலக பிரகாரமான பாவங்களில்லை. நாம் ஒரு வயதாக மட்டும் இருக்கும் பொழுது நாம் செய்த பாவங்களை பற்றி என்ன? அவைகளும் உலகத்தினுடைய பாவங்கள் தான் அல்லவா? நாம் நம்முடைய பிள்ளை பருவத்தில் செய்த பாவங்களை பற்றி என்ன? இவைகளும் உலகத்தினுடைய பாவங்களுடன் சேர்ந்தது தான் அல்லவா?"

நாம் சரியான பாதையில் இருக்கிறோம் தான் என்பதை உறுதிப்படுத்தி கொள்வதற்கு இந்த கேள்விகளை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். இதைப் போல கர்த்தருடைய வார்த்தையுடன் சரியான இடத்தில் நாம் நின்றுக் கொண்டிருக்கிறோம் என்பதை உறுதி செய்வது தான் விசுவாசம். பிள்ளை பருவத்தில் நாம் செய்த பாவங்கள் தான் உலகத்தினுடைய பாவங்களாக இருக்கின்றன. நாம் நம்முடைய இளமை பருவத்தில் செய்த பாவங்களும் கூட உலகப்பிரகாரமான பாவங்களாக இருக்கின்றன, நம்முடைய முதிர் வயதையும் குறிப்பிட லாம். நம்முடைய வாழ் நாளில் நாம் செய்யும் எல்லாப் பாவங்களும் உலகத்தின் பாவங்களாய் இருக்கின்றன. இது போன்ற உலகத்தினுடைய எல்லாப் பாவங்களும் ஏற்கெனவே இயேசுவிற்குள் செலுத்தப்பட்டது. அவைகள் செலுத்தப்படவில்லையா? ஆம், அவை செலுத்தப்பட்டன. நம்முடைய பாவங்களை மட்டும் அல்ல ஒவ்வொரு மனிதனுடைய எல்லாப் பாவங்களையும் நம்முடைய தேவன்

எடுத்துக் கொண்டார் என்று எழுதியிருக்கிறது. "இதனால் நம்முடைய எல்லாப் பாவங்களும் இயேசுவிற்குள் செலுத்தப்பட்டன. நம்மிடம் இன்னமும் பாவம் இருக்கிறதா? இல்லை! நமக்குள் ஒரு பாவமும் ஒரு போதும் இல்லை என்று நாம் உணர்ந்தோம்!"

யோவானிடமிருந்து இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதால் *"இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29)* என்று யோவான் ஸ்நானகன் சாட்சி கூறினான். இதன் மூலம் மனிதகுலத்தினுடைய தொடக்கம் முதல் அதனுடைய முடிவு வரை வாழ்ந்த, வாழக்கூடிய ஒவ்வொருவரின் எல்லாப் பாவங்களையும் இயேசு எடுத்துக்கொண்டார். ஒருவர் வாழ்க்கை முழுவதும் செய்த எல்லாப் பாவங்களையும் மற்றும் எல்லோருடைய பிள்ளைகளுடைய பாவங்களும் கூட இயேசுவால் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த உலகம் எவ்வளவு காலங்கள் இருந்தாலும், ஆயிரம் வருடங்களுக்கு இருந்தாலும் சரி, லட்ச வருடங்களுக்கு இருந்தாலும் சரி, நம்முடைய தேவன் அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக அதன் மக்களுடைய எல்லாப் பாவங்களையும் எடுத்துக்கொண்டு, இந்த பாவங்களை அவருடைய தோல்களின் மூலம் சிலுவைக்கு சுமந்துச் சென்று, மரித்து, இதன் மூலம் நமக்காக பாவத்திற்கான எல்லா நியாயதீர்ப்பையும் ஏற்றுக் கொண்டார் இதை தான் நாம் உணர்ந்துள்ளோம்.

மறுபடியும் பிறந்தவர்களாகிய நாம் இயேசு மரணத்திலிருந்து எழுந்தார் என்றும் இதனால் அவர் நம்முடைய மீட்பரானார் என்று உணர்ந்ததாலும், இப்படி விசுவாசித்ததாலும் நம்முடைய எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்கப்பட்டது.

இப்படி அவர் பெற்றுக்கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாகவும், சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தை சிந்தியும், நம்முடைய தேவன்

நம்முடைய எல்லாப் பாவங்களையும் பொறுப்பெடுத்துக் கொண்டார். இதனால் தான் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலின் மேல் இருக்கும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றைப் பற்றி வேதாகமம் பேசுகிறது. மேலும் இயேசு நீரினால் மட்டும் அல்ல, ஆனால் நீர் மற்றும் ஆவியின் மூலம் நம்மிடம் வந்தார் என்றும் 1 யோவான் 5:4-6 நமக்கு சொல்லுகிறது. இதனால் தான் நம்முடைய மீட்பர் இயேசு அவருடைய ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டதன் மூலம் கர்த்தருடைய எல்லா நீதியையும் நிறைவேற்றினார் என்று வேதாகமம் நமக்கு சொல்லுகிறது. இது தான் சத்தியம், இருப்பினும் கிறிஸ்தவ தலைவர்களும் எல்லோரும் இந்த உண்மையை பற்றி அறியாமல் இருப்பதால் இதை நமக்கு போதிக்கவில்லை என்று இதன்மூலம் நாம் உணர்ந்தோம்.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் கர்த்தருடைய சத்தியம், நாம் பாவமற்றவர்கள் என்று நம்மிடம் சொல்லும் பொழுது தான் நாம் பாவமற்றவர்களாகிறோம். மற்ற ஆத்துமாவின் மீட்பை யாராலும் அங்கீகரிக்கமுடியாது. மற்றவர்களுடைய வீண் வார்த்தைகளை சம்பாதிப்பதில் எந்த பிரயேஜனமும் இல்லை நாம் நல்ல கிறிஸ்தவர்கள் என்றும் அல்லது A+ கிறிஸ்தவ தகுதியை நமக்கு கொடுத்து, மக்கள் நமக்கு சொல்வது பாவத்திலிருந்து நம்முடைய மீட்பை எப்படி உண்டாக்கும்? மக்கள் நம்மை அங்கீகரிக்கும் பொழுது மட்டும் அல்ல, ஆனால் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் கிறிஸ்து நம்முடைய எல்லாப் பாவங்களையும் மறைத்துவிட்டார் என்று கர்த்தருடைய வார்த்தை நமக்கு சொல்லும் பொழுது மட்டும் தான் நாம் பாவமற்றவர்களாகிறோம்.

இயேசு என்னுடைய பாவங்களையும் மட்டும் அல்ல ஆனால் உங்களுடைய பாவங்களையும் மறைத்தார் என்று கர்த்தருடைய வார்த்தை நமக்குச் சொல்லுகிறது. மேசியாவாகிய இயேசு கிறிஸ்து எல்லா மக்களுடைய எல்லாப் பாவங்களையும் மறைய செய்ததால், நாம் விசுவாசித்தால் மட்டுமே பாவத்திற்கான மீட்பை பெறுவோம் என்று இது நமக்கு சொல்லுகிறது. நீர் மற்றும் ஆவியின் வழியாக பாவத்தின் மீட்பை பெற்றுக்கொள்வதின் மூலம் இப்படிதான் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுக்குள் நம்மால் நுழைய முடியும்.

சரியான விசுவாசம் என்றால் என்ன?

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது. நம்முடைய தேவன் இந்த பூமிக்கு வந்து இதன்மூலம் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்டார் என்ற இந்த சரியான விசுவாசத்தை எல்லோரும் பெற்றுக் கொள்ளவேண்டும். தேவன் மனிதனுடைய சரீரத்தில் இந்த பூமியில் பிறந்தார் என்றும், யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் என்றும், சிலுவையின் மீது மரித்தார் என்றும், மரித்தோரிலிருந்து எழுந்தார் என்றும், இதன் மூலம் நம்முடைய மீட்பர் ஆனார் என்றும் நாம் விசுவாசிக்கும் பொழுது நாமெல்லோரும் கர்த்தருடைய பிள்ளைகளாக முடியும். நம்முடைய செயல்கள் நிறைவேறாவிட்டாலும், நம்முடைய சரீரம் உபயோகமற்றதாக இருந்தாலும், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றை நம்முடைய இருதயங்களில் விசுவாசிப்பதின் மூலம் நாம் பாவமற்றவர்களாகியுள்ளோம்.

இதனால் நீதிமானாய் ஆவது விசுவாசத்தின் மூலம் தான் சாத்தியம். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் வெளிப்படுத்தப்பட்டுள்ள மீட்பை விசுவாசிப்பதின் மூலம் நாம் கர்த்தருடைய நீதியினால் மூடப்பட்டுள்ளோம் சுறுக்கமாக, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசித்ததின் மூலம் நாம் கர்த்தருடைய பிள்ளைகளாகியுள்ளோம்.

உங்களில் சிலருக்கு இன்னமும் முழுமையாக புரிந்து கொள்ள முடியாது. அப்படியிருந்தால் நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் தொடர்ந்து இந்த புத்தகத்தை வாசிப்பதும், கர்த்தருடைய ஆலயத்திற்கு போவதும் தான். இதுவரை ஆசரிப்புக் கூடார பொது விஷயங்களை மட்டுமே நாம் விவாதித்தோம். ஆனால் விளக்கமளிக்கப்பட்ட விளக்கங்களை நீங்கள் வாசிக்கத் தொடங்கும் பொழுது ஆசரிப்புக் கூடாரத்தினுடைய் முழுமையான புரிந்து கொள்ளுதலை உங்களால் அடைய முடியும். ஒரு பிள்ளை கூட விரைவில் புரிந்து கொள்ளும் அளவிற்கு அவ்வளவு எளிதாய் இருக்கிறது.

மக்கள் இயேசுவினுடைய கடினமான ஞானத்தின் மீது அவர்களுடைய விசுவாசத்தை அமைப்பதாய் இருந்தால் எவ்வளவு காலங்கள், ஏன் வரப்போகும் ஆயிரம் அல்லது பத்தாயிரம் வருடங்களுக்கு இயேசுவை விசுவாசித்தாலும் அவர்கள் எப்பொழுதும் அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்கப்பட முடியாது. ஒவ்வொரு நாளும் அவர்களுடன் பாவம் இருக்கும். அவர்கள் அவர்களுடைய பாவங்களின் சாபங்களிலிருந்து தப்பிக்க முடியாததற்கு ஒவ்வொரு நாளும் அழுவார்கள். இவர்களின் காரியங்கள் சரியாக போக தொடங்கும் பொழுது கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்கிறார் என்று இந்த மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் காரியங்கள் சற்று மோசமாக போகும் பொழுது, "நான் தசமபாகத்தைக் கொடுக்காததால் தானா? அல்லது சென்ற

ஞாயிறு நான் ஆலயத்திற்கு போகாததால் தானா? நான் பாவம் செய்து கர்த்தரை சரியாக தாங்க தவறிவிட்டேன். அவற்றிற்காக அவர் என்னைத் தண்டிக்கிறார் என்று நான் நினைக்கிறேன்" என்று அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். இந்த வழியின் முடிவில் சட்டத்தில் பிடிப்பட்டு அவர்கள் மரிக்கிறார்கள் ஏனென்றால் "சட்டம் கோபாக்கினையை எடுத்து வருகிறது" (ரோமர் 4:15) என்று வேதாகமம் நமக்கு சொல்லுகிறது.

இந்த வகையான முழுமையான விசுவாசத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலம் வந்த இயேசு கிறிஸ்துவின் நான்கு ஊழியங்களை நாம் நன்றாக தெரிந்து கொண்டு விசுவாசிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட சத்தியத்தை நாம் உணரவேண்டும். இந்த நான்கு சத்தியங்களைப் பற்றி தெளிவான புரிந்து கொள்ளுதலை நாம் பெற்றுக்கொள்ளும் பொழுதும், அதனை விசுவாசிக்கும் பொழுதும் மட்டுமே, கர்த்தருக்கு முன்பாக முழுமையாக இருக்கும் விசுவாசத்தை நாம் பெற்றுக் கொண்டு அவருடைய சரியான பிள்ளைகளாக முடியும். இயேசுவினுடைய இந்த நான்கு ஊழியங்களையும் விசுவாசித்ததின் மூலம் நாம் பாவமற்றவர்களாகியுள்ளதால் பாவத்தின் கட்டிலிருந்து நம்மை விடுவித்து கொள்வதற்காக நம்முடைய சொந்த போராட்டங்கள் இல்லாமலும் கூட நாம் எப்பொழுதுமே பாவமற்ற நீதிமான்களாய் இருக்கிறோம். நம்முடைய சுய சக்தியை பயன்படுத்தாமல் கூட விசுவாசத்தின் பாவமற்ற மக்களாய் நாம் இருக்கிறோம். நம்முடைய நற்செயல்கள் அல்லது முயற்சிகள் இல்லாமலேயே, பனியை போல் வெண்மையாக எல்லாப் பாவங்களும் கழுவப்பட்ட, கர்த்தருடைய பிள்ளைகளாக நாம் இருக்கிறோம்.

தன்னுடைய பெற்றோர்களின் கண்காணிக்கும்

கண்களுக்கு கீழ் ஒரு பிள்ளை விளையாடிக் கொண்டு அமைதியில் ஒய்வெடுப்பது போல இந்த சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலம் பிதாவாகிய கர்த்தருடைய இரக்கமுள்ள கண்களுக்கு முன்பு நம்முடைய இருதயங்களில் அமைதியும் சாந்தமும் உடையவர்களாக இருக்கிறோம். உங்களுடைய காரியங்கள் போதுமானதாக இல்லை என்றாலும் கூட, நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் கர்த்தருடைய செயல்களை விசுவாசிப்பது தான். ஏனெனில் நீங்கள் எவ்வளவு அதிகமாக போதுமானதாக இல்லாமல் இருக்கிறீர்களோ அவ்வளவு அதிகமாக நம்முடைய தேவனுடைய அன்பை உணருவீர்கள்.

உங்களுடைய பாவங்களுக்கான மீட்பை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் கூக்குரலிடுகிறீர்களா? இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றை விசுவாசிக்கும் விசுவாசத்தை இன்னமும் பெற்றுக் கொள்ள முடிய வில்லையா? இந்த சத்தியத்தை தெரிந்தவர்கள் பாவத்தின் மீட்பை பெற்றுக்கொள்வதற்கு கூக்குரலிட அவசியம் இல்லை. ஆனால் அமைதியாக விசுவாசிக்க வேண்டும். நீர், இரத்தம் மற்றும் ஆவியின் மூலம் வந்த இயேசு கிறிஸ்துவை தெரிந்து கொண்டு விசுவாசிப்பவர்கள் விசுவாசத்தின் மூலம் கர்த்தருடைய பிள்ளைகளாகியுள்ளார்கள். அவர்கள் அவர்களுடைய மேலோட்டமான செயல்களால் மட்டும் கர்த்தரை தாங்கவில்லை ஆனால் அவர்களுடைய முதல் விசுவாசத்தால் அவரை நேசித்து தாங்குகிறார்கள். நாம் விசுவாசிப்பதால் கர்த்தர் அவருடைய தரிசனத்தை நமக்குத் தந்து, நம்முடன் நடக்கிறார். நாம் அவரை விசுவாசிப்பதால் அவர் நமக்கு உதவி செய்கிறார். நாம் நம்முடைய விசுவாசத்தில் வைக்கும் ஞானஸ்நானம் மற்றும் இரத்தத்தினால் நம்மை மீட்டுள்ள இயேசுவை நாம்

விசுவாசிப்பதால் அவருடைய நீதியின் செயல்களைத் தாங்கும் கர்த்தருடைய ஊழியகாரர்களாய் நாம் ஆகியுள்ளோம்.

பாவமன்னிப்பின் இரட்சிப்பின் மீட்பை நமக்குத் தருவதற்காக ஆசரிப்புக் கூடாரத்தின் வெளி பிரகாரத்தை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்ததின் மூலம் நம்முடைய இரட்சிப்பின் வாயிலை கர்த்தர் செய்தார் என்ற சத்தியத்தை நாமெல்லோரும் இப்பொழுது உணர வேண்டும். நீர், இரத்தம் மற்றும் ஆவியின் மூலம் இயேசு நம்மிடம் வந்தார் என்றும் பழைய ஏற்பாட்டில் இருந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால், நம்மை நம்முடைய பாவங்களிலிருந்தும் இரட்சித்துள்ளார் என்று வேதாகமம் நமக்கு சொல்லுகிறது. பாவத்திலிருந்து நம்முடைய இரட்சிப்பின் வாயிலாக நம்முடைய தேவன் மாறினார். நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் உண்மையாக மீட்டுள்ள மேசியாவினுடைய இந்த நான்கு செயல்களை நாம் விசுவாசித்து மறுபடியும் விசுவாசிக்க வேண்டும்.

யோவானிடமிருந்து இயேசு பெற்றுக்கொண்ட ஞானஸ்நானம், ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாயிலில் தெரிவிக்கப்பட்டுள்ள இளநீல நிற நூலின் உண்மையான பொருளாய் இருக்கிறது

மத்தேயு 3:13-17 ஐ மீண்டும் வாசியுங்கள்: *"அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில்*

வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது." இந்த நேரத்தில், இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட பொழுது, கன்னி மரியாளிடமிருந்து அவர் பிறந்து 30 வருடங்கள் ஆகியிருந்தது. இங்கு "பிறகு" என்ற வார்த்தை யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசு ஆகியோர் 30 வயதை அடைந்ததைக் குறிக்கிறது.

இயேசுவிற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு பிறந்த யோவான் ஸ்நானகன் மனந்திரும்புதலின் ஞானஸ்நானத்தை (மத்தேயு 3:11, 11:11) அவர்களுக்கு கொடுத்து கொண்டிருந்த இந்த பூமியின் மனித குலத்தினுடைய பிரதிநிதியாக இருந்தான். இயேசு 30 வயதை அடைந்த பொழுது யோர்தான் நதியில் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருந்த இந்த யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதற்காக அவர் வந்தார். ஆனால் *"நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா"* என்று சொல்லி யோவான் ஸ்நானகன் தடுக்க முயற்சி செய்தான். *"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது"* என்று இயேசு பிறகு பதிலளித்த பிறகு யோவான் அனுமதித்தான். மேலும் இயேசுவிற்கு அவனால் இப்படி

ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, பரலோகம் அவருக்காக திறக்கப்பட்டது என்றும் *"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்"* என்று அதிலிருந்து ஒரு குரல் வந்தது என்றும் வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது.

மத்தேயு 3:15 இல், யோவானால் ஏன் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார் என்ற காரணத்தை இயேசு நமக்குச் சொல்லுகிறார். *"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது"* என்ற ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய இளநீல நிற நூலை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த சத்தியம் குறிப்பிடுகிறது. அவருடைய வேலைகளின் மூலம் பாவிகளுடைய பாவங்களை மன்னிக்கும் நோக்கத்தால் தான் யோவனிடமிருந்து இயேசு ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டார். ஏனென்றால் எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்கு இப்படி தான் அவர்களுக்கு பொருந்தியது.

யோவான் ஸ்நானகனிடமிருந்து பெற்றுக்கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் இயேசு கிறிஸ்து எல்லோருடைய பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொள்வார் என்பது கர்த்தருடைய நீதியின் அன்பாகவும், எல்லாப் பாவிகளுக்கான, அவர்களுடைய இரட்சிப்பின் செயலின் நிறைவேற்றுதலுமாய் இருந்தது. *"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"* என்று யோவான் 3:16 சொல்வது போல உலகத்தினுடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிப்பதற்காக இயேசு ஞானஸ்நானத்தை பெற்றுக் கொண்டார். இதனால் நம்முடைய

பாவங்களுக்காக நாம் தண்டிக்கப்பட மாட்டோம். இதனால் தான் கர்த்தருடைய எல்லா நீதியையும், யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, மனித குலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொண்டார். ஏனென்றால் எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்கு இப்படி தான் அவர்களுக்கு பொருந்தியது.

கர்த்தருடைய எல்லா நீதிகளும் என்றால் என்ன? மேலே உள்ள வசனம், பிதாவினுடைய நீதியை எல்லாம் நிறைவேற்றுவதற்காக, இயேசு ஏன் யோவான் ஸ்நானகனிடமிருந்து ஞானஸ்நானத்தை பெற்றுக் கொண்டார் என்ற காரணத்தை நமக்குச் சொல்லுகிறது.

இங்கு கர்த்தருடைய எல்லா நீதியையும் என்ன என்பதை நாம் கண்டுபிடிக்கவேண்டும். எல்லா நீதியும் என்பது இயேசு கிறிஸ்து யோவனிடமிருந்து ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டு மனித குலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொண்ட உண்மையைக் குறிக்கிறது. அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் ஒரே சமயத்தில் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவர் தன் மீது எடுத்துக் கொண்டார். ஒரே சமயத்தில் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அகற்றுவது தான் அவருடைய பிறப்பின் காரணமாய் இருந்ததால், யோவானிடமிருந்து இயேசு பெற்றுக்கொண்ட ஞானஸ்நானம் தெளிவான நீதியாய் இருந்தது. கர்த்தருடைய எல்லா நீதியையும் நிறைவேற்றுவது என்பது உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் மறையச் செய்யும் நீதியின் செயல்களை அதாவது மீட்பை நிறைவேற்றுவதை குறித்தது.

இயேசுவினுடைய ஞானஸ்நானம், மீட்கக்கூடிய, தவிர்க்க முடியாத முறையாய் இருந்தது. நம்முடைய பாவங்களை அகற்றுவதற்காக மனித குலத்தினுடைய பிரதிநிதியாக யோவான் ஸ்நானகனை எழுப்பி, அவருடைய குமாரனான இயேசு கிறிஸ்துவுக்கு அவன் மூலம்

ஞானஸ்நானம் கொடுக்கச் செய்து, இதன் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவருடைய குமாரனுக்குள் செலுத்துவார் என்று கர்த்தர் பழைய ஏற்பாட்டில் அமைத்திருந்தார். இதைத் தவிர கர்த்தருடைய இரக்கத்தின் செயல் வேறில்லை. கர்த்தர் நம்மை இவ்வளவு அதிகமாக நேசித்தபடியால், நம்மை அவருடைய பிள்ளைகளாக மாற்றுவதற்காகவும், நம்முடைய பாவங்களை அகற்றும் நீதியின் வேலையை நிறைவேற்றுவதற்காகவும், கர்த்தர் இயேசுவை யோவானிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் படி செய்தார். இயேசு ஞானஸ்நானம் வழங்கப்பட்டு தண்ணீரில் இருந்து மேலே வந்த பொழுது *"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்"* என்று இதனால் தான் கர்த்தர் சொன்னார். வேறு வார்த்தைகளில் கூறினால், "இயேசு, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் உங்களுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொண்டார்" என்று பிதாவாகிய கர்த்தர் சொன்னார்.

வேறு வார்த்தைகளில் கூறினால், இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து யோவானால் ஞானஸ்நானம் அளிக்கப்பட்ட இந்த முறை மூலமாக மிகவும் சரியான வழியில் ஒரே தரமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக் கொண்டு, இதன் மூலம் நம்முடைய பாவங்களையும் மறையச் செய்வதற்காக பலி காணிக்கையானார்.

நமக்காக தேவகுமாரன் ஞானஸ்நானம் அளிக்கப்பட்டதாலும், இதனால் நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் தன் மீது ஏற்றுக் கொண்டதாலும், இந்த பாவங்களை அவர் சிலுவைக்கு ச்சுமந்து சென்று மரித்து, மேலும் அவருடைய விலை மதிப்பற்ற இரத்தத்தைச் சிந்தி இதன் மூலம் நம் எல்லோருடைய இரட்சகருமானார். வேறு வார்த்தையில் கூறினால் நம்முடைய பாவங்களுக்காக ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டு சிலுவையின் மீதான் அவருடைய இரத்தத்தின் மூலம்

அவரை பலியாக்கி கொண்டு, மரணத்திலிருந்து மறுபடியும் எழுந்து, விசுவாசிக்கும் நம்மை இயேசு இரட்சித்துள்ளார். மரித்தோரிலிருந்து எழுந்து அவருடைய இரட்சிப்பின் வேலையை நிறைவேற்றிய பிறகு, இப்பொழுது கர்த்தருடைய வலது பக்கத்தில் சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறார். மேலும் அவருடைய நேரம் வரும் பொழுது அவர் திரும்புவார். இந்த சத்தியம் தான் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியாகவும் இரட்சிப்பின் ஆழமாகவும் இருக்கிறது.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலைக் குறித்து, யாத்திராகமம் 27:16 *"பிராகாரத்தின் வாசலுக்கு இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் சித்திரத் தையல்வேலையாய்ச் செய்யப்பட்ட இருபதுமுழ நீளமான ஒரு தொங்குதிரையும் அதற்கு நாலு தூண்களும் அவைகளுக்கு நாலு பாதங்களும் இருக்கவேண்டும்"* என்று எழுதியிருக்கிறது. இதனால் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் இந்த இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டது. இரட்சிப்பின் பரிசை விசுவாசிப்பதின் மூலம் நாம் நுழையும் பரலோக இராஜ்ஜியத்தின் சத்தியத்தை பற்றி இது நமக்குச் சொல்லுகிறது.

<u>இளநீல நிற நூல் ஆசரிப்புக்</u> கூடார பிரகாரத்தினுடைய வாயில் நெய்யப்பட்டுள்ள இளநீல நிற நூல் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து ஞானஸ்நானம் பெற்ற பொழுது நம்முடைய எல்லாப் பாவங்களும் அவருக்குள் செலுத்தப்பட்ட உண்மையை குறிக்கிறது.

<u>இரத்தாம்பர நிற நூல்</u> நம்முடைய பாவங்களுக்காக ஞானஸ்நானம் பெற்ற இயேசு கிறிஸ்து, அடிப்படையாக முழு உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் உருவாக்கிய படைப்பாளராகவும், உங்களுடைய மற்றும்

என்னுடைய தேவனாகவும் இருக்கிறார் என்று இரத்தாம்பர நிற நூல் நமக்கு சொல்லுகிறது. இரத்தாம்பர நிறம் தான் ராஜாக்களுடைய நிறம் (யோவான் 19:2-3), மேலும் இயேசு கிறிஸ்து தான் ராஜாதி ராஜா என்றும் எல்லோருடைய தேவன் என்றும் இது நமக்கு சொல்லுகிறது. "கிறிஸ்து" என்ற சொல் "அபிஷேகிக்கப்பட்ட" என்று சொல்லுகிறது. மேலும் அரசர்கள், ஆசாரியர்கள் அல்லது தீர்க்கதரிசிகள் மட்டுமே அபிஷேகிக்கப்பட முடியும். இதைப் போல, மனிதனுடைய சரீரத்தில் இந்த உலகத்திற்கு இயேசு கிறிஸ்து வந்திருந்தாலும், அவருடைய உண்மையான அடையாளம் ராஜாதி ராஜாவாகத்தான் இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறினால், இயேசு, முழு உலகத்தையும் படைத்த படைப்பாளராகவும் தேவனாகவும் இருந்தார். இயேசுவே கர்த்தாதி கர்த்தராகவும், பிதாவாகிய கர்த்தரால் படைக்கப்பட்ட குமாரனாகவும் இருந்தார்.

சிகப்பு நிற நூல் ஆசரிப்புக் கூடார வாயிலில் நெய்யப்பட்டுள்ள சிகப்பு நிற நூல், மனிதனுடைய சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்து அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய பாவங்களை தன் மீது எடுத்துக் கொண்ட பொழுது, இந்த ராஜாதி ராஜா செய்த பலியைக் குறிக்கிறது. ஞானஸ்நானத்தை பெற்றதன் மூலமாகவும், அவருடைய விலைமதிப்பற்ற இரத்தத்தைச் சிந்தியதன் மூலமாகவும், இயேசு கிறிஸ்து நம் சார்பாக நம்முடைய பாவங்களுக்கான கிரயத்தைச் செலுத்தினார். மேலும் இதன் மூலம் நமக்காக அவரைப் பலியாக்கி கொண்டார். இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் பலியை சிகப்பு நிற நூல் வெளிப்படுத்துகிறது.

மெல்லிய பஞ்சு நூல் இறுதியாக, மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல், கர்த்தருடைய புதிய மற்றும் பழைய ஏற்பாட்டினுடைய சிக்கலான வார்த்தையைக் குறிக்கிறது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் வார்த்தையின் மூலம் நம்முடைய மீட்பைப் பற்றி வேதாகமம் நமக்குச்

சொல்லுகிறது. பழைய ஏற்பாட்டில், பாவிகளுடைய மீட்பராக, கர்த்தர் நம்மிடம் வருவார் என்று அவர் வாக்களித்திருந்தார். மேலும் புதிய ஏற்பாட்டில் அவர் வாக்களித்ததைப் போல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தைச் சிந்தினார். நம்முடைய பாவங்களின் பலியாக அவரையே முழுமையாக கொடுத்தார்.

நம்மை, நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய இந்த பாவங்களை அவர் மீது எடுத்துக் கொண்டார் என்ற வார்த்தையை இளநீல நிற நூலினால் கர்த்தர் தெரிவித்துள்ளார். ஞானஸ்நானம் பெற்றுக் கொண்ட கர்த்தர் அவரே என்று இரத்தாம்பர நிற நூலின் மூலம் தெரிவித்துள்ளார். இந்த உலகத்திற்கு நம்முடைய மீட்பராக வந்து ஞானஸ்நானம் பெற்று, இந்த உலகத்தினுடைய பாவங்களை சிலுவைக்கு சுமந்து சென்றும், அவருடைய இரத்தத்தை சிந்தியும், உங்களையும் என்னையும் அவர் இரட்சித்துள்ளார் என்று சிகப்பு நிற நூலின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

வேறு ஒரு பக்கத்தில், பழைய ஏற்பாட்டில் கர்த்தரால் வாக்களிக்கப்பட்ட வார்த்தையிலிருந்து வந்த இதே மீட்பு, மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலில் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தான், ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில், இந்த நூல்களால் நெய்யப்பட்டிருந்தது. ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலை நாம் பார்க்கும் பொழுது, கர்த்தர் நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து எப்படி இரட்சித்துள்ளார் என்றும், எப்படி நம்மை அவருடைய மக்களாக்கியுள்ளார் என்றும், இதே வாயில் வெளிப்படுத்தி தெளிவாக நமக்கு காண்பிக்கிறது. இதைப் போல ஆசரிப்புக் கூடார

பிரகாரத்தினுடைய வாயிலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள நான்கு நூல்களின் ஆவிக்குரிய அர்த்தத்தை நாமெல்லோரும் விசுவாசிக்க வேண்டும்.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலின் நிறங்களை பற்றி பேசும் பொழுது, வேதாகமம் அதனுடைய இளநீல நிறத்தை முதலில் குறிப்பிடுகிறது. நாம் வழக்கமாக இரத்தாம்பர நிற, இளநீல நிற மற்றும் சிகப்பு நிற நூல் வரிசையில் நினைக்கிறோம். ஆனால் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலில் வேதாகமம் பட்டியல் இடுகிறது. இது இளநீல நிற நூலின் முக்கியத்துவத்தைப் பற்றி நமக்கு காண்பிக்கிறது. அதே சமயம் நம்முடைய மீட்பராக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, யோவானிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளாமல் இருந்திருந்தால் நாம் நம்முடைய பாவங்களிலிருந்து தூய்மையாகி இருக்கமுடியாது. இதனால் தான் உலகத்தின் பாவங்களிலிருந்து நம்மை இரட்சிப்பதற்காக இயேசு பிதாவினுடைய விருப்பத்திற்கு கீழ்படிந்து யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு கொல்லப்பட்டார்.

இயேசு, எல்லாவற்றையும் படைத்த உலகத்தினுடைய தேவனாகவும், நம்முடைய கர்த்தராகவும் இருக்கிறார். இந்த உலகத்தில் நம்மை பிறக்கச் செய்துள்ள, நமக்கு புதிய வாழ்வை கொடுத்துள்ள, நம்முடைய வாழ்க்கையை ஆட்சி செய்யக் கூடிய கர்த்தராக அவர் இருக்கிறார். நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்கு எல்லா மனித குலத்தினுடைய பிரதிநிதியிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, இதன் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது அவர் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. வேறு வார்த்தைகளில் கூறினால், யோவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தின் மூலமாக தான் இயேசு நம்முடைய உண்மையான மீட்பராகியுள்ளார்.

நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து விடுவிப்பதற்காகத் தான் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். மேலும் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்து கொள்வதற்காகத்தான் அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார், முதலாம் இடத்தில் அவருடைய ஞானஸ்நானம் இல்லாமல் இருந்திருந்தால், கிறிஸ்து எப்பொழுதும் மரிக்கமுடியாமல் இருந்திருப்பார். இதனால் தான் இயேசு கிறிஸ்து நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து அதாவது அவருடைய இரட்சிப்பின் சரியான முறையினால் எப்படி சரியாக நம்மை இரட்சித்துள்ளார் என்று ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் நமக்கு தெளிவாக காண்பிக்கிறது.

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, யோவானிடமிருந்து பெற்றுக்கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தினால் மனித குலத்தினுடையு எல்லாப் பாவங்களையும் பெற்று, மரித்தார். வேறு வார்த்தைகளில் கூறினால் அவர், நம்முடைய எல்லாப் பாவங்களையும் பொறுப்பெடுத்துக் கொள்வார் என்று ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் நமக்கு சொல்லுகிறது. இயேசு ஞானஸ்நானம் பெற்ற பொழுது பரலோகத்தின் கதவு திறக்கப்பட்டது மேலும், *"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்"* என்று பிதாவாகிய கர்த்தர் பேசினார். இயேசு கிறிஸ்து நம்முடைய மேசியாவாகவும், மீட்பராகவும் இருக்கிறார் ஆனால் அவருடைய சொந்த வார்த்தையின் மூலம் முழு உலகத்தையும் படைத்த படைப்பாளராகவும், தேவ குமாரனாகவும் அவர் இருக்கிறார். பரிசுத்த கர்த்தராக இருப்பதால், நம்முடைய உண்மையான மீட்பராகுவதற்கு, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதன் மூலம் இயேசுவால் நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஏற்று கொள்ள முடிந்தது.

இந்த முழு உலகத்தையும் படைத்து அதனை ஆட்சி

செய்யும் இயேசு கிறிஸ்து, நம்முடைய பாவங்களிலிருந்து தெளிவான இரட்சிப்பை நமக்கு காண்பித்துள்ளார். இயேசு கிறிஸ்து, நம்முடைய பாவங்களை அகற்றுவதற்கு, இந்த உலகத்திற்கு வந்து ஞானஸ்நானத்தின் மூலம் இது போன்ற எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொண்டு, சிலுவையின் மீது மரித்ததால் நீங்களும் நானும் மீட்கப்பட்டுள்ளோம். இயேசு கிறிஸ்து தான், வாழ்வையும் மரணத்தையும் ஆட்சி செய்யும் படைப்பாளாரகவும், முழு உலகத்தையும் படைத்தவராகவும், நம்முடைய முப்பிதாக்களையும், முழு மனித குலத்தையும் இந்த உலகத்திற்கு கொண்டு வந்தவராகவும் இருக்கிறார். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் பொருளாகவும் இருக்கிறார்.

கர்த்தரே இந்த உலகத்திற்கு பாவிகளுடைய பலி காணிக்கையாக வந்தார். நம்மை மீட்டுக்கொண்ட இயேசு இந்த கர்த்தராகவும் இரக்கத்தின் கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கிறார். இயேசு கிறிஸ்து அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொண்டதால் தான் கர்த்தருடைய எல்லா நீதியையும் நிறைவேற்றினார். மேலும் இதனால் உலகத்தினுடைய பாவங்களை சிலுவைக்கு சுமந்து சென்று, அவருடைய விலைமதிப்பற்ற இரத்தத்தை சிந்தி மரித்தார். ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது போல நம்முடைய எல்லாப் பாவங்களையும் அகற்றுவதற்காக இயேசு கிறிஸ்து நம்முடைய சொந்த பலி காணிக்கையானார்.

இதனால் தான் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் மட்டும் அல்ல, பரிசுத்த ஸ்தலத்தினுடைய வாயில் மகா பரிசுத்த ஸ்தலத்தினுடைய வாயில் மற்றும் கர்த்தருடைய வீட்டினுடைய மூடியும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால்

தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது. உங்களுக்காக இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதால் அதனை விசுவாசித்ததன் மூலம் நீங்களும் நானும் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் கழுவப்பட்டுள்ளோம். எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்கு இயேசு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். மேலும் அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் எல்லா மக்களுடைய பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொண்டதன் மூலம் இந்த நீதி நிறைவேற்றப்பட்டது. இதனால் அந்த சமயத்தில் நம்முடைய எல்லா சொந்த பாவங்களும் இயேசுவிற்குள் செலுத்தப்பட்டு விட்டது என்று உணர்ந்து அப்படியே விசுவாசிப்பது தான் நாம் செய்ய வேண்டியதாய் இருக்கிறது.

ஆனாலும் அவரை தன்னிச்சையாகவும் அசட்டையாகவும் விசுவாசிக்கும் அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். தொடக்கத்திலேயே கர்த்தரிடம் சவால் விடுத்து சட்டமில்லாத தங்களுடைய மத விசுவாசத்தை அலட்சியம் செய்வதால் அதிக பிடிவாதமாய் இருக்கிறார்கள். அவர் நமக்கு கொடுத்துள்ள இரட்சிப்பின் வழிக்கு ஏற்ப நாம் அவரை விசுவாசிக்க வேண்டும். *"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 14:6)* என்று இயேசு சொன்னார். நான் தான் வழி உங்களை பரலோகத்திற்கு அழைத்து செல்லும் வழி நான் தான். நான் தான் மேய்பனாகவும் வழியாகவும் சத்தியமாகவும் உள்ளேன். உங்களை இரட்சிக்கும் உண்மையான வழி நான் தான் என்று அவர் நமக்குச் சொல்கிறார். நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்டதன் மூலம் இயேசு கிறிஸ்து நமக்கான புதிய வாழ்க்கையின் தேவனாக ஆகியுள்ளார்.

நாம் இயேசுவை விசுவாசிக்கும் பொழுது, அவரை எப்படி புரிந்துகொண்டு விசுவாசிக்க வேண்டும்?

அவர் இந்த உலகத்திற்கு வந்து நம்மை இரட்சித்துள்ளார் என்ற சரியான வழியில் விசுவாசிப்பதின் மூலம் மட்டும் தான் நாம், நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்கப்படமுடியும். விசுவாசம் என்ற வார்த்தை "சார்வது," "பற்றிகொள்வது," "நம்புவது" என்ற இது போன்ற அர்த்தங்களை அடங்கும். முதியவர்கள் அவர்களாலே வாழ்வதற்கு மிகவும் கடினமாக உணர்வதால் அவர்களுக்கு வயதாகும் பொழுது அவர்களுடைய பிள்ளைகளைச் சார்ந்திருக்கிறார்கள். இதைப் போல நாம் நம்முடைய சொந்த முயற்சியால் நம்முடைய பாவங்களை மறையச் செய்ய முடியாது என்ற காரணத்தால் தான் கர்த்தரை நாம் நம்பி வாழ்கிறோம். நாம் பாவம் செய்யாமல் இருக்க முயற்சி செய்தாலும் எப்பொழுதுமே பாவம் செய்து கொண்டுதான் நாம் நம்முடைய வாழ்க்கையை முடிக்கிறோம். நாம் நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை விடுவித்து கொள்ள முடியாததால் கர்த்தரை விசுவாசிக்கிறோம். மேலும் அவர் செய்துள்ளதை விசுவாசித்து நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவில் நம்முடைய நம்பிக்கையை வைக்கிறோம்.

இதனால் தான் இயேசுவை நாம் விசுவாசித்து நம்முடைய மீட்பை தேடும்பொழுது எந்த வகையான விசுவாசம் சரியான விசுவாசம் என்று நாம் முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். 2000-ஆண்டுகளுக்கு முன் உங்களையும் என்னையும், இந்த உலகத்தினுடைய ஒவ்வொரு மனிதனையும் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்கு இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். 30 ஆவது வயது ஆன பிறகு யோவான் ஸ்நானகனிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு இதன் மூலம்

உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்து கொண்டார். இந்த உண்மையை நாமெல்லோரும் விசுவாசிக்க வேண்டும். இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் உங்களுடைய என்னுடைய பாவங்களை மட்டும் இல்லாமல், உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக்கொண்டார் என்று நாம் விசுவாசிக்கும் பொழுது, கடந்த கால நிகழ்கால மற்றும் எதிர்காலத்தினுடைய எல்லாப் பாவங்களும், ஏற்கெனவே இயேசு கிறிஸ்துவால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இருப்பினும், உலகத்தினுடைய எல்லாப் பாவங்களும் மட்டும் அல்ல, ஆனால் அவர்களுடைய எல்லா சொந்த பாவங்களும் அவர் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபொழுது அவருக்குள் செலுத்தப்பட்டது என்ற இந்த உண்மையை அநேக மக்கள் இன்னமும் ஒதுக்கிவிட்டு சிலுவையினுடைய இரத்தத்தை மட்டும் தொடர்ந்து விசுவாசிக்கிறார்கள். ஆசரிப்புக் கூடார எல்லா வாயில்களும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தது என்பதை அவர்கள் எல்லோரும் பார்த்தாலும் கூட, இதனால் தான் சரியான விசுவாசம் எது என்பதை யாராலும் எளிதாக கண்டுபிடிக்க முடியவில்லை.

நம்மை இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்த பொழுது அவர் நம்மை பொறுப்பில்லாத முறையில் மீட்க்கவில்லை. அவருடைய ஞானஸ்நானத்தினால் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொண்டு அவருடைய மரணத்தினால் நம்முடைய பாவங்களுக்கான எல்லா தண்டனையையும் ஏற்றுக் கொண்டதால், நீங்களும் நானும் முழுமையாக மீட்க்கப்பட்டுள்ளோம். இப்படித் தான் இயேசு கிறிஸ்து முழுமனித குலத்தையும் இரட்சித்துள்ளார். இதனால் தான் நம்முடைய தேவன் *"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37)* என்று

சொன்னார்.

இயேசுவை விசுவாசிக்கிறோம் என்று நாம் சொல்லும் பொழுது அவருடைய குணத்தை அல்லது அவருடைய சர்வ வல்லமையை மட்டும் நாம் விசுவாசிக்கவில்லை ஆனால் கிறிஸ்து கர்த்தராக இருந்தும் கூட இந்த உலகத்திற்கு வந்து அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் உங்களுடைய, என்னுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொண்டு நமக்காக சிலுவையின் மீது பலியானர் என்பதை விசுவாசிப்பதின் மூலம் நாம் மீட்கப்பட்டுள்ளோம். ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மீட்பை நாம் பார்க்கும் பொழுது, இயேசுவை விசுவாசிக்க நாம் ஒத்துக் கொள்ளும் பொழுது, நமக்கு இருக்க வேண்டிய சரியான விசுவாசம் என்பது நமக்கு தெளிவாகிறது.

இந்நாளில் சிலுவையின் இரத்தத்தை மட்டுமே விசுவாசிக்கும் மக்கள் இடைவிடாது பாடுகிறார்கள், *"♫பாவ பாரத்திலிருந்து விடுதலையாவாயா? இரத்தத்தில் வல்லமை இருக்கிறது, வல்லமை இருக்கிறது. ♫"* என்று தொடர்ச்சியாக பாடிக்கொண்டு, தங்களுடைய சொந்த ஆவலுடன் "தேவனே! நான் விசுவாசிக்கிறேன்!" என்று குருட்டுதனமாக சத்தம் போடுகிறாகள். அவர்கள் இயேசுவை எவ்வளவு ஆர்வத்துடன் விசுவாசித்தாலும் சரி, சிலுவையினுடைய இரத்தத்தை மட்டும் விசுவாசிப்பதின் மூலம், அவர்கள் அவர்களுடைய பாவங்களிலிருந்து எப்பொழுதும் விடுவிக்கப்பட முடியாது.

நம்முடைய வாழ்க்கை முழுவதும் நம்முடைய பாவங்களிலிருந்து எப்பொழுதும் விடுவிக்கப்பட முடியாதவர்களாய் இருப்பதால் நமக்கு கண்டிப்பாக மீட்பர் தேவை. மேலும் இயேசு கிறிஸ்துவைத் தவிர இந்த மீட்பர் வேறு யாரும் இல்லை. உங்களையும் என்னையும் விடுவிக்க வந்த இயேசு கிறிஸ்து தான் மீட்பராகவும் ராஜாதி ராஜாவாகவும், முழு உலகத்தையும் அதிலுள்ள எல்லாவற்றையும் படைத்த படைப்பாளராகவும் நம்முடைய

வாழ்க்கையினுடைய தேவனாகவும் இருக்கிறார். அவர் இந்த உலகத்திற்கு வந்து அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்துக் கொண்டு சிலுவையின் மீது மரித்ததின் மூலம் நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை சுத்தப்படுத்தினார். வேறு வார்த்தைகளில் கூறினால், நம்முடைய மீட்பராக இருந்து, அவருடைய ஞானஸ்நானம் மற்றும் சிலுவையின் மூலம் நம்முடைய பாவங்களுக்கான எல்லாத் தண்டனைகளையும் ஏற்றுக்கொண்ட இயேசுவை விசுவாசித்ததன் மூலம் நாம் மீட்க்ப்பட்டுள்ளோம். இதைத் தான் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் நமக்கு தெளிவாகவும் நிச்சயமாகவும் காட்டுகிறது.

இயேசுவை மத அடிப்படையில் மட்டுமே விசுவாசிக்கும் மக்கள்

இந்த நாட்களில் சிலுவையினுடைய இரத்தத்தை மட்டும் விசுவாசிப்பதின் மூலம் தாம் மீட்கப்படலாம் என்று மக்கள் கூறுகிறார்கள். இது போன்ற வெற்று முறையீடுகளைச் செய்வது அவர்களுடைய மத விசுவாசத்தை வெளிகாட்டுவதை தவிர வேறில்லை. "நான் என்னுடைய மனந்திரும்புதலின் ஜெபத்தை கர்த்தருக்கு கொடுத்த பொழுது 'என் பிள்ளையே, நான் உன்னுடைய பாவங்களை மன்னித்து விட்டேன்' என்று என்னுடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் பேசினார். அவருடைய குரலை நான் கேட்ட பொழுது நான் எவ்வளவு நன்றியுள்ளவனாய் இருந்தேன்." என்று இந்த மக்கள் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட விசுவாசங்கள் அவர்களுடைய விசுவாசத்தின் சாட்சியாய் இருக்கிறது என்று இது போன்ற முறையீடுகளைச் செய்கிறார்கள்.

ஆனால் நம்முடைய இரட்சிப்பு, நம்முடைய சொந்த

உணர்ச்சி, எண்ணங்களால் மட்டும் வராது. ஆனால் அறிவு, உணர்ச்சி, மற்றும் முயற்சி ஆகிய நம்முடைய தோற்றத்தின் முழுமையின் மூலம் நாம் மீட்கப்பட்டுள்ளோம். வேறு வார்த்தையில் கூறினால், நம்முடைய மீடபராகிய கர்த்தர் நம்மை எப்படி இரட்சித்துள்ளார் என்பதை முதலில் தெரிந்து கொண்டும், அதை விசுவாசித்தும் நாம் மீட்கப்படவேண்டும். ஆனால் மதங்களை பற்றி என்ன? அவைகள் என்ன? மதங்கள் என்பது மக்களுடைய சொந்த எண்ணங்களின் மேல் கட்டப்பட்ட மனிதனால் செய்யப்பட்ட அமைப்புகளே தவிர வேறு ஒன்றும் இல்லை.

நீண்ட காலத்திற்கு முன் என்னுடைய குடும்பத்தில் என்னுடைய தாயார் தான் சமையல் செய்பவராக இருந்தார். அவருக்கு என்ன உதவி வேண்டும் என்று கேட்டு சமையலறை முழுவதும் அவர்களைப் பின் தொடர்ந்து, - வேதாகமத்தில் இருக்கும் யாக்கோபைப் போல அவர்களுக்கு நான் உதவி செய்வது உண்டு. சமையலறையில் உணவைச் சமைத்து கொண்டு என்னுடைய தாயார் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது சாப்பாட்டு அறையில் மேஜையை சரியாக அமைப்பதில் நான் சுறுசுறுப்பாக இருந்தேன். என்னுடைய தாயாரும் நானும் ஒரு அருமையான கூட்டமைப்பை உண்டாக்குவது வழக்கம். காலையில் எழுந்து அடுப்பை பற்ற வைத்து மேஜையை தயார் செய்து உணவிற்கு பிறகு சமயலறையை துடைப்பத்தால் பெருக்கிவோம். எல்லா காலையினுடைய செயலும் இந்த துடைப்பத்தால் முடிந்தது.

அந்த நாட்களில் கொரியாவில் இது வித்தியாசமான காட்சி இல்லை. சமயலரை தரையைச் சுத்தம் செய்ய பயன்படுத்தப்பட்ட இந்த துடைப்பம், நாம் கேட்கும் எதையும், நமக்கு உண்மையாக கொடுக்கும், தெய்வமாக தீடீரென மாறிவிடுவதால் அதிக விருப்பமான பொருளாக இருந்தது. வேறு வார்த்தைகளில் கூறினால் இந்த தேய்ந்து போன

துடைப்பத்திற்கு பூசை செய்யும் மக்கள் இருந்தார்கள். இது போன்ற தவறான செயல்கள் எங்களுடைய வாழ்க்கையில் இருந்தன. இதுமட்டும் அல்ல ஆனால் குடும்பத்திலோ அல்லது பக்கத்து வீட்டிலோ எப்பொழுதாவது சில துரதிஷ்டம் இருந்தபோதெல்லாம், சூனியம் செய்வதற்காக நாங்கள் ஒரு சூனியக்காரரை அழைப்பது வழக்கம். அந்த காலத்தில் இருந்த மக்கள் நம்பிக்கையை பற்றியதாலும், கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்று விசுவாசித்ததாலும், நிலத்தைக் கூட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட இந்த துடைப்பம் மட்டும் அல்ல அவர்களுடைய முப்பிதாக்களுடைய பெயர்கள் எழுதப்பட்டிருந்த அவர்களுடைய மூதாதையர்களின் நாணயங்கள் மலையின் மேல் இருந்த பெரிய பாறையில் வைக்கப் பட்டன. நடைமுறையில் அவர்களுடைய கண்களால் பார்க்கப்பட்ட எல்லா பொருட்களாலும் கடவுளாக மாற முடிந்தது.

இப்பொழுதெல்லாம் காலங்கள் செல்ல செல்ல, இந்த வகையான அறியாமையிலிருந்து மக்கள் மெதுவாக வெளியே வந்துள்ளார்கள். ஆனால் அந்த சமயத்தில் எந்த பொருளும் கடவுளாக மாறக்கூடியது ஒரு அடிக்கடி நடக்கும் நிகழ்வாய் இருந்தது. ஆதலால் அந்த காலத்தில் இருந்த அதிக உற்சாகமான தொழில்கள், சூனியத்தை தவிர வேறு எதுவும் இல்லை. சூனியம் செய்யும் பொழுது சூனியக்காரர்கள் புரியாத வார்த்தைகளை ஒப்பிட்டதை பார்த்து எனக்கு ஞாபகம் இருக்கிறது. அப்ரகத்தப்ரா, அப்ரகத்தப்ரா பகல் ஒளி வரட்டும், பகல் ஒளி வரட்டும் பகல் ஒளி வரும் பொழுது எல்லா பொருட்களுமே என்னுடையது. பக்தி குறைவாக இருப்பதால் பூசணிக்காய் பீப்பாய் உடைந்தது. அப்ரகத்தப்ரா, அப்ரகத்தப்ரா என்று சொல்லிக்கொண்டு சூனியக்காரர்கள் பாடும் வார்த்தைகளை நான் பாவனை செய்வதுண்டு, அவர்கள் என்ன சொன்னார்கள் என்று எனக்கு ஒன்றும் தெரியாது.

இது போன்ற சூனியம் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவருடைய வீட்டில் நிகழ்த்தப்பட்ட பொழுது, முழு கிராமத்திலிருந்து எல்லோரும் அதைப் பார்ப்பதற்கு ஒன்று கூடுவது உண்டு. தடயம் இல்லாமல் சிரிந்து கொண்டு, இறந்த பன்றியினுடைய தலைக்குள் உண்டியல்கள் திணிப்பது நிகழ்ச்சியின் முக்கியத்துவம் வாய்ந்தது. சூனியக்காரியின் வார்த்தையையும் அவளுடைய சக்தியையும் தீர்மானிப்பதாக எவ்வளவு உண்டியல்கள் திணிக்கப்பட்டது என்பது இருக்கும். பகல் ஒளி வரும் வரைக்கும் இந்த சூனியக்காரி தன் வேலையை இரவு முழுவதும் தொடர்வாள்.

பழைய பழக்கமுள்ளவர்களில் கன்னி பேயால் பிடிக்கப்பட்ட ஒருவர் இருந்தார் என்று முறையிடப்பட்டது. கன்னி பேயால் பிடிப்பட்டிருப்பதால் கன்னி பேய்கள் மற்ற பேய்களை விட அதிக சக்தி கொண்டிருந்தன, பெரும்பாலும் எல்லா பேய்களையும் துரத்திவிட முடியும் என்று அவன் முறையிடுவது வழக்கம். முடிவில் அதிக சக்தி வாய்ந்த பேயை அவன் சந்திக்க வேண்டியிருந்தால் அந்த பேயை வெளியே அனுப்புவதை விட அவனே குரல் வளையை நசுக்கி கொல்லப்படலாம் என்று சொன்னான். ஆனால் எல்லா தோட்ட வகையான பேய்களையும் அவனால் துரத்த முடியும் என்று அவன் கூறினான். அவனொரு சூனியம் செய்பவனாய் இருந்தான்.

மற்றவர்களைப் போல அவனுடைய வழக்கமான நேரங்களை சாதாரணமாக செலவிடுகிறான். ஆனால் அவனுடைய பேய்களை விரட்டும் வேலையை செய்ய வேண்டும் என்று யாராவது கூறினால் சூனியக்கார உடைக்கு அவனுடைய உடைகளை மாற்றி அவனுடைய அருமையான காட்சியை செய்தான். மக்களுடைய இருதயங்கள் இது போன்ற மூட நம்பிக்கை மனதால் பிடிக்கப்பட்டிருப்பதால் கர்த்தருடைய வார்த்தையுடன் ஒன்றும் செய்யாமல் இருக்கக்கூடிய இந்த வகை பழைய

கால மதங்களை அவர்கள் பின்பற்றுகிறார்கள். மேலும் எல்லா வகையான கேலி மற்றும் வெட்கமான விஷயங்களை முடிவில் விசுவாசிக்கிறார்கள்.

வேறு வார்த்தைகளில் கூறினால் மக்கள் தங்களுடைய சொந்த மதங்களை உருவாக்கியுள்ளார்கள். மேலே உள்ள கதையில் இருப்பதைப் போல அவர்கள் சுயமாக தங்களுடைய கர்த்தரை கண்டுபிடித்திருக்கிறவர்கள். மக்களிடத்தில் இந்த வகையான இயற்கை சுபாவம் இருப்பதால், கிறிஸ்தவர்களாய் இருந்தும் கூட அவர்களுக்காக இயேசு கொல்லப்பட்டார் என்று அவர்களிடம் சொல்லும் பொழுது, இதற்கு மேலே தங்களுடைய சொந்த உணர்ச்சிகளினால் எளிதாக வெற்றிக் கொள்ள முடியும். மேலும் கொள்கை பிடிவாதத்திலும் அவரைக் குருட்டு தனமாக விசுவாசிப்பதிலும் முடியும். இயேசு தான் தேவ குமாரன் என்றும், முழு உலகத்தையும் படைத்த படைப்பாளர் என்றும் அவர்களிடம் சொல்லும் பொழுது அதை அவர்கள் நேசித்து, மறுபடியும் ஒரு முறை சந்தேகமில்லாமல் விசுவாசிக்கிறார்கள். *"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"* என்று கேட்க விரும்பி, மறுபடியும் ஒரு முறை உண்மையான புரிந்து கொள்ளுதல் இல்லாமல் அதை சந்தேகமில்லாமல் விசுவாசிக்கிறார்கள். கர்த்தருடைய எந்த வார்த்தையும் தப்பாக இல்லாததால் முதல் முறையாக அவர்கள் நல்ல வார்த்தையை கேட்கும் பொழுது, இயேசுவை விசுவாசிக்கிறோம் என்று மட்டுமே சொல்கிறார்கள்.

இயேசுவின் மீது தங்களுடைய விசுவாசத்தை வெளிப்படுத்தின பொழுதிலும், தங்களுடைய இருதயங்கள் இன்னமும் பாவம் நிறைந்ததாக இருப்பதால் இந்த மக்களை நியாயந்தீர்க்க இயேசு வருவார். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் சத்தியத்தை பற்றி அறியாமல்

இருந்து தங்களுடைய சொந்த எண்ணங்களுக்கு ஏற்ப இயேசுவை விசுவாசிப்பவர்கள், அவர்களுடைய மத வாழ்க்கையை தொடங்கிய 10 வருடங்களிலிருந்து கர்த்தருடைய சட்டத்திற்கு ஏற்ப வாழ முடியாமல் இருக்கும் உண்மையான பாவிகள் என்று உணருவார்கள்.

நானும் கூட இயேசுவை தன்னிச்சையாக விசுவாசித்ததுண்டு. கிறிஸ்துவை சந்தித்தாக அதிக சந்தோஷமடைந்து எல்லா சமயமும் ஸ்தோத்திரம் பாடுவதுண்டு. ஆனால் கிறிஸ்துவை அறிந்து கொண்ட பிறகு நான் சட்டத்தைத் தெரிந்து கொண்டேன். மேலும் சட்டத்தைத் தெரிந்துகொண்ட பிறகு என்னுடைய பாவங்களை தெரிந்து கொண்டேன். என்னுடைய பாவங்களை தெரிந்து கொண்ட பிறகு பாவத்திற்கான நித்திய நியாயதீர்ப்பு இருக்கும் என்றும் பாவத்திற்கான துயரம் தொடரும் என்றும் நான் உணர்ந்தேன்.

இந்த பாவத்தின் துயரத்தை தீர்ப்பதற்காக நான் என்னுடைய உண்மையான மனந்திரும்புதலின் ஜெபங்களை ஏறெடுத்தேன். இருப்பினும், ஆசீர்வதிக்கப்படுவதற்காக எல்லா பொருட்களிடமும் ஜெபிப்பதற்கு மக்கள் உபயோகித்த மூட நம்பிக்கை விசுவாசத்தை போல, இந்த வகை விசுவாசம் இருந்தது. கர்த்தருடைய வார்த்தையில் எழுதப்பட்டிருந்த சட்டத்தை நான் தெரிந்து கொண்டு என்னுடைய பாவங்களை உணர்ந்த பிறகு, என்னுடைய இருதயம் மிகவும் சஞ்சலப்படுத்தப் பட்டதால் என்னுடைய மனந்திரும்புதலின் ஜெபங்களை நான் ஏறெடுக்க வேண்டும் என்று நான் நினைத்தேன். மேலும் இந்த மனந்திரும்புதலின் ஜெபங்கள் எனக்கு சில உணர்ச்சி பூர்வமான விடுதலையை கொண்டு வந்தன. ஆனால் என்னுடைய ஆத்துமாவில் இன்னமும் பாவம் இருந்தது. மேலும் என்னுடைய ஆத்துமா இன்னமும் பாவக்கட்டில் இருக்கிறது என்பதை கண்டுபிடித்த பிறகு நான் தொடர்ந்து துயரப்பட்டேன்.

இந்த வழியில் என்னுடைய பாவங்களால் சூழப்பட்டிருந்ததால் நான் இயேசுவை விசுவாசித்து என்னுடைய பாவங்களை உணர்ந்தேன். மேலும் இப்படி என்னுடைய பாவங்களை உணர்ந்த பிறகு துயரம் எனக்கு வந்தது. இயேசுவை நான் முன்பு விசுவாசித்திருக்க வேண்டும். என்று கூட நான் நினைத்தேன். மேலும் என்னுடைய இளமையில் இவ்வளவு சீக்கிரமே இயேசுவை தெரிந்து கொண்டு ஏன் விசுவாசித்தேன் என்று முடிவில் வருந்தினேன். இருப்பினும் இயேசுவை விசுவாசிப்பதை என்னால் நிறுத்த முடியவில்லை. மேலும் இந்த பாவத்தின் கட்டை உடைப்பதற்காக நான் என்னுடைய மனந்திரும்புதலின் ஜெபங்களை ஏறெடுத்தேன். ஆனால் இந்த ஜெபங்கள் பயன்படாமல் இந்த பிரச்சனையை அடிப்படையாக தீர்ப்பதற்கு குறைந்த அளவே உதவியது.

சாதாரண மக்கள் பாவங்கள் செய்து கொண்டிருந்தாலும் கூட, அவர்கள் என்ன பாவங்கள் செய்துள்ளார்கள் என்பது பற்றி அறியாமல் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஆலயத்திற்கு செல்லத் தொடங்கும் பொழுது சட்டத்தைப் பற்றி கேள்விப்பட்டு அவர்களுடைய பாவங்களில் அகப்பட்டு கொள்கிறார்கள். பிறகு அவர்கள், உணர்ச்சிபூர்வமான மனந்திரும்புதலின் ஜெபங்களை ஏறெடுப்பதின் மூலம் முதலில் அவர்களுடைய பிரச்சனையை தீர்க்க முயற்சி செய்கிறார்கள். ஆனால் அதிக நேரங்களை செல்லுகையில் அவர்களுடைய பாவங்களால் சூழப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்கள் மன்னிக்கப்படவேண்டும் என்றும் அதிகமாக உணருகிறார்கள்.

அவர்கள் எவ்வளவு மனந்திரும்புதலின் ஜெபங்களை ஜெபித்தாலும், அவர்கள் அதிகமாக ஜெபித்தால், இன்னமும் அதிகமாக அவர்களுடைய பாவங்கள் மறைவதிலிருந்து தூரமாய் இருந்தாலும், இன்னமும் அதிக தெளிவாக வெளிப்படுத்தப்பட்டு, அவர்களுடைய நிகழ்காலத்தை பற்றி

இன்னமும் அதிகமாக ஞாபகப்படுத்துகிறது என்பதை உணர்கிறார்கள். இந்த தருவாயில் இருந்து, இது போன்ற மக்களுடைய மத வாழ்க்கைகள் நேர்மையற்ற வழிகள் நிறைந்ததாக மாறிவிடுகின்றன. மேலும் அவர்கள் தொடர்ந்து கஷ்டப்படுகிறார்கள். "நான் முதலில் விசுவாசித்த பொழுது, மிகவும் நன்றாக உணர்ந்தேன் ஆனால் ஐந்து, பத்து வருடங்கள் கடந்த பிறகு நான் ஏன் இவ்வளவு மோசமாக உணருகிறேன்? நான் ஏன் இவ்வளவு துயரப்படுகிறேன்." அவர்கள் முதலில் விசுவாசித்த பொழுது அவ்வளவு பிடிப்பாய் இருந்த அவர்களுடைய இரட்சிப்பின் திட நம்பிக்கை இப்பொழுது இல்லை என்று உணருகிறார்கள். இயேசுவை விசுவாசித்த பிறகு, அவர்கள் பாவிகளாகிறார்கள் என்று நினைத்துக் கொண்டு, அவர்களுடைய விசுவாசங்களின் எல்லா வகையான தத்துவங்களையும் பொருத்த முற்பட்டு, இறுதியில் இது போன்ற மதவாதிகளாக ஆகின்றார்கள்.

இயேசு, இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலம் அவர்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சித்துள்ளார் என்ற சத்தியத்தை பற்றி இந்த மக்கள் அறியாமல் இருப்பதால் தான், முடிவில் முழு மத வாதிகளாக ஆகின்றார்கள். இயேசுவை விசுவாசிப்பதாக அவர்கள் வெளிப்படுத்தினாலும், அவர்கள் இன்னமும் தொந்தரவுப் படுத்தப் படுகிறார்கள். ஏனென்றால் அவர்களுடைய இருதயங்களில் அமைதி இல்லை, இப்படிப்பட்ட மக்கள் வேறு கர்த்தரிடத்திற்கு மாற்றி கொள்வதைப்பற்றி நினைக்க கூட கூடாது, ஏன் என்றால் அவர்கள் முயற்சி செய்தாலும் கர்த்தரை தவிர வேறு எதையாவது விசுவாசிப்பது, விபச்சாரம் செய்வது போன்றது என்று அவர்களுக்கு ஏற்கெனவே தெரியும்.

இயேசுதான் தேவகுமாரன் என்றும், அவர்தான் கர்த்தர் என்றும், அவர்தான் அவர்களுடைய மீட்பரென்றும்,

அவர்களுக்கு தெளிவாக தெரிவதால் அவர்கள் வேறு கர்த்தரை விசுவாசிக்க முடியாது. மேலும் இன்னமும் அவர்களுக்கு சத்தியம் தெரியாததால் எப்பொழுதும் அவர்களுடைய பாவங்களால் தொந்தரவு செய்யப்பட்டு அவர்கள் துயரத்தில் வாழ்கிறார்கள்.

இதனால் தான் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலம் வந்த இயேசு கிறிஸ்துவை அவர்கள் தெரிந்து கொண்டு விசுவாசிக்க வேண்டும். இறுதியில் மதவாதிகளாக மாறியுள்ள இந்த கிறிஸ்தவர்களுக்கு இயேசு தான் ராஜா என்றும், சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தைச் சிந்தினார் என்றும், வேதாகமத்தின் வார்த்தை தான் கர்த்தருடைய வார்த்தை என்றும் அவர்களுக்குத் தெரியும்.

இருப்பினும், இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம், அவர்களுடைய பாவங்களை மட்டும் அல்ல, ஆனால் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொண்டார் என்பது அவர்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. மேலும் அவர்களுடைய விசுவாசத்தை அவர்கள் வெளிப்படுத்தினாலும் கூட அவர்கள் ஏன் பாவிகளாய் வாழ்கிறார்கள் என்பதற்கும், பாவிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கு அவர்கள் எல்லோரும் வருவதற்கு இந்த அறியாமைதான் காரணம். இயேசு கிறிஸ்து எப்படி சரியாக அவர்களுடைய பாவங்களை பொறுப்பெடுத்து கொண்டார் என்பதைப் பற்றிய எண்ணம், இது போன்ற கிறிஸ்தவ மத வாதிகளுக்கு இல்லாததால், எப்பொழுதுதெல்லாம் அவர்கள் எழும்புகிறார்களோ, அப்போது அவர்கள் தங்களுடைய சொந்த உணர்ச்சிகளை விசுவாசிக்கிறர்கள். இதன் காரணமாக ஒரு குருடன் ஒரு யானையினுடைய பகுதிகளை தொடுவதின் மூலம் அதனைக் கண்டுபிடிக்க முயற்சிப்பது போல அவர்கள் விசுவாசிப்பதுடன் நிஜமான உண்மை

ஒத்துப்போவதில்லை. இதனால் தான் அவர்களுடைய விசுவாசத்தில் தவறு இருப்பதுடன், அவர்கள் முழுமையாக அறியாமல் இருக்கிறார்கள். மேலும் இதனால் தான் மறுபடியும் ஒரு முறை அவர்கள் குழப்பமடைகிறார்கள்.

நீல நிற நூலின் சத்தியத்தை நாம் விசுவாசிக்காவிட்டால் நமக்கு என்ன நேரிடும்?

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுக்கு வெளியே இளநீல நிற நூலை விட்டுவிட்டு, இயேசுவை நம்முடைய சொந்த மீட்பராக நாம் விசுவாசிக்க வேண்டியிருப்பதால் நமக்கு என்ன நேரிடும்? ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டதின் மூலம் கட்ட வேண்டும் என்று கர்த்தர் கட்டளையிட பொழுது, இதற்கு பதிலாக வாயிலை இரத்தாம்பர நிற, சிகப்பு நிற நூல் மற்றும் சணல் நூல் ஆகியவற்றால் மட்டும் கட்ட வேண்டும் என்று மோசே இஸ்ரவேலர்களுக்கு சொல்லியிருந்து, இஸ்ரவேலர்கள் வாயிலை இந்த வழியில் கட்டி முடித்திருந்தால் அவர் என்ன சொல்லியிருப்பார்? அவருடைய ஆசரிப்புக் கூடார வாயிலாக அதை கர்த்தர் அங்கீகரித்திருப்பாரா? அவர் அதை ஒரு பொழுதும் அப்படி அங்கீகரித்திருக்க மாட்டார். நான்கு வித்தியாசமான நூல்களால் ஆசரிப்புக் கூடார வாயிலை கட்ட வேண்டும் என்று கர்த்தர் இஸ்ரவேலர்களுக்குச் சொன்னார். இதற்கு ஏற்ப அது கட்டப்படவில்லை என்றால் ஆசரிப்புக் கூடார வாயில் என்று அது எப்பொழுதுமே அழைக்கப்பட முடியாது. நான்கு நூல்களுள் ஒன்று கூட எப்பொழுதுமே விடப்பட முடியாது.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட வேண்டியிருந்தது. இயேசு கர்த்தராக இருந்து, இந்த உலகத்திற்கு நம்முடைய மீட்பராக மனிதனுடைய சரீரத்தில் வந்து, உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவருடைய சொந்த சரீரத்தில் எடுத்துக்கொண்டு, சிலுவையின்மீது மரித்து மரித்தோரிலிருந்து எழுந்து, இதன்மூலம் பனியை போல வெண்மையாக நம்முடைய பாவங்களைக் கழுவிவிட்டார். இந்த இயேசு கிறிஸ்துவை நம்பி விசுவாசித்ததன் மூலம் தான் நம்முடைய பாவங்களிலிருந்து நாம் இரட்சிக்கப் பட்டோம். நாம் இரட்சிக்கப்படுவதற்கு இயேசுவை நாம் எப்படி விசுவாசிக்க வேண்டும் என்று ஆசரிப்புக் கூடார வாயிலுடைய நிறங்கள் நமக்குச் சொல்லுகின்றன. ஆசரிப்புக் கூடார வாயிலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தை விசுவாசிப்பவர்கள் எல்லோரும் அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்கள். பனியைப் போல வெண்மையாக அவர்களுடைய பாவங்களுக்கான மீட்பை அவர்கள் எல்லோரும் பெற்றுள்ளார்கள். உங்களுடைய என்னுடைய எல்லாப் பாவங்களையும் பனியை போல வெண்மையாக மாற்றி, இயேசு கிறிஸ்து அவற்றைக் கழுவியுள்ளார். உங்களுடைய மற்றும் என்னுடைய உண்மையான மீட்பராக இயேசு கிறிஸ்து ஆகியுள்ளார்.

ஆசரிப்புக் கூடார வாயிலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியம் இது தான். இரத்தாம்பர நிற நூல் மற்றும் சிகப்பு நிற நூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றை விசுவாசித்ததாக அவர்கள் வெளிப்படுத்தினாலும் கூட, இளநீல நிற நூலின் சம்மந்தப்படுத்துதலை விசுவாசிக்காத அநேக மக்கள் இன்றும் கூட இருக்கிறார்கள்.

இந்த புத்தகத்திற்காக தொடக்க ஆய்வை செய்வதற்கு

ஒரு முறை ஒரு கிறிஸ்தவ புத்தக கடைக்கு நான் சென்றேன். அதிக பிரபலமான கிறிஸ்தவ தலைவர்களால் எழுதப்பட்ட ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றிய சில புத்தகங்களை நான் அங்கு கண்டேன். இருப்பினும் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலை சில புத்தகங்கள் குறிப்பிட கூட இல்லை. அதே சமயம் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய "இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை நமக்கு என்ன சொல்லுகின்றன? நீல நிறம் வானத்தின் வண்ணம், எனவே இது இயேசு தான் கர்த்தர் என்று நமக்குச் சொல்லுகிறது. இயேசு இந்த உலகத்திற்கு வந்த பொழுது சிலுவையின் மேல் அவர் சிந்திய இரத்தத்தை சிகப்பு நிறம் குறிப்பிடுகிறது. இரத்தாம்பர நிறம் அவர்தான் ராஜா என்று நமக்குச் சொல்லுகிறது!" என்பது போன்ற கண்டுபிடிக்கப்படாத வலியுறுத்தலைச் செய்தது.

இந்த வகையான விளக்கம் வழி விலகலாகும். இரத்தாம்பர நிற நூலின் மூலம் இயேசு தான் கர்த்தர் என்று நமக்கு சொல்லப்பட்டுள்ளது. இயேசு தான் ராஜாதி ராஜா என்றும் தேவர்களுக்கெல்லாம் தேவன் என்றும் இரத்தாம்பர நிற நூலில் மூலம் கர்த்தர் ஏற்கெனவே நமக்கு சொல்லியிருப்பதால், இதை ஏன் இளநீல நிற நூலின் மூலம் மறுபடியும் ஒரு முறை அவர் திரும்பச் செய்யவேண்டும். இந்த மக்களுக்கு இளநீல நிற நூலின் மர்மத்தை பற்றி தெரியாததால் அதை சரியாக விளக்கமளிக்கத் தவறி விட்டார்கள்.

சிலுவையினுடைய இரத்தம் மட்டுமே அவர்களுக்கு தெரிந்ததால், சிகப்பு நிற நூலின் மேல் அதிக முக்கியத்துவத்தை வைக்கிறார்கள். அவர்களுடைய ஆசரிப்புக் கூடார வாயிலுடைய ஓவியத்தை நாம் பார்க்கும் பொழுது அது வெள்ளை மற்றும் சிகப்பு நிறங்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம்.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் நான்கு நிறங்களை தெளிவாக காண்பிக்க வேண்டும் என்று இருக்கும் பொழுது, அவர்களுடைய ஒவியங்கள் இளநீல நிறத்தை காண்பிக்காமல் வெள்ளை நிற நூல், சிகப்பு நிற நூல் மற்றும் இரத்தாம்பர நிற நூலை மட்டுமே காண்பிக்கின்றன.

நீல நிற நூலின் சத்தியத்தை பற்றி உணராமல், இது போன்ற நிரூபிக்கமுடியாத விசுவாசத்தை பற்றி பேசும் அநேக மக்கள் இப்பொழுது உலகத்தில் இருக்கிறார்கள். இயேசு அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய தண்டனைகளை ஒரே சமயத்தில் ஏற்றுக் கொள்வதற்கு உலகத்தின் பாவங்களையும், நம் பாவங்களையும் அவர் மீது எடுத்துகொண்டார் என்பதைக் கூட உணராமல் இருந்து, சிலுவையின் மீதான இயேசுவினுடைய இரத்தத்தை மட்டும் விசுவாசிப்பதின் மூலம் அவர்கள் மீட்க்கப்படலாம் என்று கூறும் அநேகர் இன்றைய காலத்தில் இருக்கிறார்கள். இது போன்ற மக்களுடைய இருதயங்கள் எப்பொழுதுமே பாவம் நிறைந்ததாக இருக்கின்ற. இன்றைக்கு அல்லது நாளைக்கு ஏன், அவர்கள் மரிக்கும் வரைக்கும் கூட இது போன்ற மக்கள் அவர்களுடைய பாவங்களிலிருந்து விடுவிக்கப் படமுடியாதவர்கள். இது போன்ற மக்கள் மனசஞ்சலத்துடனே இருக்கிறார்கள். இதனால் "நான் மரிக்கும் வரைக்கும் கர்த்தருக்கு முன் நான் ஒரு பாவி" என்று சிலர் அறிக்கையிடுகிறார்கள். இயேசுவை அவர்கள் விசுவாசித்தாலும் மரிக்கும் வரை பாவிகளாக இருப்பார்கள் என்றால் இது சரியான விசுவாசம் தானா?

இயேசுவை விசுவாசித்த பிறகு எப்பொழுது நாம் நீதிமான்களாகிறோம்? இயேசுவினுடைய ஞானஸ்நானம் மற்றும் இரத்தத்தை விசுவாசிப்பதன் மூலம் பாவமற்றவர்களாக ஆனவர்களுக்கு பரலோகம் ஒதுக்கப்பட்ட இடம் அல்லவா? பரலோகம், என்பது

நீதிமான்களுடைய இடம், அது பாவிகளுடையது இல்லை. தங்களுடைய பாவங்களிலிருந்து, நிச்சயமாக மீட்க்கப்பட்டுள்ள நீதிமான்களும் பாவமற்றவர்களாக ஆனவர்களும் மட்டுமே பரலோகத்திற்குள் நுழைய முடியும்.

இயேசுவை அவர்கள் விசுவாசித்தலும், தமக்குத் தாமே பாவிகளாக அறிக்கையிடுகிறவர்கள், எவ்வளவு முறை அவர்களுடைய விசுவாசத்தை அவரிடம் அறிக்கையிட்டிருந்தாலும் அவர்களுடைய இரட்சிப்பை பற்றிய எந்த திட நம்பிக்கையும் இல்லை. ஏனென்றால் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றைப் பற்றி அறியாமல் இருக்கிறார்கள். இயேசுவை அவர்கள் விசுவாசித்து ஜெபித்தாலும் அவர்களுடைய ஜெபங்கள் பதிலளிக்கப்படும் என்பதற்கு எந்த திட நம்பிக்கையும் இல்லை. அவர்கள் இயேசுவை விசுவாசித்தாலும் அவரால் உதவி செய்யப்படுவதோ நேசிக்கப்படுவதோ இல்லை. அவர்களுடைய பக்தியை அவர்கள் காண்பிக்கும் பொழுது அவர்கள் நேசிக்கப்படுவது போல் உணரலாம், ஆனால் அவர்களுடைய பக்தியிலிருந்து குறையும் பொழுது அவரால் வெறுக்கப்பட்டது போல, கர்த்தரால் கைவிடப்பட்டது போல அவர்கள் உணருகிறார்கள். அவர்களுடைய காணிக்கைகளையும் பக்தியையும் அவருக்கு கொடுக்கும் பொழுது மட்டுமே, கர்த்தர் அவர்களை நேசித்து ஆசீர்வதிக்கிறார் என்றும், அவர்களுடைய காணிக்கைகளை கொடுக்க தவறும் பொழுது அவர் அவர்களை ஒரு போதும் நேசிப்பதில்லை என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் கடினமான சூழ்நிலைகளை சந்திக்கும் பொழுது, இது போன்ற கடினமான சூழ்நிலைகளை ஏன் கடக்க வேண்டும் என்று புரிந்து கொள்ள முடியாமல், கர்த்தர் அவர்களை வெறுக்கிறார் என்று நினைத்து இறுதியில் அவர்களுடைய துன்பத்திற்கு அவரை குறை கூறி அதன் பிறகு, அவரை

ஒரு போதும் விசுவாசிப்பது இல்லை.

முடிவில் இது போன்ற மக்களுக்கும் கர்த்தருக்கும் இடையான விசுவாசம் உடைந்து போகிறது. அவர்களுடைய விசுவாசம், அவர்களுடைய சொந்த எண்ணங்கள் மற்றும் உணர்ச்சிகளின் தயாரிப்பாய் இருப்பதால், மிகவும் தன்னிச்சையாகவும் நிச்சயமில்லாததாகவும் தவறானதாகவும் இருக்கிறது. கர்த்தரிடத்தில் நாம் போகும் பொழுது நம்முடைய உணர்ச்சிகளை நாம் தூக்கி எறிய வேண்டும். கர்த்தரிடத்தில் நாம் போகும் பொழுது, அவருடைய ஞானஸ்நானம் மற்றும் இரத்தத்தின் மூலம், நம்முடைய பாவங்களுக்காக நரகத்தில் தள்ளப்பட இருந்த நம்மை, இயேசு கிறிஸ்து இரட்சித்துள்ளார் என்ற சத்தியத்தை தெளிவாக விசுவாசிக்கும் நம்முடைய விசுவாசத்துடன் மட்டுமே நாம் போக வேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு முன்பும், சட்டத்தினுடைய வார்த்தைக்கு முன்பும், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவிக்கு முன்பும், நம்முடைய மனச்சாட்சிக்கு முன்பும், விதிவிலக்கு எதுவும் இல்லாமல் நரகத்திற்கு தள்ளப்படுவதை தடுக்க முடியாதவர்கள் நாம் தான் என்பதை தெளிவாக கண்டு கொள்ள வேண்டும். நாம் எப்படிப்பட்ட பாவமான மனிதர்களாக இருக்கிறோம் என்றும் கர்த்தர் நம்முடைய பாவங்களிலிருந்து எப்படி இரட்சித்துள்ளார் என்பதைத் தெரிந்து கொண்டு, அதனைக் கற்று, விசுவாசித்து, நம்பும் பொழுது தான் இயேசு கிறிஸ்து ஏற்கெனவே நம்முடைய உண்மையான மீட்பராகியுள்ளார் என்பதை நாமெல்லோரும் விசுவாசிக்க முடியும்.

உண்மையான விசுவாசித்தின் மூலமே இரட்சிப்பின் பரிசை பெற்றுக் கொள்ள முடியும்

இதனால் நம்முடைய சொந்த நற்பண்பு காரியங்களைச் செய்ததின் மூலம் அல்ல ஆனால் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றை விசுவாசித்ததின் மூலம், நாம் நம்முடைய பாவங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளோம் என்பதை, நீங்களும் நானும் உணரவேண்டும். மேலும், நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்பதற்காக, இந்த நான்கு சத்தியங்களின் மூலம் இயேசு கிறிஸ்து நம்மிடம் தெளிவாக வந்தார் என்று நாம் தெரிந்து கொண்டு விசுவாசிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் மேசியாவாக வருவேன் என்று அவர் வாக்களித்து இருந்தார். மேலும் இந்த வாக்கைப் போல அவர் இந்த உலகத்திற்கு வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்களையும் முழு மனித குலத்தினுடைய பாவங்களையும் ஒரே தரமாக தன் மீது எடுத்துக்கொண்டார். பின்பு, அவர் இந்த உலகத்தினுடைய பாவங்களை சிலுவைக்கு சுமந்து சென்று, சிலுவையில் அறையப்பட்டு, அவருடைய இரத்தத்தைச் சிந்தி, *"முடிந்தது" (யோவான் 19:30)* என்று கூறிய பிறகு மரித்தார். மூன்று நாட்களில் மரித்தோரிலிருந்து மறுபடியும் எழுந்து, இன்னமும் 40 நாட்களுக்கு சாட்சியாயிருந்து, திரும்பி வருவேன் என்று வாக்களித்து, கர்த்தருடைய வலது பக்கத்தினுடைய சிங்காசனத்திற்குச் சென்றார். இதை நாம் விசுவாசிக்க வேண்டும்.

"இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் என்னுடைய ஊழியங்களின் மூலம் நான் உங்களை நிச்சயமாக மீட்டுள்ளேன். இந்த சத்தியத்தின் மீட்பை

விசுவாசிப்பவர்களை எடுத்துக் கொள்வதற்கு நான் திரும்பவருவேன். அவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளாவதற்கு அவர்களுக்கு உரிமையை நான் தருவேன் தங்களுடைய இருதயங்களில் இந்த சத்தியத்தை விசுவாசிப்பவர்களை அவர்களுடைய பாவங்களை அகற்றி பனியை போல அவர்களை சுத்தமாக்குவேன். அவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுத்து, அவர்களை என்னுடைய சொந்த பிள்ளைகளாக ஆக்குவேன்." இதை தான் நமக்கு நம்முடைய தேவன் சொல்லியிருகிறார்.

இந்த வார்த்தையை நாம் விசுவாசிக்க வேண்டும். நம்முடைய தேவன் இந்த சத்தியங்களை ஏற்கெனவே நிறைவேற்றியுள்ளார். மேலும் இந்த பூமியில் உள்ளவர்களின் வாழக்கையில் செயலாற்றிக் கொண்டிருக்கிறார். இந்த சத்தியத்தை விசுவாசிப்பவர்களை பாதுகாத்து, அவர்களுக்கான சாட்சியை ஏற்றுகொள்கிறார். இப்படிதான் நம்முடைய தேவனுடைய செயல்களாகிய ஞானஸ்நானம் மற்றும் இரத்தத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டு, கிருபை, பாதுகாப்பு, மற்றும் கர்த்தருடைய அன்பில் தங்கி நீதியின் வாழ்க்கையை வாழ்கிறோம். அவர் நம்மை மீட்டுள்ளதால்தான் விசுவாசிப்பதின் மூலம் நாம் நம்முடைய பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம்.

ஆசரிப்புக் கூடாரத்தை பற்றிய இந்த புத்தகம் முழு உலகத்தினுடைய எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படும் பொழுது, முழு உலகத்தினுடைய மக்களும் சத்தியத்தில் இருக்கும் அவர்களுடைய விசுவாசத்தின் மூலம் அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்கப்படுவார்கள் என்று நான் உறுதியாய் இருக்கிறேன். இயேசுவின் இரத்தத்தின் மூலம் மட்டுமே பாவத்தின் மீட்பு வரும் என்று கூறுபவர்கள், இது பொன்ற முறையீடுகளை இனிமேல் கூற முடியாது. ஆனால் இதற்கு பதிலாக, அவர்களுடைய முறையீடுகள் எவ்வளவு தவறாக இருந்தன

என்பதை உணருவார்கள். தவறான ஒன்றைப் பற்றிக் கொண்டு, இதுதான் இரட்சிப்பு என்று அவர்கள் ஒருபோதும் கூற முடியாது. இயேசுவினுடைய இரத்தத்தை மட்டுமே விசுவாசிப்பதின் மூலம் அவர்கள் இரட்சிக்கப்படலாம் என்று எப்பொழுதும் அவர்களால் சொல்ல முடியாது.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலில் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி, இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் தெளிவான இரட்சிப்பின் வார்த்தை காணப்படுகிறது. பழைய ஏற்பாட்டிலிருந்து வாக்களிக்கப்பட்டு தீர்க்கதரிசனம் கூறப்பட்ட கர்த்தருடைய வார்த்தையாக இது இருப்பதாலும், அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாகவும், மரணத்தின் மூலமாகவும் எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்பை நிறைவேற்றியதாலும், புதிய ஏற்பாட்டில் கர்த்தர் இந்த வாக்கை நிறைவேற்றியதாலும், சந்தோஷத்துடனும் நன்றியுடனும் இந்த இரட்சிப்பின் பரிசை நாம் விசுவாசித்தால் நாமெல்லோரும் நித்திய பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த வார்த்தை தான் மிகவும் எளிதாகவும் சரியாகவும் இருக்கிறது, ஆனால் இந்த வார்த்தையில் சுத்தமான விசுவாசம் உங்களுக்கு இல்லை என்றால், முழு உலகத்தினுடய எல்லா ஞானமும் இருந்தாலும் கூட இது புரிந்து கொள்ள முடியாது என்பதும் உண்மைதான். அதனால் தான் அவருடைய வார்த்தையை இருப்பது போலவே நாம் விசுவாசிக்க வேண்டும். நாம் அறியாமல் இருக்க கூடாததாய் இருக்க வேண்டிய அளவிற்கு இது விலையேறப்பட்ட சத்தியமாய் இருப்பதால், நீங்களும் நானும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை அதிக நிச்சயமாய் விசுவாசிக்க வேண்டும். ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட

நூல் ஆகியவற்றின் சத்தியத்தை நமக்கு சுதந்திரமாகவும், எளிதாகவும் போதிப்பதின் மூலம் நம்முடைய விசுவாசத்துடன் இந்த விலைமதிப்பற்ற இரட்சிப்பின் பரிசை நாம் பெற்றுக்கொள்வதற்கு கர்த்தர் நம்மை அனுமதித்துள்ளார்.

இந்த சத்தியத்தை ஒரே மாதிரியாக விசுவாசிக்கும் நீங்களும் நானும், கர்த்தருடைய சத்தியத்தின் அன்பிற்காக நம்முடைய நன்றியை அவருக்கு கொடுப்போம். இருப்பினும் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் உண்மையான சத்தியத்தைப் பற்றி அறியாமல் இருந்து, மக்களை அவர்களுடைய தவறான வழிகளுக்கு போதித்து நடத்திச் செல்லும் அநேகர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் கூட இந்த சத்தியத்தை நாம் பரப்ப வேண்டும். அவர்களுடைய சத்தியத்தின் அறியாமையால் இருதயங்கள் வேதனையடைந்துள்ளவர்களுக்கும், அவர்களுடைய பாவங்களிலிருந்து அவர்கள் விடுபட வேண்டும் என்பதற்கும், இரட்சிப்பின் கதவிற்குள் நுழைய வேண்டும் என்பதற்கும், நாம் இந்த நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் சத்தியத்தை போதிக்கிறோம். ஆசரிப்புக் கூடார சத்தியத்தை நாம் போதிக்கும் பொழுது அதை விசுவாசிக்கிறவர்கள் மீட்க்கப்படுவார்கள். ஆனால் விசுவாசிக்காதவர்கள் அவர்களுடைய பாவங்களுக்காக தண்டிக்கப்படுவார்கள். இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்று நாம் தீர்மானித்து விட்டால் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் சத்தியத்தைத் தெரிந்து கொண்டு நாம் அவரை விசுவாசிக்க வேண்டும்.

தொடக்கத்திலிருந்து இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் சத்தியம் யாருக்கும் தெரிவதில்லை *"சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)* என்று கர்த்தர் நமக்குச் சொன்னார். சத்தியம் என்றால் என்ன? சத்தியம் என்றால் உண்மையான நற்செய்தி (எபேசியர் 1:13),

அதாவது இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி. இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களை சரியாக தெரிந்து கொண்டு அவற்றை விசுவாசிப்பது தான் சத்தியத்தில் இருக்கும் சரியான விசுவாசமாகும்.

சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்று கர்த்தர் ஏன் சொன்னார்? நீங்கள் உங்களுடைய பாவங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளீர்களா? நீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களை விசுவாசிப்பதின் மூலம் உங்களுடைய இருதயங்களும் கூட பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டிருக்கிறதா? உங்களுடைய பாவங்கள் தெளிவாக மறைந்திருக்கிறதா? நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, மேலும் உங்களுடைய தகப்பன் என்று உங்களால் அறிக்கையிட முடியுமா? ஏனென்றால் பாவமற்றவர்களை தான் அவருடைய பிள்ளைகளாக கர்த்தர் அடையாளம் கண்டு கொள்கிறார். ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுக்குள் நெய்யப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டு விசுவாசிப்பவர்களின் விசுவாசத்தை மட்டுமே அவர் அங்கீகரிக்கிறார். பாவிகள் கர்த்தருடைய பிள்ளைகள் இல்லை. கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள ஒரே நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிக்கும் மறுபடியும் பிறந்தவர்கள் மட்டுமே பிதாவாகிய கர்த்தரின் பிள்ளைகளாக இருக்கிறார்கள்.

இந்த உலகத்தில் வாழும் பொழுது நாம் அதிகமான கஷ்டங்கள், பெருங்கஷ்டங்கள் மற்றும் துயரங்கள்கா ஆகியவற்றைச் சந்தித்தாலும், கர்த்தர் நம்மோடு இருப்பதால் நாம் சந்தோஷமாயிருக்கிறோம். நாம் குறைபாடுடையவர்களாய் இருந்தாலும் கர்த்தருடைய நீதியை விசுவாசித்து, கர்த்தருடைய நீதியை நமக்கு

அளிக்கும் நற்செய்தியாகிய இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் நற்செய்தியை உலகம் முழுவதிலும் போதித்து, நாம் நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறோம்.

எல்லாவற்றிற்கு மேல் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களுக்காக நான் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். இயேசுவை நான் முதலில் விசுவாசித்த பொழுது எவ்வளவு பக்தியுடன் நான் விசுவாசித்தேன் என்பதை கருதாது என்னுடைய இருதயம் இன்னமும் பாவம் நிறைந்ததாகவே இருந்தது. மேலும் இதனால் நான் மிகவும் மனவேதனை பட்டேன். இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்று எவ்வளவு உண்மையாக நான் அறிந்திருந்தாலும் என்னுடைய மனச்சாட்சியில் பாவம் தெளிவாக இருந்தது. ஒருவர் கர்த்தருக்கு முன்பு அவனோ/அவளோ பாவமானவர்களா இல்லையா என்று அவனுடைய/அவளுடைய சொந்த மனச்சாட்சியை பார்ப்பதன் மூலம் கண்டுப்பிடிக்கலாம். வேறு வார்த்தைகளில் கூறினால் தங்களுடைய பாவத்தின் மீட்பை இன்னமும் பெற்றுகொள்ள முடியாதவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சி எல்லாப் பாவங்களிலும் சிறியது ஒன்றை உடையதாக இருந்தாலும் அவர்கள் பாவ மன்னிப்பை இன்னமும் பெற்றுக்கொள்ள வில்லை என்பதற்கு இது தான் சாட்சி.

இருப்பினும் என்னுடைய பாவத்தின் எல்லாப் பிரச்சனைகளையும், எல்லாவற்றிலும் சிறியதை கூட தீர்க்ககூடிய சத்தியத்தை நான் தெரிந்து கொள்ள முடியாத பொழுது, இதன் விளைவாக எல்லா வகையான கேள்விகளும் ஆச்சரியங்களும் என்னுடைய இருதயத்தில் எழுந்தபொழுது, கர்த்தர் அவருடைய இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலின் மூலம் என்னை சந்தித்தார்.

நாம் ஏற்கெனவே வாசித்துள்ள மத்தேயு

நற்செய்தியிலிருக்கும் பகுதியில் இந்த வார்த்தை கண்டுபிடிக்கப்பட்டது. மத்தேயு 3:13-17 யை வாசிக்கும் பொழுது *"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத்தேயு 3:15)* என்ற இந்த வார்த்தையைக் கண்டேன். இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு தண்ணீரிலிருந்து வந்த பொழுது, கர்த்தர் அவருடைய நீதியை சாட்சியாக்கினார், மேலும் இயேசுவினுடைய இந்த ஞானஸ்நானத்தின் மூலம் எல்லாப் பாவங்களும் அகற்றப்பட்டதால் எல்லா நீதியும் நிறைவேற்றப்பட்டது என்பதை நான் பின்பு உணர்ந்து விசுவாசித்தேன்.

யோவானால் இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் அளிக்கப்பட்டபொழுது என்னுடைய எல்லாப் பாவங்களும் அவருக்குள் தெளிவாக செலுத்தப்பட்டன. மேலும் ஒரே சமயத்தில் சிலுவையின் மீது அவை எல்லாம் தீர்க்கப்பட்டன. இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் என்ற காரணத்தை நான் உணர்ந்து விசுவாசித்த அதே தருவாயில், என்னுடைய எல்லாப் பாவங்களும் ஒரே சமயத்தில் என்னிடமிருந்து விலக்கப்பட்டதால் என்னுடைய தீர்க்க முடியாத பாவங்களைப் பற்றிய எல்லா பிரச்சனைகளுக்கும் கேள்விகளுக்கும் பதிலளிக்கப்பட்டது. இந்த பாவ இரட்சிப்பின் சத்தியத்திற்கும் கர்த்தருடைய உண்மையான வார்த்தையாகிய நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை தெரிந்துகொண்டு விசுவாசிப்பதின் மூலம் இந்த பாவத்தின் மீட்பை நான் பெற்றுக்கொண்டேன் என்ற உண்மைக்கும் நான் மிகவும் நன்றி செலுத்தினேன்.

தேவன் அவருடைய எழுதப் பட்ட வார்த்தையின் மூலம் என்னிடம் வந்தார். மேலும் இந்த நீர் மற்றும் ஆவியின் வார்த்தையை என்னுடைய இருதயத்தில் விசுவாசிப்பதின் மூலம் என்னுடைய பாவங்களின் மீட்பை நான் பெற்றுக் கொண்டேன். அதில் இருந்த பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுகளின் வார்த்தையின் மூலம் இளநீல நிற,

இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் நற்செய்தியை நான் சாட்சியளித்து கொண்டிருக்கிறேன். மேலும் இன்னமும் கூட மீட்பினுடைய இந்த எல்லா மர்மங்களையும் சத்தியங்களையும் பரப்புவதை நான் தொடர்ந்து கொண்டிருக்கிறேன். உன்மையான நற்செய்தி என்பது மனிதர்களுடைய சொந்த எண்ணங்கள், தத்துவங்கள், மற்றும் உணர்ச்சி அனுபவங்கள் மூலம் உருவாக்கப்பட்ட ஒன்றில்லை.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நம்முடைய தேவன் நம்முடைய பாவங்களை அகற்றியுள்ளார். இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் மூலம் உலகம் முழுவதும் உள்ள எல்லோரும் இரட்சிப்பின் சத்தியத்தை தெளிவாக உணர்ந்து, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைத் தவிர இந்த சத்தியம் வேறு எதுவும் இல்லை என்பதை கண்டு கொள்வார்கள். முடிவு காலங்களில் கண்டிப்பாக தேவைப்படும் சத்தியம் இது தான். எண்ண முடியாத மக்கள் இந்த சத்தியத்தை விசுவாசிப்பார்கள்.

இன்றைய காலங்கள், மக்களுடைய நீதிகளையெல்லாம் உடைத்து அவர்களுடைய தீமை அளவு கடந்து பெருகியுள்ளது. சுற்றியுள்ள சூழ்நிலைகள் சீரழியும் பொழுது மக்கள் அவர்களுக்குள் இருந்து எல்லா தீமைகளையும் வெளியிடுகிறார்கள். இது இருந்தாலும் கூட இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் நற்செய்தி மூலம் நம்முடைய தேவன் உங்களையும் என்னையும் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சித்துள்ளார். இந்த ஆசீர்வாதம் எவ்வளவு நன்றியுள்ளதாகவும் விலைமதிப்பற்றதாகவும் இருக்கிறது? இந்த தெளிவான மீட்பிற்கு நான் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். ஏனென்றால் நான் சந்தோஷத்திலும் மகிழ்ச்சியிலும் நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறேன்.

இந்த உலகம் இப்பொழுது கர்த்தரால் முன்பே சொன்னபடி கடைசி காலங்களை நோக்கி சென்று கொண்டிருக்கிறது, மேலும் ஏற்கெனவே இந்த காலத்திற்குள் நுழைந்து விட்டது. இது போன்ற காலங்களில் கர்த்தரை பக்தியுடன் தாங்கும் மிகவும் குறைவான மக்கள் இருக்கும்பொழுது, விசுவாசிகளுடைய விசுவாசம் பலவீனமாகும் பொழுது, நீர் மற்றும் ஆவியின் உண்மையைத் தவிர வேறு ஏதாவதற்கு நீங்கள் உங்களை அர்பணிக்க முயற்சி செய்தீர்களானால் முடிவில் உங்களுடைய இருதயங்களில் காயங்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். கர்த்தரை விசுவாசிக்கும் பொழுது இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் நற்செய்தியை நீங்கள் விசுவாசிக்காவிட்டால், நீங்கள் ஏமாற்றம் மட்டுமே அடைவீர்கள். ஏனென்றால் அது உங்களுடைய இருதயங்களில் அர்த்தமுள்ள எதையும் அல்லது எந்த உண்மையான கனியையும் தராது.

ஆசரிப்புக் கூடாரத்தின் நான்கு நிறங்களாகிய இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் நற்செய்தி சத்தியங்கள் தெளிவான சத்தியமாய் இருப்பதால், இந்த இருட்டான உலகத்திற்கு சிறந்த நற்செய்தி இது மட்டுமேயாகும். ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியத்தை தெரிந்து கொண்டு விசுவாசிப்பதின் மூலம் நம்முடைய பாவங்களுக்கான மீட்பை பெற்றுக்கொண்டு நம்முடைய வாழ்க்கையை வாழ்வது, விலைமதிப்பற்ற ஆசீர்வாதமாகவும் விலைமதிப்பற்ற பரிசாகவும், நமக்கு மிகவும் சந்தோஷமானதாகவும் இருக்கிறது.

ஆசரிப்புக் கூடார வாயிலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்தியத்தை தெரிந்து கொண்டு விசுவாசிப்பவர்கள்,

பொய்யை தாங்காமல் சத்தியத்தை தாங்குவதால் அவர்களுடைய இருதயங்களில் நிரந்தரமாக அதிக சந்தோஷம் காணப்படுகிறது.

ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்த சத்தியத்தை நீங்களும் தெரிந்து கொண்டு விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் இதை தெரிந்து கொண்டு, இதனை விசுவாசிக்க வேண்டும். 🖂

பிரசங்கம்

9

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும்,
டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும்,
டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

தகன பலிபீடத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட விசுவாசம்

< யாத்திராகமம் 27:1-8 >

"ஐந்து முழ நீளமும் ஐந்து முழ அகலமுமாக சீத்திம் மரத்தால் பலிபீடத்தையும் உண்டுபண்ணுவாயாக; அது சதுரமும் மூன்று முழ உயரமுமாயிருப்பதாக. அதின் நாலு மூலைகளிலும் நாலு கொம்புகளை உண்டாக்குவாயாக; அதின் கொம்புகள் அதனோடே ஏகமாய் இருக்கவேண்டும்; அதை வெண்கலத் தகட்டால் மூடவேண்டும். அதின் சாம்பலை எடுக்கத்தக்க சட்டிகளையும் கரண்டிகளையும் கிண்ணிகளையும் முள்துறடுகளையும் நெருப்புச்சட்டிகளையும் உண்டாக்குவாயாக; அதின் பணிமுட்டுகளையெல்லாம் வெண்கலத்தால் பண்ணுவாயாக. வலைப்பின்னல் போன்ற ஒரு வெண்கலச் சல்லடையைப் பண்ணி, அந்தச் சல்லடையின் நாலு மூலைகளிலும் நாலு வெண்கல வளையங்களை உண்டாக்கி, அந்தச் சல்லடை பலிபீடத்தின் பாதியுயரத்தில் இருக்கும்படி அதைத் தாழப் பலிபீடத்தின் சுற்றடைப்புக்குக் கீழாக வைப்பாயாக. பலிபீடத்துக்குச் சீத்திம் மரத்தால் தண்டுகளையும் பண்ணி, அவைகளை வெண்கலத்தகட்டால் மூடுவாயாக. பலிபீடத்தைச் சுமக்கத்தக்கதாக அந்தத் தண்டுகள் அதின் இரண்டு பக்கங்களிலும் வளையங்களிலே

பாய்ச்சப்பட்டிருக்கவேண்டும். அதை உள் வெளிவிட்டுப் பலகைகளினாலே பண்ணவேண்டும். மலையில் உனக்குக் காண்பிக்கப்பட்டபடியே அதைப் பண்ணக்கடவர்கள்."

தகன பலி பீடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விசுவாசத்தை பற்றி நான் கூற விரும்புகிறேன். இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய கர்த்தருடைய சட்டமும் கட்டளைகளுமான 613 உடன்படிக்கைகளை உடைத்த பொழுது, அவர்கள் தங்களுடைய பாவங்களை அடையாளம் கண்டு கொண்ட பொழுது, கர்த்தரால் அமைக்கப்பட்டிருந்த பலி முறைக்கு ஏற்ப அவர்கள் அவருக்கு அவர்களுடைய பரிசுத்தமான பலிகளை கொடுத்தார்கள். தகன பலி பீடத்தில் தான் அவர்கள் இந்த பலிகளை கொடுத்தார்கள். வேறு வார்த்தைகளில் கூறினால் இஸ்ரவேல் மக்கள், பரிசுத்தமான பலி மிருகத்தின் மேல் தங்களுடைய கைகளை வைத்து அதனுடைய தொண்டையை அறுத்து, அதிலிருந்து அதனுடைய இரத்தத்தை எடுத்து, தகன பலி பீடத்தின் கொம்புகளின் மேல் சிறிது இரத்தத்தை ஊற்றி, மீதியுள்ள இரத்தத்தை பூமியின் மீது கொட்டி, இந்த பலியினுடைய மாமிசத்தை பலி பீடத்தின் மேல் எரிப்பதின் மூலம் அவர்களுடைய பாவங்களுக்கான மீட்பைப் பெற்றுக்கொண்டார்கள்.

தகன பலி பீடத்தின் ஆவிக்குரிய பொருள் என்ன?

2.25 மீட்டர் (7.5 அடி) நீளமும், அகலமும் மற்றும் 1.35 மீட்டர் (4.5 அடி) உயரமும் கொண்ட தகன பலி பீடமானது

சீத்தீம்மரத்தினுடைய கட்டையால் அமைக்கப்பட்டு வெண்கலத்தால் பூசப்பட்டிருந்தது. இஸ்ரவேலர்கள் இந்த தகன பலி பீடத்தை பார்த்த பொழுதெல்லாம் அவர்களுடைய நியாயதீர்ப்பில் பிடிப்பட்டுள்ளவர்களாகவும், அவர்களுடைய தண்டனையில் இருந்து தப்பிக்க முடியாது இருப்பவர்கள் அவர்கள் தான் என்றும் அடையாளம் கண்டு கொண்டார்கள். பலி மிருகம் மரணத்திற்கு தள்ளப்பட்டது போல, அவர்களும் அவர்களுடைய பாவங்களுக்காக மரிக்க வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். மேசியா இந்த உலகத்திற்கு வந்து தண்டிக்கப்படுவதின் மூலம் அவர்களுடைய பாவங்களை அகற்றி, அவர்களுடைய பாவங்களுக்காக பலி காணிக்கையை போல மரணத்திற்கு தள்ளப்படுவார்கள் என விசுவாசிக்கத் தொடங்கினார்கள்.

தகன பலி பீடமானது நம்முடைய மீட்பரான இயேசு கிறிஸ்துவின் நிழலாய் இருந்தது. பலி மிருகமானது கைகளை வைப்பதின் மூலமும் அதனுடைய இரத்தத்தை சிந்துவதின் மூலமும் பலியாக்கப்பட்டது போல, இயேசு கிறிஸ்து நம்மிடத்திற்கு தேவ குமாரனாக வந்து நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக்கொண்டார். பழைய ஏற்பாட்டினுடைய பலி காணிக்கைகள் கைகளை வைப்பதின் மூலமும் அவற்றினுடைய இரத்தத்தை சிந்துவதின் மூலமும் எல்லா பாவங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டி இருந்தது போல, யோவானால் ஞானஸ்நானம் பெற்று, உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது சுமத்தப்பட்டதன் மூலம் ஏற்றுக்கொண்டார். மேலும் சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தை சிந்தியதின் மூலம் இந்த பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக்கொண்டார்.

இந்த வகையில் இயேசு கிறிஸ்து அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லா பாவங்களையும் அவர் மீது எடுத்துக்கொண்டு, சிலுவையின் மீது மரித்து மரித்தோரில் இருந்து மீண்டும்

எழுந்து, இதன் மூலம் இரட்சித்துள்ளார் என்று தகன பலி பீடம் நமக்கு தெரிவிக்கிறது.

இஸ்ரவேலர்கள் தம் பாவங்களிலிருந்து மன்னிக்கப்பட தகன பலி பீடத்தில் அவர்களுடைய பலி காணிக்கைகளைத் தர வேண்டியிருந்தது

லேவியராகமம் புத்தகத்தின் 4-ஆம் அதிகாரத்தைப் பார்க்கும் பொழுது அபிஷேகிக்கப்பட்ட ஆசாரியர்கள் இஸ்ரவேலின் முழுச் சபை, அரசன், அல்லது பொது மக்கள் யாராகிலும் எப்பொழுதாவது பாவம் செய்தால் நாம் கர்த்தரிடத்தில் பலி காணிக்கையை கொண்டு வந்து, அதனுடைய தலை மீது அவனுடைய கைகளை வைத்து, அதனைக் கொன்று அதனுடைய இரத்தத்தை எடுத்து, அதனைத் தகன பலி பீடத்திற்கு எடுத்துச் சென்று, கர்த்தருக்கு அதை படைப்பதின் மூலம் தான் அவர்களுடைய பாவங்களுக்கான மீட்பை பெற்றுக் கொண்டார்கள் என்று நாம் பார்க்கிறோம்.

இஸ்ரவேலர்கள், தங்களுடைய பலி காணிக்கைகளை ஒவ்வொரு நாளும் இந்த தகன பலி பீடத்தில் கொடுத்ததாலும் ஒரு நாளும் கூட இதற்கு வேலையில்லாமல் கடக்காததாலும் இது ஒரு உண்மையான விஷயமாய் இருக்கிறது. இஸ்ரவேலர்கள் அவர்களுடைய பாவங்களிலிருந்து விடுபடுவதற்காக பரிசுத்தமான மிருகத்தை தயார் செய்து, அவர்களுடைய பலி காணிக்கையாக தகன பலி பீடத்தின் மேல் அதை கர்த்தருக்கு கொடுத்தார்கள். பாவிகள் பலி மிருகத்தின் தலையின் மீது தங்களுடைய கைகளை வைப்பதின் மூலம் தங்களுடைய எல்லாப் பாவங்களையும் அதற்குள் செலுத்தினார்கள், மேலும் இந்த பாவங்களுக்கான

நியாயத்தீர்ப்பாக, அதனுடைய தொண்டையை அறுத்து இரத்தத்தை எடுத்தார்கள். பின்பு ஆசாரியன் இந்த பலி காணிக்கையின் இரத்தத்தை தகன பலி பீடத்தின் கொம்புகளில் ஊற்றி, இதனுடைய மாமிசத்தையும், கொழுப்பையும் பீடத்தின் மீது எரித்தான். இப்படித் தான் இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றார்கள்.

பாவம் செய்தது யார் என்று கருதப்படாமல், இஸ்ரவேல் மக்களின் தலைவராக இருந்தாலும், முழு சபையாக இருந்தாலும், அல்லது பொது மக்கள் யாராக இருந்தாலும், கன்று, ஆடு அல்லது செம்மறி ஆடு போன்ற பலி மிருகத்தை கொண்டு வந்து, அதைக் கர்த்தருக்கு பலி காணிக்கையாக கொடுத்து அவர்களுடைய பாவங்களுக்கான மன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

பாவிகள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகள் அதைக் கொன்று அதனுடைய இரத்தத்தை தகன பலி பீடத்தின் கொம்புகளின் மேல் போட்டு, மீதி இருக்கும் இரத்தத்தை நிலத்தின் மீது ஊற்றி, மேலும் இதன் மூலம் அவர்களுடைய பாவங்களை மன்னிக்க கூடிய பலி காணிக்கையின் கொழுப்பை எரிக்க வேண்டும். இதனால், பலர் அவர்களுடைய பலி மிருகங்களை தகன பலி பீடத்திற்கு கொண்டு வந்து, அவர்களுடைய கைகளை பலிகளின் தலையின் மீது வைத்து அதனுடைய இரத்தத்தை எடுத்து ஆசாரியர்களுக்கு அதைக் கொடுக்க வேண்டியிருந்தது.

தகன பலி பீடத்தில் காணிக்கைகள் கொடுக்கப்படும் பொழுது, இந்த பலி காணிக்கைகள் பரிசுத்தமாக இருக்க வேண்டியிருந்தது. பாவிகள் கர்த்தருக்கு காணிக்கைகள் கொடுத்த பொழுது கர்த்தருக்கு முன்பு பரிசுத்தமான மிருகத்தை கொண்டுவர வேண்டும் என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் இந்த பரிசுத்தமான பலி காணிக்கையின் மீது அவர்களுடைய கைகளை வைப்பதின்

மூலம் மட்டுமே அவர்களுடைய பாவங்கள் அதற்குள் செலுத்தப்பட்டது. இதைப் போல பலி காணிக்கை கொடுக்கும் பொழுது ஒன்றும் விடப்படக்கூடாது.

வழக்கமாக பாவம் செய்த ஒருவர், தன்னுடைய கைகளை அவருடைய பலி மிருகத்தின் தலையின்மீது வைக்கவேண்டும். ஆனால் முழு இஸ்ரவேல் கூட்டத்தினர் பாவம் செய்த பொழுது அதனுடைய மூத்த பிரதிநிதிகள் பலி காணிக்கையின் மீது அவர்களுடைய கைகளை வைக்க வேண்டும் (லேவியராகமம் 4:15). கைகளை தலையின் மீது வைக்கப்பட்ட பலி மிருகமானது, அதனுடைய கழுத்து அறுபட்டு, இரத்தத்தை எடுத்தப்படி கொல்லப்படவேண்டும். மேலும் இறுதியாக பலி பீடத்தின் மேலே சுட்டெரிக்கப்பட வேண்டும்.

எரிந்து கொண்டிருக்கும் மாமிசம், கொழுப்பு மற்றும் மரக்கட்டையினுடைய புகை, தகன பலி பீடத்தைச் சுற்றியுள்ள இடத்தை எப்பொழுதும் நிரப்பியது. மேலும் அதனுடைய கொம்புகளும், அதற்கு கீழே இருந்த நிலமும் பலி மிருகங்களின் இரத்தத்தால் நிறைந்திருந்தது. சர்வாங்க தகன பலிபீடமானது பாவ மன்னிப்பின் இடமாயிருந்தது. இங்கு தான் இஸ்ரவேல் மக்களின் பாவங்களை கழுவுவதற்கு கர்த்தருக்கு பலி காணிக்கைகள் கொடுக்கப்பட்டன.

புகை எப்பொழுதும் எழும்பிக் கொண்டிருக்கும், இந்த தகன பலி பீடமானது 2.25 மீட்டர் (7.5 அடி) அகலமும் மற்றும் 1.35 மீட்டர் (4.5 அடி) உயரமும் உடைய சதுரமாய் இருந்தது. வெண்கலத் தீத்தட்டின் தொடர்ச்சி அதனுடைய நடுவில் அமைக்கப்பட்டிருந்தது. மேலும் அதனுடைய தீத்தட்டில் இருந்த மரக்கட்டையின் நெருப்பால் சுடப்பட்ட காணிக்கைகளிலிருந்து புகை தொடர்ச்சியாக எழும்பி கொண்டிருந்தது. இதைப் போல, காணிக்கைகள் எரிக்கப்பட்டு, கர்த்தருக்கு கொடுக்கப்பட்ட இடமானது தகன பலி பீடமாய் இருந்தது.

தகன பலி பீடத்தின் பாத்திரங்கள் எல்லாம் வெண்கலத்தால் செய்யப் பட்டிருந்தன

சாம்பல்களை அகற்றி வெளியே போடுவதற்கு பயன்படுத்தப்பட்ட தகன பலி பீடத்தின் பாத்திரங்கள் எல்லாம் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன. தகன பலி பீடமானது சீத்திம் மரக்கட்டையின் மீது வெண்கலம் பூசப்பட்டு செய்யப்பட்டிருந்தது. மேலும் இதனால் பலி பீடமும் அதனுடைய பாத்திரங்கள் எல்லாமும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன.

இந்த வெண்கல தகன பலி பீடம் ஒரு கண்டிப்பான ஆவிக்குரிய அர்த்தம் உடையதாய் இருக்கிறது. கர்த்தருக்கு முன்பாக பாவத்திற்கான நியாயதீர்ப்பை வெண்கலம் குறிக்கிறது. இதைப் போல, தகன பலி பீடமானது, பாவிகள் அவர்களுடைய பாவங்களுக்காக அதிக நிச்சயமாய் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று நமக்கு காண்பிக்கும் இடமாய் இருக்கிறது. கர்த்தர், தவறாமல் மக்களுடைய பாவங்களுக்காக அவர்களைத் தண்டிப்பார். பாவிகளுக்காக, பலி காணிக்கைகள் எரிக்கப்பட்டுவதின் மூலம் பிரதிநிதியாக இருந்து நியாயந்தீர்க்கப்படுகிற இடமாய் இருந்தது இந்த தகன பலி பீடமேயாகும். மேலும் இந்த பலி பீடமும், இதனுடைய எல்லாப் பாத்திரங்களும் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன. இதைப் போல ஒவ்வொரு பாவமும் அதுனுடைய விளைவாக அதிக நிச்சயமாக அதனுடைய நியாயந்தீர்ப்பை கொண்டு வருகிறது என்பதை இந்த விஷயங்கள் நமக்கு சொல்கின்றன.

மக்கள் அவர்களுடைய பாவங்களுக்காக தண்டனைக்கு தள்ளப்பட உள்ளார்கள் என்றும், மரணத்திற்கு தள்ளப்படுவார்கள் என்றும், ஆனால் அவர்களுடைய பலி மிருகத்தை தகன பலி பீடத்திற்கு கொண்டு வந்து கர்த்தருக்கு கொடுப்பதின் மூலம் அவர்கள் அவர்களுடைய

பாவங்களிலிருந்து கழுவப்பட்டு பாவத்திற்கான மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு இதன் மூலம் மீண்டும் வாழலாம் என்று பலி பீடம் காண்பிக்கிறது. இங்கு இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானமும் அவருடைய இரத்தம் சிந்துதலும் விசுவாசிகளின் பாவங்களை எல்லாம் மன்னித்து விட்டன என்று தகன பலி பீடத்தின் மீது பலியாக்கப்பட்ட காணிக்கைகள் எல்லாம் நமக்குச் சொல்கின்றன. இதனால் தகன பலி பீடத்தில் பலி காணிக்கையை கொடுத்த இந்த விசுவாசமானது, ஞானஸ்நானத்தில் உள்ள விசுவாசமாகவும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தமாகவும் புதிய ஏற்பாட்டிற்குள் தொடரப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்துவை நம்முடைய சொந்த இரட்சகராக நாம் விசுவாசிக்கும் பொழுது, இயேசுவின் ஞானஸ்நானத்தையும் அவருடைய இரத்தத்தையும் நம்முடைய பாவத்தின் மீட்பராகவும் விசுவாசிக்கும் விசுவாசத்தை நாம் கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்ட ஆசரிப்புக் கூடார பிரகாரத்தினுடைய வாயிலுக்குள் நுழையும் விசுவாசமாக இந்த விசுவாசம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தகன பலி பீடத்தில் பலியாக்கப்பட்ட எல்லா பலிகளும் இயேசு கிறிஸ்துவை எடுத்துக்காட்டுகின்றன

இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்த பொழுது என்ன செய்தார்? நாம் பாவம் நிறைந்தவர்களாய் இருந்தோம்; கர்த்தருக்கு எதிராக நாம் பாவம் செய்திருந்தோம். மேலும் அவருடைய சட்டத்தையும்

கட்டளைகளையும் உடைத்தோம். நம்முடைய இந்த பாவங்களை எல்லாம் அகற்றுவதற்காக இயேசு கிறிஸ்து யோவானால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, உலகத்தினுடைய பாவங்களை அவர் மீது எடுத்துக்கொண்டு இதன் மூலம் சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தைச் சிந்தினார். பலி காணிக்கையில் கைகளை வைப்பதின் மூலம் இஸ்ரவேலர்களின் பாவங்கள் செலுத்தப்பட்டு அது அவர்களுடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு, அதன் மூலம் கொல்லப்பட்டு, மேலும் தகன பலி பீடத்தில் சுடப்பட்டதைப் போல, இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு பரிசுத்தமான பலி காணிக்கையாக வந்து, ஞானஸ்நானம் பண்ணப்பட்டதால், பிறகு, அவர் சிலுவையின் மீது அவருடைய பலி இரத்தத்தை சிந்தி நம்முடைய இடத்திலிருந்து அதன் மீது மரிக்க முடிந்தது. அவருடைய இரு கைகளிலும் பாதங்களிலும் ஆணியடிக்கப்பட்டு அவருடைய இரத்தத்தைச் சிந்தியதன் மூலம் நாம் நம்முடைய பாவங்களுக்காக தண்டிக்கப் படவேண்டியதற்கு பதிலாக நம்முடைய எல்லாப் பாவங்களுக்கான தண்டனைகளை நம்முடைய தேவன் ஏற்றுக் கொண்டார். இப்படி நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும், தண்டனைகளிலிருந்தும் அவர் மீட்டுள்ளார்.

இந்த தகன பலி பீடத்தின் உண்மையான பொருளாகியுள்ள இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்த பொழுது என்ன செய்தார்? இயேசு கிறிஸ்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாகவும், கொல்லப்பட்டு சிலுவையின் மீது மரித்ததின் மூலமாகவும், மேலும் மரணத்திலிருந்து மீண்டும் எழுந்ததின் மூலமாகவும் நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக் கொண்டு நம்மை அவர் மீட்டுள்ளார். நம்முடைய தேவன் இந்த உலகத்திற்கு வந்து, நம்முடைய இரட்சிப்பை நிறைவேற்றி, பின்பு பரலோக இராஜ்ஜியத்திற்குச்

சென்றார்.

ஒவ்வொரு நாளும் பாவம் செய்வதை தவிர்க்க முடியாத நாம்

தகன பலி பீடத்திற்கு வேறு ஒரு பொருளும் இருக்கிறது. அது "மேலே போவது" என்பதாகும். நீங்களும் நானும் பாவம் செய்வது ஒரு உண்மையான விஷயம். ஆதலால் நாம் எப்பொழுதும் நம்முடைய பலி காணிக்கையை கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். இதனால் நம்முடைய பாவங்களுக்கான தண்டனையின் புகை எப்பொழுதும் கர்த்தரிடத்திற்கு உயர போய் கொண்டிருக்கிறது. நீங்கள் பாவம் செய்யாமல் சரியாக வாழும் நாள் ஏதாவது இருக்கிறதா? இஸ்ரவேலர்களின் எண்ணமுடியாத பாவங்களை மன்னித்த இந்த காணிக்கைகளை கொடுப்பதின் மூலம் ஆசாரியர்கள் அதிக களைப்படைந்து அவற்றை தொடர்ந்து செய்ய முடியாத வரைக்கும் இஸ்ரவேல் மக்களுடைய பலி காணிக்கைகள் கொடுக்கப்பட்டன. இஸ்ரவேல் மக்கள் சட்டத்தை உடைத்து, கர்த்தருக்கு விரோதமாக ஒவ்வொரு நாளும் பாவம் செய்ததால், ஒவ்வொரு நாளும் அவர்களுடைய பலி காணிக்கையை தர வேண்டியிருந்தது.

இஸ்ரவேலர்களின் பிரதிநிதியாக இருந்த மோசே கர்த்தருடைய சட்டம் மற்றும் கட்டளைகளின் 613 பிரிவுகளை இஸ்ரவேலர்களுக்கு தெரிவித்தார். *"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் என்றார்." (யாத்திராகமம்*

19:5-6).

"கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" (யாத்திராகமம் 19:8) என பின்பு இஸ்ரவேல் மக்கள் வாக்களித்தார்கள், இதனால், மோசேயிற்கு முன் தோன்றி, தங்களுடைய உண்மையான கர்த்தராக இருந்து அவர் மூலம் அவர்களிடம் பேசிய இந்த கர்த்தரை அடையாளம் கண்டு கொண்டு, விசுவாசிக்க வேண்டும் என்று இஸ்ரவேல் மக்கள் நினைத்தார்கள். மேலும் இந்த கர்த்தர் அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும் நினைத்தார்கள். கர்த்தர் அவர்களிடம் பேசிய எல்லாவற்றையும் வைத்து கொண்டு அவருக்காக சிறந்த பொக்கிஷமாக வேண்டும் என்று அவர்கள் நினைக்காமல், ஆசாரியர்களின் ராஜ்யமாகவும் கர்த்தருக்கு சேரும் ஒரு பரிசுத்த நாடாகவும் வேண்டும் என்று நினைத்தார்கள். இதைப் போல, கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த அவருடைய கட்டளைகளையும் கடைப்பிடிக்க முயற்சி செய்தார்கள்.

இஸ்ரவேலர்கள் பாவம் செய்வார்கள் என்று கர்த்தருக்கு ஏற்கெனவே தெரியுமா? நிச்சயமாக தெரிந்து வைத்திருந்தார். இதனால் தான் கர்த்தர் மோசேயை சீனாய் மலைக்கு அழைத்து, தரிசனத்தில் ஆசரிப்புக்கூடாரத்தை அவனுக்கு காண்பித்து, அதனுடைய முறையை விளக்கமாக விளக்கி, அதைக் கட்ட வேண்டும் என்று அவனிடம் சொல்லி, அதற்கு ஏற்ப அவனை அதை கட்ட வைத்தார். மேலும் இந்த ஆசரிப்புக் கூடாரத்தில், காணிக்கைகள் கொடுக்கப்படுவதற்காக பலி முறையையும் அமைத்தார்.

இஸ்ரவேல் மக்கள் கர்த்தருக்கு பலி காணிக்கையை கொடுக்க வேண்டும் என்று நினைக்கும் பொழுது, களங்கமில்லாத காளை, ஆடு, செம்மறி ஆடு, மணிப்புறா அல்லது புறா ஆகியவற்றில் ஒன்றை கொண்டுவந்து, சில விதி விலக்குகளுடன், தங்களுடைய கைகளை வைப்பதின் மூலம், பலி காணிக்கைக்குள் அவர்களுடைய பாவங்கள் செலுத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்து கொள்ள

வேண்டும். (லேவியராகமம் 1:1-4). மேலும் அதனுடைய கழுத்தை அறுப்பதின் மூலம் அதனுடைய இரத்தத்தை எடுத்து அதனை ஆசாரியர்களுக்கு தர வேண்டும். அதன் பின் அவர்களுடைய ஆசாரியர்கள் இந்த இரத்தத்தை எடுத்து தகன பலி பீடத்தின் கொம்பின் மேல் ஊற்றி மீதியுள்ள இரத்தத்தை தரையின் மேல் ஊற்றி, பலி காணிக்கைகளை துண்டுகளாக வெட்டி இந்த துண்டுகளை பலி பீடத்தின் மேல் போட்டு அவற்றைச் சுட்டெரிப்பதின் மூலம் கர்த்தருக்கு படைத்தார்கள்.

இப்படித்தான், இஸ்ரவேலர்கள் அவர்களுடைய பாவங்களுக்காக மன்னிக்கப்பட முடிந்தது. பலி சுட்டெரிக்கப்பட்ட பொழுது, அதனுடைய மாமிசத்தை மட்டும் எரிக்காமல், ஈரலிலிருந்தும், குடலிலிருந்தும் எல்லா கொழுப்புகளையும் கூட நீக்கி அவர்கள் அதைச் சுட்டெரிக்க வேண்டியிருந்தது. இந்த வழியில் கர்த்தர் இஸ்ரவேலர்களின் பாவங்களை மன்னித்தார்.

எல்லாப் பாவங்களுக்கான பாவமன்னிப்பையும் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி

நம்மை நாம் பார்க்கும்பொழுது, எப்போதும் பாவம் செய்வதை நம்மால் தடுக்க முடியாது என்பதை நாமெல்லோரும் உணரமுடியும். நாம் எப்பொழுதும் பாவம் செய்தவாறே நம்முடைய வாழ்க்கையை வாழ்கிறோம். நாம் பலவீனமாய் இருப்பதினாலேயோ, அதிகமான அசுத்தங்கள் இருப்பது அல்லது சக்தி இருப்பது போன்ற பல காரணங்களுக்காக நாம் எண்ணிலடங்கா, பாவங்களைச் செய்கிறோம். இயேசுவை தங்களுடைய சொந்த இரட்சகராக விசுவாசிப்பவர்களிலும் கூட பாவம் செய்யாதவர்கள் யாருமில்லை.

நாம் கர்த்தரை விசுவாசித்தாலும் கூட, இது போல எப்பொழுதும் பாவம் செய்யும் நாம், இந்த எல்லாப் பாவங்களிலிருந்தும், கழுவப்படுவதற்கும் மீட்க்கப்படுவதற்கும், நமக்கு இருக்கும் ஒரே வழி இயேசு கிறிஸ்துவினுடைய ஞானஸ்நானத்தை விசுவாசிப்பது தான். நீர் மற்றும் இரத்தத்தின் மூலம் வந்த அவர் தான் கர்த்தர் (யோவான் 5:6). இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் தகன பலி பீடத்தின் பலி காணிக்கையையாக அவர் இந்த உலகத்திற்கு வந்தார். இந்த இயேசு, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதின் மூலம் நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்துக் கொண்டு சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தைச் சிந்தியதின் மூலம் நம்முடைய பாவங்களுக்கான கூலியை செலுத்தியிருக்கும் பொழுது விசுவாசத்தின் மூலம் பாவத்திற்கான மன்னிப்பை நாம் ஏன் பெற்றுக்கொள்ள முடியாது? நம்முடைய மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மீட்பினால் விசுவாசத்தின் மூலம் நீங்களும் நானும் ஒரே சமயத்தில் பாவத்திற்கான நம்முடைய பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

நாம் எப்பொழுதும் பாவம் செய்தாலும் கூட இயேசு இந்த உலகத்திற்கு வந்த பொழுது இயேசு கிறிஸ்து நிறைவேற்றிய ஞானஸ்நானம் மற்றும் இரத்தத்தின் மீட்பினால் நாம் நம்முடைய எல்லா பாவங்களிலிருந்தும் விடுதலையாக்கப்படலாம். நம்முடைய தேவன் அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்துக்கொண்டு உலகத்தினுடைய பாவங்களை சிலுவைக்கு சுமந்து சென்று, மரித்து, இதன் மூலம் நம்முடைய பாவங்களிலிருந்து முழுமையாக விடுதலையாக்கியுள்ளார். நம்முடைய பாவங்களுக்காக மரித்ததின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களுக்கான தண்டனையையும் ஏற்றுக் கொண்டு மரித்தோரிலிருந்து

மீண்டும் எழுந்தனின் மூலம் இந்த சத்தியத்தை விசுவாசிக்கும் நம்மை முழுமையாக மீட்டுள்ளார். நாம், நம்முடைய பாவங்களுக்காக தண்டிக்கப்படுவதை தடுக்க முடியாததால், இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் மூலம் இயேசு நமக்கு கொடுத்துள்ள இரட்சிப்பின் அன்பு மற்றும் இரக்கத்தின் மீதுள்ள விசுவாசத்தின் மூலம் நீங்களும் நானும் இரட்சிக்கப்பட்டுள்ளோம். வேறு வார்த்தைகளில் சொன்னால், கர்த்தர் நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்டுள்ளார். அவரை விசுவாசித்ததின் மூலம் தான் நாம், நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டுள்ளோம். இதைத் தான், தகன பலி பீடம் நமக்கு காண்பிக்கிறது.

ஆசரிப்புக்கூடாரத்திற்குள் எல்லாமே அழகாக இருந்தது என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் அதன் பிரகாரத்திற்குள் நுழைந்து விட்டீர்கள் என்றால் நீங்கள் ஒரு எதிர்பாரத வெறுப்பூட்டும் காட்சியை சந்திப்பீர்கள். செவ்வகமாக, வடிவமைக்கப்பட்ட வெண்கல தகன பலி பீடம், புகையையும் நெருப்பையையும் எந்த நேரத்திலும் வெளியேற்றி கொண்டிருக்கும். பயமுறுத்திக் கொண்டிருக்கும் வெண்கல பலி பீடம் பாவிகளுக்காக காத்துக்கொண்டிருக்கும். அதனுடைய தரை இரத்தத்தில் ஊறி இருக்கும். மேலும் பாவத்திற்கான தண்டனையின் இடம் இது தான் என்று யார் வேண்டுமானலும் உணரலாம். ஒவ்வொரு நாளும் பலி காணிக்கை கொடுக்கப்பட்ட இடம் இதுவாக இருந்ததால் எரியும் மாமிசம் மற்றும் கட்டையின் துர்நாற்றத்தால் நீங்கள் நசுக்கப்படுவீர்கள்.

தகன பலி பீடத்திற்கு கீழ், இரத்தம் ஆறை போல வழிந்து கொண்டிருக்கும். இஸ்ரவேலர்கள் பாவம் செய்த பொழுதெல்லாம் அவர்களுடைய பலி மிருகத்தை ஆசரிப்புக் கூடாரத்திற்கு கொண்டு வந்து, அவர்களுடைய கைகளை வைப்பதின் மூலம் அவர்களுடைய பாவங்களை

அதற்குள் செலுத்தி அதனுடைய கழுத்தை அறுத்து, அதனுடைய இரத்தத்தை எடுத்து, இந்த இரத்தத்தை ஆசாரியர்களுக்கு கொடுத்தார்கள். பின்பு ஆசாரியர்கள் இந்த இரத்தத்தை தகன பலி பீடத்தின் கொம்புகளின் மேல் ஊற்றி மீதியுள்ளதை தரையில் ஊற்றினார்கள்.

பின்பு அவர்கள் பலிகளை துண்டுகளாக வெட்டி, அதனுடைய சிறு நீரகம் மற்றும் கொழுப்பை அதனுடைய மாமிசத்துடன் சேர்த்து தீத்தட்டில் இட்டு அவற்றைச் சுட்டெரித்தார்கள். இரத்தம் எடுக்கப்படும் பொழுது சிவப்பாக வழிந்து அது முதலில் திரவமாக இருக்கிறது. ஆனால் சிறிது நேரத்திற்கு பிறகு அது உரைந்து போய் பசையாக ஆகிவிடுகிறது. ஆசரிப்புக்கூடாரத்திற்குள் நீங்கள் நுழைந்து விட்டீர்கள் என்றால் நீங்கள் இந்த பயமுறுத்தும் இரத்தத்தைப் பார்த்திருப்பீர்கள்.

இஸ்ரவேல் மக்கள் கர்த்தருடைய கட்டளைகளை உடைத்த பொழுதெல்லாம் தகன பலி பீடத்தின் மூலம் பலி பீடத்தின் மேல் அவர்களுடைய பலி காணிக்கையை போல மரிக்க வேண்டும் என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஏன்? ஏனென்றால் கர்த்தர் இரத்தத்தினால் அவருடைய உடன்படிக்கையை அவர்களிடம் ஏற்படுத்தினார்கள். "நீங்கள் என் சட்டத்தை கடைபிடித்தீர்களானால் நீங்கள் என்னுடைய மக்களாகவும் இராஜ்ஜியத்தின் ஆசாரியர்களாகவும் ஆவீர்கள். ஆனால் நீங்கள் அதைக் கடைப்பிடிக்கத் தவறினால் மரணத்திற்கு தள்ளப்படும் இந்த பலி காணிக்கைகளை போல நீங்கள் மரிக்க வேண்டும்." இப்படித்தான் கர்த்தர் இரத்தத்தினால் அவருடையு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இதைப் போல, அவர்கள் பாவம் செய்து சட்டத்தை உடைத்தால், அவர்கள் தம் இரத்தத்தைச் சிந்த வேண்டும் என்பதை இஸ்ரவேல் மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

ஒரு உண்மையான விஷயம், இஸ்ரவேலர்கள் மட்டும் அல்ல, ஆனால் கர்த்தரை விசுவாசிப்பவர்கள் எல்லோரும்

கூட, அவர்களுடைய பாவங்களுக்கான பலி இரத்தத்தைத் தர வேண்டும். கர்த்தருக்கு முன்பாக ஒருவர் பாவம் செய்து இதன் மூலம் அவனுடைய/அவளுடைய இருதயத்தில் பாவம் இருந்து, அது சிறியதோ அல்லது பெரியதோ என்று கருதப்படாமல், இதன் விளைவாக இந்த பாவத்திற்கான தண்டனையை சந்திக்க வேண்டும். சட்டத்தின் நியாயத்தீர்ப்பு அதாவது பாவத்தின் சம்பளம் மரணம் என்பது கர்த்தருக்கு முன்பு எல்லோருக்கும் பொருந்தினாலும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு பயப்படும் அநேக மக்கள் இல்லை. மேலும் கர்த்தருடைய பலி முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவருடைய சட்டத்தின் மீட்பிற்கு தங்களை தாங்களே ஒப்புகொடுக்க முயற்சி செய்கிறார்கள்.

பாவத்தின் சம்பளத்தை மரணமாக அமைக்கும் சட்டத்திற்கு ஏற்ப, ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தினுடைய வாயிலில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலம் இயேசு கிறிஸ்து நம்மை, நம்முடைய பாவங்களிலிருந்தும், தண்டனைகளிலிருந்தும் மீட்டுள்ளார் என்று தகன பலி பீடம் நமக்குச் சொல்லுகிறது. எப்பொழுதும் பாவம் செய்து, நம்முடைய பாவங்களுக்காக தண்டிக்கப்பட வேண்டியவர்களாகிய நமக்காக இயேசு கிறிஸ்து மனிதனுடைய சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்து யோவானால் ஞானஸ்நானம் வழங்கப்பட்டதின் மூலம் மனித குலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன்னுடைய சொந்த சரீரத்தின் மீது எடுத்துக் கொண்டு உலகத்தினுடைய இந்தப் பாவங்களைச் சிலுவைக்குச் சுமந்து சென்று, மரித்து, அதன் மேல் அவருடைய இரத்தத்தைச் சிந்தி அதிகமான துயரங்களையும், வலிகளையும் ஏற்றுக்கொண்டு, தன்னையே பலியாக்கி, இதன் மூலம் உங்களையும் என்னையும் நம்முடைய எல்லாப்

பாவங்களிலிருந்தும் மீட்டுள்ளார்.

கிறிஸ்து அவருடைய சொந்த சரீரத்தைப் பலியாக்கி, இதன் மூலம் நம்மை மீட்டுள்ளதால், விசுவாசத்தின் மூலம் நீங்களும் நானும் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்பட முடிந்தது. வேறு வார்த்தைகளில் சொன்னால் தங்களுடைய பாவங்களுக்காக மரிக்க வேண்டியதை தங்களால் தடுக்க முடியாதவர்களுக்காக இயேசு கிறிஸ்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக அவர்களுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக்கொண்டு, மரணத்திற்கு கொல்லப்பட்டு மரித்தோரிலிருந்து மீண்டும் எழுந்து, இதன் மூலம், அவர்களுடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் தண்டனைகளிலிருந்தும் மீட்டுள்ளார்.

இந்த தகன பலி பீடத்தை நாம் பார்க்கும்பொழுது இந்த விசுவாசத்தை பெற்றுக்கொள்கிறோம். பலி பீடத்தில், எல்லா நேரமும் பலி காணிக்கை கொடுக்கப்படுவதைப் பார்த்து, நம்முடைய அன்றாட பாவங்களுக்காக மரிக்க வேண்டியது நாமாக இருந்தாலும் கர்த்தர், நம்மை அவருடைய பலி காணிக்கையாக மாற்றாமல், அதற்கு பதிலாக நம்முடைய தேவனே இந்த உலகத்திற்கு வந்து, நம்முடைய இரட்சிப்பை நிறைவேற்றினார் என்பதை நாம் உணர்ந்து விசுவாசிக்க வேண்டும். ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொன்டு, சிலுவையின் மீது அவருடைய இரத்தத்தைச் சிந்தி, மரித்தோரிலிருந்து மீண்டும் எழுந்து, இயேசு நம்மை இரட்சித்தார்.

இதனால் தான், பிதாவாகிய கர்த்தர், இஸ்ரவேலர்களின் பலி காணிக்கையை ஏற்றுக்கொண்டு, பாவம் செய்ததற்காக அவர்களைத் தண்டிப்பதற்கு பதிலாக, அவர்களுடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்ததால் இஸ்ரவேல் மக்கள், தங்களுடைய கைகளை பலி மிருகத்தின் தலை மீது வைப்பதின், மூலம் தங்களுடைய பாவங்களை அதற்குள் செலுத்தச் செய்தும், அவர்களை

அதை கொல்லும்படிச் செய்தும், அதனுடைய இரத்தம் மற்றும் மாமிசத்தையும் அவருக்கு அளிக்கச் செய்தும், இஸ்ரவேலர்களின் பாவங்களை கர்த்தர் மன்னித்தார். இந்த பலி காணிக்கையின் மூலம், நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் அவர் கழுவியுள்ளார். இதைத் தவிர எதுவும் கர்த்தருடைய இரக்கமாகவும் அவருடைய அன்பாகவும் இருக்கவில்லை.

சட்டத்தினால் மட்டும் கர்த்தர் நம்முடன் பேசவில்லை

கர்த்தர் அவருடைய சட்டத்திற்கு ஏற்ப உங்களையும் என்னையும் மற்றும் எல்லா இஸ்ரவேல் மக்களையும் நியாயந்தீர்ப்பதாக இருந்தால், இந்த உலகத்தில் எத்தனை பேர் இன்னமும், உயிரோடிருப்பார்கள்? கர்த்தர் அவருடைய சட்டத்தினால் மட்டும் நம்மை அளந்து நியாயந்தீர்ப்பதாக இருந்தால், நம்மில் ஒருவரும் கூட ஒரு நாளைக்கு வாழமுடியாது. நம்மில் அநேகர் 24 மணி நேரங்களுக்கு கூட இருக்க முடியாது. ஆனால் சில நிமிடங்களில் மரித்துவிடுவோம். நம்மில் சிலர் ஒரு மணி நேரத்தில் இறந்து விடலாம். அதே சமயம் மற்றவர்கள் 10 மணி நேரங்களுக்கு இருக்கக் கூடும். ஆனால் இரண்டிலுமே வித்தியாசம் அற்பமாக இருக்கிறது. நாமெல்லோரும் மரிக்கப்பட வேண்டியவர்களாக உள்ளோம். மக்கள் 60, 70, 80 மற்றும் அதற்கும் மேலே அ இப்பொழுது நீண்டகாலம் வாழ்வது போல அவர்களால் வாழ முடியாது.

இந்த காலையில் என்ன நடந்தது என்பதை நினைத்து பாருங்கள். முழு இரவும் விருந்து அளிப்பதில் தங்கியிருந்ததால் படுக்கையிலிருந்து எழுவதற்கு உங்கள் மகன் இன்னமும் கஷ்டப்படுகிறான். உங்கள் மனைவி அவனை எழுப்ப முயற்சி செய்கிறாள். உங்கள் மகனை

எழுப்பியதற்காக அவனுடைய தாயிடத்தில் அவன் சத்தம் போடுகிறான். மேலும் உங்கள் மனைவி அவளிடம் கத்தியதற்காக உங்கள் மகனிடம் சத்தம் போடுவதின் மூலம் ஒரு சத்தம் போடும் போட்டி உருவாகின்றது. இப்படி காலைச் சண்டைத் தொடங்குகிறது. முடிவில் இங்கு தாயும் மகனும் கர்த்தருக்கு முன்பாக பாவம் செய்கிறார்கள். மேலும் இருவரும் ஒரு நாளைக்கு கூட இருக்க மாட்டார்கள், ஏனென்றால் இந்த பாவத்திற்காக இருவரும் தண்டிக்கப்படுவார்கள்.

ஆனால், கர்த்தர் அவருடைய நீதியின் சட்டத்தின் மூலமாக மட்டும் நம்முடன் பேசவில்லை. *"அவர் நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார்" (சங்கீதம் 103:10).*

நீதியின் சட்டத்தினால் நம்மை நியாயந்தீர்ப்பதை விட்டு, இதற்கு பதிலாக இந்த நீதியின் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக, நம்முடைய இடத்தில் பலி காணிக்கையை ஏற்படுத்தினார். நம்முடைய கைகளை இந்த பலி காணிக்கையின் மீது வைப்பதின் மூலம் நம்முடைய பாவங்களை அதற்குள் செலுத்தச் செய்து, நம்முடைய சொந்த வாழ்க்கைக்கு பதிலாக, இந்த காணிக்கையின் இரத்தத்தை நாம் அவருக்கு கொடுக்கும்படிச் செய்து, நம்முடைய சொந்த உயிருக்கு பதிலாக பலி காணிக்கையின் உயிரை கர்த்தர் ஏற்றுக்கொண்டு, நம்முடையது மற்றும் இஸ்ரவேலர்களுடையதையும் சேர்த்து மனித குலத்தின் எல்லாப் பாவங்களையும் அவர் மன்னித்து, அவை எல்லாவற்றிலிருந்தும் நம்மை மீட்டு, நம்மை மீண்டும் வாழச் செய்துள்ளார். மேலும் விசுவாசிகளை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்டதன் மூலம், கர்த்தர், அவர்களை அவருடைய சொந்த குழந்தைகளாக ஆக்கியுள்ளார். இப்படிதான் இஸ்ரவேல் மக்களை கர்த்தருடைய

இராஜ்ஜியத்தின் ஆசாரியர்களாக அவர் ஆக்கியுள்ளார்.

இங்கு பலி காணிக்கை என்பது இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு எதையும் குறிக்கவில்லை. நம்முடைய பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து, இந்த பலி காணிக்கையாக ஆனார். மேலும் பாவத்தின் தண்டனையைச் சந்தித்த நம்மை மீட்பதற்காக அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது ஏற்றுக்கொண்டு அவருடைய இரத்தத்தைச் சிந்தி, சிலுவையின் மீது மரித்தார். நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்பதற்காக கர்த்தருடைய படைக்கப்பட்ட ஒரேகுமாரன் மனித சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்து, பிதாவினுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் பலி காணிக்கையானார். யோவானிடமிருந்து பெற்றுக்கொண்ட அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் மனித குலத்தினுடைய பாவங்களை அவர் மீது ஏற்றுக்கொண்டு, உலகத்தினுடைய இந்த பாவங்களைச் சிலுவைக்கு சுமந்து சென்று, அவருடைய இரத்தத்தைச் சிந்தி மரித்தார். இதன் மூலம் அவரையே பலியாக்கி, மரித்தும், மரித்தோரிலிருந்து மீண்டும் எழுந்து, இயேசு என்னையும் உங்களையும் முழுமையாக இரட்சித்தார்.

இயேசு, நம்முடைய இடத்திலிருந்து, ஞானஸ்நானம் பெற்று, மரித்து, மூன்று நாட்களில் மரித்தோரிலிருந்து மீண்டும் எழுந்தார் என்று நமக்குச் சொல்லும் இந்த மீட்பின் வார்த்தையை நாம் கேட்கும் பொழுது, நம்முடைய இருதயங்கள் ஊக்கமடைகின்றன. ஏனென்றால், பாவமற்றிருந்த அவர் நமக்கு பதிலாக, எல்லாப் பாவங்களையும் அவருக்குள் செலுத்திய ஞானஸ்நானத்தை பெற்றுக் கொண்டு, இந்த பாவங்களின் கூலியாக எல்லா வகையான தண்டனை, துன்புறுத்தல், துயரங்கள், முடிவில் மரணம் ஆகியவற்றை ஏற்றார். இவை எல்லாமே, முதலில் நாம் அனுபவிக்க வேண்டியதாக

இருந்திருக்க வேண்டும். இதன் மூலம், கிறிஸ்து நம்மை, நம்முடைய பாவங்களிலிருந்து மீட்டுள்ள பொழுது இந்த சத்தியத்தை விசுவாசிக்காததை தவிர வேறு எதுவுமே அதிக தீயதாக இருக்காது.

நீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல்களின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள இரட்சிப்பை நாம் விசுவாசிக்க வேண்டும்

நமக்காக, இயேசு கிறிஸ்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்களையும், இந்த பாவங்களுக்கான தன்டனைகளையும் ஏற்றுக்கொண்டு, நம்முடைய இடத்திலிருந்து, அவரையே பலியாக்கி, உங்களையும், என்னையும் நம்முடைய பாவங்களிலிருந்து மீட்டுள்ள பொழுது "நன்றி, தேவனே!" என்று சொல்லக் கூடிய விசுவாசத்தை நாமெல்லோரும் பெற்றுக்கொள்ள வேண்டும். மனதைத் தொடும் காதல் கதைகள், வாழ்க்கை கதைகள், அல்லது மற்ற வகையான உண்மையான கதைகளால் அநேக மக்கள் எளிதில் உணர்ச்சியடைந்தாலும், அவர்களுடைய இருதயங்கள் கர்த்தருடைய தாராளமான அன்பிற்கு நேராக வரும்பொழுது, அவர்கள் பனியைப் போல் குளிராக இருக்கிறார்கள். அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, நமக்காக சிலுவையின் மீது மரிக்கும் அளவிற்கு நம் தேவனுடைய கிருபை அவ்வளவு அதிகமாக இருந்தாலும், இந்த கிருபையை உணராமல், இதற்காக, அவருக்கு நன்றி சொல்லாமல் இருக்கும் மிருகத்தனமான மக்கள் இன்னமும் இருக்கிறார்கள்.

தேவகுமாரனான இயேசு கிறிஸ்து, இந்த உலகத்திற்கு வந்து, நமக்காக பலி காணிக்கை ஆனார். அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப்

பாவங்களையும் அவருடைய சொந்த சரீரத்திற்குள் ஏற்றுக்கொண்டு, அவருடைய சரீரத்தை சிலுவையின் மீது கொடுத்ததின் மூலம் அவரையே பலியாக்கி கொண்டார். நமக்காக அவர் அறையப்பட்டும், நிர்வாணமாக்கப்பட்டும், தண்டிக்கப்பட்டும், துன்புறுத்தவும் பட்டு பாடுகளை அனுபவித்தார். இப்படித் தான் அவர் நம்மை மீட்டுள்ளார். இந்த சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலம் தான் நாம் கர்த்தருடைய பிள்ளைகளாகியுள்ளோம். எல்லாவற்றிலும் சிறந்த உணர்ச்சியும், வார்த்தைகளால் விளக்க முடியாத கர்த்தருடைய சிறந்த கிருபையும் இதுவே. இப்படியாக கிறிஸ்து நம்மை மீட்டுள்ள பொழுது, இதைக் கேட்ட பிறகும், அநேக மக்கள் இன்னமும் அவரை விசுவாசிக்கமலும் நன்றி செலுத்தாமலும் இருப்பதைப் பார்க்கும் பொழுது, இது என்னை அதிகமாக துன்பப்படுத்துகிறது.

இயேசு இந்த உலகத்திற்கு வந்து, அவருடைய ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டு, அவரையே பலியாக்கியதால் நீங்களும் நானும் நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளோம். இதனால் (ஏசாயா 53:5) சொல்லுகிறது. *"அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போனோம்."*

நாம், நம்முடைய வாழ்க்கை முழுவதும் பாவம் செய்கிறோம். தண்டிக்கப்படுவதை தடுக்க முடியாத நம்மை, நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் தண்டனைகளிலிருந்தும், அழிவு மற்றும் சாபங்களிலிருந்தும் மீட்பதற்கு நம்முடைய தேவன், பரலோக இராஜ்ஜயத்தினுடைய சிம்மாசனத்தை விட்டு விட்டு, இந்த உலகத்திற்கு கீழே இறங்கி வந்தார். அவர், யோவானுக்கு முன்பாக அவருடைய தலையைக் குனிந்து, இந்த பாவங்களைச் சிலுவைக்குச் சுமந்து சென்று,

அதிகமாக துன்பப்பட்டு அவருடைய இருதயத்தின் எல்லா இரத்தத்தையும் தரையில் சிந்தி, மரணத்திலிருந்து மீண்டும் எழுந்து, நமக்காக பலி காணிக்கையாகி, நம்முடைய இரட்சிப்பின் கர்த்தராகியுள்ளார்.

இந்த உண்மையை பற்றி நீங்கள் நினைத்து இதை உங்கள் இருதயங்களில் ஆழமாக வைக்கிறீர்களா? நீங்கள் வார்த்தையைக் கேட்கும் பொழுது, இயேசு கிறிஸ்து, மனித சரீரத்தில் இந்த உலகத்திற்கு வந்து, ஞானஸ்நானம் பெற்று, மரித்து, அவருடைய மக்களை அவர்களின் பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்கு உயிர்த்தெழுந்தார் என்பதை நீங்கள் விசுவாசித்து, உங்களுடைய இருதயங்களில் அதிகமாக உணர்ச்சியடைவது சரியானதாகும். நாமெல்லோரும் நரகத்திற்கு தள்ளப்படவுள்ளோம் என்பதை உணர்ந்தால், இந்த இரட்சிப்பு எத்தனை உணர்ச்சியூட்டக் கூடியதாகவும் நன்றியுள்ளதாகவும் இருக்கிறது என்பதை நம்முடைய இருதயங்களில் நாம் ஆழமாக உணரலாம். கர்த்தரை விசுவாசிக்க வேண்டும் என்றும், அவருடைய மக்களாக வேண்டுமென்றும் நாம் நினைத்திருந்தாலும், இதை அடைவதற்கு நமக்கு எந்த வழியும் இருக்கவில்லை. ஆனால், நம்முடைய பாவமன்னிப்பைத் தேடிய உங்களையும் என்னையும், கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, சிலுவையின் மீது மரித்து, மூன்று நாட்களில் மரணத்திலிருந்து மீண்டும் எழுந்த சத்தியத்தின் வார்த்தை மூலம் நம்மை சந்தித்துள்ளார்.

இயேசுவினுடைய இந்த பலி இல்லை என்றால், நம்முடைய இரட்சிப்பை எப்படி பெற்றுக்கொண்டிருப்போம்? நாம் எப்பொழுதும் பெற்றிருக்க முடியாது. இயேசுவினுடைய ஞானஸ்நானமும் சிலுவையின் மீதான இரத்தமும் இல்லாமல் இருந்திருந்தால் ஆசரிப்புக்கூடாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள இளநீலம்,

இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் இரட்சிப்பு இல்லாமல் இருந்திருந்தாலும் இரட்சிப்பு என்பது ஒரு கோடை இரவின் கனவாக மட்டுமே நமக்கு இருந்திருக்கும். அவருடைய பலி இல்லாமல் இருந்திருந்தால், நாம் எப்பொழுதும், நம்முடைய பாவங்களிலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கவோ, தண்டனையை தவிர்த்திருக்கவோ முடிந்திருக்காது. ஆனால் நிரந்தரமாக நரகத்தின் நிரந்தர நெருப்பிற்குள் தள்ளப்பட்டு துன்பப்படுத்தப் பட்டிருப்போம். இருப்பினும் பழைய ஏற்பாட்டினுடைய பலி காணிக்கையை போல நமக்காக இயேசு அவரையே பலியாக்கி நம்மை மீட்டுள்ளார்.

புதிய ஏற்பாட்டில் நிறைவேற்றப் பட்டுள்ள இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிவப்பு நிற நூல்களின் இரட்சிப்பு

என்னுடைய அன்புள்ள வாசகர்ளே, ஆசரிப்புக்கூடாரத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்தியத்தை நீங்கள் எப்பொழுதுமே மறக்க கூடாது. மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல், பழைய மற்றும் புதிய ஏற்பாட்டினுடைய வார்த்தையாய் இருக்கிறது. இது நீண்ட காலமாக கர்த்தர் நம்மிடத்திற்கு நம்முடைய சொந்த மீட்பராக வருவார் என்ற அவரின் வாக்குத்தத்தத்தின் வார்த்தையாக இருக்கிறது. மேலும் இந்த வாக்கிற்கேற்ப, இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக்கொண்டார் என்று நீல நிற நூல் நமக்குச் சொல்லுகிறது. வேறு வார்த்தைகளில் கூறினால் அவர்

நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்டு, நம்மை நம்முடைய தண்டனைகளிலிருந்து விடுவிப்பார் என்ற சத்தியத்திற்கு ஏற்ப அவர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். நம்முடைய பாவங்களை எடுத்துக்கொள்வதற்காகவும், இந்த உலகத்திலிருக்கும் எல்லோருடைய பாவங்களை எடுத்துக்கொள்வதற்காகவும், யோவானால் அவர் ஞானஸ்நானம் அளிக்கப்பட்டு உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டார். நாம் இதை எப்பொழுதும் மறக்ககூடாது, ஏனென்றால் இயேசு நம்முடைய பலி காணிக்கையாக வந்து, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் அவர் மீது எடுத்துக்கொண்டார் என்பதை நாம் மறந்தால் இரட்சிப்பு இருக்காது.

மிகவும் அதிகமாக இல்லாமல், இந்த உலகத்தில் நமக்கு அதிக சுய-முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வேறு யாராவது, பெருமையடித்து கொண்டிருப்பதை கேட்டு சகித்துக்கொள்ள முடியாவிட்டாலும், அவர்கள் தங்களுக்கு தாங்களே பெருமையடித்து கொள்வதை விரும்பும்படி மக்களுடைய இருதயங்கள் இருக்கின்றன. ஆனால் என்னைப்பற்றி அல்ல, வேறு ஒருவரைப் பற்றி பெருமையடிக்கத் தொடங்குவதற்கு ஒரு காலம் வந்தது, இந்த காலத்தை இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலம் என்னை விடுவித்ததற்காக இயேசுவிற்கு நான் நன்றியுள்ளவனான பொழுது என்று கூறலாம். நம்முடைய பாவங்களை அகற்றுவதற்காக இயேசு இந்த உலகத்திற்கு வந்தார், ஞானஸ்நானம் பெற்றுகொண்டதின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக்கொண்டார். எனவே, அவருடைய ஞானஸ்நானத்திற்காக இயேசு மரிக்கலாம். மேலும் இப்படித்தான் தேவன் நம்மை மீட்டுள்ளார் என்று,

இப்பொழுது அடிக்கடி நான் சொல்லிக்கொண்டு பெருமை பாராட்டிக் கொண்டிருக்கிறேன். இந்த சத்தியத்தை பெருமை பாராட்டவும், இதைப் போதிக்கவும் மற்றும் எல்லா மகிமையையும் கர்த்தருக்கு கொடுக்கவும் நான் தவறுவதில்லை.

இருப்பினும், இயேசுவை விசுவாசிப்பதாக அறிவித்தாலும், அவருடைய ஞானஸ்நானத்தை விட்டு விட்டு வார்த்தையை போதிக்கும், அல்லது அவருடைய பெயரை பெற்றுக்கொண்டு தங்களைத் தாங்களே பெருமையடித்துக் கொண்டிருக்கும் அநேக மக்கள் இருக்கிறார்கள். தன் வாழ்வுக்காக மாதத்திற்கு $300 மட்டும் செலவு செய்வதாக சொல்லும் ஒரு போலி ஊழியர் இருந்தார். ஒரு சிறந்த வேலையாக $300 களுக்குள் ஒரு மாதத்தை ஒட்டிவிடமுடியும் என்றும், அவர் பயணம் செய்கையில் எந்த பணமும் எடுத்து செல்ல தேவை இல்லை, ஏனென்றால் அவருடைய சீடர்கள் அவருடைய எல்லா செலவையும் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் அவர் பெருமையடிப்பது உண்டு. விசுவாசிகளுடைய பணம், பணம் இல்லையா? இந்த பணத்திற்கு எந்த மதிப்பும் இல்லையா? அதே சமயம் அவருடைய சொந்த பணத்திற்கு மட்டுமே மதிப்பு இருக்கிறதா? அவருக்கு ஏதாவது தேவைப்படும் பொழுது, அவர் செய்ய வேண்டியதெல்லாம் ஜெபிப்பது தான் என்று இந்த கிறிஸ்தவ தலைவர் கூறினார், "கர்த்தாவே என்னுடைய பயண செலவுக்கு உதவும், தேவனே நான் உம்மை விசுவாசிக்கிறேன்!" இந்த ஜெபத்தின் மூலம் சில பரிசுத்தவான்கள் உற்சாகமடைந்து, ஒரு சுமை நிறைய பணத்தை கொடுத்தார்கள் என்று அவர் சாட்சியளித்தார்.

அவர்கள் புகழப்படுவதற்கு ஒரு பொருளைப் போல இந்த விஷயங்களைச் சொல்லும் இந்த மக்களைப் பார்க்கும் பொழுது, உங்கள் மனதிற்கு எந்த வகையான எண்ணங்கள் வருகின்றன?

"அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" என்று மத்தேயு 3:13-17 சொல்லுகிறது. இயேசு ஞானஸ்நானம் எடுத்து கொண்ட பொழுது என்னவானது என்று இந்த பகுதி விளக்குகிறது. யோர்தான் நதியில், யோவான் ஸ்நானகனால் இயேசு ஞானஸ்நானம் பெற்ற பொழுது பரலோகத்தினுடைய வாயில் திறந்தது. மேலும் *"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்"* என்ற பிதாவாகிய கர்த்தருடைய குரல் கேட்டது. அந்த சமயத்தில் யோவான் ஸ்நானகன் அதிர்ச்சியடைந்தான்.

இந்த யோர்தான் நதியில் யோவான் ஸ்நானகன் இரண்டு முறை ஆச்சரியமடைந்தான். இயேசு அவனிடத்திற்கு வந்து அவனால் ஞானஸ்நானம் பெற்றுகொள்ள வேண்டும் என்று சொன்னபொழுது முதலில் அவன் அதிசயத்தான். மேலும் இயேசுவிற்கு ஞானஸ்நானம் கொடுத்தபிறகு பரலோகத்தின் கதவு திறக்கப்பட்ட பொழுது *"இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்"* என்று சொன்ன

பிதாவாகிய கர்த்தருடைய குரலை கேட்ட பொழுதும் அவன் ஆச்சரியமடைந்தான்.

யோவான் ஸ்நானகனால், இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதற்கு காரணம் என்ன? இங்கு மத்தேயு 3:15 நமக்கு பதிலைத் தருகிறது. நாம் மீண்டும் ஒரு முறை 15 மற்றும் 16 ஆம் வசனத்தை வாசிப்போம், *"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்."*

யோவான் ஸ்நானகனால் இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றார் என்ற காரணத்தை மத்தேயு 3:15 சொல்லுகிறது. இயேசு பரலோக இராஜ்ஜியத்தின் தலைமை ஆசாரியராகவும், கர்த்தரால் அளிக்கப்பட்ட ஒரே குமாரனாக இருந்தாலும், அவருடைய மக்களாகிய நம்மை நம்முடைய பாவங்களிலிருந்து மீட்பதற்கு அவர் இந்த உலகத்திற்கு வந்தார். வேறு வார்த்தையில் கூறினால் இயேசு, நம்முடைய இடத்திலிருந்து பலியானதின் மூலம் நம்முடைய பாவங்களுக்கான கூலியை கொடுக்கும் பலி காணிக்கையாக இந்த உலகத்திற்கு வந்தார். இதனால் தான் யோவானிடமிருந்து இயேசு ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ள விழைந்தார்.

ஆனால், யோவான் ஸ்நானகனை தவிர வேறு யாரிடமிருந்தும் இயேசு ஏன் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவில்லை? ஏனென்றால் ஸ்திரீயிடமிருந்து பிறந்தவர்களுள் அவன் தான் சிறந்தவனாக இருந்தான். இதனால் யோவான் ஸ்நானகன் மனித குலத்தின் பிரதிநிதியாக இருந்ததால் *"ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும்*

பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை" என்று மத்தேயு 11:11 சொல்லுகிறது. *"இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்குமுன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்" (மல்கியா 4:5)* என்று பழைய ஏற்பாட்டு காலத்தில் மல்கியா காலத்தில் தீர்க்கதரிசனம் கூறப்பட்ட கர்த்தருடைய ஊழியகாரனாக யோவான் ஸ்நானகன் இருந்தான். கர்த்தர் அனுப்புவேன் என்று வாக்குத்தத்தம் செய்த இந்த எலியா, யோவான் ஸ்நானன் ஆவான்.

கர்த்தர் யோவான் ஸ்நானனை எலியா என்று ஏன் அழைத்தார்? இஸ்ரவேலர்களின் இருதயங்களை கர்த்தரிடத்திற்கு திரும்பவும் கொண்டு வந்த ஒரு தீர்க்கதரிசி எலியா. அந்த சமயத்தில் இஸ்ரவேல் மக்கள் பாகாலை தங்களுடைய தெய்வமாக வணங்கினார்கள். ஆனால் பாகாலா அல்லது யோகோவாவா யார் தெய்வம் என்று எலியா அவர்களுக்கு காண்பித்தான். தன்னுடைய பலி காணிக்கை மற்றும் விசுவாசத்தின் மூலமும், வாழும் கர்த்தர் உண்மையில் யார் என்பதை இஸ்ரவேல் மக்களுக்கு விளக்கி காண்பித்தான். மேலும் இதன் மூலம் விக்கிரகங்களை வழிப்பட்டுக் கொண்டிருந்த அவர்களை உண்மையான கர்த்தரிடத்திற்கு திரும்பவும் நடத்தி சென்ற ஒரு தீர்க்கதரிசி அவன். இதனால் தான் பழைய ஏற்பாட்டினுடைய முடிவில் எலியாவை நான் உங்களுக்கு அனுப்புவேன் என்று கர்த்தர் வாக்களித்தார். கர்த்தருடைய சாயலில் படைக்கப்பட்ட எல்லா மனிதர்களும் விக்கிரக வழிபாடு மற்றும் பிசாசை வணங்குதல் என்னும் தவறான பாதையில் இருந்ததால், கர்த்தரிடத்திற்கு திரும்பவும் அழைத்து செல்லும் அவருடைய ஊழியக்காரனை அனுப்புவேன் என்று கர்த்தர் சொன்னார். இப்படி வரப்போகும் ஒருவனாக இருந்தவன் யோவான் ஸ்நானகன் தான்.

"நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும்

யோவான்வரைக்கும் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு. நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா இவன்தான்" என்று மத்தேயு 11:13-14 குறிப்பிடுகிறது. வரப்போகும் இந்த எலியா, யோவான் ஸ்நானனைத் தவிர வேறு யாரும் இல்லை 11-12 வசனத்தில் *"ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும் பரலோகராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன். யோவான்ஸ்நானன் காலமுதல் இதுவரைக்கும் பரலோகராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது. பலவந்தம் பண்ணப்படுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்"* என்று எழுதப்பட்டிருக்கிறது.

"ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை" என்று இங்கு சொல்லும் பொழுது யோவான் ஸ்நானனை, எல்லா மனித குலத்தினுடைய பிரதிநிதியாக கர்த்தர் உயர்த்தினார் என்று இது நமக்குச் சொல்லுகிறது. இந்த பூமியில் இயேசுவினுடைய பிறப்பிற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு யோவான் ஸ்நானன் பிறக்கும்படி கர்த்தர் செய்தார். மேலும் கடைசி தீர்க்கதரிசியாகவும் பழைய ஏற்பாட்டினுடைய ஆசாரியனாகவும் அவனை கர்த்தர் உருவாக்கினார். இதனால் பூமியினுடைய தலைமை ஆசாரியனாக யோவான் ஸ்நானகன் இயேசு கிறிஸ்துவிற்கு ஞானஸ்நானம் அளித்து, இதன் மூலம் மனித குலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவருக்குள் செலுத்தினான். வேறு வார்த்தைகளில் கூறினால் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் அவருக்குள் செலுத்துவதற்காக தான் யோவான் ஸ்நானன் இயேசுவிற்கு ஞானஸ்நானம் அளித்தான். இயேசு

அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் மனிதகுலத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொள்வதற்காகத் தான், இயேசு யோவான் ஸ்நானனிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்.

இதனால் தான் *"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது"* என்று இயேசு மத்தேயு 3:15 இல் சொன்னார். உலகத்தினுடைய எல்லா பாவங்களையும் ஏற்றுக்கொள்வதற்காக, யோவான் ஸ்நானனிடமிருந்து அவருடைய ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளும் பொழுதே எல்லா நீதியும் நிறைவேற்றப்படும் என்பதால் அது பொருந்துகிறது என்று இயேசு சொன்னார்.

நம்முடைய தேவன் இந்த முறையின் மூலம் இப்படியாக பாவிகளை இரட்சித்துள்ளார்

யோவானிடமிருந்து இயேசு பெற்றுக்கொண்ட இந்த ஞானஸ்நானம் பழைய ஏற்பாட்டினுடைய கைகளை வைப்பது போலவே இருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறினால், பழைய ஏற்பாட்டு காலத்தில் ஒருவருடைய பாவங்களை பலி காணிக்கைக்குள் செலுத்துவதற்கு தகன பலி பீடத்திற்கு முன் கைகளை வைப்பது நடத்தப்பட்டது. இந்த உலகத்திற்கு வந்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதன் மூலம் இயேசு கிறிஸ்து, கைகளை வைக்கும் சத்தியத்தை நிறைவேற்றினார். எப்பொழுதெல்லாம், அன்றாட பலிகள் கொடுக்கப்பட்டனவோ அங்கு பலி காணிகையின் தலையின் மீது தங்களுடைய கைகளை வைப்பதின் மூலம் பாவிகள் அவர்களுடைய பாவங்களை அதற்குள் செலுத்தியபோது செய்த சத்தியமாக இருந்தது. மேலும், பாவ நிவர்த்தி நாளாகிய, ஏழாவது மாதத்தின் 10 ஆம் நாள்

அன்று வருடாந்திரபலி கொடுக்கப்பட்டது. இதன்மூலம், தலைமை ஆசாரியன், பலி காணிக்கையின் தலையின் மீது அவனுடைய கைகளை வைத்து, எல்லா இஸ்ரவேலர்களுடைய அவ்வருட பாவங்களை அதற்குள் செலுத்தும் பொழுதெல்லாம் செய்த சத்தியமாகவும் இது இருந்தது.

பழைய ஏற்பாட்டினுடைய கைகளை வைப்பதைப் போல, இயேசு, அவருடைய ஞானஸ்நானத்தின் மூலம் உலகத்தினுடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக்கொண்டதால், இந்தப் பாவங்கள் எல்லாவற்றையும் கழுவினார். மேலும் அவர் மனித குலத்தினுடைய, இந்த எல்லா பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொண்டதால், நம்முடைய இடத்திலிருந்து இந்தப் பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக்கொண்டார். இப்படித் தான், இயேசு கிறிஸ்து, நம்முடைய மீட்பின் உண்மையான கர்த்தராக முடிந்தது.

இதைப் போல, நம்முடைய பாவங்களுக்காக நாம் நிச்சயமான மரணத்தைச் சந்தித்து, தண்டிக்கப்படுவதை நம்மால் தடுக்க முடியாது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். இதை நாம் தெரிந்து கொண்டு உணரவேண்டும். நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்து, இந்த உலகத்திற்கு வந்ததின் மூலம், நம்மை மீட்டுள்ளார் என்றும், நமக்காக பலியானார் என்றும் அதாவது, அவருடைய ஞானஸ்நானத்தின் மீட்பின் வேலையின் மூலமும், கொல்லப்படுதலின் மூலமும், உயிர்த்தெழுதலின் மூலமும், இயேசு கிறிஸ்து நம்முடைய எல்லாப் பாவங்களையும் கழுவியுள்ளார் என்றும், நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை முழுமையாக இரட்சித்தார் என்றும் நாம் உணரவேண்டும். இயேசு நமக்கு இரட்சிப்பின் பரிசை கொடுத்துள்ளார் என்றும் அவர் நம்முடைய இரட்சிப்பை நிறைவேற்றியதால், நமக்காக இந்த நிறைவேற்றிய இரட்சிப்பை அவருடைய பரிசாக

கொடுத்துள்ளார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். இயேசு எல்லா நீதியையும் நிறைவேற்றினார், இதனால் ஒருவர் விசுவாசிப்பதாக மட்டும் இருந்தாலும், மேலும் ஒருவர் ஏற்றுக்கொள்வதாக மட்டும் இருந்தாலும், அவனோ/அவளோ நிச்சயமாக இரட்சிக்கப்படுவார்கள்.

இதை நாம் உணரவேண்டும் என்பதற்கு, ஆசரிப்புக் கூடாரத்தினுடைய பிரகாரத்தினுடைய வாயில் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டு இருந்தது. இந்த ஆசரிப்புக்கூடாரத்தினுடைய வழக்கு மன்றத்தினுடைய வாயிலை நாம் திறந்து அதற்குள் நுழைந்தால், தகன பலி பீடத்தை நாம் ஏன் முதலில் காண்போம் என்பதற்கு இதுவும் காரணம். தகன பலி பீடத்தில் கொடுக்கப்பட்ட காணிக்கைகள், இயேசு கிறிஸ்து நம்மை இரட்சித்துக்கொண்ட இரட்சிப்பின் முறையின் முன் நிழலாய் இருந்தது. தகனபலி பீடத்தின் மீது பலியாக்கப்பட்ட காணிக்கைகள், கைகளை வைப்பதின் மூலம் பாவிகளுடைய பாவங்களைத் தம் மீது ஏற்றுக்கொண்டு பாவிகளுடைய இடத்திலிருந்து மரணத்திற்கு இரத்தம் சிந்த வேண்டியிருந்தது. பின்னர், பலி காணிக்கையினுடைய இரத்தம் பலி பீடத்தினுடைய கொம்புகள் மீது ஊற்றப்பட்டு மீதியுள்ளது தரையின் மீது தெளிக்கப்பட்டது. பின்பு, மிருகத்தினுடைய மாமிசத்தையும், கொழுப்பையும், சுட்டெரிக்கப்பட்ட காணிக்கையாக, பலி பீடத்தின் மீது அவர்கள் இட்டார்கள். இந்த முறைகள் மூலமாக தான், பலி காணிக்கைகள் கர்த்தருக்கு கொடுக்கப்பட்டன. பலி காணிக்கையினுடைய இந்த எல்லா அம்சங்களும், இயேசு கிறிஸ்து நம்முடைய இரட்சகரான முறையைப் போலவே சரியாக இருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறினால், பலி காணிக்கையின் மூலம் இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, இந்த வழியில் நம்மை மீட்பார் என்று கர்த்தர் நமக்கு காண்பித்துள்ளார்.

தகன பலி பீடத்தில் கொடுக்கப்பட்டுள்ள பலி மிருகத்தின் மீது பாவிகளுடைய கைகள் தவறாமல் வைக்கப்பட்டிருக்க வேண்டும். இதனால் தான், ஆசரிப்புக்கூடாரம், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைப் பற்றி நமக்குச் சொல்லுகிறது. இந்த உலகத்திற்கு வந்து மனித குலத்தினுடைய பாவங்களை தன் மீது எடுத்துக் கொள்வதற்காக இயேசு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். பிதாவாகிய கர்த்தருக்கு முன்பு, உலகத்தினுடைய எல்லா பாவிகளுக்காகவும் பலி காணிக்கையாக ஆவதற்கு கிறிஸ்து பெற்றுக்கொண்ட ஞானஸ்நானமானது இரட்சிப்பின் ஒப்பனையாக இருக்கிறது.

இந்த ஆசரிப்புக்கூடாரத்தின் மூலம், நாம் தெளிவான விசுவாசத்தை பெற்றுக்கொள்ள முடியும். தலைமை ஆசாரியன் கைகளை வைப்பதின் மூலம், பாவநிவர்த்தி நாளன்று பலி காணிக்கை இஸ்ரவேல் மக்களுடைய பாவங்களை ஏற்றுக்கொண்டதைப் போலவும், அவர்களுடைய எல்லாப் பாவங்களும் (லேவியராகமம் 16), இப்பொழுது அதற்குள் செலுத்தப்பட்டுள்ளதால், அவர்களுடைய இடத்தில் இருந்து அது பலியாக்கப்பட வேண்டியிருந்ததைப் போல, நம்முடைய பாவங்களை அவர் மீது எடுத்துகொள்வதற்காகவும், இந்த பாவங்களுக்காக நம்முடைய சொந்த பலி காணிக்கை ஆவதற்காகவும், இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து, நம்முடைய பலி காணிக்கையாகி, இதன் மூலம் நம்மை நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும், தண்டனைகளிலிருந்தும் இரட்சித்துள்ளார். இப்பொழுது நாம் இந்த அன்பின் இரட்சிப்பை முழுமையாக விசுவாசிக்கலாம். இந்த சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலமே கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள, இந்த அன்பின் மீட்பிற்காக, நாம் நன்றி கூறி, அவருக்கு நம்முடைய கடனைத் திரும்பத் தர முடியும்.

ஆசரிப்புக் கூடாரத்தைப் பற்றி ஒருவர் எவ்வளவு

ஞானமுள்ளவராக இருந்தாலும் சரி, அவனோ/அவளோ விசுவாசிக்க வில்லை என்றால், பின்பு எல்லா ஞானமும் பயனற்றது, இதைப் போல, இயேசு கிறிஸ்துவினுடைய ஞானஸ்நானம் எவ்வளவு முக்கியமானதாய் இருக்கிறது என்று நாம் உணர்ந்து, விசுவாசிக்க வேண்டும். ஆசரிப்புக் கூடாரத்திற்கு மூன்று வாயில்கள் இருந்தன. இவை எல்லாமே இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நெய்யப்பட்டிருந்தன. மக்கள், அவர்களுடைய அறியாமையால், ஆசரிப்புக் கூடாரத்தினுடைய ஒவ்வொரு வாயிலைப் பற்றியும் வித்தியாசமாக வெளிப்படுத்தலாம்.

நூல்களை வரிசைப் படுத்தும் போது முதலாவது வரும் நூல் இளநீலமாகும், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவை இதனைத் தொடர்ந்து வருகின்றன. இப்படி இதனை அமைத்தால் மட்டுமே அதனை ஆசரிப்புக் கூடார வாசல் என்று நம்மால் அழைக்க முடியும், ஏனெனில் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இப்படியாவே ஆசரிப்புக் கூடாரதை அமைக்க வேண்டும் என கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு கட்டளையிட்டார்.

வாயில்கள் இப்படியாக அமைக்கப் படவேண்டும் என்பதற்கு ஒரு காரணம் இருந்தது. கன்னி மரியாளின் மூலமாக, மனித் சரீரத்திலே, மனித குலத்தின் இரட்சகராக இயேசு கிறிஸ்து இப்பூமியில் பிறந்திருந்தாலும், முதலாவதாக, அவர் நம்முடைய பாவங்களைத் தன் மீது ஏற்றுக்கொள்ளும்படியாக ஞானஸ்நானம் பெற்றிருக்காவிட்டால், அவர் சிலுவையில் அறையப் பட்டிருக்கவும் மாட்டார், மரித்திருக்கவு மாட்டார். இளநீல நூல் முதலாவதாக நெய்யப் பட்டிருக்க வேண்டும், ஆகவே அதன் முக்கியத்துவமும் பெரியது.

நாம் யாரை விசுவாசிக்க வேண்டும்?

ஆகவே, நம்மை நம் பாவங்களிலிருந்து இரட்சித்த இயேசு கிறிஸ்துவை நாம் விசுவாசிக்க வேண்டும். தேவகுமாரரும், நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து நமக்கு அளித்த இரட்சிப்பை நாம் விசுவாசிக்கும் போதே நம்மால் மறுபடியும் பிறக்க முடியும். தேவ குமாரரை நமது இரட்சிப்பின் தேவனாக விசுவாசிப்பதுடன், அவர் இப் பூமிக்கு வந்தார் எனவும், நமக்காக அவர் ஞானஸ்நானம் பெற்றபோது நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக் கொண்டார் எனவும், நமது ஆக்கினைகளை அவர் சிலுவையில் பெற்றார் என்பதையும் நாம் விசுவாசிக்க வேண்டும், அப்பொழுது மட்டுமே நம்முடைய இரட்சிப்பை நம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

தன்னுடைய ஞானஸ்நானத்தைத் தவிர வேறு எந்த வழிகளிலும் நமது பாவங்களைத் தன் மீது ஏற்றுக் கொள்வதற்கு இயேசு கிறிஸ்துவிடம் வேறு வழிகளிருக்க வில்லை, இந்த மிகச் சரியான முறையின் மூலமாக நம் பாவங்களைச் சுமந்த பிறகே, அவரால் சிலுவைக்குச் சென்று, தன் இரத்தத்தைச் சிந்தி அங்கே மரிக்க முடியும். அவர் தேவ குமாரராயிருந்தாலும், நமது இரட்சகராக இப்பூமிக்கு வந்திருந்தாலும், தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம் பாவங்களை அவர் தன் மீது பெற்றிருக்கவில்லையென்றால், நம் இரட்சிப்பை இவ்வுலகில் கண்டிருக்க முடியாது.

ஆகவே, வேதாகமம் விளக்கமாகக் கூறும் சான்றுகளை வைத்து உங்கள் பாவங்கள் ஏற்கனவே துடைக்கப்பட்டு விட்டன என முற்றிலுமாக உணர்த்தப்படுவது அவசியமாகும்.

நீங்கள் நன்றாக கடன்பட்டிருப்பதாக கருதுவோமாக. அப்பொழுது உங்களிடம் ஒருவர் கூறுகிறார். "கவலைப் படாதீர்கள்; நான் உங்களுக்காக செலுத்திவிடுகிறேன்.

எனவே கவலைப் பட வேண்டியதில்லை; நான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கிறேன்." நீங்கள் இந்த நபரைப் பார்க்கும் போதெல்லாம் அவர் இதனையே தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கிறார், "கவலைப் பட வேண்டியதில்லை என நாம் உங்களிடம் கூறவில்லையா? நான் அதனைப் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறினேனே!" அவரை நாம் ஏன் விசுவாசிக்கவில்லை என்று அந்நபர் கோபப்படுகிறார். "நான் அதனைச் செலுத்தி விட்டேன்; என்னை நம்பினால் போதும்," என்று இந்த நபர் ஒவ்வொரு நாளும் உங்களிடம் கூறினாலும், அவர் உண்மையாகவே உங்கள் கடனை செலுத்தியிராத போது, அவரை விசுவாசிப்பதின் மூலம் உங்கள் கடன் தீர்க்கப் பட்டு விட்டதா? அப்படி இல்லை!

"நீ என்னை நம்பினால், உன் கடனெல்லாம் அடைக்கப் பட்டுவிடும்" என்று அவர் எத்தனை உறுதியாகக் கூறினாலும், அவர் உண்மையாகவே உங்கள் கடனை செலுத்தியிராத போது, உங்கள் கடன் அப்படியே தானிருக்கிறது, இந்நபர் உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். ஆகவே நீங்கள் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள், "நீங்கள் என் கடனை அடைத்து விட்டீர்களா?" அவர் உங்களிடம் திரும்பத் திரும்பக் கூறுகிறார், "நீ ஏன் இவ்வளவு சந்தேகப்படுகிறாய்? என்னை நிபந்தனையின்றி விசுவாசி! நான் அதனைச் செலுத்தி விட்டேன் என்று உன்னிடம் கூறினேனே. நீ செய்ய வேண்டியதெல்லாம் என்னை விசுவாசிக்கவேண்டியது மட்டுமே, ஆனால் நீ இன்னமும் சந்தேகம் உள்ளவனாகவே இருக்கிறாய்! இப்படி இருக்காதே!" ஆகவே, உங்கள் முழு இருதயத்துடனும் நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்கள் எனக் கொள்வோம். ஆனால் நீங்கள் எத்தனையாக விசுவாசித்தாலும், அவர் உங்கள் கடனைத் தீர்க்கவில்லை எனில், அவர் கூறிய எல்லாமே பொய்யாகும்.

இன்றைய கிறிஸ்தவர்களின் விசுவாசம் இப்படித்தானிருக்கிறது

"இயேசு தன்னுடைய விலையேறப்பட்ட இரத்தத்தை சிலுவையில் சிந்தி உங்களை இரட்சித்தார். உங்கள் பாவங்களுக்கான தண்டனையை அவர் பெற்றுக்கொண்டார். இப்படித்தான் அவர் உங்களை இரட்சித்தார்," என்று இன்றைய கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள். அநேக போதகர்கள் தம்முடைய சபையாரிடம் இப்படியாகத்தான் பிரசங்கிக்கிறார்கள். சபையிலுள்ள ஒருவர் எழுந்து நின்று "ஆனால் நான் இன்னமும் பாவியாக இருக்கிறேனே" என்று கூறினால், அவர்கள் பதில் கூறுகிறார்கள், "உங்களிடம் சிறிதளவு விசுவாசம் இருப்பதே இதற்கான காரணம். விசுவாசியுங்கள்! உங்கள் சந்தேகமே மிகப் பெரியப் பாவமாயிருக்கிறது!" "ஐயா, நானும் கூட விசுவாசிக்க விரும்புகிறேன். ஆனால் எத்னால் விசுவாசிக்க முடியவில்லை என்று எனக்குத் தெரியவில்லை." "நான் விசுவாசித்தாலும் கூட ஏன் பாவம் நிறைந்தவனாக இருக்கிறேன் என்ற் எனக்குத் தெரியவில்லை. நான் உண்மையாகவே விசுவாசிக்கிறேன்." "உங்களிடம் போதுமான விசுவாசம் இல்லை. நீங்கள் இன்னமும் அதிகமாக விசுவாசிக்கவேண்டும். ஒரு மலையின் மீது ஏறி உபவாசமிருக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் உணவைத் தவிர்த்து விசுவாசியுங்கள்." "உணவைத் தவிர்க்காமல் என்னால் விசுவாசிக்க முடியாதா?" "இல்லை, நீங்கள் உபவாசிக்கும் போது, விசுவாசிக்க முயற்சி செய்யவேண்டும்."

இன்றைய போதகர்களில் அநேகர் விசுவாசிக்கும் படி உங்களிடம் கூறுகிறார்கள், ஆனால அவை உங்கள் பாவப் பிரச்சினைகளைத் தீர்க்காத போது, விசுவாசிக்காததற்காக உங்களைக் கடிந்து கொள்வார்கள். நீங்களும் விசுவாசிக்க

முயற்சி செய்கிறீர்கள் ஆனால் விசுவாசிப்பது இன்னமும் கடினமானதாக இருக்கிறது, அல்லது நீங்கள் கண்மூடித்தனமாக விசுவாசிக்கலாம், ஆனால் உங்கள் பாவப்பிரச்சினை தொடர்ந்து வருகிறது. இங்கு நிகழ்ந்த தவறு என்ன? இதனை எதனால் விளக்க முடியும்? ஞானஸ்நானம் பெற்றதின் மூலமாக இயேசு கிறிஸ்து அவர்களின் எல்லாப் பாவங்களையும் சுமந்தார் என்பது அவர்களுக்குத் தெரியாததால், உண்மையானதும் உறுதியானதுமான ஒரு விசுவாசத்தை அவர்களால் பெற முடியாது. அவர்கள் வெறும் மாயையை மட்டுமே விசுவாசிப்பதால், அதனை எத்தனையாய் விசுவாசித்தாலும், அதனால் அவர்களின் பாவப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

எந்த ஒரு உறுதியான ஆதாரமும் இல்லாமல் விசுவாசம் வந்து விடுகிறதா? அப்படி இல்லை! பாவப் பிரச்சினையானது எவ்வாறு தீர்க்கப் பட்டது என்பதை தெளிவாக அறிந்து அதனை விசுவாசிப்பதின் மூலமே, முழு நம்பிக்கையும் வருகிறது. "நான் உம்மைச் சந்தேகித்தாலும், நீர் என் பாவப் பிரச்சினையை ஏற்கனவே தீர்த்து விட்டீர் என்பது எனக்கு தெளிவாகிறது. விசுவாசிக்கக் கூடாது என நான் முயன்றாலும், உம்முடைய இரட்சிப்பை விசுவாசிப்பதை என்னால் தவிர்க்க முடியவில்லை, ஏனெனில் இந்த இரட்சிப்பு நிச்சயமானதாயிருக்கிறது. என்னுடைய பிரச்சினையைத் தீர்த்தமைக்காக உமக்கு நன்றிகள்." வேறு வார்த்தைகளில் கூறினால், நாம் முதலில் சந்தேகப் பட்டாலும் கூட, நம்முடைய இரட்சிப்பின் அத்தாட்சி மிகவும் உறுதியானதாக இருப்பதால், நம்மால் தொடர்ந்து சந்தேகிக்க முடியாது. நம்முடைய இரட்சிப்பின் அடையாளமாகவும் அதன் அத்தாட்சியாகவும், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி என்ற சான்றிதலை இயேசு நமக்கு வழங்கியுள்ளார். "இப்படியாக உன் கடன்களை எல்லாம் அடைத்து தீர்த்தேன்." இந்த

சான்றிதழை நாம் பார்க்கும் போது மட்டுமே, நம்முடைய எல்லாப் கடன்களும் அடைக்கப்பட்டன என்பதை நம்மால் அறிந்து உண்மையான விசுவாசத்தைப் பெற முடியும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமது இரட்சகர் என்றும், இரட்சகரை நாம் விசுவாசிப்பதாக நாம் கூறிக்கொண்டாலும், அவர் நம்மை எப்படி இரட்சித்தார் என்பதற்கும் எப்படி நம் பாவங்கள் கழுவப்பட்டன என்பதற்கும் போதுமான ஆதாரங்கள் நம்மிடம் இல்லாத போது, கர்த்தரை நாம் விசுவாசிப்பதாக அறிவித்தாலும் கூட, அதன் படி நம்மால் விசுவாசிக்க முடியாது. வேறு வார்த்தைகளில் கூறினால், நம் முழுப் பாவங்களுக்குமான கிரயம் கொடுக்கப்பட்டதற்கான அத்தாட்சியை நாம் கண்டிராவிட்டால், அதன் மீது முழு நம்பிக்கை வைக்க முடியாது. இந்த சான்றிதழைப் பார்க்காமல் விசுவாசித்த மக்களிடம் உறுதியான விசுவாச உணர்ச்சி இருப்பதாக முதலில் தெரிகிறது, ஆனால் அவர்களுடைய விசுவாசம் கண்மூடித்தனமானது. இது மதவெறியுள்ள விசுவாசம் மட்டுமேயாகும்.

மதவெறியுள்ள விசுவாசத்தை நல்ல விசுவாசமாக நீங்கள் கருதுகிறீர்களா?

மதவெறியுள்ள விசுவாசத்தை உடைய போதகர் ஒருவர் மற்றவர்களிடமிருந்தும் இத்தகைய மதவெறியுள்ள விசுவாசத்தை எதிர்பார்த்தால் அவரை எப்படி விரும்புவீர்கள்? "விசுவாசியுங்கள்! அக்கினியைப் பெற்றுக் கொள்ளுங்கள்! அக்கினி, அக்கினி, அக்கினி! பரிசுத்த ஆவியானவர் அக்கினியைப் போன்றவர், அக்கினியால் எங்களை நிரப்பும்! தேவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்கிறேன்! அவர் உங்களை சுகமாக்குவார் என்று விசுவாசிக்கிறேன்! அவர் உங்கள்

அனைவரையும் செல்வந்தர்களாக்குவார் என்று விசுவாசிக்கிறேன்! அவர் உங்களை ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்கிறேன்! அவர் உங்களை சுகமாக்குவார் என்று விசுவாசிக்கிறேன்!" இத்தகைய ஒரு போதகர் இத்தகைய ஒரு காட்சியை ஏற்படுத்தும் போது, சபையாரின் காதுகளில் ஒலியேற்படுகிறது, இருதயம் வேகமாகத் துடிக்கிறது. "அக்கினி, அக்கினி, அக்கினி!" என்று அவர் கத்துவது, ஒரு சிறந்த ஒலி அமைப்பின் மூலம் அருமையாக அக்கட்டிடத்தில் பரப்பும் போது, அவருடைய கம்பீரமான குரலினால் இருதயம் வேகமாகத் துடிக்கத் தொடங்குகிறது. அவர்களின் உணர்ச்சிகள் அதிகமாகத் தூண்டப்பட்டன, அது ஏதோ பெரியதொரு விசுவாசம் இறங்கியதைப் போலிருக்கிறது, "தேவனாகிய இயேசுவே, வாரும்! ஓ, பரிசுத்த ஆவியானவரே வாரும்!"

இந்நேரத்தில், "நாம் இப்போது ஜெபிப்போமாக. டூப்போது பரிசுத்த ஆவியானவர் இறங்கி நம்மை நிரப்பிகிறார் என நான் விசுவாசிக்கிறேன்" என்று கூறுவதின் மூலம், சபையோரின் உணர்வுகளை இன்னமும் அதிகமாகத் தூண்டி விடுகிறார். இசைக் குழுவினர் கீர்த்தனைய அதனைத் தொடர்ந்து இனிமையாக இசைக்கிறார்கள், மக்கள் தம் கைகளை மிக உயரமாக உயர்த்துகிறார்கள், ஆர்வத்தினால் அதிகம் உந்தப் படும் வேலையில், அதன் பெரிய வெளிப்பாடு முடிவில் வருகிறது. "நாம் இப்போது நம் காணிக்கைகளைக் கொடுப்போம். குறிப்பாக, இந்த சாயங்காலத்தில், உங்களிடமிருந்து ஒரு சிறப்புக் காணிக்கையை கர்த்தர் விரும்புகிறார். இந்த சிறப்பு காணிக்கையை நாம் அனைவரும் கொடுப்போமாக," என்று வரிசையில் நிற்பவர்களிடம் கூறுகிறார்.

உணர்ச்சி வசப்பட்ட மக்கள் தம் பைகளைக் காலி செய்யத் தொடங்குகிறார்கள். சேகரிக்கப் பட்ட எல்லா பணத்தையும் அடைத்து வைக்கவும், பூச்சி வலைகளைப்

போன்ற மிகப்பெரிய பல காணிக்கைப் பைகளையும் வைக்கும்படியான மிகப்பெரிய பிரசங்கப் பீடத்தை கள்ளப் போதகர் ஏற்கனவே தயாரித்து வைத்துள்ளார். அப்போது இசைக் குழுவினர் கீர்த்தனைகளை இசைக்கத் தொடங்குகிறது, மேலும் மக்களின் இருதயம் பேருவகை அடைந்திருக்கிறது, இந்நிலையில், பூச்சிப் பிடிப்பவர்களை (காணிக்கைப் பைகளை வைத்திருக்கும் ஊழியர்களை), கூட்டத்திற்குள் அனுப்புகிறார்.

அதிக காணிக்கை அதிக ஆசீர்வாதம் என பொய்கூறுவதின் மூலம், மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு, இத்தகைய கள்ளப் போதகர்கள் அவர்களின் இருப்பை காலி செய்து, அவர்களைக் கண்ணீர் கடலுக்குள் தள்ளி விடுகிறார்கள். அதற்கான காரணங்களையும், திட்டங்களயும் தெரிவிக்காமல், அவர்களை உணர்வுகளால் முழுகடித்து, தாம் கொடுப்பதைக் கூட அறியாமல், அவர்களிடம் உள்ள எல்லா காசையும் கொடுத்து விடச் செய்கிறார்கள். இது கர்த்தரின் வார்த்தையின் அடிப்படையில் அமைந்ததும் அல்ல, அல்லது பிரசங்கதின் அடிப்படயில் அமைந்ததும் அல்ல, இது வெறிப்பிடித்த குருட்டுத்தனமான திருட்டாகும். இதைப் போல், மதவெறிப் பிடித்த போதகர்கள் தம்முடைய குறிக்கோளை அடையும் படி, மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விடுகிறார்கள்.

நம் தேவன் தன் ஞானஸ்நானத்தின் மூலம் நம் எல்லாப் பாவங்களையும் ஏற்றுக் கொண்டார் என்பதயும், இயேசு கிறிஸ்துவே நமது இரட்சகர் என்றும் நாம் விசுவாசித்தால், நாம் அசைக்கப்படாமல், சமாதானத்துடனேயே இருப்போம். இயேசு நம் எல்லாப் பாவங்களையும் தன் தோல்களில் சுமந்து, சிலுவையில் மரித்தார் என்பதே நம்மை ஊக்கப் படுத்துவதாக இருக்கிறது. கர்த்தராகிய இயேசுவே நம் எல்லாப் பாவங்களையும் தன் ஞானஸ்நானத்தின் மூலமாக தன் மீது ஏற்றுக் கொண்டு, இப்பாவங்களுக்கான கிரயம் செலுத்துவதற்காக மரித்தார் என்பதை நாம்

எண்ணும்போது, நாம் மிகவும் நன்றியறிதல் உடையவர்களாகிறோம், நம்முடைய இருதயங்கள் பெரிதான மகிழ்ச்சியால் நிரப்பப் படுகிறது. ஆயினும், நம்மிருதயங்களிலுள்ள இந்த அமைதியான உணர்வுகள் இந்த உலகில் உள்ள வேறெதுவை விடவும் மிகப் பெரியது; எந்த ஒரு நேசமோ, அல்லது இப் பூமியில் உள்ள மிகவும் உயர்ந்த வைரக்கல் பரிசோ, இதனை விட அதிகமாக ஊக்கப்படுத்தமுடியாது.

இதற்கு மாறாக, மதவெறியர்களின் உணர்ச்சியூட்டும் உணர்வுகளால் அதிக காலம் தாக்குப் பிடிக்க முடியாது. அவர்கள் இந்த உணர்வுகளினால் சிறிது காலம் சஞ்சரித்தாலும், அவர்கள் அன்றாடம் பாவம் செய்யும் போது, அந்த பாவங்களினால் குத்தப் பட்டவர்களாய், வெட்கத்தினால் தம் முகத்தை மறைப்பதை தவிர்க்க முடியாதவர்களாய் இருக்கிறார்கள். "நமக்காக இயேசு நம் பாவங்களுக்கான தண்டனையை அனுபவித்து சிலுவையில் மரித்திருக்கும் போது, இன்னமும் நான் ஏன் அனுதினமும் பாவம் செய்து கொண்டிருக்கிறேன்?" ஆகவே அவர்கள் தம் தன்மையை இழந்து, காலம் சிறிது செல்லும்போது, எவ்வித உணர்தலும் இல்லாதவர்களாகி விடுகிறார்கள்; இதற்கு மேலும், அதிக வெட்கமுடையவர்களாய், கர்த்தருக்கு முன் செல்வதையும் நிறுத்தி விடுகிறார்கள்.

இதனால் தான் கர்த்தர் நமக்கு சர்வாங்க தகன பலிபீடத்தைக் காட்டினார். பலியிடும் முறைக்கு ஏற்றபடி சர்வாங்க தகன பலிபீடத்தில் கொடுக்கப்படும் பலி காணிக்கையானது நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறேதுமில்லை. சர்வாங்க தகன பலிபீடமானது, இயேசு இப்பூமிக்கு வந்தார் என்பதையும், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் நம்மை ஒரேதரமாக இரட்சித்தார் என்றும் அறிவிக்கிறது. சர்வாங்க

தகன பலிபீடத்தைக் நாம் காணும்படிச் செய்து, அதனை விசுவாசிப்பதின் மூலம் நாம் இரட்சிப்படையும் படிச் செய்தார்.

இக் காலத்தில் நாம் செய்ய வேண்டியது என்ன?

மறுபடியும் பிறந்தவர்களாகிய நமக்கு இக் காலத்தில் செய்ய வேண்டியவைகள் அநேகம் இருக்கின்றன. முதலாவதாக நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை உலகம் முழுவதும் நாம் பிரசங்கிக்கவேண்டும். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றைக் குறித்த எந்த அறிவும் இல்லாதவர்களுக்கு சத்தியத்தை நாம் அறிவிக்க வேண்டும், இதன் மூலமாக எரியும் நரகத்தண்டனையிலிருந்து அவர்கள் இரட்சிக்கப் பட நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். ஏன்? ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்படுத்தப்பட்ட நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை அறிந்து கொள்ளாமலேயே, இயேசுவை பின்தொடரும் மக்கள் இருப்பதே இதற்கான காரணம்.

இந்த் சத்தியத்தை அவர்களுக்கு பரப்புவதற்கு முன்னர், நாம் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. உலகம் முழுவதும் அனுப்பப்படும் புத்தகங்களை முதலாவதாக நாம் வெளியிட வேண்டும். மொழிப்பெயர்த்தல், சரிபார்த்தல், திருத்துதல் ஆகியவற்றுடன், இதனை அச்சடிப்பதற்கும், உலகம் முழுவதும் உள்ள நாடுகளுக்கு அனுப்புவதற்கும் பணத்தை ஆயத்தம் செய்ய வேண்டும், இத்தகைய பல செயல்கள் இருக்கின்றன.

ஆகவே நம் உடன் ஊழியர்களையும் போதகர்களையும் பார்க்கும் போது, அவர்கள் எத்தனை வேலைகளைச்

செய்கிறார்கள் என்பதை நம்மால் காணமுடிகிறது. கர்த்தரின் ஆலயத்தில் உள்ள பரிசுத்தவான்களும் ஊழியர்களும் இப்படியாக கடினமாக உழைப்பதினாலே, சரீரப்படியாக அவர்கள் களைத்துப் போகிறார்கள். மரத்தான் ஓட்டப்பந்தயத்தின் 42.195கி.மீ. தூரத்தை ஓட்ட வீரர்கள் சுற்றி ஓடுகையில், ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பிறகு, அவர்கள் மிகவும் களைப்படைந்து விடுவதால் தாம் ஓடுகிறோமா, அல்லது வேறு எதையோ செய்கிறோமா எனக் குழம்பி விடுவதாக கூறப்படுகிறது. சுருக்கமாகக் கூறினால், மிக அழுத்தமான சூழ்நிலைகள் மனச்சூனியத்தை உருவாக்கும். நாம் நற்செய்திப் பணியாகிய ஓட்டத்தின் இந்நிலையை நாம் அடைந்து விட்டோம். நற்செய்திக்காக நம் வாழ்க்கையை வாழுவது மரத்தான் ஓட்டப்பந்தய வீரர்கள் செய்வதைப் போல் அதிகத் தூரம் உள்ள் இலக்கை நோக்கி விடாமல் ஓட வேண்டிய ஓட்டமாகும். தேவன் திரும்பி வரும் வரையில், நற்செய்திக்காக நாம் தொடர்ந்து ஓட வேண்டிய நிலையில் இருப்பதால், நாம் கஷ்டத்தை அனுபவிக்கிறோம்.

தேவன் நம்முடனே இருப்பதாலும், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவி நம்முடனே இருப்பதாலும், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் தேவன் நம்மை இரட்சித்தார் என்பதை விசுவாசிப்பதாலும், மிக நிச்சயமான சத்தியத்தை நாம் விசுவாசிப்பதாலும், புதிய பலத்தை நம்மால் பெற்றுக் கொள்ள முடியும். இயேசு நமக்கு இரட்சிப்பின் வரத்தைக் கொடுத்ததினாலே, நீங்களும் நானும் வரத்தைப் பெற்றுக் கொண்டோம். ஆகவே மாமிசத்தின் துன்பங்களால் நம்மைத் தடுக்க முடியாது. மாறாக, அதிக கஷ்டத்தை நாம் அனுபவிக்கும் போது, நீதிமான் அதிக உறுதியையும் பெறுவான். தேவனுக்கு நாம் உண்மையாகவே நன்றி கூறுகிறேன்.

ஆவிக்குரியபடி, நமது இருதயங்களிலும், நம்

சிந்தனைகளிலும், நம் சுற்றுமுற்றத்திலும், நம் தேவன் நமக்குக் கொடுத்த புதியபலத்தை நம்மால் உணரமுடியும், தேவன் நம்முடனே இருக்கிறார். அவர் நமக்கு உதவி செய்வதையும், நம்மை அவர் தாங்குவதையும், அவர் நம்முடனே இருப்பதையும் நம்மால் உணர முடிவதால், அவருக்கு இன்னமும் அதிகமாக நன்றி கூறுகிறோம். ஆகவே அப்போஸ்தலனாகிய பவுல் கூறினான், *"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13).* ஆகவே, தேவன் நமக்கு பலமளிக்காவிட்டால் நம்மால் எதையுமே செய்ய முடியாது என்று ஒவ்வொருநாளும் அறிக்கைச் செய்கிறோம். இயேசு கிறிஸ்து நமக்காக ஞானஸ்நானம் மட்டுமே பெறவில்லை, ஆனால் சிலுவையில் அறையப்பட்டதின் மூலமாக நமக்காக பலியானார், மேலும் அவர் தன் மரணத்தைச் சந்தித்து, மரித்தோரிலிருந்து மீண்டும் உயிரோடெழுந்து, அதன் மூலமாக நம் இரட்சகரானார். சர்வாங்க தகன பலிபீடத்தை நாம் காணும் போதெல்லாம், இந்த சத்தியத்தை நம்மால் நினைவு படுத்த முடியும்.

சர்வாங்க தகன பலிபீடமானது சீத்திம் மரத்தினால் செய்யப்பட்டதுடன், ஒரு தடிப்பான வெண்கலத் தகட்டால் மூடப்பட்டிருந்தது. அதன் உயரம், நடுப்பாகத்தில் 1.35 மீட்டராக இருந்தது, அதன் உட்புறத்தில், 68 செ.மீ. உயரமுடைய வெண்கலச் சட்டங்கள் குறுக்கும் நெடுக்குமாக வைக்கப் பட்டிருந்தன. பலி காணிக்கையின் மாமிசம் இந்த சட்டங்களில் இடப்பட்டு எரிக்கப்பட்டது.

சர்வாங்க தகன பலிபீடத்தை நாம் காணும் போது, நாம் எப்படி இருக்கிறோம் என்று நமக்கு நாமே பார்க்க வேண்டும். இயேசு கிறிஸ்து தன் மாமிசத்தில், ஞானஸ்நானத்தின் மூலமாக நம் பாவங்களை ஏற்றுக் கொண்டதையும், அதனால் சிலுவையில் தனது இரத்தத்தைச் சிந்தி, நம்முடைய எல்லாப் பாவங்களுக்குமான ஆக்கினையை

அவர் அடைந்ததையும் நாம் பார்க்க வேண்டும். நம்முடைய பாவங்களுக்காகவும் அதற்கான ஆக்கினைகளுக்காகவும், கர்த்தருக்கு முன்னதாக மரிப்பதை உங்களாலும் என்னாலும் தவிர்க்க முடியாது. நம்முடைய பாவங்களாலும் அதற்கான ஆக்கினையினாலும், மரிப்பதையும், சபிக்கப் படுவதையும் உங்களாலும் என்னாலும் தவிர்க்க முடியாது. ஆனால, இவ்வுலகிற்கு நித்திய பாவநிவர்த்தியாக வந்த இயேசு கிறிஸ்து, ஞானஸ்நானம் பெற்று, நமக்காக மரித்ததினாலே, பழைய ஏற்பாட்டு பலிமுறையைப் போல, நாம் அனைவரும் இரட்சிக்கப் பட்டோம்.

பலி மிருகமானது, உயிருடனிருக்கும் போது, பார்ப்பதற்கு மிகவும் அழகானதாகவும், விரும்பத்தக்கதாகவும் இருந்தாலும், அது கைவைப்பதின் மூலம் பாவங்களை ஏற்றுக்கொண்ட பிறகு, அதன் கழுத்தறுப்பட்டு, இரத்தம் சிந்தி மரிப்பது எத்தனைக் கோரமானது? இப்படி நாம் கோரமாக மரிக்க வேண்டியதிருக்க, நம்முடைய ஆக்கினையிலிருந்து தப்பிக் கொண்டது, எத்தனை பெரிதான ஆசீர்வாதாமாயிருக்கிறது. தேவன் நமக்கு இரட்சிப்பின் வரத்தைக் கொடுத்ததினாலேயே இந்த ஆசீர்வாதம் சாத்தியமாகியது. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் அறிவிக்கப்பட்டதைப் போல், இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு மனித சரீரத்தில் வந்து, தன்னுடைய ஞானஸ்நானத்தினாலும், சிலுவை இரத்தத்தினாலும் உங்களையும் என்னையும் இரட்சித்து, இரட்சிப்பின் வரத்தை நமக்கு வழங்கினார். இப்படியாக நம் தேவன் இரட்சிப்பின் வரத்தை நமக்கு வழங்கினார்அஇதனை உங்களிருதயத்தினால் விசுவாசிக்கிறீர்களா? இயேசுவின் நேசமாகிய இந்த இரட்சிப்பின் வரத்தை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நம் அனைவரிடமும் இந்த விசுவாசம் இருக்க வேண்டும்.

சர்வாங்க தகன பலிபீடத்தை நாம் காணும் போது, இயேசு கிறிஸ்து நம்மை இவ்வழியாக இரட்சித்தார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். நமக்கு இரட்சிப்பின் வரத்தை வழங்க இப்படியாக பலியானார். பலி காணிக்கையின் மீது கைகள் வைக்கப் பட்டு, அந்த பலி மிருகம் மரிக்கும் படியாக இரத்தம் சிந்துவதைப் போல, இப்படியாக பாடுபட்டு, இயேசு நமக்கு இரட்சிப்பை வழங்கினார். இப்படியாகவே அவர் நம்மை நம் எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சித்தார். நாம் இதனை கண்டு, கர்த்தருக்கு முன்னதாக இதனை விசுவாசித்து, நம் முழு இருதயத்துடனே அவருக்கு நன்றி கூற வேண்டும்.

கர்த்தர் நமக்கு வழங்கிய இரட்சிப்பின் வரத்தையும் அன்பையும் விசுவாசத்தின் மூலம் நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் என விரும்புகிறார். நீரினாலும் ஆவியாலும் வந்து அவர் நிறைவேற்றிய ஞானஸ்நானத்தின் இரட்சிப்பையும் சிலுவையின் இரத்தத்தையும் நம்மிருதயங்களில் நாம் விசுவாசிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நம் தேவனின் அன்பை உங்கள் இருதயங்களினால் விசுவாசிப்பீர்கள் என்றும், அவற்றை அவரின் இரட்சிப்பின் வரமாக ஏற்றுக்கொள்வீர்கள் என்றும் நான் நம்புகிறேன். இதனை நீங்கள் உண்மையாகவே உங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்வீர்களா?

உங்களுக்காக இவ்வழியில் பலியானது யார்?

ஒருமுறை ஒரு சாட்சி கூறும் துண்டு பிரசுரத்தைப் பார்த்தேன், "உனக்காக மரிக்கப்போவது யார்? உன்னை மகிழ்வித்த யாரை இன்று சந்தித்தாய்? இயேசு கிறிஸ்து உனக்காகப் பலியானார். உன்னிருதயம் இதனால் மகிழவில்லையா?" உங்களுடைய பாவங்களைத்

துடைத்துவிட, ஞானஸ்நானம் பெறுவதின் மூலம் உங்கள் பாவங்களைச் சுமந்து, உங்களிடத்திலிருந்து மரிக்கப் போவது யார்? அவனின்/அவளின் அன்பினை உங்களுக்கு காட்ட, எவன்/எவள் தன் இரத்தத்தைச் சிந்தி உங்களுக்காக மரிப்பார்? உங்களால் எப்போதாவது இத்தகைய பலியாக முடியுமா? உங்கள் உறவினர்களா? உங்கள் பிள்ளைகளா? உங்கள் பெற்றேர்களா?

அவர்கள் யாருமே இல்லை! உங்களைப் படைத்தது கர்த்தரே. உங்களைக் பாவங்களிலிருந்து இரட்சிப்பதற்கு, மனித மாமிசத்தில் கர்த்தர் இப்பூமிக்கு வந்து, உங்கள் பாவங்களை தன்மீது ஏற்றுக்கொள்வதற்கு ஞானஸ்நானம் பெற்று, உங்கள் பாவங்களுக்கான ஆக்கினையைப் பெற்றுக் கொள்ள சிலுவையில் அறையப் பட்டு தன் இரத்தத்தைச் சிந்தியதின் மூலம் உங்கள் இரட்சகராகி, மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து, உங்களுக்கு இரட்சிப்பின் வரத்தையும் அன்பையும் வரமாகக் கொடுத்ததுடன், இன்னமும் வாழ்ந்து கொன்டிருக்கிறார். இந்த அன்பின் இரட்சிப்பை நீங்கள் உங்கள் இருதயங்களில் ஏற்றுக் கொள்ள விரும்புகிறீர்களா? நீங்கள் உங்கள் இருதயங்களில் விசுவாசிப்பீர்களா?

விசுவாசிக்கும் யாவரும் தேவனைப் பெற்றுக் கொள்வார்கள், அவரைப் பெற்றுக் கொள்ளும் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள். அவரைப் பெற்றுக் கொள்ளுதல் என்பதின் பொருள், கிறிஸ்து நமக்கு கொடுத்த அன்பின் இரட்சிப்பை நீங்கள் பெற்றுக் கொள்வதாகும். பாவமன்னிப்பும், பாவங்களைச் சுமத்தலும், பாவங்களின் ஆக்கினையைப் பெற்றுக் கொள்வதுமாகிய இந்த அன்பை நமது இருதயங்களினால் விசுவாசிப்பதின் மூலம், நாம் இரட்சிக்கப் பட்டோம். இந்த விசுவாசமே அன்பின் இரட்சிப்பை பெற்றுக் கொள்கிறது.

ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள அனைத்துப் பொருட்களும் இயேசு கிறிஸ்துவை அறிவிக்கின்றன. கர்த்தர்

நம்மிடமிருந்து எந்தப் பலியையும் எதிர்பார்க்கவில்லை. அவர் நமக்குக் கொடுத்த அன்பின் இரட்சிப்பை நாம் நம் இருதயங்களில் விசுவாசிக்க வேண்டும் என்பதைத் தவிர வேறெதையும் அவர் நம்மிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. "உனக்கு அன்பின் இரட்சிப்பைக் கொடுப்பதற்கு, நான் இந்த பூமிக்கு வந்தேன். பழைய ஏற்பாட்டு பலி காணிக்கைகளைப் போல, கை வைத்தலின் மூலம் உன் எல்லாப் பாவங்களையும் என் மீது சுமத்துவதை நான் ஏற்றுக் கொண்டேன், மேலும் இந்த பலி காணிக்கையைப் போல, உன் பாவத்திற்கான கொடூரமான ஆக்கினையை நான் பெற்றுக்கொண்டேன். இப்படித்தான் நான் உன்னை இரட்சித்தேன்." ஆசரிப்புக் கூடாரத்தின் மூலமாக கர்த்தர் நம்மிடம் கூறுவது இதுவேயாகும்.

இப்படியாக கர்த்தர் நம்மை இரட்சித்திருந்த போதிலும், அவர் நம்மை இத்தனையாய் நேசித்திருந்த போதிலும், நிறைவான அன்பு இரட்சிப்பின் வரத்தை நமக்கு கொடுத்திருந்தாலும், விசுவாசிக்காவிட்டால், இவற்றினால் எப்பயனும் இல்லை. உங்கள் உணவு உப்புள்ளதாக இருக்கவேண்டுமானால், உப்புச் சட்டியிலிருந்து சிறிது உப்பை முதலில் எடுக்க வேண்டும்; அது போலவே, நீங்கள் உங்கள் இருதயங்களினால் விசுவாசிக்கவில்லை எனில் நிறைவான அன்பு இரட்சிப்பும் முற்றிலுமாக பயனற்றதாகிவிடும். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை நமது இருதயத்தால் நன்றி கூறி, அதன நம் சொந்த இருதயங்களில் ஏற்றுக் கொள்ளாவிட்டால், இயேசுவின் பலி ஒன்றுமில்லாததாகி விடுகிறது.

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கொடுத்த பலியையும் அன்பையும் நீங்களி அறிந்து, அதன உங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொண்டு அதற்காக அவருக்கு நன்றி கூறும் போது மட்டுமே இரட்சிப்பு உங்களுடையதாகிறது. கிறிஸ்துவின் நிறைவான அன்பு இரட்சிப்பை உங்கள் இருதயங்களில் ஏற்றுக் கொள்ளாமல்,

அதனைத் தலையினால் மட்டுமே புரிந்து கொண்டீர்களானால், அதனால் எப்பயனும் இல்லை.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் சத்தியத்தைப் பற்றிக் கொள்வது மட்டுமே

உங்கள் குழம்பு எவ்வளவு நேரம் அடுப்பில் கொதித்துக் கொண்டிருகிறது என்பது பொருட்டல்ல: நான் அதில் சிறிது உப்பை அதில் போடவேண்டும் என்று மனதால் எண்ணியும், அதனை நீங்கள் செய்யாதிருந்தால், உங்கள் குழம்பில் உப்பிருக்காது. சர்வாங்க தகன பலிபீடத்தில் பலி காணிக்கைகள் கொடுக்கப்பட்டதைப் போல, நம் தேவன் ஞானஸ்நானம் பெற்று பலியானதின் மூலம் உங்கள் பாவங்களிலிருந்து நம் தேவன் உங்களை இரட்சித்தார் என்று உங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொண்டு அதனை விசுவாசிக்கும் போது மட்டுமே உங்களால் இரட்சிக்கப் படமுடியும். கர்த்தர் இரட்சிப்பின் வரத்தை உங்களுக்குக் கொடுக்கும்போது, நன்றியுடனே அதனைப் பெற்றுக் கொள்ளுங்கள். நான் உங்களை முற்றிலுமாக இரட்சித்தேன் என நம் தேவன் நம்மிடம் கூறும்போது, அதனை விசுவாசிப்பது மட்டுமே நமக்கு இலகுவான ஒன்றாயிருக்கும்.

உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கர்த்தரின் அன்பு வேண்டா விருப்புடன் கொடுக்கப்பட்டதா? அப்படி இல்லை! நம் தேவனின் அன்பு நிறைவானது. வேறு வார்த்தைகளில் கூறினால், உங்களையும் என்னையும் நம் தேவன் முற்றிலுமாகவும் நிறைவாகவும் இரட்சித்தார். அவர் தன்னுடைய ஞானஸ்நானத்தினால் நம்முடைய பாவங்களைத் தன் மீது நிறைவாக ஏற்றுக்கொண்டதினாலும், நிச்சயமாக அவர் சிலுவையில் மரித்ததினாலும், இந்த அன்பின் மீது எச் சந்தேகமும்

நமக்கிருக்க முடியாது. அவர் நம்மை நிறைவாக இரட்சித்து அன்பின் இரட்சிப்பை நமக்கு வரமாக வழங்கினார். கர்த்தர் நமக்குக் கொடுத்த இந்த இரட்சிப்பின் வரத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மிகவும் விலை உயர்ந்த மானிக்கக் கற்களால் செய்யப் பட்ட மிகவும் விலை உயர்ந்த ஒரு அணிகலனை நான் வைத்திருக்கிறேன் என எண்ணவும். அதனை நான் உங்களுக்கு ஒரு பரிசாக கொடுத்தால், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அதனை உடனே பெற்றுக்கொள்வது தான். அப்படியாவதில்லையா? அதனை உங்களானதாக்குக் கொள்வது எத்தனை எளிதானதும் இலகுவானதுமாயிருக்கிறது? இந்த அணிகலன் உங்களுடையதாவதற்கு நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் அதன் அருகே சென்று அதனைப் பற்றிக் கொள்வது மட்டுமே. அவ்வளவு தான்.

நீங்கள் உங்கள் இருதயத்தைத் திறந்து, ஞானஸ்நானத்தின் மூலமாக எல்லாப் பாவங்களையும் இயேசுவின் மீது சுமத்திவிட்டீர்களென்றால், உங்கள் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்று, உங்கள் வெறுமையான இருதயங்களை சத்தியத்தால் நிரப்ப முடியும். இரட்சிப்பை இலவசமாக கொடுப்பதாக இப்படியாகத் தான் தேவன் கூறினார். அருகே சென்று அதனைப் பற்றிக் கொள்வதினால் இரட்சிப்பு உங்களுடையதாகும்.

எதுவும் கொடுக்காமலேயே, இரட்சிப்பை நமது பரிசாக நாம் பெற்றோம். யார் இதனைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறார்களோ அவர்களுக்கு அதனைக் கொடுக்க கர்த்தர் விருப்பமுள்ளவராய் இருப்பதினாலே, நன்றியுடனே அதனைப் பெற்றுக் கொண்டவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். மகிழ்ச்சியுடனே கூட கர்த்தரின் அன்பைப் பெற்றுக் கொண்டவர்கள் அவருடைய அன்பினாலே தரிப்பிக்கப்படுவர், இப்படி பெற்றுக்

கொண்டவர்கள், அதனைப் பெற்றுக் கொண்டதாலே, அதனைக் கொடுத்தவரின் இருதயத்தைப் பிரியப்படுத்துபவர்களாக இருக்கிறார்கள். இந்த வரத்தை பெற்றுக் கொள்வதே சரியான செயல். உங்களுக்கு கர்த்தர் கொடுத்த நிறைவான அன்பின் இரட்சிப்பை நீங்கள் பெற்றுக் கொள்ளும்போது, இந்த உண்மையான இரட்சிப்பின் வரம் உங்களுடையதாகும். ஆனால் இதனை உங்கள் இருதயங்களினால் ஏற்றுக்கொள்ளவில்லை எனில், நீங்கள் எத்தனைக் கடினமாக முயற்சித்தாலும், இரட்சிப்பின் வரம் உங்களுடையதாகவே முடியாது.

நானும் கூட இந்த இரட்சிப்பின் வரத்தைப் பெற்றுள்ளேன். "ஆ! இவ்வழியில் நம் தேவன் ஞானஸ்நானம் பெற்றார். இப்படியாக அவர் ஞானஸ்நானம் பெற்றதினால், நம் எல்லாப் பாவங்களையும் அவர் சுமந்தார். எனக்காகவே அவர் இறுதியாக ஞானஸ்நானம் பெற்றார். தேவனே, உமக்கு நன்றிகள்!" இதைத் தான் நான் விசுவாசிக்கிறேன். ஆகவே, இப்போது, நான் பாவமற்றவன். நிறைவான பாவமன்னிப்பை நான் பெற்றுக் கொண்டேன். நீங்களும் கூட இந்த நிறைவான பாவமன்னிப்பை பெற்றுக் இரட்சிக்கப் பட விரும்பினால், இப்போதே ஏற்றுக் கொள்ளுங்கள்.

அப்போதிலிருந்தே இந்த இரட்சிப்பின் வரத்தைக் குறித்து எப்பொழுதும் எண்ணிக் கொண்டிருக்கிறேன். இப்போதும் கூட அதனைக் குறித்து மீண்டுமாக எண்ணும் போது, எனது இரட்சிப்பிற்காக தேவனுக்கு நன்றி கூறுவதைத் தவிர வேறு எதையும் என்னால் செய்யமுடியாது என உணர்கிறேன். இந்த இரட்சிப்பின் அன்பு என் இருதயத்தில் இருப்பதினால், அதனை என்னால் மறக்கவே முடியாது. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் அறிவிக்கப்பட்ட நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை ஏற்றுக்கொண்டு அதனால் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டபோது, நான்

கர்த்தருக்கு பெரிதும் நன்றியுடையவனாகினேன். இப்படி நடந்து பல ஆண்டுகளாகியும், இன்றும் கூட, அதே நன்றியுடைய இருதயம் என்னிடமிருக்கிறது, அதனை ஒவ்வொரு நாளும் புதுப்பித்துக் கொள்கிறேன்.

என்னை இரட்சிப்பதற்காக இயேசு நிச்சயமாக பூமிக்கு வந்து, எனது பாவங்களை எல்லாம் தன்மீது ஏற்றுக்கொள்வதற்காக ஞானஸ்நானம் பெற்று, எனது பாவங்களுக்கான தண்டயாக சிலுவையில் மரித்தார். இவை எல்லாம் எனக்காக செய்யப்பட்டது என்பதை அறிந்தபோது, உடனடியாக அவற்றை ஏற்றுக் கொண்டு, எனதாக்கினேன். என்னுடைய வாழ்க்கையில் நான் செய்தவைகளில் இதுவே மிகவும் சிறப்பானதும், அறிவானதும், மிக நேர்தியானதுமான செயல் என்று நான் அறிந்தேன். ஆகவே, தேவன் உண்மையாகவே என்னை நேசிக்கிறார் என்பதையும், என்னை அவர் கவனித்துக் கொள்கிறார் எனவும், விசுவாசிப்பதுடன், அவர் என்னை நேசித்தமையினாலேயே, இவை அனைத்தையும் எனக்குச் செய்தார் என விசுவாசித்து அதனை அறிக்கைச் செய்கிறேன். "தேவனே, நான் என் எல்லா நன்றிகளையும் உமக்கே கொடுக்கிறேன். நீர் என்னை நேசித்ததைப் போல, நானும் உம்மை நேசிக்கிறேன்." இப்படியாக அறிக்கைச் செய்வது மறுபடியும் பிறந்தவர்களுக்கு பெரிதான மகிழ்ச்சியை அளிக்கிறது.

நம்முடைய தேவனின் அன்பு என்றென்றும் மாறாதது, அவர் மீதான நம்முடைய அன்பும் என்றென்றும் மாறாதது. சில சமயங்களில், நாம் துன்புறும் போதும், கஷ்டங்களைச் சந்திக்கும்போதும், நம் இருதயங்கள் மோசம் போய், இந்த அன்பை உதறித் தள்ளும் அள்விற்கு போகலாம். நமது வேதனைகள் நம்மை முழுவதுமாக ஆட்கொண்டிருந்தும், நம் அறிவு நம்மைக் கைவிட்டிருந்தும், நம்மால் நினைக்க முடிந்ததெல்லாம் நம்முடைய சொந்த வேதனைகளே என்றிந்தாலும், கர்த்தர் இன்னமும் நம்மைத் தாங்குவதாலே,

நம்முடைய இருதயங்கள் இந்த அன்பை மறக்கவே மறக்காது.

கர்த்தர் நம்மை நித்தியமாக நேசிக்கிறார். நமக்காக நம் தேவன் படைக்கப் பட்டவைகளில் ஒன்றாக வந்தார், ஏனெனில் அவர் தன் மரணம் வரையிலும் கூட நம்மை நேசித்தார். இந்த கர்த்தரின் அன்பை விசுவாசிக்கும் படி உங்களுக்கு நான் கூறுகிறேன். அதனை உங்கள் இருதயங்களில் ஏற்றுக் கொள்ளுங்கள். இதனை இப்போது விசுவாசிக்கிறீர்களா?

இந்த அன்பினாலே, நம்மை நமது பாவங்களிலிருந்து நிறைவாக இரட்சித்தமைக்காக தேவனுக்கு நான் நன்றி கூறுகிறேன். ✉

பிரசங்கம்

10

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

வெண்கலப் பாத்திரத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட விசுவாசம்

< யாத்திராகமம் 30:17-21 >

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: கழுவுகிறதற்கு வெண்கலத்தால் ஒரு தொட்டியையும், வெண்கலத்தால் அதின் பாதத்தையும் உண்டாக்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக. அதனிடத்தில் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள். அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும், கர்த்தருக்குத் தகனத்தைக் கொளுத்தவும் பலிபீடத்தினிடத்தில் ஆராதனைசெய்யவும் சேரும்போதும், அவர்கள் சாகாதபடிக்குத் தண்ணீரினால் தங்களைக் கழுவக்கடவர்கள். அவர்கள் சாகாதபடிக்குத் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்; இது தலைமுறைதோறும் அவனுக்கும் அவன் சந்ததியாருக்கும் நித்திய கட்டளையாயிருக்கும் என்றார்."

ஆசரிப்புக்கூடார பிரகாரத்திலுள்ள வெண்கல பாத்திரம்

பொருள்: வெண்கலத்தினால் தயாரிக்கப்பட்ட இதில் எப்போதும் நீர் நிறைந்திருக்கும்.

ஆவிக்குரிய பொருள்: வெண்கலம் என்பது மனிதகுலத்தின் பாவங்களுக்கான தீர்ப்பைக் குறிக்கிறது. மனிதகுலத்தின் எல்லாப் பாவங்களுக்குமான தீர்ப்பை ஏற்றுக்கொள்வதற்காக, யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவானவர் உலகின் எல்லாப் பாவங்களையும் பெற்றுக்கொண்டார். ஞானஸ்நானத்தின் மூலமாக நம் எல்லாப் பாவங்களும் இயேசுவின் மீது சுமத்தப்பட்டதை விசுவாசிப்பதின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் கழுவி விட முடியும் என்று வெண்கல பாத்திரம் பொருள் படுகிறது.

ஆசரிப்புக்கூடாரத்தினில் ஊழியம் செய்த ஆசாரியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தினுள் செல்லுவதற்கு முன்னதாக வெண்கல பாத்திரத்தில் தம் கைகளையும் கால்களையும் கழுவியதன் மூலமாக மரணத்தைத் தவிர்த்தனர். வெண்கலமானது பாவத்திற்கான தண்டனையைக் குறிக்கிறது, மேலும் அதிலிருந்த நீர் யோவானிடமிருந்து இயேசு பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது, மேலும் இதன் மூலமாக உலகின் எல்லாப் பாவங்களையும் அவர் தன்மீது ஏற்றுக்கொண்டார். வேறு வார்த்தைகளில் கூறினால், இயேசு எல்லாப் பாவங்களையும் தன்மீது சுமத்துவதற்கு அனுமதித்ததையும் அதற்கான தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டதையும் வெண்கலப் பாத்திரம் கூறுகிறது. வெண்கலப் பாத்திரத்தில் உள்ள நீரானது, பழைய ஏற்பாட்டில் ஆசரிப்புக்கூடாரத்தின் இளநீல நிற நூலையும், புதிய ஏற்பாட்டில் யோவானிடமிருந்து இயேசு பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தையும் குறிக்கிறது (மத்தேயு 3:15,

1 பேதுரு 3:21).

ஆகவே வெண்கலப் பாத்திரமானது இயேசுவின் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது, நம்முடைய சொந்தப்பாவங்கள் உட்பட எல்லாப் பாவங்களையும் இயேசு சுமந்தார் எனவும், 2,000 வருடங்களுக்கு முன்னதாக யோவானிடமிருந்து அவர் பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக அவற்றை முற்றிலுமாக கழுவிவிட்டார் எனவும் நம் விசுவாசத்தை நிச்சயிக்கும் இடமாக இது இருக்கிறது.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசித்ததின் மூலமாக மறுபடியும் பிறந்ததின் மூலமாக நீதிமான்களாகிய அநேகர் இவ்வுலகில் இருக்கின்றனர். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் வெளிப்படுத்தப்பட்ட இயேசுவின் செயல்களால் தம்முடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்பட்டன என்பதை விசுவாசித்தமையால் தம் பாவங்களுக்கான மன்னிப்பு பெற்றவர்கள் இவர்களாவர். ஆயினும் கூட, பாவமன்னிப்பு பெற்ற நீதிமான்களும் கூட தம் மாமிசத்தில் குறைபாடுடையவர்களாகவே இருக்கின்றனர், அவர்களால் ஒவ்வொரு நாளும் பாவம் செய்யாதிருக்க முடியாது, இத்தகையப் பாவங்கள் சொந்தப் பாவங்கள் என அழைக்கப்படுகின்றன. நீதிமான்களின் சொந்தப் பாவங்களுக்குத் தீர்வான பாவமன்னிப்பு வரும் இடமாக இந்த வெண்கலப் பாத்திரம் இருக்கிறது. நீதிமான்கள் எப்போதெல்லாம் தம் சொந்தப் பாவங்களைச் செய்கிறார்களோ, அப்போது அவர்கள் இந்த ஆசரிப்புக்கூடாரத்தின் வெண்கலப் பாத்திரம் இருக்கும் இடத்திற்கு வந்து, தம் கைகளையும் கால்களையும் கழுவுவர், இதன் மூலமாக இயேசு தம்முடைய சொந்தப் பாவங்களை மன்னித்து விட்டார் என்பதினாலும், எழுதப்பட்ட கர்த்தரின் வார்த்தையை விசுவாசிப்பதின் மூலமாகவும் உறுதிபடுத்திக்கொள்வர்.

வேதாகமத்தில் சில இடங்களில் கர்த்தரின் வார்த்தையைக் குறிப்பிடவும் நீர் பயன்படுகிறது, ஆனால் இயேசுவின் ஞானஸ்நானம் என்பதே மிக முக்கியமான பொருளாகும். எபேசியர் 5:26 கூறுகிறது, *"தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும்"* மேலும் யோவான் 15:3 கூறுகிறது, *"நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்."* தம்முடைய மாமிசமானது எத்தனை குறைபாடுடையதாக இருந்தாலும், தம் பாவங்களிலிருந்து பாவமன்னிப்பு பெற்ற தூய பரிசுத்தவான்கள், தேவன் தம்முடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்தார் என்பதற்கான அத்தாட்சியைப் பெற்றுக்கொள்வதை வெண்கலப் பாத்திரம் ஏதுவாக்குகிறது.

1 பேதுரு 3:21 மற்றும் 22 ஆகியவை கூறுகின்றன, *"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது; அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது"* இந்த வசனங்களுக்கு முன்னதாக நோவாவின் காலத்திய நீரின் ஆவிக்குரிய பொருளை பேதுரு விளக்கினான். வேறுவார்த்தைகளில் கூறினால், பாவத்தால் கட்டுண்டிருந்த பாவிகளுக்கு, வரபோகிற முதலாம் உலகத்தைக் கழுவக்கூடிய வெள்ளத்தைப் பற்றி எச்சரிக்கைச் செய்தாலும், வெறும் எட்டு பேர் மட்டுமே இரட்சிக்கப்பட்டனர். கர்த்தரின் வார்த்தையை விசுவாசிக்காத அனைவரையும் பெருவெள்ளம் அழித்துபோட்டது. இப்பொழுது, இந்த பெருவெள்ள

நிகழ்விற்கு ஒப்பனையான நீரிற்கு இயேசுவின் ஞானஸ்நானம் ஒத்திருப்பதாக பேதுரு கூறுகிறான். நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்னாலும் பின்னாலும், கர்த்தருக்கு முன்னதாக நம் இரட்சிப்பை உறுதி செய்யும் இடம் இந்த வெண்கலப் பாத்திரமாக இருக்கிறது.

வெண்கலப் பாத்திரத்தின் நீரையும் (இயேசுவின் ஞானஸ்நானம்), வெண்கலத்தையும் (எல்லாப் பாவங்களுக்குமான கர்த்தரின் நியாயதீர்ப்பு), இயேசு அவர்களை பாவங்களிலிருந்து விடுவித்தார் என்ற விசுவாசம் ஆகியவற்றை விசுவாசித்து தம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்கள் கர்த்தருடைய கிருபையால் மூடப்பட்டார்கள். நம்மை நீதிமான்கள் என அறிந்துப்கொள்ளமுடியாத அளவிற்கு நாம் பலவீணமானவர்களாகவும், குறைபாடுடையவர்களாகவும் இருந்தாலும், இயேசுவின் ஞானஸ்நானத்தின் மீதும் (நீரினால் நம் பாவங்களைச் சுமத்தல்), அவருடைய சிலுவை மரணத்தின் மீதும் (பாவத்திற்கான தண்டனை, வெண்கலம்), நம்முடைய விசுவாசத்தை மீண்டும் அர்ப்பணிப்பதன் மூலம் நாம் நீதிமான்களே என்பதை மீண்டும் உறுதி செய்துகொள்ளமுடியும். நம்மை நம் எல்லாப் பாவங்களிலிருந்தும் ஏற்கனவே இரட்சித்தாயிற்று என்ற கர்த்தரின் வார்த்தையை விசுவாசித்து நாம் இரட்சிக்கப்பட்டதால், நாம் பாவங்களற்ற நீதிமான்களாயினோம்.

யோவானிடமிருந்து இயேசு பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தின் மூலமாக நமது எல்லாப் பாவங்களையும் அவர் ஏற்றுக்கொண்டார் எனவும், நம்முடைய இடத்திலிருந்து பாவங்களின் தண்டனையை அடைய நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தினார் என்பதையும், இதன் மூலம் அவர் நம்மை முற்றிலுமாக இரட்சித்தார் என்பதையும், நாம் விசுவாசிக்கும் கர்த்தரின்

வார்த்தை நம்மிடம் கூறுகிறது. ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்தில் கர்த்தர் வெண்கலப் பாத்திரத்தை வைத்தார், இதன் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிக்கப்பட்டவர்களாகிய நாம் எத்தகைய சூழ்நிலையில் இருந்தாலும், நம் இரட்சிப்பை உறுதிபடுத்திக் கொள்ள முடியும்.

உங்களுடைய அனைத்து சொந்தப் பாவங்களிலிருந்தும் நித்தியமாக விடுவிக்கப்பட்டீர்களா?

கடைசி இராபோஜனத்தின் போது, பஸ்காவின் அப்பத்தையும், திராட்சை ரசத்தையும் தன் சீடர்களுடன் பகிர்ந்து கொண்ட பிறகு, இயேசு தான் சிலுவையில் மரிப்பதற்கு முன்னதாக, பேதுருவினதும் மற்ற சீடர்களினதும் கால்களை நீரினால் கழுவ விரும்பினார். யோவானிடமிருந்து தான் பெற்றுக் கொண்ட ஞானஸ்நானத்தின் மூலமாக, தம்முடைய சீடர்களின் அனைத்துப் பாவங்களையும் தன்மீது ஏற்றுக் கொண்டதினால், வெண்கலப் பாத்திரத்தின் சத்தியத்தை அவர்களுக்கு கூற விரும்பினார். ஞானஸ்நானம் பெற்ற பிறகு, தேவாட்டுக்குட்டியாகிய அவர், ஒரு மரத்தில் தொங்க விடப் படுவதின் மூலமாக பாவக் கிரயத்தை (மரணம்) செலுத்தவிருப்பதை அவர்களுக்கு போதிக்க விரும்பினார். இயேசுவின் பன்னிரு சீடர்களும், அவரை விசுவாசித்தப் பிறகும் கூட பாவமுள்ளவர்களாகவே விளங்கினாலும், அவர்கள் மீண்டுமாக பாவிகளாகவேயில்லை.

அதுபோலவே, சத்தியத்தின் வார்த்தை சாட்சி கூறியவற்றை இயேசு அவர்களின் கால்களைக் கழுவியது உறுதிபடுத்தியது - அச்சத்தியம் இயேசு ஏற்கனவே அவர்களின் எல்லாப் பாவங்களையும் கழுவி விட்டார்

என்பதாகும். இதனால் தான் இயேசுவே இரட்சகர் என்று உலக மக்களுக்கு அவரின் சீடர்களால் போதிக்க முடிந்தது, மேலும் நிறைவேற்றப்பட்ட நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியையும் அவர்களால் கூற முடிந்தது (எபிரெயர் 10:1-20). சத்தியத்தை விசுவாசித்து தம் எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிக்கப்பட்ட நீதிமான்கள் இயேசுவின் ஞானஸ்நானத்தை நினைவு கூறுவதற்கு வெண்கலப் பாத்திரம் அனுமதிக்கிறது. கர்த்தர் தாமே அவர்களை விடுதலையாக்கினார் என்ற இரட்சிப்பின் உறுதியையும் அது அளிக்கிறது.

வெண்கலப் பாத்திரத்தின் அளவு வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை

ஆசரிப்புக் கூடாரத்தின் அனைத்துப் பொருட்களின் அளவுகளும் எழுதப்பட்டிருந்தாலும், வெண்கலப் பாத்திரத்தின் அளவு கூறப்படவில்லை. இயேசு தன்னுடைய ஞானஸ்நானத்தினால் தன் மீது ஏற்றுக்கொண்ட அவரின் அன்பானது, எல்லையற்றதும் பெரிதுமானதும் ஆகும் என இது சுட்டிக்காட்டுகிறது. அளவிட முடியாத கர்த்தரின் பெரிதான அன்பை வெண்கலப் பாத்திரம் அறிவிக்கிறது. மனிதர்கள் தாம் வாழும் காலம் முழுவதும் பாவம் செய்து கொண்டேயிருப்பார்கள். யோவானிடமிருந்து தான் பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக உலகின் எல்லாப் பாவங்களையும் தன்மீது ஏற்றுக்கொண்ட்தாலும், சிலுவையில் அறையப்பட்டு அங்கே தனது இரத்தத்தைச் சிந்தியதாலும், நம் எல்லாப் பாவங்களையும் நித்தியமாக அவர் துடைத்தார்.

ஆசரிப்புக் கூடாரத்தில் ஊழியம் செய்த பெண்களின் வெண்கல கண்ணாடிகளை உருக்கியதன் மூலம் இந்த வெண்கலப் பாத்திரம் செய்யப்பட்டது (யாத்திராகமம் 38:8).

கர்த்தரின் வார்த்தை இரட்சிப்பின் ஒளியை பாவிகளின் மீது பாய்ச்சி அவர்களின் பாவங்களை அகற்றுகிறது என்பது இதன் பொருளாகும். கர்த்தர் வெண்கலப் பாத்திரத்தைத் தயாரித்தமையினால், அவராலே நமது பாவங்களையெல்லாம் கழுவ முடியும் என்பதை நாம் அறிய வேண்டும். இந்த சத்தியத்தின் வார்த்தையானது மக்களின் இருதயங்களின் ஆழத்திலிருந்த பாவங்களின் மீது ஒளி வீசி, அவர்களின் பாவங்களை நித்தியமாக கழுவி, பாவமன்னிப்பை அவர்களுக்கு வழங்கி, இதன் மூலமாக அவர்களை நீதிமான்களாக்கிற்று. வேறு வார்த்தைகளில் கூறினால், கர்த்தரின் வார்த்தையின் மூலமாக இயேசு கிறிஸ்து பாவிகளாகிய நம்மை முற்றிலுமாக இரட்சித்தார் என்ற சத்தியத்தை தெளிவாக சாட்சி கூறும் பணியை இந்த வெண்கலப் பாத்திரம் செய்கிறது.

வெண்கலப் பாத்திரமானது வெண்கலத்தினால் செய்யப்பட்டது

வெண்கலப் பாத்திரத்தை தயாரிக்க பயன்படுத்தப்பட்ட வெண்கலத்தின் முக்கியத்துவம் உங்களுக்குத் தெரியுமா? நாம் சந்திக்க வேண்டியிருந்த பாவத்திற்கான தண்டனையையே வெண்கலப் பாத்திரம் குறிப்பிடுகிறது. இன்னும் தெளிவாகக் கூறினால், இயேசு தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம் எல்லாப் பாவங்களையும் சுமந்து, நமக்காக நியாயம் தீர்க்கப்பட்டார் என்பதை அது நமக்கு கூறுகிறது. நம்முடையப் பாவங்களுக்காக தண்டிக்கப்பட வேண்டியது நாமே, ஆனால்நம் பாவங்கள் எல்லாம் கழுவப்பட்டு தூய்மைப் படுத்தப்பட்டது என்பதை வெண்கலப் பாத்திரத்தின் நீர் மூலமாக உறுதிப்படுத்தலாம். இதனை விசுவாசிப்பவர்கள் தம் விசுவாசத்தின் மூலமாக நியாயம் தீர்க்கப்பட்டவர்களாவர், ஆகவே மற்றும் ஒரு

ஆக்கினையை அவர்கள் அடைவதில்லை.

"இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் இயேசு உங்கள் பாவங்களை சுத்திகரித்து உங்களை உங்கள் பாவங்களிலிருந்து முற்றிலுமாக இரட்சித்தார்" என்பதை நீரால் நிரப்பப்பட்ட வெண்கலப் பாத்திரம் கூறுகிறது. வேறு வார்த்தைகளில் கூறினால், பாவமன்னிப்பு பெற்றதினால் நீதிமான்களாகியவர்களுக்கு தம்முடைய பாவங்கள் கழுவப்பட்டு இரட்சிப்படைந்தோம் என்பதற்கான அத்தாட்சி இந்த வெண்கலப் பாத்திரமேயாகும்.

சர்வாங்க தகன பலிபீடத்தின் பொருள் பாவத்திற்கான தீர்ப்பு என்பதாகும், அதே சமயத்தில் ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள பொருட்களுடன் காணப்படும் வெண்கலப் பாத்திரமானது இள்நீல நிற நூலுடன் தொடர்புடையது, இது புதிய ஏற்பாட்டில் இயேசு தன் ஞானஸ்நானத்தின் மூலம் நம் பாவங்களை ஏற்றுக்கொண்டதை நம்மிடம் கூறுகிறது.

ஆசரிப்புக் கூடார பிரகார வாசலைத் திறந்து அதனூடாகச் சென்று, சர்வாங்க தகன பலிபீடத்தைக் கடந்து, அதன் பிறகு காணப்படும் வெண்கலப் பாத்திரத்தையும் கடந்து செல்வதின் மூலம் மட்டுமே பரிசுத்த ஸ்தலத்திற்குள் நம்மால் பிரவேசிக்க முடியும். சர்வாங்க தகன பலிபீடத்தையும் வெண்கலப் பாத்திரத்தையும் தம் விசுவாசத்தால் கடந்தவர்களால் மட்டுமே கர்த்தர் சஞ்சரிக்கும் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்க முடியும். ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப் பிரகாரத்தில் இருக்கும் வெண்கலப் பாத்திரத்தின் சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலம் பாவமன்னிப்பு பெற்றவர்களால் மட்டுமே பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியும்.

ஒருவர் அவனின்/அவளின் சொந்த பலத்தினால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முயன்றால், பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அக்கினி வந்து அவனை எரிக்கும். ஆரோனின் மகன்களுக்கு கூட இதிலிருந்து விதிவிலக்கு

இல்லை, இதன் பலனாக அவர்களில் சிலர் மரித்ததை நம்மால் காணமுடியும். (லேவியராகமம் 10:1-2). பாவங்களையும் அதற்கான ஆக்கினைகளையும் கொண்டிருக்கும் கர்த்தரின் நீதியை அறியாதவர்களும் இந்த சத்தியத்தை அலட்சியம் செய்பவர்களும் அவர்களின் பாவங்களின் நிமித்தம் மரண ஆக்கினையைப் பெறுவர். அவருடைய மிகச்சிறந்த விரிவான இரட்சிப்பை விசுவாசித்து பாவங்களிலிருந்து இரட்சிக்கப் படுவதற்கு பதிலாக தம்முடைய சொந்த சிந்தனைகளை விசுவாசித்து கர்த்தரின் ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முயலும் போது அக்கினியின் ஆக்கினையை நிச்சயமாய் சந்திப்பார்கள். தவிர்க்க முடியாத பாவத்திற்கான தண்டனை இருப்பதினாலே, இவற்றின் விளைவுகளெல்லாம் நரகம் மட்டுமே.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் இயேசு நமது இரட்சிப்பை நிறவேற்றியதால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நம்மால் பிரவேசிக்க முடியும். இந்த சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலமாக மட்டுமே நம் எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மால் இரட்சிக்கப் பட முடியும். படைத்தலுக்கு முன்பே மனிதகுலத்தை பாவங்களிலிருந்த்து இரட்சிக்க கர்த்தர் திட்டமிட்டார், மேலும் இளநீலம் (இயேசுவின் ஞானஸ்நானம்), இரத்தாம்பரம் (கர்த்தர் மனிதாகினார்), சிகப்புநூல் (இயேசுவின் சிலுவை மரணம்) ஆகியவற்றால் இந்த சத்தியத்தை விளக்கமாக வேதாகமத்தின் மூலம் அறியச் செய்தார். இந்த திட்டத்தின்படியாக, இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகியவற்றால் அறிவிக்கப்பட்ட இயேசுவின் செயல்களின் மூலமாக எல்லாப் பாவிகளையும் அவர்களின் பாவங்களிலிருந்தும் மீறுதல்களிலிருந்தும் இரட்சித்தார்.

1 யோவான் 5:4 கூறுகிறது, *"தேவனால்*

பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" இதனைத் தொடரும் வசனம் 10 கூறுகிறது, *"தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்"* இந்த இரட்சிப்பின் சாட்சியம் என்ன? நீர், இரத்தம், ஆவி ஆகிய தேவகுமாரனின் மீதுள்ள நமது விசுவாசத்திற்கான சாட்சியினால் நமக்கு கிட்டிய இரட்சிப்பே சத்தியத்தின் நற்செய்தியாகும் (1 யோவான் 5:6-8). வேறு வார்த்தைகளில் கூறினால், நாம் விசுவாசிக்கும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியே, கர்த்தர் நம் பாவங்களையெல்லாம் கழுவி நம்மைத் தம் பிள்ளைகளாக்கினார் என்பதற்கான அத்தாட்சியாகும். நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிக்கப்படவும், பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கவும், கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஜீவ அப்பத்தை சாப்பிடவும், அவருடைய கிருபையினால் வாழவும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பது மட்டுமே ஒரே வழியாகும். நம்முடைய பாவங்களைக் கழுவக் கூடிய நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்பதின் மூலமாக நாம் இரட்சிக்கப் பட்டு, கர்த்தரின் ஆலயத்துடன் இணைவதின் மூலமாக நம் விசுவாச வாழ்க்கைய வாழ வேண்டும்.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் சத்தியத்தினால் மட்டுமே கர்த்தருடைய ஆலயத்தில் கர்த்தரின் வார்த்தையால் போஷிக்கப்படவும், அதனுடனே ஐக்கியமாகவும், கர்த்தரால் கேட்கப்படும் ஜெபங்களை ஜெபிக்கும் நீதிமான்களாகவும் மாற முடியும். நாம் இந்தச் சத்தியத்தைக் கேட்கும் போது, இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகியவற்றின் மீது விசுவாசமுள்ள நீதிமான்களாகுவதுடன், அவருடைய சன்னிதானத்தில் கர்த்தருடைய கிருபையினால் தரிக்கப் பட்டவர்களாகவும் வாழ முடியும். கர்த்தரின் மக்களால் மட்டுமே வாழக்கூடிய விசுவாச வாழ்க்கையானது நீர், இரத்தம், ஆவி

ஆகியவைகளை விசுவாசிப்பதின் மூலம் மட்டுமே வருகிறது. இயேசுவின் ஞானஸ்நானத்தையும், அவரின் சிலுவை இரத்தத்தையும், இயேசுவே கர்த்தர் என்பதையும் நம் இருதயங்களால் விசுவாசிப்பதின் மூலமாக மட்டுமே நம் எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிக்கப் படமுடியும். கர்த்தரின் ஆலயத்தில் வாழும்படி உங்களை எதுவாக்கியது இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மீதுள்ள விசுவாசம் மட்டுமே.

"நாம் செய்ய வேண்டியதெல்லாம் இயேசுவை விசுவாசிப்பது மட்டுமே; ஏன் இப்படி குழப்பிக் கொள்ளவேண்டும்? பயனற்ற உரையாடல்களில் நம் நேரத்தை வீனடிக்க வேண்டாம், எது பொருத்தமாக தோன்றுகிறதோ அதனை விசுவாசிப்போமாக," என்று அனேக மக்கள் கூறுகின்றனர். அத்தகைய மக்களுக்கு நாம் கிறிஸ்தவத்தின் குழப்பவாதிகளாக மட்டுமே இருக்கிறோம், ஆனால் பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ளாமல் இயேசுவை ஒருவர் விசுவாசித்தால் அவன்/அவள் நித்திய ஆக்கினையை அடைவர் என்பது மிகவும் தெளிவாகும். நற்செய்தியாகிய நீர் இரத்தம் மற்றும் ஆவி ஆகியவையை முழுமையாக விசுவாசிக்காத விசுவாசம் தவறானதும் கள்ள விசுவாசமுமாகும். குறிப்பாக, இது இயேசுவை தம் இரட்சகராக விசுவாசிக்காதமைக்கு ஒத்த ஒன்றாகும்.

ஒரு புதிய நபரிடம் எனக்கு ஒரு காரியம் ஆக வேண்டுமானால், நாம் கண்களை மூடிக்கொண்டு "நான் உங்களை நம்புகிறேன்" என்று கூறினால், "இந்த நபர் உண்மையாகவே என்னை நம்புகிறான்" என்று என்னை நம்பி, அதனைக் குறித்து மகிழ்ச்சி அடையமாட்டாரா? இதற்கு மாறாக, "உங்களுக்கு என்னைத் தெரியுமா? உங்களை எனக்குத் தெரியாதே" என்று அந்நபர் கூறுவார். "ஆயினும் கூட உங்களை நான் நம்புகிறேன்" என்று மீண்டுமாக அவரிடம் கூறியவாறு அவருடைய கண்களை

நேர்மையுடன் நோக்கியவாறு, அவரை ஆசுவாசப் படுத்த முயன்றால், அதனால் அவர் மகிழ்ச்சி அடைவாரா? நான் முதுகெலும்பில்லாதவனென்றும், அவருடைய தயவை நான் வேண்டியிருக்கிறேன் என்றும் அவருடைய மனதை நான் படித்துக் கொண்டிருக்கிறேன் எனவும், அவர் என்னைக் காண்பார்.

ஆகவே கண்மூடித்தனமாக விசுவாசித்துக் கொண்டிருக்கும் மக்களிடம் கர்த்தரும் பிரியப்பட மாட்டார். "நான் கர்த்தரை விசுவாசிக்கிறேன். பாவிகளின் இரட்சகராக இயேசுவை நான் விசுவாசிக்கிறேன்" என்று நாம் கூறும்போது, பாவிகளின் மீறுதல்களையெல்லாம் இயேசு எப்படி சுமந்து தீர்த்தார் என்பதை அறிந்து விசுவாசிப்பதின் மூலம் மட்டுமே இதனை நாம் அறிவிக்க வேண்டும். நாம் ஒன்றுமேயில்லாதவர்களைப் போல், எந்த யோசனையும் இல்லாமல் குருட்டுத்தனமாக அவரை விசுவாசித்தால் நம்மால் இரட்சிப்படையவே முடியாது. நம்முடைய பாவங்களை இயேசு எப்படி மறையச் செய்தார் என்பதை முதலில் தெளிவாக அறிந்து கொள்வதின் மூலமே நம்மால் இரட்சிக்கப் படமுடியும். நாம் ஒருவரை விசுவாசிக்கிறோம் எனக் கூறும் போது, நாம் நம் முழு நம்பிக்கையையும் இவர்கள் மீது வைக்கிறோம், ஏனெனில் அவனை/அவளை நாம் முற்றிலுமாக அறிந்திருக்கிறோம், இதனால் நாம் இந்நபரை நம்பத்தகுந்தவராக கருதுகிறோம். நாம் நன்கு அறியாத ஒருவரின் மீது நம்பிக்கை வைப்பது நாம் பொய் கூறுகிறோம் என்பதையும், வஞ்சிக்கப்படுவதற்கு நாம் தகுதியானவர்கள் என்பதை மட்டுமே காட்டுகிறது. எப்படியிருந்தாலும், இயேசுவை நம் இரட்சகராக விசுவாசிக்கும்போது, இயேசு நமது எல்லாப் பாவங்களையும் எப்படி மன்னித்தார் என்பதை தெளிவாக நாம் அறிந்திருக்க வேண்டும். இதன் மூலம் மட்டுமே கடைசி நிமிடத்தில் நாம் நம் தேவனால் கைவிடப்படமாட்டோம் என்பதுடன் மறுபடியும் பிறந்த கர்த்தரின் பிள்ளைகளாக

பரலோகத்திற்குள் நம்மால் பிரவேசிக்க முடியும்.

நம்மை பரலோகத்திற்கு வழி நடத்தக் கூடிய உண்மையான விசுவாசம் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் ஆகியவற்றின் மீதுள்ள விசுவாசமே. வேறு வார்த்தைகளில் கூறினால், உண்மையான விசுவாசம் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியே ஆகும், அது நம்மை நீரினாலும் (இயேசுவின் ஞானஸ்நானம்), இரத்தத்தினாலும் (இயேசுவின் மரணம்), மற்றும் பரிசுத்த ஆவியானவராலும் (இயேசுவே கர்த்தர்) இரட்சித்தது. நம்மை இரட்சித்த தேவனின் கிருபை எத்தனை பெரியது என நாம் அறிந்து அதனை விசுவாசிக்க வேண்டும், ஏனெனில் இந்த சத்தியத்தை விசுவாசிப்பது நம் இரட்சிப்பை நோக்கி நம்மை வழிநடத்துகிறது.

ஒரு நபருக்கு சத்தியம் தெரியுமா தெரியாதா என்பதை வைத்து அந்நபரின் விசுவாசம் முழுமையானதா இல்லையா என்பதை நாம் கண்டு கொள்ளலாம். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை உங்கள் இருதயங்களால் அறிந்து விசுவாசிக்கும் போது மட்டுமே உங்களால் இயேசுவை உங்கள் இரட்சகராக விசுவாசிக்க முடியும். நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலம் நமக்கு பாவமன்னிப்பை வழங்கிய நம் இரட்சகராகிய இயேசுவின் மீதுள்ள இந்த நம்பிக்கையே, நம்மை நம் எல்லாப் பாவங்களிலுமிருந்து இரட்சித்த விசுவாசமாகும்.

நம் பாவங்களை மன்னித்தமைக்கான இரட்சிப்பின் உறுதிப்பாடு வெண்கலப் பாத்திரமேயாகும்

வெண்கலப் பாத்திரமானது நீரால் நிரப்பப் பட்டிருந்தது. பரிசுத்த ஸ்தலத்திற்கு நேர் எதிராக இது வைக்கப் பட்டிருந்தது. நாம் பாவமன்னிப்பு பெற்றோம் என்பதையும்,

அதனை நம் விசுவாசத்தால் பெற்றுக்கொண்டோம் என்ற உறுதிப்பாட்டையும் பெற்றுக் கொள்ளக்கூடிய இடமாக இந்த வெண்கலப் பாத்திரம் இருக்கிறது. விசுவாசிகளின் எல்லாப் பாவங்களையும் கர்த்தர் சுத்தப்படுத்தினார் என்பதற்கான உறுதிப்பாடு இதுவேயாகும். பரிசுத்த ஸ்தலத்தில் ஊழியம் செய்யும் ஆசாரியர்கள் தம் கைகளும் கால்களும் அழுக்கடையும் போது எப்படி அவற்றைக் கழுவினார்களோ, அது போலவே, பாவமன்னிப்பு பெற்றவர்களும் கூட, தாம் பாவம் செய்யும் போதெல்லாம் தம் பாவங்களை அங்கே கழுவினர், கர்த்தரின் வார்த்தையின் மூலமாக, அவர்களை அழுக்காக்கிய பாவங்களை எல்லாம் இயேசு ஏற்கனவே துடைத்து விட்டார் என்பதையும், அதற்கான பாவ நிவர்த்தியானார் என்பதையும், நம்மிடத்திலிருந்து ஆக்கினைக்குள்ளானார் எனபதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் இப்பூமியில் வாழுவதால் தொர்ந்து பாவம் செய்வதை தவிர்க்க இயலாதவர்களாக இருப்பதினால் நாம் அழிந்து போகிறோம். நம்மை அழித்துப் போடும் இப்பாவங்கள் அனைத்தையும் சுத்திகரிக்கக் கூடியது எது? ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து, பாவிகளை இரட்சிப்பதற்காக 2000 ஆண்டுகளுக்கு முன்னதாக மனித சரீரத்தில் இப்பூமிக்கு வந்து, தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலம் அவர்களின் எல்லாப் பாவங்களையும் தன் மீது சுமந்து, தனது இரத்தத்தை சிலுவையில் சிந்தி, பாவிகளை அவர்களின் எல்லாப் பாவங்களிலிருந்தும் மன்னித்தார் என்பதை விசுவாசிப்பதின் மூலமாக அவற்றை நாம் கழுவுகிறோம். இயேசு ஞானஸ்நானம் பெற்றதினால் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொண்டார் என விசுவாசிக்கும் போது மட்டுமே, நம்மால் பாவமன்னிப்பைப் பெற்று அவற்றைக் கழுவ முடியும். வேறு வார்த்தைகளில் கூறினால், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல்

ஆகியவற்றால் நமது எல்லாப் பாவங்களையும் கர்த்தர் ஏற்கனவே கழுவி விட்டார் என்ற சத்தியத்தை விசுவாசிக்கும் போது மட்டுமே நம்முடைய சொந்தப் பாவங்களை கழுவ முடியும்.

வெண்கலப் பாத்திரத்தின் சத்தியத்தை அறிந்து விசுவாசிக்கும் விசுவாசம் நமக்குத் தேவை

வெண்கலப் பாத்திரத்தில் விசுவாசமில்லாமல், கர்த்தர் சஞ்சரிக்கும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நம்மால் பிரவேசிக்கவே முடியாது. நம்முடைய செய்கைகளால் எப்போதுமே நிறைவானவையாக இருக்க முடியாது. நாம் குறைபாடுடையவர்களாய் இருப்பதினாலே, அவ்வப்போது பாவம் செய்கிறோம். கர்த்தரின் வார்த்தை நிறைவானது என்பதினாலே, கர்த்தர் நமக்களித்த இரட்சிப்பானது நிறைவானதாகும். கர்த்தர் நமக்களித்த நிறைவான இரட்சிப்பால் நம் குறைபாடுகளையெல்லாம் கழுவியதால், மிகவும் துனிவுடனே நம்மால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியும். வெண்கலப் பாத்திரத்தின் மூலமாக செல்லாதவர்களால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க முடியாது. இயேசுவானவர் 2,000 வருடங்களுக்கு முன் வந்தாரெனவும், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலமாக உலகின் எல்லாப் பாவங்களையும் அவர் துடைத்தார் எனவும், அது இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூலால் தீர்க்கதரிசனம் கூறப்பட்ட இரத்தமும் ஆவியுமாக இருக்கிறது என்பதையும் உள்ளடக்கிய சத்தியத்தின் மீதுள்ள நமது விசுவாசத்தினாலே, பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க நாம் தகுதி பெற்றவர்களானோம். தேவன் நம் எல்லாப் பாவங்களையும் ஏற்கனவே துடைத்து விட்டார் எனவும்,

அவர் நம்மை பாவமற்றவர்களாக்கினார் எனவும் விசுவாசிக்காமல் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நம்மால் பிரவேசிக்க முடியாது.

இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல் ஆகியவற்றை விசுவாசிக்காமல் கர்த்தரின் ஆலயத்திற்குள் எப்படிச் செல்ல முடியாதோ அப்படியே நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிக்காவிட்டால், அவருடைய ஆலயத்தின் அவருடைய வார்த்தையை விசுவாசித்து கர்த்தரின் கிருபாசனத்தின் அருகில் செல்லும் ஆசீர்வாதத்தைப் பெறமுடியாது, மேலும் அவரிடம் ஜெபிப்பதும் அவருடைய கிருபையைப் பெறுவதும், அவருடைய ஊழியர்களுடனும் பரிசுத்தவான்களுடனும் வாழ்வதும் முடியாது. இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல் ஆகியவற்றால் கர்த்தர் நம்மை இரட்சித்தார் என நாம் விசுவாசித்த பிறகு மட்டுமே, நம்முடைய உடன் விசுவாசிகளுடன் கர்த்தருடைய ஆலயத்தில், அவருடைய வார்த்தையைக் கேட்டு, அவரிடம் ஜெபிப்பதான ஒரு வாழ்வை நம்மால் வாழமுடியும்.

பாவத்திலிருந்து நாம் இரட்சிக்கப் பட்டோம் என்பதற்கான இறுதி அத்தாட்சி வெண்கலப் பாத்திரமாகும். வெண்கலப் பாத்திரத்தை பரிசுத்த ஸ்தலத்திற்கு நேர் முன்னால் வைத்ததுடன் அத்னை நீரினாலும் நிரப்பினார், இதன் மூலம் பாவமன்னிப்பு நற்செய்தியை விசுவாசிப்பவர்களின் நம்பிக்கையை உறுதிப் படுத்துகிறார். விசுவாசிக்கும் நீதிமான்களின் அழிந்து போன மனசாட்சியை இந்த வெண்கலப் பாத்திரம் சுத்தப்படுத்துகிறது.

1 யோவான் 2:1-2 ஐ வாசிப்போமாக, *"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்.*

நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்." ஆமேன்.

நாம் பாவம் செய்தால், நமக்காக பரிந்து பேச நீதிபரராகிய இயேசு இருக்கிறார். நீதிமான்களின் அழிந்து போன இருதயங்களை நீரினாலே இயேசு கழுவுகிறார். தான் சிலுவையில் அறையப் படும் நாளுக்கு முந்திய நாளில், இராப்போஜனத்தின் போது இயேசு எல்லா சீடர்களையும் அங்கே அழைத்து, ஒரு பாத்திரத்தில் நீரை ஊற்றி, அவர்களின் கால்களைக் கழுவத் தொடங்கினார். "நான் ஞானஸ்நானம் பெற்றபோது, நான் உங்கள் எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டேன், அதில் நீங்கள் எதிர்காலத்தில் செய்யப்போகும் பாவங்களும் கூட அடங்கும், மேலும் இதற்காக உங்களுடைய இடத்திலிருந்து சிலுவையின் தண்டனையை நான் பெறுவேன். நான் உங்கள் எதிர்காலப் பாவங்களையும் கூட ஏற்றுக்கொண்டு அதனைத் துடைக்கவும் செய்தேன். நான் உங்களின் இரட்சகருமாகினேன்."

இதனைத் தமது சீடர்களுக்குத் தெரிவிப்பதற்காக, பஸ்கா பண்டிகையின் கடைசி இராப்போஜனத்தின் போது இயேசு தமது சீடர்களின் கால்களைக் கழுவினார். இயேசுவினால் தன் கால்கள் கழுவப்படுவதை விரும்பாத பேதுருவிடம் இயேசு கூறினார், *"இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்" (யோவான் 13:7).* நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசிப்போருக்கு நிறைவான இரட்சகராக இயேசு விரும்பினார். இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல் ஆகியவற்றை விசுவாசிப்போர்களுக்கு இயேசு நித்திய இரட்சகரானார்.

வெண்கலப் பாத்திரத்தின் பயன்கள்

ஆசாரியர்கள் கர்த்தருக்கு காணிக்கைகளை ஆசரிப்புக் கூடாரத்தில் வழங்குகையில் தம்மீது ஏற்படும் அழுக்குகளை எல்லாம் கழுவி விடுவதற்கு வெண்கலப் பாத்திரம் உபயோகிக்கப் பட்டது. இஸ்ரவேல் மக்களின் பாவங்களைக் கழுவி நிவர்த்தி செய்யும் பலிகாணிக்கைளை ஆசாரியர்கள் கொல்லும் போதும், அதன் இரத்தத்தை சேகரிக்கும் போதும், கர்த்தருக்கு கொடுப்பதற்காக அதனைத் துண்டங்களாக வெட்டும் போதும் அவர்கள் மீது படும் துகள்களை கழுவுவதற்கு இது தேவைப் பட்டது. காணிக்கைகளைச் செலுத்தும் போது ஆசாரியர்கள் அழுக்கடைந்ததினால், அதனைக் கழுவி விடுவதற்கு நீர் தேவைப் பட்டது, இந்த அழுக்கு அனைத்தையும் கழுவி விடு இடமாக வெண்கலப் பாத்திரம் இருந்தது.

ஆவிக்குரியபடியோ அல்லது மாமிசத்தின்படியோ, நாம் பாவங்களைச் செய்யும்போதும், கர்த்தருடைய கட்டளைகளை உடைத்து அதன் மூலம் அழிவைச் சம்பாதிக்கும் போதும், இந்த வெண்கலப் பாத்திரத்தின் நீரினால் நம் அழுக்கை நீக்கவேண்டும். ஆசாரியர்களின் சரீரத்தில் அசுத்தமானவைகளோ அல்லது அழுக்கோ படும்போது, அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், தம் அழுக்குப் பட்ட இடங்களை நீரினால் கழுவ வேண்டும்.

இதுபோல, கர்த்தரை விசுவாசிக்கும் யாராயிருந்தாலும், அழுக்கோ அல்லது அசுத்தமானவைகளோ படும்போது, அத்தகைய அழுக்குகளை நீக்குவதற்கு வெண்கலப் பாத்திரத்தின் நீர் உபயோகிக்கப் பட்டது. சுருக்கமாகக் கூறினால், மறுபடியும் பிறந்தவர்களின் அழுக்கை நீக்குவதற்காக வெண்கலப் பாத்திரத்தின் நீர் உபயோகிக்கப் பட்டது. வெண்கலப் பாத்திரத்தில் கர்த்தரின் கிருபை நிரம்பி இருக்கிறது. வெண்கலப் பாத்திரத்தின் பொருளானது, விசுவாசிக்கலாமா இல்லையா என

தேர்ந்தெடுக்கப்படக்கூடிய ஒன்றல்ல, ஆனால் இயேசுவை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் இது அத்தியாவசியமானது.

ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள அனைத்துப் பொருட்களுக்கும் கர்த்தர் அவைகளின் அளவுகளைக் குறிப்பிட்டார், அவற்றின் உயரம் எவ்வளவு இருக்கவேண்டும், அதன் நீளம், அகலம் ஆகிய அனைத்தையும் அவர் கூறினார். ஆனால் வெண்கலப் பாத்திரத்தின் அளவை அவர் குறிப்பிடவில்லை. இத் வெண்கலப் பாத்திரத்தின் தனித் தன்மை ஆகும். அன்றாடம் பாவங்கள் செய்து கொண்டிருக்கும் நம்மீது மேசியா காட்டிய அளவில்லாத அன்பு இதுவாகும். இந்த மேசியாவின் அன்பில் அவருடைய ஞானஸ்நானம் காணப்படுகிறது, அது கைவைத்தலின் மூலம் நம் எல்லாப் பாவங்களையும் கழுவி விடுவதைப் போலிருக்கிறது. ஆசாரியர்கள் தம் ஊழியத்தைச் செய்யும்போது அதிக அளவு அழுக்கடைவதால், அதனைக் கழுவி விடுவதற்கு அதிக அளவு நீரும் தேவைப் பட்டது, இதனால் வெண்கலப் பாத்திரத்தில் எப்போதும் நீர் நிறைந்து இருக்கவேண்டும். ஆகவே வெண்கலப் பாத்திரம் அளவு இந்த தேவையினைப் பொருத்தது. வெண்கலப் பாத்திரம் வெண்கலத்தினால் தயாரிக்கப் பட்டதாகையால், ஆசாரியர்கள் அதன் நீரினால் கழுவும்போது, அவர்கள் பாவத்திற்கான ஆக்கினையைக் குறித்து சிந்தித்தார்கள்.

ஆசரிப்புக் கூடாரத்தில் ஊழியம் செய்த ஆசாரியரிகள் தம்முடைய கைகளிலும் கால்களிலும் படிந்த அசுத்தங்களை வெண்கலப் பாத்திரத்தின் நீரினால் கழுவவேண்டியிருந்தது. வெண்கலம் கர்த்தரின் நியாயத்தீர்ப்பைக் குறிப்பிட்டால், நீரானது பாவத்தைக் கழுவுவதைக் குறிக்கிறது. எபிரெயர் 10:22 கூறுகிறது. *"சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும்"* மேலும் தீத்து 3:5 கூறுகிறது *"மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த*

ஆவியினுடைய புதிதாக்குதலினாலும்" இந்த வசனத்தைப் போன்ற பல புதிய ஏற்பாட்டின் வார்த்தைகள் ஞானஸ்நான நீரினால் அழுக்கைக் கழுவுவதைக் குறித்து நம்மிடம் அனேக விஷயங்களைத் தெரிவிக்கின்றன.

ஆசாரியர்களால் தம் வாழ்வில் சேர்ந்த அழுக்குகளை வெண்கலப் பாத்திரத்தின் நீரால் கழுவக்கூடும் என்றால், இந்நாளின் மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்களாகிய நாம் நம் அன்றாட வாழ்வில் செய்யும் பாவங்களை எல்லாம் இயேசுவின் ஞானஸ்நானத்தை விசுவாசிப்பதின் மூலம் கழுவலாம். மேசியா உலகத்திற்கு வந்ததையும் யோவானிடமிருந்து அவர் பெற்ற ஞானஸ்நானத்தின் மூலம் உலகின் எல்லாப் பாவங்களையும் அவர் கழுவினார் என்பதையும் பழைய ஏற்பாட்டின் வெண்கலப் பாத்திர நீர் நமக்கு கூறுகிறது.

இஸ்ரவேல் மக்கள் செய்த பாவங்கள் மட்டுமின்றி, மனித வரலாற்றில் உள்ள மனிதகுலம் முழுவதும் செய்த பாவங்களை இயேசு யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தின் மூலம் தன் மீது ஏற்றுக்கொண்டார் என்று வேதாகத்தின் மூலமாக கர்த்தர் நம்மிடம் கூறுகிறார். யோவானால் இயேசு ஞானஸ்நானம் பெறும்போது அவர் மத்தேயு 3:15 இல் யோவானிடம் கூறினார், *"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது"* மனிதகுலத்தின் பிரதிநிதியாகிய யோவானிடமிருந்து கைவைத்தலைப் போன்ற தன் ஞானஸ்நானத்தைப் பெற்றதன் மூலம், மனிதகுலத்தின் அனைத்துப் பாவங்களையும் இயேசு தம் சரீரத்தில் பெற்றுக் கொண்டார்.

ஆகவே, ஞானஸ்நானத்தின் மூலமாக மேசியாவாகிய இயேசுவின் மீது நம்முடைய எல்லாப் பாவங்களும் சுமத்தப்பட்டது என்ற செய்தியை விசுவாசிப்பதின் மூலம், நம் இருதயங்களில் இருக்கும் அழுக்குகளை நம்மால் கழுவி விட முடியும். இந்த சத்தியத்தை விசுவாசித்ததின் மூலமாக

நம் பாவங்களை எல்லாம் ஏற்கனவே இயேசுவின் மீது சுமத்தியதால், தேவ குமாரர் உலகின் பாவங்களை எல்லாம் சிலுவைக்கு எடுத்துச் சென்று, சிலுவையில் அறையப் பட்டு, எல்லா மனிதர்களுக்குமாக களங்கமில்லாத பலிமிருகம் ஆகியதுடன், நம் எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை விடுவித்தார் என்பதை விசுவாசிக்க வேண்டியது மட்டுமே நாம் செய்ய வேண்டிய ஒன்றாகும். இதனை உங்கள் இருதயத்தில் விசுவாசிக்கிறீர்களா? மேசியா நம் சொந்த பலி காணிக்கையாகினார் என்று உண்மையாகவே விசுவாசிப்போர் நித்தியமாக இரட்சிக்கப் பட்டனர்.

இயேசுவின் ஞானஸ்நானத்தை விசுவாசிப்பதின் மூலமும் அன்றாடப் பாவங்களின் பிரச்சினையத் தீர்க்கலாம்

நம்முடைய சொந்தப் பாவங்களை எப்படி கழுவுவது என்று வேதாகமம் நம்மிடம் கூறிகிறதா? பழைய ஏற்பாட்டில் ஆசாரியர்கள் தம்முடைய அழுக்குகளை வெண்கலப் பாத்திரத்தின் நீரினால் கழுவியதைப் போல, புதிய ஏற்பாட்டில், யோவானிடம் இருந்து இயேசு பெற்ற ஞானஸ்நானத்தின் மூலம் உலகின் எல்லாப் பாவங்களையும் தன் மீது எடுத்துக் கொண்டு கர்த்தரின் நீதியை நிறவேற்றினார் என்பதை விசுவாசிப்பதின் மூலம் நம் சொந்தப் பாவங்களுக்கான பாவமன்னிப்பை நாம் பெற்றுக்கொள்ளலாம். முடிவில் இந்த சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலமாக எல்லாப் பாவங்களும் கழுவப் பட்டன.

இஸ்ரவேல் மக்கள் கர்த்தருக்கு பலி காணிக்கையைக் கொடுப்பதற்காக, செம்மறியாடு அல்லது வெள்ளாடு போன்ற களங்கமில்லாத பலி காணிக்கையை ஆசரிப்புக் கூடாரத்திற்கு எதுத்து வந்து, அதன் தலை மீது தம்

கைகளை வைத்து தம் பாவங்களை அறிக்கைச் செய்து அவற்றை அதன் மீது செலுத்தி, அப் பாவங்களை ஏற்றுக்கொண்ட அப் பலி காணிக்கையை கொன்றனர். அவர்கள் அதன் கழுத்தை அறுத்து அதன் இரத்தத்தைச் சேகரித்து சர்வாங்க தகன பலிபீடத்திலுள்ள கொம்புகளிலும், மீதியைத் தரையிலும் கொட்டினர் (லேவியராகமம் 4). பாவ நிவர்த்தி நாளின் கொடுக்கப்பட்ட இந்த பலி காணிக்கையின் மூலம் ஒரு வருடத்தின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன (லேவியராகமம் 16). முடிவில் பார்த்தால், பழைய ஏற்பாட்டின் அதே பலியிடும் முறையின் மூலமாக நாம் பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்கிறோம் - அதாவது, நம்முடைய பாவங்களைக் கழுவுவதற்காக வந்த மேசியாவின் ஞானஸ்நானத்தையும் சிலுவை இரத்தத்தையும் விசுவாசிப்பதின் மூலமாக பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறோம்.

பழைய ஏற்பாட்டின் கைவைக்கும் முறையானது புதிய ஏற்பாட்டில் இயேசு பெற்ற ஞானஸ்நானத்தைப் போன்றது. யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானம், மற்றும் சிலுவையின் இரத்தத்தின் மூலமாக நம் மேசியா நம் பாவங்களை ஏற்றுக்கொண்டு அவற்றைக் கழுவினார். மேசியாவின் ஞானஸ்நானத்தின் மூலமும் அவரின் சிலுவை இரத்தத்தின் மூலமும் கர்த்தர் நம்மை நம் எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சித்திருக்கும் போது, பாவ மன்னிப்பைப் பெறுவதற்கு நாம் இன்னமும் என்ன செய்யவேண்டும்? நம்முடைய பலவீணத்தினாலே நாம் அன்றாடம் நம் வாழ்க்கையில் பாவம் செய்தாலும் கூட நீராலும் இரத்தத்தாலும் வந்த இயேசுவால் இப் பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டன என்பதை நாம் நினைவில் வைத்திருப்பதுடன் விசுவாசிக்கவும் வேண்டும். நாம் கர்த்தரை விசுவாசித்தாலும் கூட, நாம் குறைபாடுடையவர்களாய் இருப்பதினாலே, நாம்

இன்னமும் பலவீணத்திலும் மீறுதல்களிலும் விழுந்து போகிறோம். ஆனால் இவை யாவற்றையும் அறிந்த கர்த்தர், மேசியாவை இப் பூமிக்கு அனுப்பி, மனிதகுலத்தின் எல்லாப் பாவங்களையும் அவரின் ஞானஸ்நானத்தின் மூலம் சுமக்கச் செய்து, அவரை பலியாக்கியதின் மூலம் நம்மை இரட்சித்தார்.

ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தில் சர்வாங்க தகன பலிபீடத்தையும் வெண்கலப் பாத்திரத்தையும் வைத்ததின் மூலமாக, கர்த்தரின் வீடாகிய அவருடை ஆலயத்திற்குள் நாம் செல்லும் முன் நாம் அன்றாடம் செய்யும் பாவங்களைக் கழுவும்படிச் செய்தார். அன்றாடம் மனந்திரும்பி ஜெபிப்பதன் மூலம் நம் சொந்தப் பாவங்களைக் கழுவ வேண்டும் என்பது இதன் பொருள் அல்ல. இதற்கு மாறாக, மேசியாவின் ஞானஸ்நானம் மற்றும் அவருடைய சிலுவை இரத்தம் ஆகியவற்றில் உள்ள நமது விசுவாசம் நம் எல்லாப் பாவங்களையும் கழுவி விட்டது. நீதிமான்கள் இயேசுவை விசுவாசித்த பிறகு, தவறுகளையும், பாவங்களையும், அக்கிரமங்களையும் செய்யும் போது, தேவனின் வெண்கலப் பாத்திரமாகிய மேசியாவின் ஞானஸ்நானத்தை விசுவாசித்து தம் எல்லாப் பாவங்களையும் கழுவ வேண்டும்.

இயேசு பாவங்களைச் சுமந்ததையும், எல்லாப் பாவங்களுக்குமாக அவர் நியாயம் தீர்க்கப்பட்டதையும் ஒன்றாக நினைத்து, அவற்றை ஒரே பொட்டலமாக கட்டும் வேலையை அனேக மக்கள் செய்கிறார்கள். நாம் நம்முடைய பலவீணத்தினால் நம் சொந்தப் பாவங்களை அன்றாடம் செய்வதால். பாவங்களைக் கழுவுவதையும், பாவத்திற்கான நியாயத்தீர்ப்பையும் இரண்டாக பிரிக்கவேண்டும். யோவானிடமிருந்து இயேசு பெற்ற ஞானஸ்நானம் மற்றும் அவருடைய சிலுவை மரணம் ஆகியவை அவர் தன் மீது நம் எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொள்ளவும், இப்பாவங்களுக்காக நியாயம் தீர்க்கப்படவும், இவற்றின்

மூலமாக் நம்மை இரட்சிக்கவும் ஆகும். இந்த நம்பிக்கையின் மூலமாக நம் பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பை ஒரேதரமாக நம்மால் பெற்றுக் கொள்ள முடியும். மேசியாவின் ஞானஸ்நானத்தை விசுவாசிப்பதின் மூலமாக நாம் அன்றாடம் செய்யும் பாவங்களை நாம் தீர்க்கவேண்டும். இந்த இரண்டு விஷயங்களையும் ஒன்றாகச் சேர்ப்பதின் மூலமாக, அதாவது ஞானஸ்நானத்தையும் சிலுவையையும் ஒன்றாகச் சேர்ப்பதின் மூலமாக, நிறைவான இரட்சிப்பு நிறைவேற்றப்படுகிறது. நிறைவான பாவமன்னிப்பைக் குறித்த சத்தியம் இதுவேயாகும். நம்முடைய பாவங்களுக்கான தீர்வைப் பொறுத்தவரையில், இயேசுவின் ஞானஸ்நானத்தையும் அவரின் சிலுவையையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்து விசுவாசிக்க வேண்டும், என்பதை இதுவரை நாம் கண்டோம்.

ஆசரிப்புக் கூடாரத்தில் ஆசாரியர்கள் பலி மிருகங்களைக் கொன்றபோது, தெளிக்கும் இரத்தத்தினாலும், மாமிசத் துகள்களாலும் அவர்கள் அழுக்கடைந்தார்கள். அவர்கள் எத்தனை அழுக்கானவர்கள் என்பதை நம்மால் நினைத்தும் பார்க்க முடியாது. ஆசாரியர்கள் இந்த அழுக்கை கழுவ வேண்டும், ஆனால் ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தில் இந்த வெண்கலப் பாத்திரம் இல்லையென்றால், அவர்களால் அப்படிச் செய்திருக்க முடியாது. வருடாந்திர பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்ட தலைமை ஆசாரியானாலும் சரி, சாதாரன ஆசரியனானாலும் சரி, அவர்கள் மீதுள்ள அழுக்குகளைக் வெண்கலப் பாத்திரத்தில் உள்ள நீரால் நேரடியாக கழுவி விடா விட்டால், தன் மீதுள்ள அழுக்குகளுடன் வாழ்வதைத் தவிர்க்க முடியாது.

தலைமை ஆசாரியனின் மீது எல்லா வகையான அழுக்குகள் இருந்தாலும் கூட, ஆசரிப்புக் கூடாரத்தின்

பிரகாரத்தில் வெண்கலப் பாத்திரம் இருந்ததால், அவனால் அதனைக் கழுவ முடிந்தது. ஒரு வருடம் செய்த எல்லாப் பாவங்களிலிருந்தும் ஒரு ஆசாரியன் மன்னிக்கப்பட்டிருந்தும், அன்றாடப் பாவங்களை இப்படியாக கழுவுவதின் மூலமே இந் நபர் சுத்திகரிக்கப்படுவார். தனக்கு காணிக்கைச் செலுத்திய ஆசாரியர்கள் வெண்கலப் பாத்திரத்தில் இப்படியாகத் தம் அழுக்குகளைக் கழுவ வேண்டும் என்று கர்த்தர் நியமித்திருந்தார். இப்பொழுது கர்த்தர் ஏன் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தில் வெண்கலப் பாத்திரத்தை வைத்தார் என்பதை நம்மால் அறிய முடிகிறது. இந்த வெண்கலப் பாத்திரம் ஏன் சர்வாங்க தகன பலிபீடத்திற்கும் தேவன் இருக்கும் ஆலயத்திற்கும் இடையில் வைக்கப்பட்டிருந்தது என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

வெண்கலப் பாத்திரம் நமக்கேன் தேவைப்படுகிறது?

வெண்கலப் பாத்திரத்தில் அடங்கியுள்ள சத்தியம் யோவான் 13 இல் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. பஸ்கா பண்டிகையின் போது தனது சீடர்களுடன் கடைசி இராப்போஜனத்தை முடித்து விட்டு, அவர்களின் கால்களைக் கழுவி விடும் போது பேதுருவின் முறை வந்தது. இயேசு அவனுடைய காலைக் கழுவும் நேரம் வந்தபோது, அவற்றைக் கழுவும் படியாக அவன் கால்களை வெளியே நீட்டுமாறு அவனிடம் கூறினார். ஆயினும் பேதுரு அவர் வேண்டுகேளை நிராகரித்தான், "நான் உம் கால்களைக் கழுவ வேண்டியதாயிருக்க, தேவனாகிய நீர் என் கால்களைக் கழுவலாமா?"

ஒரு ஆசிரியர் தன் சீடரின் கால்களைக் கழுவுவது சரியானதாக இருக்காது என பேதுரு எண்ணியதே இந்த

நிராகரிப்புக்கு காரணமாகும். "நான் எப்படி என் ஆசிரியரை என் கால்களைக் கழுவும் படி கூறமுடியும்? என்னால் முடியாது."

பேதுரு தொடர்ந்து இயேசுவின் செயலை மறுத்துக் கொண்டேயிருந்தான். அப்போது இயேசு பேதுருவிடம் பேசியது மிகவும் முக்கியமானதாகும்.

"நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்" (யோவான் 13:7). இயேசு கீழ்க்கண்ட பொருள்வரும் படி பேசினார். "நான் உன் கால்களைக் கழுவுவதன் முக்கியத்தை இப்போது நீ அறியமாட்டாய். ஆனால் உன் சொந்தப் பாவங்களைக் தீர்ப்பதற்கான திறவுகோல் இதுவேயாகும். நீ இப்போதிலிருந்து அனேக சொந்தப் பாவங்களைச் செய்வாய், ஆனால் உன் எதிர்காலப் பாவங்களையும் கூட நான் ஏற்கனவே என் மீது ஏற்றுக் கொண்டுள்ளேன், மேலும் இந்த பாவங்களினால், நான் என் இரத்தத்தை சிலுவையில் சிந்த வேண்டும். ஆகவே உன்னுடைய எதிர்காலப்பாவங்கள் உட்பட எல்லாப் பாவங்களையும் பொறுப்பேற்றுக் கொண்ட மேசியா நான் என்பதை நீ அறிந்து விசுவாசிக்க வேண்டும்."

பேதுருவின் மனதில், மேசிய தனது கால்களைக் கழுவி விடுவது சரியானதாக தோன்றவில்லை, இதனால் தான் அவன் தொடர்ந்து மறுத்துக் கொண்டேயிருந்தான். *"இதனைக் குறித்து நீ பின்னால் அறிந்து கொள்வாய்"* என்று இயேசு பேதுருவிடம் கூறியவாறு அவனுடைய கால்களைக் கழுவினார்.

"நான் உன் கால்களைக் கழுவுவதின் மூலம் மட்டுமே உனக்கும் எனக்கும் உறவு இருக்க முடியும். நான் உன் கால்களை ஏன் கழுவுகிறேன் என்பதை இப்போது நீ புரிந்து கொள்ள மாட்டாய். ஆனால் நான் சிலுவையில் அறையப்பட்டு பரலோக ராஜ்யத்திற்கு ஏகிய பிறகு, நான் ஏன் உன் கால்களைக் கழுவினேன் என்பதைப் புரிந்துக் கொள்வாய். நான் உன் மேசியாவாக இருப்பதினால், என்

ஞானஸ்நானத்தினால் உன் எதிர்கால பாவங்களையும் கூட நான் சுமக்கிறேன், நான் உன் பாவங்களுக்கான பலி காணிக்கையானபடியால், உன் இரட்சகருமாயினேன்."

நம் தேவன் கூறியதைப் போல, இவற்றைக் குறித்த எவற்றையும் பேதுரு புரிந்துகொள்ளவில்லை, ஆனால் நம் தேவன் பரலோகம் ஏகிய பிறகு, அதனை அவன் தெளிவாக புரிந்து கொண்டான். உண்மையாகப் பார்த்தால், இந்நொடியில் தான் அவனுடைய சொந்தப் பாவங்கள் யாவும் சுத்திகரிக்கப் பட்டன.

"உலகத்தில் என்னால் என் சொந்தப் பாவங்களைச் செய்வதைத் தவிர்க்க முடியாது என்பதால், தேவன் எனது கால்களைக் கழுவினார், இதன் மூலமாக மேசியாவாகிய இயேசு யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக என் சொந்தப் பாவங்களை எல்லாம் தன்மீது சுமந்தார் என்பதை என்னால் விசுவாசிக்கமுடிகிறது! எதிர்காலத்தின் பாவங்களைக் கூட, மேசியாவின் ஞானஸ்நானம் பொறுப்பேற்றுக்கொண்டது! இயேசு தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலம் எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக் கொண்டதுடன், இப்பாவங்களை சிலுவைக்கு எடுத்துச் சென்று, சிலுவையில் அறையப்பட்டதன் மூலமாக எல்லாப் பாவங்களுக்குமான தண்டனையப் பெற்றார்! அவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தபடியால், உண்மையாகவும், முற்றிலுமாகவும் நம் எல்லாப் பாவங்களில் இருந்தும் நம்மை இரட்சித்தார்!"

சிறிது காலத்திற்கு பிறகே, தேவனை அவன் மூன்று முறை மறுதலித்ததற்குப் பிறகே, பேதுரு இதனைக் குறித்து அறிந்து அதனை விசுவாசித்தான். இதனால் தான் அவன் 1 பேதுரு 3:21 இல் கூறினான், *"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும்*

இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" இங்கே 'ஒப்பனையான' என்றச் சொல்லானது "இதற்கு முன்பு நடந்த ஒன்றுடன் தொடர்புடையது, அல்லது முன்பேயிருந்த ஒரு குறியீட்டுடன் அல்லது ஒருவகையுடன் தொடர்புடையது ஆகும், இது புதிய ஏற்பாட்டுடன் பழைய ஏற்பாட்டிற்கு உள்ள ஜோடியாகும்." ஆகவெ, சற்றுமுன் பார்த்த வசனம், இயேசுவின் ஞானஸ்நானமானது பழைய ஏற்பாட்டின் 'நீரிற்கு' ஒப்பனையானது.

பழைய ஏற்பாட்டில், பாவ நிவர்த்தி நாளில், வருடாந்திரப் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெறுவதற்காக பாவ காணிக்கையைச் செலுத்தும்போது, இஸ்ரவேல் மக்களின் பிரதிநிதியாகிய தலைமை ஆசாரியன், தன் கைகளை பலி மிருகத்தின் தலை மீது வைத்து, இஸ்ரவேலர் செய்த பாவங்கள் அனைத்தையும் அறிக்கைச் செய்ததின் மூலமாக, அவற்றை அதின் மீது செலுத்தினான். இந்த கைவைக்கும் முறையானது இயேசுவின் ஞானஸ்நானத்தினைப் போன்றதாகும். பழைய ஏற்பாட்டில், பலி மிருகமானது மரிக்கும் படியாக இரத்தம் சிந்த வேண்டியிருந்தது, ஏனெனில் இஸ்ரவேலர்கள் அனைவரின் பாவங்களையும் அது ஏற்றுக்கொண்டது. அதன் கழுத்து வெட்டப்பட்டு தன் இரத்தம் அனைத்தையும் சிந்தியது. ஆசாரியர்கள் அதன் தோலை உரித்து, துண்டு துண்டாக வெட்டி, அதனை தீயில் எரித்ததின் மூலமாக, அதன் மாமிசத்தைக் கர்த்தருக்கு காணிக்கையாக்கினர்.

பழைய ஏற்பாட்டின் பலியிடும் முறையின் மூலப் பொருளாகிய மேசியா இவ்வுலகிற்கு வந்து, கைவைப்பதின் மூலமாக நம் பாவங்களை ஏற்றுக்கொண்டு, சிலுவையில் மரித்து நம்முடைய இடத்திலிருந்து மரித்தார். இன்று நீங்களும் நானும் இயேசுவின் ஞானஸ்நானத்தினாலும் அவரின் சிலுவை மரணத்தினாலும் பாவமன்னிப்பை முற்றிலுமாக பெற்றுக்

கொண்டோம். நம்முடைய தேவன் பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாகவும், அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலமாகவும், நம்முடைய சொந்தப் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பதை விசுவாசித்து நம் அன்றாட வாழ்க்கையில் செய்யும் பாவங்களை எல்லாம் நாம் கழுவ வேண்டும். இந்த சத்தியத்தை நாம் அறிந்து அதனை விசுவாசிக்க வேண்டும். இயேசு நம் எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக் கொண்டு அவற்றைத் தமது ஞானஸ்நானத்தினால் கழுவினார் என்பதை விசுவாசிக்கும் போது மட்டுமே நம்முடைய சொந்தப் பாவங்களிலிருந்து விடுதலையாக முடியும். வேறு வார்த்தைகளில் கூறினால், நாம் நம்முடைய சொந்தப் பாவங்களைச் செய்யும் போதெல்லாம் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மீதுள்ள நமது விசுவாசத்தை உறுதி படுத்தவேண்டும். இயேசுவால் அவருடைய ஞானஸ்நானத்தினாலும் சிலுவையினாலும் நம்முடைய சொந்தப்பாவங்களும் கூட ஏற்கனவே துடைக்கப் பட்டுவிட்டன என்ற சத்தியத்தை அசை போடுவதின் மூலம், நம் இரட்சிப்பை எந்த நிலையிலும் இழந்து போக மாட்டோம், மேலும் எப்போதெல்லாம் நமது இருதயம் குற்ற உணர்ச்சியால் தாக்கப்படும் போது அதிலிருந்து மீளவும் முடியும்.

தம்முடைய அன்றாட வாழ்விற்கான பாவமன்னிப்பைப் பெற்ற நீதிமான்களால் செய்யப்பட்ட அன்றாடப் பாவங்களையும் கூட இயேசு ஏற்கனவே கழுவி விட்டதால், வெண்கலப் பாத்திரத்தைக் கர்த்தர் அவர்களுக்கு கொடுத்தார், இதனால், நீர், இரத்தம் மற்றும் ஆவியால் வந்த பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்ட இந்த நீதிமான்கள், நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியில் உள்ள விசுவாசத்தின் மூலமாக தம்முடைய சொந்தப் பாவங்களைக் கழுவ முடியும்.

இதனால்தான் ஆசரிப்புக் கூடாரத்தில் ஊழியம் செய்த

பெண்களின் கைக்கண்ணாடிகளை சேகரித்து அவற்றை உருக்கி கர்த்தர் வெண்கலப் பாத்திரத்தைச் செய்தார், ஏனெனில் இக்கண்ணாடிகள் சுய பிரதிபலிப்பை உடையவை. நம்முடைய பலவீணங்களினால் நாம் சொந்தப் பாவங்களைச் செய்து, பாவத்தில் விழும்போது, வெண்கலப் பாத்திரதிடம் நாம் சென்று நம் கைகளையும் கால்களையும் கழுவ வேண்டும். யோவானிடமிருந்து இயேசு பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக மனிதகுலத்தின் எல்லாப் பாவங்களையும் அவர் தன் மீது ஏற்றுக் கொண்டார் என்பதை நமக்கு நினைவு படுத்தும் வேலையை வெண்கலப் பாத்திரம் செய்கிறது. பாவமன்னிப்பு பெற்ற நீதிமான்களுக்கு, இப்பெண்களின் கைக்கண்ணாடிகளை உருக்கி இந்த வெண்கலப் பாத்திரத்தை இஸ்ரவேலர்கள் உருவாக்கும் படி நம் தேவன் செய்து, அதனை நீரினால் நிரப்பி, ஆசாரியர்கள் தம் கைகளிலும் கால்களிலும் உள்ள எல்லா அழுக்குகளையும் இந்த நீரினால் கழுவுவதற்கு அனுமதித்தார் என்ற சத்தியத்தைப் போதிப்பதற்கே இது நிறுவப்பட்டது.

இயேசுவே தேவகுமாரரென்றும், படைப்பாளியென்றும், மனிதகுலத்தின் இரட்சகர் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். மேசியா இவ்வுலகிற்கு மனித மாமிசத்தினால் வந்தார் என்பதையும், யோவானிடமிருந்து அவர் பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் சரீரத்தில் ஏற்றுக் கொண்டார் என்பதையும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும் - அதாவது நாம் இந்த உலகில் சொந்த பாவங்களைச் செய்யும் போது, பலவீணத்தில் விழுந்து போகிறோம், அல்லது பலவீணம் அங்கே வெளிப்படுகிறது, அப்போது நாம், மேசியா மாமிசமாக வந்து, ஞானஸ்நானம் பெற்று, சிலுவையில் அறையப் பட்டதின் மூலம் நம்முடைய எல்லாப் பாவங்களையும் ஏற்கனவே துடைத்துப் போட்டார் என்பதை இன்னமும் அதிகமாக நினைவு கூறவேண்டும்.

நாம் பாவமன்னிப்பைப் பெற்றிருந்தாலும், நாம் இதனை நினைவு கூர்ந்து அதனை விசுவாசிக்கவில்லை என்றால், நாம் நமது சொந்தப் பாவங்களினால் மீண்டும் கட்டப்பட்டு, பழைய பாவ வாழ்க்கைக்கு திரும்பிவிடுவோம். நம்முடைய பலவீணங்களினாலும் குறைபாடுகளினாலும் செய்யும் எல்லாப் பாவங்களும் இயேசுவின் ஞானஸ்நானத்தின் மூலம் அவரின் மீது சுமத்தியாயிற்று என்பதை ஒவ்வொரு நாளும் நாம் நினைவு கூறவேண்டும். யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக மேசியா நம் எல்லாப் பாவங்களையும் தன்மீது ஏற்றுக்கொண்டு, அவற்றைக் கழுவி விட்டார் என்பதை ஒவ்வொரு நாளும் நாம் நினைவு கூர்ந்து, மீண்டுமாக அதனை விசுவாசிக்க வேண்டும்.

யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக உலகின் பாவங்களை இயேசு சுமந்து அவருடைய இரத்தத்தைச் சிந்தினார் என்பதை விசுவாசிக்காமல், இயேசுவை மட்டும் விசுவாசிப்பதினால், இந்த பூமியின் மீதுள்ள எந்த ஒரு மனிதனாலும் பாவ மன்னிப்பை பெற முடியாது. பாவமன்னிப்பை மக்கள் பெற்றிருந்த போதிலும் கூட, தன் சொந்த பாவத்தைச் செய்யாத ஒரு மனிதன் கூட இல்லை. எப்படியாயினும், இயேசுவின் ஞானஸ்நானத்தை விசுவாசிக்காவிட்டால் அனைவரும் பாவம் நிறைந்தவர்களாகவே இருப்பர், இதனால் கர்த்தரின் சித்தம் அனைவரிடமும் நிறைவேறாது. இதனால்தான் கர்த்தர் தன் மகனை நம்மிடம் கொடுத்து, யோவானால் ஞானஸ்நானம் பெறச்செய்து, இரத்தம் சிந்தும்படி சிலுவைக்கு அளித்தார்.

இயேசு கிறிஸ்துவை நமது மேசியாவாக விசுவாசித்தால், யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக நம் எல்லாப் பாவங்களையும் அவர் தன் மீது சுமந்து, உலகின் பாவங்களை எல்லாம் சிலுவைக்குச் சுமந்து சென்று அதன் மூலம் நியாயம் தீர்க்கப்பட்டு, தன் இரத்தத்தைச் சிந்தினார் என்பதை

விசுவாசிக்க வேண்டும். இயேசுவின் ஞானஸ்நானத்தையும் அவரின் இரத்தத்தையும் விசுவாசிப்பதின் மூலம் பாவமன்னிப்பை நாம் பெற்றுக் கொள்ளமுடியும். இந்த சத்தியத்தை விசுவாசிப்பதின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களும் துடைக்கப்பட்டன. நம்முடைய இருதயங்களின் மூலமாக கர்த்தரின் அன்பை விசுவாசித்ததினால் நாம் நீதியை அடைந்தோம். நமது இருதயங்கள் பாவமற்றவையாகவும், சுத்தமானதாகவும், புள்ளிகள் இல்லாததாகவும் இருக்கின்றன. ஆனால் நமது இருதயங்களில் இன்னமும் குறைபாடுகள் இருக்கின்றன. இதனால் தான் இயேசுவின் ஞானஸ்நானத்தை தினந்தோறும் நாம் எண்ணி, இந்த விசுவாசத்தை எப்போதும் நாம் நினைவு கூறவேண்டும். எப்பொழுதெல்லாம் நமது குறைபாடுகளும் பலவீணங்களும் வெளிப்படுகின்றனவே, எப்பொழுதெல்லாம் நமக்குள் தீய சிந்தனைகள் உருவாகி நம்மை அழிக்கின்றனவோ, எபொழுதெல்லாம் நமது செயல்கள் நாசமடைகின்றனவோ, அப்போது யோவானிடமிருந்து இயேசு பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தின் மூலம் இந்த எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொண்டு, நமது இருதயங்களைச் சுத்தமாக்கினார் என்ற இந்த உண்மைய மீண்டும் விசுவாசிக்கும்போது நம் தேவன் பிரியப்படுகிறார்.

எப்பொழுதெல்லாம் பாவம் செய்கிறோமோ, அப்போதெல்லாம் கர்த்தர் முன்னதாக முதலில் அதனை ஒத்துக் கொள்ள வேண்டும். இந்த எல்லாப் பாவங்களும் இயேசுவின் ஞானஸ்நானத்தின் மூலமாக ஏற்கனவே அவருக்குள் செலுத்தப் பட்டுவிட்டது என்பதை மீண்டும் நாம் விசுவாசிக்க வேண்டும். இயேசுவின் ஞானஸ்நான செய்கையால் சுத்திகரிக்கப்பட்ட நாம், இந்த செய்கையை விசுவாசிப்பதின் மூலமாக தம் சொந்தப் பாவங்களை அன்றாடம் கழுவ வேண்டும். இதனால் தான் இயேசு

கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின் மூலமாக நம் எல்லாப் பாவங்களையும் கழுவ முடியும் என்பதை நாம் நினைவில் வைத்திருந்து அதனை விசுவாசிக்கவேண்டும்.

சர்வாங்க தகன பலிபீடத்திற்கும் பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையில் கர்த்தர் ஏன் வெண்கலப் பாத்திரத்தை வைத்தார் என்பதைக் குறித்து இப்போது நாம் பார்த்தோம். சர்வாங்க தகன பலிபீடத்திற்கும் பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையில் கர்த்தர் வெண்கலப் பாத்திரத்தை வைத்ததின் மூலம், அவருக்கு முன்னால் நாம் செல்லும்போது, சுத்தமான சரீரத்துடனும் இருதயத்துடனும் நாம் செல்வோம். இயேசுவின் ஞானஸ்நானத்தினாலும் சிலுவையினாலும் நாம் முழுமையான பாவமன்னிப்பை பெற்று அதன் மூலமாக நாம் நீதிமான்களாகியிருந்தாலும், தெரிந்தோ தெரியாமலோ செய்யும் பாவங்களினால் நம்முடைய இருதயங்கள் அழிந்து போகும் நிலையிலேயே இருக்கின்றன. இதனால் தான் சர்வாங்க தகன பலிபீடத்தைக் கடந்து கர்த்தருக்கு முன்னதாக நாம் செல்லுகையில், வெண்கலப் பாத்திரத்தில் நம் அழுக்கை எல்லாம் கழுவவேண்டும். நம்மிடம் சிறிதளவு பாவம் இருந்தாலும் கூட, நம்மால் கர்த்தருக்கு முன்னால் போகமுடியாது என்ற காரணத்தினாலேயே, சர்வாங்க தகன பலிபீடத்திற்கும், பரிசுத்த ஸ்தலத்திற்கும் இடையே கர்த்தர் வெண்கலப் பாத்திரத்தை வைத்தார், இதனால் வெண்கலப் பாத்திரத்தின் நீரினால் சுத்திகரிக்கப்பட்டவர்களாய் கர்த்தரின் பிரசன்னத்திற்கு பரிசுத்தமாக செல்லலாம்.

எத்தகைய மனசாட்சி கர்த்தருக்கு முன்னதாக சிறந்த மனசாட்சியாகும்?

இயேசுவின் ஞானஸ்நானத்தை *"தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சி"* என்று 1 பேதுரு 3:21 வரையறுக்கிறது.

யோர்தான் நதியில் இயேசு பெற்ற ஞானஸ்நானத்தின் மூலம் நாம் அன்றாடம் செய்யும் பாவங்கள் உட்பட மனிதகுலத்தின் எல்லாப் பாவங்களையும் இயேசு கழுவி விட்டார் என்பதை விசுவாசிக்கும் ஒன்றே "நல்மனச்சாட்சி" ஆகும். நம்முடைய பாவங்களைத் தன் மீது ஏற்றுக்கொள்வதற்காக யோவானால் நம் தேவன் ஞானஸ்நானம் பெற்று இதன் மூலம் நம் பாவங்களைத் தன்னுடைய சரீரத்தினுள் ஏற்றுக்கொண்டார். நம் எல்லாப் பாவங்களையும் இயேசு தன்னுடைய சரீரத்தில் சுமந்தமையால், அவர் சிலுவையில் மரிக்க வேண்டியதாயிற்று. அவர் செய்தவைகளையெல்லாம் நாம் அலட்சியம் செய்து அதனை விசுவாசிக்கவில்லை என்றால் நமது மனச்சாட்சி தீயதாகவே இருக்கும். இதனால் தான் நாம் இயேசுவின் ஞானஸ்நானத்தை விசுவாசிக்க வேண்டும். கர்த்தருக்கு முன்னதாக நம்மிடம் நல் மனச்சாட்சி இருக்க வேண்டும். நம்முடைய மாமிசத்தினால் 100 சதவீதம் நிறைவானவர்களாக வாழமுடியாவிட்டாலும், நமது மனச்சாட்சியிலாவது, கர்த்தரின் பார்வைக்கு முன்னதாக நல் மனச்சாட்சியுடன் இருக்க வேண்டும்.

அரை நூற்றாண்டுகளுக்கு முன்னதாக கொரிய போரின் போது கொரியா எல்லாவற்றையும் இழந்து நின்றபோது, நாட்டின் சீரழிவைச் சமாளிக்க வெளிநாட்டு உதவிகள் குவிந்தன. அனாதைகள் அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றாலும், அப்படி நடப்பதற்கு பதிலாக, குரூரமான மனிதர்கள் அவற்றை தம்முடைய பாக்கெட்டை நோக்கித் திசைத்திருப்பி தம் செல்வத்தைக் கட்டி எழுப்பினர். அவர்களிடம் மனச்சாட்சி இருக்கவில்லை. பால் பவுடர்களையும், மாவையும், போர்வைகளையும், காலணிகளையும், ஆடைகளையும் மற்ற உதவி பொருட்களையும் வெளிநாடுகள் அனுப்பியபோது, ஆடைகளற்ற, பசியுடனான, தேவையுள்ள மக்கள் ஆடைகளை அணிந்து பசியாறுவார்கள் என்று இந்த

உதவியாளர்கள் அவற்றை அனுப்பி வைத்தனர்; சில அரச ஊழியர்களும், சுரண்டல் பேர்வழிகளும், உதவிப் பொருட்களை கொள்ளையடிப்பர் என அவர்களால் எண்ணிக்கூட பார்க்க முடியவில்லை.

நல்மனச்சாட்சியுடைய மக்கள் அவற்றை ஏழைகளுக்கு மத்தியில் நேர்மையுடன் வினியோகித்தனர். வெளிநாட்டு உதவிகளை தமக்குக் கிடைத்த நல்லதொரு வாய்ப்பாக பயன்படுத்தாமல், பசியால் வாடும் ஏழைகளுக்கு நேர்மையுடன் வினியோகித்தவர்கள் கர்த்தருக்கு முன்னதாக வெட்கத்துடன் நிற்கவில்லை, ஏனெனில் அவர்கள் நல்மனச்சாட்சியுடன் வாழ்ந்தனர். ஆனால் அப்படிச் செய்யாதவர்களை அவர்களுடைய சொந்த மனச்சாட்சியே திருடர்கள் என்று சுட்டிக்காட்டியிருக்கும். ஆனால் இந்த திருடர்கள் கூட மனம் திரும்பி, இயேசுவின் ஞானஸ்நானத்தை இந்த நொடியில் விசுவாசித்தாலும் கூட அவர்களின் எல்லாப் பாவங்களையும் கழுவி விடலாம்.

நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொள்ளவும் நம்முடைய சொந்தப் பாவங்களைத் துடைத்துப் போடவும் இயேசு இவ்வுலகிற்கு வந்து ஞானஸ்நானம் பெற்றார். யோவானால் இப்படியாக ஞானஸ்நானம் பெற்று, நம்முடைய எல்லாப் பாவங்களையும் இயேசு ஒரேதரமாகக் கழுவினார். "அப்படியானால், அவருடைய ஞானஸ்நானத்தை விசுவாசிக்கச் செய்யாதபடியாக எது உங்களை இத்தனைக் கர்வமுள்ளவர்களாக்கிற்று? எந்த மனதைரியத்தினால் நீங்கள் விசுவாசிக்காமல் இருக்கிறீர்கள்? அவருடைய ஞானஸ்நானத்தை விசுவாசிக்காமல் ராஜ்யத்திற்குள் உங்களால் நுழையமுடியுமா?" என ஞானஸ்நானத்தை விசுவாசிக்காத அவிசுவாசிகளை நான் கடிந்து கொள்கிறேன்.

நாம் நல்மனச்சாட்சியின் மக்களாக இருக்கவேண்டுமென உண்மையாகவே விரும்பினால்,

இயேசு யோவானிடமிருந்து பெற்ற ஞானஸ்நானத்தின் மூலம் நம் எல்லா சொந்தப் பாவங்களையும் கழுவி விடவேண்டும். இப்படிச் செய்வதற்கு, நம் வாழ்நாள் முழுவதும் நாம் செய்யும் எல்லாப் பாவங்களையும் இயேசு தன்மீது சுமந்தார் என்றும் அதனை அவர் முற்றிலுமாக கழுவி விட்டார் என்றும் நாம் நம் இருதயங்களில் விசுவாசிக்கவேண்டும். இதனால் தான் மேசியாவாகிய இயேசு, சிலுவைக்குச் செல்லுவதற்கு முன் யோவானிடமிருந்து ஞானஸ்நானம் பெற்றார்.

விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணிடம் இயேசு கூறினார், "நானும் உன்னைத் தண்டிக்கப் போவதில்லை. நான் உன்னை நியாயம் தீர்க்கப் போவதும் இல்லை." ஏன்? ஏனெனில், இப்பெண்ணின் விபசார பாவத்தையும் கூட இயேசு ஏற்கனவே தன்மீது சுமந்துக்கொண்டிருந்தார், மேலும் இயேசுவே இந்தப் பாவத்திற்கான நியாயத்தீர்ப்பையும் பெறவேண்டியவர். "உன்னுடைய பாவங்களுக்காக நியாயத்தீர்ப்பைப் பெறப்போவது நானே. ஆகவே என் ஞானஸ்நானத்தை விசுவாசித்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வாயாக. ஆகவே என்னை விசுவாசிப்பதின் மூலம் உன் எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சிக்கப்படுவாயாக. விசுவாசத்தின் மூலமாக பாவத்தின் எல்லாத் தண்டனையிலிருந்தும் இரட்சிக்கப் படுவாயாக, மேலும் உன் எல்லாப் பாவங்களையும் கழுவுவாயாக. உன்னுடைய மனச்சாட்சியில் உள்ள பாவங்களைக் கழுவுவாயாக, மேலும் என்னிடமுள்ள ஜீவத் தண்ணீரைக் பருகுவாயாக, அது உன்னை மீண்டும் தாகமாக்காது" என்று அவர் கூறினார்.

நம்முடைய எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மை இரட்சித்தது என இன்று நீங்களும் நானும் விசுவாசிக்கிறோம். இயேசு தன்னுடைய ஞானஸ்நானத்தினால் நம்முடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு அவர் அதனை முற்றிலுமாக

கழுவிவிட்டார் என்று நீங்கள் உண்மையாகவே விசுவாசிக்கிறீர்களா? ஞானஸ்நானம் பெற்றதின் மூலம் நம் தேவன் நம் பாவங்களைக் கழுவினார். இப்போது நம்மால் நல் மனச்சாட்சியுடனே கர்த்தருக்கு முன்னதாகச் செல்ல முடியும். ஏன்? ஞானஸ்நானம் பெற்றதின் மூலமாகவும், சிலுவைக்கு அதனை எடுத்துச் சென்றதன் மூலமாகவும், சிலுவையில் அறையப்பட்டதன் மூலம் நமக்காக தண்டனை அனுபவித்ததின் மூலமாகவு, மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்தமையாலும், நம் தேவன் நம் எல்லாப் பாவங்களையும் ஏற்றுக்கொண்டு அவற்றைக் கழுவினார். வெகு காலத்திற்கு முன்னால், இயேசு இவ்வுலகிற்கு வந்தார், மேலும் அவருடைய 33 ஆண்டு வாழ்க்கையில், அவர் நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன்மீது ஏற்றுக்கொண்டு தன்னுடைய ஞானஸ்நானத்தினால் அவற்றைக் கழுவினார்.

நம்முடைய சொந்தப் பாவங்களையும் கூட அவர் தன்மீது ஏற்றுக்கொண்டு அதனைக் கழுவியதாலே, அவர் நம்மைக் கர்த்தருக்கு முன்செல்ல ஏதுவாக்கியதுடன் நம்மை நீதிமான்களுமாக்கினார், மேலும் இயேசு கிறிஸ்துவின் பலியினாலே நம் எல்லாப் பாவங்களுக்கும் தீர்ப்படைந்தார். வேறு வார்த்தைகளில் கூறினால், இந்த தேவனை விசுவாசிப்பதின் மூலமாகவே, கர்த்தரை நம் பிதாவே என்றழைத்து அவை முன்னால் செல்லமுடிகிறது. நீர், இரத்தம், மற்றும் ஆவி ஆகிய இயேசுவின் செயல்களை விசுவாசிப்பவர்களாலேயே நல் மனச்சாட்சியுடன் இருக்கமுடிகிறது. அதற்கு மாறாக, தேவனின் நீதியின் செயல்களாகிய அவரின் ஞானஸ்நானத்தையும், சிலுவை மரணத்தையும் விசுவாசிக்காதவர்களிடம் இருப்பது மோசமான மனச்சாட்சியே ஆகும்.

இந்நாட்களில், அனேக மக்கள் தம்முடைய மேலோட்டமான விசுவாசத்தினால், கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை

அனேக பொய்யர்கள், ஏதோ அணிகலன்களைப் போல் கர்த்தரின் வார்த்தையைக் கழற்றி வைத்துவிட்டு, பரலோக ராஜ்யம் செல்லுவதற்கு, கர்த்தர் மேலுள்ள நமது விசுவாசத்துடனே கூட நல்லவைகளையும் செய்ய வேண்டும் என்று பிரசங்கிக்கிறார்கள். இரட்சிப்பைக் குறித்து வரும்போது, சிலுவையின் இரத்தத்தைக் குறித்து மட்டுமே அவர்கள் பேசுகின்றனர், மேலும் கர்த்தரைச் சந்திக்க தம் சரீர உணர்வுகளை எதிர்பார்த்து, ஜெபிப்பதற்காக மலைகளின் மேல் ஏறவேண்டும் என்றும், உப்வாசம் இருக்கவேண்டும் என்றும் தவறாக எண்ணுகிறார்கள். இந்த விசுவாசத்தை விட வேறெதுவும் தவறானதாக இல்லாவிட்டாலும் கூட, அவர்கள் அதில் மிகவும் உறுதியாக இருக்கிறார்கள். அவர்கள் கூறுகின்றனர், "நான் எனது பாவங்களினால் அலைக்கழிக்கப் பட்டேன், அதனால் நான் முழு இரவு ஜெபத்தில் பங்கேற்றேன், 'கர்த்தரே நான் பாவம் செய்தேன். நான் உம்மை விசுவாசிக்கிறேன், தேவனே' என ஜெபித்தேன். ஒரு நாள், நான் சாயங்கால வேளையில் மிக அதிகமாக அலைக்கழிக்கப் பட்டேன், ஆனால் நான் முழு இரவு ஜெபத்தில் பங்கேற்ற பிறகு, அதிகாலை வேளையில், ஒரு அக்கினிப் பந்து என்மீது தினிக்கப் பட்டதை நான் உணர்ந்தேன், அந்த நொடிப் பெழுதே எனது மனம் மிகவும் சுத்தமாயிற்றுஅனது இருதயத்திலிருந்த எல்லாப் பாவங்களும் பனியைப் போல வென்மையாயிற்று. இந்த சமயத்தில் தான் நான் மறுபடியும் பிறந்தேன். அல்லேலூயா!"

இத்தகைய சிந்தனைகள் மனிதர்களால் உருவாக்கப்

பட்டவை, அவை அறிவீனமானவையும், முட்டாள்தனமான சிந்தனையும், கர்த்தரின் வார்த்தையை பயனற்றதாக்குவதுமாகும். இத்தகைய மாயவிசுவாசங்களைப் பற்றி கூறி, மக்களை வஞ்சித்து அவர்களை நரகத்தை நோக்கி வழிநடத்துபவர்களை கர்த்தர் பன்மடங்கு தண்டிப்பார் என்பதை நீங்கள் மனதில் வைத்திருக்க வேண்டும்.

"என்னுடைய காதுகள் துன்பமடைந்தன. ஆனால், நாம் விசுவாசித்தால் சுகமடைவோம் என தேவன் கூறியதை நான் விசுவாசிக்கிறேன், ஆகவே, 'தேவனே, நான் விசுவாசிக்கிறேன்' எனக்கூறி என் வலியைப் பொருத்துக் கொண்டேன். நான் இப்படியாக விசுவாசித்தபோது, என் எல்லா வலியும் மறைந்து போனது!"

"நான் வயிற்றுப் புன்னினால் கஷ்டப்பட்டேன், ஆகவே, எப்போதெல்லாம் எதையாவது சாப்பிடும்போது, வயிற்று வலியால் அவஸ்தைப் பட்டேன். ஆகவே நான் சாப்பிடுவதற்கு முன் இப்படியாக ஜெபித்தேன், 'தேவனே, இங்கே எனக்கு வலியிருக்கிறது, ஆனால் விசுவாசத்துடன் எதைக் கேட்டு ஜெபித்தாலும் அதனைக் கேட்பதாக நீர் என்னிடம் கூறியிருக்கிறீர். உமது வார்த்தையை இன்னமும் நான் விசுவாசிக்கிறேன்.' இப்போது இந்த ஜீரன பிரச்சினை இல்லை!"

இவையெல்லாம் என்ன? வார்த்தையின் மூலமாக தேவனைச் சந்திக்காதவர்களின் கதைகள் இவையாகும். வார்த்தையின் மூலமாக விசுவாசிக்காத அவர்களின் தவறான நம்பிக்கையை இது விளக்குகிறது. இது அவர்கள் வார்த்தையின் மூலமாக ஜெபித்தமைக்கு கிடைத்த பதிலாயில்லாமல், தம்முடைய மாய விசுவாசத்தின் மூலம் பெற்ற பதிலாகும். அவர்கள் வார்த்தையின் மூலம் கர்த்தரை விசுவாசிக்கவில்லை, ஆனால் அவர்களின் சொந்த உணர்ச்சிகளிலிருந்தும் அனுபவங்களிலிருந்தும் ஏற்பட்ட குழப்பத்தின் அடிப்படையில் கர்த்தரை விசுவாசிக்கிறார்கள்.

இன்றைய கிறிஸ்தவத்தில் இத்தகைய பல மாய விசுவாசிகள் இருக்கிறார்கள் என்பதே மிகவும் மனம் வருந்தச் செய்வதாகவும், கவலை அளிப்பதாகவும் இருக்கிறது.

இது போலவே, கர்த்தரின் வார்த்தையை புறம்பேத் தள்ளி தம்முடைய உணர்ச்சிகளிலும் அனுபவங்களிலும் சார்ந்து இயேசுவை கண்மூடித்தனமாக விசுவாசிப்பது மேலோட்டமான விசுவாசமாக மட்டுமே கருதப்படுகிறது. வார்த்தையின் படி விசுவாசிக்காவிட்டாலும், இயேசுவைத் தாம் விசுவாசிப்பதாக கூறிக்கொள்ளும் மக்கள் தாம் பிசாசுகளினால் கட்டுண்டிருக்கிறோமா என்பதைக் கண்டுகொள்ள தம்மைத் தாமே சோதித்துக் கொள்ள வேண்டும். "ஜெபிக்கும் போது இயேசுவை நான் சந்தித்தேன். இயேசு என் கனவில் தோன்றினார். நான் இடைவிடாது தொடர்ந்து ஜெபித்தேன், என்னுடைய நோய் குனமாகியது." வாய்க்கோணலானவர்களால் மட்டுமே இத்தகையவற்றைக் கூற முடியும். இங்கு ஒன்று மட்டும் தெளிவாக இருக்கிறது, இது கர்த்தரால் கொடுக்கப் பட்ட விசுவாசமாயில்லாமல், சாத்தானால் கொடுக்கப் பட்ட விசுவாசமாக இருக்கிறது.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் மூலமாக நம் தேவன் தன்னை நமக்கு வெளிப்படுத்தினார். இன்றைய காலத்தில் புதிய முறைகளிலும், வேறு வழிகளிலும் நம் தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறாரா? ஒரு காட்சியிலோ அல்லது கனவிலோ அவர் நமக்கு முன்னதாக உண்மையாகவே தோன்றுகிறாரா? தன் கால்களில் பெரிய சங்கிலையை இழுத்தவாறு நடந்தார், அவர் சரீரம் முழுவதும் இரத்தம் வழிந்தது, முள்முடி அவர் தலையின் மேலிருந்தது, அவர் கூறினார், "இதனைப் பார், இப்படியாகத்தான் நான் உனக்காக பாடுகள் பட்டேன். இப்போது, நீ எனக்காக என்ன செய்வாய்?"அஇப்படித்தான்

நம் தேவன் நமக்கு காட்சியளித்தாரா? இவை எல்லாம் பொருந்தாதவை!

இத்தகைய ஒரு கனவைக் கண்டதாக கூறிக்கொண்டு கர்த்தருக்கு முன்னதாக உறுதியளிக்கும் மக்களும் இருக்கவே செய்கிறார்கள், "தேவனே, நான் உம் ஊழியனாகி, எனது எஞ்சியிருக்கும் வாழ்நாள் முழுவதும், என் முழு இருதயத்துடனே ஊழியம் செய்வேன். நான் இங்கே ஒரு ஜெப வீட்டைக் கட்டுவேன். நான் அங்கே ஒரு ஆலயத்தைக் கட்டுவேன். நான் எனது எஞ்சியிருக்கும் நாள் முழுவதும் எனது சிலுவையைச் சுமந்து, எனது நாடு முழுவதும், உலகம் முழுவதும் உம்மைக் குறித்து அறிவிப்பேன்."

இத்தகைய அர்ப்பணிப்புள்ள பிரசங்கியாளர்களை தெருக்களிலோ, பொதுவிடங்களிலோ நம்மால் இலகுவாக சந்திக்க முடியும். இயேசுவைத் தமது கனவில் கண்ட பிறகோ அல்லது ஜெபிக்கும் போது தேவனின் சத்தத்தைக் கேட்ட பிறகோ, இப்படியாக தாம் வாழ விருபியதாக கூறும் இத்தகையவர்கள் அனைவரும் மாய விசுவாசிகளேயாவர். ஆனால், தன்னுடைய வார்த்தையால் மட்டுமே தேவன் தன்னை நமக்கு வெளிப்படுத்துகிறார்; கனவின் மூலமாக அவர் நம்முடனே பேசுவதில்லை அல்லது ஜெபிக்கும் போது நம்முடன் பேசுவதில்லை, குறிப்பாக அவரின் வார்த்தைகள் யாவையும் முழுமையாக மனிதகுலத்திற்கு கொடுக்கப்பட்ட இக்காலத்தில் இப்படி நடக்காது. மனிதர்களின் உள்மனதில் நிகழும் குழப்பமான நிலைகளினால் கனவுகள் தோன்றுகின்றன. அவர்கள் தம்முடைய வேண்டப்படாத அன்பின் மூலமாக இயேசுவை அதிகப்படியாக நினைப்பதின் மூலமாகவும், அவரைக் குறித்து எல்லாவிதங்களிலும் கற்பனை செய்வதினாலும், இந்த மக்களுக்கு இத்தகைய கனவுகள் வருகின்றன.

ஆழ்ந்த நித்திரைக்கு நாம் செல்லுவதற்கு முன்னதாக உங்கள் மனம் எதைக் குறித்தேனும் ஆழமாக சிந்தித்துக்

கொண்டிருந்தால், உங்கள் கனவுகளிலும் இந்த விஷயங்கள் மீண்டும் மீண்டும் வருவது அனேகமாக நடக்கக் கூடும். இது போல கனவுகள் உங்கள் உள்மனதுடன் தொடர்புடையது. இதனால் தான் நாம் அதிகமாக எண்ணும் போது, எல்லாவிதமான குழப்பமான கனவுகளும் நமக்குத் தோன்றுகின்றன. அவற்றிற்கும் விசுவாசத்திற்கும் தொடர்பில்லை, ஆனால் அவை சரீர மாறுபாடுகளின் அல்லது உள்மனதின் மாறுபாடுகளின் பிரதிபலிப்பாக மட்டுமே இருக்கிறது.

இதனால் தான் மக்கள் இயேசு சிலுவையில் அறையப் பட்டு இரத்தம் சிந்தியதை மக்கள் எண்ணிக் கொண்டிருக்கும் போது, தலையில் முள்முடி சூட்டப்பட்டவராக அவர் அவர்களின் கனவுகளில் காட்சி தருகிறார். இத்தகைய கனவுகளில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் இந்த கனவை மிகவும் முக்கியமானதாக எடுத்துக்கொள்வதே மிகப்பெரிய தவறாகும். இரத்தம் வழிய, இயேசு அவர்களுக்கு முன்பாகத் தோன்றி, "நீ எனக்காக என்ன செய்வாய்? நீ எனக்காக உன் ஆயுள் காலம் முழுவதும் உன்னை மறுதலித்தவனாக இருக்க வேண்டும். என்னைப் பொருத்தவரையில் உன்னிடம் எந்த செல்வமும் இருக்கக்கூடாது" எனக் கூறினால் என்னவாகும்? இப்படியாக வாழும்படியாக தம்முடைய உடமைகளையெல்லாம் கொடுத்து விட்ட முட்டாள்களான மக்கள் இருக்கவே செய்கிறார்கள். ஒரு கனவினால், அதனை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டதினால் நடுநடுங்கியவர்கள் அல்லது அதனால் தம் வாழ்வு மாறுதலடைந்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா? இது மாய விசுவாசத்தைத் தவிர வேறில்லை.

வார்த்தையின் மூலமாக கர்த்தர் நம்மைச் சந்திக்கிறார். நம் கனவின் மூலமாகவோ அல்லது நம் ஜெபத்தின் போது காணும் காட்சியின் மூலமாகவோ சந்திக்கக் கூடிய ஒருவர் அவரல்ல. கர்த்தரின் வார்த்தையானது புதிய மற்றும்

பழைய ஏற்பாடுகளில் எழுதப்பட்டுள்ளது, நமக்கு பிரசங்கிக்கப்படும் இவ்வார்த்தைகளைக் கேட்பதாலும், அவற்றை நமது இருதயங்களில் ஏற்றுக்கொள்வதினாலும், நமது ஆத்துமாக்கள் அவரை வார்த்தையின் மூலம் காணலாம். வேறு வார்த்தைகளில் கூறினால், வார்த்தையின் மூலம் மட்டுமே நமது ஆத்துமாக்களால் அவரைக் காண முடியும்.

வார்த்தையின் மூலமாகவே, இயேசுவானவர் தனது ஞானஸ்நானத்தினாலே நம் எல்லாப் பாவங்களையும் தன்மீது ஏற்றுக்கொண்டார் என்பதை நாம் அறிந்து கொண்டோம்; இந்த வார்த்தையை நாம் கேட்டதின் மூலம், இருதயங்களில் நாம் விசுவாசிக்கத் தொடங்கினோம். இயேசு சிலுவையில் ஏன் மரிக்க வேண்டும் என்பதும் வார்த்தையில் காணப் படுகிறது. ஞானஸ்நானம் பெற்றதின் மூலமாக இயேசு நமது பாவங்களை தன்மீது ஏற்றுக்கொண்டதினால், அவர் சிலுவையில் மரித்து நம்மை இரட்சித்தார். வார்த்தையின் மூலம் கர்த்தரை நாம் அறிந்தோம், வார்த்தையின் மூலம், அவரை நாம் விசுவாசிக்கத் தொடங்கினோம். அந்த இயேசு கிறிஸ்துவும் கர்த்தரே, இதனை வார்த்தையின் மூலமே நாம் அறிந்து விசுவாசிக்கத் தொடங்கினோம்.

கர்த்தரை நாம் எப்படி விசுவாசிக்கத் தொடங்கினோம்? எழுதப்பட்ட கர்த்தரின் வார்த்தையால் தானே அப்படியாயிற்று?

கர்த்தரின் வார்த்தை இல்லையென்றால், நம்முடைய எல்லாப் பாவங்களையும் மறையச் செய்த இயேசுவை நம்மால் எப்படி சந்தித்து விசுவாசிக்க முடியும்? கர்த்தரின் வார்த்தை இல்லை என்றால், நமது விசுவாசம் ஒன்றுமில்லாததாகியிருக்கும். "நான் நினைப்பது

இதுவேயாகும்"அநாம் நம்முடைய சிந்தனைகளைப் பேசுவதற்கு தலைப்படுவோம், ஆனால் இது உண்மையல்ல, உண்மையல்லாதவைகளால் நமது இருதயங்கள் நிறைந்திருக்கும் போது, உண்மையான சத்தியத்தால் நமது இருதயத்திற்குள் பிரவேசிக்க முடியாது. "நான் நினைப்பது இதுவேயாகும்" என்று கூறுவதற்கு பதிலாக "இதைத்தான் வேதாகமம் கூறுகிறது" எனக் கூறுவது மிகவும் சரியானது. நாம் வேதாகமத்தை வாசிக்கும்போது, கர்த்தரால் போதிக்கப் பட்ட சத்தியம் நமது இருதயங்களுக்குள் பிரவேசித்து நம்முடைய சிந்தனைகளில் உள்ள குறைபாடுகளைச் சரி செய்யும்.

நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியைக் குறித்த உங்கள் விசுவாசம் எத்தகையது? அது உங்கள் சொந்த சிந்தனைகளினால் உருவானதா? அல்லது வார்த்தையைக் கேட்டதினால் அதனை அறிந்து விசுவாசித்ததின் மூலம் அதனை விசுவாசிக்கத் தொடங்கினீர்களா? வார்த்தையின் மூலமாக மட்டுமே நாம் விசுவாசிக்கத் தொடங்கியதுடன், கர்த்தரை நமது இருதயங்களிலும் சந்தித்தோம். இதனால் தான் ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாசல், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் உருவாக்கப் பட்டிருந்தது.

இயேசு கிறிஸ்து நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொள்ள உதவிய ஞானஸ்நானத்தை வெண்கலப் பாத்திரத்தில் இருந்த நீர் சுட்டிக் காட்டுகிறது. *"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" (மத்தேயு 3:15).* கர்த்தரின் வார்த்தையினால், உலகின் பாவங்களையெல்லாம் தன்மீது ஏற்றுக்கொள்ள உதவிய அவரின் ஞானஸ்நானத்தை நாம் அறிந்து கொண்டோம். வார்த்தையின் மூலமாக வந்ததினால் தான், நம்முடைய வாழ்நாள் முழுவதும் நீங்களும் நாமும் செய்யும் எல்லாப்

பாவங்களையும் தன் மீது ஏற்றுக் கொள்ள உதவிய இயேசுவின் ஞானஸ்நானத்தை நாம் அறிந்ததினால், இந்த வார்த்தை நம்மிருதயங்களில் ஞானஸ்நானத்தின் மீது விசுவாசம் கொள்ளச் செய்தது. வார்த்தையின் மூலமாக வெண்கலப் பாத்திரத்தில் அறிவிக்கப் பட்ட சத்தியத்தை நாம் கண்டோம்.

கர்த்தருடைய வார்த்தையின் மூலமாக வெண்கலப் பாத்திரமானது வெண்கலத்தினால் உருவாக்கப் பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம். வேதாகமத்தைப் பொருத்தவரை, வெண்கலம் என்பது நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. நேரடியாக கூறினால், நம்மை பிரதிபலிக்கும் செயலைச் செய்யும் கண்ணாடியினால் இது உருவாக்கப் பட்டதினால், நாம் சட்டத்திற்கு முன்னாக நம்மைக் காணுகையில், நாம் ஆக்கினை அடைய வேண்டியவர்கள் என்பதை வெண்கலப் பாத்திரம் தெரிவிக்கிறது. இதனால் தான் ஆசரிப்புக் கூடாரத்தில் ஊழியம் செய்யும் பெண்களின் கண்ணாடியிலிருந்து வெண்கலப் பாத்திரம் தயாரிக்கப் பட்டது. நம்முடைய பாவங்களுக்காக தண்டிக்கப் படவேண்டிய நம்மை தேவன் இரட்சித்தார், இதற்காக, அவர் பூமிக்கு வந்து, ஞானஸ்நானம் பெற்று, சிலுவையில் மரித்தார். எழுதப் பட்ட கர்த்தரின் வார்த்தையின் மூலமாக, இயேசுவே ஞானஸ்நானம் பெற்றார் எனவும், இதன் மூலமாக அவர் நம் எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக் கொண்டார் என்பதையும், சிலுவைக்குச் சென்று நம்முடைய பாவங்களுக்கான ஆக்கினையை அடைந்தார் எனவும் நாம் தெரிந்து கொண்டோம். இதனை நமது இருதயங்களில் ஏற்றுக் கொன்டதாலும், இந்த சத்தியத்தை நாம் விசுவாசித்ததினாலும், நாம் இரட்சிக்கப்பட்டோம். நீங்கள் எப்படி? நீங்கள் எப்படி இரட்சிக்கப்பட்டீர்கள்?

மாய விசுவாசத்தைப் பின்பற்றும் குழுவினரின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர், தம் உறுப்பினர்களுக்கு தாம் இரட்சிக்கப்பட்ட சரியான நாளான மாதத்தையும்

தேதியையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்கள். இப்பிரிவினைச் சேர்ந்த போதகர் ஒருவர், தான் மலை ஒன்றின் மீது ஏறி ஜெபித்த போது தான் ஒன்றுமில்லாதவன் என்பதைக் கண்டதாகவும், அப்போது இயேசுவை விசுவாசித்து தான் இரட்சிக்கப்பட்டதாகவும், அனேக விசுவாசிகளுக்கு முன் சாட்சி கூறியதாக தெரிகிறது. தான் மறுபடியும் பிறந்த நாளையும் நேரத்தையும் தான் நன்கு நினைவில் வைத்திருப்பதாக அவர் பெருமையுடன் அறிவித்தார். இந்த உறுதிப்பாட்டிற்கும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை, இது வெறும் உணர்ச்சியின் வெளிப்பாடேயாகும். இந்த போதகரின் விசுவாசத்திற்கும் இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இந்தப் பிரிவினரால் போதிக்கப்படும் இரட்சிப்பிற்கும் கர்த்தரின் வார்த்தையால் போதிக்கப்படும் இரட்சிப்பிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை, ஆனால் அது அவர்களின் சொந்தப் படைப்பாகும்.

ஒருவர் தன்னையே வசீகரிப்பது சாத்தியமான ஒன்றாகும். தாம் பாவமற்றவர்கள் என்று மக்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தாலும், இப்படியாக மீண்டும் மீண்டும் தொடர்ந்து எண்ணிக் கொண்டிருந்தாலும், அவர்கள் தம்மைத் தாமே வசீகரித்து, தம் சொந்தத்தில் பாவம் இல்லாதவர்கள் ஆகிவிடுவர். இந்த சுலோகத்தை அவர்கள் மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டிருந்தால், அவர்கள் தம் பாவங்கள் அகன்று பாவமற்றவர்களாகியதைப் போல உணரத் தொடங்குவர், ஆனால் இத்தகைய உணர்வுகளால் அதிக காலம் நீடித்திருக்க முடியாது. ஆனால் வெகு சீக்கிரமாகவே, "நான் பாவமற்றவன், நான் பாவமற்றவன்" என்று மீண்டும் மீண்டும் கூறி தம்மைத்தாமே வசீகரிக்க வேண்டியதிருக்கும்.

இந்த விசுவாசம் எத்தனை சுயநலமிக்க, பொய்யான, அறிவீணமான, மூடத்தனமானதாக இருக்கிறது!

மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் என்பது புதிய மற்றும் பழைய ஏற்பாட்டில் உள்ள கர்த்தரின் வார்த்தையாகும். ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாசலும், பரிசுத்த ஸ்தலமும், மகா பரிசுத்த ஸ்தலமும், இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் தயாரிக்கப் பட்டிருந்தன என்பது, புதிய மற்றும் பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கும்படி, இயேசு நமது இரட்சிப்பின் வாசலும், இரட்சகரும் ஆயினார் என்பதை தெளிவாக தெரிவிக்கின்றன. ஆகவே நான் உண்மையாகவே கர்த்தருக்கு நன்றி கூறுகிறேன், ஏனெனில், கர்த்தர் நம்மிடம் கூறிய இந்த இரட்சிப்பு எத்தனை நிச்சயமானது!

இதனால் தான் நான் ஜெபிக்கும் போது, உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பதும் இல்லை, அல்லது பெரிதாக காட்டிக் கொள்வதும் இல்லை. அவரை விசுவாசித்து அனைத்தையும் அவரிடம் ஒப்புக்கொடுத்து நான் ஜெபிக்கிறேன். "பிதாவே, தயவு செய்து எங்களுக்கு உதவும். முழு உலகிற்கும் நற்செய்தியைப் பிரசங்கிக்கச் செய்யும். என்னுடைய உடன் ஊழியர்களையும், பரிசுத்தவான்களையும் பாதுகாத்தருளும். நற்செய்திக்கு ஊழியம் செய்யக்கூடிய ஊழியர்களை எங்களுக்குத் தாரும், இந்த நற்செய்தி பரவுவதை அனுமதித்தருளும், விசுவாசிகள் உம்முடைய வார்த்தையை அறிந்து அதனை விசுவாசிக்கச் செய்யும்." நான் ஜெபிக்கும் போது கூறுவதெல்லாம் இதுவே; என்னுடைய உணர்வுகளைக் கலக்கி அழுவதின் மூலம் ஜெபிப்பது இல்லை, மேலும் இத்தகைய காரியங்கள் என் ஜெபத்தில் பங்கேற்பதில்லை.

சில மனிதர்கள், தாம் எத்தனைக் கஷ்டப் பட்டும், தம்முடைய உணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப முடியாதவர்களாய் இருக்கும் போது, தம் கண்களில்

கண்ணீரை வர வைக்க வெகு காலத்திற்கு முன்னதாக இறந்து போன தமது பெற்றோரை நினைத்து கண்ணீர் விடுவதின் மூலமாக, மற்றவர்கள் தம்முடைய ஜெபத்தைச் சிறந்ததாக கருதும் படிச் செய்கிறார்கள். இப்படி கண்டு பிடிக்கப்பட்ட ஜெபங்கள் அனைத்தும் குப்பைகளாகும், கர்த்தர் அவற்றை உமிழ்ந்து போடுவார். இயேசுவின் சிலுவைப் பாடுகளை எண்ணுவதின் மூலமாகவும், "தேவனே, உம்மை நான் விசுவாசிக்கிறேன்" என தொடர்ந்து சத்தமிடுவதின் மூலமாகவும், தம்முடைய உணர்ச்சிகளை மக்கள் உசுப்புகிறார்கள்.

இத்தகைய மக்களின் விசுவாசம் உறுதியானது என நீங்கள் எண்ணுகிறீர்களா? நீங்கள் உங்கள் பாவங்களை எண்ணி, "தேவனே, நான் பாவம் செய்தேன். நான் நீதியுடன் வாழ உதவும்" என உங்கள் உணர்வுகளைக் கலக்கிவிட முயற்சித்தீர்கள் என்றால், அப்போது நீங்கள் உணர்ச்சி பொங்க எழுவது சாத்தியமாகக் கூடிய ஒன்றே. இத்தகைய உணர்ச்சிகளின் அனுபவங்களும், அழுகைக் கூட்டங்களும், நம் மன அழுத்தத்தை குறைப்பதால், அனேக மக்கள் தாம் புத்துணர்ச்சி பெற்றதாக உணருகிறார்கள், விசுவாசம் என்பது இதுதான் என்று அவர்கள் எண்ணத் தலைப்படுகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் பிரச்சினைகள் நிறைந்திருப்பதால், இத்தகைய உணர்ச்சி அனுபவங்கள், சிறிது நேரத்திற்கு அவர்களை அமைதியாக்கும், ஆகவே இப்படியாக அவர்கள் தம்முடைய மதவாழ்வை வாழுகிறார்கள்.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் தேவன் நம்மிடம் வந்தார் என்பதை நீங்கள் விசுவாசிக்கவேண்டும்

வார்த்தையின் மூலமாக நம் தேவன் நம்மிடம் வந்தார். ஆகவே நீங்கள் உங்கள் உணர்வுகளுக்காக காத்திருக்காதீர்கள், ஆனால் கர்த்தரின் வார்த்தை உங்களுக்கு கூறுவதைக் கேட்க வேண்டும். உங்கள் இருதயங்களில் கர்த்தரின் வார்த்தையை விசுவாசிக்கிறீர்களா இல்லையா என்பதே மிகவும் முக்கியமானது. நீங்கள் ஜெபிக்கும் போது, உங்கள் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள். மாறாக, ஒரு குறிப்பிட்ட அளவிற்கு கீழாக அதனைக் கட்டுப் படுத்த வேண்டும். ஏன்? உணர்ச்சிகள் கொந்தளிக்க வேண்டுமென விரும்புபவர்களை, அவர்களின் இந்த ஓட்டையின் பலவீணத்தைப் பயன்படுத்த விரும்பி, அவர்களை அனுகுவதற்கு பல்வேறு பொய்யர்கள் இவ்வுலகில் இருக்கிறார்கள். மக்கள் வெகுசீக்கிரமாக உணர்ச்சி வசப்பட்டு தம்முடைய அறிவை இழந்துவிடுவதால், "மிகப்பெரிய ஆவிக்குரிய கூட்டம்" என்ற தலைப்பில் எழுப்புதல் கூட்டங்கள் நடைபெறும் பொழுது, இவர்களின் எண்ணமெல்லாம், பங்கேற்பவர்களின் உணர்வுகளைத் தூண்டி விடுவதாக மட்டுமே இருக்கிறது.

ஆயினும், நான் இப்போது மறுபடியும் பிறந்தவன், எனவே இத்தகைய எழுப்புதலை நான் கடினமாக முயன்றாலும் கூட என்னால் நிகழ்த்த முடியாது. ஏனெனில் கர்த்தரின் வார்த்தையைப் பிரசங்கிப்பது, மிகப்பெரிய ஆவிக்குரிய கூட்டம் என்ற பெயரில் மக்களைத் தூண்டி விடுவதில்லை. சத்தியத்தின் வார்த்தையினால் நாம் மறுபடியும் பிறந்ததினாலே, என்னுடைய ஆவிக்குரிய

வாழ்க்கையில் நுழைந்து கொண்டிருக்கும் என்னுடைய உணர்ச்சி பூர்வமான பகுதிக்கு எப்போதோ பிரியாவிடைக் கொடுத்துவிட்டேன்.

கர்த்தரின் வார்த்தையைக் கேட்கும் நீதிமான்களாகிய நாம், அதனை நம் இருதயங்களில் விசுவாசித்து, நம்முடைய ஞானத்தைப் பயன்படுத்தி, உணர்ச்சி கொப்பளிப்பவர்களாக இருக்கக்கூடாது. ஒருவர் கர்த்தரின் வார்த்தையை நம்மிடம் சரியாகப் பேசுகிறாரா இல்லையா என்பதை சீக்கிரமாகவே நாம் கண்டு கொண்டு, சத்தியத்தை உடனடியாக நம்புகிறோம், மேலும், நம்முடன் பேசும் அந்நபர், அச் சத்தியத்தை விசுவாசித்து அதனை நம்முடன் பேசுகிறாரா என்பதையும் சீக்கிரமாகவே பிரித்துணர்கிறோம். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றின் சத்தியங்களை நாம் அறிந்து அதனை விசுவாசிப்பதினால் பரிசுத்த ஆவியானவர் நம்மிருதயங்களில் இருக்கிறார், ஆகவே இந்த உணர்ச்சி பிரவாகங்கள் எல்லாம் சத்தியத்துடன் எச்சம்பந்தமும் இல்லாதவை என்பதை அறிந்து, உண்மையான சத்தியத்தை மட்டுமே நம் இருதயங்களுக்குள் ஏற்றுக் கொள்கிறோம்.

இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் இயேசு நம்மிடம் வந்தார். இந்த உண்மை எத்தனை ஆச்சரியமானது. உங்களை இரட்சித்த தேவனின் அன்பு எத்தனை ஆச்சரியமானது? கர்த்தரின் வார்த்தையில் எழுதப்பட்டுள்ள இயேசுவின் நான்கு செயல்களினால், அதாவது இயேசு தன் ஞானஸ்நானத்தினால் நம் எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக் கொண்டு, சிலுவையில் மரித்து, அவர் எல்லா நீதிகளையும் நிறைவேற்றியதின் மூலம், உங்களை இரட்சித்தார் என்பதை அறிந்து அவரை விசுவாசிக்கிறோம்.

இந்த சத்தியத்தை உங்கள் இருதயங்களால்

விசுவாசிக்கிறீர்களா? நற்செய்தியை பிரசங்கிப்பவர்கள், மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூலின் உள்ளே அதனைப் பரப்ப வேண்டும், அதாவது அது பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் கர்த்தரின் வார்த்தையாக இருக்கிறது, மேலும் அதிலுள்ளவைகள் இளநீல நிற, இரத்தாம்பர நிற மற்றும் சிகப்பு நிற நூல் ஆகியவைகளாக இருக்க வேண்டும். மேலும் இதனைக் கேட்பவர்கள் அதனைத் தமது இருதயங்களினால் ஏற்றுக் கொண்டு, முழு இருதயத்துடனும் அதனை விசுவாசிக்கவேண்டும்.

வெண்கலப் பாத்திரத்திலுள்ள நீர் நம் பாவங்களை எல்லாம் கழுவுகிறது

அவருடைய ஞானஸ்நானத்தின் மூலமாக, இயேசு நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக் கொண்டு அவற்றைக் கழுவிப் போட்டார். இயேசுவின் ஞானஸ்நானமானது வெண்கலப் பாத்திரத்தின் நீரைக் குறிக்கிறது; அது பாவங்களுக்காக நரகம் செல்ல வேண்டியிருந்த நம்மை சுத்தீகரித்தது, மேலும் கர்த்தருக்கு முன்னால் நிற்பதையும் ஏதுவாக்கியது. இயேசு தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொண்டதால், அவரால் சிலுவைக்குச் சென்று அதன் மூலமாக மரித்தமையால் அப்பாவங்களை கழுவ முடிந்தது.நம்முடைய எல்லாப் பாவங்களுக்குமான ஆக்கினையை இயேசு ஏற்றார் என்பதற்கு இயேசுவின் ஞானஸ்நானமும், அவரின் சிலுவையும் சாட்சியாக இருக்கின்றன. ஞானஸ்நானம் மற்றும் சிலுவையினால், இயேசு நம் இரட்சிப்பை நிறைவேற்றினார்.

மனந்திரும்பி ஜெபிப்பதினால் நம் பாவங்களை சுத்திகரிக்க முடியாது. இயேசு தன்னுடைய

ஞானஸ்நானத்தின் மூலமாக நம் பாவங்களைத் தன்மீது ஏற்றுக் கொண்டதினால், நம் பாவங்கள் எல்லாம் கழுவப்பட்டன. இந்த வார்த்தையைக் கேட்பதின் மூலமாகவும், நமக்காக இயேசு செய்தவைகளை விசுவாசிப்பதின் மூலமாகவும், நம் எல்லாப் பாவங்களுக்கான தண்டனையில் இருந்தும் நாம் விடுதலையானோம். இயேசு பெற்றுக் கொண்ட தண்டனைக்காக நன்றிகள், அவருடைய ஞானஸ்நானத்தின் மீதுள்ள நமது விசுவாசத்தின் மூலமாக எல்லா பாவத்தண்டனையையும் நாம் ஏற்கனவே பெற்று விட்டோம். உண்மையாகவே நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப் பட்டோம். ஒரு வழியில் பார்த்தால் இரட்சிப்பு மிகவும் எளிதானது. இரட்சிப்பின் அன்பையும், வரத்தையும் நாம் விசுவாசித்தால், நாம் இரட்சிக்கப் படுவோம், நாம் விசுவாசிக்கவில்லை என்றால், நம்மால் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடியாது.

கர்த்தரால் நிறைவேற்றப்பட்ட இரட்சிப்பைத் தவிர, இரட்சிக்கப்பட நாம் செய்ய வேண்டியது எதுவும் இல்லை

கர்த்தராலேயன்றி, நம்முடைய இரட்சிப்பிற்காக நம்மால் செய்யக்கூடியது எதுவுமேயில்லை. படைப்பிற்கு முன்பே நம்மை இவ்வழியில் இரட்சிக்கத் திட்டமிட்ட நமது தேவன், நம் இரட்சிப்பை நிறைவேற்றினார், கர்த்தர் எதைத் திட்டமிடுகிறார் என்பதைப் பொருத்தே எல்லாம் அமையும். பிதாவாகிய கர்த்தர் தன் குமாரரின் மூலமாகவும், பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் நம்மை இரட்சிக்கத் திட்டமிட்டார், அவர் குறிப்பிட்ட அந்த நேரம் வருகையில், அவர் தன்னுடைய ஒரேபேறான குமாரரை இப்பூமிக்கு அனுப்பினார். இயேசுவானவருக்கு 30 வயதாகும் போது,

இந்த இரட்சிப்பின் செயல்களை நிறைவேற்றும் நேரம் அவருக்கு வந்தது, அப்பொழுது பிதா கிறிஸ்துவை ஞானஸ்நானம் பெறச்செய்து சிலுவையில் மரிக்கச் செய்தார், அதன் பிறகு அவரை உயிரோடெழுப்பி, அதன் மூலம் நம் அனைவரையும் இரட்சித்தார். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் வார்த்தையின் மூலம் தேவன் நமக்குச் செய்தவைகளை எல்லாம் அறிந்து அதனைக் கற்றுக் கொண்டதினாலும், அதனை நம் இருதயங்களில் விசுவாசித்ததினாலும் நாம் இரட்சிக்கப் பட்டோம். நம் இருதயங்களில் விசுவாசித்து இரட்சிக்கப் படுவதென்பது, விசுவாசத்தை நமது இருதயங்களில் பெறுவது என்பதைத் தவிர வேறில்லை.

இந்த வேதாகமத்தின் வார்த்தையானது கர்த்தரின் வார்த்தை என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஆதி காலத்திலிருந்தே இருக்கின்ற கர்த்தரின் வார்த்தை வேதாகமத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. கர்த்தரின் வார்த்தையாகிய பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் வார்த்தையின் மூலம், கர்த்தரை நாம் அறிந்து அவரைச் சந்திக்கலாம். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் அவர் நம்மை இரட்சித்தார் என்பதை பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் வார்த்தையினால் அறிந்து அதனை விசுவாசிக்கலாம். மேலும், இந்த சத்தியத்தை விசுவாசிப்பவர்களால் இரட்சிக்கப் பட முடியும் என்பதால், இந்த வார்த்தையில் நிச்சயமாக வல்லமை இருக்கிறது என்பதை சாட்சி கூறலாம். நம்முடைய குறுகிய எண்ணங்களினால் கர்த்தரின் வார்த்தையை நாம் அளக்கவோ நியாயம் தீர்க்கவோ கூடாது, மாறாக, கர்த்தர் எப்படி நம்மை இரட்சித்தார் என்பதைத் தெளிவாக நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

பழைய மற்றும் புதிய ஏற்பாட்டிலிருந்து, இளநீலம் (இயேசுவின் ஞானஸ்நானம்), இரத்தாம்பரம் (இயேசுவே

ராஜாதி ராஜா), சிகப்புநூல் (சிலுவை), மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் (பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் கர்த்தரின் வார்த்தை) ஆகியவற்றை நீங்கள் அனைவரும் கேட்டு அதனை விசுவாசிப்பீர்கள் என்று விரும்பி ஜெபிக்கிறேன். கர்த்தரின் வார்த்தையை புறம்பேத் தள்ளிவிட்டு, அவருடைய வார்த்தையை உங்கள் சொந்த அளவுகோலினால் உங்கள் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் அளந்து அதனை தீர்த்தீர்கள் என்றால், நீங்கள் இரட்சிப்படையவே மாட்டீர்கள்.

கர்த்தரின் வார்த்தை உங்களுக்கு நன்றாகத் தெரியவில்லை எனை உணர்ந்தீர்கள் என்றால், உங்களின் விசுவாச மூதாதையர்கள் கூறியவற்றை மிகவும் கவனமாகக் கேளுங்கள். அவர்கள் போதகர்களாகவோ, வேலைக்காரர்களாகவோ அல்லது சாதாரண மனிதர்களாகவோ இருக்கட்டும், அவர்களால் கர்த்தரின் வார்த்தைப் பிரசங்கிக்கப் படுவதைக் கேட்கும்போதும், அவர்கள் பிரசங்கிப்பது கர்த்தருக்கு முன்னதாக சரியானதாக இருக்கும்போதும், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அவர்கள் கூறுவது சரியென உணர்ந்து, அதனை உங்கள் இருதயங்களால் விசுவாசிப்பது மட்டுமே.

வார்த்தையைப் பரப்புபவர்கள் அது இலகுவாக இருப்பதினால் அப்படிச் செய்யவில்லை, ஆனால் கர்த்தருக்கு முன்னதாக அவர்கள் செய்வது சரியாக இருப்பதினால், அப்படிச் செய்கிறார்கள். இதனால் தான் அவர்கள் கர்த்தருக்கு முன்னதாக சரியான அறிவைப் பிரசங்கிக்கிறார்கள் - அதாவது, இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் கூறப்பட்ட சத்தியமாகிய நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியே அந்த அறிவாகும். அதனை நாம் யாரிடத்திலிருந்து கேட்கிறோம் என்பதைப் பொருட்படுத்தாமல், அது உண்மையாகவே கர்த்தரின்

வார்த்தையாக இருந்தால், அதனை விசுவாசிப்பதற்காக ஆமாம் எனக் கூறி, அதனை ஏற்றுக் கொள்வதைத் தவிர நம்மால் எதுவும் செய்ய முடியாது, ஏனெனில், கர்த்தரின் வார்த்தையில் ஒரு புள்ளியிலோ, அல்லது ஒரு தலைப்பிலோ, சிறிய தவறு கூட இல்லை.

கர்த்தரின் வார்த்தையை நாம் விசுவாசிக்க வேண்டும். 'விசுவாசித்தல்' என்றால் என்ன? அது ஏற்றுக்கொள்வதாகும். அது ஒரு நம்பிக்கை. வேறு வார்த்தைகளில் கூறினால், நம் தேவன் நமக்காக ஞானஸ்நானம் பெற்றதினால், நாம் நமது எல்லாக் குறைபாடுகளையும் அவரிடம் ஒப்படைத்து அவரைச் சார்ந்திருப்போம். "இதனைச் செய்வதின் மூலம் தேவன் என்னை இரட்சித்தாரா? நான் இதனை நம்பி விசுவாசிக்கிறேன்." இப்படி விசுவாசிப்பதே உண்மையான நம்பிக்கையாகும்.

உலகத்தின் இறைவல்லுநர்களைப் பார்க்கும்போது, சரியாக அறிந்து விசுவாசிப்பவர்களைக் காண்பது மிகவும் அரிதாக இருக்கிறது. வெண்கலப் பாத்திரத்தை அவர்கள் நெருங்குவதற்கு முன்னரேயே, ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாசலில் நின்று போய் விட்டார்கள், அவர்களால் பிரகாரத்திற்குள் கூட செல்ல முடியவில்லை. ஆசரிப்புக் கூடாரத்தைக் குறித்து அவர்கள் பிரசங்கிக்கும் போது, அதன் பிரகாரத்தின் வாசலை மிகவும் கவனமாக குறுகலானதாக்கி விடுகிறார்கள், மேலும் ஆசரிப்புக் கூடாரத்தைக் குறித்து புத்தகங்களை வெளியிடும் போது பிரகார வேலியின் 9 மீட்டர் இடத்தைப் பிடித்திருக்கும் வாசலைத் தவிர்த்துள்ள படங்களையே வெளியிடுகிறார்கள்.

சிலவேளைகளில், ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாசலைக் குறித்து சிலர் துனிச்சலுடன் பேசுகிறார்கள், ஆனால் அவர்களுக்கு இளநீல நூலின் அடிப்படைக் கருத்து சரிவரத் தெரியாததால், "வானத்தின் நிறம் நீலம்" என்று

மட்டுமே கூறுகிறார்கள். ஆகவே இளநீல நூலின் நிறமானது வானத்தின் நிறத்தைக் குறிக்கிறது எனவும், அது இயேசுவே ராஜா என்பதைக் கூறுவதாகவும், சிகப்பு நூல் இயேசு இவ்வுலகில் இருக்கும் போது சிலுவையில் சிந்திய இரத்தத்தைக் குறிப்பதாகவும் கூறி, ஆசரிப்புக் கூடார பிரகாரத்தின் வாசலைக் மிகவும் கில்லாடித் தனமாக, குறுக்கி விடுகிறார்கள். இரத்தாம்பர நூலின் கதி என்னவாகிற்று? இயேசுவே ராஜாதி ராஜாவென்றும் அவரே கர்த்தர் என்றும் இரத்தாம்பர நூல் கூறுகிறது. இயேசுவின் தெய்வீகத் தன்மை இரத்தாம்பர நூலில் ஏற்கனவே நன்றாக காட்டப்பட்டுள்ளது, ஆகவே இன்னொரு நூலின் நிறத்தினால் சத்தியத்தைக் கூறவேண்டிய அவசியம் இல்லை.

இயேசு இவ்வுலகிற்கு வந்து, யோவானால் ஞானஸ்நானம் பெற்றபோது மனிதகுலத்தின் எல்லாப் பாவங்களையும் தன் மீடு ஒரேதரமாக சுமந்தார் என்பதை இளநீல நூலின் சத்தியம் தெரிவிக்கிறது. ஆனால் உலகின் இறையியலாளர்கள் இயேசுவின் ஞானஸ்நானத்தை ஏற்றுக் கொள்ளாததினால், அவர்களுக்கு அதனைத் தெரியாது, மேலும் அதனைப் பிரசங்கிக்கவும் மாட்டார்கள், ஆனால், வெறும் குழப்பங்களை மட்டுமே ஏற்படுத்துவார்கள். இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் வந்த இயேசுவை விசுவாசிக்காமல், மறுபடியும் பிறக்காதவர்களுக்கு, ஞானஸ்நானத்தினால் இயேசு எல்லா ஆக்கினைகளையும் சுமந்தார் என்பது தெரியாது. உண்மையாக பார்த்தால், அவர்கள் ஆவிக்குரிய குருடர்களாய் இருப்பதோடு வார்த்தைய ஆராய முடியாதவர்களாயும் இருக்கிறார்கள், ஆகவே அவர்கள் தம் சொந்த யோசனைகளுக்கு ஏற்றவாறு, கர்த்தரின் வார்த்தையை ஏனோதானோவென விளக்கி, அதனை மதமாக்கி விட்டார்கள். "இயேசுவை விசுவாசியுங்கள்.

அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள். இப்போதிலிருந்து நல்லவர்களாகவும் சாந்தமானவர்களாகவும் இருங்கள்" என்று அவர்கள் போதிக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தை வெறும் மதமாக மாற்றிவிட்டதால், அது நற்செயல்களை மட்டுமே வலியுறுத்துகிறது.

எத்தனைக் கஷ்டப்பட்டாலும் தம்மால் நல்லவர்களாக இருக்க முடியாது என்பது மக்களுக்கு தெரியுமாகையால், இத்தகைய வார்த்தைகள், நல்லவர்களாக இருக்க முயற்சி செய்யுங்கள் என்று மனித சக்தியைத் தூண்டி விடுவதால், அவர்கள் இலகுவாக வஞ்சிக்கப் படுகிறார்கள். மதங்கள் பழைய முறையினையே பின்பற்றுகின்றன, "நீ முயற்சி செய்தால், உன்னால் அது முடியும்," அல்லது "பரிசுத்தவானாக உன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்." நல்ல விதமான சிந்தனைகள், முயற்சிகள், மனித திடம் ஆகிய பொதுவான கருத்துக்கள் எல்லா மதங்களிலும் உயர்வாக மதிக்கப் படுகின்றன. உதாரணமாக, புத்த மதத்தைக் குறித்து என்ன? புத்த மதம் தொடர் முயற்சிகளையும், மனித திடத்தையும் முக்கியத்துவப் படுத்தி, தம்மைத்தாமே தூய்மைப் படுத்திக்கொள்ளுமாறு அதனைப் பின்பற்றுபவர்களுக்கு அறிவுரைக் கூறுகிறது, "கொல்லாதே; சத்தியத்தைத் தேடு, நல்லவனாய் இரு." குறிப்பிட்ட சில வழிகளில் அதன் போதனைகள் கிறிஸ்தவ தத்துவங்களுடன் ஒத்துப்போகின்றன. கிறிஸ்தவமும் புத்த மதமும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவையாக இருந்தாலும், அவை இரண்டும் நெருக்கமாக இருப்பதைப் போல் தோன்றுவதற்கான காரணம் அவை இரண்டுமே வெறும் மதங்களாக இருப்பதேயாகும்.

மதமும் நம்பிக்கையும் ஒன்றிலிருந்து ஒன்று முற்றிலும் மாறுபட்டவை. கர்த்தரின் நீதியினால் நம்மை முற்றிலுமாக இரட்சித்த நம் தேவன் அளித்த பரிசை நம் இருதயங்களுக்குள் ஏற்றுக்கொண்டு அதனை

அங்கீகரிப்பது உண்மையான நம்பிக்கையாகும். தேவன் இப் பூமிக்கு வந்து, நம்முடைய எல்லாப் பாவங்களையும் தன் மீது ஏற்றுக்கொள்ள ஞானஸ்நானம் பெற்று, சிலுவையில் அறையப் பட்டதின் மூலமாக நம் எல்லாப் பாவங்களுக்குமான தண்டனையையும் பெற்றார் என்பதை விசுவாசிப்பதினால் பாவமன்னிப்பை பெற்றுக் கொள்வது விசுவாசமாகும். நீர் மற்றும் ஆவியின் மூலம் நம்மை இரட்சித்து, நம் எல்லாப் பாவங்களுக்குமான தண்டனையிலிருந்தும் தேவன் நம்மை இரட்சித்தார் என்பதை நம்புவது விசுவாசமாகும். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நாம் உண்மையாகவே நம் இருதயங்களில் இதனை விசுவாசிக்கிறோம்.

உங்களையும் என்னையும் நம் எல்லாப் பாவங்களிலிருந்தும் கர்த்தர் இரட்சித்தார்

இதனை நம் இருதயங்களில் விசுவாசித்து அதனை ஏற்றுக் கொள்வதே நாம் செய்யவேண்டிய ஒன்றாகும். உண்மையாகவே கர்த்தருக்கு கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகள் அவருக்கு முன்பாக செய்ய வேண்டியது இதுவேயாகும், மற்ற எதுவுமே முக்கியமானவைகள் அல்ல. கர்த்தர் உங்களை நேசித்ததால், அவர் தனது ஒரேபேறான குமாரரை அனுப்பி, அவரை ஞானஸ்நானம் பெறச் செய்து அதன் மூலமாக உங்கள் பாவங்களை அவர் மீது செலுத்தி, சிலுவையில் அறைந்து இரத்தத்தைச் சிந்தச் செய்து, அவரை ஆக்கினைக்கு உட்படுத்தி அவரை மரணத்திற்கு உட்படுத்தி, மீண்டுமாக உயிரோடெழுப்பி, அதன் மூலமாக உங்கள் எல்லாப் பாவங்களிலிருந்தும் உங்களை இரட்சித்தார்.

அப்படியிருக்கும் போது, நீங்கள் இந்த சத்தியத்தை விசுவாசிக்கவில்லை என்றால், கர்த்தரின் உணர்ச்சி

எத்தகையதாய் இருக்கும்? இப்போதும் கூட அவருடைய இருதயத்தைப் பிரியப்படுத்தக் கூடிய அவருடைய கீழ்ப்படிதலுள்ள மகனாகவும் மகளாகவும் வேண்டுமென்றால், கர்த்தர் தனது குமாரரின் மூலமாக உங்கள் எல்லாப் பாவங்களையும் துடைத்து, அவற்றிலிருந்து அவர் உங்களை இரட்சித்தார் என்பதை நீங்கள் விசுவாசிக்கவேண்டும். நீங்கள் நன்றியறிதலுடனே கூட உங்கள் இருதயத்தில் இதனை விசுவாசித்தால், அதனை உங்கள் வாயாலும் அறிக்கைச் செய்ய வேண்டும். அவரை நீங்கள் விசுவாசிக்க வேண்டும், ஆனால் உங்கள் இருதயத்தினால் விசுவாசிப்பது மிகவும் கடினமான ஒன்றாக உங்கலுக்குத் தோன்றுகிறதா? அப்படியானால், உங்கள் விசுவாசத்தை தெளிவாக உங்கள் வாயினால் அறிக்கைச் செய்யுங்கள். நீங்கள் விசுவாசிப்பதை இப்படியாக அறிக்கைச் செய்தால், விசுவாசம் பயிரிடப்பட்டு சிறிது சிறிதாக வளரும். துனிச்சலாக செயல்படுபவர்களிடமே விசுவாசம் காணப்படும்.

என்னிடம் நல்லதொரு வைரக்கல் மோதிரம் இருக்கிறது என கொள்க. அதனை நான் உங்களிடம் கொடுக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள், ஆனால் உங்களில் உள்ள ஒருவரில் அவனோ/அவளோ அதனை ஏற்றுக் கொள்ள மறுத்து, அது நல்ல வைரத்தால் செய்யப்பட்ட மோதிரம் அல்ல என கூறுகிறார். அந்த மோதிரமானது உண்மையான வைரக்கல் மோதிரமாக இருந்த போதிலும், அந்நபர் அதனை விசுவாசிக்காததால், அவனுக்கோ/அவளுக்கோ அது உண்மையான வைரக்கல் மோதிரமல்ல, அதனால் அவனோ/அவளோ அந்த உண்மையான வைரக்கல் மோதிரத்தைப் பெறும் வாய்ப்பை இழந்தார்.

விசுவாசமும் இத்தகையதே. ஒரு சிறந்த வைரக்கல் நிபுனர் மக்களிடம் வந்து அந்த வைரக்கல் மோதிரமானது உண்மையான வைரக்கல்லினால் செய்யப்பட்டது என நிரூபித்து அவனோ/அவளோ எழுத்தினால் ஒரு சான்றிதழ்

வழங்கினால், அவர்கள் அதனை விசுவாசிக்கத் தொடங்குவார்கள். கர்த்தர் தம்முடைய எழுதப்பட்ட வார்த்தையினால் தான் கொடுத்த இரட்சிப்பு உண்மையானது என விளக்கமாக நம்மிடம் கூறியுள்ளார். அவருடை வார்த்தை சாட்சி கூறுவதால், அவருடைய இரட்சிப்பை விசுவாசிப்பவர்களே விசுவாசத்தின் மக்களாவர். "அது உண்மையானது என விசுவாசிப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது, ஆனால் முற்றிலும் முழுமையானவரான நீங்கள் அது உண்மை எனக் கூறுவதினால், நான் அதனை விசுவாசிக்கிறேன்." இப்படியாக மக்கள் விசுவாசிக்கும் போது, அவர்களால் விசுவாசித்தின் மக்களாகமுடியும், மேலும் வாக்குத்தத்தம் செய்யப்பட்டதைப் போல மிகவும் விலையேறப் பட்ட ஒன்று உங்களுடைய ஒன்றாகும்.

மறுபுறம், இன்னொரு விதமான விசுவாசமும் இருக்கிறது. ஒரு சுரண்டல் பேர்வழி ஒரு வைரக்கல் மோதிரத்தை போலியாக தயாரித்தான் எனக் கொள்க, அதன் பல்வேறு நிறங்களில் மயங்கி, அது உண்மையாகவே நல்லதுதான் என நினைத்து ஒருவர் அதனை வாங்கினார். இந்நபர் அவனோ/அவளோ தாம் வாங்கியது மிகவும் சிறந்தது என முற்றிலுமாக நம்பியிருக்கும் போது, உண்மையாகப் பார்த்தால், அவன்/அவள் ஏமாற்றப்பட்டார். வைரக்கல் மோதிரம் உண்மையானதாக இல்லாத போதிலும், அது உண்மையானது என்பதற்கு பல தவறான சாட்சிகள் இருந்ததினால், மக்கள் அதனை விசுவாசித்தனர், இந்த நிலையில் இந்த போலி வைரக்கல் மோதிரமானது இம்மக்களைப் பொருத்தவரை உண்மையான மோதிரமே, ஏனெனில் அவர்கள் கண்மூடித்தனமாக இந்த போலி வைரக்கல் மோதிரத்தை விசுவாசித்தனர். ஆனால் அவர்களிடம் இருப்பதோ போலியானது. அதுபோலவே, தவறான விசுவாசத்தையுடைய மக்களும் இருக்கிறார்கள். அவர்கள் தம்முடைய விசுவாசத்தில் உறுதியாக இருந்தாலும்,

அது தவாறனதும், அடிப்படை இல்லாததும், மாயமானதும் ஆகும், ஏனெனில் இது கர்த்தருடைய வார்த்தையிலிருந்து வரவில்லை.

"என்னைத் தவிர வேறு தெய்வங்களை வணங்காதே" என்று கர்த்தர் கூறினார். கர்த்தருடைய வார்த்தை கர்த்தரேயாகும், மேலும், ஒருவன் நீரினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் (யோவான் 3:5) என்று வார்த்தை நம்மிடம் கூறுகிறது. இளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் ஆகிய ஆசரிப்புக் கூடார பிரகார வாசலின் வழியாக நாம் முதலாவதாக செல்லாவிட்டால், ஆசரிப்புக் கூடார பிரகாரத்திற்குள் நம்மால் நுழையமுடியாது என்றும், வெண்கலப் பாத்திரத்தில் தம் கைகளையும் கால்களையும் முதலாவதாக கழுவாதவர்களால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியாது என்றும் கர்த்தர் நம்மிடம் கூறுகிறார். இது மட்டுமே சத்தியமாக இருப்பதால், இதனைத் தவிர மற்ற அனைத்தும் போலியானவை ஆகும்.

சத்தியத்தின் மீதுள்ள விசுவாசமே விசுவாசமாகும், மற்ற எதன் மேலுள்ள விசுவாசமும் போலியாகும். மக்கள் எத்தனைத் தீவிரமாக விசுவாசிக்கிறார்கள் என்பது பொருட்டல்ல, கர்த்தருடைய வார்த்தை இல்லாத எதுவும், எந்நிலையிலும் கர்த்தருடைய வார்த்தை அல்ல. தன்னுடைய ஞானஸ்நானத்தினாலும் சிலுவையின் இரத்தத்தினாலும் உங்கள் எல்லாப் பாவங்களையும் மறையச் செய்ததாக இயேசு உங்களிடம் கூறும்போது, நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அதனை விசுவாசிப்பது மட்டுமே. அதனைக் கூறுபவரே அவை யாவற்றையும் செய்தமையால், அவரின் வார்த்தையில் உள்ள இந்த விசுவாசமானது உண்மையாகும். நம் தேவன் இதனை உண்மையாகவே செய்திராவிட்டால், இது அவருடைய தவறான செய்கையாகும், ஆனால் உங்கள் விசுவாசம்

தவறானதாகாது. மறுபுறம் பார்க்கும்போது, தேவன் நிச்சயமாகவே அப்படிச் செய்திருந்து, அதனை நீங்கள் விசுவாசிக்காததால் இரட்சிக்கப் படாமல் போனால், இதன் முழுப் பொறுப்பும் உங்களுடையதாகிறது. இதனால் தான், நாம் செய்ய வேண்டியதெல்லாம் விசுவாசிப்பது மட்டுமாக இருக்கிறது. கர்த்தர் தனது சபையின் மூலம் கூறுவதை நாம் கேட்க வேண்டும். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

சபையினால் பேசப்பட்ட வார்த்தை என்ன? நீளநீலம், இரத்தாம்பரம், சிகப்புநூல் மற்றும் மெல்லிய பஞ்சினால் தயாரிக்கப்பட்ட நூல் ஆகியவற்றால் இயேசு கிறிஸ்து நம்மிடம் வந்தார் என்பதே அந்த வார்த்தையாகும். ஞானஸ்நானம் பெற்றதின் மூலமாக நமது பாவங்களை எல்லாம் இயேசு தன் மீது ஏற்றுக் கொண்டு, கர்த்தராக இருக்கும் இயேசுவே, நமது எல்லாப் பாவங்களுக்குமான தண்டனையை சிலுவையில் ஏற்றுக் கொண்டார் என்ற கர்த்தருடைய வார்த்தையை சபையானது பரப்புகிறது. இயேசு இப்படியாக நம்மை இரட்சித்தார் என்ற இச்சத்தியத்தில் உள்ள விசுவாசமே, கர்த்தரால் உத்திரவாதமளிக்கப் பட்ட உண்மையான வைரக்கல்லின் மீதுள்ள விசுவாசமாகும்.

முதலாவது கர்த்தரின் சித்தத்தை நாம் அறிந்து, ஆசரிப்புக் கூடாரத்தில் வெளிப்படுத்தப் பட்ட ஆவிக்குரிய அர்த்தத்தையும் நாம் அறிந்து கொண்டு, அதனைப் பற்றி பேசினால், அது இலகுவானதாயிருக்கும். ஆனால் அவற்றை நாம் தேடவேண்டிய நிலையில் இருந்தாலோ, அவற்றைத் தெரிந்துகொள்ள முடியாமல் இருந்தாலோ, அல்லது ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப்புற அமைப்பைக் குறித்த மேலோட்டமான அறிவை மட்டுமே நாம் பெற்றிருந்தாலோ, அதற்கான மூல எபிரெய சொல்லை மட்டும் தெரிந்து வைத்திருந்தாலோ, அல்லது அதன் வரலாற்றுப் பின்னனியை தெரிந்து வைத்திருந்தாலோ, அவற்றின் மூலம் நமக்கு எந்த ஆதாயமும் இல்லை,

தலைவலி மட்டுமே கிட்டும்.

இயேசுவின் ஞானஸ்நானத்தை விசுவாசியுங்கள். இயேசு பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக, நம்முடைய இருதயங்களிலிருந்த கருமையான, அழுக்கான பாவங்கள் சுத்திகரிக்கப் பட்டன. ஞானஸ்நானம் என்பதின் பொருள், பாவத்தைக் கழுவுதல், இடம் மாற்றுதல், புதைத்தல், கொடுத்தல், அல்லது மூடுதல் என்பதாகும். இத்தகைய ஞானஸ்நானத்தை இயேசு பெற்றதால், உங்கள் எல்லாப் பாவங்களையும் அவர் தன் மீது சுமந்தார். இப்போது இதனை விசுவாசிக்காத அனைவரும் மரணத்திற்குள்ளாக்கப்பட்டு நரகத்தினுள் தள்ளப்படுவர். *"கழுவுகிறதற்கு வெண்கலத்தால் ஒரு தொட்டியையும், வெண்கலத்தால் அதின் பாதத்தையும் உண்டாக்கி, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக...... அவர்கள் சாகாதபடிக்குத் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்; இது தலைமுறைதோறும் அவனுக்கும் அவன் சந்ததியாருக்கும் நித்திய கட்டளையாயிருக்கும்" (யாத்திராகமம் 30:18, 21).* விசுவாசிக்காமை சபிக்கப்படவேண்டிய ஒன்றாகும். விசுவாசிக்காமை நரகத்தினுள் தள்ளப்படவேண்டிய ஒன்று. நீங்கள் விசுவாசிக்காவிட்டால், யேகோவாவின் சாபமும் அழிவும் உங்கள் மீது இறங்கி, நித்திய அக்கினியில் நீங்கள் தள்ளப் படுவீர்கள்.

"அவர்கள் சாகாதபடிக்குத் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்" தலைமை ஆசாரியனிடம் கர்த்தர் இதனைக் கூறினார், இது நித்தியமான கட்டளை என்றும் அவனும் அவன் சந்ததியினரும் இதனைத் தலைமுறை தலைமுறையாக கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கூறினார். இயேசுவை அவனின்/அவளின் இரட்சகர் ஆக விசுவாசிக்க விரும்புகிறவர்கள், அவருடைய ஞானஸ்நானத்தையும் சிலுவையின் இரத்தத்தையும்

விசுவாசிக்க வேண்டும். துனிச்சலாக செயல்படுபவர்களுக்கே விசுவாசம் சொந்தமானதாகும். விசுவாசத்தின் மூலமாக அதனை உங்களின் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும் போது இரட்சிப்பு உங்களுடையதாகிறது. சத்தியத்தை நாம் விசுவாசிக்கும் போது மட்டுமே அது நமக்கு பயனுள்ளதாயிருக்கிறது. கர்த்தர் நம்மிடம் கூறியவற்றை நாம் விசுவாசிக்க வேண்டும். அவிசுவாசத்தை விட பெரிதான இருதயத்திற்கு எந்தத் தடையும் இல்லை.

ஆசாரியர்கள் தமக்கு முன்னதாக வரும்போது, வெண்கலப் பாத்திரத்தில் தமது கைகளையும் கால்களையும் கழுவிவிட்டு வரவேண்டும் என கர்த்தர் கூறினார், அப்படியிருந்தும் கூட வெண்கலப் பாத்திரத்தில் உள்ள நீரால் தம் கைகளையும் கால்களையும் கழுவுவதற்கு எந்த விசுவாசமும் இல்லாத மக்கள் அனேகர் இருக்கின்றனர். வெண்கலப் பாத்திரத்தில் அறிவிக்கப் பட்ட இந்த விசுவாசத்தை விசுவாசிக்காத அனைவரும் கர்த்தருக்கு முன்பாக மரணமடைவர். உங்கள் இருதயத்தில் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை விசுவாசித்து சுத்தமாக கழுவப்பட்டவர்களாய், கர்த்தருக்கு முன்னதாகச் சென்று உங்களுடைய மரணத்தைத் தவிர்த்து, அவருடைய ராஜ்யத்தை உங்கள் பரிசாக பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப் பட்டபோது அதனை விசுவாசிக்காததினால் நிச்சயமாக நீங்கள் ஆக்கினைக்குள்ளாவீர்கள், அப்போது கர்த்தருடன் எத்தகைய வாதத்தில் ஈடுபட்டும் பிரயோசனம் இல்லை. சத்தியத்தை விசுவாசிக்காததினால் உங்களில் யாரும் மரணத்தைச் சந்திக்க கூடாது என விரும்பி ஜெபிக்கிறேன்.

இயேசுவின் ஞானஸ்நானத்தினாலும் அவரின் சிலுவை இரத்தத்தினாலும் உங்கள் பாவங்களை அழித்த இரட்சிப்பின் சத்தியத்தை நீங்கள் விசுவாசிக்காவிட்டால், நீங்கள் பெரிதும் துன்பப்படுவீர்கள். நீங்கள்

விசுவாசிக்கிறீர்களா? வெண்கலப் பாத்திரத்தின் மூலமாக நம் பாவங்களில் இருந்தும் ஆக்கினைகளில் இருந்தும் நம்மை இரட்சித்தமைக்காக கர்த்தருக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

ஆசரிப்புக் கூடாரத்தின் மீதியிருக்கும் பகுதிகள் இப்புத்தக வரிசையில் கூறப்படும். இப் புத்தகங்களிலுள்ள செய்திகளின் மூலமாக கர்த்தரின் பிள்ளைகளாகும் உரிமை உங்களுக்கு கிடைக்குமென நம்புகிறேன். ✉

இரட்சிக்கப்பட்டவர்களின்

சாட்சிகள்

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும்,
டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

இரட்சிக்கப்பட்டவர்களின் சாட்சிகள்

மிஷனரி புரூசில்லா ஜான்சன், அமெரிக்கா

நம் தேவனும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற அற்புதமான நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியான செய்திகளையும் எடுத்து வருகிறேன். சில நாட்களுக்கு முன் மின் அஞ்சல் மூலமாக ஒரு கேள்வியைக் கேட்டிருந்தீர்கள்: "யோர்தான நதியில் இயேசுவின் மீது யோவான் ஸ்நானன் ஏன் கைகளை வைத்தான்?" என்ற அக்கேள்விக்கான பதில் இதுவாகும்.

பாவ நிவர்த்திக்கான பழைய ஏற்பாட்டின் சட்டம் இதுவாகும். பலி மிருகத்தின் (ஆடு) தலை மீது தன் கைகளை வைத்து, இஸ்ரவேல் மக்களின் கொடுமையான பாவங்களையும், அவர்களுடைய மீறுதல்கலையும் (ஏசாயா 53:3-6) அவன் அறிக்கை செய்ய வேண்டும் என்பது, தலைமை ஆசாரியனாகிய ஆரோனிற்கான கர்த்தரின் கட்டளையாகும். அதன் பிறகு, இஸ்ரவேல் மக்களின் மீறுதல்களையும் அக்கிரமங்களையும் அந்த ஆடு சுமந்தவாறு, பொருத்தமான ஒரு நபரின் மூலமாக வனாந்தரத்திற்கு வழி நடத்தப்படும் (லேவியராகமம் 16:21, 22).

இயேசுவானவர் தன்னுடைய ஊழியத்தைத் தொடங்குவதற்கு சிறிது காலத்திற்கு முன்னதாக, பழைய ஏற்பாட்டு முறைப்படி, யோவான் ஸ்நானன் தன் கரங்களை இயேசுவின் தலைமீது வைத்தான். உலகின் எல்லாப் பாவங்களையும் மீறுதல்களையும் தன்மீது ஏற்றுக் கொள்வதற்காக, இம்முறைப்படி ஞானஸ்நானம்

பெறுவதற்கு இயேசு தன்னைத் தாழ்த்தினார். ஏசாயா 53:3-6 இல் எழுதப்பட்டுள்ளபடி, அவர் நம்முடைய அனைத்து மீறுதல்களையும் அக்கிரமங்களையும் தன் தலையிலும் தோலிலும் (தலைமை ஆசாரியன் மற்றும் ஆடு) ஏற்றுக்கொண்டார். ஞானஸ்நானம் (நீரில் முழுக்குவது) என்பது இதுவேயாகும். உலகின் எல்லாப் பாவங்களையும் இயேசு தன் மீது ஏற்றுக் கொண்டார். இப்போது அதனை ஞானஸ்நான சடங்கின் மூலமாக, வெளியேற்றவும், சுத்திகரிக்கவும் கழுவவும் தூய்மைப்படுத்தவும் வேண்டும் (யோவான் 1:29).

இக்கேள்வியின் சத்தியம் யாதெனில்: "அவன் விழுந்தாலும் தள்ளுண்டுபோவதில்லை" (சங்கீதம் 37:23, 24). *"எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி" (ரோமர் 3:23). "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை" (ரோமர் 3:10-12).*

ஒ! கர்த்தரைத் துதியுங்கள், அல்லேலூயா! கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக, *"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபேசியர் 2:8, 1 யோவான் 1:9).* தேவாட்டுக் குட்டியானவர் தன்னுடைய ஞானஸ்நானத்தின் மூலமும் தன் சிலுவை மரணத்தின் மூலமும் தான் ஏற்றுக் கொண்ட பாவங்களுக்கு ஏற்ற கிரயத்தைச் செலுத்தினார் (யோவான் 1:29).

இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தினாலும் தேவாட்டுக் குட்டியானவரின் இரத்தத்தினாலும் கழுவப்பட்டு விசுவாசத்தினால் சுத்திகரிக்கப்பட்டதின் மூலம் இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் இரட்சிக்கப்பட்டதினாலே இப்போது நான் பாவமற்றவனாயுள்ளேன்.

இப்புத்தகத்தைப் படிப்பது மிகவும் மகிழ்ச்சியான ஒன்றாயிருக்கிறது, அது எனக்கு ஒளியை அளித்ததுடன் அவருடைய வார்த்தையை ஆழமாக புரிந்து கொள்ளச் செய்தது. இந்த ஆச்சரியமான வல்லமைமிக்க கருவி

எனக்கு நல்ல ஞானத்தைக் கொடுத்தது, மேலும் இதற்கு முன் இந்த வார்த்தையை நான் அறியவும் இல்லை கேள்விப்படவும் இல்லை. வாவ்! ஆச்சர்யமானது!

வன்னுன்தாங், இந்தியா

மனித குலத்தின் பாவங்களை தன்மீது ஏற்றுக்கொள்ளவே, இயேசுவிற்கு ஞானஸ்நானம் தேவைப்பட்டது. பழைய ஏற்பாட்டு காலத்தில், இஸ்ரவேலர்கள் பாவ பலி காணிக்கைகளை எப்போதும் செலுத்தி வந்தனர், அம்மிருகங்கள் களங்கம் இல்லாதவைகளாகவும், அவர்களின் பாவ நிவர்த்தியாகவும் செயல்பட்டன. ஆயினும், மனித பாவத்தை மிருகங்களால் நிவர்த்தி செய்ய முடியவில்லை.

ஆகவே, யோவான் ஸ்நானன், இயேசுவுக்கு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் செய்வித்த போது அவரின் தலையில் கைவைத்தான் மத்தேயு 3:13-17 இல், யோவான் ஸ்நானன் இயேசுவுக்கு ஞானஸ்நானம் செய்யும் போது அவர் அவனிடம் கேட்டார் *"இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது"* பழைய ஏற்பாட்டின் பாவ காணிக்கை களங்கமில்லாததாக இருந்தால், இயேசு தம்மையே மனித குலத்தின் பாவ விடுதலையாக கொடுத்தார்.

யோவான் ஸ்நானனால் இயேசுவானவர் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட போது, நம்முடைய எல்லாப் பாவங்களையும் நிவர்த்தி செய்யக் கூடிய கர்த்தரின் நீதி நிறைவேற்றப்பட்டது, மேலும் மனித குலத்தின் இரட்சிப்பின் செயல்கள் ஒரே தரமாக நிறைவேற்றப்பட்டன. ஆகவே, உலகின் பாவங்களிலிருந்து நம்மை இரட்சித்த இயேசுவின் ஞானஸ்நானத்தை நாம் விசுவாசித்தால் நாம் நம்முடைய எல்லா பிரச்சனைகளிலிருந்தும் பாவங்களிலிருந்தும் நிரந்தரமாக இரட்சிக்கப்படுவோம்.

இயேசுவின் ஞானஸ்நானம் இவ்வுலகின் பாவங்களை சுத்தமாக்கியது, ஆகவே, நம்மிடம் எப்போதும் பாவங்களே இருப்பதில்லை. அவருடைய ஞானஸ்நானத்தை விசுவாசிக்கும் எல்லோராலும் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும்.

கர்த்தர் தன் ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை நமக்கு கொடுத்ததை யோவான் 3:16 இல் நாம் காண்கிறோம். குமாரர் நம்மிடம் அனுப்பப்பட்டார். உலகின் பாவங்களிலிருந்து நாம்

இரட்சிக்கப்பட வேண்டும் என்பது கர்த்தரின் விருப்பம். ஆதாமுடைய பாவத்தினாலே, முழு மனித குலமும் பாவம் நிறைந்ததாகியது. இயேசுவின் பலியானது நமது எல்லாப் பாவங்களுக்குமானது என்பதையும், அது நம்மை எல்லாப் பாவங்களிலிருந்தும் இரட்சித்தது என்பதையும் எபிரெயர் 10:1-10 இல் காணலாம். பாவத்தின் சம்பளம் மரணம் என்றிருப்பதால் இயேசு சிலுவையில் அறையப்பட்டார். ஆகவே, இயேசுபாவமற்றவராக இருந்தாலும், அவர் நமக்காக தன் உயிரையே விட்டார்.

ஆகவே, எங்களிடம் பாவமில்லை, ஏனெனில் நமக்காக இயேசு ஏற்கனவே சிலுவையில் நியாயம் தீர்க்கப்பட்டார். அவருடைய பாடுகளினாலே, இவ்வுலகின் பாவங்களிலிருந்து நான் விடுதலையானேன். இயேசுவின் ஞானஸ்நானத்தையும் அவருடைய மரணத்தையும் விசுவாசிப்பவர்கள், அவர்களின் எல்லாப் பாவங்களிலிருந்தும் ஒரேதரமாக இரட்சிக்கப்படுவர். உலகில் பாவம் எதுவுமில்லை! இவ்வுலகில் எனக்கு வேறு பாவங்களே இல்லை, ஏனெனில் எனது எதிர்கால பாவங்கள் உட்பட, இறந்தகால, நிலழ்கால பாவங்கள் அனைத்தையும் இயேசுவின் ஞானஸ்நானமும் அவரின் மரணமும் எடுத்துப் போட்டன! ஆமேன்!

உங்களுடைய புத்தகங்களுக்காக நன்றிகள், இவ்வுலகில் வேறு எந்தப் பாவங்களும் என்னிடம் இல்லை என்பதை நான் அறிவேன், ஏனெனில் இயேசுவின் ஞானஸ்நானமும் அவரின் சிலுவை இரத்தமும் எனது எல்லாப் பாவங்களையும் நித்தியமாக எடுத்துப்போட்டன என்பதை இப்போது நான் அறிவேன். இயேசு சிலுவையில் மரித்தபோது, "முடிந்தது" என்பது அவரின் கடைசி வார்த்தையாய் இருந்தது. இவ்வுலகின் பாவங்கள் எல்லாம் ஒரேதரமாக கழுவி விடப்பட்டன என பொருள்படும்படி அவர் கூறினார், எனவே இயேசுவின் ஞானஸ்நானத்தையும் அவரின் மரணத்தையும் விசுவாசிப்பவர்கள் உலகின் எல்லாப் பாவங்களிலிருந்தும் நித்தியமாக இரட்சிக்கப்பட்டனர் இப்போது நம்மிடம் வேறெந்த பாவங்களும் இல்லை.

இயேசு நம்முடைய பாவங்களுக்கு கிரயம் செலுத்திய பிறகு, நம்மிடம் எக்காலத்திற்கான அதாவது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றின் பாவங்களும் இல்லை. ஆனால் கர்த்தர் மீது நமக்கு விசுவாசம் இருக்கவேண்டும். கர்த்தர் மீது விசுவாசம் உள்ளவர்களாய் நமக்கு வேண்டிய அனைத்தையும் நாம் கேட்கவேண்டும், நமக்கு இரட்சிப்பைக் கொடுத்ததைப் போல அப்போது அவர் நமக்கு உதவி செய்வார். நம் சொந்த உழைப்பினால் பெற்றுக் கொள்ளமுடியாத அனைத்தையும் கொடுக்க கர்த்தர் விருப்பம் உள்ளவராய் இருக்கிறார். கர்த்தரால் எல்லாவற்றையும் செய்யமுடியும். இதன் பொருள் என்னவென்றால் நாம் வாழ்க்கையின் எல்லாப் பாகங்களிலும் எல்லா விஷயங்களிலும் விசுவாசத்திற்கான இடம் இருக்கிறது என்பதாகும். நாம் ஜெபம் செய்து நம்முடைய எல்லாப் பாவங்களையும் கர்த்தரிடம் எடுத்துச் சென்றால், அவர் அவற்றை நிச்சயமாக தீர்த்து வைப்பார், ஏனெனில் அவருடைய கிருபையில் வாழ விசுவாசம் நம்மை வழி நடத்துகிறது. சிறிய விஷயங்களானாலும் பிரச்சினைகளானாலும் கூட, நம் விசுவாசத்தை நாம் சார்ந்திருக்க வேண்டும். 1 சாமுவேல் 17:45 இல், ஐந்து கூழாங்கற்களைக் கொண்டு, தாவீது விசுவாசத்துடன் தன் பிரசிசனைகளைத் தீர்த்ததை நாம் காணலாம். ரோமர் 1:17 கூறுகிறது, *"விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது"* என்னிடம் பாவங்களேதும் இல்லை. அதனால் தான் பிரச்சனைகளை சந்திக்கும் போதெல்லாம், விசுவாசத்துடன் அதனைச் சந்திக்க என்னால் முடிகிறது.

ஜியார்ஜ் கோகோலாஷ்வில்லி, ஜியார்ஜியா

இதனைக் குறித்து அதிகமதிகமாய் யோசித்து ஜெபித்த பிறகு, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மீதுள்ள விசுவாசமே, மனித குலத்தின் இரட்சிப்பிற்காக கர்த்தரின் ஒரே சரியான வார்த்தையாக இருக்க வேண்டும் என முடிவு செய்ததை இங்கு நான் கூற விரும்புகிறேன். சில சிறிய விஷயங்களை இன்னமும் என்னால் புரிந்துக் கொள்ள இயலாமல் இருக்கலாம், ஆனால் பொதுவாக, உங்கள் இயக்கத்தின் புத்தகங்களின் மூலமாக எனக்குக் கிட்டிய செய்திகளை நான் விசுவாசிக்கிறேன் என்பதை என்னால் கூறமுடியும்.

யோர்தானின் நீரில் இயேசு பெற்ற ஞானஸ்நானத்தின் மூலமாக என்னுடைய பாவங்கள் கழுவப்பட்டன என விசுவாசிப்பதின் மூலமாக எல்லாப் பாவங்களிலிருந்தும் முற்றிலுமாக விடுபடும் ஒரே முறையாக இருப்பதை என்னால் காணமுடிகிறது. இந்த சத்தியத்தால் மட்டுமே என்னிருதயத்தை குற்ற உணர்ச்சியிலிருந்தும் பாவத்தின் தடயத்திலிருந்தும் விடுதலையாக்க முடிந்தது. அந்த எல்லாப் பாவங்களும் எதுவும் விடப்படாமல் அனைத்தும் அவரால் எடுத்துக் கொள்ளப் பட்டது என்று விசுவாசிக்கும் படியாக, கிறிஸ்துவின் மீது நம்முடைய எல்லாப் பாவங்களும் வைக்கப் பட்டன என்ற கர்த்தருடைய வார்த்தையின் அடிப்படையில் நம் விசுவாசம் இருக்கவேண்டும் என்று நான் அறிந்து கொண்டேன்.

“அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்” என்று 1 பேதுரு 2:24 இலும் காட்டப்பட்டுள்ளது – இதன் பொருள் அவர் முதலாவதாக அந்தப் பாவங்களைத் தன் சரீரத்தின் மீது ஏற்றுக் கொள்ள வேண்டும், அதனை அவர் செய்து முடித்த நேரமும் இடமும் அவர் யோவான் ஸ்னானிடம் பெற்றுக் கொண்ட ஞானஸ்னானமேயாகும் (1 யோவான் 1:29), இந்த நொடியிலே கர்த்தருடைய எல்லா நீதிகளும் நிறைவேற்றப் பட்டன (மத்தேயு 3:15)

இந்த சத்தியத்தினால் மட்டுமே என் இருதயத்திலே

பாவத்தைக் குறித்த எவ்வித உணர்த்துதல் இல்லாமலும் பாவத்தின் எவ்வித தடயமும் இல்லாது செய்ய முடியும். மேலுமாக, கிறிஸ்துவின் கடைசி ராப்போஜனத்தின் போது தன்னுடைய மாமிசத்தையும் இரத்தத்தையும் நினைவு கூறும் படியாக கிறிஸ்து நம்மிடம் கூறினாரே தவிர, அவற்றில் உள்ள ஏதேனும் ஒரு காரியத்தை மட்டுமே அல்ல! உலகத்தின் எல்லாப் பாவங்களைத் தன் சரீரத்தின் மீது ஏற்றுக் கொள்ளுவதை அவரின் மாமிசம் என்பது காட்டுகிறது என்றும், அவருடைய இரத்தம் என்பது இந்தப் பாவங்களுக்கான கிரையம் என்பதைக் காட்டுகிறது என்றும் நாம் இப்போது புரிந்து கொண்டோம், அது இயேசுவானவர் ஆவி, நீர் மற்றும் இரத்தத்தினால் வந்தார் என்றும் (1 யோவான் 5:6-8) இவை மூன்றும் ஒரு காரியத்தைக் குறித்து சாட்சி கூறுகின்றனவென்றும் தொடர்பு படுத்துகிறது: விசுவாசத்தினால் பாவிகள் அனைவருக்கும் இரட்சிப்பு என்பதில் கர்த்தருடைய நீதி இருக்கிறது.

இவ்வுலகிலுள்ள அநேக மக்களும் கிறிஸ்தவ விசுவாசிகளும் இந்த இலகுவான இரட்சிக்கும் சத்தியத்தை அறியாதிருக்கிறார்களே என்பதை அறியும் போது மிகவும் மன வருத்தமாக உள்ளது! நாம் சந்திப்பவர்களிடமும், கேட்பவர்களிடமும் இச்செய்தியினைக் கூற முயற்சி செய்கிறேன். இத்தகைய புத்தகங்களையும் போதனைகளையும் இறுதியாக நான் பெற்றுக் கொள்வதற்கான கர்த்தரால் குறிக்கப்பட்ட நேரம் இதுவென நான் விசுவாசிக்கிறேன். இவற்றை நான் பலகாலமாக தேடி வந்தேன். இது மீண்டும் நடந்தது அவருடைய கிருபையே! என்னை நித்தியமாக என் எல்லாப் பாவங்களிலிருந்தும் முற்றிலுமாக இரட்சித்து உண்மையாகவே பாவமற்றவனாகவும் நீதிமானாகவும் மாற்றிய என் இயேசுவுக்கு நன்றியறிதலுடையவனாய் இருக்கிறேன்!

கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக! நான் உங்களுக்காகவும், உங்கள் இயக்கத்தின் வெற்றிக்காகவும் ஜெபித்து வருகிறேன், இதனால் கர்த்தருடைய கிருபையுடனும் வல்லமையுடனும் நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியானது எங்கும் பரவும்! ஆமென். ✉

பதிவிறக்கம்

எங்களுடைய இணையதளத்திலிருந்து **ஆயர் பால் சி. ஜோங் அவர்களின்** இலவச எலக்ட்ரானிக் நூல்களும், ஒலி நூல்களும் உங்களுடைய ஸ்மார்ட் போன், டேப்லட் மற்றும் கணினிகளுக்கு, உங்களிடம் இணைய தொடர்பு இல்லாவிட்டாலும் கூட, இந்த நூல்களை உங்களால் வாசிக்கவும் கேட்கவும் முடியும்.

Rev. PAUL C. JONG

போதகராகிய, ஆயர் பால் சி. ஜோங் அவர்கள் பாவங்களுக்கான மன்னிப்பை பெற்றுக் கொள்ளுவதற்கான பதிலைக் காண வெகுகாலமாக பாடுபட்டார். கர்த்தருடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதைப் போல, நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் மூலமாக வந்த இயேசு கிறிஸ்துவின் நீதியை நோக்கி அதனைக் கண்டுபிடிக்கும் படியாக அவருடைய தேடுதல் அவரை வழிநடத்தியது. இந்த கண்டுபிடிப்பே இப்போதைய ஊழியத்தை நோக்கி அவரை வழிநடத்தியது.

இது நாள் வரையிலும், ஆயர் ஜோங் அவர்கள் The New Life Mission உடைய புத்தக ஊழியத்திற்காக தன்னை அர்ப்பணம் செய்துள்ளார், உலகம் முழுவதும் உண்மையான நற்செய்தியை பரப்பும் படியாக The New Life Mission இல் இருக்கும் தன்னுடைய உடன் ஊழியர்களுடனே கூட ஒன்று சேர்ந்து நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியை பிரகடணம் செய்து வருகிறார். அவருடைய புத்தகங்கள் 98 இற்கும் மேற்பட்ட மொழிகளிலே மொழிப்பெயர்க்கப் பட்டுள்ளன, அவை 210 இற்கும் அதிகமான நாடுகளிலே இப்போது வாசிக்கக் கிடைக்கின்றன. அவருடைய புத்தகங்களின் உதவியினால் அவருடைய வாசகர்களினால் தம் பாவங்களுக்கான மன்னிப்பையும் பரிசுத்த ஆவியானவரையும் பெற்றுக் கொள்ள முடிகிறது, ஏனெனில் இந்தப் புத்தகங்கள் உண்மையான, எழுதப்பட்ட கர்த்தருடைய வார்த்தையின் அடிப்படையில் அமைந்தவையாகும்.

உலகம் முழுவதும் இருக்கும் தன்னுடைய உடன் ஊழியர்களுடனே, ஆயர் ஜோங் அவர்கள் இந்த அதிசயமான செயலுக்காக கர்த்தருக்கு நன்றிகளையும் மகிமையையும் அறிவிக்கிறார். அல்லேலூயா!

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.

இப்புத்தகத்தின் வாசகர்களுக்கு

ஆசரிப்புக் கூடார வாசலில் உள்ள நீலநிற நூல் வெளிப்படுத்துவதைக் குறித்து அறியாத போதிலும் கூட, தம்முடைய பாவங்களைக் கழுவும் நற்செய்தியை தாம் அறிந்துள்ளதாக இந்நாட்களிலுள்ள அநேக கிறிஸ்தவர்கள் கூறுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆசரிப்புக் கூடார வாசலில் இருந்த இளநீல நூலும், இரத்தாம்பர நூலும், சிகப்பு நிற நூலும் அறிவித்த சத்தியத்தை அறியாமலேயே, தம் இருதயங்களில் இன்னமும் பாவங்களுள்ள இந்த கிறிஸ்தவர்கள் இயேசுவைக் குருட்டுத்தனமாக விசுவாசிக்கிறார்கள் என்பது மிகவும் தெளிவு.

ஆகவே இந்த வாசலில் உபயோகிக்கப்பட்டிருந்த இளநீல நூலும், இரத்தாம்பர நூலும், சிகப்பு நூலும், மெல்லிய பஞ்சு நூலும் அறிவித்த சத்தியத்தை பகிரங்கப்படுத்த நான் முயலுகிறேன். ஆசரிப்புக் கூடாரத்தின் இளநீல நூலும், இரத்தாம்பரநூலும், சிகப்பு நூலும் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள நற்செய்தியாகிய நீர் மற்றும் ஆவியின் நிழலாகும், இதுவே உண்மை சத்தியத்தின் முக்கியமான செய்தியுமாகும்.

இந்த புத்தகத்தின் மூலமாக, இளநீல நூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நிற நூல், மெல்லிய பஞ்சு நூல் ஆகியவை வெளிப்படுத்திய நற்செய்தியை நீங்கள் அறிந்து, விசுவாசத்தினால் தேவனை சந்திக்கலாம். ஆசரிப்புக் கூடாரத்தில் உபயோகிக்கப்பட்ட இளநீல, இரத்தாம்பர, சிகப்பு நூல்களில் வெளிப்படுத்தப்பட்ட நற்செய்தியை நீங்கள் விசுவாசிக்கும் படி கேட்டுக் கொள்கிறேன், இதன் மூலமாக உங்கள் எல்லாப் பாவங்களிலிருந்தும் உங்களை இரட்சிக்கக்கூடிய நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

- ஆசிரியரிடமிருந்து -

ஆயர் பால் சி. ஜோங் அவர்களின் நூல்களை கம்ப்யூட்டரிலும், டேப்லட்டிலும், ஸ்மார்ட்ஃபோனிலும் தகவிறக்கம் செய்ய முடியும்.